வெளியீடு 7-10-2005 Issued 7-10-2005

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வியாழக்கிழமை, மார்ச் 31, 2005—தொகுதி 78 — எண் 1

Thursday the 31st March, 2005 —Volume 78 — No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

V211, 31805
POS . 78 . 1
186238

[Price Rs. 3.00

53-56

567
21.2.06

# 31-03-2005

## உள்ளடக்கம்


பக்கங்கள்

ஆளுநரும் அமைச்சரவையும் iii-vii

Governor and Council of Ministers ix-xii

பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் xiii-xv

பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) xvii-xxvii

1. **வினாக்கள்—விடைகள்—**

உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல் 13) 1-34

2. **கவன ஈர்ப்பு—**

(அ) திருவள்ளூர் மாவட்டம், ஆர்.கே. பேட்டை ஒன்றியம், ஸ்ரீ காளிகாபுரம் ஆதிதிராவிடர் காலனிக்குக் குடிநீர் வழங்குதல் 34-36

(ஆ) சென்னை, ஆர்.கே. நகர் தொகுதி, இளையாமுதலி தெரு, கான்கிரீட் சாலை அமைத்தல் 36-39

3. **அறிக்கை அளித்தல்—**

அரசு உறுதிமொழிக் குழு 39

4. **மானியக் கோரிக்கைகள், 2005—2006, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 26 — தொழில் துறை
(ஆ) கோரிக்கை எண் 16 — கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை — கைத்தறி மற்றும் துணி நூல்
—தொடர்ச்சி 40-74

*மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம் 40-54

*மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன் 54-72

| | பக்கங்கள் |
|---|---|
| **4. மானியக் கோரிக்கைகள், 2005—2006, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| (இ) கோரிக்கை எண் 5 — வேளாண்மைத் துறை | 74-146 |
| மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன் | 78,80,81,82, 83,114-144 |
| *திரு. கே.வி. முரளிதரன் | 79-85 |
| *திரு. கு. அன்பழகன் | 85-92 |
| திரு. பி.எஸ். அருள் | 92-102 |
| திரு. பி.கே.டி. நடராஜன் | 102-108 |
| திரு. கே.எஸ். தென்னரசு | 108-114 |
| **5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 146-147 |




## ஆளுநரும் அமைச்சரவையும்

**ஆளுநர் — திரு. சுர்ஜித் சிங் பர்னாலா**

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

**2. பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**

பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறு பாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு, சிறைகள், வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் & அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.

**3. நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:**

நிதி, திட்டமிடல், தேர்தல்கள் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்.

4. சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:**

சட்டம், நீதிமன்றங்கள், தகவல் தொழில்நுட்பவியல்.

5. உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:**

உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு, புள்ளியியல் மற்றும் கூட்டுறவு.

6. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

7. சமூக நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

8. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்.

9. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம்.

186238



10. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:**

ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

11. போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம், துறைமுகங்கள், மின்சாரம் மற்றும் மரபுசாரா எரிசக்தி மேம்பாடு.

12. தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:**

தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள் மற்றும் மின்னணுவியல்.

13. வேளாண்மைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.

14. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன்.

15. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:**

கால்நடை பராமரிப்பு.

16. வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:**

வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

**17. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:**

வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

**18. கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**

கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், தொல் பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப் பட்டோர் மற்றும் வணிக வரிகள்.

**19. பால் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

**20. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்.

**21. மீன்வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:**

மீன்வளம்.

**22. சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அ. மில்லர்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.



**23. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:**

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வஃக்பு.

**24. செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:**

செய்தி & விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம், செய்தித்தாள் கட்டுப்பாடு, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

**25. விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன்.

- - -

**17. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:**

வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

**18. கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**

கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், தொல் பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப் பட்டோர் மற்றும் வணிக வரிகள்.

**19. பால் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

**20. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்.

**21. மீன்வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:**

மீன்வளம்.

**22. சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அ. மில்லர்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.



**23. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:**

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு. மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வஃக்பு.

**24. செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:**

செய்தி & விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம், செய்தித்தாள் கட்டுப்பாடு, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள். வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

**25. விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன்.

\- - -

## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR – THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. **Chief Minister** | - | **The Hon. Selvi J Jayalalithaa:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| 2. **Minister for Public Works, Prohibition & Excise and Revenue** | - | **The Hon. Thiru O. Panneerselvam:** Public Works, Highways, Irrigation including minor irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of corruption, Prisons, Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery & Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports. |
| 3. **Minister for Finance** | - | **The Hon. Thiru C. Ponnaiyan:** Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies. |
| 4. **Minister for Law and Information Technology** | - | **The Hon. Thiru D. Jayakumar:** Law, Courts and Information Technology. |
| 5. **Minister for Food and Co-operation** | - | **The Hon. Thiru Pollachi V. Jayaraman:** Food, Civil Supplies, Consumer Protection, Price Control, Statistics and Co-operation. |

6. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru P.C. Ramasamy:**

Hindu Religious and Charitable Endowments.

7. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. P. Vijayalakshmi Palanisamy:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

8. **Minister for Health** .. **The Hon. Thiru N. Thalavai Sundaram:**

Health, Medical Education and Family Welfare.

9. **Minister for Rural Industries** .. **The Hon. Tmt. B. Valarmathi:**

Rural Industries including Cottage Industries, Small Scale Industries and Khadi & Village Industries Board.

10. **Minister for Adi-Dravidar Welfare** .. **The Hon. Thiru C. Karuppasamy:**

Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen.

11. **Minister for Transport and Electricity** .. **The Hon. Thiru R. Viswanathan:**

Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports, Electricity and Non- conventional Energy Development.

12. **Minister for Industries** .. **The Hon. Thiru Nainar Nagenthran:**

Industries, Iron & Steel Control, Mines & Minerals and Electronics.



13. **Minister for Agriculture** .. **The Hon. Thiru K. Pandurangan:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

14. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru Se.Ma. Velusamy:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities.

15. **Minister for Animal Husbandry** .. **The Hon. Thiru P.V. Damodhiran:**

Animal Husbandry.

16. **Minister for Forests and Environment** .. **The Hon. Thiru R. Vaithilingam:**

Forests & Environment and Pollution Control.

17. **Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:**

Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A.

18. **Minister for Education and Commercial Taxes** .. **The Hon. Thiru C.Ve. Shanmugam:**

Education, Technical Education, Science and Technology, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees, Evacuees and Commercial Taxes.

19. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru S. Ramachandran:**

Milk and Dairy Development.

20. **Minister for Handlooms and Textiles** – **The Hon. Thiru V. Somasundaram:**
Handlooms and Textiles.

21. **Minister for Fisheries** .. **The Hon. Thiru M. Radhakrishnan:**
Fisheries.

22. **Minister for Tourism** .. **The Hon. Thiru A. Miller:**
Tourism and Tourism Development Corporation.

23. **Minister for Labour** – **The Hon. Thiru P. Annavi:**
Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs.

24. **Minister for Information & Publicity and Local Administration** – **The Hon. Thiru K.P. Anbalagan:**
Information & Publicity, Film Technology, Cinematograph Act, Newsprint Control, Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural indebtedness, Urban and Rural Water Supply.

25. **Minister for Sports and Youth Welfare** – **The Hon. Thiru Inbathtamilan:**
Sports and Youth Welfare.

- - -



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

**பேரவைத் தலைவர்**

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து

**பேரவைத் துணைத் தலைவர்**

மாண்புமிகு திரு. அ. அருணாசலம்

**மாற்றுத் தலைவர்கள் #**

திரு. ப. இராஜரெத்தினம்

திரு. அ. அன்வர் ராஜா

திருமதி சி.எம். சூரியகலா

திரு. லா. சந்தானம்

டாக்டர் தே. குமாரதாஸ்

முனைவர் செ.கு. தமிழரசன்

**செயலாளர்**

திரு. வெ. இராசாராமன்

# 2-2-2005 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டனர்.

| | |
|---|---|
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. இரா. முருகானந்தம், பிஎஸ்சி., பிஎல். | - இணைச் செயலாளர் |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல. | - இணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன, பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. ஜி. அனீஸ அகமத், எம.ஏ., பி.ஜிஎல | - துணைச் செயலாளர் |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பிஎல். | - துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம.ஏ., பி.எல. | - துணைச் செயலாளர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | - குழு அலுவலர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு.ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல. | - குழு அலுவலர் |



| | |
|---|---|
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | - குழு அலுவலர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | - தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. | - பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி சி. நிர்மலா, பி.காம். | - தலைமை நிருபர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | - தலைமை நிருபர் |
| செல்வி சு. வத்சலா, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கே.எஸ். சந்திரசேகர், பி.எஸ்சி. | - சார்புச் செயலாளர் |
| திரு. ச. ஆறுமுகம், பி.எஸ்சி. | - சார்புச் செயலாளர் |
| திரு. த.ர. நாகராஜன், எம்.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. கோ. சுப்புராம், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. அ. நவாப்ஜான், பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. மு. கதிரேசன், எம்.ஏ. | - தலைமை நிருபர் |

# பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

1. அசோகன், திரு. அ. - திருவாரூர் (செ.வ.)
2. அண்ணாதுரை, திரு. செ. - ஜெயங்கொண்டம்
3. அண்ணாமலை, திரு. கு. - தென்காசி
4. அண்ணாவி, திரு. ப. - தொட்டியம்
5. அப்பாவு, திரு. மு. - ராதாபுரம்
6. அய்யாறு வாண்டையார், திரு. கே. - திருவையாறு
7. அரசன், திரு. ப. - அறந்தாங்கி
8. அருணாசலம், திரு. அ. - வரகூர் (செ.வ.)
9. அருள், திரு. பி.எஸ். - புவனகிரி
10. அழகம்மாள், திருமதி வி. - தலைவாசல் (செ.வ.)
11. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. - திருச்செந்தூர்
12. அன்பழகன், திரு. ஆகுசி. - பெரணமல்லூர்
13. அன்பழகன், திரு. கு. - நிலக்கோட்டை (செ.வ.)
14. அன்பழகன், திரு. கே.பி. - பாலக்கோடு
15. அன்பழகன், திரு. ஜெ. - தியாகராய நகர்
16. அன்பழகன், பேராசிரியர் க. - துறைமுகம்
17. அன்பில் பெரியசாமி, திரு. - திருச்சிராப்பள்ளி-2
18. அன்வர் ராஜா, திரு. அ. - இராமநாதபுரம்
19. ஆண்டிவேல், திரு. ப. - வேடசந்தூர்

20. ஆறுமுகம், திரு. கே. .. செங்கல்பட்டு
21. ஆறுமுகம், திரு. த. .. திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. .. நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. .. திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. .. திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. .. கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை
28. இராமச்சந்திரன், திரு. எஸ். .. கலசப்பாக்கம்
29. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
30. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். .. சாத்தூர்
31. இராமு, திரு. ந. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
32. இராம் பிரபு, திரு. இரா. .. பரமக்குடி (செ.வ.)
33. இராஜசேகர், திரு. மா. .. ராஜபாளையம் (செ.வ.)
34. இராஜரெத்தினம், திரு. ப. .. பெரம்பலூர் (செ.வ.)
35. இராஜா, திரு. டி.கே. .. திருப்பத்தூர்
36. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. .. பத்மநாபபுரம்
37. இராஜேந்திரன், திரு. பி.ஜி. .. ஆலங்குளம்
38. இலட்சுமண்ணன், திரு. கே.என். .. மயிலாப்பூர்
39. இளவழகன், திரு. ப. .. அரியலூர்
40. இளையகண்ணு, திரு. கா.தி. .. ஏற்காடு (ஆ.வா.)
41. இன்பத்தமிழன், திரு. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
42. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)



43. உசேன், திரு. எஸ்.ஏ.எம். .. திருவல்லிக்கேணி
44. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
45. உமாதேவன், திரு. கே.கே. .. திருப்பத்தூர்
46. உலகரட்சகன், திரு. பி.எஸ். .. செய்யாறு
47. ஏழுமலை, திரு. வெ. .. செஞ்சி
48. கணபதி, திரு. ந. .. வானூர் (செ.வ.)
49. கணேசன், திரு. ஆர்.டி. .. தேனி
50. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி
51. கணேசன், திரு. வி. .. மங்களூர் (செ.வ.)
52. கண்ணன், திரு. ஏ.எஸ். .. பொன்னேரி (செ.வ.)
53. கந்தசாமி, திரு. கு.ரா. .. சத்தியமங்கலம்
54. கந்தசாமி, திரு. கா. .. குன்னூர் (செ.வ.)
55. கருணாகரன், திரு. கே.சி. .. சிங்காநல்லூர்
56. கருணாநிதி, திரு. மு. .. சேப்பாக்கம்
57. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
58. கருப்பணன், திரு. கே.சி. .. பவானி
59. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. .. குளத்தூர் (செ.வ.)
60. கலாவதி, திருமதி கு. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
61. கனகதாரா, செல்வி சி. .. பேரணாம்பட்டு (செ.வ.)
62. கனிதா சம்பத், திருமதி எஸ். .. திருப்போரூர் (செ.வ.)
63. காசாம்பு பூமாலை, திருமதி .. சங்கராபுரம்
64. காமராஜ், திரு. மே.ப. .. தாரமங்கலம்
65. கார்த்தி, திரு. மு. .. சேலம்-2

66. காளிமுத்து, டாக்டர் கா. - திருமங்கலம்
67. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. - அரூர் (செ.வ.)
68. கிருஷ்ணன், திரு. ஆர். - அந்தியூர் (செ.வ.)
69. குமாரதாஸ், டாக்டர் தே. - கிள்ளியூர்
70. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. - ஆண்டிமடம்
71. கோதண்டராமன், திரு. ஜி. - முகையூர்
72. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
73. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். - விருத்தாசலம்
74. கோவிந்தராஜ், திரு. வெ. - கிருஷ்ணகிரி
75. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
76. சக்திவேல் முருகன், திரு. எம். - அம்பாசமுத்திரம்
77. சக்ரபாணி, திரு. ஆர். - ஒட்டன்சத்திரம்
78. சசிகலா, திருமதி ஆர். - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
79. சண்முகநாதன், திரு. எஸ்.பி. - ஸ்ரீவைகுண்டம்
80. சண்முகம், திரு. சி. - பூந்தமல்லி
81. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
82. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
83. சந்தானம், திரு. லா. - உசிலம்பட்டி
84. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். - இராணிப்பேட்டை
85. சந்திரமோகன், திரு. நா. - சீர்காழி (செ.வ.)
86. சந்திரன், திரு. வீ. - சிவகங்கை
87. சம்பத், திரு. எம்.சி. - நெல்லிக்குப்பம்
88. சரவணன், திரு. துரை. கி. - சிதம்பரம்
89. சரோஜா, திருமதி இரா. - உப்பிலியாபுரம் (ஆவா.)



90. சாமி, திரு. ஆர். - மேலூர்
91. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
92. சிதம்பரம், திரு. ப. - பவானிசாகர்
93. சிவகாமி, திருமதி வி. - தாராபுரம் (செ.வ.)
94. சிவசாமி, திரு. கே.கே. - அருப்புக்கோட்டை
95. சிவசாமி, திரு. சி. - திருப்பூர்
96. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். - கரூர்
97. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
98. சிவபெருமாள், திரு. அ. - ஒட்டப்பிடாரம் (செ.வ.)
99. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
100. சின்னசாமி, திரு. மா. - பழனி (செ.வ.)
101. சீனிவேல், திரு. எஸ்.எம். - திருப்பரங்குன்றம்
102. சுதர்சனம், திரு. டி. - திருவள்ளூர்
103. சுந்தரம், திரு. பி.ஆர். - ராசிபுரம்
104. சுந்தராம்பாள், திருமதி செ. - மேட்டூர்
105. சுப்பிரமணியன், திரு. வீ. - கண்டமங்கலம் (செ.வ.)
106. சுப்பையா பாண்டியன், திரு. எம். - கடையநல்லூர்
107. சூரியகலா, திருமதி சி.எம். - குடியாத்தம்
108. செம்மலை, திரு. செ. - ஓமலூர்
109. செல்லையா, திரு. வி.ஏ. - மருங்காபுரி
110. செல்வம், திரு. எஸ்.கே. - வீரபாண்டி
111. செல்வராஜ், திரு. ஏ.கே. - மேட்டுப்பாளையம்
112. செல்வி முருகேசன், திருமதி - காங்கேயம்
113. சேகரன், திரு. கே.என். - திருவெறும்பூர்

| | |
|---|---|
| 114. சேகர்பாபு, திரு. பி.கே. | - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் |
| 115. சோமசுந்தரம், திரு. வி. | - உத்திரமேரூர் |
| 116. ஞானசேகரன், திரு. சி. | - வேலூர் |
| 117. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. | - திருநாவலூர் |
| 118. தமிழரசன், முனைவர் செ.கு. | - நன்னிலம் (செ.வ.) |
| 119. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி | - மேல்மலையனூர் |
| 120. தம்பிதுரை, டாக்டர் மு. | - பர்கூர் |
| 121. தவமணி, திரு. க. | - திருவிடைமருதூர் |
| 122. தளவாய் சுந்தரம், திரு. ந. | - கன்னியாகுமரி |
| 123. தனபால், திரு. ப. | - சங்கரி (செ.வ.) |
| 124. தாமோதரன், திரு. எஸ். | - விருதுநகர் |
| 125. தாமோதரன், திரு. செ. | - கிணத்துக்கடவு |
| 126. தாமோதிரன், திரு. ப.வெ. | - பொங்கலூர் |
| 127. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. | - பேராவூரணி |
| 128. துரைமுருகன், திரு. | - காட்பாடி |
| 129. துரைராஜ், திரு. சி. | - சேடப்பட்டி |
| 130. தென்னரசு, திரு. கே.எஸ். | - ஈரோடு |
| 131. நடராசன், திரு. வது. | - இளையான்குடி |
| 132. நடராஜன், திரு. அ. | - குத்தாலம் |
| 133. நடராஜன், திரு. எஸ். | - நாட்ராம்பள்ளி |
| 134. நடராஜன், திரு. பி.கே.டி. | - ஆத்தூர் |
| 135. நயினார் நாகேந்திரன், திரு. | - திருநெல்வேலி |
| 136. நரசிம்மன், திரு. பி.எம். | - பள்ளிப்பட்டு |



| | |
|---|---|
| 137. நளினி மனோகரன், திருமதி | - போளூர் |
| 138. நன்மாறன், திரு. என். | - மதுரை கிழக்கு |
| 139. நீலகண்டன், திரு. ப. | - ஆற்காடு |
| 140. நீலமேகவர்ணம், திரு. லெ. | - சாத்தான்குளம் |
| 141. நெப்போலியன், திரு. து. | - வில்லிவாக்கம் |
| 142. பச்சைமால், திரு. கே.டி. | - குளச்சல் |
| 143. பதினெட்டாம்படியான், திரு. க. | - முதுகுளத்தூர் |
| 144. பரணிகுமார், திரு. பா. | - திருச்சிராப்பள்ளி-1 |
| 145. பரிதி இளம்வழுதி, திரு. | - எழும்பூர் (செ.வ.) |
| 146. பவானி கருணாகரன், திருமதி கே. | - அரக்கோணம் (செ.வ.) |
| 147. பழனிசாமி, திரு. கே.எஸ். | - பெருந்துறை |
| 148. பழனிசாமி, திரு. ஜி. | - திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 149. பழனியப்பன், திரு. பெ. | - மொரப்பூர் |
| 150. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. | - குறிஞ்சிப்பாடி |
| 151. பன்னீர்செல்வம், திரு. ஓ. | - பெரியகுளம் |
| 152. பாண்டுரங்கன், திரு. கே. | - அணைக்கட்டு |
| 153. பாப்பாசுந்தரம், திரு. அ. | - குளித்தலை |
| 154. பாரமலை, திரு. க. | - மானாமதுரை (செ.வ.) |
| 155. பாரிமோகன், திரு. கி. | - தருமபுரி |
| 156. பாலகிருஷ்ணன், திரு. சோ. | - கடலாடி |
| 157. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். | - தொண்டாமுத்தூர் |

158. பாலசுப்ரமணியன், திரு. கே.கே. .. ஸ்ரீரங்கம்
159. பாலபாரதி, செல்வி க. .. திண்டுக்கல்
160. பாலன், திரு. எஸ்.எம். .. லால்குடி
161. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். .. சேரன்மகாதேவி
162. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
163. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
164. பூபதி மாரியப்பன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
165. பூவராகமூர்த்தி, திரு. ஏ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
166. பெருமாள், திரு. என்.கே. .. விளாத்திகுளம்
167. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. .. பொள்ளாச்சி
168. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
169. பொன்னம்பலம், திரு. டி.பி. .. சமயநல்லூர் (செ.வ.)
170. பொன்னையன், திரு. சி. .. திருச்செங்கோடு
171. போளூர் வரதன், திரு. .. செங்கம் (செ.வ.)
172. மகாலிங்கம், திரு. எஸ். .. அவினாசி (செ.வ.)
173. மகேந்திரன், திரு. கே. .. பெரம்பூர் (செ.வ.)
174. மஹேஸ்வரி, திருமதி எ.எஸ். .. கோயம்புத்தூர் மேற்கு
175. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
176. மணி, திரு. டி. .. விளவங்கோடு
177. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
178. மலையப்பசாமி, திரு. அ.இரா. .. கபிலர்மலை
179. மல்லிகா சின்னசாமி, திருமதி .. முசிறி
180. மாணிக்கராஜ், திரு. எஸ். .. நாங்குநேரி



181. மில்லர், திரு. அ. .. கூடலூர்
182. முரளிதரன், திரு. கே.வி. .. தளி
183. முருகவேல் ராஜன், திரு. க. .. வந்தவாசி (செ.வ.)
184. முருகேசன், திரு. ஆ.கு. .. ஆத்தூர்
185. முனுசாமி, திரு. கா.பூ. .. காவேரிப்பட்டினம்
186. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை
187. மோகன், திரு. ப. .. சின்னசேலம்
188. யசோதா, திருமதி டி. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
189. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
190. ரங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை
191. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். .. கோபிசெட்டிப்பாளையம்
192. ராதாகிருஷ்ணன், திரு. எம். .. திருமயம்
193. ராதாரவி, திரு. .. சைதாப்பேட்டை
194. ராமசாமி, திரு பி.சி. .. மொடக்குறிச்சி
195. ராமராஜ், திரு. ச. .. போடிநாயக்கனூர்
196. ராம்குமார், திரு. எம். .. பாபநாசம்
197. ராஜகோபால், திரு. ஆ. .. சிவகாசி
198. ராஜம்மாள், திருமதி எஸ். .. தூத்துக்குடி
199. ராஜா, திரு. எச். .. காரைக்குடி
200. ராஜாங்கம், திரு. வி.ஆர். .. சோழவந்தான்
201. ராஜூ, திரு. எச்.எம். .. உதகமண்டலம்
202. ரெங்கநாதன், திரு. என். .. பூம்புகார்
203. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. .. பேரூர்

| | | |
|---|---|---|
| 204. லட்சுமணன், திரு. வி.கே. | .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 205. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. | .. | அரவக்குறிச்சி |
| 206. வடிவேல், திரு. ஆர். | .. | வாணியம்பாடி |
| 207. வளர்மதி, திருமதி பா. | .. | ஆலந்தூர் |
| 208. வளர்மதி ஜெபராஜ், திருமதி | .. | மதுரை மேற்கு |
| 209. வள்ளல் பெருமான், டாக்டர் பி. | .. | காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 210. வாசுதேவன், திரு. பெ. | .. | மதுராந்தகம் |
| 211. விசுவநாதன், திரு. இரா. | .. | நத்தம் |
| 212. வில்வநாதன், திரு. இரா. | .. | சோளிங்கர் |
| 213. விநாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. | .. | பூங்கா நகர் |
| 214. விஜயபாஸ்கர், டாக்டர் சி. | .. | புதுக்கோட்டை |
| 215. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. | .. | பனமரத்துப்பட்டி |
| 216. வீரபாண்டியன், திரு. ஜெக. | .. | மயிலாடுதுறை |
| 217. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 218. வெங்கடாஜலம், திரு. செ. | .. | சேலம்-I |
| 219. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 220. வேலு, திரு. எ.வ. | .. | தண்டராம்பட்டு |
| 221. வேலுசாமி, திரு. செ.ம. | .. | பல்லடம் |
| 222. வேல் முருகன், திரு. தி. | .. | பண்ருட்டி |
| 223. வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. | தாம்பரம் |
| 224. வைத்திலிங்கம், திரு. ஆர். | .. | ஒரத்தநாடு |
| 225. ஜீவானந்தம், திரு. இரா. | .. | நாகப்பட்டினம் |
| 226. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. | .. | ஆரணி |



| | | |
|---|---|---|
| 227. ஜெயக்குமார், திரு. கு. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 228. ஜெயக்குமார், திரு. டி. | .. | இராயபுரம் |
| 229. ஜெயலலிதா செல்வி ஜெ | .. | ஆண்டிப்பட்டி |
| 230. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 231. ஹக்கீம், திரு. எம்.ஏ. | .. | மதுரை மத்தி |
| 232. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | .. | திருவட்டாறு |
| 233. (வெற்றிடம்) | .. | காஞ்சிபுரம் |
| 234. (வெற்றிடம்) | .. | கும்மிடிப்பூண்டி |
| 235. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி | .. | (நியமனம்) |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

| | | |
|---|---|---|
| திரு. என்.ஆர். சந்திரன் | .. | மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர் |

- - -

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 18, தாரண – திருவள்ளுவர் ஆண்டு 2036

## 2005 மார்ச் 31, வியாழக்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்*
*அலகுடை நீழ லவர்."*

*நெல்லை விளைவிக்கும் ஈர நெஞ்சத்தாரான உழவர், பல வேற்றரசரின் குடைநிழலின் கீழுள்ள நாடுகளையும் தம் அரசன் குடைக்கீழ்க் கொண்டு வருவர்.*

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிடாத வினாக்கள்

### பட்டியல் 13@

1—

### நலிவடைந்துள்ள கூட்டுறவு வங்கிகள்

**வினா எண் 11377—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மற்றும் இதர மாவட்டங்களிலும் உள்ள கூட்டுறவு வங்கிகள் பல நலிவடைந்துள்ளன என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எடுத்த நடவடிக்கை என்ன?

---

@ இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.

*(ஆ)* தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்தவரையில், 31-3-1994 அன்றுள்ளபடி, தமிழகத்தில் இருந்த 4,589 வங்கிகளில் 1,083 வங்கிகள் நலிவடைந்தவை எனக் கண்டறியப்பட்டது. அவற்றில் 118 வங்கிகளை எந்த வகையிலும் மேம்படுத்த இயலாது என்ற நிலையில், கலைத்தல்/ இணைத்தல் நடவடிக்கைக்கு உட்படுத்தத் தெரிவிக்கப்பட்டன. இவற்றில் 14 வங்கிகள் கலைக்கப்பட்டன. 27 வங்கிகள் கலைத்தல்/ இணைத்தல் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டன. மீதமுள்ள 77 வங்கிகள் தன்னிறைவு பெற தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஊரக வளர்ச்சி வங்கிகளின் செயல்பாடுகளை மேம்படுத்தவும், நபார்டு வங்கியுடன் உடன்பாட்டு ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டு, வங்கிகளின் செயல்பாடுகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு அவற்றின் வாழ்திறனை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

நகரக் கூட்டுறவு வங்கிகளை, இந்திய ரிசர்வ் வங்கி, வங்கியியல் நெறிமுறைகளின்படி,

*(1)* இலாபகரம் (Profitability)

*(2)* போதுமான பங்கு மூலதனம் இருந்தும் அதிக குவிந்த நட்டம் (Accumulated losses)

*(3)* பாதுகாப்பற்ற ஆஸ்திகள் (Risk assets)

*(4)* செயலாக்கமற்ற சொத்துக்கள் (Non performing Assets)

என்ற நிலைகளில் வகைப்படுத்துகிறது.

இந்திய ரிசர்வ் வங்கி, நிலை 3 மற்றும் 4-ல் உள்ள 87 வங்கிகள் செயலாக்கத்தில் பின்தங்கியுள்ளனவாகக் கருதி அவற்றின் செயல்பாடுகளைக் கண்காணித்து மேம்படுத்த அறிவுரைகள் வழங்கியுள்ளது.



**2—**

## கொப்பரைத் தேங்காய்

**வினா எண் 44039—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* 2002 ஆம் ஆண்டு தமிழகத்தில் கொப்பரைத் தேங்காய் ஏதேனும் அரசு கொள்முதல் செய்துள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், அதன் மதிப்பு எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* விவசாயிகளிடமிருந்து அரசு நேரடியாக கொப்பரைத் தேங்காய் கொள்முதல் செய்வதில்லை. எனினும், சந்தையில் கொப்பரைத் தேங்காய் விலை வீழ்ச்சி அடையும் காலங்களில், மைய அரசின் ஆதரவுடன் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தேசிய வேளாண்மைக் கூட்டுறவு விற்பனை இணையத்தின் முகவராக வேளாண் பெருமக்களிடமிருந்து கொப்பரைத் தேங்காய் கொள்முதல் செய்து வந்துள்ளது. 2002 ஜனவரி முதல் மார்ச் முடிய இவ்வகையில் 2939.30 மெ.டன் கொப்பரைத் தேங்காய் ரூ.969.97 இலட்சங்கள் மதிப்பிற்குக் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. ஆதாரவிலைத் திட்டத்தின்கீழ் ஏப்ரல் 2002-க்குப் பிறகு டிசம்பர் 2002 முடிய கொப்பரைக் கொள்முதல் நடைபெறவில்லை.

**3—**

## நீதிமன்றத்திற்குச் சொந்தக் கட்டடம்

**வினா எண் 53347—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு நுகர்வோர் நீதிமன்றத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

செங்கற்பட்டில் இயங்கிவரும் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றத்திற்கென்று சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு அரசாணை (நிலை) எண் 15, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 20-1-2004-ல் உரிய ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, கட்டடப் பணிகளும் முடிக்கப்பட்டுவிட்டன.

**4—**

## குளத்தினைத் தூர்வாருதல்

**வினா எண் 60681—திரு. ப. அரசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி நகராட்சியிலுள்ள சூரியமூர்த்தி பிள்ளையார் கோயில் ஊருணியைத் தூர்வார நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி நகராட்சி எல்லைக்குள் புல எண் 289/2-ல் அரசு புறம்போக்கில் 1.58.0 ஏர்ஸ் பரப்பில் சூரியமூர்த்தி குளம் மற்றும் பிள்ளையார் கோயில் அமைந்துள்ளது. மேற்படி சூரியமூர்த்தி பிள்ளையார் குளம் நகராட்சியின் பராமரிப்பிற்கு உட்பட்டதாகும். மேற்படி திருக்கோயில், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆளுகைக்குட்படாத சிறிய ஆலயமாகும். மேற்படி குளத்தின் ஒரு கரையில் மட்டும் படித்துறை மற்றும் தடுப்புச்சுவர் கட்டப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. இக்குளத்தினை நகராட்சி மூலமாகத் தூர்வார உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**5—**

## பால்வாடி பள்ளியில் தளம் கட்டுதல்

**வினா எண் 59436—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை ரொட்டிக்கடை பால்வாடி பள்ளியில் தளம் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், தளம் கட்டித்தர நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை ரொட்டிக்கடை அங்கன்வாடி மையக் கட்டடம் நல்ல முறையில் உள்ளது. தளம் ஏற்கெனவே சிமெண்ட்டினால் அமைக்கப்பட்டுள்ளது.

(ஆ) இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.

**6—**

## மருத்துவப் பரிசோதனை செய்ய தனி அறை

**வினா எண் 34673—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு தொகுதியில் உள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் பெண் மருத்துவர், மருத்துவப் பரிசோதனை செய்ய தனி அறை அமைத்துத்தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

செங்கற்பட்டு தொகுதியில் திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த சட்ராஸ், நெரும்பூர், வல்லிபுரம் ஆகிய 3 ஆரம்ப சுகாதார நிலையங்களும், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த குன்னவாக்கம், ரெட்டிப்பாளையம் ஆகிய இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. சட்ராஸ் மற்றும் வல்லிபுரம் ஆரம்ப சுகாதார நிலையங்களில் தனி அறை ஏதும் இல்லை. நகரும் திரைச்சீலை பயன்படுத்தப்பட்டு வருகின்றது. நெரும்பூர் மற்றும் குன்னவாக்கம் ஆரம்ப சுகாதார நிலையங்களில் தனி

அறை உள்ளது. ரெட்டிப்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பிரசவத்திற்கான அறையில் பெண் மருத்துவர் பரிசோதனை மேற்கொள்கிறார்.

**7—**

**மருத்துவர் தங்கும் விடுதி கட்டுதல்**

**வினா எண் 59123—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் ஒன்றியம், 89 மங்கநல்லூர் ஊராட்சியில் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மருத்துவர் தங்கும் விடுதி கட்டித் தரப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் குடியிருப்புக் கட்டடங்கள் கட்ட தற்போது அரசால் நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. எனவே, குத்தாலம் ஒன்றியம், மங்கநல்லூர் ஊராட்சியில் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குத் தற்போது மருத்துவ அலுவலர் குடியிருப்புக் கட்டித்தர சாத்தியக்கூறுகள் இல்லை.

**8—**

**சுற்றுச் சுவர் கட்டுதல்**

**வினா எண் 59130—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் மாவட்டம், க.பரமத்தி ஊராட்சி ஒன்றியம், புன்னம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சுற்றுச் சுவர் கட்ட தற்போது அரசால் நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. எனவே கரூர் மாவட்டம், புன்னம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குத் தற்போது சுற்றுச் சுவர் கட்டிக் கொடுக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**9—**

**சுற்றுச் சுவர் கட்டுதல்**

**வினா எண் 59646—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, மேற்பனைக்காடு, மீமிசல், கோட்டைப்பட்டினம், அம்மாபட்டினம், சிங்கவனம், பூவைமாநகர், நாகுடி ஆகிய கிராமங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சுற்றுச் சுவர் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சுற்றுச் சுவர் கட்ட தற்போது அரசால் நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. எனவே, அறந்தாங்கி தொகுதி, மேற்பனைக்காடு, மீமிசல், கோட்டைப்பட்டினம், அம்மாபட்டினம், சிங்கவனம், பூவைமாநகர், நாகுடி ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குத் தற்போது சுற்றுச் சுவர் கட்டித்தர சாத்தியக்கூறுகள் இல்லை.

10—

## சுகாதார நிலையத்திற்குக் கூடுதல் கட்டடம்

**வினா எண் 60898—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, மீமிசல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கூடுதல் கட்டடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

மீமிசல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பயனடையும் வெளிப்புற நோயாளிகளின் எண்ணிக்கை அடிப்படையில், தற்போதுள்ள வசதிகள் போதுமானதாக இல்லாததாலும், நடைபெறும் பிரசவங்கள் எண்ணிக்கை அதிகமாக உள்ளதாலும், பிரசவ அறை 6 படுக்கைகளுடன் கூடிய வார்டு கொண்ட கூடுதல் கட்டடம் மற்றும் இரு குடியிருப்பு கட்டடங்கள் கட்டும் கருத்துரு அரசின் நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

11—

## கால்நடை கிளை நிலையம்

**வினா எண் 60121—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆரப்பள்ளம் ஊராட்சியில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆரப்பள்ளம் ஊராட்சியில், கால்நடை கிளை நிலையம் அமைக்க தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) எழாது.



12—

## உறைவிந்து உற்பத்தி நிலையம்

**வினா எண் 64736—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழியில் கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் உறைவிந்து உற்பத்தி நிலையத்தைத் துவங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) கால்நடை பராமரிப்புத் துறை கட்டுப்பாட்டின்கீழ் ஏற்கெனவே, உயரின கால்நடை பெருக்குப் பண்ணை, ஈச்சங்கோட்டை, மாவட்டக் கால்நடைப் பண்ணை, திருநெல்வேலி, மாவட்ட கால்நடைப் பண்ணை, ஓசூர், மாவட்டக் கால்நடைப் பண்ணை, உதகை ஆகிய நான்கு உறைவிந்து உற்பத்தி நிலையங்களிலிருந்து உறைவிந்து தயாரித்து தமிழ்நாடு முழுவதும் விநியோகம் செய்யப்பட்டு வருவதனால், புதியதாக உறைவிந்து உற்பத்தி நிலையம் துவக்க தேவையான சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

(ஆ) எழாது.

13—

## பசுந்தீவன விதை உற்பத்திப் பிரிவு

**வினா எண் 64744—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழியில் பசுந்தீவன விதை உற்பத்திப் பிரிவைத் துவங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 மார்ச் 31

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஏற்கெனவே அருகில் உள்ள ஈச்சங்கோட்டை மாவட்ட கால்நடைப் பண்ணையில் 1 கோடி மதிப்பீட்டில் இப்பணி மேற்கொள்ளப்பட்டு வருவதால், நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழியில் பசுந்தீவன விதை உற்பத்திப் பிரிவு துவங்க வாய்ப்பில்லை.

**14—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 65421—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதி, மூரார்பாளையம் கிராமத்தில் துணை கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மாநிலத் திட்டக் குழு கடித எண் 1309/மா.தி./வேளாண்மை/99, நாள்: 2–7–1999–ன்படி புதிய கால்நடை கிளை நிலையங்கள் துவக்கிட விதிக்கப்பட்ட தடை உத்தரவு இன்னமும் அமலிலுள்ள நிலையில், அரசாணை எண் 463, நிதி (சி.எம்.பி.சி.) துறை, நாள்: 23-11-2001-ன்படி புதிய பதவிகள் தோற்றுவிக்க அரசு தடை விதிக்கப்பட்டுள்ள நிலையிலும், சங்கராபுரம் தொகுதி, மூரார்பாளையம் கிராமத்தில், தற்போது புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்க இயலாது.



2005 மார்ச் 31]

**15—**

**மரக் கன்றுகளை நடுதல்**

**வினா எண் 37408—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2002–2003–ல் வனத் துறையினரால் நடப்பட்டுள்ள மரக்கன்றுகள் எத்தனை?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

2002–2003 ஆம் ஆண்டில் வனத் துறையினரால் மதுரை, ஈரோடு, வேலூர், சென்னை, சேலம், தருமபுரி, திருநெல்வேலி, கோயம்புத்தூர், விருதுநகர், சென்னை (ஆராய்ச்சி), திண்டுக்கல், திருச்சி மற்றும் வன விரிவாக்கம் ஆகிய 13 மண்டலங்களில் 38,348.41 ஹெக்டேரில், 1,43,71,210 மரக் கன்றுகள் நடப்பட்டுள்ளன.

**16—**

**தேக்கு, சந்தன மரக் கன்றுகளை வழங்குதல்**

**வினா எண் 55061—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேக்கு, சந்தன மரக் கன்றுகளை விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

தேக்கு, பீநாரி, தைல மரம் மற்றும் சவுக்கு மரக் கன்றுகளை விவசாயிகள் மற்றும் தேவைப்படும் பொது மக்களுக்கு இலவசமாக விநியோகிக்க ரூ.6.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 2,00,000 செடிகள் எழுப்ப அரசாணை (டி) எண் 230, சுற்றுச்சூழல்–வனத் (வனம்–6) துறை, நாள்: 10–8–2004–ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. சந்தன மரக்

கன்றுகள் ஆராய்ச்சிப் பிரிவு, வன விரிவாக்க மண்டலத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வரும் 29 வன விரிவாக்க மையங்களில் விநியோகம் செய்யப்படுகிறது.

**17—**

## மருத்துவமனையில் ஸ்கேன் வசதி

**வினா எண் 62288—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறையில் உள்ள டான்டீ அரசு மருத்துவமனையில் ஸ்கேன் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

தேயிலை விலை வீழ்ச்சி காரணமாக, கடந்த நான்கு ஆண்டுகளாக இழப்பில் இயங்கி வந்த தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம், அக்கழகத்தினைத் திறம்பட இயங்கச் செய்ய கடும் நிதிச் சுமையை எதிர்கொண்டுள்ள நிலையில், வால்பாறையிலுள்ள அதன் மருத்துவமனையில், தற்பொழுது ஸ்கேன் வசதி செய்து தர இயலாத நிலையிலுள்ளது. ஆயினும், இவ்வசதி தேவைப்படும் தொழிலாளர்களுக்கு அருகிலுள்ள பெரிய மருத்துவமனைகளில் இவ்வசதி செய்யப்பட்டு, அதற்கான செலவினத்தை அக்கழகமே ஏற்றுக் கொள்கிறது.

**18—**

## குளக்கரைத் தோட்டம்

**வினா எண் 62881—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை வட்டத்தில் நடப்பாண்டில் குளக்கரைத் தோட்டம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பகுதியில் அமைக்கப்படவுள்ளது?



**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) உடுமலை வட்டத்தில் நடப்பாண்டில் குளக்கரைத் தோட்டம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**19—**

## வீட்டுமனைகளை உருவாக்கி விற்கும் திட்டம்

**வினா எண் 20445—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி நகரில் வீட்டுமனைகளை உருவாக்கி ஏழை, நடுத்தர வர்க்கத்தினருக்குத் தவணை முறையில் விற்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி நகரில், வீட்டு வசதி வாரியத்தால் ஏழை மற்றும் நடுத்தர வர்க்கத்தினருக்காக வீட்டுமனைகளை உருவாக்கி, தவணை முறையில் விற்கும் திட்டம் ஏதும் தற்போது வீட்டு வசதி வாரியத்தின் பரிசீலனையில் இல்லை. சிறிய மற்றும் பெரிய நகரங்களில் ஏற்கெனவே கட்டப்பட்ட வீடுகள் மற்றும் மனைகள் விற்கப்படாமல் உள்ளதால், தற்போது அறந்தாங்கி நகரில் வீட்டு மனைகளை உருவாக்கி விற்கும் திட்டம் ஏதும் இல்லை.

**20—**

## விடுகளை விற்பனை செய்தல்

**வினா எண் 38574—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 மார்ச் 31

(அ) சேலம் பேலஸ் நகர் வீடு கட்டும் கூட்டுறவு சங்கம் மூலம் கட்டிய வீடுகள் விற்கப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விற்பனை செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) சேலம் பேலஸ் நகர் கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தில் ரூ.14.00 கோடி மதிப்பில் 119 வீடுகள் கட்டப்பட்டன. அவற்றில் 54 வீடுகள் விற்பனை செய்யப்பட்டு 65 வீடுகள் விற்கப்படாமல் நிலுவையாக உள்ளன. மேலும் 12 அலுவலக வளாகங்களும் கட்டி முடிக்கப்பட்டு இன்னும் விற்பனை செய்யப்படாமல் நிலுவையாக உள்ளன.

(ஆ) விற்பனை செய்யப்படாமல் நிலுவையிலுள்ள வீடுகளையும் மற்றும் 12 அலுவலகக் கட்டடங்களையும் விற்பனை செய்வதற்கு தினசரி நாளிதழ்களிலும், தொலைக்காட்சிகளிலும், விளம்பரம் அளித்தும் நகரத்தில் உள்ள முக்கிய வியாபாரிகள், மருத்துவர்கள், பொறியாளர்கள் மற்றும் வழக்கறிஞர் ஆகியோரிடம் நேரடியாகத் தொடர்பு கொண்டும் விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**21—**

## வீடுகள் கட்டும் திட்டம்

**வினா எண் 63577—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் கட்டும் வீடுகளைத் தனியார் ஒப்பந்ததாரர்களிடம் ஒப்படைக்காமல் அரசின் கட்டுமானத் துறை மூலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2005 மார்ச் 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியில் தற்சமயம் வீட்டு வசதி வாரியத்தின்மூலம் வீடுகள் கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) எழவில்லை.

**22—**

## வீடுகள் உள்ள இடத்தில் பூங்கா அமைத்தல்

**வினா எண் 63583—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்மூலம் கட்டப்படும் வீடுகள் உள்ள இடத்தில் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், அதன் திட்டப் பகுதியில் பூங்காக்கள் அமைக்க ஒதுக்கப்பட்டுள்ள இடங்களை, திட்டப் பகுதியின் பராமரிப்புகளை உள்ளாட்சி நிறுவனத்திடம் ஒப்படைத்தபின், உள்ளாட்சி நிறுவனமே பூங்காக்களை அமைத்து பராமரித்து வரும்.

(ஆ) கேள்வி எழவில்லை.

**23—**

## வீடுகளைக் குறைந்த வாடகைக்கு விடுதல்

**வினா எண் 63585—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்மூலம் கட்டப்படும் வீடுகளையும், ஏற்கெனவே விற்கப்படாத வீடுகளையும் குறைந்த வாடகைக்கு விட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் எந்தக் கட்டுமானத் திட்டமும் செயல்படுத்தப்படவில்லை.

(ஆ) எழவில்லை.

**24—**

### நடுநிலைப் பள்ளியாக உயர்த்தும் திட்டம்

**வினா எண் 35015—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, பழையபாளையம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், பழையபாளையம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்கு 1-1/2 கிலோ மீட்டர் தூரத்தில் கொடக்காரமூலை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி செயல்பட்டு வருகிறது. எனவே, பழையபாளையம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக நிலை உயர்த்த அவசியம் இல்லை.





**25—**

### கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்டுதல்

**வினா எண் 55277—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், தாராபுரம் கிராமம், மணியக்காரனூரில் உள்ள நடுநிலைப் பள்ளிக்கு (Middle School) கூடுதல் வகுப்பறைகள் கட்ட, அனைவருக்கும் கல்வி (S.S.A.) திட்டத்தின் மூலம் அரசு பணம் ஒதுக்கி, கட்டடம் கட்ட ஆரம்பித்து இன்னும் முடிவடையாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்ட அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், தாதாபுரம் கிராமம், மணியக்காரம்பாளையத்திலுள்ள நடுநிலைப் பள்ளிக்கு அனைவருக்கும் கல்வி இயக்கத் திட்டத்தின்மூலம் மூன்று வகுப்பறைக் கட்டடம் அனுமதிக்கப்பட்டு, ரூ.4,50,000/- தொகை அனுமதிக்கப்பட்டு கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு. தற்போது மூன்று வகுப்பறைக் கட்டடங்களும் (மாணவர்களின்) பயன்பாட்டில் உள்ளன.

**26—**

### நாடா இல்லாத தறி பூங்காக்கள்

**வினா எண் 65182—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்செங்கோடு பகுதியில், நாடா இல்லாத தறி பூங்காக்கள் (Shuttle-less Wearing Parks) நிறுவும் பணி எப்போது முடிவடையும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

திருச்செங்கோடு சரகத்திற்குட்பட்ட குமாரபாளையம் பகுதியில் 31.75 ஏக்கர் நிலப்பரப்பில் 600 நாடா இல்லா விசைத் தறிகள் மற்றும் 4 சைசிங் ஆலைகள், மத்திய அரசின் திட்டமான ஜவுளித் தொழில் மையங்களுக்கான மேம்பாட்டுத் திட்டம் மற்றும் தொகுப்புத் தறிக் கூடங்கள் அமைக்கும் திட்டத்தின்கீழ் நிதி உதவி பெற்று, உயர் தொழில்நுட்ப விசைத் தறி பூங்கா என்ற பெயரில் அமைக்கப்படவுள்ளது. இப்பூங்கா 2005 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களுக்குள் முடிவுபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**27—**

## நடைபாதையை மேம்படுத்துதல்

**வினா எண் 48217—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரியில் அமைந்துள்ள காந்தி மண்டபம், நீச்சல்குளம் ஆகியவற்றிற்குச் செல்லும் நடைபாதையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரியில் அமைந்துள்ள காந்தி மண்டபத்திலிருந்து நீச்சல்குளம் வரை சுற்றுலாப் பயணிகளுக்கு 1–1/2 அடி உயரத்தில் 6 அடி அகலத்தில் கடற்கரைச் சாலையின் வலதுபுறமாக சுற்றுலாப் பயணிகளுக்கு நடைபாதை வசதி ரூ. 50.00 இலட்சம் செலவில் மத்திய–மாநில அரசு நிதியுதவி திட்டத்தின்கீழ் செய்யப்பட்டுள்ளது.

**28—**

## தொழிற் பயிற்சி நிலையம் தொடங்குதல்

**வினா எண் 56947—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழியில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) செயற்குறிப்பு இல்லை

(ஆ) இவ்வினா எழாது.

**29—**

## வேலைவாய்ப்பு வழங்குதல்

**வினா எண் 63087—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் உள்ள தேயிலைத் தோட்ட தொழிலாளர்களில் படித்து வேலை இல்லாமல் இருக்கும் பெண்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்த புதிய திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) அரசிடம் புதிய திட்டம் தற்போது ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**30—**

## தார்ச் சாலை அமைத்தல்

**வினா எண் 12032—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, மேலச்சேவல் பேரூராட்சி, கீழச்சேவல் நயினார்குளம் – தச்சன்குளத்து சாலையில் தார்ச் சாலை அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 மார்ச் 31

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* மேலச்சேவல் சிறப்பு சிற்றூராட்சி, கீழச்சேவல் நயினார்குளம் தச்சன்குளத்து சாலை 150 மீட்டர் நீளமுள்ள மண் சாலையாகும். மேற்படி சாலையில் பேருந்து போக்குவரத்து ஏதும் இல்லை. விவசாயத்திற்குப் பயன்படும் வாகனங்கள் மட்டும் சென்று வருகின்றன. மேற்படி சாலையினைத் தற்சமயம் சுமார் 90 பேர் மட்டும் பயன்படுத்தி வருகின்றனர். இது அவ்வளவாகப் பயன்பாட்டில் இல்லாத ஒரு ஒதுக்குப்புறமான சாலையாகும். மேற்படி சாலையைத் தார்ச் சாலையாக மாற்றியமைக்க ரூ. 1.10 இலட்சம் செலவு ஆகும். மேற்படி சாலையினைச் சரி செய்ய சிறப்புச் சிற்றூராட்சியில் தற்போது போதிய நிதி வசதி இல்லை.

**31—**

## குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 13934—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பண்ருட்டி தொகுதி, குறிஞ்சிப்பாடி ஒன்றியத்தைச் சேர்ந்த கருப்பஞ்சாவடி கிராமத்தில் வன்னியர் வீதியில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி ஒன்றியத்தைச் சேர்ந்த டி.பாளையம் ஊராட்சியிலுள்ள கருப்பஞ்சாவடி வன்னியர் தெரு மேடாக உள்ளதால், அங்கு நிலவிய குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்கும் வகையில், மக்கள் பங்கேற்புடன் கூடிய பகுதி சீரமைப்புத் திட்டத்தின்கீழ், கூடுதல் திறன் கொண்ட மின் மோட்டார் பொருத்தப்பட்டு, தற்போது இப்பகுதிக்குப் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.



2005 மார்ச் 31]

**32—**

## குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 15627—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், புதுவெண்மணம்புதூர் பகுதிக்குக் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத்தர அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ)* கடம்பத்தூர் ஒன்றியம், கடம்பத்தூர் ஊராட்சி, புதுவெண்மணம்புதூர் குடியிருப்பிற்கு வெண்மணம்புதூர் குடிநீர்த் திட்டத்திலிருந்து குழாய் நீட்டிப்பின்மூலம் தற்போது போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. மேலும், மக்கள் தொகை குறைவாக இருப்பதால், இக்குடியிருப்பிற்குத் தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் அமைக்க சாத்தியக்கூறு இல்லை.

**33—**

## மேல்நிலை குடிநீர்த் தொட்டி

**வினா எண் 15839—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், இராமன்கோயில் கிராமப் பகுதியில் மேல்நிலை குடிநீர்த் தொட்டி கட்ட திட்டம் தீட்டி பாதியில் நிறுத்தப்பட்டுள்ளது குறித்து அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், மேல்நிலை தொட்டி முழுமையாக எப்போது அமைத்துத் தரப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், இராமன்கோயில் ஊராட்சியிலுள்ள இராமன்கோயில் கிராமம் மற்றும் காலனிக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் செயலாக்கும் பொருட்டு 2001 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஆழ்துளைக் கிணறு மட்டும் அமைக்கப்பட்டது. மேலும், இரு கையிறைப்பான்கள் குழாய் நீட்டிப்பு மற்றும் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய மின்விசைத் திட்டம் ஜனவரி 2002–ல் முடிக்கப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

**34—**

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 20565—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியம், முத்துரான்பள்ளம் என்ற இடத்திலுள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிக்குத் தண்ணீர் விநியோகம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், கந்திலி ஒன்றியத்தைச் சேர்ந்த பெரியகரம் ஊராட்சியிலுள்ள முத்துரான்பள்ளம் குடியிருப்பிற்கு 3,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய மின்விசைத் திட்டம் 1/2003-ல் முடிக்கப்பட்டு தற்போது போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது.





**35—**

## சோதனைக் கூடங்கள்

**வினா எண் 21050—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் குடிநீரின் தரத்தினைப் பரிசோதிக்க எத்தனைச் சோதனைக் கூடங்கள் உள்ளன?

(ஆ) அவை, மாவட்ட தலைநகருக்கு ஒன்று என்ற விகிதாச்சாரத்தில் விரிவுபடுத்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மாநில அளவிலான நீர்ப் பரிசோதனை கூடம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் தலைமை அலுவலகத்தில் இயங்கி வருகிறது. மேலும், எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் நீர்ப் பரிசோதனைக் கூடங்கள் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. ஒரு நடமாடும் நீர்ப் பரிசோதனைக் கூடம் கோயம்புத்தூரில் இயங்கி வருகிறது. பெரிய அளவிலான குடிநீர் வழங்கு திட்டங்களுக்கான சுத்திகரிப்பு நிலையங்களில், மேலும் 5 நீர்ப் பரிசோதனைக் கூடங்கள், அன்றாட நீரின் தரக் கண்காணிப்புக்காக இயங்கி வருகின்றன. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் எல்லா நீர்ப் பரிசோதனைக் கூடங்களிலும், பொது மக்களும், பஞ்சாயத்துக்களும், மற்ற நிறுவனங்களும் கட்டண அடிப்படையில் நீர் மாதிரிகளைப் பரிசோதனை செய்துகொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

**36—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 27084—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, வடக்கு அரியநாயகிபுரம் பொட்டல் காலனி, இலந்தகுளம், ஓடைமரிச்சான்–தாத்தஅரம்,

குத்தப்பாஞ்சான்–காளாத்தி மடம் ஆகிய இடங்களில் குடிநீர் வழங்க மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியம், வடக்கு அரியநாயகிபுரம் ஊராட்சியைச் சேர்ந்த பொட்டல் காலனி குடியிருப்புக்கு ரூ. 7.84 இலட்சம் செலவில் ஏற்கெனவே உள்ள நீருறிஞ்சிக் கிணற்று நீராதாரத்தைப் பயன்படுத்தி புதியதாக 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, பிரதான நீரேற்றுக் குழாய், பகிர்மானக் குழாய் மற்றும் பொது நல்லி அமைப்புடன் கூடிய திட்டம் நிறைவேற்றப்பட்டு, மக்கள் பயனுக்கு கொண்டு வரப்பட்டு பராமரிப்பிற்காக ஊராட்சி நிர்வாகத்திடம் 31–10–2003 அன்று ஒப்படைக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**37—**

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 27272—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கண்ணந்தேரி ஊராட்சிக்கு உட்பட்ட பொந்தனூர், முத்தாயூர், பூசாரிக்காடு, கொல்லம்பாளையம், கோசாரிப்பட்டி ஆகிய இடங்களிலுள்ள மேல்நிலைத் தொட்டிகளுக்குச் சரிவர குடிநீர் ஏற்ற இயலாமையால், அப்பகுதியில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதை முறைப்படுத்த அரசு விரைந்து நடவடிக்கை எடுக்குமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மகுடஞ்சாவடி ஒன்றியம், கண்ணந்தேரி ஊராட்சி, முத்தாயூர், பொந்தனூர், கோசாரிப்பட்டி மற்றும் கொல்லம்பாளையம் ஆகிய 4 குடியிருப்புகளுக்கு இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ், குடிநீர் சீராக வழங்கப்பட்டு வருகிறது.

பூசாரிக்காடு குடியிருப்புக்கு (உரும்பிக்காரன் வளவு பகுதி) இராசிபுரம்–எடப்பாடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது இவ்விடங்களில் குடிநீர்த் தட்டுப்பாடு இல்லை.

**38—**

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 27292—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், தாழையூரில் மேல்நிலைத் தொட்டி கட்டி, குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், தாழையூர் ஊராட்சியில் உள்ள தாழையூர் குடியிருப்பிற்கு இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டுள்ள மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் உள்ள 175 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்குக் காவிரி குடிநீர் ஏற்றப்பட்டு 6/2003 முதல் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

[2005 மார்ச் 31

39—

## ஆழ்துளைக் கிணறு அமைத்தல்

**வினா எண் 29178—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கம்பாலபட்டி ஊராட்சியில் ஆழ்துளைக் கிணறு ஒன்றை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆனைமலை ஒன்றியம், கம்பாலபட்டி ஊராட்சி, கம்பாலபட்டி குடியிருப்புக்கு இரு கையிறைப்பான்கள் மூலமும் மற்றும் கம்பாலபட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமும் குடிநீர் வசதி அளிக்கப்படுகிறது. தற்போது இக்குடியிருப்புக்கு அத்தியாவசிய தேவைக்குப் போதுமான அளவு, குடிநீர் வழங்கப்படுவதால் ஆழ்துளைக் கிணறு அமைக்கும் திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை.

40—

## குடிநீர்க் குழாய்கள் அமைத்தல்

**வினா எண் 39159—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொகுதி, ஊத்துப்பட்டி கிராமத்தில் ஆழ்துளைக் கிணறு, மின்விசை மோட்டார், குடிநீர்க் குழாய்கள் அமைத்துக் கொடுக்கும் திட்டம் செயல்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2005 மார்ச் 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி ஒன்றியத்தில் உள்ள ஊத்துப்பட்டி குடியிருப்புக்கு 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய மின்விசைப் பம்பு திட்டம் ஆழ்துளைக் கிணற்றை நீராதாரமாகக் கொண்டு செயல்படுகிறது.

41—

## ஆழ்குழாய்க் கிணறு

**வினா எண் 41568—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஒன்றியம், கீழ்க்குடி, வாட்டாத்தூர், வேலிவயல் ஆகிய கிராமங்களில் குடிநீர் தேவைக்காக ஆழ்குழாய்க் கிணறு ஒன்று அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோயில் ஒன்றியம், கீழ்க்குடி, வாட்டாத்தூர் ஊராட்சியைச் சேர்ந்த வாட்டாத்தூர் குடியிருப்பில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் ஜூலை 2004-ல் முடிக்கப்பட்டு, தொடர் பராமரிப்பிற்காக ஊராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டு, மக்கள் பயனில் உள்ளது.

மேலும், இதே ஊராட்சியைச் சேர்ந்த வேலிவயல் குடியிருப்பில் தற்போது அத்தியாவசிய தேவைக்குரிய குடிநீர் வழங்கப்படுகிறது.

**42—**

### குடிநீர் வழங்கல்

**வினா எண் 53001—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி, சேத்துமடை சர்க்கார்பதி சாலை குடியிருப்புப் பகுதியில் குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேட்டைக்காரன்புதூர் சிறப்பு சிற்றூராட்சி சேத்துமடை சர்க்கார்பதி குடியிருப்புப் பகுதியில் 900 பேர் குடியிருந்து வருகிறார்கள். அப்பகுதியில் 13 பொதுக் குழாய்கள் அமைக்கப்பட்டு ஆனைமலை கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் 2-வது குடிநீர்த் திட்டத்தின் மூலம் ஒரு நாள் விட்டு ஒரு நாள் 2–1/2 மணிநேரம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், அப்பகுதியில் 30 வீடுகளுக்குத் தனியார் குழாய் இணைப்புகளும் சிறப்புச் சிற்றூராட்சி மூலம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது மேற்படி பகுதியில் எவ்விதப் பிரச்சினையும் இன்றி பொது மக்களுக்குக் குடிநீர் சீராக வழங்கப்பட்டு வருகிறது.

**43—**

### குடிநீர் இணைப்பு வழங்குதல்

**வினா எண் 55456—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி ஒன்றியம், பெருமங்களம் ஊராட்சி, மந்தக்கரை காலனி தெருவிற்குக் குடிநீர் இணைப்பு வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி ஒன்றியம், பெருமங்களம் ஊராட்சி, மந்தக்கரை காலனி தெருவிற்குக் குடிநீர் இணைப்பு வழங்கும் பணி முடிவுற்று குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**44—**

### குடிநீர் வடிகால் வாரியம்

**வினா எண் 55623—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் பேரூராட்சியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி, குடிநீர் வடிகால் வாரியத்தால் நிர்வாகங்களிடம் ஒப்படைக்காமல் எத்தனை உள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கொங்கணாபுரம் சிறப்பு சிற்றூராட்சிக்கு உட்பட்ட பகுதியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் 4 இடங்களில் குடிநீர் மேல்நிலைத் தொட்டிகள் கட்டப்பட்டு, அனைத்தும் சிறப்பு சிற்றூராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஒப்படைக்காதது எதுவும் இல்லை.

**45—**

### கிராம மின் விளக்கு அமைத்தல்

**வினா எண் 56501—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி ஒன்றியம், செம்பதனிருப்பு ஊராட்சி, ராதாநல்லூர் ஊராட்சி, மணிகிராமம் ஊராட்சி, திருவெண்காடு ஊராட்சி, பூம்புகார் மேலையூர் ஊராட்சி மற்றும் வானகிரி ஊராட்சிகளில், சூரிய

[2005 மார்ச் 31

எரிசக்தியைக் கொண்டு கிராம எரிசக்தி திட்டத்தின்கீழ் கிராம மின் விளக்கு எரிவதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி ஒன்றியம் செம்பதனிருப்பு ஊராட்சி, ராதாநல்லூர் ஊராட்சி, மணிகிராமம் ஊராட்சி, திருவெண்காடு ஊராட்சி, பூம்புகார் மேலையூர் ஊராட்சி மற்றும் வானகிரி ஊராட்சிகளின் நிதி ஆதாரம் போதுமானதாக இல்லாததால், மேற்படி ஊராட்சிகளில் சூரிய சக்தியைக் கொண்டு, கிராம எரிசக்தி திட்டத்தின் கீழ் கிராம மின் விளக்கு அமைத்திட இயலாது.

**46—**

## குடிநீர் மேல்நிலைத் தொட்டிகள்

**வினா எண் 57236—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி, விஜயபுரம் ஊராட்சி, விஜயபுரம் வடக்குக் குடியிருப்பு, மங்களநாடு ஊராட்சி, மங்களநாடு கிராமம் மற்றும் அமரசிம்மேந்திரபுரம் ஊராட்சி, ஆதிதிராவிடர் குடியிருப்பில் குடிநீர் மேல்நிலைத் தொட்டிகள் அமைத்துத்தரும் எண்ணம் ஏதேனும் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

**விஜயபுரம் வடக்குக் குடியிருப்பு:**

இது அறந்தாங்கி ஒன்றியத்தில் விஜயபுரம் ஊராட்சியில் உள்ள குடியிருப்பாகும். இங்கு உள்ள 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது.



2005 மார்ச் 31]

*2. மங்களநாடு (தெற்கு):*

இது அறந்தாங்கி ஒன்றியத்தில் உள்ள மங்களநாடு ஊராட்சியில் உள்ள குடியிருப்பாகும். இங்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

*3. அமரசிம்மேந்திரபுரம் ஆதிதிராவிடர் காலனி:*

அறந்தாங்கி ஒன்றியத்தில் உள்ள அமரசிம்மேந்திரபுரம் ஊராட்சியில் அமைந்துள்ள இக்குடியிருப்புக்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**47—**

## குடிநீர் மேல்நிலைத் தொட்டி

**வினா எண் 57239—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி, குண்டகவயல் ஊராட்சி, சனிக்காடு கிராமம், கம்மங்காடு ஊராட்சி, பத்தரசன்கோட்டை கிராமம் மற்றும் பஞ்சரத்தி ஊராட்சி, புதுவாக்கோட்டை கிராமத்தில் குடிநீர் மேல்நிலைத் தொட்டி அமைத்துத்தரும் எண்ணம் ஏதேனும் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி ஒன்றியத்தில் உள்ள கம்மங்காடு ஊராட்சியில் உள்ள பத்தரசன்கோட்டை குடியிருப்பில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டி மூலமும், பஞ்சரத்தி ஊராட்சியிலுள்ள புதுவாக்கோட்டை குடியிருப்பில் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டி மூலமும் குடிநீர் வழங்கப்படுகிறது.

ஆவுடையார்கோயில் ஒன்றியத்தில் உள்ள குண்டகவயல் ஊராட்சியில் உள்ள ஜகைனேந்தல் சனிக்காடு குடியிருப்புக்குத் தனி மின்விசைத் திட்டம், நடப்பு நிதியாண்டில் (2004–05) ரூ.5.45 இலட்சத்தில் திட்டம் நடைபெற்று வருகிறது. திட்டம் இவ்வருட இறுதிக்குள் மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட உள்ளது.

48—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்

**வினா எண் 58378—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், அரசர்குளம் கிழக்கு ஊராட்சி, கீழக்குடியிருப்பு, வல்லாவரி ஊராட்சி, வல்லாவரி கடைத்தெரு, ஆமாஞ்சி ஊராட்சி, இடையன்காடு–செவிடன்காடு கிராமம் மற்றும் கீழ்குடி–அம்மன்ஜாக்கி ஊராட்சி, கீழ்குடியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டித்தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஒன்றியம், அரசர்குளம் கீழ்பாதி ஊராட்சியிலுள்ள கிழக்குக் குடியிருப்பில் 1992-ல் கட்டப்பட்டுள்ள, 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டி மூலமும் வல்லாவரி ஊராட்சியின் இரயில்வே ஸ்டேஷன் குடியிருப்பு என்ற வல்லாவரி கடைத்தெருவில் 2003–2004 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் மூலமும் ஆமாச்சி ஊராட்சியிலுள்ள இடையன்காடு குடியிருப்பில் 2001-ல் கட்டப்பட்ட 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டி மூலமும் குடிநீர் வழங்கப்படுகிறது. கூடுதலாக மேலும் மேல்நிலைத் தொட்டி அமைக்க கருத்துரு பரிசீலனையில் இல்லை.

ஆமாஞ்சி ஊராட்சியில் உள்ள செவிடன்காடு குடியிருப்பு மற்றும் கீழ்குடி-அம்மன்ஜாக்கி ஊராட்சியில் உள்ள கீழ்குடியிருப்புகளுக்குக் குழாய் நீட்டிப்பு மூலமாகக் குடிநீர் வழங்கப்படுகிறது.

49—

## குடிநீர் வசதி

**வினா எண் 60276—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) முசிறி தொகுதி, திருப்பஞ்சலி ஊராட்சியில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம், குடிநீர் வசதி செய்துதர அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் ஒன்றியம், திருப்பஞ்சலி ஊராட்சியிலுள்ள 13 குடியிருப்புகளில், 11 குடியிருப்புகள், திருப்பஞ்சலி திருவெள்ளரை மற்றும் 18 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் கொள்ளிடம் ஆற்றுநீரை நீராதாரமாகக் கொண்டு மேல்நிலைத் தொட்டிகள் மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. மீதம் உள்ள இரண்டு குடியிருப்புகளில், வால்மால் பாளையம் தெற்குக் குடியிருப்பில் 2003–2004 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட தனி மின்விசைத் திட்டத்தின்கீழ் குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. மற்றொரு குடியிருப்பான பார்வதிபுரம், சோழபண்ணை குடியிருப்பில் இருந்து தொலைவில் உள்ளதால் (2 கி.மீ.) இக்குடியிருப்பில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்க இயலவில்லை. எனினும் ஒரு சிறு மின்விசைத் திட்டம் மற்றும் கையிறைப்பான் மூலம் அத்தியாவசிய தேவைக்குரிய குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

50—

## ஊராட்சிகள் அமைத்தல்

**வினா எண் 62826—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, வால்பாறையில் முடிஸ் பகுதி மற்றும் கருமலை பகுதியையும் சேர்த்து ஊராட்சிகளாக அறிவிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 மார்ச் 31

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சட்டமன்ற மற்றும் பாராளுமன்றத் தொகுதி சீரமைப்பு ஆணையம், அப்பணிகள் முடியும் வரையில், ஊராட்சி அமைப்புகளில் எந்தவித மாற்றம் செய்தல் அல்லது புதிதாக ஊராட்சிகள் அமைத்தல் போன்றவற்றிற்குத் தடை உத்தரவு வழங்கியுள்ளதால், வால்பாறை தொகுதி, வால்பாறையில் முடிஸ் பகுதி மற்றும் கருமலை பகுதியையும் சேர்த்து ஊராட்சிகளாக அறிவிக்க இயலாது.

(ஆ) வினா எழவில்லை.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. கவன ஈர்ப்பு

### (அ) திருவள்ளூர் மாவட்டம், ஆர்.கே. பேட்டை ஒன்றியம், ஸ்ரீ காளிகாபுரம் ஆதிதிராவிடர் காலனிக்குக் குடிநீர் வழங்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55—ன்கீழ், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. பிஎம். நரசிம்மன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டம், ஆர்.கே. பேட்டை ஒன்றியம், ஸ்ரீகாளிகாபுரம் ஆதிதிராவிடர் காலனியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு நீர் ஆதாரம் கொண்டு வருவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.



2005 மார்ச் 31] [திரு. கே.பி. அன்பழகன்]

#### அறிக்கை

திருவள்ளூர் மாவட்டம், ஆர்.கே.பேட்டை ஒன்றியம், ஸ்ரீகாளிகாபுரம் ஊராட்சி, ஸ்ரீகாளிகாபுரம் ஆதிதிராவிடர் காலனியின் மக்கள் தொகை 450. வறட்சி நிவாரணத் திட்டம் 2004–2005 ஆம் ஆண்டு வரப்பெற்ற நிதி, மூன்றாம் தவணை வரையிலான ஒதுக்கீடு முழுவதும் ஊராட்சிகளுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட்டது. எனவே, மீண்டும் நான்காம் தவணை வறட்சி நிவாரணத் தொகை ஒதுக்கீடு பெறப்பட்டதும், ஸ்ரீகாளிகாபுரம் ஆதிதிராவிட காலனிக்குப் புதியதாக ஆழ்துளைக் கிணறு அமைக்க முன்னுரிமை அளிக்கப்படும். இத்திட்டத்தினால் புதிய காலனி, பழைய காலனி, காந்தி நகர் ஆகிய கிராமங்கள் பயனடையும்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீரிய திட்டங்கள் தினம்தினம் அறிவிக்கப்பட்டு, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. விவர அறிக்கையிலேகூட, ஆழ்துளைக் குழாய்க் கிணறு அமைக்க முன்னுரிமை அளிக்கப்படும் என்று சொல்லப்பட்டுள்ளது. இதற்காகத் தொகுதி மக்களின் சார்பிலே என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். விவர அறிக்கையில் சொல்லப்பட்ட பகுதியைச் சுற்றி, இரண்டு கிலோ மீட்டர் தூரத்திற்கு நீராதாரம் இல்லை என்று சொல்லப்படுகிறது. எனவே, இப்பகுதியின் குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டைப் போக்க உடனடியாக நீராதாரம் கண்டு, நீர்த்தேக்கத் தொட்டிக்குத் தண்ணீர் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீகாளிகாபுரம் ஊராட்சியில் இரண்டு ஆதிதிராவிடர் காலனிகள் உள்ளன. ஒன்று, பழைய காலனி. மற்றொன்று, புதிய காலனி. பழைய காலனியில் 30,000 லிட்டர் கொள்ளளவு உள்ள ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி உள்ளது. ஸ்ரீகாளிகாபுரம் மெயின் ரோட்டில் உள்ள ஆறு அங்குலம் விட்டமுள்ள ஓர் ஆழ்துளைக் கிணற்றிலிருந்து சுமார் 400 அடி நீளத்திற்கு pipe line அமைக்கப்பட்டு, அதன் வழியாக மேற்படி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு மின்விசை இறைப்பான் மூலமாகத் தண்ணீர் கொண்டு செல்லப்பட்டு, காலனியில் வசிப்பவர்களுக்கு ஒருநாள் விட்டு ஒருநாள் குடிநீர் வழங்கப்படுகிறது. மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்கள், வறட்சியின் காரணமாக அந்தப் பகுதியிலே தண்ணீர் பற்றாக்குறை என்று

கூறுகின்றார்கள். வறட்சி நிவாரணத் தொகை ஒதுக்கீடு, நான்காவது தவணை பெறப்பட்டவுடன், ஸ்ரீ காளிகாபுரம் ஆதிதிராவிடர் காலனியிலுள்ள — இரண்டு கிலோ மீட்டர் சுற்றளவிற்கு நீராதாரம் இல்லை என்று சொல்கிறார்கள். அந்த இரண்டு கிலோ மீட்டர் சுற்றளவிலே நல்லபடி நீராதாரம் இல்லை என்றால், மேற்கொண்டு எங்கே நீராதாரம் நன்றாக இருக்கின்றதோ அங்கே ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டு — அந்தப் பகுதி மக்களுடைய குடிநீர்த் தேவை பூர்த்தி செய்யப்படும் என்பதைக் கூறி அமர்கின்றேன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருக்கின்ற ஆழ்துளைக் குழாய்க் கிணறு வற்றிவிடுகிறபோது, ஊராட்சிகளில் நிதிவசதி இல்லை என்ற காரணத்தால், இது போன்ற திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற இயலவில்லை. இதுபோன்ற சூழ்நிலை ஏற்படுகிறபோது, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் இப்பகுதிக்கு நீராதாரம் கொண்டு வந்து, இப்பிரச்சினையைத் தீர்க்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அல்லது வறட்சி நிவாரணத் தொகை, இந்த இரண்டில் முன்னுரிமை அடிப்படையில் எதன்மூலம் முதலில் செயல்படுத்த முடிகிறதோ, அதைக்கொண்டு, அந்தப் பகுதியினுடைய குடிதண்ணீர்ப் பிரச்சினை தீர்க்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்து அமர்கின்றேன்.

## (ஆ) சென்னை ஆர்.கே. நகர் தொகுதி, இளையா முதலி தெரு, கான்கிரீட் சாலை அமைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன்கீழ், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த அடுத்த கவன ஈர்ப்பு. திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. பி.கே. சேகர்பாபு.



**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கனரக வாகனங்கள் அதிக அளவில் செல்வதால், ஆர்.கே. நகர் தொகுதியில் உள்ள இளையா முதலி தெருவில் கான்கிரீட் சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

மண்டலம் 1, வார்டு 3-ல் உள்ள இளையா முதலி தெருவில், பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் உள்நுழைவாயில் முதல் வைத்தியநாதன் பாலம் வரை மற்றும் இளையா முதலி தெருவில் மன்னப்பன் தெரு முதல் எச்.பி.சி.கே. வரையிலும் உள்ள பகுதியை சிமெண்ட் கான்கிரீட் சாலையாக மாற்றியமைப்பதற்காக, தேவையான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, அம்மதிப்பீடுகளுக்கு ஒப்பந்தங்கள் கோர நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்கிடையில் மேற்கண்ட இளையா முதலி தெருவில் குறிப்பிட்ட இரண்டு பக்கங்களிலும், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் துறை, சி.சி.ஆர்.சி.பி. திட்டத்தின்கீழ், குழாய் பதிக்கும் பணியைத் துவக்கியதால், ஒப்பந்தங்கள் கோருவது நிறுத்தி வைக்கப்பட்டது. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் துறை, தற்போது இச்சாலைப் பகுதியில், சாலை வெட்டுப் பணிகளை முடித்துவிட்ட நிலையில், தோண்டிய சாலையைச் சரிசெய்ய நடவடிக்கை (Restoration of Road cut) எடுத்து வருகிறது. அப்பணி முடிந்தவுடன் மேற்கண்ட இளையா முதலி தெருவில் சிமெண்ட் கான்கிரீட் சாலைக்குப் பதிலாக, குறிப்பிட்ட சாலைப் பகுதியை வலுப்படுத்திப் புதுப்பிக்கும் பணியைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் கான்கிரீட் சாலைக்குப் பதிலாக சாலையை வலுப்படுத்திப் புதுப்பிக்கும் பணியைச் செய்வதாக அறிவித்திருக்கிறார்கள். அந்தத் தெருவிலேதான் B.P.C., I.O.C. போன்ற பெட்ரோல் நிலையங்கள் இருக்கின்றன. அதிலிருந்து தினமும் 12 ஆயிரம்

லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரிகள், ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட கனரக வாகனங்கள் அந்தத் தெருவிலே செல்கின்றன. இதை அறிந்துதான் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்த 12-11-2002 அன்று வெள்ளச் சேதங்களைப் பார்வையிட வந்தபோது, இந்தப் பகுதிகள் எல்லாம் கான்கிரீட் சாலைகளாக மாற்றப்பட வேண்டுமென்று உத்தரவிட்டிருந்தார்கள். ஆகவே, இந்தப் பகுதியில் அதிக கனரக வாகனங்கள் செல்வதைக் கருத்தில்கொண்டு, கான்கிரீட் சாலை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, இளையா முதலி சாலையை சிமெண்ட் கான்கிரீட் சாலையாக அமைக்கும் பணி இரண்டாவது திட்டத்தில் நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு.

***திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணைக்கேற்ப, அமைச்சர் அவர்களுடைய அறிவிப்பிற்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இதுபோன்ற பேருந்து வழித்தடங்களில், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும்பொழுது பார்வையிட்டு கான்கிரீட் சாலைகள் அமைக்கப்பட வேண்டுமென்று, ஓர் ஆணையினைப் பிறப்பித்தார்கள். அந்த ஆணைக்கேற்ப, தற்போது சென்னை மாவட்டத்தில் எந்தெந்தப் பேருந்து சாலைகள் கான்கிரீட் வசதி கொண்ட சாலைகளாக மாற்றப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியில், 2004-2005 ஆம் ஆண்டில் கனரக வாகனங்கள் செல்லும் சாலைகள், குடிநீரேற்றும் நிலையம் அருகிலுள்ள சாலைகள் மற்றும் மழைக் காலங்களில் அதிக தண்ணீர் தேங்கி சேதமுறும் சாலைகள் ஆகிய பகுதிகளைச் சிமெண்ட் சாலைகளாக மாற்ற வேண்டுமென்று, தமிழகத்தினுடைய முதலமைச்சர்,



மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்ததன்படி, சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட மண்டலம் எண் 5-ல் புதிய ஆவடி சாலை, மண்டலம் எண் 7-ல் டாக்டர் எம்.ஜி.ஆர். சாலை, வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, திருமலைப் பிள்ளை சாலை, மண்டலம் எண் 9-ல் ஆர்.கே. சண்முகம் சாலை, பி.வி. ராஜமன்னார் சாலை, டாக்டர் இராமசாமி சாலை, இராம்நகர் பிரதான சாலை, மண்டலம் 3-ல் சத்தியமூர்த்தி பிரதான சாலை, சுந்தரம் சாலை ஆகிய 10 சாலைகளிலும், மொத்தமாக 4.501 கி.மீ. நீளத்திற்கு ரூபாய் 1422.50 இலட்சம் மதிப்பீட்டிலே சிமெண்ட் கான்கிரீட் சாலைகளாக மாற்றும் பணிகள் தற்போது துரிதமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மேலும், மண்டலம் எண் 1-ல் முத்தமிழ் நகர் 5-ஆவது பிரதான சாலை, மணலி சாலை, வைத்தியநாதன் சாலை ஆகிய இந்த மூன்று சாலைகளிலும் 1.906 கி.மீ. நீளத்திற்கு ரூபாய் 465 இலட்சம் மதிப்பீட்டிலே, சிமெண்ட் சாலை அமைப்பதற்கான பணியினை மிக விரைவிலே மேற்கொள்ள இருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள் கேட்டுக்கொண்ட இளையா முதலி தெருவானது மண்டலம் 1-ல் உள்ளது. அந்த மண்டலம் 1-ல் உள்ள 1.138 கி.மீ. நீளத்திற்கான சாலையினை 278.5 இலட்சம் மதிப்பீட்டிலே கூடிய விரைவிலே இரண்டாவது திட்டத்தில் அந்தப் பணியும் மேற்கொள்ளப்படும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்து அமர்கின்றேன்.

## 3. அறிக்கை அளித்தல்

## அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. லா. சந்தானம் அவர்கள்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2005 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்து ஏழாவது அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

[2005 மார்ச் 31

## 4. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 26 - தொழில் துறை**

**(ஆ) கோரிக்கை எண் 16 - கைத்தறி, கைத்திறன், துணிநூல் கதர்த் துறை - கைத்தறி மற்றும் துணிநூல்** } தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 30-3-2005 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற 2005-2006 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மற்றும் அவற்றின்மீது முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின் மீதான விவாதத்திற்குப் பதிலுரை. மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்"

எனும் வள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப, சீர்தூக்கிப் பார்த்து உறுதியான முடிவு எடுத்து, நல்லாட்சி நடத்தி அகிலத்தின் அரசியலுக்கே வழிகாட்டும் அரசியல் சாணக்கியரே, (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, ஈடில்லா பேராற்றல், இணையில்லா செயலாற்றல் கொண்ட ஈகைத் தாயே, நாடும்--ஏடும் போற்றும் நலிந்தோருக்கு உதவும் நற்றமிழ் தாயே, மக்களின் துயரங்களுக்கு ஆறுதலாகவும், மக்களின் துன்பங்களுக்கு விடுதலையாகவும் விளங்கிவரும் மகத்தான தலைவியே, எதிரிகளுக்குப் புயலாகவும், துரோகிகளுக்குப் பூகம்பமாகவும், தன்னை நம்பியவர்களுக்குத் தென்றலாகவும், எங்களுக்கு அன்னை சக்தியாகவும் விளங்கும் திராவிட சக்தியின் திருவடிவே, தண்ணீர் வெந்நீரானாலும் நெருப்பை அணைக்கும் என்பதைப்போல எதிரிகளின் கூட்டணி கூடாரத்தைத் தன் கூர்மதியால் வென்று காட்டிடும் அஞ்சாத சிங்கமே, அஞ்சுவது யாதொன்றும் இல்லை; அஞ்ச வருவதும் இல்லை; இதுதானே வேதா இல்லத்தின் வேதம். (மேசையைத் தட்டும் ஒலி) இதுகூட தெரியாமல் வெற்றுக்கூச்சல் போடுபவர்கள் வெளிநடப்புச் செய்தாலும் வெற்றி பெற முடியாது. கோழி கூவி பொழுது விடியாது.



கொள்கைச் சிங்கம் அம்மா கர்ஜித்தால் கூட்டணி என்ற ஒன்று இருக்காமல் செய்துவிடும் (மேசையைத் தட்டும் ஒலி) ஆற்றல் கொண்ட அறிவுச் சுடரே, கண்ணீர் வந்த பின்னர் துடைப்பதைக் காட்டிலும், கண்ணீர் வராமல் காப்பதே சிறந்தது என்பதைப்போல நெசவாளர்கள் துயர் துடைக்கும் அன்னையே, சூளுரைத்தோர் யாவரும் சூறைக்காற்றில் காணாமல் போக, சுனாமியின் சீற்றத்தில் சுருண்டுபோக, சுற்றிச் சுழன்று பணியாற்றி நிவாரண உதவிகளை மின்னலென அள்ளிக் கொடுத்து, எதிரிகளைப் புறமுதுகிட்டு ஓடச் செய்த மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களே, நாளொன்றுக்கு 20 மணி நேரத்திற்கு மேல் அயராது உழைக்கும் உழைப்பின் சிகரமே, உங்கள் சிகரத்தின் நிழலில் ஒதுங்கி இளைப்பாறும், இந்த எளிய தொண்டனின் பணிவான வணக்கங்களைத் தங்களின் பொற்பாதங்களிலே சமர்ப்பித்து என்னுடைய பதிலுரையைத் துவக்குகின்றேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

முற்பகல் 10-10

தமிழகத்தினுடைய பொற்கால ஆட்சியாய், தனிப்பெரும் தலைவியாய், நல்லாட்சி நடத்தி, தமிழகத்தை அனைத்துத் துறைகளிலேயும் இந்தியாவின் தன்னிகரில்லா முதன்மை மாநிலம் ஆக்குவேன் என்று, தாயே, சபதமிட்டே அதை நிறைவேற்றிவிட்டீர்கள். அனைத்துத் துறைகளிலும் அன்னை இட்ட ஆணைகள் அத்தனையும் அணிவகுத்து அத்தாட்சியாய் விளங்குதம்மா! முத்தனைய கைத்தறி நெசவாளர்கள் வாழ்வில் ஒளி ஏற்ற பத்தரை மாற்றுத் தங்கமாய் தந்தீர்கள் பல திட்டங்கள். இழையெடுத்து, நேர்த்தியாய் நெசவு செய்யும் நெசவாளர்களுக்கு இன்சூரன்ஸ் திட்டம் கண்டு, இமாலய சாதனை செய்தீர்கள். இதில் உறுப்பினர் ஆனோர் இந்தியாவிலே மொத்தம் 2 இலட்சம் பேர். அதிலே தமிழகத்திலே மட்டும் 76,096 நெசவாளர்களுக்கு இத்திட்டத்தை அமலாக்க ஆணையிட்டு தமிழகத்தை இந்தியாவின் முதல் மாநிலம் ஆக்கியவர் எங்களுடைய இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் ஆவார். (மேசையைத் தட்டும் ஒலி) புத்தம் புதிய வடிவமைப்புகளால் மட்டுமே நெசவாளர்கள் புது வாழ்வு பெற முடியும் என உணர்ந்து, புதுப்புது வடிவமைப்புகளை உருவாக்கிட ஆணையிட்டு, 1,289 புதிய வடிவமைப்புகளை உருவாக்கி, 333 புதிய இரக சேலைகளின் விற்பனையைத் தொடங்கி வைத்து, தமிழகத்தை இந்தியாவின் முதல் மாநிலம் ஆக்கியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா நீங்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) தொட்டதெல்லாம்

துலங்கும் தங்கள் பொற்கரங்களால் தொடங்கிவைத்த தீபாவளி விற்பனை 1 கோடி அல்ல, 10 கோடி அல்ல, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அம்மாவினுடைய திருக்கரங்களாலே தொடங்கி வைத்த தீபாவளி விற்பனை ரூபாய் 122 கோடியை அடைந்து புதிய சரித்திரம் படைத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) கைத்தறித் துணிகள் தேங்காமல் தடுத்திடவே, கைத்தறித் துணி விற்பனைக்கென சிறப்புத் தள்ளுபடி வழங்கி விற்பனையில் இதுவரை இத்துறை காணாத புது வரலாறாக 697 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்து, கைத்தறித் துணி விற்பனையிலே தமிழகத்தை முதல் மாநிலமாக்கியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா நீங்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) நான் சொன்ன இந்த 697 கோடி ரூபாய் என்பது 28-2-2005 முடிய. இந்த ஒரு மாத கால விற்பனையைக் கணக்கில் எடுத்துக்கொண்டோமானால், இந்த மாதம் சுமார் 50 கோடி ரூபாய்க்கு மேல் விற்பனை செய்யப்பட்டிருக்கிறது. ஆக மொத்தம், இந்த நிதியாண்டிலே மட்டும் 750 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட துணிகள் விற்பனை செய்யப்பட்டு, சரித்திரத்துக்கெல்லாம் சரித்திரமாக சாதனைகளுக்கெல்லாம் சாதனை படைக்கக்கூடிய தலைவியாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விளங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 10-15

பின்னலாடைப் புகழ் திருப்பூர் மாநகரிலே மின்னலாடை என மின்னுகின்ற ஆயத்த ஆடைகளுக்கென நேதாஜி ஆயத்த ஆடைப் பூங்காவினை அமைத்திடவே, நெஞ்சத்தில் நெசவாளர்கள் போற்றும் தாயே, ஆணையிட்டு இத்திட்டத்தை அமலாக்கும் இந்தியாவின் முதல் மாநிலமாகத் தமிழகத்தைத் திகழச் செய்த திருவுருவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா நீங்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) எச்செயலிலும் புதுமை செய்யும் புரட்சித் தாயே! நிச்சயமாய்ச் சொல்வேன்: நெசவாளர்களுக்கு என்று உச்சமாய் ஒரு திட்டம் "Hi-Tech Weaving Park" எனும் வெளிச்சம் காட்டுகிற திட்டத்தை, ஆண்டிப்பட்டி, பல்லடம், குமாரபாளையம் என முத்தெனவே மூன்று நகரங்களிலே, 1,863 நாடா இல்லாத் தறிகளுடன் இயங்கிட, அன்னையே ஆணையிட்டீர்கள். இத்திட்டத்தை அமல்படுத்தும் முதன்மை மாநிலமாக தமிழகத்திற்குப் பெருமை சேர்த்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா நீங்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)



இல்லை என்னும் சொல்லே, இல்லை என ஆக்கிடவே, இலவச வேட்டி சேலை திட்டத்தை அமல்படுத்திட ஆணையிட்டு, இருண்ட நெசவாளர்கள் வாழ்வில் ஒளியேற்றிவைத்தவரே நீங்கள்தான். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அறிவுரைகளுடன் எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளினால், நெசவாளர்களின் வாழ்வு மேம்பட்டதுடன், தமிழகத்தில் கைத்தறி மற்றும் துணித் தொழில், பல்வேறு இனங்களிலே, இந்தியாவிலேயே, முதன்மை பெற்று விளங்குகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிப்பதிலே பெருமையடைகின்றேன்.

கைத்தறித் தொழிலைப் பாதுகாக்கவும், கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், இதய தெய்வம் அம்மா அவர்கள், பல்வேறு சீரிய திட்டங்களை வகுத்துள்ளார்கள்.

மரியாதைக்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால நல்லாட்சியில், 2005-2006 ஆம் ஆண்டிற்கான பெருமை மிகுந்த நிதிநிலை அறிக்கையின்மீது நடந்த விவாதத்தின்போது, மாண்புமிகு எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பேசுகின்றபோது, நுனிக் கிளையிலே அமர்ந்து, அடி மரத்தை வெட்டுவதைப் போல, இந்த அவைக்குத் தவறான தகவலைத் தெரிவித்திருக்கிறார். கடந்த நிதிநிலை அறிக்கையிலே, பக்கம் 40-ல், தறிக்கூடத்துடன்கூடிய வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு, 6 கோடியே 87 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும், ஆனால், இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில், வீடு கட்டும் திட்டம் பற்றிக் குறிப்பிடப்படவில்லை எனவும் தெரிவித்தார். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திற்கு வராதவர் அப்பா என்று சொன்னால், சட்டமன்றத்திற்கு வந்து, தவறான தகவலை இந்த அவைக்குத் தெரிவிப்பவர் மகன் ஆவார். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள், நெசவாளர்கள்மீது மிகுந்த பற்றும் அக்கறையும் கொண்டு, ஈரோடு மாவட்டம், சென்னிமலைப் பகுதியில், ஆசியாவிலேயே மிகப் பெரிய நெசவாளர் குடியிருப்பு, 6 கோடியே 87 இலட்சம் ரூபாய் மதிப்பில், 1,010 வீடுகள் ஒரே இடத்திலே கட்டித் தரப்பட்டுள்ளன என்று, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியினுடைய மகத்தான சாதனைதான் கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில், பக்கம் 40-ல் குறிப்பிடப்பட்டு, அத்தகைய மகத்தான திட்டம், இந்த ஆண்டும்

தொடரும் எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒவ்வோராண்டும், துறையின் மானியக் கோரிக்கையில், வீடுகட்டும் திட்டத்திற்கென போதுமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள், கைத்தறி நெசவாளர்கள்மீது கொண்ட அக்கறையின் காரணமாக, பல்வேறு புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தி, கைத்தறித் துறையின் வரலாற்றிலே, இதுவரை கண்டிராத அளவில், 2005-2006 ஆம் ஆண்டில், 312 கோடியே 78 இலட்சம் ரூபாய் அளவுக்கு நிதியொதுக்கீட்டினை உயர்த்தி வழங்கியிருக்கிறார்கள். நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையிலேயும், 2 கோடியே 22 இலட்சம் ஏழையெளிய மக்கள் பயன்பெறும் வகையில், பருத்தி இழையுடன் பாலியெஸ்டர் இழை கலந்து நேர்த்தியுடன் உற்பத்தி செய்து, 2005 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையின்போது வழங்கப்பட்டது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையின்படி, இந்த மாபெரும் திட்டத்தில், நூலிழை அளவுகூட தவறுகள் நடக்காமல் நல்ல தரத்துடன் வழங்கப்பட்டு, பொது மக்களினுடைய பாராட்டுதலை இத்திட்டம் பெற்றுள்ளது என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

வருமாண்டிலும், இலவச வேட்டி சேலைகள் வழங்கும் இத்திட்டத்தினை, 175 கோடி ரூபாய் மதிப்பில் செயல்படுத்த, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். பள்ளிச் சிறார்களுக்கு இலவசச் சீருடை வழங்கும் திட்டத்தின்மூலம், நடப்பாண்டிலே, 40 கோடியே 64 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள சீருடைத் துணிகள், நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களால் உற்பத்தி செய்யப்பட்டு, சமூக நலத் துறைக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. 2005-2006 ஆம் ஆண்டிற்கும் இலவசச் சீருடை வழங்கும் திட்டத்தினைத் தொடர்ந்து செயல்படுத்த, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையினை ஏற்று, பருத்தி இழையுடன் பாலியெஸ்டர் இழையினைக் கலந்த 120 இலட்சத்து 80 ஆயிரம் மீட்டர் சீருடைத் துணிகள் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தினைச் செயல்படுத்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 42 கோடி ரூபாயை நிதியாக ஒதுக்கி வழங்கியிருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். கடந்த கால திமுக. ஆட்சியில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தள்ளுபடி மானியமாக



266 கோடியே 33 இலட்சம் ரூபாய் மட்டுமே வழங்கப்பட்டது. ஆனால், இந்த நெசவாளர்கள்மீது உண்மையான அன்பு கொண்ட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 4 ஆண்டு காலத்திலே மட்டும் தள்ளுபடி மானியத்திற்கென 306 கோடி ரூபாய் வழங்கி (மேசையைத் தட்டும் ஒலி) வரும் நிதியாண்டிற்கு 98 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, ஆக மொத்தம் 404 கோடி ரூபாய் வழங்கி, நெசவாளர்களுடைய காவல் தெய்வமாக மாண்புமிகு அம்மா அவர்கள் விளங்கிக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-20

கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்திலே கைத்தறித் துணிகள் 2,059 கோடி ரூபாய் அளவிலே உற்பத்தி செய்யப்பட்டு, 2,377 கோடி ரூபாய் மட்டுமே விற்பனை செய்யப்பட்டுள்ளது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய நிர்வாகத் திறமையினாலே, அவர்கள் எடுத்த நடவடிக்கையினாலே இந்த 4 ஆண்டுகளிலே மட்டும் சுமார் 1,880 கோடி ரூபாய் மதிப்பிற்குத் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டு, 2,337 கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். கைத்தறி வரலாற்றிலே இதுவரை கண்டிராத வகையில் நடப்பாண்டில் சுமார் 697 கோடி ரூபாய் மதிப்புக்கு கைத்தறித் துணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன என்பதை இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. செ.கு. தமிழரசன் நேற்று பேசுகின்றபோது, ஏற்றுமதியாளர்களை ஊக்குவிக்க வேண்டும். ஏற்றுமதித் தொழிலை நீங்கள் அதிகப்படுத்த வேண்டும் என்ற ஒரு கருத்தை இங்கே வலியுறுத்தி இருந்தார்கள். கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்திலே ஏற்றுமதியாளர்கள்மூலம் ஏற்றுமதி செய்யப்பட்ட அந்தத் துணிகளுடைய மதிப்பு 117 கோடி ரூபாய் மட்டுமே. ஆனால், இன்றையதினம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த அந்த நடவடிக்கையினாலே, அம்மா அவர்கள் சொன்ன ஆலோசனையின்படி, இந்த 4 ஆண்டு காலத்திலே மட்டும் 784 கோடியே 57 இலட்சம் ரூபாய்க்கு (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்றுமதியாளர்கள் மூலம் நாங்கள் ஏற்றுமதி செய்திருக்கின்றோம். அதுமட்டுமல்ல, பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டிற்கு ஏற்றுமதியாளர்கள் மூலம் ஏற்றுமதி விற்பனையை ரூ.275 கோடி அளவிற்கு அதிகரிக்க திட்டமிடப்பட்டு, நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பும், அதிக கூலியும்

கிடைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உறுதி செய்துள்ளது.

கடந்த 1991-1996 ஆம் ஆண்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது தமிழகத்திலே இருக்கக்கூடிய கூட்டுறவுச் சங்கங்களிலே 881 கூட்டுறவுச் சங்கங்கள் இலாபத்திலே இயங்கி வந்தன. பிறகு, ஆட்சிக்கு வந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாளர்கள் கூட்டுறவுச் சங்கத் தேர்தல் என்ற போர்வையிலே அங்கே வன்முறைகளை இறக்கி, நிர்வாகத்தினுடைய பொறுப்பிற்கு அவர்கள் வந்தார்கள். நிர்வாகத்தினுடைய பொறுப்பை ஏற்ற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், அந்தக் கூட்டுறவுச் சங்கங்களை எப்படிச் சீர்குலைத்தார்கள், எவ்வளவு சுரண்டினார்கள் என்பதெல்லாம் இங்கே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் தெரியும். அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே 881 கூட்டுறவுச் சங்கங்கள் இலாபத்திலே இயங்கின. பிறகு வந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 320 கூட்டுறவுச் சங்கங்கள்தான் இலாபத்திலே இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை அன்று இருந்தது. ஆனால், அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையினாலே, அவர்கள் செய்த சீர்திருத்தங்களாலே இன்றையதினம் தமிழகத்திலே இருக்கக்கூடிய கூட்டுறவுச் சங்கங்களில், 601 கூட்டுறவுச் சங்கங்கள் இலாபத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன என்று சொன்னால் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நெசவாளர்கள் மேல் அம்மா அவர்கள் எப்படிப்பட்ட அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அதுமட்டுமல்ல, இந்த நிதியாண்டில் மேலும் பல கூட்டுறவுச் சங்கங்களை இலாபத்திலே இயக்குவதற்கான அத்தனை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-25

அதேபோல, வயது முதிர்ந்த நெசவாளர்கள் துயரப்படக்கூடாது என்பதற்காக 60 வயது முதிர்வுற்ற நெசவாளர்களுக்கு மாதந்தோறும் 200 ரூபாய் முதியோர் ஓய்வூதியத் தொகையாக வழங்கும் திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் கருணை உள்ளத்தோடு தொடர்ந்து நிறைவேற்றி வருகிறார்கள். கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்திலே 7,711 நெசவாளர்களுக்கு 5 கோடியே 50 இலட்சம் ரூபாய்



மட்டுமே வழங்கப்பட்டது. ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய ஆட்சியில் மட்டும் இதுவரை 11,018 நெசவாளர்களுக்கு 10 கோடியே 47 இலட்சம் ரூபாய் முதியோர் ஓய்வூதியமாக வழங்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், ஆண்டு முழுவதும் நெசவாளர்களுக்கு முதியோர் ஓய்வூதியத் தொகை தடையின்றிக் கிடைக்க வேண்டுமென்பதற்காக ஆண்டுத் தொடக்கத்திலேயே 3 கோடியே 40 இலட்சம் ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கி, சரக துணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர்களுக்கு வழங்கப்பட்டு மார்ச் 2005 முடிய மாதந்தோறும் 10 ஆம் தேதிக்குள் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் நடப்பு ஆண்டில் 11,018 நெசவாளர்களுக்கு 2 கோடியே 82 இலட்சம் ரூபாய் முதியோர் ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்வோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

60 வயதிற்குமுன் இறக்க நேரிடும் நெசவாளர்கள் குடும்பம் பரிதவிக்கக்கூடாது என்பதற்காக மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் 1991-1992-ல் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபொழுது இறந்த நெசவாளர்களின் குடும்பத்தின் வாரிசுதாரருக்கு 250 ரூபாய் குடும்ப ஓய்வூதியம் வழங்கி, குடும்ப ஓய்வூதியத் திட்டத்தை இந்தியாவிலேயே முதன்முதலாக அறிமுகப்படுத்தி, மற்ற மாநிலங்களுக்குத் தமிழகத்தை முன்மாதிரியாக விளங்கச் செய்த பெருமை மாண்புமிகு அம்மா அவர்களையே சாரும். மீண்டும் 2001-லே ஆட்சிப் பொறுப்பேற்றதும் 250 ரூபாயாக இருந்த அந்தக் குடும்ப ஓய்வூதியத்தைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு 15-9-2001 முதல் 350 ரூபாயாக உயர்த்தி வழங்கிட ஆணையிட்டார்கள். நடப்பு ஆண்டில் 647 பயனாளிகளுக்கு 27 இலட்சத்து 44 ஆயிரம் ரூபாய் குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்பட்டுள்ளது.

கைத்தறி நெசவாளர்கள், இயற்கையாகவோ அல்லது விபத்தினாலோ இறக்க நேரிட்டால், அவர்களுக்குக் கூடுதல் காப்பீட்டுத் தொகையை வழங்கும் நோக்கத்தோடு மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மாவின் அரசு புதிய ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. ஒவ்வொரு நெசவாளரும் செலுத்த வேண்டிய காப்பீட்டுக் கட்டணம் ரூ.130/-ஐ மாநில அரசே செலுத்தும் எனத் தாயுள்ளத்தோடு நெசவாளர்களின்மீது என்றென்றும் அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்து, இதற்காக 98 இலட்சத்து 93 ஆயிரம்

[திரு. வி. சோமசுந்தரம்] [2005 மார்ச் 31

ரூபாய் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்குக் கட்டணமாகச் செலுத்தப்பட்டுள்ளது. இப்புதிய காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் கைத்தறி நெசவாளர்கள் இயற்கை மரணம் எய்தினால் 50,000 ரூபாயும், விபத்தினால் மரணம் அடைந்தால் 80,000 ரூபாயும் நெசவாளர்களின் வாரிசுதாரர்களுக்குக் காப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. இதுதவிர, கருணைத் தொகையாக கோ-ஆப்டெக்ஸ் சார்பில் 15,000 ரூபாயும் வழங்கப்படும். மேலும் இந்தத் திட்டத்தின்கீழ் 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்புவரை பயிலும் கைத்தறி நெசவாளர்களினுடைய குழந்தைகளுக்கு 4 ஆண்டுகளுக்கு, ஒவ்வொரு ஆண்டுக்கும் 1,200 ரூபாய் வீதம் கல்வி உதவித் தொகை வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ், நடப்பு ஆண்டில் 9,473 மாணவ, மாணவிகளுக்கு 85 இலட்சத்து 26 ஆயிரம் ரூபாய் கல்வி உதவித் தொகையாக வழங்கப்பட்டது. மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் மாணவ, மாணவிகளுக்கு இந்தக் கல்வி உதவித் தொகையை 1-3-2005-ல் வழங்கி இத்திட்டத்தினைத் துவக்கி வைத்திருக்கிறார்கள்.

கைத்தறித் துணிகளின் விற்பனையை அதிகரிக்கும் நோக்கத்தோடு 2004-2005ஆம் ஆண்டில் பண்டிகைக் காலங்களில் 135 நாட்களுக்கு உச்சவரம்பின்றி 10 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடி வழங்கி விற்பனை செய்ய கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு அனுமதி வழங்கியது. இச்சிறப்புத் தள்ளுபடியினைப் பயன்படுத்தி கூட்டுறவுச் சங்கங்களிலே இருந்த 94 கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் விற்பனை செய்யப்பட்டிருக்கின்றன. அதுபோல கைத்தறித் துணிகளினுடைய விற்பனைக்கு வழக்கமாக வழங்கப்படும் 20 விழுக்காடு தள்ளுபடியுடன் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு, கூடுதலாக 10 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடி வழங்கி விற்பனை செய்ய கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் அனுமதி வழங்கினார்கள். இந்தச் சிறப்புத் தள்ளுபடியைப் பயன்படுத்தி 154 கோடியே 11 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் 4 ஆண்டுகளில் மட்டும் 107 கோடி ரூபாய் அளவிற்கு நிதியுதவி, நெசவாளர்களின் வாழ்க்கைத் தரம் உயர, மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டுள்ளது.



2005 மார்ச் 31] [திரு. வி. சோமசுந்தரம்]

முற்பகல் 10-30

5 ஆண்டு தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மொத்தம் 3,622 தறிக் கூடங்கள் மட்டுமே நெசவாளர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த நெசவாளர்களுக்காக, நெசவாளர்கள் படும் இன்னல்களிலிருந்து அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக, தாயுள்ளத்தோடு நெசவாளர்களுக்கு நல்ல பணிச் சூழலை உருவாக்கும் நோக்கத்தோடு, கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் வேறு எந்தவொரு மாநிலத்திலும் இல்லாத வகையிலே 17,021 தறிக் கூடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டு (மேசையைத் தட்டும் ஒலி) முதன்மை மாநிலமாகத் தமிழகம் விளங்கிக் கொண்டிருக்கின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு நூற்பாலைகள் நலிவடைந்து செயலிழந்துள்ளதால், அவற்றிலே பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் நலன்காக்கும் வகையிலே தன்விருப்ப ஓய்வூதியத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. தன்விருப்ப ஓய்வூதியத் திட்டத்தின்மூலம் இதுவரை 8,543 பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு 92 கோடியே 87 இலட்சம் ரூபாய் அளவிற்கு பணப் பயன் வழங்கப்பட்டுள்ளது. அரசு உத்தரவாதத்துடன் கூட்டுறவு நூற்பாலைகள் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் பெற்ற கடன் தொகையைத் திரும்பச் செலுத்துவதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் 76 கோடியே 57 இலட்சம் ரூபாயை வழங்கியுள்ளார்கள். மேலும் கோவை தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், பாரத ஸ்டேட் வங்கியிடமிருந்து பெறப்பட்ட கடனைத் திரும்பச் செலுத்துவதற்காக ஒரு கோடியே 12 இலட்சம் ரூபாயை வழங்கியிருக்கின்றார்கள். தமிழ்நாட்டிலுள்ள முக்கியமான ஜவுளி நகரங்களான காஞ்சிபுரம், சேலம், திருப்பூர், கரூர் மற்றும் திண்டுக்கல் ஆகிய இடங்களில் ஜவுளித் தொழில் மையங்களுக்கான அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்த இவ்வரசு தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. முதற்கட்டமாக, காஞ்சிபுரத்திலே 21 கோடியே 81 இலட்சம் ரூபாய் மதிப்பில் இத்திட்டத்தைச் செயல்படுத்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் 5 கோடி ரூபாயை முன்பணமாக வழங்கியிருக்கின்றார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இந்தியாவின் பாரம்பரியமிக்க கைத்தறி உற்பத்தி இரகங்களான காஞ்சிபுரம் பட்டுப் புடவைகள், பவானி ஜமுக்காளம் மற்றும் மதுரை சுங்குடிப் புடவைகளுக்குக் காப்புரிமை பெறும் வகையிலே பூகோள குறியீடு சட்டத்தின்கீழ் கொண்டு வரத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இவ்வரசு மேற்கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டத்தை முனைப்புடன் செயல்படுத்த உருவாக்கப்பட்டுள்ள அமலாக்கப் பிரிவு, விசைத் தறிகளை ஆய்வு செய்து 7 விசைத் தறி உரிமையாளர்கள்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு, ஆறு பேருக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

2005-2006 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் அறிவிப்புக்கிணங்க, ஐக்கிய நாடுகள் தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் UNIDO நிதியுதவியுடன் கரூரில் ஒருங்கிணைந்த துணித் தொழில் பூங்கா அமைக்க, திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை, கடந்த ஆண்டில் 10 கோடியே 58 இலட்சம் ரூபாய் அளவிற்கு வியாபாரம் மேற்கொண்டு, 2 கோடியே 2 இலட்சம் ரூபாய் உத்தேச நிகர இலாபம் ஈட்டி, தொடர்ந்து இலாபத்தில் இயங்கி வருகின்றது. இந்த நிறுவனம் நடப்பாண்டில் ஐ.எஸ்.ஓ. 9001 மற்றும் ஐ.எஸ்.ஓ. 14001 சான்றிதழ்களைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு சரிகை நிறுவனம், பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான சரிகையை உற்பத்தி செய்து நியாயமான விலையில் வினியோகம் செய்து வருகின்றது. இந்த நிறுவனம் 2004-2005 ஆம் ஆண்டில் 60,437 சரிகை மார்க்குகளை உற்பத்தி செய்து கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனை செய்துள்ளது. இந்த நிறுவனம் ஐ.எஸ்.ஓ. 9001 சர்வதேச தரச் சான்று பெற்ற நிறுவனமாகும். மேலும், இந்த நிறுவனம் திருபுவனத்திலுள்ள கிளை மூலம் மாதந்தோறும் 1100 சரிகை மார்க்குகளை உற்பத்தி செய்து சங்கங்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கின்றது. பட்டு கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான எஞ்சிய சரிகை தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தச் சட்டத்தின் அடிப்படையில் சரிகைக் கொள்முதல் குழு மூலம் பெறப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நட்டத்தில் இயங்கி வந்த தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம்,



கடந்த 3 ஆண்டுகளாக இலாபத்தில் இயங்கி வருகின்றது. நடப்பாண்டில் 79 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாய் உத்தேச நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

முற்பகல் 10-35

கைத்தறி நெசவாளர்களுக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தன்னால் இயன்ற அனைத்தையும் செய்து வருவதுடன், இன்னும் பல அரிய திட்டங்களைச் செயல்படுத்த எண்ணியுள்ளது என்பதனை மகிழ்வுடனும், மிகுந்த மனத் திருப்தியுடனும் கூற விழைகின்றேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரிய திட்டங்கள் கைத்தறி நெசவாளர்களுக்குப் புதிய தெம்பையும், உற்சாகத்தையும் அளிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய உத்தரவின்படி 2005-2006 ஆம் ஆண்டுக்கான புதிய அறிவிப்புகளை இப்பேரவையில் அறிவிப்பதிலே பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

நெசவாளர்களின் நலனைக் கருத்தில்கொண்டு, திருவள்ளூர் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் ஸ்வர்ண ஜெயந்தி கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் ரூபாய் 2 கோடியே 20 இலட்சம் மதிப்பீட்டில் வார்ப்பிங், சைசிங், நூல் சாயமிடல், துணி பதனிடுதல் போன்ற பணிகளை உள்ளடக்கிய இரண்டு பொது வசதி மையங்கள் அமைத்திட மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒருங்கிணைந்த கைத்தறி பயிற்சித் திட்டம் மூலம் நெசவு செய்தல், சாயமிடுதல், வடிவமைத்தல் போன்ற இனங்களில் 2,360 நெசவாளர்களுக்கு ரூபாய் 4 கோடியே 4 இலட்சம் செலவில் பயிற்சி வழங்கவும், தறி மற்றும் உபகரணங்கள் வழங்கவும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒருங்கிணைந்த கைத்தறி பயிற்சித் திட்டம் மூலம் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் 240 மேலாளர்களுக்கு, மாறிவரும் சந்தைச் சூழலைப்பற்றி அறிவதற்கு 24 இலட்சம் ரூபாய் செலவில் மேலாண்மைப் பயிற்சி வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாறிவரும் சந்தை நிலவரத்திற்கு ஏற்றவகையில் புதிய வடிவமைப்புகளைக் கைத்தறித் துணியில் புகுத்த ஏதுவாக, 15 இலட்சம் ரூபாய் செலவிலே புதிய வடிவமைப்புகள் உருவாக்கித் தரவும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

2005-2006 ஆம் ஆண்டில் பெரிய அளவில் தொய்வின்றி விளம்பரம் செய்து கைத்தறித் துணிகளின் விற்பனையை அதிகரிக்க ஐந்து மாவட்டங்களில், மாவட்ட அளவிலான கண்காட்சிகளை 10 இலட்சம் ரூபாய் செலவிலே நடத்திட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பட்டுத் துணி வகைகளில் உள்ள சரிகையின் தரத்தினைத் துல்லியமாக அறிய ஏதுவாக கோயம்புத்தூர் மற்றும் சேலம் ஆகிய நகரங்களிலே 40 இலட்சம் ரூபாய் செலவிலே எக்ஸ்ரே-ஊடுகதிர் பகுப்பாய்வு இயந்திரம் நிறுவ மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

புங்கர் பீமா யோஜனா என்ற புதிய காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் 2005-2006 ஆம் ஆண்டில் மேலும் 50,000 கைத்தறி நெசவாளர்களைச் சேர்க்க மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நெசவாளர்கள் அதிகம் வாழும் பகுதிகளில் குடிநீர் வசதி ஏற்படுத்த ரூபாய் 10.5 இலட்சம் செலவில் 300 ஆழ்துளைக் கிணறுகள் அமைத்துத் தர மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, ஆண்டிப்பட்டி, விருதுநகர், கோயம்புத்தூர், காஞ்சிபுரம் மற்றும் கைத்தறி நெசவாளர்கள் அதிகம் வாழும் பகுதிகளில் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக ரூபாய் ஒரு கோடியே 25 இலட்சம் மானியத்துடன் 500 தறிக் கூடத்துடன் கூடிய வீடுகள் கட்டித் தர மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கைத்தறியில் உற்பத்தி செய்யப்படும் துணிகளை மக்கள் அறியும்வண்ணம் பிரபலப்படுத்தி, விற்பனையை அதிகரிக்கும் நோக்குடன் ரூபாய் ஒரு கோடி செலவிலே விளம்பரப்படுத்தவும்



மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கைத்தறித் துணிகளின் விற்பனையை அதிகரிக்க அகமதாபாத்திலுள்ள தேசிய வடிவமைப்பு நிறுவனம், சென்னையிலுள்ள நெசவாளர் சேவை மையம் மற்றும் தேசிய ஆடை அலங்காரத் தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவற்றிடமிருந்து 2,000 புதிய வடிவமைப்புகளை ரூபாய் 70 இலட்சம் மதிப்பீட்டில் பெறவும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கைத்தறி நெசவாளர்களுடைய பணிச் சூழலை மேம்படுத்த வேண்டி ரூபாய் 5 கோடியே 20 இலட்சம் மானியத்துடன் 7,000 தறிக் கூடங்கள் கட்டித் தரவும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளை மூலம் நெசவாளர்களுடைய குழந்தைகளுக்கு வழங்கப்பட்டுவரும் கல்வி உதவித் தொகை, ஏற்கெனவே வழங்கப்பட்டுவரும் தொகையுடன் 500 ரூபாய் உயர்த்தி 2005-2006 ஆம் கல்வி ஆண்டு முதல் வழங்கிட மாண்புமிகு இதய தெய்வம் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நடப்பாண்டில் பத்து இலட்சம் ரூபாய் செலவில் பாரம்பரியமிக்க கோடாலிக்கருப்பூர் சேலை இரகத்திற்குப் புத்துயிரூட்டவும், ஏழைகளின் பட்டான சின்னாளம்பட்டி சேலைகளின் தரத்தினை மேம்படுத்தி, புதுப் பொலிவுடன் விற்பனை செய்திடவும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள அய்யம்பேட்டையில் நெசவாளர்களுடைய நலனுக்காக கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின்மூலம் பத்து இலட்சம் ரூபாய் செலவில் சமுதாய நலக் கூடம் கட்டித் தர மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-40

பேசும் தெய்வமாய், பொன்மனத் தாயாய், ஏழையெளியோர் போற்றுகின்ற தலைவியாய், எதற்கும் அஞ்சாத சிங்கமாய், அன்பிற்கோர்

அன்னையாய், ஆதரவற்றோருக்கு அருட்சுடராய், அனைத்து நாடுகள் போற்றும் ஆற்றல்மிகு தலைவியாய், திருமூலரின் திருமந்திரம் போல தன்னை அறிந்து, தன் திறமையை அறிந்து, தக்க அறம் அறிந்து, தரணியின் உண்மையறிந்து, தமிழகத்தில் தக்காரும், மிக்காரும், ஒப்பாரும் இல்லாமல் தனித்தன்மையாய் தருமத்தின் ஆட்சிதனை நடத்தி வரும் தாயுள்ளத்தின் திருஅவதாரமே! தமிழ்நாட்டினுடைய விடிவெள்ளியே, நிமிர்ந்த நடையாய், நேர்கொண்ட பார்வையாய், நிலத்தில் யாருக்கும் அஞ்சாத வீரமாய், சங்கத் தமிழாய், பொங்கும் மங்கலமாய், தங்கத் தமிழகத்தின் ஒரே முதல்வராய், தரணியில் அவதரிக்கும் தங்கத் தாரகையாக விளங்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைப் பணிவோடு வணங்கி என்னுடைய பதிலுரையை நிறைவு செய்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய அரிய கருத்துகளை எல்லாம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு கவனத்திலே கொண்டு, ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுக்கும் என்று பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தருமாறு அன்போடும், பண்போடும், பணிவோடும் கேட்டு அமைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ரோமாபுரியோடு தொழில் செய்தனர் நம் முன்னோர்கள் என்ற பழம்பெருமையும், சிறப்பும் பெற்றதுதான் நம் தமிழகம். ஆனால், தமிழ் காக்க வந்தவராய் மார்தட்டி, தற்பெருமை பேசிடும் மதிசிறுத்த கூட்டத்தின் நெறியற்ற செயல்பாட்டால் நிலைகுலைந்தது தொழில் துறை. தலைதப்ப வழிதேடி, தத்தளித்து நின்றவேளையில்தான் தாய் நானிருக்க நோயா என்று சபதம் ஏற்று எழில்துறையாக கொஞ்சி ததும்பிடும் தொழில் துறையை இலாபம் என்ற நற்சொல்லால் புகழ் மணக்கும் தொழில் துறையாய் மாற்றிக் காட்டிய மனிதகுலம் போற்றுகின்ற மாசற்ற மாணிக்கமே, மக்களை நேசிக்க மட்டும் தெரிந்த, நான் தினம் வணங்கிப் போற்றும் புனிதத் தலைமையே! (மேசையைத் தட்டும் ஒலி) தாயே! வணங்குகின்றேன்.



கசப்புச் நலிவு என்ற சொல் நீங்கள் கனவில்கூட கேட்க விரும்பாத கசப்புச் சொல். நலிவு என்ற சொல் நீங்கள் கனவில்கூட கேட்க விரும்பாத கசப்புச் சொல். பொலிவு என்பதோ, எங்கள் அம்மா உங்கள் அகராதியில் நாங்கள் பார்த்து மகிழ்ந்திடும் அழகு தமிழ்ச் சொல். பொலிவு என்பதோ, எங்கள் அம்மா உங்கள் அகராதியில் நாங்கள் பார்த்து மகிழ்ந்திடும் அழகு தமிழ்ச் சொல். அதனால்தான் 4 ஆண்டு கால நல்லாட்சியில் நாடு பார்த்துப் போற்றும் நல்லுதாரணமிக்க தலைமையாய்த் திகழ்ந்து எங்கள் அம்மா உங்களை நம்பியவர்கள் மட்டுமின்றி, உங்களை நம்பியவர்கள் மட்டுமின்றி, நம்பாமல் இன்று வெளியே சென்று இருக்கின்ற வீராதி வீரர்களும் நலனேப் பெற்றிட நல்லாட்சி வழங்குகின்றீர்கள்.

அம்மா, காலம் தந்த கற்பக விருட்சம் நீங்கள். கடமை புரிவதிலோ அறிஞர் அண்ணாவின் அப்பழுக்கற்ற வார்ப்பு நீங்கள். அள்ளி, அள்ளி வழங்குவதில் புரட்சித் தலைவரின் புகழை மிஞ்சி நிற்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) அன்புத் தலைவி நீங்கள். சிந்தனை புரிவதிலோ காரல் மார்க்ஸூம், தந்தை பெரியாரும் உங்களுள் உயிரோடு இன்றும் வாழ்கின்றார்கள். வறியவர் மட்டுமின்றி வழிபாட்டுத் தலம் செல்லும் அனைவருக்கும் அமுதூட்டும் உங்கள் பாங்கு, வறியவர் மட்டுமின்றி வழிபாட்டுத் தலம் செல்லும் அனைவருக்கும் அமுதூட்டும் உங்கள் பாங்கு, மணிமேகலையின் மறுபிறப்போ நீங்கள் என்று மாற்றாரும் வாழ்த்துவது, எங்கள் செவிகேட்ட தேனினும் சிறந்த சுவைமிக்க வாழ்த்துச் சொல் அம்மா! விருதுக்கு விலை பெறுவோர் வாழும் நாட்டில், விருதுகள் விரும்பி வந்து சேரும் நற்கரம் மட்டுமல்ல; புகழ்வாய்ந்த பொற்கரத்தைப் பெற்ற இந்த நூற்றாண்டும் இனி எந்த நூற்றாண்டும் தேடி அலைந்தாலும் காணக் கிடைக்காத அரசியல் பொக்கிஷம் அம்மா நீங்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்திலே சொல்லி என் உரையைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பன்னாட்டு நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தங்களுடைய முதலீடுகளைச் செய்வதற்கும், புதிய தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கும் இன்று வெளிநாட்டினர் நாள்தோறும் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வந்து, வந்து பார்த்துச் சென்று கொண்டே இருக்கின்றார்கள். யார் காரணம், இதற்கெல்லாம்? புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2001-ல் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றபிறகுதான் இந்த நிலைமை எல்லாம் மாறியிருக்கிறது.

முற்பகல் 10-45

ஆனால், கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலோ தொழில் துறை நலிந்து நாசமாய் போன வரலாறுதான் திராவிட முன்னேற்றக் கழக வரலாறு என்பதை இந்த மன்றத்தில் நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். 2001 தொழில் துறை மானியக் கோரிக்கையிலே பேசிய திரு. கருணாகரன் அவர்கள்கூட இந்த மன்றத்திலே தொழில் துறை மானியக் கோரிக்கை பற்றி பேசுகின்றபொழுது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தொழில் துறையைச் சாகடித்து விட்டீர்கள் என்று இதே மன்றத்தில் சாபமிட்டுச் சென்றிருக்கின்றார்கள். ஆனால், அந்த நிலைமையையெல்லாம் மாற்றி இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஓர் அமைதிப் பூங்காவை ஏற்படுத்தியிருக்கின்றார்கள்.

உலகத்திலே சிறந்த காவல் துறையாக Scotland yard-ஐ சொல்வார்கள். அதற்கு இணையாக நமது தமிழக போலீசை ஒப்பிட்டக் காலம் உண்டு. ஆனால், இன்றைக்கு அதையெல்லாம் மிஞ்சுகிற அளவிற்குத் தமிழக போலீஸ், Scotland yard-ஐவிட விஞ்சி நிற்கின்ற அளவிற்குத் தமிழகக் காவல் துறையைப் பட்டை தீட்டி, மாற்றி (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) தமிழகத்தை இந்தியாவிலேயே ஓர் அமைதிப் பூங்காவாக மாற்றியது அதற்கு மற்றுமொரு காரணம். தனியார் துறையுடன் சேர்ந்து உட்கட்டமைப்பு வசதிகளையும் மேம்பாடு செய்து, உலகத் தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகளைத் தமிழர்களுக்குத் தந்தது, தரமான தட்டுப்பாடு இல்லாத மின்சாரத்தைத் தந்தது ஆகியவை அடுத்தடுத்த காரணங்களாகும். உலக அளவிலான பொருளாதார மாற்றத்தைக் கருத்திலேகொண்டு தமிழகத்தைத் தொழில்மயமாக்கவும், தமிழகத்தைத் தொழில் வளர்ச்சியில் முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்லவும், ஏற்றுமதியை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், ஒற்றைச் சாளரமுறையின் மூலம் அனுமதி வழங்கும் வசதி, வணிக விதிமுறைகளைத் தளர்த்துதல், தொழிற்சாலைகளுக்குத் தட்டுப்பாடு இல்லாமல் தண்ணீர் வசதி ஏற்படுத்துதல் மற்றும் ஊக்கத் தொகை போன்ற உள்ளடக்கிய இரண்டாம் தலைமுறை சீர்திருத்தங்களுடன் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திருக்கரங்களால் புதிய தொழில் கொள்கையை, 2003 ஆம் ஆண்டு இங்கே வெளியிட்டார்கள். அதற்கு முன்னாலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் 1992 ஆம் ஆண்டு, தொலைநோக்குப் பார்வையுடன் அப்பொழுது ஒரு தொழில் கொள்கையை வெளியிட்டார்கள். அதே தொழில்



கொள்கையைத்தான், திராவிட முன்னேற்றக் கழக அரசு, 1996-லேயிருந்து 2001 வரைக்கும் அவர்கள் பின்பற்றினார்கள் என்பதை இந்த மன்றத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அந்தத் தொழில் கொள்கையின் அடிப்படையிலும், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2003-ல் வெளியிட்ட இந்தத் தொழில் கொள்கையின் அடிப்படையை வைத்துதான் தமிழகத்தில் இன்றைக்குத் தொழில் வளம் பல்கிப் பெருகியுள்ளது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தொழில் முதலீடு உற்பத்தியைப் பற்றிக் குறிப்பிடும்போது, உற்பத்தித் துறையில் எந்த அளவிற்கு முதலீடு செய்யப்பட்டுள்ளது என்ற புள்ளிவிவரங்கள்தான் தொழில் வளர்ச்சியைப் பிரதிபலிக்கும் புள்ளிவிவரங்களாகும். உற்பத்தித் துறையில் செய்யப்பட்ட முதலீட்டை எடுத்துக்கொண்டோமானால் 1991 முதல் 1996 வரையிலும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் 35,953 கோடி ரூபாய் உற்பத்தித் துறையில் முதலீடு செய்யப்பட்டது. அதன் பிறகு, 1996-லிருந்து 2001 வரைக்கும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் எடுத்துக்கொண்டோமானால் வெறும் 37,306 கோடி ரூபாய்தான் அவர்களுடைய காலத்திலே வரப்பட்டத் தொகை. அம்மாவுடைய ஆட்சிக் காலத்திற்கும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திற்கும் உள்ள அந்த வித்தியாசம் 1,347 கோடி ரூபாய்தான். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 2001-லிருந்து 2005 வரையிலான இந்த நான்கு ஆண்டுக் கால ஆட்சியில் மட்டும் 45,490 கோடி ரூபாய் இன்றைக்கு (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) முதலீடு வரப்பெற்றிருக்கிறது. ஆக, இந்த நான்கு ஆண்டுக் கால ஆட்சியில் மட்டும் 8,184 கோடி ரூபாய் வித்தியாசம் ஏற்படுகிறது. 1991-லிருந்து 1996 வரைக்கும் அம்மாவுடைய ஆட்சிக் காலத்திற்கும், 1996-லிருந்து 2001 வரைக்கும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கும் வித்தியாசம் 1,347 கோடி ரூபாய்தான். ஆனால், அம்மா வந்து, இந்த நான்கு ஆண்டுகளிலே 8,184 கோடி ரூபாய், உற்பத்தித் துறையில், (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அவர்களுடைய முயற்சியால், அவர்களுடைய சீரிய திறமையினால் அம்மா அவர்கள் இந்த நிலைமையை நாட்டிற்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள்.

இதைத் தவிர, மத்திய அரசின்கீழ் இயங்குகின்ற Commerce and Industry, அந்த அமைச்சகத்தின்கீழ் இயங்குகின்ற S.I.A. என்றுச் சொல்லப்படுகின்ற Secretariat for Industrial Assistance என்கின்ற ஒரு அமைப்பு மாதா மாதம் மாநிலம் வாரியாக ஒரு புள்ளி விவரத்தைத்

தருகின்றது. அதாவது Industrial Entrepreneurs' Memorandum, அந்த I.E.M. மூலமாக உத்தேசிக்கப்பட்டுள்ள முதலீடுகள் தமிழகத்தில்தான் அதிகப்படியாக வந்திருக்கிறது என்பதை, இன்றைக்கு மத்திய அரசில் திராவிட முன்னேற்றக் கழகம் அரசு அங்கம் வகிக்கின்ற மத்திய அரசு, அந்தப் புள்ளி விவரத்தை இன்றைக்குத் தந்திருக்கின்றது. அதன்படி பார்த்தால்கூட, செப்டம்பர் 2003 வரையிலும் I.E.M. மூலமாக உத்தேசிக்கப்பட்டுள்ள முதலீடு 60,474 கோடி ரூபாய். ஆனால், கடந்த ஓர் ஆண்டில் மட்டும் செப்டம்பர் 2004 வரைக்கும் I.E.M. மூலமாக உத்தேசிக்கப்பட்டுள்ள முதலீடு மட்டும் 54,181 கோடி ரூபாய். அதிகப்படியாக இன்றைக்குத் தமிழகத்தை இந்தியாவிலேயே (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) முதன்மையான இடத்தில் அம்மா அவர்கள் இந்தத் தொழில் துறையைக் கொண்டு வந்திருக்கின்றார்கள்.

முற்பகல் 10-50

அதுமட்டுமல்ல, தொழிற்சாலைகள். மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது அதிகப்படியான தொழிற்சாலைகளும் தமிழ்நாட்டில்தான் இருக்கின்றன. அதுமட்டுமல்ல, இந்தியாவில் தொழிலாளர்கள் வேலை பார்ப்பதில் இன்றைக்கு இரண்டாவது இடத்தில், மகாராஷ்டிர மாநிலத்திற்கு அடுத்தபடியாக தமிழகம்தான் முன்னேறிக் கொண்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த I.E.M. என்பது, ஆதாரம், C.M.I.E. monthly review of investment projects, January 2005, page No.128-ல் இந்தக் குறிப்பு வரப்பெற்றிருக்கிறது. புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய முயற்சிக்கும், நிர்வாகத் திறமைக்கும் தமிழகத்தை முதன்மை மாநிலமாக ஆக்கியே தீருவேன் என்கிற சபதத்திற்கும் கிடைத்த மாபெரும் வெற்றியாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இது சாதாரண வெற்றியல்ல, பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டவன் மாண்புமிகு அம்மா அவர்களுக்குக் கொடுத்த அருட்கொடையாகும். மேலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில்தான் 11,38,048 பேருக்குப் புதிய வேலைவாய்ப்பினை அளித்து நாட்டிலே இரண்டாவது இடத்தில் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது.

ஏற்றுமதி துறையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு சாதனை படைத்துள்ளது. 1996-2001 ஆண்டுகளில் ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக 18 ஆயிரம் கோடி ரூபாய்தான் அவர்கள் ஏற்றுமதி



செய்திருக்கின்றார்கள். ஆனால், அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பினை ஏற்ற 2001-லிருந்து 2004 வரைக்கும் ஆண்டு ஒன்றுக்கு 40 ஆயிரம் கோடி ரூபாயை ஏற்றுமதி செய்து நாட்டிலேயே இன்றைக்கு முதன்மையான இடத்தைப் பெற்றிருக்கிறது புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, நேற்றையதினம்கூட பேசினார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். இலட்சுமணன் அவர்கள்கூட கேட்டார்கள். அப்போதே நான் பதில் அளித்தேன். Credit deposit ratio இன்றைக்கு மாநிலத்திலே, எல்லா மாவட்டங்களையும் சேர்த்து, சராசரியாக 95 சதவீதம் இருந்துகொண்டிருக்கிறது. ஆனால், விருதுநகர் மாவட்டம், சிவகாசி பகுதிகளில் மட்டும்தான் 111 சதவீதம். உதாரணமாக சொல்ல வேண்டுமென்றால், வங்கிகளிலே இன்றைக்கு 100 ரூபாய் அவர்கள் deposit செய்கிறார்கள் என்று சொன்னால், 111 ரூபாயை அவர்கள் அங்கேயிருந்து withdraw பண்ணுகிறார்கள். அந்த அளவிற்கு இன்றைக்குப் பணப் புழக்கம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் சாதனை படைத்துள்ளது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேமாதிரி, இன்றைக்கு மாநிலத்தினுடைய பொதுத் துறை நிறுவனங்கள். சர்க்கரைத் துறையை எடுத்துக்கொண்டால், அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே 623 கோடி ரூபாய்க்கு நட்டத்தை ஏற்படுத்திச் சென்றார்கள். 623 கோடி ரூபாய் மட்டுமல்ல, 1,000 கோடி ரூபாய் தொடர் நட்டத்தை ஏற்படுத்திச் சென்றார்கள். இதையெல்லாம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த நான்கு ஆண்டுக் காலத்தில் அவர்களுடைய திறமையினால் சரி செய்து, சீர்தூக்கிப் பார்த்து நட்டத்திலிருந்த கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை, பொதுத் துறை சர்க்கரை ஆலைகளை — அனைத்து கூட்டுறவு சர்க்கரை ஆலைகளும் நட்டத்தில் இயங்கி வந்தன. ஆனால், அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பினை ஏற்ற பிறகு, 5 சர்க்கரை ஆலைகள் இலாபத்திலே இயங்கிக்கொண்டிருக்கின்றன என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். சர்க்கரைத் துறையில் இலாபமே வராது, இலாபமே வராது என்று சொன்னார்கள். இன்றைக்கு அம்மா அவர்கள் இலாபத்திலே கொண்டு வந்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, கரும்பு விவசாயிகளுக்கு இதுவரைக்கும் அன்றாடம், யார் யார் கரும்பு ஆலைகளில் போடுகிறார்களோ அவர்களுக்கு உடனுக்குடன் பணம் வழங்குகின்ற ஒரே மாநிலமாக (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு புரட்சித் தலைவியின் தமிழக மாநிலம் விளங்கிக்கொண்டிருக்கிறது. நேற்றுகூட குறிப்பிட்டேன். கரும்பு

ஆலைகளிலே அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே ஏற்பட்ட நட்டத்தைச் சொல்லி விவசாயப் பெருமக்களுக்காக மத்திய அரசினுடைய குறைந்தபட்ச விலை S.M.P. 57.5 ரூபாய் கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுக்காமலே சென்றுவிட்டார்கள். அதில் 50 கோடி ரூபாய் பாக்கி. பிறகு, S.A.P. கூடுதலாக விலை தருவோம் என்று சொன்னார்கள். அதிலே 120 கோடி ரூபாய் பாக்கி. ஆக, அந்த 120 கோடி ரூபாயும், தி.மு.க. அரசால் கொடுக்கப்படாமல் சென்றுவிட்ட 174 கோடியையும், அம்மா அவர்கள் வந்துதான் விவசாயிகள் நலனைக் கருதி. அந்தக் கரும்பு விவசாயிகளுக்குப் பணத்தைக் கொடுத்து அவர்களுடைய வாழ்க்கையிலே ஒளியேற்றி வைத்தார்கள் என்பதை நான் இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு சர்க்கரைத் துறையில் கரும்பு உற்பத்தியிலே அதிக சத்துள்ள கரும்பு விளைச்சல் 50 சதவீதத்திலிருந்து 90 சதவீதத்திற்கு அந்தக் கரும்பு உற்பத்தியைப் பெருக்குகின்றார்கள். அதுமட்டுமல்ல, செய்யாறு சர்க்கரை ஆலையில் புரட்சித் தலைவர் 'இதயக்கனி' படத்தில் "நீங்கள் நல்லா இருக்கணும் நாடு முன்னேற" என்று அந்தப் பாட்டு முடிந்து, தேயிலைத் தோட்டத்திற்கு வரும்போது, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களை அழைத்துப் பேசி, அந்த நேரத்திலே சொல்வார். "தொழிலாளர்களே வாருங்கள், இங்கே நமது தோட்டத்திலே இருக்கின்ற இலாபத்தை நாம் எல்லாம் பங்கு வைத்துக்கொள்வோம்" என்று சொல்வார்கள். புரட்சித் தலைவர் 'இதயக்கனி' படத்தில் சொன்னார், புரட்சித் தலைவி இன்றைக்கு நடைமுறையில் செய்யாறு ஆலையில் நடத்திக் காட்டியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) வருகின்ற அந்த இலாபத்தில் ஆலை நிர்வாகத்திற்கு பாதியும், பாதியை அங்கேயிருக்கின்ற கரும்பு விவசாயிகளுக்குமாக 52 ரூபாய் அதிகமாக ஆலையினுடைய நிர்வாகத்திற்கும், 52 ரூபாய் செய்யாறு கரும்பு விவசாயிகளுக்கும் கொடுத்து இன்றைக்கு ஒரு பெரிய புரட்சியை ஏற்படுத்தியவர் நமது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 10-55

அந்த அளவுக்கு இன்றைக்கு சர்க்கரை துறையில் மிகப் பெரிய முன்னேற்றத்தையும் வளர்ச்சியும் கொடுத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். இப்படியாகத்தான், இன்றைக்கு நல்லாட்சியை நாட்டிற்குத்



தந்துகொண்டிருக்கிறார்கள். அதேபோன்றுதான், அவர்களுடைய ஆட்சியில் கரும்புத் துறையில் நட்டம். கரும்புத் துறையில்தான் நட்டம் என்று சொன்னாலும், தமிழ்நாடு சிமெண்ட் என்கின்ற நிறுவனத்திலும்கூட நட்டம். தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தைப் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், 1996-ல், 13-1/2 கோடி ரூபாய் இலாபத்திலே வைத்து விட்டுச் சென்றார்கள். அன்றைக்கு 13-1/2 கோடி ரூபாய் இலாபத்திலே வைத்து விட்டுச் சென்றதை, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்த பிறகு, G.O. 75 என்கின்ற ஓர் ஆணையைப் போட்டு, அதிலே அரசுத் துறைகளுக்கு மட்டுமல்ல; அரசுத் துறையின்கீழ் வருகின்ற நிறுவனங்களில் வேலை பார்க்கின்றவர்களுக்கும், Contractor-கள், வெளியில் இருந்து சிமென்டை வாங்கிக்கொள்ளலாம் என்ற உத்தரவைப் போட்டதன் விளைவாக, ரூ.40 கோடிக்கு நட்டத்திலே இருந்தது தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம். அதிலே பாதிக்கப்பட்டதுதான், நேற்றைய தினம் அண்ணன் சந்தானம் அவர்கள் பேசும்போதுகூட சொன்னார்கள் இந்த ஆலங்குளம் சிமெண்ட் ஆலையைப்பற்றி. அதையும் இப்போது புனரமைப்பதற்குப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதைத் தொடர்ந்து, கல்நார் தொழிற்சாலை; விருத்தாசலத்தில் இயங்குகின்ற கல்நார் தொழிற்சாலை; அதுவும் அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், 24 இலட்சம் ரூபாய் இலாபத்திலே இப்போது இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேமாதிரி, வெடி மருந்து தொழிற்சாலை; காட்பாடியில் இயங்குகின்ற வெடி மருந்து தொழிற்சாலை. அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே நட்டத்தில் இருந்தது. ஆனால், இன்றைக்கு இலாபத்திலே நடந்து கொண்டு இருக்கிறது.

அதேமாதிரி, தமிழ்நாடு உப்பு நிறுவனம் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் நட்டத்தில் இருந்தது. புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், இப்போது ஒரு கோடி ரூபாய் இலாபத்தில் இயங்கிக்கொண்டிருக்கிறது. அந்த அளவுக்குப் புரட்சியை ஏற்படுத்தியவர், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

சேலத்தில் இருக்கின்ற தமிழ்நாடு மேக்னைசட் நிறுவனத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 3 கோடி ரூபாய் இலாபத்தில் வைத்துவிட்டுச் சென்றார்கள். அதன்பிறகு வந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அந்த 3 கோடி ரூபாயையும் அவர்கள் முழுங்கிவிட்டு, மேற்கொண்டு 27 கோடி ரூபாயையும் நட்டப்படுத்திவிட்டுச் சென்றதுதான் மிச்சம். ஆனால், வெறும் வாய் மட்டும் பேசுகிறார்கள். சொன்னதைச் செய்வோம், சொல்வதைச் செய்வோம் என்று சொன்னவர்கள், எதையுமே அவர்கள் செய்யவில்லை. எந்த நிர்வாகத்தையும் கவனிக்கவில்லை. நாட்டைப் பற்றிக் கவலையில்லை. அவர்களுக்கு நாட்டு மக்களைப் பற்றிக் கவலை இல்லை. அவர்களுக்கு கவலையெல்லாம் வீட்டைப் பற்றியும், (மேசையைத் தட்டும் ஒலி) தன்னுடைய மக்களைப் பற்றியும்தானே தவிர, இந்த நாட்டுக்கு எந்தவிதமான இலாபமும் அவர்களால் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேமாதிரிதான், இன்றைக்குக் கரூரில் இயங்குகிற Tamil Nadu News Prints Papers Limited; புரட்சித் தலைவர் அவர்களுடைய காலத்திலே தோற்றுவிக்கப்பட்டது. புரட்சித் தலைவர் ஆரம்பித்த அந்தக் காகித ஆலை, இந்தியாவிலே இருக்கின்ற 25 காகித ஆலைகளில் அத்தனை தொழிற்சாலைகளிலும் மிகப் பெரிய ஒரு தொழிற்சாலையாக உருமாறி இருக்கிறது. அந்தத் தொழிற்சாலையைப் புரட்சித் தலைவர் அவர்கள், 240 கோடி ரூபாய் முதலீட்டிலே அன்றைக்கு ஆரம்பித்தார்கள். கரும்புச் சக்கையில் இருந்து பேப்பர் தயாரிக்கக்கூடிய ஒரு தொழிற்சாலையைப் புரட்சித் தலைவர் அவர்கள், 240 கோடி ரூபாயிலே ஆரம்பித்தார்கள். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1991-ல் ஆட்சிக்கு வந்த பிறகு, 600 கோடி ரூபாய் அதிலே முதலீடு செய்து, (மேசையைத் தட்டும் ஒலி) 600 கோடி ரூபாயை மேற்கொண்டு முதலீடு செய்து, 274 கோடி ரூபாய் இலாபத்தைக் காட்டிய மிகப் பெரிய அற்புதமான தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். ஆனால், அதன்பிறகு வந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு என்ன செய்தது? 274 கோடி ரூபாயும் காணவில்லை. அதன்பிறகு அடுத்த 5 ஆண்டுக் காலத்திலே அவர்கள் இலாபம் காட்டினார்கள், வெறும் 120 கோடி ரூபாய் இலாபம் காட்டினார்கள். எந்தவிதமான முதலீடுகளும் செய்தார்களா? எந்தவிதமான முதலீடும் அவர்கள் செய்யவில்லை. அம்மா அவர்கள் 600 கோடி ரூபாய் முதலீடு செய்து 274 கோடி இலாபத்தைக் காட்டியது எங்கே இருக்கிறது? இவர்கள் முதலீடே பண்ணாமல் வெறும் 120 கோடி ரூபாய் இலாபத்தைக் காட்டினால், அந்தப் பணம் எங்கே போனது?



கோபாலபுரத்திற்குப் போனதா? அதை அவர்கள்தான் சொல்லவேண்டும். ஆனால், இன்றைக்கு 4 ஆண்டுக் காலத்தில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதையெல்லாம் திருப்பி சீர்செய்து, சரிக்கட்டி, இந்த 4 ஆண்டுக் காலத்தில், வந்தவுடனேயே, 150 கோடி ரூபாயை முதலீடு செய்து -- புரட்சித் தலைவர் இருந்தபோது 90 மெட்ரிக் டன்னாக உற்பத்தி இருந்த அந்த ஆலையை, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வந்த பிறகு, 1 இலட்சத்து 80 ஆயிரம் மெட்ரிக் டன்னாக மாற்றினார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது 150 கோடி ரூபாய் மேற்கொண்டு invest செய்து, அதை 2 இலட்சத்து 30 ஆயிரம் மெட்ரிக் டன்னாக மாற்றியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-00

நடப்பு நிதியாண்டில், இன்னும் 565 கோடி ரூபாய் மூலதனம் செய்து, அதை இரண்டு இலட்சத்து 45 ஆயிரம் மெட்ரிக் டன்னாக உருமாற்ற இருக்கிறார்கள் என்பதையும் நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 'தாய் எட்டு அடி பாய்ந்தால் குட்டி பதினாறு அடி பாயும்' என்று சொல்வார்கள். புரட்சித் தலைவர் 240 கோடி ரூபாயில் ஆரம்பித்ததைப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 800 கோடியாக மாற்றியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மிகப் பெரிய நிர்வாகத் திறமை யாருக்கு வரும்? இன்றைக்கு இந்தியாவில் இருக்கிற 25 ஆலைகளுள் ஒன்றாகத் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது அந்தக் காகித ஆலை.

அதுமட்டுமல்ல, Great Place to Work என்கிற அமெரிக்க நிறுவனம், Grow Talent என்கிற புது டெல்லி நிறுவனம், Business World என்கிற பத்திரிகை ஆகியவை சேர்ந்து ஓர் ஆய்வு நடத்தியிருக்கின்றன. அந்த ஆய்விலே, இந்தியாவில் இருக்கிற எல்லா ஆலைகளிலும் தொழிலாளர்கள் ஒத்துழைப்பும் ஊக்குவிப்பும் என்கின்ற முறையில் தமிழ்நாடு காகித ஆலையை 25 நிறுவனங்களில் ஒன்றாகத் தேர்ந்தெடுத்திருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பெருமை எல்லாம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைத்தான் சாரும். அந்த அளவுக்குக் காகித ஆலை இப்போது முன்னேறிக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல; சிறந்த நிர்வாக ஆளுகைக்கான ஒரு விருது; எல்லாவற்றிற்கும் சேர்த்து சிறந்த நிர்வாக ஆளுகைக்கான ஒரு விருதைப் பெற்றிருக்கிறது தமிழ்நாடு காகித ஆலை என்பதை நான் இந்த நேரத்தில்

தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இதற்கு முன்பெல்லாம், மத்திய அரசின் பொதுத் துறை நிறுவனங்களான O.N.G.C., I.B.P. போன்ற நிறுவனங்கள்தான் இந்த சிறந்த ஆளுகைக்கான விருதைப் பெற்றிருக்கின்றன. ஒரு மாநில அரசு நிறுவனம், இந்த அளவுக்கு இதுபோன்ற விருதைப் பெறுவது, இந்தியாவிலேயே இப்போதுதான் முதன்முறையாக உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேமாதிரி, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றபின், 1991-96-லே இருந்தபோது, 40 கோடி ரூபாய் இலாபத்திலே இயங்கி வந்தது. ஆனால் 1996 லிருந்து 2001 வரையிருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், அவர்கள் 64 கோடி ரூபாய் நட்டத்தில் அதைத் தள்ளிவிட்டார்கள். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி வந்த பிறகுதான், மீண்டும் ஆட்சிக்கு வந்த பிறகு, அதைச் சீராக்கி, கடன்களை எல்லாம் சற்றுத் திரும்ப வசூல் செய்து--நேற்றுகூட செ.கு. தமிழரசன் அவர்கள் சொன்னார்கள். கடுமையான வசூலை மேற்கொள்கிறார்கள் என்று சொன்னார்கள்; ஆனாலும் -- அதற்காக one time settlement-ஐப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இன்னும் தொடர்ந்து, உங்களுடைய கோரிக்கையை ஏற்றும், மேற்கொண்டு அதனுடைய விதிமுறைகளைத் தளர்த்தியும், one time settlement-க்கு வருகிறவர்களுக்கு, இன்னும் அவர்களுக்கு வசதியாக, தொழிற்சாலைகள் உருவாவதற்காக அம்மா அவர்களுடைய அரசு நல்ல ஒரு பதிலைச் சொல்லும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, பேரவைத் தலைவர் அவர்களே, TIDCO - Tamil Nadu Industrial Development Corporation நிறுவனம்; அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான், 18 திட்டங்கள் போடப்பட்டு 5,782 கோடி ரூபாய்க்கு முதலீடுகளை இங்கே உற்பத்தித் துறையில் ஏற்படுத்தித் தந்தது TIDCO நிறுவனம். ஆனால் 1996-லிருந்து 2001 வரை இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு என்ன செய்தது தெரியுமா? அம்மாவுடைய அரசில், 5,782 கோடி ரூபாய்க்குத் திட்டங்களைக் கொண்டு வந்து, தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டன. ஆனால், அவர்கள் 5 ஆண்டுகளில் எந்தவிதமான வேலையையும் செய்யவில்லை. வெறும் 1,316 கோடி ரூபாய்க்குதான் அவர்களுடைய திட்டங்களைத் தந்திருந்தார்கள். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2001-2004 வரைக்கும், இந்த 4 ஆண்டுக் காலத்தில், 6,300 கோடி ரூபாய்க்குத்



தொழிற்சாலைகளை இங்கே உருவாக்கித் தந்திருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள்கூட நினைக்கலாம்; அம்மா எப்போதெல்லாம் ஆட்சிக்கு வருகிறார்களோ, அப்போதெல்லாம் இந்தப் பொதுத் துறை நிறுவனங்கள் இலாபத்திலே வருகின்றன. எப்போதெல்லாம்--எப்போதெல்லாம் அல்ல; ஒரு தடவைதான். இனிமேல் வரமுடியாது திராவிட முன்னேற்றக் கழகம். 1996-லிருந்து 2001 வரைக்கும் 5 வருடங்கள் ஆட்சி செய்தார்களே, அந்த இலாபம் எல்லாம் எங்கே போயின? கோபுரத்துக்குப் போனதா, கோபாலபுரத்துக்குப் போனதா என்பது ஆண்டவனுக்குதான் வெளிச்சம். அம்மா அவர்கள் இன்றைக்கு நிர்வாகத் திறமையோடு ஆட்சி செய்கின்றார்கள். அதனால்தான் 20 வருடங்களுக்கு முன்பு ஒரு கவிஞன் பாடிவிட்டுப் போனான். "தொட்ட இடம் துலங்க வரும் தாய்க் குலமே வருக, கைப் பட்ட இடம் பூ மலர பொன்மகளே வருக" என்று. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கவிஞன் பாடிவிட்டுப் போனதை நான் இந்த நேரத்தில் உங்களுக்கு ஞாபகப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த அளவுக்குத் தொழில் துறையிலே மிகப் பெரிய முன்னேற்றத்தை இந்த நாட்டுக்குப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தந்துகொண்டிருக்கிறார்கள்.

அதேமாதிரிதான், Detroit என்று சொல்லப்படுகிற--நமது தமிழ்நாட்டை கார் உற்பத்தியில் இன்று Detroit என்று சொல்கின்றார்கள் -- அந்த அளவுக்குத் தமிழ்நாட்டை, இந்தியாவிலே. என்ன உலகத்திலேயே அதிகமாகக் கார் உற்பத்தி செய்கிற ஒரு மாநிலமாக மாற்றிய பெருமை, புரட்சித் தலைவி அம்மா அவர்களைத்தான் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-05

'ஃபோர்ட்' தொழிற்சாலை, 1996 ஆம் ஆண்டு, 3-1-1996 அன்று புரட்சித் தலைவி அம்மா அவர்களாலே M.o.U. போடப்பட்டது. 23-2-1996 ஆம் நாளன்று அடிக்கல் நாட்டப்பட்டது. ஆனால், திரு. கருணாநிதி, 'முரசொலி'யிலே அறிக்கை விடும்போது முதலிலே தெரியாமல், 'நான்தான் அடிக்கல் நாட்டினேன்' அப்படியென்று சொல்லிவிட்டார். " 'ஹூண்டாய்' நிறுவனத்தை நான்தான் கொண்டு வந்தேன்" என்கிறார். 1996 ஆம் ஆண்டு யார் ஆட்சி நடந்தது?

3-வது மாதம் வரைக்கும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் ஆட்சி செய்தார்கள் என்று நாட்டு மக்கள் எல்லாருக்குமே தெரியும். ஆனால், அவர்களின் 'முரசொலி' பத்திரிகையிலும் சரி; அவர்களுடைய டி.வி.-யிலேயும் சரி; எல்லாமே * உண்மைக்கு மாறுபட்டதுதான். உண்மைக்கு மாறுபட்டது என்பதைக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால், அதையும் தாண்டிய * உண்மைக்கு மாறுபட்டது திரு. கருணாநிதி * . (மேசையைத் தட்டும் ஒலி)

Visteon Power Train Systems, Visteon Automotive Systems இவையெல்லாம் தான் தொடங்கி வைத்தது என்று திரு. கருணாநிதி அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். நான் எதற்காகச் சொல்கின்றேன் என்று சொன்னால் 'ஃபோர்ட்' ஒரு தொழிற்சாலை; அதனுடைய Ancillary Unit; அது தொடர்ந்து இயங்கி வருகிறது என்று சொன்னால், அது அம்மா அவர்கள் கொண்டு வந்தது என்றுதானே அர்த்தம்? ஹூண்டாய் தொழிற்சாலை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களே, இந்த * எல்லாம், எல்லாமே உண்மைக்கு மாறுபட்டது என்கிற வகையிலே மாற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** சரி, மாற்றிக்கொள்கிறேன். 27-3-1996 ஆம் ஆண்டு ஹூண்டாய் கார் காம்பெனிக்கு M.o.U. போடப்படுவதாக இருந்தது. அப்போது தேர்தல் நெருங்கிவிட்ட காரணத்தினால், தேர்தல் கமிஷன் முன்னரே ஒரு அறிக்கையை விடுகிறது. எந்தவிதமான அறிவிப்புகளையும் அரசு வெளியிடக் கூடாது என்று சொன்ன காரணத்தினால், அந்த M.o.U. போட முடியாமல் போயிற்று. ஆனால், அதையும், தான் கொண்டு வந்தது என்று திரு. கருணாநிதி அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். இதனை, மார்ச் மாதம் 22 ஆம் தேதி Business Line என்கிற பத்திரிகை--1996 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22 ஆம் தேதி Business Line என்கிற பத்திரிகை--தெளிவாக வெளியிட்டிருக்கிறது. அதேமாதிரி, ஹூண்டாய் நிறுவனத்தைத் தொடர்ந்து அதனுடைய Ancillary Units-ஆன Mando Brake System, JBM Sungwoo, Illgen, Donge Vision போன்ற தொழிற்சாலைகள் எல்லாம் ஹூண்டாய் நிறுவனத்தினுடைய தொடர்ச்சியாக வந்த தொழிற்சாலைகள், அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே கொண்டு வரப்பட்டன.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.



இன்னொன்று, பேரவைத் தலைவர் அவர்களே, MARCUB என்கிற காகித அட்டைத் தொழிற்சாலை அந்தத் தொழிற்சாலையை, திரு. கருணாநிதி அவர்கள், "நாங்கள்தான் கொண்டு வந்தோம்; அடிக்கல் நாட்டினோம்" என்றுகூட 'முரசொலி' பத்திரிகையில் சொல்லியிருக்கின்றார். ஆனால், அந்த மாதிரி ஒரு தொழிற்சாலை இதுவரைக்கும் தமிழ்நாட்டில் இல்லை. எங்குமே இல்லாததைச் சொல்வதுதான் திரு. கருணாநிதி, முன்னாள் முதல்வர் கருணாநிதி அவர்களுடைய வாடிக்கையும், வேலையும் என்பதை நான் இந்த நேரத்திலே தெளிவுபடுத்த விரும்புகிறேன். சரி, திரு. கருணாநிதி அவர்கள் தலைவர்; அதனால் * உண்மைக்கு மாறுபட்டதைச் சொல்லலாம். 'பெரியவர் சொன்னால் பெருமாள் சொன்னது மாதிரி' என்று சொல்வார்கள். அவர்தான் சொல்லிக்கொண்டு போகிறார் என்றால், இங்கே மாமன்ற உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள், 2001-லே இதே மாமன்றத்திலே ஒரு மானியக் கோரிக்கையிலே பேசுகின்றபோது, தொழில் துறை மானியக் கோரிக்கையிலே பேசுகின்றபோது அவர் சொல்லியிருக்கின்றார்; "500 கோடி ரூபாய் செலவிலே 'பில்கிங்டன்' என்ற ஒரு கண்ணாடித் தொழிற்சாலையை நாங்கள் தொடங்கி வைத்திருக்கின்றோம்; எங்களுடைய ஆட்சிக் காலத்திலே வந்தது" என்று சொல்லியிருக்கின்றார்கள். அவர், பில் கிளின்டன் வேண்டுமானால் இந்த உலகத்திலே இருக்கிறார்; நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால், பில் கிளிண்டன்--அவரும் இங்கே இதுவரைக்கும் வரவேயில்லை; அப்படியொரு தொழிற்சாலையும் வரவில்லை. அப்படி ஓர் ஆளே உலகத்திலேயே கிடையாது. ஏனென்றால், தலைவர்தான் அப்படி என்றால், தொண்டனும் அப்படி. அந்த வாரிசே அப்படித்தான். தி.மு.க.-விலே உள்ள தலைவர் முதல் தொண்டன் வரை அத்தனை பேருமே அதே வாரிசு அடிப்படையிலேதான் இருப்பார்கள். ஆனால், புரட்சித் தலைவியைப் பொறுத்தவரையிலே அப்படியில்லை. அம்மா அவர்களைப் பொறுத்தவரையிலே அப்படியில்லை. அம்மா அவர்களைப் பொறுத்தவரை இன்றைக்கு எதைச் சொன்னாலும், ஒன்றைச் சொல்லிவிட்டால்--நேற்றுகூட மாண்புமிகு அண்ணன் விசுவநாதன் அவர்கள் சொன்னார்கள்--ஒன்று சொன்னால், சொன்னது மாதிரி இருக்கும். அந்த அளவிற்கு உண்மை, நேர்மை, திறமை; அத்தனையும் யாரிடம் படிக்க வேண்டும்? ஒழுக்கம் யாரிடம் படிக்க வேண்டும்? எங்களுடைய அம்மா, புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம்தான் நீங்கள் படிக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி). யாருடைய வாரிசு அவர்கள்?

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

"இருந்தாலும் மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும்;
இவர் போல யார் என்று ஊர் சொல்ல வேண்டும்"

என்று வாழ்ந்து மறைந்த ஒப்பற்ற தலைவர் புரட்சித் தலைவருடைய வாரிசு அல்லவா புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களிடம் வந்து நீங்கள் பாடம் படியுங்கள். உங்களுக்கெல்லாம் நல்ல புத்தி வரும். ஆண்டவன் உங்களுக்கு எல்லாம் நல்லதைத் தருவான் என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டும் அல்ல, 'தாபர் டு பாண்ட்' என்ற நிறுவனம். 'தாபர் டு பாண்ட்' என்கிற நிறுவனம் 300 கோடி ரூபாய் செலவில் புரட்சித் தலைவி அம்மா அவர்களால், 1995 ஆம் ஆண்டு -- தாபர் டு பாண்ட் என்ற நிறுவனம் புகழ்பெற்ற நிறுவனம் -- நம்முடைய அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே அடிக்கல் நாட்டப்பட்டு தொடங்கப்பட்டது. ஆனால், அதையும் திரு. கருணாநிதி அவர்கள், 'நாங்கள் தான் கொண்டு வந்தோம்' என்று சொன்னார்கள். ஆனால், என்ன பேசினார்களோ, என்ன நடந்ததோ தெரியாது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே அந்த 'தாபர் டு பாண்ட்' நிறுவனம், இந்தியாவைவிட்டே போய்விட்டது. அந்த அளவிற்குத் தொழிற்சாலைகளோடு நல்லிணக்கம், நல்லுறவு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே இருந்ததே கிடையாது. ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இன்றைக்குத் தொழில் முனைவர்கள் வெளிநாட்டிலிருந்து வருகிறார்கள்; உடனே அவர்களை அழைத்துப் பேசி, 'உங்களுக்கு என்ன வேண்டும்; தொழிற்சாலை தொடங்குவதற்கு என்ன சலுகைகள் வேண்டும்? இன்னும் என்ன வேண்டும்? இன்னும் என்னென்ன உங்களுக்கு வேண்டும்? மின் துறையில் என்ன சலுகை வேண்டும்? Commercial tax-லே உங்களுக்கு என்ன சலுகை வேண்டும்? உங்களுக்கு வணிக வரித் துறையிலிருந்து என்ன சலுகை உங்களுக்கு வேண்டும்?' என்று இதையெல்லாம் கேட்டு, அழைத்துப் பேசி, சலுகைகளை அள்ளி அள்ளித் தந்து கொண்டிருக்கின்றார்கள், புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

முற்பகல் 11-00

62 கோடி ரூபாய் செலவில் TICEL Bio-Park, எண்ணூர், தூத்துக்குடி, ஓசூர் போன்ற இடங்களுக்கு சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் போன்ற பல்வேறு திட்டங்கள். நமது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடைய கன்னியாகுமரி தொகுதியிலேகூட, 14½ கோடி ரூபாய் செலவில் ஒரு இரப்பர் பூங்கா இந்த ஆண்டே வரவிருக்கிறது என்பதையும் நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



அதைப்போன்று, மாண்புமிகு அண்ணன் திரு. வா. சந்தானம் அவர்கள், நேற்றைய தினம் பேசுகின்றபோது, தென் மாவட்டங்களில் தொழில்கள் இல்லை என்று சொன்னார்கள். அதாவது, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்கூட, 'மதுரையிலே மல்லிகைப் பூ அதிகமாக விளைகிறது; ஆகவே, அங்கு ஒரு சென்ட் தொழிற்சாலையை ஏன் நீங்கள் தொடங்கக் கூடாது' என்றுகூட பொதுப் பணித் துறை அமைச்சர் அண்ணன் ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் நேற்றுகூட சொன்னார்கள். அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்வது, தனியாக அரசாங்கத்திலிருந்து எந்தவிதமான தொழிற்சாலையும் தொடங்க முடியாத சூழ்நிலை இந்தக் காலகட்டத்தில் இருப்பதனால், யாரேனும் தொழில் தொடங்க முன்வருவார்களேயானால், அவர்களுக்கு நிச்சயம் அரசாங்கம், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அனைத்து சலுகைகளையும் வழங்கி, மதுரை மாவட்டம், குறிப்பாக உசிலம்பட்டி போன்ற பின்தங்கிய பகுதிகளில் முன்னுரிமை கொடுத்து, தொழிற்சாலைகள் அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் தயாராக இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

அதேபோன்று, Titanium-di-oxide தொழிற்சாலை, 3 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் வரவிருக்கிறது. 3 ஆயிரம் கோடி ரூபாய் investment என்பது மிகப் பெரிய ஒரு investment; இந்தக் காலகட்டத்தில். இந்த ஆண்டு, இந்த ஓராண்டுக் காலத்தில் 750 கோடி ரூபாயை அங்கே முதலீடு செய்வதற்கு இருக்கிறார்கள் என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன்.

இங்கே, நாங்குனேரி தொழிற் பூங்காவைப் பற்றி சில பேர் பேசினார்கள். நாங்குனேரி தொழிற் பூங்கா என்பது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு 1,500 ஏக்கர் நிலம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. அதிலே 6.77 மில்லியன் தண்ணீர் அவர்களுக்குத் தரப்பட்டது. 6.7 மில்லியன் தரப்பட்டது. Infrastructure எல்லாமே அனைத்தும் தயாராக இருக்கின்றன. அதற்கான மின்சாரம் தயாராக இருக்கிறது. ஆனால் அந்தத் தொழில் முனைவோர் Charles V. Luckes என்பவர் இன்னும் அவர் நிதி முடிவுகளை

எட்டவேயில்லை. ஒருவர் M.o.U. போடுகிறபோது, பின்னர் M.o.U. போட்டு இரண்டு ஆண்டுகளில் அவர் நிதி முடிவுகளை எட்ட வேண்டும். Financial closure என்கின்ற நிதி முடிவுகளை எட்டவில்லை என்றால், அவர்களுக்கு எதுவுமே செய்ய முடியாது. ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகுதான், யாருடைய ஆட்சிக் காலத்திலே போடப்பட்டது என்பது முக்கியமல்ல; நாட்டு மக்களுக்குத் தொழில் வேண்டும்; நாட்டில் தொழில் வளம் பெருக வேண்டும்; ஏற்றுமதி சிறக்க வேண்டும் என்ற வகையில் நாங்குனேரிக்கு ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலத்தைப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார்கள்.

அதுமட்டுமல்ல, கன்னியாகுமரியிலிருந்து திருநெல்வேலி, திருநெல்வேலியிலிருந்து தூத்துக்குடி துறைமுகத்திற்குச் செல்வதற்கு 4 line புற வழிச் சாலையை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மத்திய அரசிற்கு எழுதி, அதன்மூலமாக இன்றைக்குப் பணிகள் தூத்துக்குடியிலிருந்து திருநெல்வேலிக்கு 4 வழிப் பாதை சிறப்பான முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதன் பிறகும் 7, 8 தடவை E-mail மூலம் அவர்களிடம் தொடர்பு கொண்டு நீங்கள் வாருங்கள், தொடங்குங்கள் என்று சொன்னால், இன்னும் அவர்கள் நிதி முடிவை எட்டவில்லை. தொடர்ந்தும் கால அவகாசம் கேட்டுக்கொண்டே இருக்கிறார்கள்.

13-8-2004 ஆம் ஆண்டு மத்திய அரசு, இதே திராவிட முன்னேற்றக் கழகம் அங்கம் வகிக்கின்ற மத்திய அரசு, தமிழ்நாடு அரசுக்கு, ஓர் ஓலை அனுப்பியிருக்கிறார்கள். என்ன தெரியுமா அது? இவ்வளவு சலுகைகளைக் கொடுத்தும், இவ்வளவு நாட்கள் கொடுத்தும், ஏன் இந்தத் திட்டத்தை உங்களால் செயல்படுத்தமுடியவில்லை? அதை நீங்கள் செயல்படுத்தத் தவறினால் 60 நாட்கள் show cause notice கொடுத்து, அதை close பண்ணுங்கள் என்று சொன்னது மத்திய அரசு. மத்திய அரசே ஒரு திட்டத்தை close பண்ணுவதற்கு இவ்வளவு வேகப்பட்டது என்று சொன்னால், நாம் என்ன செய்ய முடியும்? யாரிடம் போய் இதைச் சொல்வது? நாம் எவ்வளவோ கால அவகாசம் கொடுத்துக் கொண்டேயிருக்கிறோம். நாங்குனேரி தொழிற் பூங்காவைப் பற்றி. இவ்வளவு நன்மைகளைச் செய்தும் இன்னும் வரவில்லை. இன்னும்கூட வருகிறேன் என்றுதான் அந்த Charles V. Luckes சொல்லியிருக்கிறார். அதையும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். எது ஆனாலும் சரி,



யார் கொண்டு வந்தாலும் சரி, அதை நாட்டு மக்களுக்குத் தருவதற்குப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தயாராக இருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்படியாக இன்றைக்கு TICEL Bio–park 62½ கோடி ரூபாய் செலவிலும். Asian Paints 66 கோடி ரூபாய் செலவிலும் உற்பத்தியைத் தொடங்கியிருக்கின்றன. Asahi கண்ணாடி நிறுவனம் 57 கோடி ரூபாய் செலவில் உற்பத்தியைத் தொடங்கியிருக்கிறது. இன்றைக்கு,. Hyundai, பெரிய கார் தொழிற்சாலை விரிவாக்கத்திற்கு, 2,200 கோடி ரூபாய் செலவில், அந்த விரிவாக்கம் மேற்கொள்ளவிருக்கிறது. அதுமட்டுமல்ல; Ennore Foundries—Ashok Leyland சார்பாக, Ennore Foundries—350 கோடி ரூபாய் முதலீட்டில் விரிவாக்கப் பணியைத் தொடங்கவிருக்கிறது.

முற்பகல் 11-15

சோழிங்கநல்லூரில் ஓர் அறிவுசார் தொழில் நகரத்தை—Singapore Lee Kim Taa Holdings என்கின்ற ஒரு கம்பெனியோடு அந்த அறிவுசார் தொழிற்நுட்பப் பூங்காவில் ஒரு நகரம் தொடங்கவிருக்கிறது. Ascendas சிங்கப்பூர் கம்பெனி—Ascendas கம்பெனி—மிகப் பெரிய ஒரு கம்பெனி. இன்றைக்கு டைடல் பார்க் என்றெல்லாம் சொல்கிறார்கள். இதையெல்லாம் தாண்டி, மிகப் பெரிய ஒரு Ascendas Park, 450 கோடி ரூபாய் செலவில் இன்றைக்கு முதல் கட்டப் பணியை நிறைவு செய்யவிருக்கிறது. இது மூன்று கட்டமாக இந்தப் பணியைத் தொடங்குகிறது. அதனால் 17,000 பேருக்கு வேலை கிடைக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இப்படியாக நாட்டு மக்களுக்கு நல்ல பல திட்டங்களை நாள்தோறும் அள்ளி, அள்ளித் தந்து கொண்டிருக்கின்றவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஆனால், சில பேரிடம் அள்ளிக் கேட்டால் அப்பா அள்ளியும் கொடுக்கமாட்டார், மகன் கிள்ளியும் கொடுக்கமாட்டார். அவர்கள் அள்ளுவதும், கொள்ளுவதும் தனது வீட்டிற்கு மட்டும்தான். அவர்கள் பனங்காட்டு நரிகள். 6½ கோடி மக்களும் போற்றுகின்ற எங்கள் அம்மா, கொட்டமடிக்கும் அட்டூழியங்களை அடக்கி வைத்திருக்கும் அரசியல் சிங்கம். (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பெருமை இன்று ஒரு சிலருக்குப் புரியவில்லையென்றால் நாம் என்ன செய்வது? நல்லதொரு கற்பூர வாசனை சிலருக்குத் தெரியாது என்று கூறுவார்கள். அதற்காகக் குட்டிச் சுவர் ஓரத்தில் நின்று கொண்டிருக்கின்ற,

[திரு. நயினார் நாகேந்திரன்] [2005 மார்ச் 31

முட்டிக்கொண்டிருக்கிற அவர்களோடு நாம் முட்டிக் கொண்டிருக்க முடியுமா? முடியாது. அப்படித்தான் சில பேர் இன்றைக்குத் தமிழகத்திலே இருந்துகொண்டிருக்கின்றார்கள்.

இன்றைய தமிழகம், தொழில் முனைவோரின் சொர்க்கம். புத்தம் புதிய தொழில்கள் நித்தம் மலர, ஏற்ற விளை நிலம் இன்றைய தமிழகம். இந்தச் சிறப்புக்கும், பெருமைக்கும் யார் காரணம்? உழைப்பில் சிறந்த புரட்சித் தலைவி அவர்களே காரணம். (மேசையைத் தட்டும் ஒலி) உலகை வெல்லும் அம்மா அவர்களின் அறிவே காரணம். (மேசையைத் தட்டும் ஒலி) தருக்கர்களின் தடைகளை உடைக்கும் எங்கள் தாயின் துணிச்சலே காரணம். (மேசையைத் தட்டும் ஒலி) தன்னிகரற்ற அம்மா அவர்களின் வீரமே காரணம். (மேசையைத் தட்டும் ஒலி) சத்தியத் தலைவியின் வாய்மையே காரணம். சாதனைத் தலைவியின் ஆற்றலே காரணம். அந்தத் தங்கத் தலைவி அவர்களின் தலைமையின்கீழ் புதிய வரலாற்றைத் தொழில் துறை படைக்கும். அதனால் எல்லோருக்கும் புது வாழ்வு கிடைக்கும் என்று கூறி, இங்கே பேசிய அனைவரின் -- மாண்புமிகு உறுப்பினர்களின் கோரிக்கைகள் கனிவுடன் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தருமாறு வேண்டுகிறேன். நன்றி, வணக்கம்.

## மானியக் கோரிக்கை எண் 26 – தொழில் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 26, தொழில் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.



2005 மார்ச் 31]

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"தொழில் துறை மானியக் கோரிக்கை எண் 26-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.50,74,38,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.78,15,61,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

## மானியக் கோரிக்கை எண் 16 - கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை-கைத்தறி மற்றும் துணி நூல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 16, கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை-கைத்தறி மற்றும் துணி நூல். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை -- கைத்தறி மற்றும் துணி நூல் மானியக் கோரிக்கை எண் 16-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.312,38,05,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.40,00,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை - கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

## (இ) கோரிக்கை எண் 5 – வேளாண்மைத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 5 - வேளாண்மைத் துறை. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005-2006 ஆம் ஆண்டிற்கான "வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கை எண் 5-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.806,10,42,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.48,30,45,000/– ஆகமொத்தம் ரூபாய் 854,40,87,000/-ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 1484, திருமதி காசாம்பு பூமாலை, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2603, திரு. அ.இரா. மலையப்பசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3382, திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4326, திரு. கோ. இரவிராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4506, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4776, திரு. டி.கே. இராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6308, திரு. இ. வேல் முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6226, திரு. சி. சண்முகம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6773, திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7179, திரு. கி. பாரிமோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7481, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3288, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3792, திரு. எச்.எம். ராஜு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5637, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6679, திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3175, திரு. கே.சி. கருணாகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3013, திரு. கோவை தங்கம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4371, திரு. என். நன்மாறன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6115, திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6492, திருமதி எ.எஸ். மஹேஸ்வரி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4443, திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 210, திரு. வி.கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5488, திரு. என்.ஆர். ரங்கராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5148, திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1995, திரு. எ.வ. வேலு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3201, திரு. அ. அசோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4591, திரு. ஆர். கிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3047, திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4168, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி, இருக்கையில் இல்லை.



வெட்டுத் தீர்மானம் எண் 6177, திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6892, திரு. கே.வி. முரளிதரன்.

முற்பகல் 11-20

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிறு விவசாயிகள் ஆழ்துளைக் கிணறு (போர்வெல்) போடும்போது அதில் தண்ணீர் கிடைக்காமல் போனால் அதற்குண்டான செலவில் 50% அரசாங்கம் மானியமாக வழங்கிடவும், 4% வட்டியில் விவசாயிகளுக்குக் கடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கை எண் 5-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,42,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.48,30,45,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7236, திரு. ஆ. ராஜகோபால், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3279, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேளாண்மைத் துறையில் புதிய தொழில்நுட்பங்களைப் புகுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும், நீர்வள ஆதாரங்களைப் பெருக்குவதன் அவசியம் குறித்தும், காலத்திற்கு ஏற்ற வகையில் நீர் சிக்கனத்தைக் கடைபிடிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கை எண் 5-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,42,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.48,30,45,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6187, திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குடுமியான்மலையில் விவசாயக் கல்லூரி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கை எண் 5-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.806,10,42,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.48,30,45,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6377, திரு. எம். ராம்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3987, திரு. டி. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4281, திரு. எஸ். தாமோதரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 613, திரு. மீ.அ. வைதியலிங்கம், இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கை மற்றும் வெட்டுத் தீர்மானங்கள் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அதற்குரிய விளக்கத்தை அளிக்கின்றேன் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

@ 149 முதல் 341 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைமீது விவாதம், திரு. முரளிதரன்.

***திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005–2006 ஆம் ஆண்டிற்கான வேளாண்மைத் துறை குறித்த மானியக் கோரிக்கைமீது பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்ததற்கு பாரதிய ஜனதா party சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறையில் பேசுவதற்குமுன் ஓசூர் தொகுதியில், சூலகிரி யூனியனில் வேளாண்மைத் துறை சம்பந்தப்பட்டதும் pollution சம்பந்தப்பட்டதும் மற்றும் தொழில் துறைக்குச் சம்பந்தப்பட்டதுமான ஒரு முக்கியமான கோரிக்கையை இங்கே எடுத்துக்கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓசூர் தொகுதியில், பேரிகைக்கு அருகில் Sanmar Speciality Chemicals என்ற ஒரு Chemical Factory இருக்கிறது. அந்த Chemical Factory-ஐச் சுற்றி, 15 கிலோ மீட்டர் தூரம் வரையுள்ள வேளாண்மை நிலங்களிலே எந்தவிதமான crops-ம் சரியாக வருவதில்லை. அதேபோல் அங்கேயிருக்கிற மக்கள் கருப்பாக மாறிக் கொண்டிருக்கிறார்கள். அதைப்போல 50 கால்நடைகள் இறந்திருக்கின்றன. அதனால் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இந்த Factory-ஐ உடனடியாக மூட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு வேளாண்மைத் துறையில், 1972 ஆம் ஆண்டு AGROFED ஆரம்பிக்கப்பட்டு அது நஷ்டத்தில் இயங்குவதால் மூடப்பட்டுவிட்டது. அதனால் AGROFED நிறுவனத்தில் பணியாற்றும் சுமார் 370 பணியாளர்கள் 30-12-2004 முதல் வேலை இழந்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், Labourers, Agricultural Labourers-க்கு, கட்டடப் பணியாளர்களுக்கு இன்றைக்கு எவ்வளவோ சலுகைகளை அறிவித்திருக்கிறார்கள். அதைப்போல, இந்த 370 பேர்களுக்கும் தமிழக அரசு உடனடியாக, அவர்களுக்கு வேறு துறையில் வேலை வழங்க வேண்டுமென்று மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தளி தொகுதி மக்களுக்கும், ஓசூர் தொகுதி மக்களுக்கும் 25 கோடி ரூபாய் செலவில் Floriculture கொடுத்ததற்கும், அதேபோல், Tamil Nadu Precision Farming Project, அதாவது Israel Project, 7½ கோடி ரூபாயில் கொடுத்ததற்கும், அதைப்போல Horticulture Training Centre தளி தொகுதிக்கு ரூ. 2 கோடி செலவில் கொடுத்ததற்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சருக்கு நன்றி சொல்லிக்கொள்கிறேன். ஓசூர் தொகுதிக்கு ரூ. 25 கோடி Floriculture-க்காக கொடுத்திருக்கிறீர்கள். ஆனால், அதனால் ஓசூர் தொகுதி மக்களுக்கும், தளி தொகுதி மக்களுக்கும் எந்தவிதமான பயனும் இல்லை. கர்நாடக மாநிலம், ஆந்திர மாநிலத்திலே உள்ள கோடீஸ்வரர்கள்தான் இங்கே Floriculture-இலே ஈடுபட்டு தொழிலைச் செய்கிறார்கள். இங்கே இருக்கிற விவசாயிகளுக்கு எந்தவிதமான பயனும் இல்லை. அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரோடு கலந்து பேசி, இங்கே இருக்கிற, தளி தொகுதியிலே, ஓசூர் தொகுதியிலே உள்ள வேளாண்மைத் தொழிலைச் செய்கிற மக்களுக்கு ஒரு ½ ஏக்கரா, ¼ ஏக்கராவிலே, 50 இலட்சம், 25 இலட்சம் கொடுத்து அவர்களுக்கு அந்த Floriculture-இலே வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல இன்றைக்கு....

*முற்பகல் 11-25*

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய ஒப்பற்ற முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துல்லிய பண்ணையியல் திட்டத்தின்மூலமாக 7 கோடியே 20 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலே பழ வகைகளுக்காக, மலர் வகைகளுக்காக, துல்லிய பண்ணையியல் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்து, 100 சதவிகித மானியத்திலே கிருஷ்ணகிரி மாவட்டத்திலே இருக்கின்ற வேளாண் பெருமக்களுக்கும், தருமபுரி மாவட்டத்தில் இருக்கின்ற வேளாண் பெருமக்களுக்கும் அந்த வாய்ப்பை வழங்கியிருக்கின்றார்கள் என்பதை நான் பணிவோடு கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொன்னது Floriculture. ரூ. 25 கோடியிலே கொடுத்திருக்கிறீர்கள், அதைத்தான் நான் சொல்கிறேன். அதேபோல ரூ. 7½ கோடி நீங்கள் Israel Project–க்குக் கொடுத்திருக்கிறீர்கள். அந்த



scheme-னுடைய function என்ன? அந்த scheme-னுடைய aim என்ன? Irrigation, Micro-irrigationதான் அந்த scheme–னுடைய aim. ஆனால் நீங்கள் கொடுத்திருப்பது ஓசூர் தொகுதியிலே, கெலவரப்பள்ளி Dam, தண்ணீர் போகிற இடத்திலே கொடுத்திருக்கிறீர்கள். தண்ணீர் நன்றாக இருக்கிற இடத்திலே, Israel Project waste–தானே? தண்ணீர் இல்லாத வேறு இடத்திலே நீங்கள் கொடுத்திருக்க வேண்டும். Israel Project–ஐ short term crops-க்கு, tomato, ladies finger இந்தமாதிரி crops-க்குதான் நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். அங்கே கெலவரப்பள்ளி dam தண்ணீர் நன்றாகப் போய்க் கொண்டிருக்கிறது. அங்கே கொடுத்திருக்கிறீர்கள். அங்கேயிருக்கிற விவசாயிகளுக்கு 100% subsidy கொடுத்திருக்கிறீர்கள். Drip irrigation வேண்டாமென்று சொல்கிறார்கள். தண்ணீர் அந்தமாதிரி இடத்தில் இருக்கிறது. அந்த இடத்திலே போட்டு, அந்த scheme waste ஆகிக் கொண்டேயிருக்கிறது. அதற்கு..

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** நீர் வளம் அதிகமாக இருந்தாலும்கூட, அந்த நீர் வளத்தை வீணாக்காமல் சேமித்து வைப்பதற்காகத்தான், முறைப்படுத்தி அந்த நீர் வளத்தின் மூலமாகச் சாகுபடி செய்வதற்காகத்தான், சொட்டு நீர்ப்பாசனம், தெளிப்பு நீர்ப் பாசனத்தை, மாண்புமிகு அம்மா அவர்கள் அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள் என்பதை நான் கனிவோடு தெரிவித்துக்கொண்டு, பெருமளவு நீர் இருக்கிறது என்பதற்காக அதிக அளவு செலவு செய்வது கூடாது என்ற தத்துவத்தின் அடிப்படையிலேதான், இன்றைக்குச் சொட்டு நீர்ப்பாசனத்தையும் தெளிப்பு நீர்ப்பாசனத்தையும் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள் என்பதை நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தண்ணீர் இல்லாத இடத்திலே 600, 700 அடி bore போட்டால்கூட, இன்றைக்குத் தண்ணீர் இல்லாத இடத்தில் கொடுத்தால், நன்றாக use ஆகிறது. அதற்காக இந்த வருடம் அங்கே கொடுத்திருக்கிறீர்கள். 3 வருடம் என்று சொல்லியிருக்கிறார்கள். இரண்டாவது தடவை, கெலமங்கலம் யூனியன், தளி யூனியனிலே தண்ணீர் இல்லாததால் அங்கே பாசனம் இல்லை. அங்கே கொடுத்தால் ரொம்ப நன்றாக இருக்குமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல தமிழக முதலமைச்சர் அவர்கள் ரூபாய் 2 கோடி செலவில் Horticulture Training Centre என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், Policy Note–லே

10 இலட்சம் ரூபாய்தான் காட்டியிருக்கிறார்கள். அதனால், 2 கோடி ரூபாய் செலவில் எப்போது அது தொடங்கப்படும் என்று மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பதிலளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பயிற்சிகள் ஆரம்பிப்பதற்காக நம்முடைய பட்டு வளர்ச்சித் துறையிலே இருந்து 7 ஏக்கர் நிலம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க பெறப்பட்டிருக்கின்றது. அந்த 7 ஏக்கர் நிலத்தில் இருக்கின்ற குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஒருசில கட்டடங்களைப் பழுதுபார்ப்பதற்காக 10 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில், பொதுப் பணித் துறை அந்தப் பழுதுபார்க்கும் பணியை மேற்கொண்டிருக்கிறது என்பதையும், அந்தப் பணி இப்போது முடிந்திருக்கின்றது என்பதையும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியோடு விரைவில் அங்கே பயிற்சி வகுப்புகள் தொடங்கப்படும் என்பதையும் நான் கனிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அந்த Floriculture பற்றிப் பேசினேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எதுவும் சொல்லவில்லை. அங்கே இருக்கிற விவசாயிகளுக்கு எந்தவிதமான பயனும் இல்லை. கர்நாடக மாநிலத்திலிருந்தும், ஆந்திர மாநிலத்திலிருந்தும் கோடீஸ்வரர்கள் வந்துதான் அங்கே வேலை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு வந்தபோது, அவர்கள் வாயால் சொன்னது, "இங்கே இருக்கிற வேளாண் ஏழை மக்கள் Floriculture-ஐ use செய்து, கோடீஸ்வரர்களாவார்கள்" என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இன்றைக்கு கோடீஸ்வரர்கள் கர்நாடகத்திலேயிருந்தும், ஆந்திராவிலிருந்தும் வந்திருக்கிறார்கள். அங்கே இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களோடு இதுவரைக்கும் அமைச்சர் அவர்கள் அங்கே நேரில் வந்து Floriculture-ஐப் பார்க்கவில்லை. எங்கள் மாவட்ட ஆட்சித் தலைவரோடு கலந்து பேசி, அங்கேயிருக்கிற விவசாயப் பெருமக்களுக்கு, 1/2 ஏக்கர், 1/4 ஏக்கர்களிலே ரூபாய் 25 இலட்சம், 50 இலட்சம் என்று loan வாங்கிக் கொடுத்து, அவர்களுக்குப் பயன்படுகிற மாதிரி இந்த scheme-ஐ எடுத்து வந்தால்தான் இந்த scheme பயன்படுமேதவிர, மற்றவையெல்லாம் waste. கர்நாடகா, ஆந்திரா மாநிலத்துக்காரர்களுக்குத்தான் இது பயன்படும். அதற்காக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் Assembly முடிந்த பிறகு எங்கள் தொகுதிக்கு --



கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு—வந்து, மாவட்ட ஆட்சித் தலைவரிடம் பேசி, இது எல்லோருக்கும் பயன்படுமாறு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஓசூர் பகுதிக்கு வரவில்லை என்ற ஒரு தவறான கருத்தை, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு வருகை தந்து, அங்கே நல உதவிகளை வழங்கிய அன்றே, அதற்குப் பிறகு மாலை ஓசூருக்கு வந்து அங்கேயிருக்கின்ற வேளாண் பெருமக்களையும், அங்கு மலர் ஏற்றுமதியிலே இருக்கின்ற அந்த தொழிலதிபர்களையும், தொழில் முனைவோர்களையும் சந்தித்து நானும், அந்த மாவட்டத்தினுடைய அமைச்சராகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற பெருமைக்குரிய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், ஏறக்குறைய 3 மணி நேரம் அந்தக் கண்காட்சியையும் பார்த்து, அங்கேயிருக்கின்ற வேளாண் பெருமக்களிடத்திலேயும், தொழில் முனைவோரிடத்திலேயும் நாங்கள் கலந்துரையாடிவிட்டு வந்திருக்கிறோம் என்பதை நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-30

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) தனி தொகுதியில் hill area என்று சொல்லி agricultural lands-க்கு இதுவரைக்கும் பட்டாவே கொடுக்கவில்லை. அங்கே 100 பேர் இருந்தால் 20 பேருக்குத்தான் பட்டா நிலங்கள் இருக்கின்றன. 80 பேர் புறம்போக்கு lands-லேதான் எல்லா வேளாண்மைத் தொழிலையும் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். அதற்காக அந்த 80 per cent மக்களுக்குப் பட்டா கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், இப்போது Kollatty என்ற ஊரிலே 1,000 ஏக்கர் பரப்பளவில் sericulture farm இருக்கிறது. அதில் எந்தவிதமான use-ம் இல்லை. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆட்சியிலே Jatropha சாகுபடி நிரம்ப நன்றாக நடந்துகொண்டிருக்கிறது. அந்த 1,000 ஏக்கர் நிலத்தில் இப்போது Mens' Self Help Group, அதாவது ஆண்கள் சுய உதவிக் குழுக்களுக்கு, ஒவ்வொரு குழுவிற்கும் 5 ஏக்கர்

நிலத்தைக் கொடுத்து அவர்களுக்கு current service கொடுத்து, அந்த Jatropha farm வைப்பதற்கு மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் ஜவுளிகிரி. அங்கே ஒரு floriculture farm, எந்த bank-லேயும் loan வாங்காமல் அவர்கள் சொந்தமாகச் சாகுபடி செய்து, இப்போது floriculture பண்ணி export பண்ணுகிறார்கள். அங்கேகூட ஜவுளிகிரிக்கு அந்த floriculture-க்கு 2.5 கோடி ரூபாய் ஓசூர் தொகுதிக்குக் கொடுத்தது மாதிரி எங்களுக்கும் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் நீங்கள் இப்போது Policy Note-லே schemes under Horticulture – 17 schemes கொண்டு வந்திருக்கிறீர்கள். Schemes under Agricultural Engineering Department–12, Schemes under Agriculture–8, Schemes under Seed Certification–ல் 4. Schemes under Horticulture–7. இவற்றைப் படிப்பதற்கு நிரம்ப நன்றாக இருக்கிறது. கேட்பதற்கும் நிரம்ப நன்றாக இருக்கிறது. ஆனால், மக்களுக்கு 100 per cent இப்போது use ஆகுமா என்று சொன்னால், கண்டிப்பாக அது use ஆகாது. (மணியடிக்கப்பெற்றது) இந்த subsidy கொடுக்கிறீர்கள். இந்த subsidy போய் 100 per cent சேராது. இந்த policy–ஐ நீங்கள் கண்டிப்பாக change செய்யவேண்டும். எப்படியென்றால், இப்போது இலவச current கொடுத்திருக்கிறீர்கள். விவசாயத்திற்கு இலவச current கொடுத்திருக்கிறீர்கள். அது நேரே போய் மக்களைச் சேரும். அதேமாதிரி ஒரு ரூபாய் பால் என்று வைத்திருக்கிறீர்கள். அந்த rate நேராக மக்களைப் போய்ச் சேரும். ஆனால், இந்த policy-ஐ நீங்கள் மாற்றிக்கொள்ளவேண்டும், இப்போது free current கொடுப்பது மாதிரி. Co–operative Bank–லே 9 per cent வட்டிக்கு loan கொடுக்கிறீர்கள். அதையே 3 per cent-ஆக மாற்றிக் கொடுங்கள். அப்போதுதான் மக்களுக்குப் பயன் ஏற்படும். Example–க்கு ஒன்றை எடுத்துக்கொண்டால், cabbage–ஐத் தோட்டத்திலே விளைவித்தால், ஒரு மூட்டை 50 ரூபாய் ஆகிறது. அதை மார்க்கெட்டுக்கு எடுத்துக்கொண்டு வந்து, luggage charges எல்லாம் சேர்த்து 70 ரூபாய் ஆகிறது. ஆனால், மார்க்கெட்டிலே rate இப்போது 30 ரூபாய்தான். 40 ரூபாய் loss வருகிறது. Government–க்கு அந்த rate கட்டுப்படியாகவில்லை. அதற்காக இந்தமாதிரி மார்க்கெட்டுக்குக் கொடுப்பதற்கு, luggage goods–களை மார்க்கெட்டுக்கு எடுத்துச் செல்வதற்கு ஒவ்வொரு யூனியனுக்கும் இரண்டு லாரியோ அல்லது ஒரு பஸ்ஸோ



கொடுத்தால், அந்த 50 per cent subsidy-யிலே அவர்கள் எடுத்துக்கொண்டு போகிற மாதிரி கொடுத்தால், அது நேராகப் போய் விவசாயிகளைச் சேரும். அந்த மாதிரி policy-ஐ நீங்கள் கொண்டு வந்தால்தான் அது நிரம்ப நன்றாக இருக்கும்.

அதேபோல், இப்போது மார்க்கெட்டுகள். கோயம்பேட்டிலே மார்க்கெட் இருக்கிறது. கோயம்புத்தூரிலே மார்க்கெட் இருக்கிறது. ஓசூரிலே மார்க்கெட் இருக்கிறது. Vegetable–களை அவர்கள் கொண்டு வந்தால் அங்கே 10 per cent commission வாங்குகிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) 10 per cent commission வாங்குகிறார்கள், 5 per cent யார் விற்கிறார்களோ அவர்களிடம். வாங்குபவர்களிடம் 5 per cent பிடிக்கவேண்டும். இதை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் வலியுறுத்தி 5 per cent-ஆக ஆக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இப்போது உலகத்திலேயே China-தான் agriculture-ல் முன்னேற்றம் அடைந்திருக்கிறது. எப்படியென்றால், அங்கே cultivation - tractor, power tiller, sprayer ஆகிய இவற்றை யூனியனுக்கு free-ஆகக் கொடுத்து, அவர்கள் diesel மட்டும் போட்டுக்கொள்கிறார்கள். மீதியெல்லாம் free தான். அந்த மாதிரி நீங்களும் கொண்டு வந்தால்தான், இது மக்களுக்கு நேராகப் போய்ச் சேரும். அதற்காக அந்த policy-ஐ மாற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனக்கு பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்ததற்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கு. அன்பழகன்.

***திரு. கு. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

> "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
> தொழுதுண்டு பின்செல் பவர்";
>
> "சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
> உழந்தும் உழவே தலை";
>
> "உழுவார் உலகத்தார்க்கு ஆணி"

என்று தெய்வப் புலவர் வள்ளுவப் பெருந்தகை சொல்லியிருக்கிறார்.

"உழவுக்குந் தொழிலுக்கும் வந்தனைசெய்வோம் — வீணில்
உண்டுகளித் திருப்போரை நிந்தனைசெய்வோம்"

என்று மகாகவி பாரதி பாடியிருக்கிறார். சங்க இலக்கியங்கள் தொட்டு முக்கூடற்பள்ளு வரை வேளாண் தொழிலே முதன்மைத் தொழில் என்பதைக் காணலாம். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்,

"ஒழுங்காய் பாடுபடு வயற்காட்டில்,
உயரும் உன் மதிப்பு அயல்நாட்டில்"

என்று சொல்லியிருக்கிறார்.

முற்பகல் 11-35

நம்முடைய தன்னிகரில்லாத தலைவி, இந்த ஆண்டு தமிழகத்திலே மழைநீர் சேகரிப்பு மற்றும் புதிய குட்டைகள் அமைத்ததன் காரணமாக, தாமிரபரணி நதி பாயும் நெல்லைச் சீமையிலே, வைகைப் புனல் பாயும் மதுரை மண்டலத்திலே, கரையேறி விளையாடும் காவிரி நதி பாயும் திருச்சி, தஞ்சை மண்ணிலே, பாலாறு, தென் பெண்ணை, வட பெண்ணை போன்ற நதிகள் எல்லாம் பாய்கின்ற பல்லவ நாட்டிலே, இந்த ஆண்டு மருத நிலம் எப்படியிருக்கிறது என்பதைப் பார்ப்போமேயானால்,

"தண்டலை மயில்க ளாடத்
தாமரை விளக்கம் தாங்கக்
கொண்டல்கள் முழவி னேங்கக்
குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை எழினி காட்டத்
தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட
மருதம்வீற் றிருக்கு மாதோ!"

என்று கம்பன் சொன்ன அந்தக் கவின்நிலம் இன்றைக்கு மிகப் பெரிய விளைச்சலைத் தந்திருக்கிறது என்று சொல்லலாம். அந்தவகையிலேகூட, நம்முடைய ஒளவைப் பெருந்தகையார் சொன்னார்கள்:



"வரப்புயர நீருய ரும்
நீருயர நெல்லுய ரும்
நெல்லுயரக் குடியுய ரும்
குடியுயரக் கோனுயர் வான்"

என்று நம்முடைய ஒளவைப் பெரும்பாட்டி சொல்லியிருக்கிறார்கள்.

இதைத்தான் நம்முடைய மணிமேகலையில்கூட

"கோல்நிலை மாறின் கோள்நிலை மாறும்"

என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆக, செங்கோல் மாறுமேயானால், வானத்திலே இருக்கிற கோள்கள் எல்லாம் மாறிவிடும். ஆனால், வளையா நீதி கொண்ட புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சித் திறனால் கோள் நிலை மாறாமல், இன்றைக்கு அருமையான மழையை இந்த நாட்டிற்கு வழங்கிய காரணத்தினால், -- மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒன்றரை கோடி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களில் ஒருவனான என்னை இந்த மாமன்ற உறுப்பினராக்கி, இந்த மாபெரும் வேளாண்மைத் துறை மானியத்திலே பேச அனுமதித்த, தமிழ்கூறும் நல்லுலகத்தை ஆளும் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொன்னடி வணங்கிப் பேச விழைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெற்றி வியர்வை நிலத்தில் விழ, காலையில் எழுந்து கூழைக் குடித்துவிட்டு, சுட்டெரிக்கும் வெயிலில், கழனியில், வரப்புகளில், வாய்க்கால்களில், மண்வெட்டியால் மண்ணைப் பெயர்த்து, சேற்று வரப்பு, அரி வரப்பு என்று அழகுபடச் செம்மைப்படுத்தி, நாற்றைப் பிடுங்கி, நடவு நட்டு, களையெடுத்து வாழ்க்கை நடத்தும் விவசாயிகள்.

''எங்கள் தாய்மார்கள் சேற்றிலே கால் வைக்கவில்லை என்றால்,
நீங்கள் சோற்றிலே கை வைக்கமுடியாது''

என்று ஒரு புதுக்கவிஞன் சொன்னான். அதைப்போல, உழைக்கும் வர்க்கம் 86 இலட்சம் விவசாயத் தொழிலாளர்கள் வயிற்றிலே தேனும், தீங்கனிச் சாறும், தெவிட்டாத தெள்ளமுதும் கலந்து ஊட்டினாற் போல, எப்பொழுது சம்பளம் கூடும் என்று சொப்பனம் கண்டவர்களை வகைப்படுத்தி, வரிசைப்படுத்தி, சம்பளம் வரையறை செய்து, உத்தரவிட்ட செம்மலே! தாயே! செந்தமிழே! (மேசையைத் தட்டும் ஒலி)

*"நான் ஆணையிட்டால், அது நடந்துவிட்டால்,*
*இங்கு ஏழைகள் வேதனை படமாட்டார்"*

என்ற பாடல் வரிகளுக்கு உயிர்கொடுத்த உத்தமத் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய ஆயிரங்கோடி நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பேராசிரியர்தான்! (சிரிப்பு)

**திரு. கு. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்கள் அரியாசனத்தில் அமர்ந்து, ஆட்சிச் சக்கரத்தைச் சுழற்றியபோது, ஏழையெளிய விவசாயிகளுடைய கடனுக்கான ரூ.311 கோடி வட்டியையும், அபராத வட்டியையும் தள்ளுபடி செய்தார்கள்.

முற்பகல் 11-40

"கடன்பட்டார் நெஞ்சம்போலக் கலங்கினான் இலங்கை வேந்தன்" என்று கம்பன் சொன்னான். அந்தக் கடன் பெற்ற விவசாயிகளின் கடன் சுமையைக் குறைத்து, அவர்களுடைய நெஞ்சத்திலே நிலைத்து நின்ற தாய், புரட்சித்தாய் அம்மா அவர்கள் என்றால், அதைச் சொல்லி அளவிடமுடியாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் திண்டுக்கல், சேலம், நாமக்கல், திருச்சி, பெரம்பலூர், கடலூர், ஈரோடு, கோவை, திருவண்ணாமலை போன்ற மாவட்டங்களிலெல்லாம் அதிகமாகப் பயிரிடப்பட்டுவரும் மரவள்ளிக் கிழங்கு, விவசாயிகளைப் பாதுகாக்கும் வகையில், மரவள்ளிக் கிழங்கிற்கு நியாயமான விலை கிடைக்க, வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகும் ஸ்டார்ச்சு மற்றும் ஜவ்வரிசிக்கு நூறு சதவிகிதம் இறக்குமதி வரி விதிக்கவேண்டுமென்று மாண்புமிகு பாரதப் பிரதமருக்கு நம்முடைய ஒப்பற்றத் தலைவி, உன்னதத் தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடிதம் எழுதியதற்காக புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு ஆயிரம் கோடி நன்றியை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த கால கருணாநிதியினுடைய ஆட்சியில் வெங்காயம் மற்றும் மரவள்ளிக் கிழங்கிற்கு விவசாயிகள்மீது Cess வரி விதித்ததால், இலட்சக்கணக்கான விவசாயிகள் பாதிக்கப்பட்டார்கள். எனவே, ஒப்பற்றத் தலைவி, உன்னதத் தலைவி, சீண்டியவர்களுக்குச் சிங்கத்



தலைவி, அண்டியவர்களுக்குத் தங்கத் தலைவி அம்மா அவர்கள், கருணாநிதி போட்ட அந்த Cess வரியை நீக்கி, விவசாயிகளின் வாழ்விலே ஒளியேற்ற வேண்டுமென்று அவர்கள் பாதம் பணிந்து வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த தரிசுநில மேம்பாட்டுத் திட்டத்தில் 20 இலட்சம் ஹெக்டேர் தரிசுநிலங்களை ஐந்து ஆண்டுகளில் மக்கள் பங்கேற்புடன் கூட்டாண்மை நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், தொண்டு நிறுவனங்கள்மூலமாக இன்றைக்கு ஐவகை நிலங்கள் என்று சொன்னார்களே, குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை, நெய்தல் என்று சொன்ன அந்தக் காடும் காடுசார்ந்த இடத்தையும், மலையும் மலைசார்ந்த இடத்தையும், வயலும் வயல்சார்ந்த இடத்தையும், கடலும் கடல்சார்ந்த இடத்தையும்,

*"முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து*
*பாலை யென்பதோர் படிவம் கொள்ளும்"*

-நம்முடைய இளங்கோவடிகள் சொன்னார்கள்.

அப்படிப்பட்ட பாலைவன இடத்தையும், அந்த ஐந்து வகை நிலங்களையும் இன்றைக்கு மாஞ்சோலையாக, பூஞ்சோலையாக, மூலிகைச் சோலையாக மாற்றிக்கொண்டு வந்துள்ளதை இந்த நாடறியும்; இந்த நாட்டு மக்கள் அறிந்து கொண்டிருக்கிறார்கள்.

இதன்மூலம், இன்றைக்கு ஒருங்கிணைந்த முந்திரி வளர்ச்சித் திட்டம், ஒருங்கிணைந்த பழப்பயிர் வளர்ச்சித் திட்டம், ஒருங்கிணைந்த நறுமண கலைப்பயிர் வளர்ச்சித் திட்டம், ஒருங்கிணைந்த காய்கறி வளர்ச்சித் திட்டம், ஒருங்கிணைந்த மூலிகை மற்றும் வாசனைப் பயிர்த் திட்டம், ஒருங்கிணைந்த கோக்கோ வளர்ச்சித் திட்டம், வணிக மலர் வளர்ச்சித் திட்டம், காளான் வளர்ச்சித் திட்டம், தோட்டக்கலை விரிவாக்கத் திட்டம் என்று இவை போன்ற திட்டங்களால் இன்றைக்குத் தரிசு நிலத்தை மேம்பாடு செய்து, தமிழக வேளாண் பெருமக்களுடைய உன்னத வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளித்திருக்கிறார்கள், புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

அதுமாத்திரம் அல்ல; தருமபுரி மாவட்டத்திலே கொய்மலர் ஏற்றுமதி மண்டலம் சுமார் 24.85 கோடி மதிப்பீட்டிலே இன்றைக்கு அமைக்கப்பட்டிருக்கிறது. இதன்மூலம், தமிழ் மண்ணிலே மலர்ந்த மலர்க் கொத்துக்கள், நூறு வகையான மலர்க் கொத்துக்களை இன்றைக்கு

ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறார்கள். உதாரணத்திற்கு நான் ஒன்றை மட்டும் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன். நம்முடைய செந்நாப் புலவன் கபிலன், தமிழின் சிறப்பைச் சொல்வதற்காக குறிஞ்சிப் பாட்டிலே 99 பூக்களைச் சொல்வார்கள். அந்த 99 பூக்களையும் இன்றைக்கு நம்முடைய தங்கத் தலைவி புரட்சித் தலைவியினுடைய ஆட்சிக் காலத்திலே, வெளிநாடுகளுக்கு, நம்முடைய தருமபுரி மாவட்டத்திலே அமைந்திருக்கின்ற கொய்மலர் திட்டத்திலே ஏற்றுமதி செய்து ரூ.10.80 கோடி இலாபத்தை எய்தியிருக்கிறார்கள்.

அதுமாத்திரமல்ல; நிலக்கோட்டையில் உணவுப் பூங்கா ரூ.13 கோடி செலவிலே, 600 ஏக்கர் நிலப்பரப்பில் உணவுப் பூங்கா அமைத்து மதுரை, திண்டுக்கல், தேனி மாவட்டங்களில் விளையும் காய்கறி வகைகள், பழவகைகள், மலர் வகைகள் போன்றவற்றை உற்பத்திச் செய்யும் விவசாயிகளின் ஏற்றமிகு வாழ்விற்கு அம்மா அவர்கள் இன்றைக்கு ஒளிவிளக்கு ஏற்றியுள்ளார்கள்.

அதைப்போல, உழவர் நல நிதித் திட்டம். இந்த உழவர் நல நிதித் திட்டத்தின்படி, ஒரு வருடத்திற்கு ஒரு மெட்ரிக் டன் அல்லது அதற்குமேல் விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விற்பனை செய்யும் விவசாயிகள், குத்தகைதாரர்கள் விபத்தின் காரணமாக உயிர் இழக்க நேரிட்டால் அல்லது நிரந்தர ஊனமுற்றால் அவர்களுக்கு 75,000 ரூபாய்வரை உதவி வழங்கப்படும் என்று ஆணையிட்டிருக்கிறார்களே, அவ்வாறு இந்த உலகத்திலே வேறு எந்த அரசாலும் வழங்க முடியாது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முற்பகல் 11-45

அதைப்போல வணிக வளாகம். நெல்மணி வணிக வளாகம் மதுரையில் ரூ.12.60 கோடி செலவிலே அமைக்கப்பட்டு விவசாயிகள், வணிகர்கள் வாழ்விலே மறுமலர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறார்கள். மஞ்சள் வணிக வளாகம் ஈரோட்டிலே ரூபாய் 36.32 கோடி செலவில் அமைத்து, இன்றைக்கு அந்தப் பகுதியிலே மஞ்சள் பயிரிடும் விவசாயிகளுடைய வாழ்விலே ஒளியேற்றி வைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட விவசாயப் பொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை அமைத்து, நம் தமிழகத்திலே சுமார் 273 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை அமைத்து, விவசாயிகளின் விளை பொருட்களின் தரத்தை அறிந்து, அதற்கேற்ற விலை கிடைப்பதை உறுதி செய்ய, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் அமைத்திருக்கிறார்கள்.



விவசாயிகளுக்குப் பொருளீட்டுக் கடன் -- கொள்முதல் செய்யப்படும் விளைபொருளின் மதிப்பில், 50 விழுக்காடு அல்லது ஒரு இலட்சம் இதில் எது குறைவோ அந்தத் தொகையைப் பொருளீட்டுக் கடனாக இன்றைக்கு நம்முடைய தங்கத் தாய் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு கொடுத்துக் கொண்டிருக்கிறது.

ஒருங்கிணைந்த பருத்தி மேம்பாட்டுத் திட்டம்--இந்தத் திட்டத்திலே, குவிண்டாலுக்கு 1000 ரூபாய் மானியம் வழங்கப்பட்டு வந்து கொண்டிருக்கிறது. தாழ்த்தப்பட்ட விவசாயிகள், ஒரு பயிற்சிக்கு 50 விவசாயிகளுக்கு இடைநிலை நிகழ்வுச் செலவாக ரூபாய் 10,000-ஐ வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆதி திராவிட விவசாயிகளுக்குத் தெளிப்பு நீர்ப்பாசனக் கருவிகள் ரூபாய் 50 மானியத்திலே 15,000 வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். கரும்பு அபிவிருத்தித் திட்டம். இப்படிப் பல்வேறு திட்டங்களை வழங்கியிருக்கிறார்கள். எண்ணெய் வித்துக்கள், எண்ணெய் வித்து விதைகள் உற்பத்தி செய்து வழங்குவதற்கு ரூபாய் 500 மானியம் கொடுத்திருக்கிறார்கள். நிலக்கடலை, எள், ஆமணக்கு, சூரியகாந்தி, சோயா, மொச்சை போன்ற பயிர்களுக்கு இடுபொருள் உற்பத்தி செய்பவர்களுக்கு மானியம் 2,000 ரூபாய் வழங்கியிருக்கிறார்கள். இப்படிப் பல்வேறு சிறப்புகளையெல்லாம் செய்திருக்கக்கூடிய நம்முடைய தாயினுடைய அரசைப் பாராட்ட வேண்டும். அதுமாத்திரம் அல்ல; பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நான்கு point-களை மட்டும் சொல்லி, விடைபெறலாம் என்று கருதுகிறேன்.

ஏழைகளின் இதய தெய்வம் உத்தரவின்படி, இந்த ஆண்டு விவசாய மின் இணைப்பு வழங்க 433 கோடி ரூபாயை இந்த அரசு இந்த ஆண்டு வழங்கியிருக்கிறது. ஏழை விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தை வழங்கியிருக்கிறார்கள். ஏழை விவசாயிகளுக்கு இலவச பாலியஸ்டர் வேட்டி சேலைகள், என் தொகுதியிலேகூட கடந்த ஆண்டு 75,000 பாலியஸ்டர் சேலைகளும், 75,000 பாலியஸ்டர் வேட்டிகளும் என்னுடைய கரத்திலே இருந்து ஒவ்வொரு ஊரிலும் நான் வழங்கியிருக்கிறேன்.

அதேபோன்று விவசாயக் கூலிகள், விவசாயிகளுக்கு வறட்சிக் காலத்திற்காக 6 மாத காலம் 30 கிலோ அரிசியை வழங்கிய அரசு, புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு. அதைப்போல தஞ்சைத் தரணியிலே, வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடிய

வள்ளலாரை மிஞ்சுகின்ற வகையிலே விவசாயிகளுக்கு இலவச அரிசியும், பண முடிப்பும் தந்து வள்ளல்களுக்கெல்லாம் வள்ளலாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரிசி பேர ஊழல் செய்து, சன் டி.வி. போன்ற டி.வி.—களை வைத்து இன்றைக்கு உலகக் கோடீஸ்வரர்களாக இருக்கக்கூடியவர்கள் கொள்ளையடிப்பதையே தொழிலாகக் கொண்டு இந்த அரியாசனத்திலே அமர்ந்தார்கள். கடந்த ஆண்டு - இந்த அவைக்கு ஒருவர் வந்தார். வருகின்றபோது 15 மணித்துளிகள் இருக்கும். அவ்வளவு நேரம் சிங்கம்போல நடந்து வருவார் என்று நாங்கள் பார்த்தபொழுது, அங்கே ஒரு பக்கம் முட்டு கொடுத்து, இந்தப் பக்கம் ஒரு முட்டுக் கொடுத்து இரண்டு பேர் சாய்த்து உட்கார வைப்பதுபோல உட்கார வைத்துக்கொண்டு இருந்துவிட்டு, ஐந்து நிமிடத்திலே வெளியே சென்று விட்டார்கள்.

அதுமாத்திரம் அல்ல, பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீடு போ, போ, என்கிறது, காடு வா, வா என்கிறது. இந்த நிலையிலே காவி உடுத்தி கமண்டலம் ஏந்தி வடக்கிலேபோய் சிரவணபெலகுலாவிலே உயிர் நீத்த வரலாறு உண்டு. ஆனால், இப்பொழுதும்கூட ஆட்சிப் பீடத்திலே அமர்ந்துவிடுவோம் என்று கனவு கண்டு கொண்டிருக்கிறார்கள். ஆக அவர்களை எல்லாம் முறியடிக்கின்ற வகையிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மீண்டும் இந்தத் தமிழகத்தை, இந்தப் பொன் தமிழகத்தை, இந்த ஒப்பற்ற தமிழகத்தை ஆளுவார்கள் என்று சொல்லி விடைபெறுகிறேன். நன்றி.

முற்பகல் 11-50

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.எஸ். அருள்.

**திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை"

என்ற குறளுக்கேற்ப, உலகத்தார் எல்லோரும் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாத உணவின் பொருட்டு, உழவரிடமே செல்வர் என்பதற்கிணங்க, இன்றைக்கு மற்ற துறைகளைவிட புத்துயிர்பெற்ற துறையாக வேளாண்மைத் துறையை மாற்றி வருகின்ற மாண்புமிகு



தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்கி, எனது உரையைத் தொடங்குகின்றேன்.

"என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில்
ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்
ஒழுங்காய்ப் பாடுபடு வயல்காட்டில்
உயரும் உன்மதிப்பு அயல்நாட்டில்"

என்ற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பாடல் வரிகளுக்கு ஏற்ப, இன்றைக்குத் தமிழக வேளாண் பெருமக்களின் நிலையை அறிந்து, தேவையை அறிந்து, வேளாண்மைத் துறையிலே மாபெரும் புரட்சிகரமான செயல் திட்டத்தைப் புகுத்தியதன்மூலம், வேளாண்மைத் துறையில் மாபெரும் மறுமலர்ச்சியை உருவாக்கியவர்தான் நமது தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மாற்றுப் பயிர்த் திட்டம், ஒட்டுமொத்த தரிசுநில மேம்பாட்டுத் திட்டம், திறன்மிக்க நீர்ப் பயன்பாட்டை ஊக்குவிப்பதன்மூலம் விவசாய விளை நிலங்கள் பயனடையும் திட்டம், பண்ணை சார்ந்த வேளாண் திட்டம், புதிய தொழில்நுட்பங்களை மேற்கொள்ளுதல், புதிய புதிய தகவல்களை விரைந்து பகிர்ந்து கொள்வதற்குத் தகவல் தொழில்நுட்பத்தைக் கையாளுதல், விவசாயிகளின் விளைபொருட்களுக்குச் சந்தையில் நல்ல விலை கிடைக்கச் செய்தல், விவசாயிகள் பயன்பெற கூட்டுறவுக் கடனுக்குப் புத்துயிர் அளித்தல் போன்ற தொலைநோக்குச் சிந்தனையின்மூலம் இன்றைக்கு மாபெரும் பசுமை மற்றும் வேளாண் புரட்சிக்கு வித்திட்டவர்தான் நமது புரட்சித் தாய் அம்மா அவர்கள். அம்மா அவர்களின் அயராத உழைப்பினாலும், அவரது ஆரோக்கியமான வழிகாட்டுதலாலும், நடப்பு ஆண்டில் உணவு தானிய உற்பத்தி 90 இலட்சம் மெட்ரிக் டன் என்ற இலக்கைவிட கூடுதலாக எட்டும் என்பது உண்மை.

தமிழகத்திலேயே விவசாயிகளுக்காகப் பாடுபடும் இயக்கம் நாங்கள்தான் என்று தம்பட்டம் அடித்துக்கொள்ளும் தி.மு.க. ஆட்சியிலே, இதே மாமன்றத்தில் 1999 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5 ஆம் தேதி பேசிய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் பழனிசாமி அவர்கள், "வாங்குகிற கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில், விவசாயிகள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்; எனவே, விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற கடன் உதவித் திட்டங்களைச் சீரமைக்குமாறும், ஏற்கெனவே வழங்கப்பட்டிருக்கின்ற கடனினுடைய வட்டித் தொகையைத் தள்ளுபடி செய்யுமாறும், ரிசர்வ் வங்கி மற்றும் நபார்டு

வங்கிகள் மத்திய அரசின் உத்தரவைப் பெற்றுள்ளனவா என்று காங்கிரஸ் கட்சியினுடைய நாடாளுமன்ற உறுப்பினர் பாராளுமன்றத்திலே கேள்வி எழுப்புகிறார்; அதற்கு, பயிர் இழப்பு ஏற்பட்டுள்ள நமது நாட்டிலுள்ள பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள், கடனைக் கட்டமுடியாமல், வட்டியைக் கட்டமுடியாமல் தற்கொலை செய்து கொள்கிறார்கள்; இதனைக் கருத்தில் கொண்டு, மத்திய அரசு மேற்கண்ட கடனை, அதனுடைய வட்டியைச் சீரமைக்கின்ற உத்தரவைப் பிறப்பித்துள்ளது என்று டெல்லி மக்களவையில் எழுப்பப்பட்ட கேள்வி–பதில் விவரம் இது" என்று இந்த மாமன்றத்திலே குறிப்பிட்டு, "தமிழகத்திலேயும் வாங்கிய கடனையும், வட்டியையும் கட்டமுடியாமல் விவசாயிகள் அவதிப்படுகிறார்கள்" என்று உறுப்பினர் ஜி. பழனிசாமி அவர்கள் பேசுகின்றபொழுது, அன்றைய முதல்வர், திமுகவினுடைய தலைவர் திரு. கருணாநிதி அவர்கள், குறுக்கிட்டு "கடன் வாங்கினால், திருப்பித் தரவேண்டியதில்லை என்ற சுலோகத்தோடு வங்கிகளைத் தொடங்கலாமா என்று மாண்புமிகு உறுப்பினரை ஆலோசனை கேட்கிறேன்" என்று கூறி, தமிழக வேளாண் பெருமக்கள், வாங்கிய கடனைத் திரும்பக் கட்டமாட்டார்கள் என்ற பொருள்பட இந்த மாமன்றத்திலேயே, விவசாயிகளை, வேளாண் பெருமக்களைக் கேவலப்படுத்தியவர்தான், திரு. கருணாநிதி அவர்கள். ஆனால், விவசாயிகளின் வேதனையைப் புரிந்துகொண்டு, அவர்களது பயிர்க் கடன்கள் மீதான வட்டி, அபராத வட்டியை, மொத்தமாக ரூ.311 கோடியை, எதைப் பற்றியுமே கவலைப்படாமல், தள்ளுபடி செய்து, விவசாயிகளின் வயிற்றில் பால்வார்த்த தலைவிதான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

அதேபோன்று, அன்றைக்கு காங்கிரஸ் உறுப்பினர் திரு. ஞானசேகரன் பேசியபோது, "விவசாயிகளின் வட்டி, அபராத வட்டியை அரசே செலுத்த முற்பட்டாலும்கூட, நபார்டு வங்கி அதற்கு ஒத்துழைப்புத் தரவில்லை என்று மாண்புமிகு முதல்வர் கூறுகின்றார்; ஆனால், அவரது தி.மு.க. ஆளுகின்ற பாண்டிச்சேரியிலேகூட, வாங்கிய அளவிற்கு வட்டியைக் கட்டிவிட்டால், கடனைத் தள்ளுபடி செய்வதற்கான திட்டத்தை அங்கே அறிவித்திருக்கிறார்கள்; அதற்கு நபார்டு எந்தவிதமான தடையும் விதிக்கவில்லை" என்று பேசியபோது, இடையிலே குறுக்கிட்ட அன்றைய முதல்வர் திரு. கருணாநிதி அவர்கள், "உறுப்பினர் ஞானசேகரன் அவர்களே, பாண்டியிலே கடனை இரத்து செய்தால் ரூபாய் 45 இலட்சம்தான் இழப்பு. ஆனால், நாம் தமிழகத்திலே இரத்து செய்தால் ரூபாய் 47 கோடியை இழக்கின்றோம்"



என்று கிண்டலடித்துப் பேசி, விவசாயிகளை வஞ்சித்தவர்தான், வயிற்றிலடித்தவர்தான் திரு. கருணாநிதி அவர்கள். ஆனால், எவ்வளவு கோடி இழப்பு என்று கணக்குப் பார்க்காமல், இலட்சக்கணக்கான விவசாயிகளின் இதயத்தை, அவர்களது வாழ்க்கை நிலையை உணர்ந்து பார்த்து, ரூபாய் 311 கோடியைத் தள்ளுபடி செய்த தாயுள்ளம் கொண்ட ஒரே முதல்வர், நமது தமிழக முதல்வர் அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட கொடையுள்ளமும், இரக்க சிந்தனையும் கொண்ட அம்மா அவர்களுக்கு தமிழக விவசாயப் பெருங்குடி மக்கள் என்றென்றும் நன்றியுடையவர்களாக இருக்க வேண்டுமென இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-55*

வேளாண்மைத் துறையிலே, இன்றைக்குத் தோட்டக்கலைத் துறைக்கு மிகுந்த முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. அதிக அளவு நீரைப் பயன்படுத்தி, குறைந்த மதிப்புள்ள பயிர்களைச் சாகுபடி செய்யும் நிலையை மாற்றி, குறைந்த அளவு நீரைப் பயன்படுத்தி அதிக மதிப்புள்ள தோட்டக்கலைப் பயிர்களைச் சாகுபடி செய்யும் நிலையை இன்றைக்கு உருவாக்கிக் காட்டியவர், நமது முதல்வர் அம்மா அவர்கள். தற்சமயம் தமிழ்நாட்டில் 12 உழவர் பயிற்சி மையங்கள் வேளாண்மைத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன. மாண்புமிகு அம்மா அவர்களின் தொலைநோக்குப் பார்வையால், 2005-2006 ஆம் ஆண்டில், திருவண்ணாமலை, நாமக்கல், கரூர், பெரம்பலூர், திண்டுக்கல், தேனி, சிவகங்கை, விருதுநகர், தூத்துக்குடி, கிருஷ்ணகிரி மற்றும் நீலகிரி மாவட்டம் ஆகிய இடங்களில் புதிதாகத் தொடங்கப்படவுள்ள 11 உழவர் பயிற்சி மையங்களை, அதிக அளவில் விஞ்ஞானிகளைக் கொண்ட தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டில் செயல்பட்டால், மாண்புமிகு அம்மா அவர்களின் முத்தாய்ப்பான திட்டத்தின்மூலம் விவசாயிகள் நேரடியாக பயன்பெற முடியும். எனவே, இந்த உழவர் பயிற்சி மையங்களை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டில் இயங்க நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு அம்மா அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு, வெற்றிகரமாகச் செயல்பட்டுவரும், ஒருங்கிணைந்த தரிசுநில மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம், உழவர்கள் தங்களுக்குச் சொந்தமான

தரிசுநிலங்களை, பசுமை சாகுபடியின்கீழ் கொண்டு வந்துள்ளனர். இந்த நிதியாண்டில், மட்டும் 1.5 இலட்சம் ஏக்கர் நிலங்களில் மர வகைகள், தீவனப் பயிர்கள் ரூ. 3.5 கோடி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும் என்ற அறிவிப்பினை மகிழ்ச்சியோடு நான் வரவேற்கின்றேன். உழவர்களின் உற்பத்திப் பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்க, அவர்களுக்குப் புதிய அங்காடிகள் அவசியம் தேவை என்பதை உணர்ந்த மாண்புமிகு அம்மா அவர்கள் 65.34 கோடி ரூபாய் செலவில், ஓசூர், ஊட்டி, தேனி ஆகிய இடங்களில் வேளாண் ஏற்றுமதி மண்டலங்களை ஏற்படுத்தியதைப் போல, மிகவும் பின்தங்கிய மாவட்டமான எங்களது மாவட்டத் தலைநகரான கடலூரில் 10.36 கோடி ரூபாய் செலவில் முந்திரிக்கான புதிய வேளாண் ஏற்றுமதி மண்டலம் ஒன்றை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவித்துள்ள எங்களது இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு, கடலூர் மாவட்ட முந்திரி பயிரிடும் வேளாண் பெருமக்கள் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியினைக் காணிக்கையாக்குகிறேன்.

விண்ணின் நீர்த் துளி -- மண்ணின் உயிர்த் துளி, என்பதற்கிணங்க, மாண்புமிகு அம்மா அவர்களால் தொடங்கப்பட்ட மழைநீர் சேகரிப்புத் திட்டத்தினால், இன்றைக்குத் தமிழகத்திலே உள்ள நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்துள்ளதோடு, மண்ணின் ஈரத் தன்மையைக் காத்து, வறட்சியிலிருந்து பாதுகாப்பு அளிக்கும் பண்ணை முறை வேளாண்மைக்கு உயிரோட்டம் அளித்துள்ள அம்மா அவர்களைப் பாராட்ட, வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு 66 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவு உள்ள நிலத்தை உள்ளடக்கிய 13,206 நீர்வரத்துப் பகுதி திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படுவதன்மூலம், மண்ணின் வளமும், பயிர் வளமும் செழித்தோங்கும் என்பதில் எந்த அளவிற்கும் ஐயமில்லை. கடந்த காலங்களில் தொடர்ச்சியாக நிலவிய வறட்சியால், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, மாபெரும் பாதுகாப்பு அரணாக விளங்கிக் கொண்டிருக்கும், விவசாயிகளின் நலன் காக்கும் அரசுதான், மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலான அரசு. 2004 ஆம் ஆண்டு அக்டோபர்–நவம்பர் மாதங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குத் தேவையான உதவிகளை வழங்கியதோடு, அவர்களது கூட்டுறவுக் கடன் அமைப்பு முறைகளை முற்றிலும் மாற்றி, 31-3-2004 நிலவரப்படி மொத்தம் 2,598 கோடி ரூபாய் அளவிற்குக் கூட்டுறவு வங்கிகளுக்கு நிலுவையாக இருந்த பயிர்க் கடன்கள் மற்றும் அக்கடன்களுக்கான வட்டி ஆகியவற்றினைத் திருப்பிச்



செலுத்துவதற்கான காலக்கெடுவை மாற்றியமைத்து, விவசாயிகள் புதிய பயிர்க் கடன்கள் பெறுவதற்கு வகை செய்து, விவசாயிகளின் விழிநீரைத் துடைத்த ஒரே தலைவிதான், எங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

கர்நாடகம் தொடர்ந்து தமிழகத்தை, தமிழகத்தின் விவசாயப் பெருங்குடிமக்களை வஞ்சித்து வருகின்றது. அகண்ட காவிரி, இன்று வறண்ட காவிரியாக இருப்பதற்குக் காரணம், தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதியின் சரணாகதி தத்துவமே என்பதை இந்த நேரத்திலே நான் பதிய வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"ஓடிவரும் காவிரியைத் தடுக்காதே
ஒருமைப்பாட்டுணர்வைக் கெடுக்காதே
மாற்றான்தாய் போக்கில் மத்திய அரசு
மண்டியிடும் போக்கில் மாநில அரசு
யாரை நம்பி நீரைக் காப்பது
நீரைக் காக்க உடனே புறப்படு"

என்று ஆட்சி, அதிகாரம் இல்லாத நேரத்தில், உடன்பிறப்புக்கு கடிதம் எழுதுவார், ஊரெல்லாம் சுற்றிவந்து ஊளையிடுவார். ஆனால், ஆட்சிக்கு வந்தவுடன், காவிரியை மறந்துவிடுவார். பெங்களூரில் உள்ள சூரியா டி.வி., உதயா டி.வி.யை நினைத்துக்கொள்வார். காலத்துக்கு ஏற்றவாறு தனது நிறத்தை மாற்றிக்கொள்ளும் காகிதப் பூ கதாநாயகன் திரு. கருணாநிதி, காவிரி நீர்ப் பிரச்சினையில் தொடர்ந்து துரோகம் இழைத்து வருகிறார்.

நண்பகல் 12-00

"நடந்தாய் வாழி காவேரி" - என்று இளங்கோ அடிகளால் சிலப்பதிகாரத்தில் பாராட்டப்பட்ட, காவிரித் தாயின் கால்கள் இன்று முடமாக்கப்பட்டு, கர்நாடகத்திலே கட்டிப் போடப்பட்டுள்ளது. இதனால் தீர்க்கப்படாத இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்ற இலட்சிய நோக்கத்தோடு, தமிழகத்துக்கு நியாயமாக வழங்கப்பட வேண்டிய நீரைக் கர்நாடகம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, 1991-96-ல் முதல்வராக இருந்த அம்மா அவர்கள், புரட்சித் தலைவர் நினைவிடம் அருகே உண்ணாவிரதம் மேற்கொண்டார்கள். இதன் விளைவாக, அன்றைய மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சர்

திரு. வி.சி. சுக்லா அவர்கள், நேரில் சென்னை வந்து, அம்மா அவர்களைச் சந்தித்து, இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும்பொருட்டு, "கண்காணிப்புக் குழு", "அமலாக்கக் குழு" என்ற இரண்டு குழுக்களை அமைத்து, சரியானத் தீர்வுக்கு வழி வகுத்தார். இடையிலே வந்த தி.மு.க. ஆட்சியாளர்கள், அந்தத் தீர்வையும் குழிதோண்டிப் புதைத்து, தஞ்சை மாவட்ட, காவிரி டெல்டா பகுதி விவசாயிகளுக்குத் துரோகம் இழைத்தார்கள். காவிரி நீர்ப் பிரச்சினையிலே, தமிழகத்துக்குத் துரோகம் செய்யும் கர்நாடக அரசைக் கண்டிக்க தைரியம் இல்லாத மத்திய அரசைக் கண்டித்து, அன்றைக்கு மத்திய அமைச்சரவையிலே அங்கம் வகித்த, மாண்புமிகு அம்மா அவர்கள்மீது மிகுந்த மரியாதை வைத்திருந்த திரு. வாழப்பாடி இராமமூர்த்தி அவர்கள், தனது பதவியை இராஜினாமா செய்தார். அந்தப் பச்சைத் தமிழருக்கு இருந்த தமிழ் உணர்வு இன்றைக்கு மத்தியிலே அமைச்சர்களாக இருக்கும் தி.மு.க., காங்கிரஸ், பா.ம.க. அமைச்சர்களுக்கு வருமா என்று கேட்க ஆசைப்படுகிறேன். தங்களது அமைச்சர் பதவியை இராஜினாமா செய்யக்கூடத் தேவையில்லை; தமிழகத்தைச் சேர்ந்த 40 நாடாளுமன்ற உறுப்பினர்களும், ஒரே ஒரு நாள் பாராளுமன்றத்துக்கு வெளியே காவிரி நீருக்காக தர்ணா செய்யத் தயாரா என்று நான் அறிய விரும்புகின்றேன். ஆனால், தான் எடுத்துக்கொண்ட இலட்சியத்தை அடைவதற்காக, தமிழக மக்களின் நலனைப் பேணிப் பாதுகாப்பதற்காக, விவசாயிகளின் கண்ணீரைத் துடைப்பதற்காக, தொழிலாளர்களின் துயரத்தைக் களைவதற்காக தான் ஆதரித்தாலும், ஆதரிக்காவிட்டாலும், குறுக்கே தடைகளாக இருக்கும் மத்திய அரசின் இரும்புத் திரையைக் குத்திக் கிழிக்கும் ஆற்றல் படைத்த கரங்களுக்குச் சொந்தக்காரர், எங்களது இந்திய நாட்டின் "இரும்புப் பெண்மணி" அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த நேரத்திலே ஒரு முக்கியமான கருத்தை இந்த அவையிலே பதிய வைக்க விரும்புகிறேன். நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்பு, அதாவது 13-02-2004 அன்று சென்னைக்கு வருகை தந்து, காமராஜர் சிலை திறப்பு விழாவிலே பேசிய காங்கிரஸ் தலைவி திருமதி சோனியா காந்தி, "காவிரிப் பிரச்சினைக்குக் காரணம் பிரதமர் வாஜ்பாய்தான்; அவர் நினைத்திருந்தால் தமிழகத்துக்குக் காவிரி நீரைக் கொண்டு வந்திருக்கலாம்; காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால், காவிரிப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும்" என வாக்குறுதி அளித்தார். இன்றைக்கு மத்தியிலே காங்கிரஸ் ஆட்சிதான் நடைபெறுகிறது. காவிரிப் பிரச்சினைக்குத் தீர்வு காண திருமதி சோனியா காந்தி முன்வந்தாரா?



1968 ஆம் ஆண்டு முதல் 1990 ஆம் ஆண்டுவரை காவிரிப் பிரச்சினை தொடர்பாக, 26 முறை பேச்சுவார்த்தை நடந்துள்ளது. அப்போதெல்லாம் சில வருடங்களைத் தவிர, மற்ற ஆண்டுகள் எல்லாம், காங்கிரஸ் கட்சிதான் மத்தியிலே ஆட்சியில் இருந்தது. 1988 ஆம் ஆண்டு நடந்த பேச்சுவார்த்தையில் சுமூக முடிவு ஏற்படக்கூடிய சூழல் ஏற்பட்டது. அப்போது தமிழகத்தில் ஜனாதிபதி ஆட்சி நடந்தது. மத்தியில் காங்கிரஸ் ஆட்சிதான் நடந்தது. அதைத் தொடர்ந்து, 1989 ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதத்தில் பேச்சுவார்த்தை நடந்தது. அப்போது கர்நாடகத்தில் திரு. எஸ்.ஆர். பொம்மை ஆட்சி கலைக்கப்பட்டு, ஜனாதிபதி ஆட்சி அமலில் இருந்தது. மத்தியில் காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்தது. இதுபோல், 1988 ஆம் ஆண்டும், 1989 ஆம் ஆண்டும் தமிழகம்–கர்நாடகத்தில் ஜனாதிபதி ஆட்சியும், மத்தியில் காங்கிரஸ் ஆட்சியும் நடைபெற்ற அரிய வாய்ப்பான இரண்டு சந்தர்ப்பங்கள் கிடைத்தும், காங்கிரஸ் கட்சி காவிரிப் பிரச்சினைக்குத் தீர்வு காண முன்வரவில்லை. எனவே, தி.மு.க.-வோடு சேர்ந்து, காங்கிரசும் தமிழக விவசாயிகளுக்குக் காவிரிப் பிரச்சினையிலே துரோகம் செய்துள்ளது என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

அதேபோல கர்நாடகம், ஹேமாவதி அணை கட்டிக்கொள்ள தமிழக அரசுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என அப்போது முதல்வராக இருந்த திரு. கருணாநிதி, 1970 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 6 ஆம் தேதி இதே மாமன்றத்தில் பேசியதன்மூலம், தமிழகத்திற்கு மாபெரும் துரோகம் இழைத்துள்ளார் என்பதை நான் இந்த நேரத்திலே பதிய வைக்க ஆசைப்படுகின்றேன். எனவே, எந்த நிலையிலும் தன் நிலை தாழாமல் தமிழக விவசாயிகளின் நலனுக்காக, தன்னையே அர்ப்பணித்துக்கொண்ட ஒரே தலைவி எங்களின் 'காவிரி தந்த கலைச்செல்வி' மாண்புமிகு அம்மா அவர்கள் ஒருவர்தான் என்பதை நெஞ்சம் நிமிர்த்தி பெருமையோடு கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த நேரத்திலே மாண்புமிகு அம்மா அவர்களுக்குப் பணிவான வேண்டுகோளைத் தங்களது பாத மலரடியில் சமர்ப்பிக்கின்றேன். அம்மா அவர்களே, எங்களது கடலூர் மாவட்டத்தின் மக்கள் தொகை 22,80,530 ஆகும். இதில் விவசாயிகள் 1,90,482 பேர். விவசாயத் தொழிலாளர்கள் 4,54,614 பேர். மொத்த சாகுபடி பரப்பு 2,71,937 ஹெக்டேராகும். நிகர சாகுபடி பரப்பு 2,11,632 ஹெக்டேர் ஆகும். காவிரி டெல்டாவின் கடைமடைப் பாசனப் பகுதியாக சிதம்பரம் மற்றும் காட்டுமன்னார்குடி வட்டங்கள் விளங்குகின்றன. எனவே, மாண்புமிகு அம்மா அவர்கள்

எங்கள் பகுதி விவசாயப் பெருமக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று, சிதம்பரம் – காட்டுமன்னார்குடி பகுதியைக் காவிரி டெல்டா பகுதியாக அறிவிக்க வேண்டும் என இந்த நேரத்திலே பணிவுடன் வேண்டுகின்றேன்.

*2003-2004* ஆம் ஆண்டிலே *616.59* கோடி ரூபாயும், *2004-2005* ஆம் ஆண்டிலே *1037.68* கோடி ரூபாயும் விவசாயிகளுக்குப் பயிர்க் கடனாக வழங்கி, அவர்களின் வாழ்க்கையிலே மறுமலர்ச்சியை உண்டாக்கியவர் நமது அம்மா அவர்கள்.

*பிற்பகல் 12-05*

எனது தொகுதியிலே அமைந்துள்ள சேத்தியாதோப்பு கூட்டுறவுச் சர்க்கரை ஆலை மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியிலே இன்றைக்கு இலாபகரமான ஆலையாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த அவையிலே தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். *2001-2002* ஆம் ஆண்டில் ரூ.*22.8* இலட்சம் இலாபமும், இடையே *2002-2003* ஆம் ஆண்டிலே ரூ.*259.32* இலட்சம் நட்டம் ஏற்பட்டாலும்கூட, அதனை ஈடுகட்டுகின்ற வகையிலே *2003-2004* ஆம் ஆண்டில் ரூபாய் *439.58* இலட்சமும், *2004-2005* ஆம் ஆண்டில் ரூபாய் *684.85* இலட்சமும் இலாபம் பெற்று மாபெரும் சாதனை படைத்துள்ளது.

அதேபோன்று, *2001-2002* ஆம் ஆண்டில் *4,26,797* டன்னும், *2002-2003* ஆம் ஆண்டில் *4,12,670* டன்னும், *2003-2004* ஆம் ஆண்டில் *2,94,491* டன்னும்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. பி.எஸ். அருண்:** *2004-2005* ஆம் ஆண்டில் *2,74,338* டன் கரும்பு அரைவை செய்யப்பட்டுள்ளது. கரும்பு அரைவையின்மூலம் பெறப்பட்ட கரும்புச் சக்கையில் இருந்து *2001-2002* ஆம் ஆண்டில் *75,22,200* யூனிட்டும், *2002-2003* ஆம் ஆண்டில் *82,01,320* யூனிட்டும், *2003-2004* ஆம் ஆண்டில் *55,12,400* யூனிட்டும், *2004-2005* ஆம் ஆண்டில் *58* இலட்சத்து *73* ஆயிரத்து...



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அருள், மீதிக் கணக்கை அவர் சொல்வார். நீங்கள் சீக்கிரம் உரையை முடித்து விடுங்கள். (குறுக்கீடு) அமைச்சர் சொல்வார். (குறுக்கீடு)

**திரு. பி.எஸ். அருள்:** இந்தக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் செயல்பாடு, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் மேம்படுத்தப்பட்ட காரணத்தால் *2004* ஆம் ஆண்டிற்கான மாநில அளவிலான சிறந்த கரும்பு விவசாயிகள் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த ஆலை என்ற சிறப்பு விருதை, கடந்த *20-11-2004* அன்று, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர், ஆக மூன்று அமைச்சர்கள் இந்த விருதினை வழங்கியுள்ளனர். அதேபோன்று, *12-3-2005*-ல் இந்தக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை I.S.O. என்கின்ற தரச் சான்றிதழையும் பெற்றுள்ளது என்றால், அதற்குக் காரணம் மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலேயாகும் என்பதைப் பெருமையோடு குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களிடம் ஒரே ஒரு நிமிடத்திலே என்னுடைய தொகுதியினுடைய கோரிக்கையைக் கூறிவிடுகின்றேன். எனது புவனகிரி தொகுதியில் அமைந்துள்ள புதுச்சத்திரம், புவனகிரி காவல் நிலையக் கட்டடங்கள் மிகவும் பழமை வாய்ந்ததனவாகும். கட்டடங்கள் பழுதடைந்த நிலையில் உள்ளன. மழைக் காலங்களில் மழைநீர் கசிந்து ஆவணங்களுக்குச் சேதம் விளைவிப்பதோடு காவலர்கள், காவல் நிலையத்தில் அமர்ந்து பணிபுரிய மிகவும் சிரமப்படும் சூழல் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், மற்றவற்றை அமைச்சரிடம் எழுதிக் கொடுத்து விடுங்கள். அடுத்து, திரு. பி.கே.டி. நடராஜன். (குறுக்கீடு) முடித்து விடுங்கள்.

**திரு. பி.எஸ். அருள்:** கடலூர் மாவட்டம், வடலூரிலிருந்து சேத்தியாதோப்பு குறுக்கு ரோடு வரை அமைந்துள்ள சாலை -- எனது தொகுதிக்கு உட்பட்ட கரைமேடு கிராமத்திலிருந்து சேத்தியாதோப்பு குறுக்கு ரோடு வரையும், அதேபோன்று, சேத்தியாதோப்பு குறுக்கு ரோடிலிருந்து புவனகிரி பேருந்து நிலையம் வரையும் உள்ள சுமார் 21 கிலோ மீட்டர் சாலை -- மிகவும் மோசமான நிலையில் உள்ளது. அதையும் சீர்செய்து தர வேண்டுமென்று அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். சேத்தியாதோப்பு [illegible]



186238
சென்னை-600 009

அமைந்துள்ள குறுகிய பாலமானது பலநூறு ஆண்டுகளுக்கு முன் வெள்ளையர்கள் ஆட்சியில்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எழுதிக் கொடுத்துவிடுங்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. பி.எஸ். அருள்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. இந்த வேளாண்மைத் துறை மானியத்தில் பேசுவதற்கு எனக்கு அனுமதி அளித்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், தங்களுக்கும் நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.கே.டி. நடராஜன்.

**திரு. பி.கே.டி. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க் கியல்பு"

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க, வறுமையால் வாடிய தமிழகத்தைத் தன் கொடைத் திறத்தால், வன்முறை நாடாக இருந்த தமிழகத்தைத் தன் துணிவால், வலுவிழந்த தமிழகத்தை வளமாக்கிட, தன் அறிவூக்கத்தால், 'ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்ற அறிஞர் அண்ணாவின் கூற்றுக்கிணங்க, அவர்தம் கொள்கையையும், புகழையும் ஒருங்கே பெற்ற பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கண்ட கனவுகளை நனவாக்கிட, தன் வெண்கொற்றக் குடையின்கீழ் தமிழகத்தைச் சீரும், சிறப்புமாக ஆட்சி செய்யும் தமிழகத்தின் விடிவெள்ளியே! (மேசையைத் தட்டும் ஒலி) ஆறரை கோடி தமிழ் மக்களின் இதய சிம்மாசனத்தில் கொலு வீற்றிருக்கும் எங்களது இதய தெய்வமே! வீரமே நெஞ்சில் கொண்டு வேங்கைபோல் நிமிர்ந்து நின்று, தீரமே கொண்டு வாழும் தீர்க்கதரிசியே! சுற்றிவந்த பகை முடித்து, சூழ்ந்து வந்த சதி அழித்து, வெற்றி எனும் தேர் ஏறி, வீர உலா வரும் எங்கள் தாயே, இயக்கத்தில் உண்மைக்கும், விசுவாசத்திற்கும் தெய்வமாக அருள்பாலிக்கும் எங்களது அன்னையே, வீணர்களை வீழ்த்தி, தமிழர்களைக் காப்பாற்றும் சமூக நீதி காத்த வீராங்கனையே. (மேசையைத் தட்டும் ஒலி) முதல்வர்களுக்கெல்லாம் முதல்வரே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே, தங்கள் பொற்பாதம் பணிந்து வணங்கி மகிழ்ந்து வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையில் என் கருத்துகளை எடுத்துவைக்க விழைகின்றேன்.



பிற்பகல் 12-10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"வரப்புயர நீருய ரும்,
நீருயர நெல்லுய ரும்,
நெல்லுயரக் குடியுய ரும்,
குடியுயரக் கோனுயர் வான்"

என்ற அனுபவ மொழிக்கேற்ப, வேளாண்மைத் துறை என்பது, ஒரு மாநிலம் அனைத்துத் துறைகளிலும் செழிப்புற்றிருக்க, 'ஆல் போல் தழைத்து, அருகு போல் வேரூன்ற' ஆணிவேர் போன்றதாகும். இதனையே கருத்தில்கொண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் கடுமையான நிதி இடர்பாடுகளுக்கிடையே ஆட்சிப் பொறுப்பு ஏற்றிருந்தாலும், 'கடன்பட்டார் நெஞ்சம்போலக் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்று அந்தக் காலத்தில், 'கடன்பட்ட நெஞ்சம் ஆளுகின்ற அரசராக இருந்தாலும் கலங்கும்' என்று சுட்டிக்காட்டியதை மனத்தில்கொண்டு, கடந்த தி.மு.க. ஆட்சியில் வேளாண் பெருமக்கள் பட்ட துன்பங்களையும், துயரங்களையும், இன்னல்களையும், வேதனைகளையும் நீக்குகின்ற வகையிலே, ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடனேயே, ஒரு நாட்டின் வலிமைக்கும், மக்களின் மகிழ்ச்சிக்கும், வளர்ச்சிக்கும் வேளாண்மைத் துறை அடித்தளமாக அமையும் என்பதற்காக, மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த முயற்சிகள் ஏராளம், ஏராளம்; அதனால், விளைந்திட்ட திட்டங்கள் ஏராளம், ஏராளம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'உழவன் உள்ளத்தில் புயல் வீசினால் அவன் வயலில் வளம் காண இயலாது' என்று இம்மாமன்றத்தில் கூறினார் பேரறிஞர் அண்ணா அவர்கள். அதைப்போல, இந்திய விவசாயி 'கடனிலே பிறக்கிறான், கடனிலே வாழ்கிறான், கடனிலே சாகிறான்' என்ற நிலைக்கு, தமிழகத்தில் முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள், இம்மாமன்றத்தில் கூறியதை நிலைநிறுத்துகின்ற வகையிலே நமது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கூட்டுறவுக் கடன் வாங்கிய அனைத்து வேளாண் பெருமக்களுக்கும் 311 கோடி ரூபாய் வட்டி மற்றும் அபராத வட்டியைத் தள்ளுபடி செய்தார்கள். அப்படிப்பட்ட அரசு, மாண்புமிகு அம்மாவின் அரசு ஒன்று மட்டுமே. (மேசையைத் தட்டும் ஒலி)

கடுமையான வறட்சி தமிழகத்தில் ஏற்பட்ட நேரத்தில் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயப் பெருமக்களுக்கும் வறட்சி நிவாரண நிதி வழங்கியது மாண்புமிகு அம்மாவின் அரசு ஒன்று மட்டுமே. (மேசையைத் தட்டும் ஒலி)

வறுமையில் வாடிய ஏழை விவசாயிகளுக்கு மதிய உணவிற்காக இலவச அரிசி வழங்கும் திட்டம் கொண்டு வந்தது மாண்புமிகு அம்மாவின் அரசு ஒன்று மட்டுமே. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தில் உள்ள அனைத்து விவசாயிகளும் பயன்பெறுகின்ற வகையில், இதுவரையில் இல்லாத அளவிற்கு வரத்து வாய்க்கால், குளங்கள் தூர் வாரப்பட நிதி ஒதுக்கியது, மாண்புமிகு அம்மாவின் அரசு ஒன்று மட்டுமே. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் குறிப்பாக மலைத் தோட்ட விவசாயிகளுக்கு விவசாய வருமான வரி தள்ளுபடி செய்தது, மாண்புமிகு அம்மாவின் அரசு ஒன்று மட்டுமே. (மேசையைத் தட்டும் ஒலி)

காவிரி டெல்டா விவசாயத் தொழிலாளர்களுக்குச் சிறப்பு நிவாரண வேலைவாய்ப்புத் திட்டத்திற்காக ரூ.16.5 கோடி ஒதுக்கியது, மாண்புமிகு அம்மாவின் அரசு ஒன்று மட்டுமே. (மேசையைத் தட்டும் ஒலி)

கடுமையான வறட்சி தமிழகத்தில் ஏற்பட்ட நேரத்தில், சென்னை நீங்கலாக மற்ற 28 மாவட்டங்களையும் வறட்சி மாவட்டங்களாக அறிவித்து, நில வரி, தல வரி, தல மேல் வரியை இரத்துச் செய்தது, மாண்புமிகு அம்மாவின் அரசு ஒன்று மட்டுமே. (மேசையைத் தட்டும் ஒலி)

தென்னை விவசாயிகளுக்குத் தென்னை மரம் பட்டுப் போனால் மரம் ஒன்றுக்கு 150 ரூபாய் வழங்கியது, மாண்புமிகு அம்மாவின் அரசு ஒன்று மட்டுமே. (மேசையைத் தட்டும் ஒலி)

ஆதரவற்ற விவசாயிகளின் நிலத்தில் உள்ள நீர்வற்றிப் பாழடைந்துபோன கிணறுகளை இலவசமாக ஆழப்படுத்தும் திட்டம் தந்தது, மாண்புமிகு அம்மாவின் அரசு ஒன்று மட்டுமே. (மேசையைத் தட்டும் ஒலி)

கடுமையான வறட்சி தமிழகத்தில் ஏற்பட்ட நேரத்தில், ஏழை விவசாயத் தொழிலாளர்கள் வறுமையால் வாடியதை அறிந்து 'வேலைக்கு உணவளிக்கும் திட்டம்' கொண்டு வந்து 559 கோடி ரூபாய்



நிதி ஒதுக்கீடு செய்து, ஏழை விவசாயத் தொழிலாளர்களின் வயிற்றில் பாலை வார்த்தது, மாண்புமிகு அம்மாவின் அரசு ஒன்று மட்டுமே. (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-15*

ஆதரவற்ற விவசாயிகள், அனாதையாக போட்டிருந்த நிலங்களைத் தேர்வு செய்து, தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், பல கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து இலவசமாக நிலங்களைச் சீரமைத்துக் கொடுத்து, ஆதரவற்ற விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றி வைத்தது, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

மாமரம், மலர்கள் பயிரிடுகின்ற வேளாண் பெருமக்களின் வாழ்க்கையில் வசந்தம் பெறுகின்ற வகையில் மலர்கள் ஏற்றுமதிக்காக, ஓசூரில் ரூ.2.5 கோடி மதிப்பீட்டிலும், நீலகிரியில் ரூ.16 கோடி மதிப்பீட்டிலும், மாம்பழம் ஏற்றுமதிக்காக ஆறு தென் மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் தேனியில் ரூ.2.5 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், வேளாண் ஏற்றுமதி மண்டலங்கள் அமைத்தது, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

முந்திரி பயிரிடுகின்ற விவசாயிகள் வளம் பெறுகின்ற வகையில், முந்திரி ஏற்றுமதிக்காக கடலூரில் 10 கோடி ரூபாய் செலவில் புதிய வேளாண் ஏற்றுமதி மண்டலம் அமைக்க உத்தரவு வழங்கியுள்ளது, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

மழைநீர் சேகரிப்புத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தி, தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் நிலத்தடி நீர் மட்டத்தை உயரச் செய்தது, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டையில் 13 கோடி ரூபாய் செலவில், உணவுப் பூங்கா அமைக்க உத்தரவிட்டது, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஒன்று மட்டுமே. (மேசையைத் தட்டும் ஒலி) ஈரோட்டில் 36 கோடி ரூபாய் செலவில், மஞ்சள் வணிக வளாகம் அமைக்க நிதி ஒதுக்கியது, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தின் குக்கிராமங்களில், பண்ணைக் குட்டைகள் அமைத்துக் கொடுத்தது, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு. புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலமாக, வேளாண் சார்ந்த பொருட்களை

வைத்து ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒரு கோடி ரூபாயில் தொழிற்சாலைகளை உருவாக்கி வருவது, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு.

உழவர்கள் வாங்கிய பயிர்க் கடனை ஐந்து ஆண்டுக் காலம் கட்டுவதற்கு நீட்டிப்புச் செய்தபின், வாங்கிய கடன் இருக்கவே, புதிய பயிர்க் கடன் வழங்கி வருவது, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஒன்று மட்டுமே. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக விவசாயிகளின் நலன் கருதி, குறைவான நீரில், குறைவான செலவில் நிறைவான வருமானம் பெற மாற்றுப் பயிர்த் திட்டம் வகுத்து இனிப்புச் சோளம், சர்க்கரைக் கிழங்கு, காட்டாமணக்கு போன்ற பயிர்களைப் பயிரிடச் செய்து விவசாயிகளின் கண்ணீரைத் துடைக்க பாடுபட்ட அரசு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

உழவர்கள், நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கின்ற வகையில், சொட்டு நீர்ப் பாசனத் திட்டத்திற்குப் பல கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, அரசு மானியத்துடன் கடன் வழங்கி விவசாயிகளின் வாழ்வில் மறுமலர்ச்சியை உருவாக்கியது, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

நடப்பு நிதியாண்டில், 11 மாவட்டங்களில், உழவர் பயிற்சி மையங்கள் உருவாக்கிட உத்தரவிட்டுள்ளது, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு.

நடப்பு நிதியாண்டில், பாசன ஏரிகளை ஆழப்படுத்தி நவீனமயமாக்க 62.50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளது, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு.

காவிரி டெல்டா பகுதியில், நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்கள், 10 இலட்சம் குடும்பங்களுக்குத் தீபாவளித் திருநாளில் அவர்தம் குடும்பங்களில் தீபஒளி ஏற்றிவைக்க, குடும்பம் ஒன்றுக்கு 210 ரூபாய் வீதம் குடிமைப் பொருட்கள் வழங்க, 21 கோடி நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டது, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்குப் பொல்லாங்கு செய்கின்றார்கள் பொல்லாதவர்கள்; சதி செய்து வீழ்த்தப் பார்க்கின்றார்கள் சதிகாரர்கள்; அவர்களுக்கு நான் ஒன்று சொல்லிக்கொள்கின்றேன்: சூழ்ச்சியால் சுவர் அமைத்து, சுயநலத்தால் கோட்டை கட்டி, சுடர்விட்ட நீதிதனைத் தூக்கி எறிந்துவிட்டு, சதிகார



வீணர்களின் மத்திய அதிகாரத்தை வைத்துக்கொண்டு நாடகமாடுகின்ற எதிர்க்கட்சிகளின் மத்தியில்

*"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை*
*இகழ்வார்ப் பொறுத்தல் தலை"*

என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கேற்ப எவ்வளவு அலட்சியப்படுத்தப்பட்டாலும், ஏளனத்துக்கு ஆளானாலும், எடுத்த காரியத்தை முடித்தே தீருவேன் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற திடச் சித்தமும், விடாமுயற்சியும் இருந்தால், வெற்றி கிடைத்தே தீரும் என்ற பேரறிஞர் அண்ணாவின் பொன்மொழியை உண்மையாக்கி கொள்கை, கோட்பாடு, குறிக்கோள் ஜனநாயக நெறிமுறைகளைப் பின்பற்றி, ஏழைகளைக் கண்டால் உருகும் பனியாக, எதிரிகளைக் கண்டால் நிமிரும் இமயமாக, புதிய சமுதாயம் படைக்க புறப்பட்ட புரட்சித் தாயைத் தடுத்து நிறுத்தும் சக்தி, இங்கு எந்த அரசியல்வாதிக்கும் கிடையாது (மேசையைத் தட்டும் ஒலி) என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

"நிமிர்ந்த நன்னடையும், நேர்கொண்ட பார்வையும், யாருக்கும் அஞ்சாத நெறிகளும்" கொண்ட பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக, பாரினில், "போற்றுவார் போற்றட்டும், புழுதி வாரி தூற்றுவோர் தூற்றட்டும், ஏற்றதொரு கருத்தை எனது உள்ளம் என்றால் எடுத்துரைப்பேன், எவர் தடுத்திடினும், நில்லேன்; எதைக் கண்டும் அஞ்சேன்" என்று துணிந்து செயல்படும் புறநானூறு கண்டவர் புரட்சித் தாய் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-20*

பிரதான எதிர்க்கட்சியினர், 'நீங்களும் அரசியல்வாதி, நாங்களும் அரசியல்வாதி' என்று சாதாரணமாகக் கூறினார்கள். அவர்களுக்கு நான் ஒன்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசியல்வாதிக்கும், மக்கள் தலைவிக்கும் வேறுபாடு தெரியாதா? அரசியல்வாதி என்றால் வரவிருக்கின்ற தேர்தல் பற்றியும், தனக்கு என்ன பதவி கிடைக்கும் என்பதைப்பற்றியும் கனவு கண்டு கொண்டு இருப்பவர் அரசியல்வாதி. ஆனால், வருங்கால தமிழ்ச் சமுதாயம் வாழ்வாங்கு வாழ, வளம்பெற, மக்கள் நலம்பெற, மக்கள் வாழ்வு செழிக்க வேளாண்மைத் துறை மட்டுமல்ல; எந்தவொரு துறையாக இருந்தாலும், தீட்டுகின்ற திட்டங்கள் செம்மையாகவும், வருங்கால தமிழகத்துத் தலைமுறைகள் நன்றாக இருக்க வேண்டும் என்ற தொலைநோக்குச்

சிந்தனையோடு, வலிமையான இந்தியா, வளமான தமிழகம் உருவாவதே எங்களது இலட்சியம்; வருகின்ற தேர்தலைப்பற்றி அல்ல. தேர்தலைப்பற்றி பயம் கொள்ளுபவர்கள் நாங்கள் அல்லர். யார் இருந்தாலும், இல்லாவிட்டாலும் மாபெரும் மக்கள் சக்தி, மக்கள் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் பக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் எங்கள் பக்கம் என்பதைச் சான்றோர் நிறைந்த இந்த அவையிலே ஆணித்தரமாகக் கூறிக்கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்ற வள்ளுவரின் இலக்கணத்திற்கேற்ப, உழவர் பெருமக்களின் ஒருமித்த ஆதரவோடு தேர்ந்தெடுக்கப்பட்டு, சீரும் சிறப்புமாக ஆட்சி செய்துகொண்டிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள், எண்ணற்ற சலுகைகளை, மக்களின் வாழ்க்கைத்தரம் நிலை உயர வேண்டும் என்ற அடிப்படையில், வரலாற்றுப் பேழையாகவும், ஏழை எளியோர்க்கு வரப் பிரசாதமாகவும், தெவிட்டாத தித்திக்கும் தேனாக இருக்கும், வரி இல்லா இந்த நிதிநிலை அறிக்கையிலே, வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி மகுடத்தில் வைரக் கற்களாக ஜொலிக்கிறது என்று கூறி மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே.எஸ். தென்னரசு.

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2005-2006 ஆம் ஆண்டுக்கான வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின்மீது இந்த மாமன்றத்தில் பேசுகின்ற வாய்ப்பு கொடுத்த, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களில் மனமார்ந்த நன்றியினைக் காணிக்கையாக்கிக்கொள்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்"

என்று உழவுத் தொழிலின் பெருமையை வள்ளுவன் அவர்கள் கூறினார்கள். விவசாயிகள்தான் இந்த நாட்டினுடைய முதுகெலும்பு.



விவசாயிகள் சேற்றில் கால் வைத்தால்தான், நாம் சோற்றில் கை வைக்க முடியும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறினார்கள்.

"ஒழுங்காய் பாடுபடு வயற் காட்டில்
உயரும் உன்மதிப்பு அயல்நாட்டில்"

என்று புரட்சித் தலைவர் அவர்கள் பாடினார்கள்.

"கடமை இருந்தால் வீரன் ஆகலாம்;
கருணை இருந்தால் வள்ளல் ஆகலாம்;
பொறுமை இருந்தால் மனிதன் ஆகலாம்;
இந்த மூன்றும் இருந்தால் தலைவன் ஆகலாம்"

என்று புரட்சித் தலைவர் அவர்கள் பாடினார்கள்.

86 இலட்சம் விவசாயத் தொழிலாளிகளுக்குக் கூலி உயர்வு, 82 ஆயிரம் சத்துணவுப் பணியாளர்களுக்குச் சம்பள உயர்வு, கட்டடத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம், 10 ஆம் வகுப்பு வரை மாணவ, மாணவிகளுக்கு இலவசப் பாடப் புத்தகம், எண்ணிலடங்காச் சோதனைகளிலும், பொறுமையாகக் கடமையாற்றுவதில் உங்களுக்கு நிகர் நீங்கள்தான் அம்மா!

விவசாயிகளைப்பற்றிப் பேசுவதற்கு தி.மு.க.வுக்குத் தகுதியில்லை அம்மா! நபார்டு வங்கியில் நீங்கள் கையெழுத்து இட்டதாகக் கூறி, விவசாயிகளை ஏமாற்றியது திரு. கருணாநிதி என்பது நாடறிந்த உண்மை.

மாறனுக்குப் பிறகு மத்திய அமைச்சரவையில், பேரனுக்குப் பதவி வேண்டும் என்று கேட்டு வாங்கினார். தகவல் தொழில் நுட்பத் துறையைக் கேட்டு வாங்கினார். துறைமுகம் மற்றும் நெடுஞ்சாலைத் துறையைக் கேட்டு வாங்கினார். நிதித் துறை இணை அமைச்சரைக் கேட்டு வாங்கினார். சுற்றுச் சூழல் துறை இணை அமைச்சரைக் கேட்டு வாங்கினார். உள் துறை இணை அமைச்சரைக் கேட்டு வாங்கினார். சட்டத் துறை இணை அமைச்சரைக் கேட்டு வாங்கினார். சமூக நலத் துறை இணை அமைச்சரைக் கேட்டு வாங்கினார். இப்படி ஏழு துறைகளையும் கேட்டு வாங்கிய திரு. கருணாநிதி, ஏன் நீர்ப் பாசனத் துறையை மட்டும் கேட்டு வாங்கவில்லை என்பதைத்தான் என்னுடைய கேள்வியாகக் கேட்கின்றேன். ஏன் நீர்ப் பாசனத் துறையை மட்டும் கேட்டு வாங்கவில்லை? விவசாயிகள்மீது அக்கறை இல்லையா? காவிரி நீரைக் கொண்டு வர வேண்டும் என்ற கவலை இல்லையா?

உழவர் பெருமக்கள்மீது உண்மையான பற்று இல்லையா? விவசாயக் கூலித் தொழிலாளிகள்மீது கோபமா? (மேசையைத் தட்டும் ஒலி)

மாநிலத்தில் கூட்டணி ஆட்சி என்றவுடனேயே கூட்டினார் உயர்மட்டக் குழுவை. காவிரி தண்ணீருக்காக மட்டும் ஏன் கூட்டவில்லை உயர்மட்டக் குழுவை? இவர்களுக்கு எல்லாம் இன்று விவசாயிகளைப்பற்றிப் பேசுவதற்குத் தகுதியில்லை என்று இந்த மாமன்றத்தில் பதிவு செய்துகொள்கிறேன்.

பிற்பகல் 12-25

எங்கோ ஓலைக் குடிசைகளில் வாழ்ந்துகொண்டிருந்த 86 இலட்சம் விவசாயக் கூலித் தொழிலாளர்களின் துயரம் துடைத்த தாயே! விழியிழந்தோர், செவியிழந்தோர், உடல் ஊனமுற்றவர்களை எல்லாம் அழைத்துப் பேசி அவர்களுக்கு எல்லாம் அரசுத் துறையில் வேலைவாய்ப்புகளை வழங்கிய அன்பு தெய்வமே! ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு இலவசமாகப் பாடப் புத்தகம் வழங்கிய இதய தெய்வமே! நீங்கள் செய்கின்ற செயல்களை எல்லாம் எண்ணித்தான் அன்றே புரட்சித் தலைவர்,

"மாலை நிலா ஏழை என்றால் வெளிச்சம் தர மறுத்திடுமா;
மண்குடிசை வாசல் என்றால் தென்றல் வர வெறுத்திடுமா"

என்று பாடினார்கள் என்று எண்ணுகிறேன் தாயே'. அது மட்டுமா? ,

"சத்தியம் நீயே, தருமத்தாயே, குழந்தை வடிவே, தெய்வ மகளே" என்றெல்லாம் பாடி வைத்தார்கள்.

திராவிட இயக்கத்தின் பரிணாம வளர்ச்சியின், திராவிட இயக்கத்தின் பரிணாம வளர்ச்சியின் பெரும் பங்கு நீங்கள்தான் என்றால், அது பொருந்தும் அம்மா. பெண்ணுரிமை காத்த தந்தை பெரியாரை ஈ.வெ.ரா என்றுதான் அழைப்பார்கள். ஈ.வெ.ரா. மூன்று எழுத்து, அண்ணா மூன்று எழுத்து, எம்.ஜி.ஆர். மூன்று எழுத்து, அம்மா மூன்று எழுத்து, அம்மா நீங்கள் எங்களிடம் காட்டுகின்ற அன்பு மூன்று எழுத்து, பாசம் மூன்று எழுத்து, கனிவு மூன்று எழுத்து, நீங்கள் கற்றுத் தருகின்ற துணிவு மூன்று எழுத்து, வீரம் மூன்று எழுத்து, பணிவு மூன்று எழுத்து, நீங்கள் எனக்குத் தந்த ஈரோடு மூன்று எழுத்து. நீங்கள்



வாங்கித் தந்த வெற்றி மூன்று எழுத்து. (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் கிடைத்த M.L.A. மூன்று எழுத்து, பதவி மூன்று எழுத்து. தங்களுக்கு முத்தான மூன்று எழுத்தில் நன்றியை உரித்தாக்கி, எனது மூச்சு என்னும் மூன்றெழுத்து இருக்கும் வரை தங்களுக்கு விசுவாசமாக இருப்பேன் எனக் கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தாயே! தமிழ் மூன்று எழுத்து, தமிழைப் பற்றி இன்று யார் யாரோ உபதேசம் பேசுகின்றார்கள். நான் அவர்களுக்கெல்லாம் பணிவோடு சொல்லிக்கொள்வேன், எட்டு உலகத் தமிழ் மாநாடுகள் நடைபெற்றிருக்கின்றன. முதல் உலகத் தமிழ் மாநாடு 1966 ஆம் ஆண்டு மலேசியாவிலும், இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு, 1968 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் சென்னையிலும், மூன்றாவது உலகத் தமிழ் மாநாடு 1970 ஆம் ஆண்டு பிரான்ஸிலும், நான்காவது உலகத் தமிழ் மாநாடு 1974 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலும், ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு 1981 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தலைமையில் மதுரையிலும், ஆறாவது உலகத் தமிழ் மாநாடு 1987 ஆம் ஆண்டு மலேசியாவிலும், ஏழாவது உலகத் தமிழ் மாநாடு 1989 ஆம் ஆண்டு மொரீஷியஸிலும், எட்டாவது உலகத் தமிழ் மாநாடு 1995 ஆம் ஆண்டு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமையில் தஞ்சையிலும் நடைபெற்றுள்ளது என்பதனை இந்த மாமன்றத்திலே பதிவு செய்கின்றேன்.

எட்டு உலகத் தமிழ் மாநாடுகளிலும், தமிழகத்தில், மூன்று உலகத் தமிழ் மாநாடுகளை நடத்திய பெருமை, பேரறிஞர் அண்ணாவுக்கும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.-க்கும், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் மட்டும்தான் உண்டு எனக் கூறிக்கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

முத்தமிழறிஞர், சேரன், சோழன், பாண்டியன் எனத் தனக்குத் தானே பெயரைச் சூட்டிக் கொண்டு, நான்கு முறை முதலமைச்சராக இருந்த திரு. கருணாநிதி ஒரு உலகத் தமிழ் மாநாட்டைக்கூட நடத்தியிருப்பாரா? இவர்கள் எல்லாம் இன்று தமிழைப் பற்றிப் பேசுகிறார்களே என்பதுதான் வருத்தமாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள், விவசாயிகளுக்காக இலவச மின்சாரம், விவசாயத் தொழிலாளர்களின் குடிசைகளுக்கு இலவச மின்சாரம் தொடர்ந்து வழங்கி வருகின்றார்கள்.

மேலும் 2001 ஆம் ஆண்டு விவசாயிகளுக்காக, விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளுக்கு வட்டி மற்றும் அபராத வட்டி வகையில் செலுத்த வேண்டியிருந்த மொத்தம் 310.50 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்துள்ளார்கள்.

2002-2003 ஆம் ஆண்டில் 250 கோடி ரூபாய் குறுகிய காலப் பயிர்க் கடனை, மத்திய காலப் பயிர்க் கடனாக மாற்றியமைப்பதற்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

2002-2003 ஆம் ஆண்டில் சிறு மற்றும் குறு விவசாயிகள் பயனடைகின்ற வகையில், 61.05 கோடி ரூபாய் அளவுக்கு வட்டி மற்றும் அபராத வட்டியைத் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளார்கள்.

01-04-2002 முதல் 31-03-2004 வரையிலான கால அளவில் விவசாயிகளுக்கு ஏற்பட்ட பயிர் இழப்பை ஈடுசெய்து அவர்கள் மீண்டும் வேளாண்மைப் பணிகளைத் தொடங்கிட, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, வறட்சி நிவாரண நடவடிக்கைகளுக்காக மொத்தம் 850.44 கோடி ரூபாயை வழங்கி இருக்கிறது. மேலும், 2003-2004 ஆம் ஆண்டில் பயிர்க் கடன்கள் மீதான வட்டி மற்றும் அபராத வட்டிவகையில் விவசாயிகள் செலுத்தவேண்டியிருந்த பாக்கித் தொகை 62 கோடி ரூபாயை மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் தள்ளுபடி செய்திருக்கிறார்கள்.

பிற்பகல் 12-30

2003-2004 ஆம் ஆண்டில் பயிர்க் கடனாக 688 கோடி ரூபாயும் வழங்கப்பட்டிருக்கிறது. 2004-2005 ஆம் ஆண்டில் கூட்டுறவுக் கடன் நிறுவனங்கள் இதனை 1,037 கோடி ரூபாயாக உயர்த்திட மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆணை வழங்கியுள்ளார்கள். தமிழக விவசாயப் பெருமக்களின் நலன் கருதி, 2,598 கோடி ரூபாய் அளவுக்கான குறுகிய காலப் பயிர்க் கடனை நீண்டகால கடனாக மாற்றி அமைத்தது, மாண்புமிகு அம்மா அவர்களையே சேரும் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், மத்திய அரசு அனுமதி கொடுத்தால், 2,598 கோடி ரூபாயும் தள்ளுபடி செய்வேன் என்று இந்தியாவிலேயே முதன்முதலாக (மேசையைத் தட்டும் ஒலி) கூறிய ஒரே முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்று கூறிக்கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.



விவசாயிகள் செலுத்த வேண்டிய கடன் தொகைக்குரிய வட்டியை 14 சதவீதத்திலிருந்து 9 சதவீதமாகக் குறைத்தவர், இந்தியாவிலேயே, தமிழகத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் மட்டும்தான் என்பதைக் கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாற்றுப் பயிர்த் திட்டத்தின்கீழ் ஒரு பகுதியாக, மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த காட்டாமணக்கு, சர்க்கரைச் சோளம் மற்றும் சர்க்கரைக் கிழங்கு போன்ற பயிர்களைக் கொண்டு எத்தனால் மற்றும் தாவர எரிபொருள் உற்பத்தி செய்ய, அங்கீகரிக்கப்பட்ட தொழில் முதலீட்டுக் கழகங்கள் மூலம், முதலீட்டாளர்கள் மூலம், ஒப்பந்தப் பண்ணை முறையில் விவசாயம் மேற்கொள்ளும் தமிழக விவசாயிகள், பெருமகிழ்ச்சி அடைவார்கள் என்று இந்த மாமன்றத்தில் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம், தருமபுரி, நாமக்கல், கடலூர், விழுப்புரம், நான் சேர்ந்திருக்கின்ற ஈரோடு மற்றும் திருவண்ணாமலை, தஞ்சாவூர் ஆகிய எட்டு மாவட்டங்களிலேயும், மரவள்ளிக் கிழங்கு மற்றும் வெங்காயம் பெருமளவில் பயிரிடக்கூடிய விவசாயிகள், கடந்த தி.மு.க. ஆட்சியில் இவற்றிற்கு விதிக்கப்பட்ட செஸ் வரியினால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். விவசாயிகளுக்குப் பல்வேறு சலுகைகளை—விவசாயப் பெருமக்களுக்காகப் பல்வேறு சலுகைகளை—வழங்கிவரும் மாண்புமிகு அம்மா அவர்கள், இந்த செஸ் வரியை இரத்து செய்து, விவசாயிகள் வயிற்றில் பால் வார்க்கவேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்ட விவசாயிகளின் நலன் கருதி, ஈரோடு தொகுதி, வில்லரசம்பட்டியில் மஞ்சள் வணிக வளாகம் அமைப்பதற்கு ஆணை வழங்கி, 36 கோடியே 32 இலட்சம் ரூபாயை ஒதுக்கித் தந்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயப் பெருமக்களின் சார்பாகவும், (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயக் கூலித் தொழிலாளர்களின் சார்பாகவும், சுமார் 3,000 சுமை தூக்கும் தொழிலாளர்கள் சார்பாகவும், எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், ஈரோடு தொகுதியில், ஈரோடு நகரைப் பற்றி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஈரோடில், போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும்பொருட்டு, பன்னீர்செல்வம் பார்க் அருகில் ஒரு மேம்பாலமும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சிலை

அருகில் ஒரு மேம்பாலமும், ஈரோடு மக்களின் நீண்டகாலக் கோரிக்கையான ஈரோடில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகமும் கட்டிக் கொடுக்க வேண்டுமென்றும், ஈரோடு சி.என்.சி கல்லூரியை அரசுக் கலைக் கல்லூரியாக மாற்றிக்கொடுக்க வேண்டுமென்றும், ஈரோட்டில், நாமக்கல் மாவட்டம், பள்ளிப்பாளையத்தை இணைக்கும் ஒரு பாலம் கட்டிக்கொடுக்க வேண்டுமென்றும், ஈரோடு நகராட்சியை மாநகராட்சியாக மாற்றித்தர வேண்டுமென்றும் அம்மா அவர்களைப் பணிந்து வணங்கிக் கேட்டுக்கொள்கின்றேன். ஈரோடில் ஒரு புறவழிச் சாலை அமைத்துக்கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றேன். நான்கு விசைத்தறி பூங்காக்கள் அமைக்கப்படும் என்று அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டு, 3 விசைத்தறிப் பூங்காக்கள் நிறைவுபெற்றுவிட்டன. ஈரோடிற்கும் அந்தப் பூங்காவை அமைக்க, உடனடியாக அனுமதி வழங்க வேண்டுமென்று அம்மா அவர்களின் பாதம் தொட்டு பணிந்து வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, கட்டடத் தொழிலாளர்களுக்கென்று தனியாக வாரியம் அமைத்ததுபோல, தமிழகத்தில் உள்ள சுமார் 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட சுமை தூக்கும் தொழிலாளர்கள், கைவண்டித் தொழிலாளர்கள் ஆகியவர்களுக்கும் தனியாக சுமை தூக்கும் தொழிலாளர்கள் வாரியம் அமைத்துக் கொடுத்தால் அவர்கள் என்றென்றும் அம்மா அவர்களுக்கு நன்றிக் கடன் பட்டவர்களாக இருப்பார்கள் எனக் கூறிக்கொள்கிறேன்.

ஏழை வாழ்ந்திட வேண்டும், இல்லாமை ஒழிந்திட வேண்டும், நிம்மதி ஓங்க வேண்டும் என்ற உன்னதமான இலட்சியத்திற்காக, துணிவைப் பெற்று, தூய உள்ளத்தோடு போராடுவோம்; போராடுபவர்தான் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்று இந்த மாமன்றத்தில் பதிய வைத்து, எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைக் கூறி அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நம்முடைய அன்புக்குரிய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

*பிற்பகல் 12-35*

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



"உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து"

என்பது வான்புகழ் கொண்ட வள்ளுவரின் வேதவாக்கு.

"தொண்டு செய்து பழுத்த பழம்,
தூய தாடி மார்பில் விழும்,
மண்டைச் சுரப்பை உலகு தொழும்,
மனக் குகையில் சிறுத்தை எழும்"

அவர்தான் தந்தை பெரியார் என்று அறிவுலகம் போற்றிய பகுத்தறிவுப் பகலவனின் முற்போக்குப் பாசறையில் பாடம் பயின்று, தரணிக்குத் தேவையான தங்கநிகர் எண்ணங்களை, வளங் குறையாத கருத்துகளை, தரங் குறையாத கொள்கைகளை, எழுச்சியோடும், உணர்ச்சியோடும், அள்ளி வழங்கி, உறங்கிக்கிடந்த தமிழ்ச் சமுதாயத்தைத் தட்டி எழுப்பி, தலைநிமிரச் செய்த அரசியல் விடிவெள்ளி, தென்னாட்டு காந்தி, மாபெரும் சிந்தனையாளர், மனிதநேயப் பண்பாளர், பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் இதயக்கனி, வான்மழை வற்றினாலும், வாரி வழங்குவதில் தான் வற்றிப் போகாத தலைவன், புன்னகை மன்னன், பூவிழிக் கண்ணன், பொன்மனச் செம்மல், பிறர் துன்பம் தனதாக்கி, தன் பொருளைப் பிறர்க்கு அளித்து, தனி இன்பம் கண்டிட்ட முதல்வன், இறுதிவரை புகழோடு வாழ்ந்திட்ட மன்னன், கவித் தமிழைக் காக்க வந்த காவல்காரன், கயமைகளைச் சுட வந்த வேட்டைக்காரன், தொழிலாளி, விவசாயி யாவர்க்கும் துணையாகி, ஏழைகளின் தோழனாய் உரிமைக் குரல் கொடுத்து எங்கள் வீட்டுப் பிள்ளையாகி, நம்நாடு, புதிய பூமி பொழிலாகி வர, திட்டங்கள் தீட்டிய என் அண்ணன், நல்ல நேரம், ஊருக்கு உழைப்பவனே, மன்னாதி மன்னனாய், மதுரை வீரனாய் வந்தான் என ஊர் உலகம் கொண்டாட, அன்னமிட்ட கையாய் வந்த ஆயிரத்தில் ஒருவன், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்-ஆல் கண்டெடுத்த ஒளிவிளக்கு. (மேசையைத் தட்டும் ஒலி)

"போற்றுவார் போற்றட்டும், புழுதிவாரித் தூற்றுவோர் தூற்றட்டும் ஏற்றதொரு கருத்தை எனதுள்ளம் என்றால், எடுத்துரைப்பேன் எவர் வரினும் நில்லேன், அஞ்சேன்" என்று துள்ளிவரும் வேல் போல, ஆவேசத்தை அள்ளி வரும் வாள் போல, எதிரிகளின் பொய் முகங்களைக் கிழித்தெறிந்து, சூழ்ந்து வரும் பகைவர் கூட்டத்தின்

சூதுகளைச் சுக்குநூறாக்கி, வீர மகளாக, வெற்றித் திருமகளாக, பூ மகளாக, பொன் மகளாக, அலை மகளாக, கலை மகளாக, சக்தியாக, சத்தியமாக, சமத்துவமாக, தத்துவமாக, சாத்வீகமாக, சகாப்தமாக வாழ்ந்து தன் செம்பொன் மேனியை மெழுகுவர்த்தியாய் உருக்கி (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தை ஒளி வெள்ளமாய் ஆக்கி (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியத் துணைக் கண்டத்தில் இணையில்லா முதல்வராய், தங்கத் தாரகையாய், வாழ்நாள் சாதனையாளராய், நான் வணங்கும் தெய்வமாய் வாழ்கின்ற தாயின் திருவடிகளுக்குக் கோடானுகோடி வணக்கம்.

இந்தியாவினுடைய ஒப்பற்ற முதலமைச்சர், மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியில்தான், தமிழகம் இந்தியத் துணைக் கண்டத்திலேயே அனைத்துத் துறைகளிலேயும் இன்றைக்கு முதன்மை இடத்தை வகித்துக்கொண்டிருக்கின்றது என்பதை நான் பெருமையோடு சுட்டிக்காட்டி, அந்த அளவிலே இன்றைக்கு அம்மாவினுடைய நல்லாலோசனைகளோடு வேளாண்மைத் துறை எந்த அளவிற்கு இந்தியத் துணைக் கண்டத்திலேயே உற்பத்தித் திறனிலே முதன்மையாகத் திகழ்ந்து வருகின்றது என்பதை நான் பெருமையோடு கோடிட்டுக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அம்மாவினுடைய அறிவார்ந்த வழிகாட்டுதல்கள், வேளாண்மைத் துறை அதிகாரிகளின் வித்தக தொழில்நுட்ப ஆலோசனைகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களின் அயராத உழைப்பால் செம்மாந்து நடைபோடும் தேவதரு. தமிழ்நாடு, இந்தியத் திருநாட்டில் உற்பத்தித் திறனில் மாதர்கள் போற்றும் மங்கலமான மஞ்சள் உற்பத்தியில், முதலிடம் இந்தியத் துணைக் கண்டத்திலேயே. வெட்டினால் இனிக்கும் கட்டிக் கரும்பில் முதலிடம். சோலைக்குள் சிரிக்கும் சோள உற்பத்தியில் முதலிடம். உடலைக் காக்கும் நிலக்கடலையில் இந்தியத் துணைக் கண்டத்திலேயே உற்பத்தியிலே முதலிடம். இவை மட்டுமா? எண்ணெய் வித்துக்களில் முதலிடம். மண்ணைக் குடையும் மரவள்ளிக் கிழங்கில் முதலிடம். முழு நிலா போன்ற முட்டைகோஸில் முதலிடம். மணம் வீசும் மலர்கள் ஏற்றுமதியில் முதலிடம். தண்ணீரை வேரிலே வாங்கி, தேனிலே கலந்து தலையிலே தருகின்ற தென்னை உற்பத்தியிலே இந்தியத் துணைக் கண்டத்திலே முதலிடம். பேரவைத் தலைவர் அவர்களே. இத்தனை முதலிடம் இருக்கிறது இப்போது; இன்னும் பல முதலிடங்கள் வரும் தப்பாது; (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சிகள் வாய் மூடும் அப்போது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலும் சொல்கின்றேன், கேளுங்கள். (சிரிப்பு)



பிற்பகல் 12-40

உயிர்காக்கும் நெல் உற்பத்தியில் இரண்டாம் இடம். ஏழைக்கேற்ற வாழையில், இரண்டாம் இடம். இது ஆதாரம் இல்லாத அறிவிப்பு என்று நீங்கள் நினைத்துவிடவேண்டாம். மத்திய அரசினுடைய வேளாண் புள்ளியியல் துறையினுடைய அதிகாரபூர்வமான அறிவிப்பு. ஒரு காலத்தில் நாம் சொன்னோம். வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்று. ஆனால், எங்கள் அம்மா காலத்தில் தெற்கு வாழ்கிறது, வடக்கு வாழ்த்துகிறது (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சாதனையைச் செய்யவேண்டுமென்றால் அது என் தாயால்தான் முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) எப்படி என்றால், இயற்கை அருள் கொடுக்கின்றபட்சத்திலே சாதனை செய்துவிடுவது என்பது, ஒரு சாதாரண காரியம். ஆனால், பல்வேறு தடைகளைத் தாங்கி, பல்வேறு இடர்ப்பாடுகளையெல்லாம் தாங்கி, பல்வேறு சோதனைகளைத் தாங்கி, இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்திலேயே, தமிழகத்தினுடைய ஒப்பற்ற முதலமைச்சராக வாழ்ந்து வருகின்ற டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய தொலைநோக்குப் பார்வையாலே நிர்வாகப் பார்வையாலே, நல்ல ஆலோசனைகளை வழங்கிக் கொண்டு வருகிற காரணத்தினாலேதான், இன்றைக்குத் தமிழகத்திலே என்றைக்கும் இல்லாத அளவிற்கு, கடந்த கால ஆட்சியாளர்களைக் காட்டிலும், உணவு உற்பத்தியிலே 90 இலட்சம் மெட்ரிக் டன் அடைந்து இருக்கின்றோம் என்றால், இது என்ன சாதாரண காரியமா? (மேசையைத் தட்டும் ஒலி) எப்படிப்பட்ட சூழ்நிலையிலே இந்தச் சாதனையை நாம் அடைந்து இருக்கிறோம் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்.

கர்நாடக அரசு, காவிரியிலே, தக்க நேரத்திலே தண்ணீர் திறந்துவிடாதபோதிலும், தென் மேற்குப் பருவ மழை பொய்த்தபோதிலும், வட கிழக்குப் பருவ மழையால் வெள்ளம் ஏற்பட்டபோதிலும், எல்லாரும், யாருமே எதிர்பார்க்காத அளவிற்கு சுனாமி ஆழிப் பேரலை தாக்கியபோதிலும், எத்தனையோ இடர்ப்பாடுகள் ஏற்பட்டபோதிலும், அத்தனையையும் தாண்டி, அஞ்சாமல் எங்கள் தாய், அம்மாவினுடைய சீரிய வழிகாட்டுதலாலும், செம்மையான நிர்வாகத் திறமையாலும், தமிழகம் இன்று, கடந்த பல ஆண்டுகளைவிட வேளாண் உற்பத்தியில் 90 இலட்சம் மெட்ரிக் டன் சாதனையை எட்டியிருக்கிறது என்றால் இது என்ன சாதாரண

காரியமா? (மேசையைத் தட்டும் ஒலி) சோதனைகளுக்கு மத்தியிலே சாதனை படைக்கின்ற தாய், என் தாய் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா. அதோடுமட்டுமல்ல; நீங்கள் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே 2000-2001 ஆண்டிலே, இயற்கை அவர்களுக்கு நல்ல வாய்ப்புக் கொடுத்தது. அன்றைக்கு நல்ல பருவ மழை இருந்தது. அன்றைக்கு நல்ல நீர் வளம் இருந்தது. ஆனால் அப்படிப்பட்ட ஒரு நல்ல சூழ்நிலையைப் பயன்படுத்தியும்கூட, நிர்வாகச் சீர்கேடுற்ற கடந்த கால ஆட்சியாளர்களுடைய ஆட்சியிலே, 2000-2001-ல் பயிரிடப்பட்ட பரப்பளவு எவ்வளவு தெரியுமா, பேரவைத் தலைவர் அவர்களே? 48 இலட்சம் ஹெக்டேர்தான். ஆனால், இவ்வளவு சோதனைகளுக்கு மத்தியிலே, மாண்புமிகு அம்மாவினுடைய தொலைநோக்குப் பார்வையிலே, நல்வழி காட்டுதலிலே, இன்றைக்கு 2004-2005 ஆம் ஆண்டிலே 52 இலட்சம் ஹெக்டேருக்குப் பயிரிடப்பட்டிருக்கிறது என்றால், இது என்ன சாதாரண காரியமா? (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடுமட்டுமல்ல; நான் முன்னரே குறிப்பிட்டதைப்போன்று, 2000-2001-லே, இயற்கை அவர்களுக்குச் சாதகமாக இருந்தது. அப்படிப்பட்ட சாதக நிலையைப் பயன்படுத்தியும்கூட, அவர்கள் உணவு தானிய உற்பத்தி சுமார் 86 இலட்சம் மெட்ரிக் டன்தான் அவர்களால் உற்பத்தி செய்ய முடிந்தது. ஆனால், இவ்வளவு சோதனைகளுக்கு மத்தியிலும், சுனாமி பேரலைக்குப் பிறகு, வடமேற்குப் பருவ மழை பொய்த்ததற்குப்பிறகு, காவிரியிலே தண்ணீர் காலதாமதமாக திறந்து விட்டதற்குப் பிறகும்கூட, 90 இலட்சம் மெட்ரிக் டன்னை—அம்மா அவர்களின் வழிகாட்டுதலின் பேரிலே, இன்றைக்கு 90 இலட்சம் மெட்ரிக் டன் உணவு உற்பத்தியை—தமிழகம் எட்டி இருக்கிறது என்றால், அந்தத் தாய்க்கு நாங்கள்--அவர்களுடைய பொற்பாதங்களுக்கு—இன்றைக்கு 6-1/2 கோடி தமிழக மக்கள் நன்றிக் கடன்பட்டிருக்கின்றார்கள் என்பதை நான் (மேசையைத் தட்டும் ஒலி) மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதோடுமட்டுமல்ல, பேரவைத் தலைவர் அவர்களே! 2000-2001 ஆம் ஆண்டு உணவு மற்றும் பயிர்களின் உற்பத்தியில், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய 2001 ஆம் ஆண்டு ஆட்சியிலே, சுமார் 137 இலட்சம் மெட்ரிக் டன்தான். ஆனால், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய, 2004-2005 ஆம் ஆண்டிலே, இன்றைக்கு உணவு மற்றும்



இதர பயிர்களின் உற்பத்தி 144 இலட்சம் மெட்ரிக் டன் தலைவர் அவர்களே. 144 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தியை இன்றைக்கு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கி இருக்கிறார்கள் என்றால், அந்தத் தாயினுடைய சாதனைக்கு எந்த ஒரு நிலையும் ஈடு இணை கிடையாது என்பதை நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடுமட்டுமல்ல; நான் எண்ணிப் பார்க்கின்றேன். இன்றைக்குத் தமிழகத்தினுடைய காங்கிரஸ் கட்சியினுடைய, எதிர்க் கட்சி சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் இருப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். அதோடுமட்டுமல்ல; எதிர்க் கட்சியைச் சார்ந்த, பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் இன்றைக்கு திரு. ஜி.கே. மணி அவர்கள் இருப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். நான் ஏமாந்து போனேன். ஏனென்றால், அவர்கள், எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசுகின்றபோதும், ஜி.கே. மணி அவர்கள் பேசுகின்றபோதும், 2005-2006 ஆம் நிதியாண்டிலே வேளாண்மைத் துறைக்கு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிதி ஒதுக்கீட்டைக் குறைத்து இருக்கின்றார்கள் என்கின்ற ஒரு தவறான குற்றச்சாட்டை, உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டைச் சுமத்தி இருக்கின்றார்கள். நான் அவர்களுக்கு மட்டுமல்ல, அவர்களுடைய கட்சியைச் சார்ந்தவர்களுக்கு மட்டுமல்ல, இங்கே இருக்கின்ற பண்பிற்குரிய பத்திரிகைத் துறை நண்பர்களுக்குக்கூட சுட்டிக்காட்டுவதெல்லாம், அது ஒரு தவறான கருத்து; 2005-2006 ஆம் நிதி ஆண்டுக்கு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தாய் உள்ளத்தோடு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்திருக்கின்றார்கள் என்பதை நான் ஆதாரத்தோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 12-45

அதோடு மட்டுமல்ல, கடந்த கால ஆட்சியாளர்கள், கடந்த கால ஆட்சியிலே எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்தார்கள்; எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே எவ்வளவு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்தார்கள் என்பதை நீங்கள் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். கஞ்சத்தனம் மிக்க திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் 1996 முதல் 2001வரை வேளாண்மைத் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதி 3912.19 கோடி ரூபாய். இதில் திட்டப் பணிகளுக்காக மட்டும் ஒதுக்கப்பட்ட நிதி, 153.29 கோடி ரூபாய். வள்ளல் தன்மை மிக்க எங்கள் அம்மாவின் ஆட்சியில்

2001 முதல் 2006 வரை வேளாண்மைத் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதி, 4137.34 கோடி ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி) இதில் திட்டப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி, 1630.28 கோடி ரூபாய். விவசாயிகளை வஞ்சித்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைவிட விவசாயிகளை வாழ்விக்கும் எங்கள் அம்மாவின் ஆட்சியில்தான், கடந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியைவிட நிதி ஒதுக்கீட்டில் 225.15 கோடி ரூபாய் அதிகமாக உள்ளது. திட்டப் பணிகளுக்கான ஒதுக்கீட்டுத் தொகையில் 576.99 கோடி ரூபாய் அதிகமாக, எங்கள் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒதுக்கீடு செய்திருக்கின்றார்கள் என்பதை ஆணித்தரமாகச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். கருணையும், நிதியும் பெயரிலே இருந்தால் போதுமா? அள்ளிக் கொடுக்கும் அன்னை மனம் வேண்டாமா? கொட்டும் பனியால் குளம் நிறைந்து போகுமா? கொட்டும் மழை வேண்டாமா? எங்கள் அம்மா கொட்டும் மழையாய் இருப்பதால்தான் (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அளவுக்குத் தமிழக முதன்மைத் துறையின் உற்பத்தி வளர்ச்சி, 16 சதவிகித வளர்ச்சியை எய்தி வாழ்வாங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமின்றி, 'ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுததாம்.' அந்தக் கதையைப் போன்று, இந்த வேளாண்மைத் துறைக்குக் குறைவான நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் என்று எஸ்.ஆர்.பி. சொல்லியிருக்கிறார். நான் ஒன்றை ஆதாரத்தோடு சொல்கிறேன். 2004-2005 ஆம் ஆண்டினுடைய நிதி ஒதுக்கீட்டை நாம் பார்ப்போமேயானால், 2004-2005 ஆம் ஆண்டிலே நிதி ஒதுக்கீடு 882.41 கோடி ரூபாய். அந்த 882.41 கோடி ரூபாயிலே 'வருவாய் நிர்வாக ஆணையரகம்' என்கிற தலைப்பின்கீழ் 175.70 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். இந்த 175.70 கோடி ரூபாயை எதற்காக ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கிறபோது, விவசாயிகள் உபயோகிக்கின்ற மின்சாரத்திற்காக இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விவசாயிகள் மின்சாரக் கட்டணத்தைக் கட்டுவதற்காக money order மூலமாக, அவர்களுக்கு அந்தப் பணத்தை அனுப்புவதற்காக 175.70 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள்—175.70 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்கான money order-ஐ அனுப்பி, அந்த money order மூலமாக பெறப்பட்ட அந்தப் பணத்தைப் பெற்று, மின் கட்டணத்தைக் கட்டுவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை.



ஆனால், தற்போது மீண்டும் இலவச மின்சாரத் திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளதால் 2005-2006 ஆம் ஆண்டினுடைய வரவு செலவுத் திட்டத்திலே இத்தொகை சேர்க்கப்படவில்லை. இத்தொகையை 2004-2005 ஆம் ஆண்டினுடைய ஒதுக்கீட்டிலிருந்து கழித்துப் பார்த்தால், கடந்த ஆண்டினுடைய ஒதுக்கீடு 706.71 கோடி ரூபாய் மட்டுமே. எனவே, அம்மாவுடைய கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு கூடுதலாக 2005-2006 ஆம் ஆண்டுக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடாக 147.70 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு கூடுதலாகச் செய்திருக்கிறார்கள் என்பதை நான் பணிவோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

எதிர்க் கட்சியிலே இருக்கின்ற மாண்புமிகு காங்கிரஸ் கட்சி சட்டமன்ற உறுப்பினர் இனி வருங்காலத்திலே, இந்தச் சட்டசபைக்கு வருவதாக இருந்தால், இந்தப் புள்ளிவிவரம் தவறு என்று நீங்கள் நிரூபிப்பதாக இருந்தால், நான் எந்த ஒரு நிலையையும் ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறேன். உங்களுக்கு நெஞ்சில் உரம் இருந்தால், மனதில் தைரியம் இருந்தால் இந்தப் புள்ளிவிவரத்தை உங்களாலே மறுத்துவிட முடியுமா? (மேசையைத் தட்டும் ஒலி) காங்கிரஸ் கட்சியானாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகமானாலும் சரி, பட்டாளி மக்கள் கட்சியாக இருந்தாலும் சரி, அல்லது கம்யூனிஸ்ட் கட்சிகளாக இருந்தாலும் சரி, இப்போது "பசுத்தோல் போர்த்திய புலி"யாகக் காட்சியளித்து வருகிறார்கள். விவசாயிகளுக்காக வாதாடுவதற்கு ஒரு தார்மீக உரிமை வேண்டாமா? என் தாய் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைத் தவிர—இந்தியத் துணைக் கண்டத்திலே விவசாயப் பெருமக்களுக்குச் சலுகைகளை அள்ளித் தருவதிலே வள்ளலாக வாழ்ந்து வருகின்ற என் தாயைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள்?

பிற்பகல் 12-50

நான் இன்னொன்றையும் உங்களுக்குச் சுட்டிக்காட்ட வேண்டுமென்றால், இப்போதுகூட நம்முடைய தமிழகத்திலேயிருந்து நிதியமைச்சராகச் சென்றிருக்கின்ற மாண்புமிகு சிதம்பரம் அவர்களிடம்— 'கூடுதலாக, வேளாண்மைத் துறைக்கு ஒதுக்கிவிட்டேன்' என்று தம்பட்டம் அடித்துக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு சிதம்பரம் அவர்களிடம், இங்கே இருக்கின்ற எஸ்.ஆர்.பி. அவர்கள் சொல்ல வேண்டும். இன்றைக்குக் கூடுதலாக நிதி ஒதுக்கினேன் என்று மாயையைக் காட்டிக் கொண்டிருக்கின்ற, மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்ற, பசுத்தோல் போர்த்திய புலி ஆகிக்கொண்டிருக்கின்ற, காங்கிரஸ்

கட்சியிலே இருக்கின்ற, மத்தியிலே ஆளுகின்ற அவர்களைப் பார்த்து நான் சுட்டிக்காட்டுவதெல்லாம், இப்போது 2005-06 ஆம் ஆண்டிலே, ஒருசில இடங்களுக்காக நிதி ஒதுக்கீடு குறைவாகச் செய்திருக்கின்றீர்கள்;

2004-05 ஆம் ஆண்டிலே, இயற்கை உரங்களை ஊக்குவிக்கின்ற தேசிய திட்டத்திற்காக 32 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருந்தார்கள். ஆனால், நீங்கள் 2005-06 ஆம் ஆண்டிலே 27 கோடி ரூபாய் மட்டும்தான் ஒதுக்கீடு செய்திருக்கின்றீர்கள்;

பயிர் பாதுகாப்பிற்காக 2004-05 ஆம் ஆண்டிலே 52.31 கோடி ரூபாய். ஆனால் இன்றைக்கு 2005-06-லே 40 கோடி ரூபாய்தான் நீங்கள் ஒதுக்கீடு செய்திருக்கின்றீர்கள்; அதேபோன்று, வேளாண் விரிவாக்கத் திட்டங்களுக்காக 2004-05-லே 187.45 கோடி. ஆனால், 2005-06-லே 148.10 கோடி;

வேளாண் பொருளாதார ஆய்வு மையங்களுக்காக 8 கோடி ரூபாய்; ஆனால், இன்றைக்கு இந்த 2005-06-க்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்ற தொகை 6.8 கோடி ரூபாய். இதை ஏதோ நான் இங்கே சொல்ல வேண்டுமென்று குறிப்பிடவில்லை. டில்லியிலே மத்திய அமைச்சரவையிலே இருக்கின்ற வேளாண் துறையிலேயிருந்து அதிகாரப்பூர்வமான தகவலோடு இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதை நான் இந்த நேரத்திலே அன்போடு கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்றுதான், சந்தை ஆய்வு மற்றும் சந்தை தகவல் அமைப்புகளுக்காக 2004-2005-லே 11 கோடி ரூபாய். 2005-2006-க்கு 10 கோடி ரூபாய். இதேபோன்று ஏராளமாக என்னாலே சொல்ல முடியும். அந்த அடிப்படையிலே, நேரத்தினுடைய அருமையைக் கருதி சுருக்கமாகச் சொல்கிறேன்.

இப்போது, அவர்கள் ஒதுக்கியிருக்கின்ற பணம்கூட, அந்த நிதியை இந்த ஆண்டே செலவு செய்துவிட முடியுமா என்றால் நிச்சயமாக கிடையாது. ஏன் என்றால், மத்திய அரசு இன்றைக்கு வேளாண்மைத் துறைக்கான திட்ட முதலீட்டிலே, தேசிய தோட்டக் கலை வளர்ச்சி இயக்கத்திற்கு ரூபாய் 630 கோடி ஒதுக்கியிருக்கின்றது. சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர்ப் பாசனத்திற்காக 430 கோடி. அதேபோன்று புன்செய் நிலச் சாகுபடித் திட்டத்திற்காக 200 கோடி. மூங்கில் வளர்ப்புக்காக 100 கோடி. ஆக, 1330 கோடி என்கின்ற அளவுக்கு நிதி ஒதுக்கீடு பெற்றுள்ள அந்த 4 திட்டங்களும் மத்திய அமைச்சரவையினுடைய பரிசீலனைக்கே இன்று இதுநாள்வரை எடுத்துக்கொள்ளப்படவில்லை. யாரை ஏமாற்றப் பார்க்கிறீர்கள்? யாருடைய காதிலே பூ வைக்கப் பார்க்கின்றீர்கள்? மத்திய அமைச்சரவையினுடைய ஒப்புதலையே இன்னும் பெறவில்லை. திட்டங்கள் தயாரிக்கப்பட்டு பல்வேறு துறைகளினுடைய ஒப்புதலைப் பெற்ற பின்தான், அதன் பின்தான்—அமைச்சரவையின் ஒப்புதல் பெற பல மாதங்கள் ஆகலாம். மத்திய அமைச்சரவையிலே ஒப்புதல் பெறுவதற்குப் பல மாதங்கள் ஆகலாம். அதுவரை இந்தப் பணம் ஒரு சல்லிக் காசுகூட செலவு செய்ய முடியாது. ஆக, இப்படிச் செலவு செய்யப்பட முடியாத பணத்தை எல்லாம் நீங்கள் ஒதுக்கீடு செய்துவிட்டு, யாரை ஏமாற்றப் பார்க்கின்றீர்கள் என்பதுதான் இன்றைக்குத் தமிழக மக்களுடைய கேள்வி என்பதை நான் இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)



அதோடு மட்டுமல்ல, பெரியோர்களே, இல்லை என்ற சொல்லையே இன்றைக்கு இல்லை என்று ஆக்கிக் கொண்டிருக்கின்றார்கள் எங்கள் தாய் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கின்ற அனைத்து மாவட்டங்களிலும், சென்னை மாவட்டத்தைத் தவிர, உழவர் பயிற்சி மையங்கள் இருக்க வேண்டுமென்பதற்காக, கிராமங்கள்தோறும் எப்படிப் பள்ளிக்கூடங்களை எங்கள் தாய் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இப்போது திறந்து வைத்திருக்கின்றார்களோ, அதைப்போன்று, இன்றைக்கு மாவட்டங்கள்தோறும் உழவர் பயிற்சி மையங்களைத் திறந்து வைத்திருக்கின்றார்கள்.

சுழன்றுவரும் உலகச் சூழலுக்கும், வளர்ந்துவரும் வர்த்தகப் பரிமாற்றங்களுக்கும், பரந்துவரும் பருவகால மாறுதல்களுக்கும் ஏற்றபடி, வேளாண் துறையில் நெடிய இலக்குகளும், அவற்றை அடைய, தேவையான புதிய முயற்சிகளும், அதற்கான உரிய பயிற்சிகளும், காலத்தின் கட்டாயத் தேவை.

நாம் எவ்வளவுதான் உயர உயரப் பறந்தாலும், நம்முடைய கால்கள் பூமியில்தான் இருக்க வேண்டும். விஞ்ஞானத் தொழில்நுட்பத் துறையிலே நாம் எத்தனை வியத்தகு சாதனைகள் புரிந்தாலும், வேளாண் துறையையும் உழவர் பெருமக்களையும், நமக்குப் பாலூட்டி, சோறூட்டி, பசியாற்றி, உயிர் வளர்க்கும் கிராமங்களையும், ஒருபோதும்

கைவிட்டுவிடக்கூடாது என்ற உயரிய இலட்சியத்தை, உயர்த்திப் பிடித்துவரும் உன்னதத் தலைவி, எங்கள் தாய், டாக்டர் புரட்சித் தலைவி, தமிழகத்தினுடைய ஒப்பற்ற தலைவி, நம்முடைய அம்மா அவர்கள், கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும், நவீன அறிவியல் சிந்தனைகளைப் பயன்படுத்தி, உழவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதிலும் முழுமுதற் கவனம் கொண்டு உழைத்து வருகின்றார்கள்.

கடல் நீர் முகந்த கார் மேகக் கூட்டங்கள், வயலில் இறங்கி மழை பொழிந்த வளமான காலங்கள் போய், வறட்சிப் பிடியில் நாம் வாழ்ந்துகொண்டிருந்தாலும், இருப்பதைக் கொண்டு எளிமையாக வாழவும், அறிந்ததைக் கொண்டு அருமையாக வாழவும், உழவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும், பயிற்சிகள் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்ட நம்முடைய அம்மா அவர்கள், தமிழகத்திலே 11 மாவட்டங்களிலே இதுவரை இல்லாமல் இருந்த உழவர் பயிற்சி மையங்களை உடனடியாக, இந்த 2005–2006 ஆம் நிதியாண்டிலே அனுமதித்து, ஆணை பிறப்பித்திருக்கின்றார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். நிலத்திற்கு ஏற்ற சாகுபடி மட்டுமல்ல, இருக்கும் நீருக்கு ஏற்ற சாகுபடி பற்றியும், மாற்றுப் பயிர்த் திட்டம் பற்றியும் விவசாயிகள் அறிந்துகொள்ள வேண்டும் என்பதை இந்த உழவர் பயிற்சி மையங்கள் எடுத்துச் சொல்கின்றன.

*பிற்பகல் 12-55*

வேளாண்மைத் துறையின் புதிய கண்டுபிடிப்புகள் பற்றியும், அதற்கான தொழில்நுட்ப உத்திகள் பற்றியும் இங்கே பயிற்சிகள் தரப்படுகின்றன. பயிர் விளைச்சலில் போட்டிகள் வைத்து, உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஊக்கமூட்டும் அந்தத் திட்டங்களையும் செயல்படுத்துகின்றன. எங்கள் அம்மாவின் எங்கும் அறிவியல், எதிலும் அறிவியல் என்னும் கூரிய, மதிநுட்பப் பார்வையால், காந்தி கண்ட கிராம இராஜ்யத்தை, எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இன்றைக்கு உருவாக்கியிருக்கின்றார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

இராமரின் கால்வண்ணம், அகலிகைக்கு வாழ்வு தந்தது. கண்ணபெருமானின் கைவண்ணம் திரௌபதியின் மானம் காத்தது. எங்கள் அம்மாவின் மதிவண்ணம், கிராமங்களின் உயிரைக் காத்தது என்று போற்றிப் புகழும்படியாக (மேசையைத் தட்டும் ஒலி) பட்டம்



சூட்டி, பரிவட்டம் கட்டி, கிராமப்புறங்கள் எல்லாம் கௌரவமாக தலைநிமிர்ந்து நிற்கின்றன என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று, இன்றைக்கு எனக்கு முன்னாலே பேசியவர்கள் எல்லாம், இந்த 4 ஆண்டுக் காலத்திலே வேளாண் பெருமக்களுக்காக எவ்வளவு சலுகைகள், எவ்வளவு தொகைகளைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள் என்று மாமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள். இந்த மாமன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்களுக்கு ஒரு புதிய செய்தியை நான் சொல்ல வேண்டும்.

இன்றைக்கு விவசாயிகளுடைய உற்ற தாயாக, விவசாயிகளுடைய நண்பனாக, விவசாயிகளுடைய அரசாக, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செயல்பட்டு வருகின்றார்கள். அதோடு மட்டுமல்ல; இன்றைக்கு நிர்வாகத் திறமைக்கு ஓர் எடுத்துக்காட்டு. எனக்கு முன்னாலே நேற்றைக்குப் பேசிய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்களே, இந்தியன் ஆயில் நிறுவனம், போக்குவரத்துக் கழகத்தோடு பேச்சுவார்த்தை நடத்தி, ஓராண்டிலே மட்டும் 30 கோடி ரூபாய் மிச்சப்படுத்தினார்கள் என்று. அதேபோன்றுதான் இன்றைக்கு வேளாண்மைத் துறையிலே ஓர் எண்ணிக்கை; எவ்வளவு என்பது முக்கியமல்ல; எண்ணம்தான் முக்கியம். 1969 ஆம் ஆண்டு, 1970 ஆம் ஆண்டுகளில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே கடன் கொடுத்தார்கள். விவசாயப் பெருமக்களுக்கு வங்கிகளிலே கடன் கொடுத்தார்கள். அதற்கு ஜாமீன் போட்டது அன்றைய அரசு. அந்த ஜாமீன் போட்ட அன்றைய அரசு, அந்தப் பணத்தைக் கட்ட வேண்டும் என்று வங்கியாளர்கள் கேட்டால், அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே கைவிரித்து விட்டார்கள்.

> "பார்க்கு மரங்களெல்லாம் நந்தலாலா—நின்றன்
> பச்சைநிறந் தோன்றுதையே நந்தலாலா!"

என்று பாட்டுக்கொரு புலவன் பாரதியார் பாடியதைப்போல, பச்சைப்பட்டு விரித்துப் படுக்கும் பாவப்பட்ட பாட்டாளி வர்க்கத்திற்கு எங்கள் அம்மா பாடுபட்டுக் கொடுத்த பலன்கள், ஏராளம், ஏராளம். 1969-1970 திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே, விவசாயிகள் புதிய மின் மோட்டார்கள் வாங்குவதற்காக, 7 தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலே வாங்கிய கடனுக்கு ஜாமீன் போட்டது, அன்றைய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு.

[திரு. கே. பாண்டுரங்கன்] [2005 மார்ச் 31

விவசாயிகள் வட்டியோடு கடனைக் கட்ட வேண்டுமென்று, வங்கிகள் அமீனாவோடு நின்றன. வாங்கிய கடனோ--நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்; வாங்கிய கடனோ–1969, 1970-களிலே ரூ.44,99,843. கட்ட வேண்டியதோ ரூ. 2 கோடியே 22 இலட்சத்து 92 ஆயிரத்து 981. ஆனாலும் விட்டார்களா, அப் பாவிகள்? வேதனையும், சோதனையும் கலந்து, விவசாயிகளை அலைக்கழித்தார்கள். கடன் வாங்க கையெழுத்துப் போட்ட ஜாமீன்தார்கள், கடனைக் கட்ட வேண்டுமென்று, வங்கியாளர்கள், அரசைக் கட்டாயம் செய்தபோது, நஞ்சையும், புஞ்சையும் கொஞ்சிக் குலவும் தஞ்சை மாவட்டத்திற்குச் சொந்தக்காரர்கள் என மார் தட்டிக்கொள்வோர், நெஞ்சுக்கு நீதியில்லாமல், மறுத்துவிட்டார்கள் என்பதை அன்பிற்குரிய பத்திரிகைத் துறை நண்பர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

வாராது வந்த மாமணி போல, வரையாது கொடுக்கும் வள்ளலாக வந்த எங்கள் அம்மா, 7 வங்கிகளையும் பேச்சுவார்த்தைக்கு அழைத்தார்கள்; ஜப்தி நடவடிக்கையை நிறுத்தினார்கள்; வட்டியைத் தள்ளுபடி செய்தார்கள்; அசல் தொகையை அரசின் மூலமே தாயுள்ளம் கொண்ட தானைத் தலைவி கட்டினார்கள்; பாட்டாளி மக்கள் வயிற்றில் பால் வார்த்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் சொல்வார்கள்; 'ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம்' என்று. ஆனால், எங்கள் அம்மாவினுடைய காலத்திலே, ஏழைகள், ஏழை விவசாயிகள் என்ன சொன்னார்கள் தெரியுமா? "ஏழைச் சொல் அம்பலம் ஏறாது" என்று அந்த விவசாயிகளைப் பார்த்து, அந்த தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுடைய மேலாளர்கள் எல்லாம் அவர்களைக் கேலி செய்தபோது, நிச்சயம் சொன்னார்கள் விவசாயிகள்; "எங்கள் அம்மா எங்களைக் கைவிடமாட்டார்; நம்பியவரை இதுவரையில் கைவிட்டதாக இல்லை; நம்பிக் கெட்டவர்கள்தான் இதுவரையில் இருக்கிறார்களேயொழிய, நம்பியவர்களை இதுவரை யாரையுமே கைவிட்டதில்லை (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் தாய்" என்று அந்த விவசாயப் பெருமக்கள், அந்த வங்கிகளிடத்திலே சொன்னபோது, அவர்கள் ஏளனம் செய்தார்கள். ஆனால், அந்தப் பழமொழி இன்றைக்கு எங்கள் அம்மா அவர்கள் காலத்தில் மாறிவிட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்களே, நம்பாமல் கெட்டவர்கள்தான் அதிகம்.



2005 மார்ச் 31]

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மன்னிக்கவும். நம்பாமல் கெட்டவர்கள்தான் பேரவைத் தலைவர் அவர்களே ஏராளம். நம்பி கெட்டவர்கள் இதுவரை ஒருவர்கூட இல்லை என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அந்த அடிப்படையிலே, "ஏழை சொல் அம்பலம் ஏறாது" என்பது அந்தக் காலப் பழமொழி. ஆனால், என் தாயினுடைய காலத்திலே அந்தப் பழமொழி இன்றைக்கு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே அந்தப் பழமொழி மாறிவிட்டது. ஏழைச் சொல் அம்பலம் ஏறிவிட்டது. அம்பலம் ஏறிய காரணத்தினாலேதான், அவர்கள் வாங்கிய கடனை என் தாய் கட்டியிருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-00

அதேநேரத்திலே, நான் முன்னரே குறிப்பிட்டதைப் போன்று மிகப் பெரிய ஒரு புரட்சியை செய்து வருபவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா. வறட்சியிலேகூட இன்றைக்குப் பசுமைப் புரட்சியைச் செய்துவருகின்றார். அதோடுமட்டுமல்ல; இன்றைக்குத் தொலைநோக்குப் பார்வை, எங்கள் தாய் புரட்சித் தலைவி அம்மாவினுடைய திட்டங்களாக இருந்தாலும் சரி, எண்ணங்களாக இருந்தாலும் சரி, செயல்பாடுகளாக இருந்தாலும் சரி, எதுவாக இருந்தாலும் அம்மா அவர்களுக்கு ஒரு தொலைநோக்குப் பார்வை. அப்படித் தொலைநோக்குப் பார்வைகொண்ட ஒரேயொரு ஒப்பற்ற தாய் இந்தியத் துணைக் கண்டத்திலேயே என் தாய் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைத் தவிர வேறு யாரும் இருக்கமுடியாது என்பதற்கு நான் ஒரு உதாரணத்தைச் சுட்டிக்காட்ட வேண்டுமென்றால், வான்மழை பொய்த்தது, வையகம் தவித்தது. வறட்சியும் கானலும் வந்து கொழித்தது. இயற்கையின் சோதனை என்ன செய்வது? செயற்கையால் வானத்தைச் சுபிட்சிக்க முடியுமா? தாய்ப் பால் போன்றது அல்லவா தண்ணீர்? அதைத் தயாரிக்க முடியுமா? எங்கள் அம்மாவின் ஆறு மொழிப் புலமையால் கிடைத்தது அறிவுக்குச் சவால். அங்கேதான் எழுந்தது மாற்றுப் பயிர்த் திட்டம். அதிலேதான் பிறந்தது இந்தியாவுக்கே வழிகாட்டும் திட்டம். உயிரி எரிபொருள்தான் இனி உலகத்தின் உயிர் என்று உரக்கச் சொல்லுகின்ற திட்டம். எரிபொருள் தட்டுப்பாடு உலகம் தழுவிய பிரச்சினையாக உருவாகியுள்ள கட்டத்தில், குறைந்த நீரில் அதிக தொழில் விளைச்சல், சிறந்த தொழில் நுட்பம். விளையும் பொருளை வாங்கிக்கொள்வதற்குத் தொழில் நியமனங்கள், ஒப்பந்தப் பண்ணை அடிப்படையிலே.

அதோடுமட்டுமல்ல; விவசாயிகளுக்கு நிரந்தர வருமானம் போன்ற சிறப்பு அம்சங்களுடன், எங்கள் அம்மாவினுடைய ஆட்சியிலே அறிவியல் தொலைநோக்குப் பார்வையோடு இந்தியாவிற்கே தந்திருக்கின்ற அருட்கொடை-தான் இந்த மாற்றுப் பயிர்த் திட்டம். நீர்ப்பாசன வசதி இல்லாத, வறட்சியின் பிடியில் வாடிக் கிடக்கும் கிராமங்களைச் செல்வம் கொழிக்கும் கிராமங்களாக மாற்றுவதற்காக காட்டாமணக்கு, சர்க்கரைச் சோளம், சர்க்கரைக் கிழங்கு என்ற மூன்று பயிர்களைப் பயிரிடும் முத்தான திட்டத்தை அம்மா அவர்கள் அறிமுகப்படுத்தியிருக்கின்றார்கள். தொலைநோக்குப் பார்வை படைத்த எங்கள் அம்மா அவர்கள், ஓரே கல்லிலே பல மாங்காய்களை அடிக்கின்றார்கள். ஓரே கல்லிலே பல மாங்காய்களை அடிக்கின்ற அந்தச் சாதுரியம் என் தாய்க்கு மட்டும்தான் உண்டு என்பதை நான் இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இயந்திரங்களையும், வாகனங்களையும் இயக்குவதற்காக, இந்தப் பயிர்களிலிருந்து மாற்று எரிபொருள் உற்பத்திக்கும் வழிகண்டிருக்கின்றார்கள். Bio Diesel—எத்தனால்—இந்தியாவிலே முதல் முறையாக செந்தமிழ்த் திருநாட்டில் உற்பத்தி செய்ய அம்மா அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கின்றார்கள். ஆந்திராவிலேயிருந்து அமைச்சர் ஒருவர், கோவை மாநகரம் வந்து குறிப்பெடுத்துக் கொண்டு போயிருக்கின்றார். அவர் மட்டுமா? இந்தியாவிலே இருக்கின்ற மற்ற மாநில அமைச்சர்கள்கூட தமிழகத்திலே வந்து குறிப்பு எடுத்துக்கொண்டு போயிருக்கின்றார்கள், இந்தத் திட்டம் எப்படிச் செயல்படுகிறது என்பதைத் தெரிந்துகொள்வதற்காக. எத்தனை அற்புதம் பார்த்தீர்களா? சந்தியா தாய்க்குப் பிறந்த எங்கள் சாதனைத் தாய், இந்தியாவுக்கே வழிகாட்டிக் கொண்டிருக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி)

மீண்டும் ஒரு பசுமைப் புரட்சி மாற்றுப் பயிர்த் திட்டத்தால், இனி வறண்ட நிலங்கள் இருக்காது. பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சி மாவட்டங்கள் இருக்காது. வேலையில்லாத் திண்டாட்டம் இருக்காது. வீராணம் போராட்டம் இருக்காது. இனி வறுமைக்கு வேலை இல்லை. வருவாய்க்குக் குறைவில்லை. ஏழைகள் வாழ்வுக்கு இன்றைக்குத் தடையே இல்லை. தரிசு நிலங்களைத் தங்கம் ஆக்குகிறோம். கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்தலாம். மண் அரிப்பைத் தடுக்கலாம். மகளிருக்கு வேலை கொடுக்கலாம். அன்னியச் செலாவணியை அதிகம் ஈட்டலாம். மாசுபட்டுக் கிடக்கும் காற்று மண்டலத்தைச் சுத்தப்படுத்தலாம். எங்கள் அம்மாவின் அறிவியல் பார்வை, காற்றையே சுத்திகரிக்கும் அற்புதக் கலைகளை இன்றைக்கு



டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிகழ்த்திக் கொண்டு வருகின்றார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பெண்கள் உரிமையைக் காப்பதற்காக இந்தியத் துணைக் கண்டத்திலே மட்டுமல்ல, பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு உலகத்திலேயே பெண்களுடைய உரிமையைக் காக்கின்ற ஒப்பற்ற தாயாக என் தாய் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வாழ்ந்து வருகின்றார். பெண் குழந்தைகள் வாழ்வு சிறக்க வழிகாட்டப்படுகிறது. அவ்வாறு வழிகாட்டப்படுவதற்காகத்தான், பெண் குழந்தைகளுக்குத் தென்னம்பிள்ளையை, இன்றைக்கு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்திலே இருக்கின்ற, கிராமப்புறங்களிலே பிறக்கின்ற பெண் குழந்தைகளுக்கு இரண்டு தென்னம்பிள்ளைகளை இலவசமாக வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள். பெண் குழந்தை பிறந்தாலே பெரும் பாவம் என்று எண்ணி, கள்ளிப் பால் கொடுத்த கதை படித்த காலம் போய் இன்று கல்விப் பால்--என் தாய் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கிராமத்திலே படிக்கின்ற--கிராமத்திலே பிறக்கின்ற அந்தப் பெண் குழந்தைகளுக்குக் கல்விப் பால் கொடுத்துத் தாலாட்டி, அறிவுக் கண் திறக்கின்ற கருணை தெய்வம் எங்கள் தாய் டாக்டர் புரட்சித் தலைவி. ஒரு பெண் குழந்தை பிறந்தால், உடனே இரண்டு தென்னம்பிள்ளைகளை இலவசமாக வழங்குகிறது அம்மாவின் அரசு. அதிலிருந்து கிடைக்கும் வருவாயைக்கொண்டு வாழ்ந்து வருவாய் கண்ணா, எதிர்காலத்தில் தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மாவைப் போல வீரத் தாயாக வளர்வாய் கண்ணா என்று தாய்மார்கள், இன்றைக்குத் தாலாட்டு பாடிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொண்டு, பெண் குழந்தைகளை வாழ வைக்கும் அற்புத திட்டத்தை எங்கள் அம்மா செயல்படுத்திக் கொண்டு வருகின்றார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஐந்தாண்டுக் காலமாக விவசாயிகள் கண்ணீர் விட்டார்கள்; எதற்காக விட்டார்கள்? ஐந்தாண்டுக் காலமாக, தென்னை மரத்தை செம்பான் சிலந்தி நோய் என்கின்ற நோய் தாக்கியதன் காரணமாக, அந்தத் தென்னை மரத்திலேயிருந்து வரக்கூடிய வருவாய் அவர்களுக்குக் கிடைக்காத காரணத்தாலே, கண்ணீர் விட்டார்கள். இன்றைக்கு அந்தக் கண்ணீரைத் துடைத்த தலைவி, என் தாய் டாக்டர் புரட்சித் தலைவி. "தென்னையைப் பெற்றால் இளநீர், பிள்ளையைப் பெற்றால் கண்ணீர்"

ஆனால், ஐந்தாண்டுக் காலமாக தென்னை மரங்களை வளர்த்த விவசாயிகள் கண்ணீர் வடித்தார்கள். செம்பான் சிலந்தி என்ற கடுமையான நோய் பாதிப்பால் மரங்கள் பாதித்து, மகசூல் பாதித்து, மரங்கள் பாதித்து, மக்கள் வருந்தியதால், எங்கள் அம்மா அவர்கள், 9-1/2 கோடி-- ஒன்றா, இரண்டா? பேரவைத் தலைவர் அவர்களே, 9-1/2 கோடி இலவசமாக அந்தத் தென்னை சாகுபடிக்காக மருந்துகள் – 9-1/2 கோடி ரூபாயிலே மருந்துகளை இலவசமாக வழங்கியிருக்கின்றார். தமிழகத்திலே இருக்கின்ற 380 வேளாண் விரிவாக்க கிடங்குகளிலே, இன்றைக்கு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்த இலவச மருந்துகளை வழங்கியிருக்கின்றார். என்றும் ஏழைகளை வாழ வைப்பது தென்னை, அந்தத் தென்னையை வாழ வைத்தவர் எங்கள் அன்னை. (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-05*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டப் பேரவை உறுப்பினர், பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த திரு. முரளிதரன் அவர்கள் இருப்பார் என்று எதிர்பார்த்தேன். அவர் ஏனோ போய்விட்டிருக்கின்றார். இன்றைக்குத் தமிழகத்திலே, தருமபுரி மாவட்டத்திற்காக, கிருஷ்ணகிரி மாவட்டத்திற்காக எந்த அளவுக்குத் தனிக் கவனத்தை, என் தாய் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் செய்திருக்கின்றார்; அந்த இரண்டு மாவட்டங்களுக்கும் எந்த அளவுக்குத் தனிக் கவனம் செலுத்தியிருக்கின்றார் என்று என்னுடைய மாண்புமிகு அண்ணன் அன்பழகன் அவர்கள் (சிரிப்பு) எண்ணிப் பார்க்க வேண்டும். ஏனென்றால், இன்றைக்குத் தமிழகத்திலேதான் இரண்டு மாவட்டங்களிலே துல்லிய பண்ணையியல் திட்டத்தை அறிமுகப்படுத்தி, செயல்படுத்தி வருகின்றார். பூவைப் போல மெல்லிய இதயம் படைத்த எங்கள் அம்மா அவர்கள், துல்லிய பண்ணையியல் திட்டம் ஒன்றை கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டங்களிலே தொடங்கியிருக்கின்றார்கள். அதற்காக எவ்வளவு தொகை ஒதுக்கியிருக்கின்றார்கள் தெரியுமா? 7 கோடியே 20 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் தலைவரே. ஒன்றா, இரண்டா? 7 கோடியே 20 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் நிதி, 1,000 ஏக்கர் பரப்பளவு. ஒன்றா, இரண்டா? அதுவும் எப்படி? ஆயிரம் ஏக்கருக்கும் அனைத்தும் இனாம். எண்ணிப் பாருங்கள் தலைவர் அவர்களே, 7 கோடியே 20 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் இனாம். ஏன்? அந்த மாவட்டங்களிலே வறட்சி இருக்கின்றது; வறுமை இருக்கின்றது. வறுமையைப் போக்குவதற்காக,



வறட்சியைப் போக்குவதற்காக, வேலைவாய்ப்பைக் கொடுப்பதற்காக, இவ்வளவு பெரிய தொகையைக் கொடுத்திருக்கின்றார். வறட்சியாலும், தீய வழிக் காட்டுதல்களாலும் சிக்கிச் சீரழியத் தொடங்கிய வாலிபர்களுக்கு மறுவாழ்வு அளிக்கவும், மக்களின் வறுமையைப் போக்கவும், வேலைவாய்ப்பைப் பெருக்கவும், மலர் ஏற்றுமதியை ஊக்குவிக்கவும், மகளிருக்குச் சுய வேலைவாய்ப்பை உருவாக்கவும், சமூகப் பிரச்சினைகளை அவர்கள் துணிவோடு எதிர்கொண்டு, தற்சார்பு உணர்வோடும், தன்னம்பிக்கையோடும் வாழ வழிவகுக்கும் இப்புரட்சித் திட்டத்தை இந்தியத் துணைக் கண்டத்திலேயே என் தாய் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செயல்படுத்தி வருகின்றார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். அந்த மணியைப் பார்த்து எனக்கும் திக், திக் என்கிறது.

அதோடு மட்டுமல்ல; பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்திலேயே பாசனப் பரப்பை அதிகப்படுத்துவதற்காக, உற்பத்தியை அதிகரிப்பதற்காக, உற்பத்திச் செலவைக் குறைப்பதற்காக, மின்சாரத்தை மிச்சப்படுத்துவதற்காக, நிலத்தடி நீரைச் சேமிப்பதற்காக, மின் மோட்டாருக்காக மானியம் எவ்வளவு தெரியுமா? அதுவும் ஒன்றா, இரண்டா? 10.50 கோடி ரூபாய். பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழகம் முழுவதும் இருக்கின்ற செயல்திறனற்ற மின் மோட்டார்களை மாற்றுவதற்காக, பழுதடைந்த மின் சாதனங்களை மாற்றுவதற்காக, 10.50 கோடி ரூபாயை மானியமாக வழங்கியிருக்கின்ற தாய், என் தாய் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இங்கேயிருக்கின்ற பல்வேறுபட்ட பத்திரிகைத் துறை நண்பர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். விதை எப்படியோ அப்படித்தான் செடி; நூல் எப்படியோ அப்படித்தான் சேலை; அதைப்போல, மின் சாதனங்களின் இயக்கமும், செயல்திறனும் எப்படியோ, அப்படித்தான் இலாபமும் நஷ்டமும். ஆகவேதான் மிகப் பழுதடைந்த மின் சாதனங்களை மாற்றியமைத்து, புதுப்பிக்க உதவியாக 50 சதவீதம் மானியமாகவும், செயல்திறனற்ற மின் மோட்டார்களை மாற்றுவதற்காக 25 சதவீதம் மானியமாகவும் வழங்கியதன் மூலம் நிலத்தடி நீரை மிச்சப்படுத்த முடியும்; பாசனப் பரப்பளவை மிச்சப்படுத்த முடியும்; மின்சாரத்தைச் சேமிக்க முடியும்; மின்சாரச் செலவைக் குறைக்க முடியும்; உற்பத்திச் செலவைக் குறைக்க முடியும்; இதன்மூலம் விவசாயிகள் வாழ்க்கையில் வரலாற்று மாற்றத்தை வழங்கி, வசந்த காலத்தை ஏற்படுத்தியிருக்கின்றார் எங்கள் தாய். வையகம் காக்கும்

வான் மழைபோல, நம் விவசாயிகளைக் காப்பவர், மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதை நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு மட்டுமல்ல; 4 ஆண்டுக் காலமாக, 5 ஆண்டுக் காலமாக வறட்சி நம்முடைய மாநிலத்தில் இருக்கின்றது. அந்த வறட்சியை எதிர்நோக்குவதற்காக, இன்றைக்கு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சொட்டு நீர்ப் பாசனத்திற்காக, தெளிப்பு நீர்ப் பாசனத்திற்காக, 50 சதவீதம், ஒன்றா, இரண்டா? 50 சதவீதம் மானியம் கொடுப்பதற்கு ஆணை வழங்கியிருக்கின்றார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். வான் மழை வஞ்சித்துவிட்டது; வறட்சியோ வாட்டியெடுத்தது; நிலத்தடி நீரோ நெருங்க முடியாத அளவிற்குக் குறைந்துபோனது; பாசனப் பரப்பளவு, பெரிதும் பாதித்தது; பரிதாப நிலை சூழ்ந்தது; வேளாண்மையே வினாக் குறியாக மாறத் தொடங்கியது; நெற்றி வியர்வை சிந்தி, நித்தம் நித்தம் பாடுபடும் விவசாயி, வேதனைப்பட்டு, வெந்து விரக்தியின் விளிம்பிலே நின்று, வானம் பார்த்து, வாராதோ மாமழை என்று ஓய்ந்து போனபோது, நம்பிக்கை காய்ந்து போனபோது, தனது விசாலப் பார்வையால், விஞ்ஞான நுட்பத்தால், வினாக் குறிகளையெல்லாம் நொடிப் பொழுதில் வியப்புக் குறிகளாக மாற்றிக்காட்டும் பேராற்றல் பெற்ற எங்கள் அம்மா அறிவித்தார்; 50 சதவீதம் மானியத்தை சொட்டு நீர்ப் பாசனத்திற்காக, தெளிப்பு நீர்ப் பாசனத்திற்காக, வாடிய பயிருக்கு வான் மழை போல, அம்மாவின் அறிவிப்பு, வேளாண் பெருமக்களின் நெஞ்சங்களிலே பால் வார்த்ததுபோல பெருமகிழ்ச்சியையூட்டி இருக்கின்றது என்பதை நான் இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 1-10*

பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு வேளாண் பெருமக்கள் எவ்வளவுதான் கஷ்டப்பட்டு, எவ்வளவுதான் சிரமப்பட்டு உற்பத்தியைச் செய்தாலும், அவர்கள் சாகுபடி செய்த விளைபொருட்களை, நியாயமான முறையிலே அவர்களுக்குக் கட்டுப்படியான விலையிலே கொடுக்கப்பட வேண்டுமென்ற ஒரு தொலைநோக்குப் பார்வை, அந்தத் தாயுள்ளம் கொண்ட தானைத் தலைவிக்குத்தான் இருந்தது. ஆனால், 1996 ஆம் ஆண்டிலிருந்து 2001 ஆம் ஆண்டுவரை, மக்கள் விரோத நடவடிக்கையை மேற்கொண்ட திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாளர்களுக்கு இருந்ததா? அன்றைக்குப் பணம் இருந்தது;



வேளாண் விற்பனை வாரியத்திலே இருந்தது; அதைச் செலவு செய்தார்களா? உள் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தந்தார்களா? கிடையாது. ஆனால் என் தாய் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இன்றைக்கு 5 ஆண்டுக் காலத்திலே, இந்த 4 ஆண்டுக் காலத்திலே எவ்வளவு செலவு செய்து, உள் கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி, வேளாண் பெருமக்கள் உற்பத்தி செய்கின்ற அந்த விளைபொருட்களுக்குக் கட்டுப்படியான விலை கிடைப்பதற்காக, அவர்களுக்கு வசதிவாய்ப்புகளை உருவாக்கியதற்காக, எந்த அளவுக்கு நிதியைச் செலவு செய்து இருக்கிறார்கள் என்பதை நான் இந்தநேரத்திலே கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

"சும்மா கெடந்த நிலத்தை கொத்தி
சோம்பல் இல்லாம ஏர் நடத்தி
கம்மா கரையை ஒசத்திக் கட்டி
கரும்பு கொல்லையில் வாய்க்கா வெட்டி,
சம்பா பயிரைப் பிடுங்கி நட்டு,
தகுந்த முறையில் தண்ணீர் விட்டு
நெல்லு வெளஞ்சிருக்கு—வரப்பு
உள்ள மறைஞ்சிருக்கு
காடு வெளஞ்சென்ன மச்சான்—நமக்கு
கையுங் காலுந்தானே மிச்சம்
காடு வெளையட்டும் பொண்ணே—நமக்குக்
காலம் இருக்குது பின்னே"

என்று நம் தலைவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் பாடினார். இன்றைக்குக் காடு திருத்தி, கழனி கண்டு, கழனி திருத்தி, நாடு காணும் நம் ஏழை விவசாயப் பெருங்குடி மக்கள், தம் உழைப்பின் பயனை அறுவடை செய்து, நெல் மணிகளாக, தானியங்களாகக் குவிக்கும்போது, அவற்றைச் சேமித்து விற்பனை செய்வதற்கும், வேளாண் துறையைச் சார்ந்த ஆக்கப்பூர்வமான அறிவுரைகளைப் பெறுவதற்கும், ஆலோசனைகளை அளிப்பதற்கும் உரிய வழிவகைகள் செய்யப்பட வேண்டாமா? எதையும் தொலைநோக்குப் பார்வையுடன் சிந்தித்துப் பார்க்கக்கூடிய எங்கள் அம்மா, விவசாயிகளின் வேதனைகளைப் புரிந்துகொண்டு, வேளாண் விற்பனைக் கூடங்களில் உயர்தர உள்கட்டமைப்பு வசதிகளைப் போர்க் கால அடிப்படையிலே ஏற்படுத்தி வருகின்றார்கள்.

உலர் களங்கள், கிடங்குகள், எடை மேடைகள், தங்குமிடம், வானொலி, தொலைக்காட்சி, இன்னும் மின்னணு தொலைப் பயணங்கள், கலந்தாய்வுக் கூட்டங்கள் முதலிய வசதிகளுக்காக, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே ஒதுக்கிய நிதியைக் காட்டிலும் கூடுதலான நிதியை அனுமதித்த உண்மையான விவசாயிகளினுடைய ஆட்சி, அம்மா அவர்களுடைய ஆட்சிதான் என்பதை இன்றைக்குச் செயல்மூலம் நிரூபித்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளுக்காக, நீலிக் கண்ணீரும், முதலைக் கண்ணீரும் வடிக்கின்ற ஒருசில கையாலாகாத அரசியல்வாதிகளைப்போல் அல்லாமல், கண்கள் முழுவதும் கருணையைத் தேக்கி, கழனிகள் முழுவதும் பயிர்களாக்கி, வேளாண் புரட்சி செய்துகொண்டிருப்பவர் எங்கள் அம்மா. தாயின் கருணையும், சேயின் பாசத்தையும் கொண்டு விளங்கும் அம்மாவின் ஆட்சியிலே, 4 ஆண்டுக் காலத்திலே மட்டும் வேளாண் விற்பனை உள்கட்டமைப்பு வசதிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவு செய்த தொகை எவ்வளவு தெரியுமா? பேரவைத் தலைவர் அவர்களே, 52 கோடியே 37 இலட்சத்து 73 ஆயிரம் ரூபாய். ஆனால், விலை மோரிலே வெண்ணெய் எடுக்கும் கூட்டம். என்ன மோரிலே? விலைக்கு வாங்குகிற மோரிலே—விலைக்கு வாங்குகிற மோரிலே—(மேசையைத் தட்டும் ஒலி) வெண்ணெய் எடுக்கும் கூட்டம். தோல் இருக்க சுளை விழுங்கும் கூட்டம். விவசாயிகளின் வாழ்க்கையை விழுங்கிய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 5 ஆண்டுக் காலத்திலே ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை, 29 கோடியே 54 இலட்சத்து 77 ஆயிரம் ரூபாய். அம்மா ஆட்சியில், 4 ஆண்டுக் காலத்திலே, அதிகப்படியாக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ. 22 கோடியே 82 இலட்சத்து 96 ஆயிரம். விவசாயிகளுடைய நண்பன் யார்? கோபாலபுரத்துக் கோமாளியா? போயஸ் தோட்டத்துப் பொன்மகளா? எண்ணிப் பார்க்க வேண்டும். ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

அன்பிற்குரிய பத்திரிகைத் துறை நண்பர்கள், இன்றைக்கு விவசாயிகளுடைய உற்ற நண்பர் யார் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். அதோடு மட்டுமின்றி, தலைவர் அவர்களே, நான் எண்ணிப் பார்க்கிறேன். இன்றைக்கு மாண்புமிகு திரு. ஹேமச்சந்திரன் —அருமைப் பெரியவர் திரு. ஹேமச்சந்திரன்—இருப்பார் என்று எதிர்பார்த்தேன். மாண்புமிகு திரு. பழனிசாமி அவர்கள் இருப்பார்கள் என்று எதிர்ப்பார்த்தேன். இன்றைக்கு 86 இலட்சம் தொழிலாளர்கள் வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழ்ந்து வருகின்ற ஏழையெளிய தொழிலாளர்களுக்கு, விவசாயத் தொழிலாளர்களுக்கு, 86 இலட்சம்



தொழிலாளர்களுக்குக் கூலி உயர்வைக் கொடுத்திருக்கிறார்கள் என்றால் இது சாதாரண காரியமா? கம்யூனிஸ்ட் ஆளுகின்ற மாநிலத்திலே செய்திருக்கின்றார்களா? எண்ணிப் பார்க்கவேண்டும் நண்பர்களே. இன்றைக்கு 86 இலட்சம் விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு,

"....வரப்பெடுத்த வயலும், ஆறு
தேக்கியநல் வாய்க்காலும் வகைப் படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன்வி ளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களெலாம் எவரின் தோள்கள்?
கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்
கருவியெலாம் செய்துதந்த கைதான் யார்கை?"

என்று சிங்கநிகர் கவிஞன் பாவேந்தன் பாரதிதாசன் பாடிய பாடல் வரிகளை நெஞ்சினிலே நிலைநிறுத்தி, தமிழக வேளாண்மை மேன்மை கருதி, வேளாண்மைத் தொழில்களின் வாழ்வுக்கு உத்தரவாதம் தருகின்றவகையிலே கூடுதல் ஊதிய உயர்வு என்னும் கொள்கை முடிவெடுத்து, வேளாண் தொழிலாளர்களின் காவலன், வேளாண் மக்களின் விடிவெள்ளி அம்மா அவர்கள், அன்றாடம் மக்கள் நலத் திட்டங்களைச் சட்டசபையில் அறிவிக்கிறார்கள் என்றால், உண்மையான பொதுநலவாதிகள் என்ன செய்ய வேண்டும்? இன்றைக்குத் தகரத்தைக் கண்டுபிடிப்பதற்கு முன்பாகவே, உண்டியலைக் கண்டுபிடித்து வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கின்ற கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த நண்பர்களே, மக்களின் வரிப் பணம் மக்களுக்குப் போய்ச் சேருகின்றது; உதிரம் கொதிக்க உழைக்கின்ற மக்களுக்கு உரிய பலன் கிடைக்கிறது; நலத் திட்டங்கள்மூலம் நலவாழ்வு பெருகுகின்றது என்ற அரசியல் அறிவிப்புகளை வரவேற்று, வாழ்த்து அல்லவா சொல்ல வேண்டும்? வாய்தவறிகூட, வாழ்த்துமொழி வந்துவிடக் கூடாது என்று இன்றைக்குச் சட்டசபையைப் புறக்கணித்து இருக்கின்றார்களே, வசைகளை அசைபோட்டுக் கொண்டே சட்டசபைக்குள் நுழையும் இந்த போலி ஜனநாயகவாதிகள், மக்களின் மகிழ்ச்சியைத் தாங்கிக்கொள்ள முடியாத மன நோயாளிகள். வானம் நிலைக்குது, சோலை தழைக்குது, ஏழைகளுக்கு அதில் என்ன கிடைக்குது? கூழைக் குடிக்குது, நாளைக் கழிக்குது, ஓலைக் குடிசையில் ஒட்டிக் கிடக்குது என்று ஏழ்மையில் போராடிக் கொண்டிருக்கிற ஏழை விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு அறிவித்ததைக்கூட அவர்களால் பொறுத்துக்கொள்ள முடியவில்லையென்றால், அவர்கள் போட்டுக்கொண்டிருப்பது வெறும்

[திரு. கே. பாண்டுரங்கன்] [2005 மார்ச் 31

பொதுநல முகமூடிதான் என்பது பொது மக்களுக்குப் புரியும் என்பதை நான் இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக்கொண்டு, வியர்வையிலே படுத்து, வெட்டவெளிப் பொட்டலிலே உழைத்து, ஓடாகிப்போகின்ற ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்குக் கூலி உயர்வு அறிவித்ததைப் பாராட்டி நான்கு வார்த்தைகள் பேசுவதற்கு நாகரிகம் இல்லாத, நாக்கு இல்லாதவர்கள், போக்கு இல்லாமல் வெளிநடப்புச் செய்து, ஓரேயடியாகப் போய்விட்டார்கள். போ! (சிரிப்பு)

*பிற்பகல் 1-15*

வெறும் வாயை மென்றே பழக்கப்பட்டவர்கள், அவல் கிடைக்காதா என்று அலைந்துகொண்டிருக்கின்றார்கள். எங்கள் அம்மாவின் அறிவுக் கூர்மையால் இந்தப் பொரி மூட்டைகள் எல்லாம் போகிற இடம் தெரியாமல் போய்விடும் வருங்காலத்திலே என்பதை நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதோடுமட்டுமின்றி, (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் அம்மாவின் காலத்தை வெல்லும் இந்த நிதிநிலை அறிக்கையைக் காகிதப் பூ என்று கதைவிடுகின்றார்கள். அவர்கள் இங்கு இருக்கின்றார்களா? அவர்கள் இருந்தால் நான் அவர்களுக்குப் பதில் சொல்வேன். என்னுடைய பதிலைக் கேட்பதற்குத் திராணியற்றவர்கள், இன்றைக்கு ஓடி ஒளிந்துகொண்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் காகிதப் பூ கதாநாயகர்களின் காகிதக் கதைகளைக் கண்டு, எங்கள் காவியத் தலைவி கலங்கியதாகச் சரித்திரமே கிடையாது. எதற்கும் கலங்கியதாகச் சரித்திரமே கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) மலர் மாலையின் மகிமை மத யானைகளுக்குத் தெரியுமா? மலை வாழையின் இனிமை மண்புழுக்களுக்குத் தெரியுமா? ஒன்று சொல்கின்றேன். இந்த ஆண்டின் தொடக்கத்திலே ஜனவரி ஒன்று, பிப்ரவரி ஒன்று. ஆனால், எங்கள் அம்மாவின் பட்ஜெட் திட்டத்திலே மட்டும்தான் எந்த வரியுமே கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியத் துணைக் கண்டத்திலே மட்டுமல்ல, அகில உலகத்திலேயே எந்த ஒரு நாட்டிலேயும் இப்படி ஒரு வரி இல்லாத பட்ஜெட்டைச் சமர்ப்பித்திருக்கின்றார்களா? சொல்லுங்கள், பார்க்கலாம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் வெளிநாட்டிற்குச் சென்றிருக்கிறீர்கள். எந்த நாட்டிலே வரியே இல்லாத ஒரு பட்ஜெட்டைச் சமர்ப்பித்திருக்கின்றார்கள்? வரியே இல்லாத



2005 மார்ச் 31] [திரு. கே. பாண்டுரங்கன்]

பட்ஜெட்டில், வரிக்கு வரி தெரிவதெல்லாம் எங்கள் அம்மாவின் முகவரிதான். வரியே இல்லாத பட்ஜெட்டில், வரிக்கு வரி தெரிவதெல்லாம் எங்கள் அம்மாவின் முகவரிதான், பேரவைத் தலைவர் அவர்களே. (மேசையைத் தட்டும் ஒலி)

தொட்டதெல்லாம் துலங்கும் தூய மாதரசி, எங்கள் அம்மாவின் கைபட்டால் போதும், பட்டதெல்லாம் பொன்னாகும். எங்கள் அம்மாவின் கைபட்டால் போதும் பட்டதெல்லாம் பொன்னாகும். (மேசையைத் தட்டும் ஒலி) கால் பட்டால் போதும், களர் நிலமும் பூப் பூக்கும் தலைவரே! இன்றைக்குத் தரிசு நிலங்கள் எல்லாம் விளைநிலங்களாக மாறிக்கொண்டிருக்கின்றன என்றால், யாரால்? எண்ணிப் பாருங்கள். எங்கள் அம்மாவின் கண்பட்டால் போதும், பாலைவனமும் சோலைவனமாகும். எங்கள் அம்மாவின் அரச சபையில் நின்றுகொண்டு அடியேன் சொல்கின்றேன், பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை அம்மாவின் ஆட்சியில்

**'எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது;**

**எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது;**

**எது நடக்க இருக்கிறதோ,**

**அதுவும் நன்றாகவே நடக்கும்.'** (மேசையைத் தட்டும் ஒலி)

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் தனக்கே உரிய அடுக்குமொழியில் அழகாகச் சொல்வார்கள்: 'கேட்டுப் பழகிய கை, போட்டுப் பழகிய பை, சொல்லிப் பழகிய பொய்; இந்த மூன்றையும் மாற்ற முடியாது' என்று. ஒருசிலரும் அப்படித்தான். பழக்கத்தையே வழக்கமாக்கிக்கொண்டு, வசைபாடப் பிறந்தவர்கள்; சொல்லிப் பழகிய பொய்களை, அடிக்கடி அள்ளிப் பழகியிருந்தார்கள். ஆயிரம் முறை அடுக்கிச் சொன்னால், பொய்யும் உண்மையாகும் பேரவைத் தலைவர் அவர்களே, என்ற கோயபல்ஸ் தத்துவத்தின் குடியுரிமை பெற்றவர்கள்; கொடுங்கோன்மை கற்றவர்கள்; பெருந்தன்மையற்றவர்கள், பெரிய கூட்டணிக்காக தன்னுடைய கொள்கைகளையே காற்றிலே பறக்கவிட்டவர்கள். இன்றைக்கு அவர்களைத் திருத்தவே முடியாது. கற்பூரப் பாத்தி கட்டி, அதிலே அத்தர், புனுகு, ஜவ்வாது உரமிட்டு, பன்னீரைத் தண்ணீராகப் பாய்ச்சினாலும்கூட, வேம்பு கரும்பு ஆகாது தலைவர் அவர்களே, இந்த வேடிக்கை மனிதர்களின் போக்கு மாறாது. இவர்கள் யாரிடத்தில் மோதுகிறார்கள்? எண்ணிப் பார்க்கவேண்டும், தலைவர் அவர்களே. இவர்கள் எல்லாம் யாரிடத்தில் மோதுகின்றார்கள்? என் தாயிடத்திலா? (மேசையைத் தட்டும் ஒலி)

குருவிகள் எல்லாம் கூட்டணி சேர்ந்து குன்றில் முட்டுவதா? கொம்பில் ஆடும் குரங்குக் கூட்டம், வானத்தைத் தட்டுவதா? பள்ளத்தாக்கிலே கிடப்பவர்கள் இமயத்தை எட்டுவதா? பாவம், இவர்கள் இப்படியே குப்பைக் கொட்டுவதா என்று கேட்டு, நாட்டு மக்கள் எல்லாம் நாள்தோறும் கைகொட்டிச் சிரித்துக்கொண்டிருக்கின்றார்கள், பேரவைத் தலைவர் அவர்களே.

பொய்யிலே கால்படி, புறத்திலே முக்கால் படி, வையகத்தை ஏமாற்றும்படி, வசனங்களை எழுதிவரும் வயோதிகரை நம்புவது எப்படி என்று மக்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டார்கள், தலைவர் அவர்களே. (மேசையைத தட்டும் ஒலி) எங்கும் அம்மாவின் சாதனைப் பேச்சுகளால், சங்கமிக்கும் புதிய சகாப்த திட்டங்களால், சட்டசபை என்பதே இன்றைக்குச் சரித்திரச் சபையாகிக் கொண்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் அம்மா அமர்ந்தால் இந்தச் சட்டமன்றம் சரித்திரச் சபை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எண்ணிப் பார்க்கவேண்டும்.

மாறாக, மற்றவர்கள் ஏற்படுத்தும் தேவையற்ற சப்தங்களால், கூச்சல்-குழப்பங்களால் சட்டசபை தினம் அவர்கள் இருந்தபோது சப்தம் நிறைந்த சபையாக இருந்தது. நல்லவேளை, தலைவர் அவர்களே, அவர்கள் போய்விட்டது ஒரு வகையில் நல்லதுதான். ஏன் என்றால், இன்றைக்கு இங்கே அவர்கள் எல்லாம் இல்லாத காரணத்தாலே, மொத்த சபையும் தூய சபையாக, அருமையாக, சபையினுடைய இலக்கணத்தோடு நடந்துகொண்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) சரியான மேய்ப்பர் இல்லாத ஆடுகள், இப்படித்தான் தறிகெட்டு ஓடுவார்கள். தலைமை சரியில்லை; அதனாலே அவர்களுடைய நிலைமையே சரியில்லை, தலைவரே, அவர்களுடைய நிலைமையே சரியில்லை, ஆமாம். (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்றத்தில் வெளிச்சமான விவாதங்களில் பங்கேற்கும் வித்தகம், வீறுகொண்ட வினாக்களுக்கு விடை அளிக்கும் விவேகம், விஞ்ஞானத் தொழில்நுட்ப விளைவுகளை வெளிபடுத்தும் நுண்ணறிவு, இவற்றில் எங்கள் அம்மாவிற்கு இணை எங்கள் அம்மாதான். (மேசையைத் தட்டும் ஒலி) மற்றவர்கள் எல்லாம் சும்மா. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

*பிற்பகல் 1-20*

தானே கேள்விகளை எழுப்பி, தானே பதில்களையும் தயார் செய்து, தானே அனுப்பி, தானே வெளியிட்டு, தானே படித்து, தானே ரசித்து,



தானே முரசொலித்துக் கொள்கின்ற தலைவரா எங்கள் அம்மா? கிடையாது. அது யார்? கோபாலபுரம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆயிரம் கணைகள் அக்கினி அம்புகளாய் ஆர்ப்பரித்து வந்தாலும், எங்கள் அம்மா அள்ளி வீசுகின்ற புள்ளி விவரங்களால் துள்ளித் தெறித்து அவையெல்லாம் தூரப் போய் விழுகின்றன. அதைச் சொல்லி மகிழ்ந்தால், அதுவொரு சுந்தர காண்டமாகும், பேரவைத் தலைவர் அவர்களே.

நிறைவாகச் சொல்கிறேன். மணி வேறு ஆகிவிட்டது. வெள்ளை ஆடை அணிபவர் எல்லாம் வள்ளலார் ஆகி விடமுடியாது, பேரவைத் தலைவர் அவர்களே. கருப்புச் சட்டை அணிபவர் எல்லாம் இன்றைக்குப் பெரியார் ஆகிவிட முடியாது. கதர்ச் சட்டை அணிபவர் எல்லாம் காமராசர் ஆகிவிட முடியாது. காவி ஆடை அணிபவர் எல்லாம் விவேகானந்தர் ஆகிவிட முடியாது. மஞ்சள் ஆடை அணிபவர் எல்லாம் மகான் ஆகிவிட முடியாது. தலைவர் அவர்களே, மகானாக ஆகிவிட முடியாது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) சிறு நரிகள் கூட்டம் சென்று சிங்கத்தை வெல்லமுடியாது, தலைவர் அவர்களே. எந்தக் கூட்டணிக்கும் அஞ்சாதவர் எங்கள் அம்மா; விரோதிக்கும் அஞ்சாதவர், துரோகிக்கும் அஞ்சாதவர், பகைவருக்கும் அஞ்சாதவர் புரட்சித் தலைவி அம்மா; வஞ்சகர்தம் சூழ்ச்சிக்கு அஞ்சாதவர் அம்மா; சிங்கத்தின் சீற்றத்தையும், தங்கத்தினுடைய தோற்றத்தையும், சிந்தனையிலே மாற்றத்தையும், தரணியை ஆளுகின்ற ஆற்றலையும் பெற்றிருக்கின்ற காரணத்தாலே, எத்தனைக் குள்ளநரிகள் இன்றைக்குக் கூட்டணி அமைத்தாலும் (மேசையைத் தட்டும் ஒலி) தனிப்பெரும் ஆற்றலை ஒருங்கே பெற்றிருக்கின்ற என் தாய் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை அசைத்துப் பார்த்துவிட முடியாது. எறும்பின் காலடி ஓசையைக்கூட, இறைவன் அறிவான் என்பார்கள்; எங்கள் அம்மாவும் அப்படித்தான். இங்கே வராமல் எங்கோ இருந்துகொண்டு எதிர்க் கட்சியினர் வகுக்கின்ற எத்தகைய வியூகங்களையும், தன் மதியுகத்தால் உடைத்து, நொறுக்கி, தூள் தூளாக்குகின்ற மன உறுதி படைத்தவர் (மேசையைத் தட்டும் ஒலி), இயற்கையான துணிச்சல்தான் எங்கள் அம்மாவின் இணையற்ற சொத்து. இயற்கையான துணிச்சல்தான் எங்கள் அம்மாவினுடைய இணையற்ற சொத்து. அந்த இயற்கையை வெல்ல எவராலும் முடியாது. சொல்லுங்கள் பார்க்கலாம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வானத்திலே வீடு கட்டி வாழ முடியுமா? சொல்லுங்கள், பார்க்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்களே, சொல்லக்கூடிய நிலையிலேயா நான் இருக்கிறேன்? (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** வானத்திலே வீடு கட்டி வாழ முடியுமா? வான வில்லை வளைத்து இங்கு அம்புபோட முடியுமா? நிலவை எடுத்து, வீட்டுச் சுவரில் மாட்ட முடியுமா? உலவும் காற்றைக் கையிலெடுத்துக் காட்ட முடியுமா? பூவை விட்டு வாசத்தைப் பிரிக்க முடியுமா? பூவைப் போல நட்சத்திரத்தைப் பறிக்க முடியுமா? தண்ணீர் மேலே காலை வைத்து நடக்க முடியுமா? தண்ணீர் இல்லாமல் உயிருந்தான் இருக்க முடியுமா? தலையில்லாமல் குழந்தைகள்தான் பிறக்க முடியுமா? தாய்ப் பாலை விஞ்ஞானத்தால் கொடுக்க முடியுமா, தலைவரே? இத்தனையும் முடிந்தாலும், எத்தனை? இதெல்லாம் முடிந்தாலும், இத்தனையும் முடிந்தாலும் ஒன்று மட்டும் முடியுமா? சத்தியமாக தி.மு.க. எந்த ஜென்மத்திலேயும் ஜெயிக்க முடியாது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அம்மாவை ஜெயிக்க வேண்டுமென்றால், இன்னொரு ஆள் பிறக்கவேண்டும் தலைவரே, இன்னொரு ஆள் பிறக்க வேண்டும். பாராளுமன்றத் தேர்தலிலே தோற்றுவிட்டோம் என்றால், அது பொய் வாக்காளர்கள், வாக்காளர்களில் பொய். அற்புதத்தைச் சொல்வதற்கு, அந்த அற்புதத்தை எல்லாம், அம்மாவினுடைய அருமை பெருமைகளையெல்லாம் சொல்வதற்கு எனக்கு நேரம் போதாது தலைவர் அவர்களே, நேரம் போதாது.

எஸ்.ஆர்.பி. பற்றி எங்கள் அம்மா சொன்னார்கள், 'காலி டப்பா', இத்தோடு நொறுங்கிப் போச்சுப்பா, அந்த ஸ்டாலின் அப்பா, கணக்குக்கூட முடிஞ்சு போச்சுப்பா. அடுத்த முறையும் அம்மாதான், எழுதி வைத்துக்கொள்ளுங்கள் தலைவரே. உங்கள் கூட்டைப் பற்றி கவலையில்லை. தலைவரே, குறித்து வைத்துக் கொள்ளுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியோடு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க, இன்றைக்கு வேளாண்மைத் துறையின் சார்பாகப் புதிய அறிவிப்புகளை வெளியிட வேண்டுமென்று, எங்கள் தாய் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எங்களுக்கு ஆணை வழங்கியிருக்கிறார்கள்.



பிற்பகல் 1-25

2004-2005 ஆம் ஆண்டு, மாநிலத்தின் உணவு தானிய உற்பத்தி 90 இலட்சம் மெட்ரிக் டன்னைக் கடக்கும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. 2005—2006 ஆம் ஆண்டு, 97.27 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி இலக்கினை அடைய, அரசு, இலக்கு நிர்ணயித்துள்ளது, அதில், 78 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி உற்பத்தியும் அடங்கும்.

பருத்தியில், விவசாயிகளுக்கு இலாபகரமான விலையினை உறுதிப்படுத்தி, சாகுபடிப் பரப்பினை உயர்த்துவதற்காக, பிரபலமான பருத்தி ஆலைகளுடன், ஒப்பந்தப் பண்ணை முறை ஒன்றினை வேளாண்மை ஆணையரகம் உருவாக்கியுள்ளது. நமது மாநிலத்தில் உருவாக்கப்பட்ட ஒப்பந்தப் பண்ணைக்கான உடன்படிக்கை முறையினை, அனைத்து மாநிலங்களும் பின்பற்ற வேண்டும் என்று மத்திய அரசு பரிந்துரை வழங்கியுள்ளது. மக்காச் சோளம், எள் மற்றும் பயறு வகைகள் போன்ற குறைந்த நீர்த் தேவை உடைய பயிர்கள், ஒப்பந்தப் பண்ணைய முறையின்கீழ் கொண்டுவரப்படும்.

இடுபொருட்கள் இருப்பு, சந்தை நிலவரம் மற்றும் பல்வேறு திட்டங்கள் மூலமாகக் கிடைக்கும் உதவிகள் போன்ற தகவல்களை, விவசாயிகளுக்கு விரைவாகப் பரிமாற்றம் செய்வதற்கு, தகவல் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் ரூ.19.06 கோடி நபார்டு வங்கிக் கடன்மூலம் செயல்படுத்தப்படும்.

விவசாயப் பெருமக்களுக்குப் பயனளிக்கத்தக்க வகையில், ஊராட்சி ஒன்றிய அளவில் ஒருங்கிணைக்கப்பட்ட விரிவாக்க சேவை, ஒரே இடத்தில் ஒற்றைச் சாளர முறையில் வழங்கப்படவேண்டும். இதற்காக ரூ.100 கோடி செலவில் 200 வேளாண்மை விரிவாக்க மையங்கள் மாற்றி அமைக்கப்படும்.

தோட்டக்கலை — உயர் தொழில்நுட்ப முறைகள் மற்றும் திறன்மிக்க நீர் மேலாண்மை மூலமாக தோட்டக்கலைப் பயிர்களில், துல்லியப் பண்ணைமுறை, கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் 100 எக்டர் பரப்பளவில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 2005—2006 ஆம் ஆண்டு ரூ.10 கோடி நிதி ஆதாரத்துடன் மேலும் 6 மாவட்டங்களில் தமிழ்நாடு துல்லியப் பண்ணைமுறைத் திட்டம் செயல்படுத்தப்படும்.

தமிழ்நாட்டில் வாழைக்கென, திருச்சி மாவட்டத்தில் செயல்பட்டுவரும் காட்டுப்புத்தூர் துணை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு, நிலம் கையகப்படுத்தப்பட்டு, ரூ.1 கோடி செலவில் தேவையான அனைத்து உள்கட்டமைப்பு வசதிகள் செய்து தரப்படும்.

ஆண்டிப்பட்டி (தேனி மாவட்டம்), பொய்கை (வேலூர் மாவட்டம்), சென்னசமுத்திரம் (ஈரோடு மாவட்டம்), ஒரத்தநாடு (தஞ்சை மாவட்டம்), நத்தம் (திண்டுக்கல் மாவட்டம்), ஒடுகத்தூர் (வேலூர் மாவட்டம்), அம்பாசமுத்திரம் (திருநெல்வேலி மாவட்டம்), நாரணம்மாள்புரம் (திருநெல்வேலி மாவட்டம்) ஆகிய 8 இடங்களில் செயல்பட்டுவரும் தினசரி/கிராமிய வாரச் சந்தைகளுக்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகள், சந்தை மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.2 கோடி செலவில் அமைக்க அம்மா அவர்கள் ஆணை வழங்கியிருக்கிறார்கள்.

புதுக்கோட்டை, திண்டுக்கல், ஈரோடு மற்றும் நாகப்பட்டினம் விற்பனைக் குழுக்களுக்குத் தலைமை அலுவலகக் கட்டடம் கட்ட ரூ. 2 கோடி, அம்மா அவர்கள் ஒதுக்கி ஆணை வழங்கியிருக்கிறார்கள்.

200 கிராமங்களில் ரூ.4 கோடி செலவில் உலர்களங்கள் அமைப்பதற்காக அம்மா அவர்கள் ஆணை வழங்கியிருக்கிறார்கள்.

விவசாயிகளுக்கு வழங்கப்படும் பொருளீட்டுக் கடன் தொகைக்கான வட்டி, 9 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாகக் குறைக்கப்படும். வியாபாரிகளுக்கு வழங்கப்படும் பொருளீட்டுக் கடன் தொகைக்கான வட்டி, 14.5 விழுக்காட்டிலிருந்து 9 விழுக்காடாகக் குறைக்கப்படும்.

கீழ்ப்பெண்ணாத்தூர் (திருவண்ணாமலை மாவட்டம்), சாத்தான்குளம் (தூத்துக்குடி மாவட்டம்), பெரம்பலூர் (திருச்சி மாவட்டம்), ஸ்ரீமுஷ்ணம் (கடலூர் மாவட்டம்) மற்றும் வடுவூர் (திருவாரூர் மாவட்டம்) ஆகிய 5 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில், அனைத்து வசதிகளுடன்கூடிய நவீன உள்கட்டமைப்பு வசதிகள், ரூ.3.75 கோடி செலவில் ஏற்படுத்த அம்மா அவர்கள் ஆணை வழங்கியிருக்கிறார்கள்.

புகலூர், அம்பாசமுத்திரம், குலவை, குடியாத்தம், காஞ்சிபுரம், உடுமலைப்பேட்டை, திண்டிவனம், இராஜபாளையம், பரமக்குடி, பழனி ஆகிய 10 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் ரூ.2.50 கோடி செலவில் கூடுதலாகக் கிட்டங்கிகள் கட்ட, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணை வழங்கியிருக்கிறார்கள்.



10 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில், எடைபோட்டு, மூட்டை தைக்கும் தானியங்கிக் கருவிகள், ரூ. 35 இலட்சம் செலவில் வாங்குவதற்கு அம்மா அவர்கள் ஆணை வழங்கியிருக்கிறார்கள்.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் அதிக அளவில் விளைபொருட்கள் விற்பனை செய்யும் 50 விவசாயிகள், விளைபொருட்களை அதிக அளவில் கொள்முதல் செய்யும் 30 உரிமம் பெற்ற வியாபாரிகள், இதர மாநிலங்களில் கடைப்பிடிக்கும் விற்பனை முறைகளைப் பார்வையிட ரூ.8 இலட்சம் செலவில் வணிகப் பயணம் மேற்கொள்ள, அம்மா அவர்கள் மகிழ்ச்சியோடு ஆணை வழங்கியிருக்கிறார்கள்.

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறைக்கென அனைத்துத் தொழில்நுட்ப வசதிகளுடன்கூடிய வலைதளம் ஒன்று, தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தில் ரூ.4.5 இலட்சம் செலவில் உருவாக்க, அம்மா அவர்கள் ஆணை வழங்கியிருக்கிறார்கள்.

தமிழ்நாடு உழவர் நல நிதித் திட்டத்தின்கீழ். விவசாயி விபத்தினால் உயிரிழக்க நேரிட்டால், அவரது நியமனம் பெற்றவர்/வாரிசுதாரர்களுக்கும், நிரந்தர ஊனமுற்றால் அவ்விவசாயிக்கும் வழங்கப்படுவதற்காக நிவாரணத் தொகையாய் ரூ.75,000/-லிருந்து ரூ.1 இலட்சமாக இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு வழங்கியிருக்கிறார்கள்.

உணவு பதப்படுத்தப்படும் தொழில்கள் மற்றும் வேளாண் ஏற்றுமதி மண்டலம் குறித்து 5 குறும்படங்கள் ரூ.10 இலட்சம் செலவில் தயாரிப்பதற்காக, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணை வழங்கியிருக்கிறார்கள்.

கொடைக்கானலில், மலர் சாகுபடி மேம்பாட்டிற்காக, தேவையான உள்கட்டமைப்பு வசதிகள், ரூ.20 இலட்சம் செலவில் அமைத்துக் கொடுப்பதற்காக, அம்மா அவர்கள் ஆணை வழங்கியிருக்கின்றார்கள்.

நீலகிரியில் அமைக்கப்படும் மலர் ஏற்றுமதி மையத்தில் தரம் பிரித்தல், வகைப்படுத்துதல், சிப்பம் கட்டுதல், முன் குளிர்விப்பான் மற்றும் குளிர்பதனக் கிட்டங்கி போன்ற உள்கட்டமைப்பு வசதிகள் ரூ.80 இலட்சத்தில் அமைப்பதற்காக அம்மா அவர்கள் ஆணை வழங்கியிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர்கள் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்களுக்கு என்னால் இயன்ற அளவிற்கு, அதற்குரிய விளக்கத்தை நான் கொடுத்திருக்கின்றேன் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொண்டு, அவர்கள் இல்லையென்றாலும்கூட, அவர்கள் எங்கிருந்தாலும், அவர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களை வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று— (சிரிப்பு) வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று, வேண்டி விரும்பிக் கேட்டுக்கொண்டு, இந்த மாமன்றத்திலே வேளாண்மைத் துறைக்கு நிதி ஒதுக்கீட்டை ஒதுக்கீடு செய்து ஆணை வழங்குவதற்காக அம்மா அவர்களும், நீங்களும் அனுமதி வழங்கவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு அமைச்சர் அவர்கள் ஓர் அற்புதமான திட்டத்தை வெளியிட்டார்கள். ஏழை விவசாயிகள் பயன்பெறுகின்ற அளவிலே, அவர்கள் வைத்திருக்கின்ற மின் மோட்டார்கள், புதிய மோட்டார்கள் வாங்கிக் கொள்வதற்காக 25 சதவிகிதம் மானியத் தொகை வழங்குவதாக அறிவித்தார்கள். அதை எல்லா விவசாயிகளும் அன்போடு, மகிழ்ச்சியோடு இந்த அரசுக்கு நன்றி சொல்கின்ற வகையிலே ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இன்றைக்கு இருக்கின்ற கடுமையான வறட்சி நிலையிலே, மீதமுள்ள 75 சதவிகிதத்தைக் கட்டுவதற்கு முடியவில்லை என்கின்ற சூழலில், இந்த மானியத் தொகையை வங்கிகளுக்கு அனுப்பி, கூட்டுறவு வங்கிகள் அல்லது அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளின் மூலம், மீதமுள்ள தொகையைக் கடனாகப் பெற்றுத் தந்தால், அவர்கள் பயன்படுத்திக் கொள்வதற்கு ஏதுவாக இருக்கும் என்கின்ற ஒரு கோரிக்கையை முன்வைக்கிறார்கள். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இதிலே அவர்கள் சிறந்த கவனத்தை எடுத்துக்கொண்டு, அந்த விவசாயிகளுக்குப் பயன்படுகின்ற அளவிலே, அந்த மானியத் தொகையை வங்கிகளுக்கு அனுப்பி, 75 சதவிகிதத்தைக் கடனாகப் பெற்று, அவர்களுக்குப் புது மின் மோட்டார்கள் பெற்றுத் தருவதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிவதோடு, இன்னொன்று; தென்னை மரத்தினைப் பாதிக்கக்கூடிய



அந்தச் சிலந்திப் பூச்சிகளைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று விவசாயிகள் சொல்லி, பல ஆண்டுகளாக அதற்குரிய மருந்துகள் கிடைக்கவில்லை என்கின்ற முறையில், இப்போது ஐந்தாண்டுகளுக்குப் பின்னால், நாம் அந்த மருந்தினைக் கண்டுபிடித்து, அரசு இலவசமாகவே வழங்குகின்ற ஒரு நிலை இருப்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கு குறிப்பிட்டார்கள். அது சற்றுக் கூடுதலாக வழங்கப்பட வேண்டும் என்கின்ற நிலை இருக்கிறது. அது ஏறக்குறைய ஐம்பது சதவிகிதம் விவசாயிகளுக்குத்தான் சென்றடைந்திருக்கிறது. மீதமுள்ள விவசாயிகளும் அதை எதிர்பார்க்கிறார்கள். ஏனென்றால், இந்த மருந்துகளெல்லாம் வெளிச் சந்தையிலே கிடைக்கவில்லை என்கின்ற நிலை இருக்கின்ற காரணத்தினால், அந்த மருந்தினை மீண்டும் அதிகப்படுத்தி வழங்குவதற்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிடுவார்களா என்பதையும் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் அவர்களின் இரண்டு கோரிக்கைகளும் கனிவுடன் பரிசீலிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 5 (குறுக்கீடு) அரசன், என்ன?

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்குப் "பைந்தமிழ் பாவேந்தர் பாண்டுரங்கன்" என்கின்ற பட்டத்தைத் தாங்கள் வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வழங்கினாலே எல்லோரும் வழங்கியது மாதிரி.

## கோரிக்கை எண் 5—வேளாண்மைத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது, இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 5, வேளாண்மைத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. கே.வி. முரளிதரன்.

திரு. கே.வி. முரளிதரன், இருக்கையில் இல்லை. திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"வேளாண்மைத் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 5-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.806,10,42,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.48,30,45,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் 01-4-2005 ஆம் நாள், வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-33 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

88. 2003-2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆறாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்)



89. 2003-2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் முப்பத்து நான்காவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.). (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

165. மானியக் கோரிக்கை எண் 5 - வேளாண்மைத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005-2006. (தமிழ், ஆங்கிலம்)

166. வேளாண்மைத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம் 2005-2006. (தமிழ், ஆங்கிலம்)

167. வேளாண்மைத் துறை பற்றிய "மக்கள் சாசனம்". (தமிழ், ஆங்கிலம்)

168. புதிய பயிர் இரகங்கள், பண்ணைக் கருவிகள் மற்றும் மேலாண்மை தொழில் நுட்பங்கள், 2004 என்னும் சிறுநூல். (தமிழ், ஆங்கிலம்)

169. அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்து ஏழாவது அறிக்கை. (2003-2005)

170. உடுக்குறியிடாத வினாக்கள் - விடைகள் பட்டியல் (பதின்மூன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

# இணைப்பு I

(78 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 5 – வேளாண்மைத் துறை கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006

### அத்தியாயம்–1

### முகவுரை

*"உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்றாது*
*எழுவாரை எல்லாம் பொறுத்து"*

– திருவள்ளுவர்

நாட்டின் பொருளாதாரத்திற்கு வேளாண்மை உயிர் நாடியாகும். ஏனெனில், மக்கள் தொகையில் 70 விழுக்காடு மக்கள் விவசாயத்தையே சார்ந்து வாழ்கின்றனர்.

**1. வேளாண் செயல்பாடுகள்**

1.1 வேளாண்மையைச் சார்ந்துள்ள நமது நாட்டில் ஐந்தாண்டுத் திட்டங்கள் தொடங்கிய காலத்திலிருந்தே வேளாண்மைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. இன்றைய சூழ்நிலையிலும், வேளாண்மையின் பங்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15 விழுக்காடாகக் கணக்கிடப்பட்டு உள்ளது. வேளாண்மையின் வளர்ச்சி மாநிலப் பொருளாதார வளர்ச்சியை 1980 ஆம் ஆண்டுகளில் மேம்படுத்தியது. ஆனால் 1990 ஆம் ஆண்டுகளில் பொருளாதார வளர்ச்சியில் வேளாண்மை வளர்ச்சியின் பங்களிப்பு, குறையத் தொடங்கியது. தமிழ்நாட்டில் வேளாண்மையின் வளர்ச்சிக்கான செயல்பாடுகள், 1960 ஆம் ஆண்டுகளில் உயர் விளைச்சல் இரகங்களின்

அறிமுகம் காரணமாக, பாராட்டும்படியாக அமைந்திருந்தது. உயர் விளைச்சல் இரகங்களை அறிமுகப்படுத்தியதன் விளைவாக பயிர் உற்பத்தித் திறனில் மகத்தான முன்னேற்றம் ஏற்பட்டு பெரும்பாலான பயிர்களில் அதிக மகசூல் பெறப்பட்டது. நெல், கரும்பு, நிலக்கடலை போன்ற இறைவைப் பயிர்கள் சாகுபடியில், தமிழ்நாடு சாதனை படைத்தது. தமிழ்நாட்டில் 1980-களில், பசுமைப் புரட்சியின் ஆரம்ப காலகட்டத்தில் உணவு உற்பத்தியில் வளர்ச்சி விகிதம் 2.3 விழுக்காடாக இருந்து, படிப்படியாக 1990-களில் 3.71 விழுக்காடாக உயர்ந்தது. இது மக்கள் தொகைப் பெருக்கத்தின் வளர்ச்சி விகிதத்தைவிட உணவு உற்பத்தி வளர்ச்சி விகிதம் மிகவும் கூடுதலாக முன்னிலை பெற்றிருந்தது என்பதைக் காட்டுகிறது. தானியப் பயிர்களில் 1980-ஐவிட 1990-ல் மக்காச்சோளத்தில் அதிக உற்பத்தி காணப்பட்டது. கால்நடை மற்றும் கோழிகளுக்கு அளிக்கப்படும் தீவனங்களுக்கு ஏற்பட்ட அதிகப்படியான தேவையின் காரணமாக மக்காச்சோளத்தின் தேவை அதிகமானதால் இதன் உற்பத்தியும் அதிகமானது.

1.2 காவிரி நதிநீர்ப் பிரச்சினையின் காரணமாக 28 இலட்சம் எக்டேர் என்ற நெல் சாகுபடி பரப்பளவில் சரிவு ஏற்பட்டு 20 இலட்சம் எக்டேர்களுக்கும் குறைவாக ஆனது. இதுவே, உணவு தானிய உற்பத்தியின் வளர்ச்சியில் தொய்வு ஏற்பட முக்கியக் காரணமாக அமைந்தது. சோளம், கம்பு மற்றும் கேழ்வரகு ஆகிய தானியங்களுக்குத் தேவை மிகவும் குறைவாக இருந்ததால், இந்தப் பயிர்களின் சாகுபடியில் இலாபம் இல்லாமல் போகவே பயிர்களின் பரப்பளவு குறைந்து கொண்டே வந்தது. இருந்தபோதிலும், தானிய உற்பத்தித் திறனில் காணப்பட்ட வியத்தகு செயல்பாட்டின் காரணமாக உணவு தானிய உற்பத்தி அதிகமாகி தானியப் பயிர்கள் சாகுபடிப் பரப்பில் ஏற்பட்ட குறைபாட்டினை ஈடுகட்டியது. நெல், கரும்பு மற்றும் நிலக்கடலைப் பயிர்களில், தொழில் நுட்பம், பாசன வளர்ச்சி மற்றும் விற்பனை வசதிகளின், வளர்ச்சி ஆகியவற்றின் காரணமாக அதிக மகசூல் பெற்றதைக் கண்கூடாகக் காண முடிந்தது. தமிழ்நாட்டில் பயறு வகைப் பயிர்களின் உற்பத்தித் திறனும் அதிகமாகவே இருக்கிறது. தற்சமயம், நெல் உற்பத்தியில், ஆண்டு முழுவதும் பாசன வசதி நிறைந்த பஞ்சாப் மாநிலத்தோடு தமிழ்நாடு போட்டியிடுகிறது. நமது மாநிலம் கரும்பு மற்றும் நிலக்கடலை உற்பத்தித் திறனில் வியத்தகு சாதனை படைத்து, அகில இந்திய உற்பத்தித் திறனுக்குச் சமமாக இருக்கிறது. இந்தப் பயிர்களின் உற்பத்தித் திறன் இறைவைப் பாசனப் பகுதிகளில்



ஒரே நிலையாகக் காணப்பட்டது. வேளாண்மையில் நிர்ணயிக்கப்பட்ட உற்பத்தித் திறனை அடைய, புதிய முயற்சிகளான ஒப்பந்தப் பண்ணையம் மற்றும் துல்லிய பண்ணையம் போன்றவற்றில் தனியார் துறையை ஈடுபடுத்துவது போன்றவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பூக்கள் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களின் வேளாண்மை ஏற்றுமதி மண்டலம் அமைப்பதன் மூலமாக, வேளாண்மை உற்பத்தி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விற்பனை அமைப்போடு இணைக்கப்பட்டுள்ளது.

## 2. இடர்பாடுகள்

குறைந்த மற்றும் வேறுபட்ட மழையளவு, குறைந்து வரும் நிலப்பரப்பு, அரசுத் துறையின் குறைந்த முதலீடு, குறைந்து வரும் மொத்தப் பயிர் சாகுபடிப் பரப்பு, முறையற்ற நிலத்தடி நீர் பயன்பாடு, போதுமான அளவு அறுவடைக்குப் பிந்திய தொழில் நுட்பம் மற்றும் சேமிப்பு இல்லாமை போன்ற காரணங்களால் மாநிலத்தின் வேளாண்மை வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. நமது மாநிலம் நாட்டின் மக்கள் தொகையில் 7 விழுக்காட்டைக் கொண்டிருந்தபோதும் 4 விழுக்காடு நிலப்பரப்பையும் 3 விழுக்காடு நீர் ஆதாரங்களையும் மட்டுமே கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டில் மொத்த பயிர்ச் சாகுபடிப் பரப்பளவில் 50 விழுக்காடு மட்டுமே பாசன வசதி கொண்டதாக உள்ளது. இதேபோன்று மொத்த உணவு தானியப் பயிர்கள் சாகுபடிப் பரப்பளவை எடுத்துக் கொண்டால் 60 விழுக்காடு மட்டுமே பாசன வசதி கொண்டுள்ளது. தமிழகத்தில் பயிர்ச் சாகுபடி விகிதம் 120 விழுக்காடாக இருந்தபோதும் 52 விழுக்காடு விளைநிலம் மானாவாரியாக உள்ளது. இவ்வளவு இடர்பாடுகள் இருந்தும் நமது மாநிலம் பயிர்ச் சாகுபடியில் மிகப்பெரும் சாதனை படைத்துள்ளது.

## 3. சவால்கள்

பெருகிவரும் உணவுத் தேவை, அதிகரித்து வரும் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய மூலப்பொருட்கள், வேளாண்மையில் வேலைவாய்ப்பு ஏற்படுத்துதல் போன்ற சவால்களை எதிர்கொள்ள வேளாண்மை வளர்ச்சியை அதிகப்படுத்துவது இன்றைய காலகட்டத்தில் அவசியமாகிறது. தமிழ்நாடு இறைவைச் சாகுபடியில் சாதனை படைத்தாலும், மானாவாரி வேளாண்மைக்குத் தேவையான கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல், தொழில்நுட்ப மற்றும் விரிவாக்க செயல்பாட்டு அமைப்புகளை மேம்படுத்துதல் போன்றவற்றில் கவனம்

செலுத்தப்படவில்லை. பசுமைப் புரட்சியின் ஆரம்ப காலகட்டத்தில் பாசன வசதியுள்ள சூழ்நிலையில் உயர் விளைச்சல் இரகங்கள் அதிகமாகப் பயிரிடப்பட்டு வந்தது. அதேசமயம், பயறு வகைகள், எண்ணெய் வித்துகள் மற்றும் பருத்தி போன்ற பயிர்களின் உற்பத்தி, தேவையைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு அதிகரிக்கவில்லை. பயறு வகைகளின் உற்பத்தி, குறைவாக இருந்ததால், இறக்குமதி செய்யும் தேவை ஏற்பட்டுள்ளது. கடந்த இருபது ஆண்டுகளாக நமது மாநிலத்தில் பருத்தியின் பாப்பளவு ஆண்டுக்கு 2.57 விழுக்காடு என்று குறைந்ததால் உற்பத்தியும் 2.38 விழுக்காடு குறைந்துள்ளது. மானாவாரிப் பயிராக பருத்தியைப் பயிரிடுவதால் மாநில சராசரி பருத்தி உற்பத்தித் திறன் தேசிய சராசரியைவிடக் குறைவாக உள்ளது. எண்ணெய் வித்துக்களான நிலக்கடலை மற்றும் எள் பயிர்களின் பரப்பளவும் குறைந்து கொண்டே வரும் நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் இவற்றில் தொழில்நுட்பம் மற்றும் இடுபொருட்களுக்கான செலவு அதிகமாகவும், உற்பத்தித் திறன் குறைவாகவும் உள்ளது. கடந்த காலங்களில் சாகுபடி இல்லாத தரிசு நிலங்களின் பரப்பு உயர்ந்துள்ளது. தரிசு நிலங்களின் பரப்பு 1970 ஆம் ஆண்டுகளில் 12.02 இலட்சம் எக்டேரிலிருந்து (9.2%) 2002–2003 ஆம் ஆண்டில் 15.03 இலட்சம் எக்டேராக (11.6%) அதிகரித்துள்ளது. ஒரு முறைக்குமேல் சாகுபடி செய்யப்பட்ட நிலப்பரப்பு 1970–ல் 13.21 இலட்சம் எக்டேர் என்ற அளவில் இருந்து தற்சமயம் 2002–2003–ல் 6.01 இலட்சம் எக்டேராகக் குறைந்து உள்ளது. மொத்த சாகுபடிப் பரப்பு 1970–ல் மிகவும் அதிகரித்து 74.56 இலட்சம் எக்டேர் என்ற அளவை அடைந்து, தற்போது 2002–2003–ல் மிகவும் குறைந்து 51.91 இலட்சம் எக்டேராக உள்ளது.

**4. வாய்ப்புகள்**

4.1 பாசனநீர் உபயோகத் திறனை அதிகரித்தல், வேளாண்மை விரிவாக்கம் மற்றும் வேளாண்மை விற்பனை போன்றவற்றில் முன்னேற்றம் ஏற்படுத்துதல், அரசு செலவினங்கள் சீரமைப்பு போன்ற நடவடிக்கைகளினால் வேளாண்மையில் நிர்ணயிக்கப்பட்ட வளர்ச்சியை அடைய இயலும். நீர்ப்பாசனத் திறனை அதிகரிப்பதில் நவீன தெளிப்பு நீர்ப்பாசன முறைகள், புதிய கால்வாய் மற்றும் நீர் சேமிப்புத் திட்டங்கள் (மேம்பட்ட செயல்பாடு மற்றும் பயன்பாடு) முக்கியக் காரணிகளாக விளங்குகின்றன. தமிழ்நாட்டில் சொட்டு நீர்



மற்றும் தெளிப்பு நீர்ப்பாசன முறைகள் ஓரளவுக்குச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத் தொழில்நுட்பங்களைச் செயல்படுத்துவதற்கு அதிக மூலதனம் தேவைப்படுவதால் சிறு மற்றும் குறு விவசாயிகள் இத்திட்டங்களைச் செயல்படுத்த முடியாமல் போகிறது. எனவே, புதிய பாசன தொழில் நுட்பங்களான சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர்ப்பாசன முறைகளைப் பயன்படுத்த ஏதுவாக நிதியுதவியோ அல்லது சிறிய விவசாயிகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் குறைந்த செலவுடைய தொழில்நுட்பங்களோ அவசியமாகிறது.

4.2 தற்பொழுது வேளாண்மையில் ஒப்பந்த முறையில் மக்காச் சோளம், பருத்தி மற்றும் மூலிகைப் பயிர் சாகுபடி, ஒரு மாற்றுப் பயிர் திட்டமாக உருவாகி வருகிறது. நீர் குறைவாகத் தேவைப்படும் அதிக மதிப்புள்ள பொருள்களான பழங்கள், காய்கறிகள், நறுமணம் மற்றும் தாளிதப் பயிர்கள் ஆகியவற்றைப் பயிரிடுதல் தமிழக வேளாண் வளர்ச்சிக்கு முழு நம்பிக்கையை ஏற்படுத்துவதாக அமையும். அதிக உற்பத்தித் திறனும், ஏற்றுமதி வாய்ப்பும் அதிகமாக அமைந்துள்ள மலர்கள், பழங்கள், காய்கறிகள் ஆகிய பயிர்களின் வளர்ச்சியால் தோட்டக்கலை ஒரு மிக முக்கியமான துறையாக வளர்ச்சியடைந்து வருகிறது. மலைப் பிரதேசப் பயிர்கள் மற்றும் தோட்டக்கலைப் பயிர்கள் பெருமளவு முக்கியமாகக் கருதப்படுவதற்கு, விளைச்சலுக்குப் பயன்படாத நிலத்திலும், தரிசு நிலத்திலும், மானாவாரி நிலத்திலும் இப்பயிர்கள் சாகுபடி செய்த விவசாயிகளுக்கு அதிக வருமானத்தைக் கொடுத்து இருப்பது ஒரு காரணமாகும். இப்படிப்பட்ட சாதகமான சூழ்நிலைகளின் காரணமாக மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் உற்பத்தியில், தனியார் துறையினரின் முதலீடு வரவேற்கத்தக்க நிலையில் உள்ளது. இதன் மூலம், புதிய, ஊரக, வேளாண்மை சாராத வேலை வாய்ப்புகள் பெருகவும், கிராமப்புறங்களில் வருமானம் அதிகரிக்கவும் வாய்ப்பு ஏற்படுகிறது. பதப்படுத்தக்கூடிய வேளாண் பொருட்களின் உற்பத்தி அதிகமாக உள்ளதால் கிராமப்புறங்களில் வேளாண் பொருட்கள் பதனிடும் தொழிற்சாலைகள் அமைவதற்கு வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளன. எனவே, வேளாண்மையின் வளர்ச்சியை பத்தாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் 4 சதவீத இலக்கை அடைவதற்கு அரசு மற்றும் தனியார் துறையினரின் கூட்டு நடவடிக்கை மிகவும் அவசியமாகிறது.

[2005 மார்ச் 31

## அத்தியாயம்-2

### வேளாண்மை

**1. முன்னுரை**

வேளாண்மை அனைத்து உயிர் இனங்களின் வாழ்விற்கான அடிப்படை உணவு ஆதாரங்களை அளிக்கிறது. சுற்றுப்புறச்சூழல், சமுதாயம் மற்றும் பொருளாதாரத்தின் அடிப்படையிலான நிலையான வேளாண்மை, மாநிலத்தின் முன்னேற்ற செயல் முறைகளுக்கு முதுகெலும்பாக அமையவேண்டும் என்பது முக்கியமானதாகும். மண், நீர் மற்றும் இயல்பியல் மாற்றங்களைத் திறன்படவும், சமச்சீராகவும் பயன்படும் வகையில் வேளாண்மையானது நிலையானதாக இருக்க வேண்டும். அது பொருளாதார ரீதியாக திறம்பட்டதாகவும், வேலைவாய்ப்பினை அதிகரிப்பதாகவும், சமுதாயத்திற்கு ஏற்றதாகவும் பெண்கள் மற்றும் இதர கீழ்மட்டப் பிரிவு மக்களின் பங்கினை வலுப்படுத்துவதாகவும் அமைய வேண்டும். இயற்கை வள ஆதாரங்களைப் பாதுகாத்து மற்றும் மேம்படுத்துவதில் சமுதாயத்தின் பங்கேற்பினால், பயன்களைச் சமனாகப் பெறுதல் மிகவும் இன்றியமையாததாகிறது.

மாநிலத்தில் 100 சத உணவுப் பாதுகாப்பினை அடைவது மற்றும் வேளாண் சமூகத்தின் பொருளாதார மேம்பாட்டிற்கு வேளாண் விளை பொருட்களின் ஏற்றுமதிக்குத் தேவையான வாய்ப்பினை உருவாக்கித் தருவது, தமிழக அரசின் முக்கிய நோக்கமாக உள்ளது. நிலையான வேளாண்மை மேம்பாட்டிற்காகவும் கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பினை உருவாக்கி வறுமையினை நீக்கவும், நடப்பு பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வேளாண் பொருட்கள் உற்பத்தி 4 சதவிகித ஆண்டு வளர்ச்சி விகிதத்திலும், தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தி 8 சதவிகித ஆண்டு வளர்ச்சி விகிதத்திலும் அதிகரிக்க மாநில அரசு முயற்சி மேற்கொண்டுள்ளது. வேளாண் நிலங்களில் முழுமையாக சாகுபடி மேற்கொள்வதன் மூலம் பயிர்ச் சாகுபடித் திறனை உயர்த்தவும், உற்பத்தித் திறனை உயர்த்தவும் மற்றும் இயற்கை வளங்களை மிக அதிக அளவில் பயன்தரத்தக்க வகையில் பயன்படுத்தவும் மற்றும் அவற்றைப் பாதுகாக்கவும் உரிய கவனம் செலுத்துவதன்மூலம் வேளாண் துறையில் ஒட்டுமொத்த மேம்பாட்டினை அடையும் வகையில் அரசு கொள்கைகளை ஒருமுகப்படுத்தி வருகிறது.



2005 மார்ச் 31]

பாசனப் பகுதிகளில் வேளாண்மை வளர்ச்சியினை நிலைப்படுத்தவும், மானாவாரி வேளாண்மையில் இரண்டாம் பசுமைப் புரட்சியினை ஏற்படுத்தவும் மாநில அரசு முயற்சிகள் மேற்கொண்டுள்ளது.

நிலப் பயன்பாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றத்தின் அடிப்படையில் வேளாண் மேம்பாட்டு உத்திகளை உருவாக்குவது என்பது வேளாண் திட்ட வல்லுநர்களுக்குப் பெரும் சவாலாக உள்ளது. 1990–1991 ஆம் ஆண்டில் 22.93 இலட்சம் எக்டேராக இருந்த தரிசு நிலப்பரப்பு (நடப்புத் தரிசும் இதர தரிசும் சேர்த்து) 2001–2002 ஆம் ஆண்டு 24.35 இலட்சம் எக்டேராக உயர்ந்து, 2002–2003 மற்றும் 2003–2004 ஆம் ஆண்டுகளில் முறையே 29.93 இலட்சம் எக்டேர் மற்றும் 28.17 இலட்சம் எக்டேர் என்ற அளவிற்கு வறட்சி காரணமாக மேலும் உயர்ந்துள்ளது. சராசரியாக 120 சதமாக இருந்த பயிர்ச் சாகுபடித் திறன், வறட்சி காரணமாக 113.4 சதமாக கடந்த இரண்டு ஆண்டுகளாகக் குறைந்துள்ளது. இதனால், சராசரியாக 63 இலட்சம் எக்டேராக இருந்த மொத்த சாகுபடிப் பரப்பு 2003–2004 ஆம் ஆண்டு 53.16 இலட்சம் எக்டேராகக் குறைந்ததால் சுமார் 9.8 இலட்சம் எக்டேர் பரப்பு சாகுபடி மேற்கொள்ளாமல் தரிசாக விடப்பட்டது. கடந்த ஆண்டுகளில் நிலவிய கடும் வறட்சி காரணமாக 2003–2004 ஆம் ஆண்டில் சாகுபடிப் பரப்பு குறைந்துள்ளது என்பது தெளிவாகத் தெரிந்தபோதிலும், 1990–1991 மற்றும் 2001–2002 ஆண்டுகளுக்கிடையேயும் ஏறக்குறைய 4 இலட்சம் எக்டேர் பரப்பு மொத்தச் சாகுபடிப் பரப்பில் குறைந்துள்ளது.

பிரிவுபட்ட நில உடைமை அளவு, சாகுபடிப் பரப்பில் உள்ள 52 சத நிலம் மானாவாரியாக இருப்பது, பாசன ஆதாரங்கள் அளவுக்கு மீறிப் பயன்படுத்தப்படுவது, தொடர்ந்து தீவிர சாகுபடி மேற்கொள்ளப்பட்டது ஆகியவற்றின் விளைவாக ஏற்பட்ட மண் வளம் பாதிப்பு, மொத்தச் சாகுபடிப் பரப்பு குறைந்து வருதல் மற்றும் கடந்த 2 ஆண்டுகளாக தொடர்ந்து நிலவிய கடும் வறட்சி போன்ற இடர்பாடுகளுக்கிடையேயும் முக்கியப் பயிர்களின் உற்பத்தித் திறனில் தமிழகம் அனைத்திந்திய அளவில் தொடர்ந்து முன்னிலையில் உள்ளது.

[2005 மார்ச் 31

மாநிலத்தின் வேளாண்மை செயல்பாட்டு விவரம் பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது:—

(கிலோ/எக்டேர்)

| பயிர் | சராசரி மகசூல் திறன் | | இந்தியாவில் அதிகபட்ச மகசூல் திறன் | தமிழ்நாட்டின் நிலை |
|---|---|---|---|---|
| | இந்தியா | தமிழ்நாடு | | |
| அரிசி | 1804 | 3350 | 3510 (பஞ்சாப்) | 2 ஆம் இடம் |
| சோளம் | 769 | 962 | 962 (தமிழ்நாடு) | முதல் இடம் |
| கம்பு | 610 | 1348 | 1348 (தமிழ்நாடு) | முதல் இடம் |
| துவரை | 616 | 710 | 1301 (பீகார்) | 4 ஆம் இடம் |
| மொத்த உணவு தானியங்கள் | 1562 | 2238 | 3830 (பஞ்சாப்) | 4 ஆம் இடம் |
| மொத்த எண்ணெய் வித்துக்கள் | 710 | 1611 | 1611 (தமிழ்நாடு) | முதல் இடம் |
| நிலக்கடலை | 733 | 1784 | 1784 (தமிழ்நாடு) | முதல் இடம் |
| பருத்தி | 193 | 305 | 410 ( பஞ்சாப்) | 3 ஆம் இடம் |
| கரும்பு | 64562 | 106778 | 106778 (தமிழ்நாடு) | முதல் இடம் |

**ஆதாரம்:** வேளாண் புள்ளியியல்–ஒரு கண்ணோட்டம் 2004–வேளாண் புள்ளியியல் பிரிவு–மத்திய அரசு

### 1.1. வேளாண்மையில் தற்போதைய நிலை

- வேளாண்மையின் வளர்ச்சியானது பல்வேறு மண்டலம், பயிர்கள் மற்றும் விவசாயிகளிடையே சீராக இல்லாதது.
- புதிய தொழில்நுட்பங்கள் மானாவாரிப் பகுதிகளிலும், பாசனம் பெறாத பயிர்களிலும் எதிர்பார்த்த அளவு சென்று அடையவில்லை.
- மிக்க பயனுடைய பல மானாவாரிப் பயிர்கள் பயன்படுத்தப்படவில்லை



2005 மார்ச் 31]

- வேளாண்மையின் வளர்ச்சியில் தேக்கநிலை
- குறைந்து வரும் மொத்தச் சாகுபடிப் பரப்பு
- 1950–ல் 17.65 இலட்சம் எக்டேராக இருந்த நிரந்தர மற்றும் நடப்புத் தரிசு நிலங்கள் 2001–2002 ஆம் ஆண்டு 24.35 இலட்சம் எக்டேராக உயர்ந்துள்ளது.
- நீர் ஆதாரங்களின் வளம் குறைந்து வருதல்
- நிலம் மற்றும் மண்ணின் தரம் பாதிப்பு
- முக்கியப் பயிர்கள் மற்றும் மானாவாரிப் பயிர்களின் உற்பத்தித் திறனில் மெதுவான வளர்ச்சி
- முக்கியப் பயிர்களில் தற்போது பெறப்படும் மகசூலுக்கும் அப்பயிர்கள் கொடுக்க வல்ல மகசூல் திறனுக்கும் இடையே உள்ள இடைவெளி

### 2. பருவ நிலை மற்றும் பயிர்ச் சாகுபடிக்கான வாய்ப்பு வளம்

பயிர்களின் நலம், வளர்ச்சி மற்றும் இயல்பான உற்பத்தித் திறன் ஆகியவை, ஒரு பருவத்தில் நிலவக்கூடிய சாதகமான மழையளவு, வெப்பநிலை, காற்று, மேகமூட்டம் ஆகியவற்றைச் சார்ந்துள்ளன. ஒரு பருவத்தில் வேளாண்மையில் ஏற்படும் சேத அளவு, அப்பருவத்திற்குள் ஏற்படக்கூடிய தட்பவெப்பச் சூழ்நிலை மாறுதலையே பெரிதும் சார்ந்துள்ளது.

தமிழகத்தின் வேளாண்மை, தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவ மழையினையே பெரிதும் சார்ந்துள்ளது. சீரான, பரவலான பருவமழை மற்றும் மேட்டூர் அணையில் திருப்திகரமாக நீர் இருப்பு ஆகியவை இருந்தால் டெல்டா பகுதிகளில், நல்ல பயிர்ச் சாகுபடி மேற்கொள்ள முடியும். ஆனால், குறைந்த மழை பொழிவு காரணமாக கடந்த இரண்டு ஆண்டுகளாக தமிழகத்தில் தொடர்ந்து வறட்சி நிலவியது.

2004–2005 ஆம் ஆண்டில், 2004 ஜூன்–ஜூலை வரை கடும் வறட்சியும், அக்டோபர் மாதத்தில் அபரிமிதமாக மழை பொழிவும் ஏற்பட்டதால் சில மாவட்டங்களில் பயிர்கள் நீரில் மூழ்கும் நிலையும் ஏற்பட்டு, தமிழகம் இருவேறு நிலையை எதிர்கொண்டது.

12-8-2004 அன்று மேட்டூர் அணையிலிருந்து நீர் சம்பாப் பயிர்ச் சாகுபடிக்கு இரண்டு மாத காலம் தாமதமாகத் திறந்து விடப்பட்டது.

2004 ஆம் வருட ஆரம்பத்தில் முக்கியப் பயிர்களின் சாகுபடிப் பரப்பு குறைவாக இருந்தபோதிலும், செப்டம்பர் 2004 ஆம் மாதத்திற்குப்பின் நிலைமை சீரடைந்து நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது.

2004 டிசம்பர் 26 ஆம் தேதியன்று, இந்தியப் பெருங்கடலில் இதுவரை ஏற்படாத சுனாமி ஆழிப் பேரலை தமிழகக் கடலோரப் பகுதிகளைத் தாக்கியதால் வளமான நிலங்கள் கடல்நீரில் மூழ்கின. 4,796.10 எக்டேரில் சாகுபடி செய்யப்பட்ட பயிர்களின் பாதிப்பும், 3,664.24 எக்டேர் பரப்பில் நிலங்களின் பாதிப்பும், ஆக மொத்தம் 8,460.34 எக்டேர் சீரமைப்புச் செய்யவேண்டுமென கணக்கிடப்பட்டுள்ளது. பயிர்ப் பாதிப்பு ஏற்பட்டதற்கு நிவாரணமாக ரூ.1.80 கோடியும் சுனாமி ஆழிப் பேரலையினால் பாதிப்படைந்த வேளாண் நிலங்களைச் சீரமைக்க நிவாரணமாக ரூ.16.96 கோடியும் வழங்க அரசு ஏற்கெனவே ஆணையிட்டுள்ளது. பாதிக்கப்பட்ட நிலங்களின் தன்மையை ஆய்வு செய்து உடனடி கணக்கெடுப்பு மேற்கொள்ள நாகப்பட்டினம், கடலூர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு நடமாடும் மண் பரிசோதனை ஆய்வகங்கள் அனுப்பப்பட்டன. சுனாமிப் பேரலை ஏற்படுத்தியுள்ள நில பாதிப்பு, இடத்திற்கு இடம் மாறுபட்ட தன்மையைக் கொண்டதாகவும், பல்வேறு பாதிப்புகளை உள்ளடக்கியதாகவும் உள்ளது என்பதால், நாகப்பட்டினம் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட நிலங்களில் 100 சதவீத மண் ஆய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பாதிக்கப்பட்ட பகுதிகளில் படிந்துள்ள களிமண் படிமங்களைச் சுரண்டி அப்புறப்படுத்தி சமன்செய்து குறுகிய கால இடைவெளியில் 3 முதல் 4 முறை நல்ல நீரினை நிலத்தில் தேக்கி வடியச் செய்தல், மேலும் மண் வளத்தினைப் பாதுகாக்க ஒரு எக்டேருக்கு 2 டன் ஜிப்சம் இடுதல், இயற்கை உரங்கள் மற்றும் பசுந்தாள் உரங்களை அதிகமாக இடுதல், மண்ணை மூடிப் பாதுகாத்தல் மற்றும் மண்ணில் உள்ள உப்புச் சத்தினைத் தாங்கி வளரக்கூடிய பயிர்/இரகங்கள் சாகுபடி மேற்கொள்ளுதல், அதிக முளைப்புத் திறனை உறுதி செய்ய இயல்பைவிட 20 சதம் அதிகமாக விதை உபயோகித்தல் ஆகியவற்றை வல்லுநர்கள் பரிந்துரை செய்துள்ளனர்.



2004 ஆம் ஆண்டு பெய்த மழை விவரம் கீழ்க்காணும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது:—

(அலகு மி.மீ)

| வ. எண் | பருவம்/மாதம் | இயல்பான மழைப் பொழிவு | பெய்த மழை | | வேறுபாடு/விழுக்காடு | |
|---|---|---|---|---|---|---|
| | | | 2003 | 2004 | இயல்பு மழையுடன் | கடந்த ஆண்டு மழையுடன் |
| 1 | குளிர்காலம் (சனவரி–பிப்ரவரி) | 37.5 | 8.7 | 12.1 | (–)67.7 | (+) 39.1 |
| 2 | கோடைகாலம் (மார்ச்–மே) | 127.5 | 124.9 | 283.4 | (+) 122.3 | (+) 126.9 |
| 3 | தென்மேற்கு பருவம் (ஜூன்–செப்டம்பர்) | 324.3 | 329.7 | 459.8 | (+) 41.8 | (+) 39.5 |
| 4 | வடகிழக்குப் பருவம் (அக்டோபர்–டிசம்பர்) | 464.7 | 404.5 | 470.9 | (+) 1.3 | (+) 39.5 |
| | **மொத்தம்** | **954.0** | **867.8** | **1226.2** | **(+) 28.5** | **(+) 41.3** |

## 2.1. ராபிப் பருவ முகாம்கள்

உலகமயமாக்குதலினால், இந்திய வேளாண்மை, அதிகரித்துவரும் போட்டியினை எதிர்கொண்டுள்ளது. பசுமைப் புரட்சியின் ஆரம்பகாலத்தில், மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் தொழில்நுட்பச் செய்திகளைக் கொண்டுசெல்வதில் வேளாண்மை விரிவாக்கம் முக்கியப் பங்கு வகித்தது. இருப்பினும் சந்தை மற்றும் சமுதாயத்தில் அதிகரித்துவரும் சிக்கலான மாற்றங்களால், விரிவாக்க நடைமுறைகள் வேளாண்மையில் புதிய கோணங்களில் செயல்மிக்கதாக்கப்பட வேண்டும். உலகமயமாக்குதலினால் விரிவாக்கப் பணி பெரும் சவாலாக மாறி உள்ளதால், விற்பனை இணைப்புடன் கூடிய விரிவாக்க அமைப்பு தேவைப்படுகிறது. துல்லிய பண்ணையம்,

அறிவு சார்ந்த மேலாண்மை மற்றும் நவீன தகவல் தொழில்நுட்பங்களுடன் கூடிய புதிய அணுகுமுறைகள், தமிழ்நாட்டில் நிலையான வேளாண்மையினை வலுப்படுத்த பங்காற்றும் முக்கியச் சாதனங்களாக அமைந்து, போட்டி நிறைந்த சந்தையினை எதிர்கொள்ள தயார்படுத்திக்கொள்ளவும் தேவைப்படுகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளாகவும், மூன்றாம் ஆண்டாக காரிப் 2004 பருவ தொடக்கத்திலும் தொடர்ந்து நிலவிய வறட்சி காரணமாக தமிழ்நாட்டில் வேளாண் நிலை மிகவும் பாதிப்படைந்தது. மொத்த சராசரி இயல்பான சாகுபடிப் பரப்பு 63 இலட்சம் எக்டேரிலிருந்து 53.16 இலட்சம் எக்டேராக குறைந்ததால், சுமார் 9.8 இலட்சம் எக்டேர் தரிசாக விடப்பட்டது. நிலத்தடி நீர் மட்டம் வெகுவாகக் குறைந்து அனைத்து நீர்த் தேக்கங்களும் குளங்களும் வற்றியதால் வேளாண் பெரு மக்களிடையே மிகுந்த அச்சத்தை ஏற்படுத்தியது.

2004 காரிப் இறுதியில் பரவலாகப் பெய்த போதுமான மழை, பயிர்ச் சாகுபடிக்குச் சாதகமான சூழ்நிலையினை உருவாக்கியது. இந்தச் சாதகமான நிலையினைப் பயன்படுத்தி அதிகபட்ச பரப்பில் சாகுபடி மேற்கொள்ள விவசாயிகளை ஊக்குவிக்க, வேளாண்மைத் துறை முழுமுயற்சி மேற்கொண்டு அனைத்துக் கிராமங்களிலும் பல்வேறு கட்டங்களில் தீவிர முகாம்களை நடத்தியது.

- 2004 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில், காவிரியில் நீர் திறந்துவிடப்பட்டவுடன், டெல்டா மாவட்டங்களில் தேவையான அனைத்து உதவிகளையும் விவசாயிகளுக்கு வழங்குவதற்கு ஏதுவாக மாவட்ட வேளாண் தகவல் உதவி மையங்கள் திறக்கப்பட்டு, காலை 8–00 மணி முதல் இரவு 8–00 மணி வரை 15–9–2004 முதலும் மீண்டும் 9–11–2004 முதலும் செயல்பட்டது. சம்பா பருவத்தில் அதிகப் பரப்பில் சாகுபடி மேற்கொள்ளும்பொருட்டு இடுபொருட்கள் கிடைக்க விரைவான போர்க்கால நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. டெல்டா மாவட்டத்தின் அனைத்துக் கிராமங்களிலும் தீவிர முன்பருவ முகாம்கள் நடத்தப்பட்டன.
- முதல் கட்ட முன் ராபிப் பருவப் பயிற்சி முகாம்கள் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள அனைத்து 17,244 கிராமங்களிலும் 21,029 முகாம்கள் 2004 செப்டம்பர் 16 ஆம் தேதி முதல் அக்டோபர் 15 ஆம் தேதி வரை நடத்தப்பட்டன. இதில் 4,55,336 விவசாயிகள் பங்குகொண்டு பயனடைந்துள்ளார்கள்.



- இரண்டாம் கட்ட முகாம்கள் நவம்பர் 16 ஆம் தேதி முதல் டிசம்பர் 31 ஆம் தேதி முடிய பிர்க்கா வாரியாக நடத்தப்பட்டன. தோட்டக்கலை, வேளாண் பொறியியல், கால்நடைப் பராமரிப்பு முதலிய துறைகள் மற்றும் கடன் வழங்கும் நிறுவனங்கள். முதன்மையான இடுபொருள் வழங்கும் நிறுவனங்கள் ஆகியவற்றுடன் மக்கள் பிரதிநிதிகளையும் இணைத்து மக்கள் தொடர்புச் சாதனங்களின் உதவியோடு நடத்தப்பட்டன. இயன்ற அளவிற்கு விவசாயிகளின் இருப்பிடத்தில் இடுபொருட்கள் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. 1,086 பிர்காக்களில் 1,750 எண்கள் இரண்டாம் கட்ட முகாம்கள் நடத்தப்பட்டு 92,209 விவசாயிகள் பயனடைந்துள்ளார்கள்.
- மூன்றாம் கட்ட முகாம்கள் 2005 ஜனவரி 16–லிருந்து 2005 பிப்ரவரி 28 வரை நடத்தப்பட்டன.

இவ்வாறு பல கட்டங்களாக நடத்தப்பட்ட முன்பருவ முகாம்கள் விவசாயிகளிடையே நல்ல ஊக்கத்தை ஏற்படுத்தியது என்பதோடு அனைவராலும் வெகுவாக வரவேற்கப்பட்டது. விவசாயிகளுக்குத் தரமான இடுபொருட்கள் உரிய நேரத்தில் கிடைப்பதை உறுதி செய்ய வேளாண் துறை அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. இத்தகைய முகாம்கள் விவசாயிகள் புதிய தொழில்நுட்பங்ளைக் கடைபிடித்து நல்ல மகசூலைப் பெற வழி வகுத்துள்ளது.

21–03–2005 முடிய முக்கியப் பயிர்களின் சாகுபடிப் பரப்பு மற்றும் எதிர்பார்க்கப்படும் உற்பத்தி விவரம் கீழே தரப்பட்டுள்ளது:—

| வ.எண் | பயிர் | சாகுபடிப் பரப்பு (இலட்சம் எக்டேரில்) | | உற்பத்தி (இலட்சம் மெ. டன்னில்) | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை |
| 1 | நெல் | 20.00 | 19.28 | 75.00 | 69.02 |
| 2 | சிறுதானியங்கள் | 11.00 | 12.12 | 14.85 | 15.20 |
| 3 | பயறுவகைகள் | 7.50 | 8.46 | 3.38 | 3.66 |
| | **மொத்த உணவு தானியங்கள்** | **38.50** | **39.86** | **93.23** | **87.88** |
| 4 | பருத்தி | 2.50 | 1.63 | 5.62 | 2.81 |
| 5 | கரும்பு | 3.00 | 2.37 | 35.00 | 25.29 |
| 6 | எண்ணெய் வித்துக்கள் | 10.00 | 8.64 | 17.00 | 13.91 |

[2005 மார்ச் 31

சாதகமான சூழ்நிலையினை எதிர்பார்த்து 2005-2006 ஆம் ஆண்டு இலக்கு கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது:

| வ. எண் | பயிர் | பயிரிடும் பரப்பு (இலட்சம் எக்டேர்) | உற்பத்தி (இலட்சம் மெ. டன்) |
|---|---|---|---|
| 1 | அரிசி | 20.00 | 78.00 |
| 2 | சிறுதானியங்கள் | 11.00 | 15.51 |
| 3 | பயறு வகைகள் | 8.00 | 3.76 |
| | **மொத்த உணவு தானியங்கள்** | **39.00** | **97.27** |
| 4 | பருத்தி (இலட்சம் பொதிகள்) | 2.50 | 5.85 |
| 5 | கரும்பு (வெல்லமாக) | 3.00 | 36.40 |
| 6 | எண்ணெய் வித்துக்கள் | 10.50 | 18.59 |

## 2.2. செயல்முறை உத்திகள்:

வேளாண்மையில் இலக்கை அடைய அரசு மேற்கொள்ளும் செயல்முறை உத்திகள் பின்வருமாறு:-

- வேளாண் தட்பவெட்ப மண்டலங்களுக்கு ஏற்ற வேளாண் பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்பட்ட பயிர்ச் சாகுபடி முறை அடிப்படையில் மாற்றுப் பயிர்ச் சாகுபடி உத்திகளைக் கடைபிடித்தல். இலாபம் தரக்கூடிய பயிர்கள் சாகுபடி செய்தல், நீர் மற்றும் நிலத்தினை அதிகபட்ச பயன் தரும் வகையில் பயன்படுத்துதல். இதன்மூலம் பயிர்ச் சாகுபடித் திறனை உயர்த்துதல்.
- மாற்றுப் பயிர்த் திட்டத்தின் ஒரு பகுதியாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்த காட்டாமணக்கு, சர்க்கரைச் சோளம் மற்றும் சர்க்கரைக் கிழங்கு போன்ற பயிர்களை எத்தனால் மற்றும் தாவர எரிபொருள் உற்பத்தி செய்ய, அங்கீகரிக்கப்பட்ட தொழில் முதலீட்டாளர்கள் மூலம் ஒப்பந்தப் பண்ணை முறையில் சாகுபடி மேற்கொள்ளுதல். இப்பயிர்கள் குறைந்த நீரைக் கொண்டு ஓரளவு வளம் குறைவான நிலத்திலும் வளர்ந்து அதிக வருவாய் தரவல்லது.



2005 மார்ச் 31]

- மாண்புமிகு தமிழக முதல்வர் அறிவித்துள்ளதன் அடிப்படையில், விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் அதிகமாக தரிசு நிலங்களில் சாகுபடி மேற்கொள்ளுதல்.
- தரிசுநில மேம்பாடு மற்றும் நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்களை ஒருங்கிணைத்து மானாவாரி நில மேம்பாட்டிற்கு அதிக முக்கியத்துவம் வழங்குதல்.
- மானாவாரி நில மேம்பாடு தொழில்நுட்பங்கள் மற்றும் பயிர்ச் சாகுபடி தொழில் நுட்பங்களைக் கடைபிடித்து மானாவாரி பயிர்களின் உற்பத்தித் திறனை உயர்த்துதல்.
- முக்கியப் பயிர்களில் பெறக்கூடிய முழு உற்பத்தித் திறனுக்கும் தற்போது கிடைக்கும் உற்பத்தித் திறனுக்கும் உள்ள இடைவெளியினை நீக்க தேவையான தொழில்நுட்பங்களைக் கண்டறிந்து பிரபலப்படுத்துதல்.
- தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தின் மூலமாக தொழில்நுட்பச் செய்திகள் விவசாயிகளை விரைவாக சென்று அடையச் செய்தல்.
- நல்ல மகசூல் பெற்று விவசாயிகள் அதிக இலாபம் பெறும் வகையில் விவசாயிகளை ஊக்கப்படுத்தவும் உரிய உதவிகள் வழங்கவும் அனைத்துச் சார்புத் துறைகளையும் இணைத்து கருத்தரங்குகள், பணிமனைகள் மற்றும் தீவிர முன்பருவச் சாகுபடி முகாம்கள் நடத்துதல்.
- வேளாண்மை, தோட்டக்கலை, நிலம் மற்றும் நீர்ப் பாதுகாப்பு, கால்நடைப் பராமரிப்பு போன்ற அனைத்துத் தொழில்நுட்ப ஆலோசனைகளையும் ஒரே இடத்தில் விவசாயிகளுக்கு வழங்க முயற்சித்தல்.
- மக்காச் சோளம், எண்ணெய் வித்துக்கள், பயறு வகைகள் மற்றும் பருத்தி ஆகிய பயிர்கள் சாகுபடிக்கு நல்ல வாய்ப்புள்ள மாவட்டங்களில் ஒப்பந்தப் பண்ணையச் சாகுபடி முறையினை அறிமுகப்படுத்தி, முன்னரே அறிவிக்கப்பட்ட விலை அல்லது நடப்புச் சந்தை விலை, இதில் எது அதிகமோ அந்த விலைக்கு விளை பொருட்களை வாங்கிக்கொள்ளும் திட்டத்தினை அறிமுகப்படுத்துதல், இப்பயிர்களின் சாகுபடிப் பரப்பை அதிகப்படுத்துவது மற்றும் புதிய விவசாயிகளை, குறிப்பாக சிறு, குறு விவசாயிகளை, இப்பயிர்கள் சாகுபடிச் செய்வதை

ஊக்குவித்து நல்ல இலாபமான விலை கிடைப்பதை உறுதி செய்வது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

- பொது மற்றும் தனியார்த் துறை பங்குடன் விதை மாற்று விகிதத்தினை உயர்த்துதல் மற்றும் தரமான விதைகள் கிடைப்பதை உறுதி செய்தல்.
- சுற்றுச்சூழல் நட்பு சார்ந்த வேளாண் மேம்பாட்டிற்கு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மற்றும் பூச்சி மேலாண்மைத் தொழில்நுட்பங்களை மிக அதிக அளவில் கடைபிடித்தல்.
- மண்புழு உரம் தயாரிப்பு, புளூரோட்டஸ் மூலம் பண்ணைக் கழிவுகளை இயற்கை உரமாக்குதல் மற்றும் பசுந்தாளுரம் முதலியவற்றைப் பிரபலப்படுத்தி இயற்கைப் பண்ணைய அணுகுமுறை மூலம் மண் வளத்தினை நிலைநிறுத்துதல்.
- மண் ஆய்வு அல்லது கிராம அளவிலான மண்வளக் குறியீடு சார்ந்த பரிந்துரைகள் மூலம் ஒவ்வொரு பகுதிக்கும் ஏற்ற பேரூட்ட மற்றும் நுண்ணூட்ட உரச்சத்துப் பரிந்துரைகளை வழங்க முயற்சிகள் மேற்கொள்ளுதல்.
- நுண்ணீர்ப் பாசன முறைகளைப் பிரபலப்படுத்துவதன் மூலம் நீர்ப் பயன்பாட்டுத் திறனை அதிகபட்ச அளவிற்கு உயர்த்துதல்.
- டான்வா குழுக்களை மறுசீரமைத்து மகளிருக்கு அதிக அங்கீகாரம் பெறச் செய்தல்.

## 3. மாநிலத் திட்டங்கள்

### 3.1. இடுபொருள் திட்டங்கள்

#### 3.1.1. விதைகள்

வேளாண்மையில் உற்பத்தித் திறனை உயர்த்தும் இடுபொருட்களில், விதை, முக்கியப் பங்கு வகிக்கிறது. நல்ல தரமான சான்றுபெற்ற விதைகளை, ஒப்பளிக்கப்பட்ட விதைமாற்று விகிதத்தின்படி உற்பத்தி செய்து விநியோகம் செய்யும் முக்கிய பொறுப்பு, வேளாண் துறைக்கு உள்ளது.





தரமான விதை உற்பத்தி மற்றும் விநியோகத்திற்கு உத்வேகம் அளிக்க வேளாண்மைத் துறை கீழ்க்கண்ட முக்கிய இனங்களில் சிறப்பான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

- பொது மற்றும் தனியார்த் துறைகளின் பங்கேற்பின் அடிப்படையில் விதை மாற்று விகிதத்தினை உயர்த்தி சாதனை அடைதல்.
- விதைப்பெருக்கு விகிதத்தை தேசிய தரத்திற்கு உயர்த்துதல்.
- மதிப்பு மிக்க வல்லுநர்/ஆதார விதைகளை முறையாகப் பயன்படுத்தி சான்றுவிதை உற்பத்தியினை உயர்த்துதல்.
- விதை கிராம அணுகுமுறையை செயல்படுத்துதல்.
- மானாவாரிப் பயிர்களின் சாகுபடிப் பரப்பினை அதிகப்படுத்தவும் மகசூல் திறனை உயர்த்தவும் மானாவாரிப் பயிர்கள் சாகுபடிக்குத் தரமான விதைகள் அதிக அளவில் கிடைக்கச் செய்வதில் கவனம் செலுத்துதல்.
- விதைகளுக்கான தரக் கட்டுப்பாடு காரணிகளைக் கண்டிப்புடன் செயல்படுத்துதல்.
- விநியோக அமைப்பின் திறனை மேம்படுத்த நடவடிக்கை எடுத்தல்.
- தமிழகத்தில் சாகுபடி செய்வதற்கு ஏற்ற இந்திய வேளாண்மை மற்றும் ஆராய்ச்சிக் கழகம் மற்றும் இதர மாநிலங்களில் வெளியிடப்பட்டு அறிவிக்கை செய்யப்பட்ட உயர் மகசூல் திறனுள்ள இரகங்களைத் தேர்வு செய்து அறிமுகப்படுத்துதல்.
- வேளாண்மைத் துறை, அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் தனியார் விதை உற்பத்தியாளர்களை இணைத்து முன்கூட்டியே விதைத் தேவை மற்றும் விநியோகம் பற்றி திட்டமிடுதல்.
- தரமான விதை உற்பத்தி மற்றும் அதன் பாதுகாப்புக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துதல்.
- விதை இருப்பு விவரம், விற்பனை விலை, விதை உற்பத்தி மற்றும் விதைகளைப் பாதுகாப்பாக சேமிப்பதற்கான தொழில்நுட்பங்கள், விதை உற்பத்தியாளர் மற்றும் விற்பனையாளர்கள் பற்றிய விவரங்கள் ஆகிய அனைத்துத் தகவல்களையும் வலைத்தளம் மூலம் வழங்குவதை உறுதி செய்தல்.

[2005 மார்ச் 31

2005-2006 ஆம் ஆண்டு வேளாண்மைத் துறை விதைப்பெருக்குத் திட்டத்தின்கீழ் கடைபிடிக்கப்பட உள்ள விதை மாற்று விகிதம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| 1. நெல் | - | 17% |
| 2. சிறுதானியங்கள் | - | 7% |
| 3. பயறு வகைகள் | - | 12.5% |
| 4. பருத்தி | - | மானாவாரி 10% |
| | - | இறைவை 15% |
| 5. எண்ணெய் வித்துக்கள் | | |
| (அ) நிலக்கடலை | - | 5% |
| (ஆ) எள் | - | 15% |
| (இ) சூரியகாந்தி | - | 50% |
| (ஈ) ஆமணக்கு | - | 30% |
| (உ) சோயா | - | 20% |

நெல், சிறுதானியங்கள், பயறுவகைகள், எண்ணெய் வித்துக்கள், பருத்தி ஆகிய பயிர்களில் தரமான விதைகளை உற்பத்தி செய்து நியாயமான விலையில் உரிய பருவத்தில் விநியோகம் செய்வது வேளாண்மைத் துறை மேற்கொண்டுள்ள விதைப்பெருக்குத் திட்டத்தின் முக்கிய நோக்கமாக உள்ளது. துறைமூலம் விதை விற்பனை மேற்கொள்ளப்படுவதால், தனியார் நிறுவனங்கள் தேவைக்கு அதிகமாக விதை விலையை உயர்த்துவது கட்டுப்படுத்தப்படுகிறது.

விதை உற்பத்தி மூன்று நிலைகளில் மேற்கொள்ளப்படுகிறது.

1. வல்லுநர் விதை உற்பத்தி, மாநில இரகங்களுக்கு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மூலமும், தேசிய இரகங்களுக்கு இந்திய வேளாண் மற்றும் ஆராய்ச்சிக் கழகத்தின் மூலமும் மேற்கொள்ளப்படுகிறது.

2. ஆதார விதை உற்பத்தி, 37 அரசு விதைப் பண்ணைகள், 5 மாநில எண்ணெய் வித்துப் பண்ணைகள் மற்றும் வம்பன் என்ற இடத்தில் செயல்படும் பயறு விதைப் பண்ணை ஆகியவற்றில் மேற்கொள்ளப்படுகிறது.



2005 மார்ச் 31]

3. சான்று விதை உற்பத்தி, விவசாயிகளின் நிலங்களில் மேற்கொள்ளப்படுகிறது. விதைச் சான்றளிப்புத் துறை இவ்விதைகளின் தரத்தினை உறுதி செய்கிறது.

அரசு விதைப் பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் ஆதார விதைகள் மற்றும் விவசாயிகளின் நிலங்களில் உற்பத்தி செய்யப்படும் சான்று விதைகளும் மாநிலத்தில் இயங்கி வரும் 16 பெரிய, 2 நடுத்தர மற்றும் 56 சிறிய விதை சுத்திகரிப்பு நிலையங்களில் சுத்திகரிப்புச் செய்யப்படுகிறது. இந்தச் சுத்திகரிப்பு நிலையங்களின் விதை சுத்திகரிப்புத் திறன் ஆண்டுக்கு 28,500 மெ. டன்களாகும். உற்பத்தி செய்யப்படும் அனைத்து விதைகளும் மாநிலத்தில் உள்ள 880 வேளாண்மை விரிவாக்க மையங்களின்மூலம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள், பருத்தி மற்றும் எண்ணெய் வித்து விதைகள் பிப்ரவரி 2005 முடிய கொள்முதல் மற்றும் விநியோகம் செய்யப்பட்டுள்ள அளவு மற்றும் 2005-2006 ஆம் ஆண்டு திட்டமிடப்பட்டுள்ள இலக்கு கீழே தரப்பட்டுள்ளது:

(அளவு: மெ.டன்)

| பயிர் | 2004-2005 | | 2005-2006 ஆம் ஆண்டுத் திட்டம் |
|---|---|---|---|
| | இலக்கு | சாதனை | |
| அ. கொள்முதல் | | | |
| 1. நெல் | 17000 | 11341 | 17000 |
| 2. சிறுதானியங்கள் | 400 | 340 | 400 |
| 3. பயறு வகைகள் | 1900 | 1064 | 1900 |
| 4. எண்ணெய் வித்துக்கள் | 8442.3 | 2562 | 8708 |
| 5. பருத்தி | 367 | 125 | 367 |
| ஆ. விநியோகம் | | | |
| 1. நெல் | 17000 | 10465 | 17000 |
| 2. சிறுதானியங்கள் | 400 | 340 | 400 |
| 3. பயறு வகைகள் | 1900 | 1181 | 1900 |
| 4. எண்ணெய் வித்துக்கள் | 8442.3 | 2933 | 8708 |
| 5. பருத்தி | 367 | 137 | 367 |

விதைப் பெருக்குத் திட்டங்களைச் செயல்படுத்த பெருமளவு நிதியினை அரசு ஒதுக்கியுள்ளது. அதன் விவரம் வருமாறு:-

(ரூ. இலட்சத்தில்)

| பயிர் | நிதி ஒதுக்கீடு 2004 2005 | திருத்திய மதிப்பீடு 2004 2005 | பிப்ரவரி 2005 முடிய சாதனை |
|---|---|---|---|
| நெல் மற்றும் சிறுதானியங்கள் | 1953.44 | 2063.460 | 1601.691 |
| பயறு வகைகள் | 420.06 | 401.40 | 250.586 |
| எண்ணெய் வித்துக்கள் | 602.34 | 601.140 | 515.250 |
| பருத்தி | 119.71 | 93.650 | 61.480 |

2004–2005 ஆம் ஆண்டு, சட்டசபையில் அறிவித்ததன் அடிப்படையில், விதைகளைப் பாதுகாப்பாகச் சேமித்து வைத்து விவசாயிகளுக்குத் தரமான விதைகள் வழங்குவதை உறுதிசெய்யும் வகையில், ரூ.100 இலட்சம் செலவில் 100 வேளாண்மை விரிவாக்க மையங்கள் பழுதுபார்க்கப்பட்டன.

விதைகளைக் காய வைக்க மற்றும் பாதுகாக்க ரூ.10 இலட்சம் செலவில் 213 எண்கள் தார்ப் பாய்கள் வாங்கப்பட்டுள்ளன.

### 3.2. உரங்கள்

விவசாயிகளுக்கு உரிய காலத்தில் உரங்கள் கிடைப்பதை உறுதி செய்ய, உரங்கள் உற்பத்தி மற்றும் விநியோகத்தினைக் கண்காணிக்கும் பொறுப்பை வேளாண்மைத் துறை ஏற்றுள்ளது. கடந்த இரு வருடங்களுக்கும் மேலாக தொடர்ந்து நிலவிய வறட்சிக்குப் பின், செப்டம்பர் 2004-லிருந்து பெய்த சாதகமான பருவமழையின் காரணமாக, விவசாயிகள் விரிவான பரப்பில் சாகுபடி மேற்கொண்டனர். இதனால் உரங்களின் தேவை, குறிப்பாக யூரியா உரத்தின் தேவை மிக அதிகமாக உயர்ந்தது. திடீரென ஏற்பட்ட அதிக தேவையைச் சமாளிக்க மிகக் கடினமான சூழ்நிலையிலும் 2.38 இலட்சம் மெ. டன் கூடுதல் யூரியா ராபி பருவம் நவம்பர் 2004 வரை பெறப்பட்டு உரிய நேரத்தில் விவசாயிகளுக்கு உரங்கள் கிடைப்பது உறுதி



செய்யப்பட்டது. உரத் தட்டுப்பாடு காரணமாக அதிக விலையில் உரங்களை விற்பனை செய்வது போன்ற முறைகேடுகளைத் தடுக்கும் வகையில் விற்பனையாளர்களை எச்சரித்தும், விவசாயிகளிடமிருந்து அதிக விலை மற்றும் உரம் கிடைக்காமை பற்றிய புகார்களை வரவேற்றும் செய்தித்தாள்களில் ஒரு பொது அறிவிப்பு வெளியிடப்பட்டது. இந்த எச்சரிக்கைக்கு வலுவூட்டும் வகையில் 608 உரக் கடைகள் ஆய்வு செய்யப்பட்டு, 79 கடைகளுக்கு விற்பனைத் தடை விதித்தும், 42 கடைகளுக்கு எச்சரிக்கை வழங்கியும், 59 கடைகளுக்கு உரிமம் தற்காலிகமாக இரத்து செய்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அனைத்து மாவட்டங்களிலும் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை தகவல் உதவி மையங்கள் திறக்கப்பட்டு உரிய நேரத்தில் சரியான விலையில் உரங்கள் கிடைப்பதைத் துறை உறுதி செய்தது.

2004–2005 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட இரசாயன உரங்களின் அளவு மற்றும் 2005–2006 ஆம் திட்ட விவரம் பின்வருமாறு:-

(இலட்சம் மெ. டன்னில்)

| சத்துக்கள் | இலக்கு 2004–2005 | பிப்ரவரி 2005 முடிய சாதனை | 2005–2006 ஆம் ஆண்டுத் திட்டம் |
|---|---|---|---|
| தழைச் சத்து | 5.40 | 5.18 | 5.40 |
| மணிச் சத்து | 2.31 | 2.26 | 2.31 |
| சாம்பல் சத்து | 2.24 | 2.38 | 2.24 |
| **மொத்தம்** | **9.95** | **9.82** | **9.95** |

### 3.3. நுண்ணூட்டச் சத்துக்கள்

மண் வளத்தினை நிலைப்படுத்தவும், பயிர்களின் உற்பத்தித் திறனை உயர்த்தவும் மண்ணில் நுண்ணூட்டச் சத்துக்கள் மிகவும் முக்கியமானதாகும். நுண்ணூட்டச் சத்துக் குறைபாடு விழுக்காடு உயர்ந்து வருவது, பரந்த பரப்பளவில் நுண்ணூட்டச் சத்துக் குறைபாடு ஏற்பட்டுள்ளது என்பதைத் தெளிவாக்குகிறது. நுண்ணூட்டச் சத்து மேலாண்மையை மிகக் குறைவாகக் கடைபிடித்தது, வேளாண்மை உற்பத்தித் திறன் தேக்கமடைந்ததற்கு மற்றொரு காரணமாகும். தீவிர சாகுபடி முறைகளை மேற்கொண்டதால் பெரும்பாலான மண்ணில்

நுண்ணூட்டச் சத்துக் குறைவு ஏற்பட்டுள்ளது. பல்வேறு பயிர்களுக்கும் பொருத்தமான நுண்ணூட்டச் சத்தினைச் சமச்சீராக இடுவது பற்றி வேளாண்மைத் துறை தொடர்ந்து ஆலோசனை வழங்கி வருகிறது. 18 அணுக் கதிர் ஈர்ப்பு அலை நிழற்படமானி கருவிகள் (மண்ணில் உள்ள நுண்ணூட்டச் சத்துக் குறைவினை ஆய்வு செய்யும் நவீன உபகரணம்) மண் பரிசோதனை ஆய்வகங்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளன. சிவகங்கை மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் உள்ள ஆய்வகங்களில் உள்ள மண் பரிசோதனைத் தேவையினை நிறைவு செய்ய, 2004–2005 ஆம் ஆண்டு, இரண்டு அணுக் கதிர் ஈர்ப்பு அலை நிழற்படமானிகள் வாங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் அனைத்து மாவட்டங்களுக்கும் மண்ணில் உள்ள நுண்ணூட்டச் சத்தினைப் பரிசோதனை செய்யும் வசதி விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள் மற்றும் எண்ணெய்வித்துப் பயிர்களுக்குத் தேவைப்படும் தரமான நுண்ணூட்டச் சத்து உரங்களை வேளாண்மைத் துறையின் விற்பனை மையங்கள் மூலமாக விவசாயிகளுக்கு வழங்குவதற்காக, குடுமியான்மலையில் நுண்ணூட்டக் கலவை உற்பத்தி மையம் ஒன்று இயங்கி வருகிறது. இம்மையத்தில் ஆண்டுக்கு 1250 மெ. டன் நுண்ணூட்டச் சத்து உரங்கள் உற்பத்தி செய்து வழங்கப்படுகிறது. 2004–2005 ஆம் ஆண்டு பிப்ரவரி 2005 வரை, 1,192 மெ. டன் நுண்ணூட்ட உரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு 1,094 மெ. டன் விநியோகிக்கப்பட்டுள்ளது. 2005–2006 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 3.4. உரக் கட்டுப்பாடு ஆய்வகங்கள்

உரக் கட்டுப்பாடுச் சட்டம் 1985–ல் நிர்ணயிக்கப்பட்ட தரத்தின் அடிப்படையில் தரமான உரங்களை விவசாயிகளுக்கு வழங்குவதில் அரசு அதிகக் கவனம் செலுத்திவருகிறது. மொத்த மற்றும் சில்லரை உர விற்பனை மையங்களிலிருந்தும் உரக் கலவை உற்பத்தி மையங்களிலிருந்தும் மாதிரிகள் எடுக்கப்பட்டு, உரக் கட்டுப்பாட்டுச் சட்டம் கண்டிப்புடன் செயல்படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டில் ஆண்டிற்கு 16,800 உர மாதிரிகள் ஆய்வு செய்யும் வகையில் 14 அறிவிக்கை செய்யப்பட்ட உரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் செயல்பட்டு வருகின்றன. 2004–2005 ஆம் ஆண்டில், பிப்ரவரி 2005 முடிய 15,190 உர மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. 2005–2006 ஆம் ஆண்டு உரத் தரத்தினை உறுதிசெய்ய 16,800 உர மாதிரிகள் ஆய்வு செய்யப்படும்.





### 3.5. இயற்கை பண்ணையம்

தொடர்ந்து சாகுபடி மேற்கொள்ளல், சீரற்ற முறையில் இரசாயன உரங்களை உபயோகப்படுத்துதல் மற்றும் மண்ணில் தேவையான அளவு இயற்கை உரங்கள் இடாதது முதலிய காரணங்களால், மாநிலத்தில் மண்வளம் பொதுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இயற்கை உரங்களைக் குறைவாக உபயோகித்ததால் தமிழ்நாட்டில் 1971 ஆம் ஆண்டு மண்ணில் 1.20 சதம் என்ற அளவில் இருந்த இயற்கை உர அளவு 2002 ஆம் ஆண்டு 0.68 சதம் ஆகக் குறைந்துள்ளது. மண்ணில் இயற்கை உர அளவு குறைந்ததால், மண்ணின் உயிரியல் அமைப்பில் விரும்பத்தகாத மாற்றம் ஏற்பட்டு பயிர்களிடையே உள்ள ஒருமித்த வளர்ச்சித் தன்மைக்கு இடையூறு ஏற்பட்டு பாதிப்படைந்து, மண் வளமும், உற்பத்தித் திறனும் பாதிப்புக்குள்ளானது. இதன் முக்கியத்துவத்தினைக் கருதி, உயிர் உரங்கள், பசுந்தாள் உரங்கள், மண்புழு உரங்கள் மற்றும் புளூரோட்டஸ் மூலம் பண்ணைக் கழிவுகளை மக்கச் செய்வது போன்ற இயற்கைப் பண்ணைய முறைகள், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மைத் தொழில்நுட்பத்தின் ஒரு பகுதியாக பிரபலப்படுத்தப்படுகிறது. இயற்கைப் பண்ணைய தொழில்நுட்ப முறைகளைக் கடைபிடிப்பதை உறுதி செய்யும் வகையில் பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

#### 3.5.1. புளூரோட்டஸ்மூலம் பண்ணைக் கழிவுகளை கம்போஸ்ட் உரமாக்கல்

2004–2005 ஆம் ஆண்டு, புளூரோட்டஸ் கொண்டு பண்ணைக் கழிவுகளை கம்போஸ்ட் உரமாக்கி விவசாயிகள் வயல்களில் உபயோகிக்கும் வகையில், 1 கிலோ புளூரோட்டஸ், 5 கிலோ யூரியா மற்றும் அதன் தொடர்பான பிரசுரங்கள் அடங்கிய 2000 சிறுதளைப் பைகள், ரூ.2.80 இலட்சம் செலவில் இலவசமாக விநியோகிக்கப்பட்டுள்ளன. 2005–2006 ஆம் ஆண்டிலும் ரூ. 2.80 இலட்சம் செலவில் 2000 சிறுதளைப் பைகள் விநியோகம் செய்யும் வகையில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

#### 3.5.2. மண்புழு உர உபயோக மேம்பாடு திட்டம்

இத்திட்டத்தின்கீழ் 2004–2005 ஆம் ஆண்டு ரூ.3.85 இலட்சம் செலவில் 100 செயல் விளக்கங்கள் மற்றும் பயிற்சிகள் மொத்தம் 5000 விவசாயிகள் பயன்பெறும் வகையில் நடத்தப்பட்டன. இத்திட்டம் 2005–2006 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். அரசுப் பண்ணைகளில் மண்புழு உரம் தயாரிக்கப்பட்டு வேளாண்மை விரிவாக்க மையங்கள்

மூலம் இயன்ற அளவிற்கு விவசாயிகளுக்கு விநியோகிக்க துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

### 3.5.3. உயிர் உரங்கள் உற்பத்தி மற்றும் விநியோகம்

உயிர் உரங்கள் அதிக அளவில் விவசாயிகளுக்குக் கிடை க்கச் செய்ய, ரைசோபியம், அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போ பாக்டீரியம் ஆகிய உயிர் உரங்கள் கடலூர், இராமநாதபுரம், சேலம், குடுமியான்மலை, சாக்கோட்டை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 6 இடங்களில் இயங்கிவரும் உயிர் உர உற்பத்தி மையங்கள் மூலம் ஆண்டுக்கு 1400 மெ. டன் (ஒரு பொட்டலம் 200 கிராம் வீதம் 70 இலட்சம் பொட்டலங்கள்) என்ற அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த மையங்களில் உற்பத்தி செய்யப்படும் உயிர் உரங்களின் தரத்தை திருச்சியில் இயங்கி வரும் உயிர் உரத் தரக் கட்டுப்பாடு ஆய்வகம் கண்காணித்து வருகிறது. 2005–2006 ஆம் ஆண்டு உயிர் உர உற்பத்தித் திட்ட விவரம் வருமாறு:–

| வ. எண் | பெயர் | அளவு ( மெ. டன்) |
|---|---|---|
| 1 | ரைசோபியம் | 280 |
| 2 | அசோஸ்பைரில்லம் | 800 |
| 3 | பாஸ்போ பாக்டீரியம் | 320 |
| | மொத்தம் | 1400 |

2004–2005 ஆம் ஆண்டு பிப்ரவரி 2005 வரை 1109 மெ. டன் உயிர் உரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு, 940 மெ. டன் உயிர் உரங்கள் வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. 2005–2006 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் 1400 மெ. டன்கள் உயிர் உரங்கள் உற்பத்தி செய்து விநியோகம் செய்யப்படும் வகையில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 3.5.4. நீலப் பச்சைப் பாசி மற்றும் அசோலா

நீலப் பச்சைப் பாசி மற்றும் அசோலா ஆகியவை காற்றில் உள்ள தழைச் சத்தினை ஈர்த்து பயிருக்குக் கிடைக்கச் செய்யும் திறனுள்ளவை என்பதால் இவை தழைச் சத்தினைப் பயிர்களுக்கு வழங்கும் கூடுதல் ஆதாரமாக விளங்குகின்றன. அரசு விதைப் பண்ணைகள் மூலம் 500



மெ. டன் நீலப் பச்சைப் பாசி மற்றும் 500 மெ. டன் அசோலா உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன.

### 3.5.5. பசுந்தாளுர உபயோகத்தை மேம்படுத்தும் திட்டம்

பசுந்தாளுரப் பயிரினைச் சாகுபடி செய்து, அதனை வயலிலேயே மடக்கி உழுவதனால், மண்ணில் இயற்கை உர அளவு அதிகரிக்கிறது. இதர பண்ணைப் பயிர்களின் சாகுபடி தொடர்ந்து தீவிரமாக மேற்கொள்ளப்படுவதால், பசுந்தாள் உரப் பயிர்ச் சாகுபடி குறைந்து வருகிறது. பண்ணைகளில் கால்நடைகளின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துவிட்டது என்பதோடு பண்ணை எருவும் போதிய அளவு கிடைக்கவில்லை என்பதால், பசுந்தாளுரம் மற்றும் பசுந்தழை உரமிடுதல் மட்டுமே மண்ணில் இயற்கை உர அளவை உயர்த்த மாற்று ஆதாரங்களாக உள்ளன. எனவே, பசுந்தாளுரப் பயிரினைச் சாகுபடிச் செய்வதில் விவசாயிகளை ஊக்கப்படுத்தும் வகையில் 125 மெ. டன் பசுந்தாளுர விதைகள் 25 சத மானியத்தில் விநியோகிக்கும் திட்டம் ரூ.25 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படுகிறது. 2004–2005 ஆம் ஆண்டு பிப்ரவரி 2005 முடிய 137 மெ. டன் பசுந்தாளுர விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு 117 மெ. டன் விதைகள் 25 சத மானிய விலையில் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டம் 2005–2006 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 3.5.6. உழவர் பயிற்சி நிலையங்கள்மூலம் விவசாயிகளிடையே ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகத் தொழில்நுட்பத்தினைப் பிரபலப்படுத்துதல்

பசுமைப் புரட்சி நேரத்தில் இயற்கை ஆதாரங்களைப் பெரிதும் பயன்படுத்தும் பயிர் இரகங்களைப் பிரபலப்படுத்தியதால், மண்ணில் உள்ள சத்துக்களின் நிலையான தன்மை கேள்விக்குறியாகிவிட்டது. பேரூட்டச் சத்துக்களை இரசாயன உரங்களின்மூலம் மண்ணில் இட்டதாலும், தொடர்ந்து ஒரே பயிரைச் சாகுபடி செய்ததாலும் ஏற்படும் ஒட்டுமொத்த இதர நுண்ணூட்டச் சத்துக்களின் இழப்பு ஈடுசெய்யப்படவில்லை. இயற்கை உரங்கள் இடப்படாததால் மண்ணின் அடுக்குகள் மாற்றத்திற்குள்ளாயின. அதிக அளவு இரசாயன உரங்களைச் சமச்சீரற்ற முறையில் இடுவதால், நிலத்தின் சுற்றுப்புறச் சூழல் பாதிப்படைந்தது என்பதோடு, உற்பத்தியிலும் பொருளாதார அடிப்படையில் இலாபகரமான வருவாயைத்

தரவில்லை. எனவே, மண் வளத்தையும் உறபத்தித் திறனையும் தக்கவைக்க ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து தொழில்நுட்பத்தைக் கடைபிடிப்பது மிகவும் அவசியமானதாகிறது. இத்தொழில்நுட்பங்கள் 12 உழவர் பயிற்சி நிலையங்கள் மூலமாக விவசாயிகளுக்குப் பயிற்சி வழங்கப்பட்டு பிரபலப்படுத்தப்பட்டு வருகிறது. இப்பயிற்சித் திட்டமானது, 2003–2004 ஆம் ஆண்டு 2,700 விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்க ரூ.8.64 இலட்சம் செலவில் அறிமுகப்படுத்தப்பட்டது. இப்பயிற்சித் திட்டம் 2004–2005 ஆம் ஆண்டு, மாவட்டத்திற்கு 500 விவசாயிகள் வீதம் ரூ.43.20 இலட்சம் செலவில் 13,500 விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கும் வகையில் விரிவுபடுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டது. ஒரு பயிற்சிக்கு இரண்டு நாட்களுக்கு 50 விவசாயிகள் வீதம் இரு நாட்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. மொத்தம் 270 பயிற்சிகள் நடத்தப்பட்டன.

சாதனை விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | விவரம் | இலக்கு | சாதனை (பிப்ரவரி 2005 முடிய) |
|---|---|---|---|
| 1. | ஊட்டச்சத்து மேலாண்மை– நடத்தப்பட்ட பயிற்சிகள் (எண்கள்) | 270 | 270 |
| 2. | பயிற்சி அளிக்கப்பட்ட விவசாயிகள் | 13500 | 13500 |
| 3. | நிதி ( இலட்சத்தில்) | 43.20 | 43.20 |

### 3.6. மண் மேலாண்மை மற்றும் மண் ஆய்வு

#### 3.6.1. மண் அளவை மற்றும் நிலப் பயன்பாட்டு அமைப்பு

கள ஆய்வு மற்றும் பரிசோதனைக் கூட ஆய்வுகளின் மூலம் மண்ணின் தன்மை, உருவாக்கவியல் அதன் பௌதீக மற்றும் இரசாயனப் பண்புகளைக் கண்டறிந்து அகில உலகத் தரத்திற்கேற்ப மண்ணை வகைப்படுத்தி, நில அமைப்பியலின்படி, வரைபடம் தயாரித்து பலவகைகளிலும் பயன்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். கோயம்புத்தூர், தஞ்சாவூர், வேலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய நான்கு இடங்களில் மண் அளவை அமைப்புகள் இயங்கி வருகின்றன.



2004–2005 ஆம் ஆண்டு, 1.10 இலட்சம் எக்டேர் கள ஆய்வு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, பிப்ரவரி 2005 முடிய 0.99 இலட்சம் எக்டேர் பரப்பில் மண் அளவைப் பணி முடிந்துள்ளது. 2005–2006 ஆம் ஆண்டில் இவ்வமைப்புகள் மூலம் 1.10 இலட்சம் எக்டேர் பரப்பில் விரிவான மண் அளவைப் பணி மேற்கொள்ளப்படும்.

#### 3.6.2. களர் மற்றும் உவர் நிலங்கள் சீரமைப்பு

நாகப்பட்டினம், திருவாரூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை, சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் 4,000 ஏக்கர் பரப்பில் களர் மற்றும் உவர் நிலங்களைச் சீராக்கம் செய்ய இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 2004–2005 ஆம் ஆண்டு பிப்ரவரி 2005 முடிய 2,886 ஏக்கர் பரப்பில் சீராக்கம் மேற்கொள்ளப்பட்டது. 2005–2006 ஆம் ஆண்டு, 4,000 ஏக்கர் பரப்பில் களர் உவர் நிலங்கள் சீராக்கம், இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

#### 3.6.3. மண் பரிசோதனை நிலையங்கள்

ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மைத் தொழில்நுட்பத்தின் ஒரு பகுதியாக உற்பத்தித் திறனை உயர்த்தவும், இலாபகரமான வருவாய் பெறவும் இடுபொருட்களைச் சிக்கனமாகப் பயன்படுத்தி பேரூட்ட மற்றும் நுண்ணூட்டச் சத்துக்களைத் தேவையான அளவு அளித்திட விவசாயிகளை ஊக்கப்படுத்த வேண்டும். இயற்கையாக உள்ள மண்வளத்தின் அடிப்படையில் ஒவ்வொரு நிலத்திற்கும் குறிப்பான உரப் பரிந்துரையை விவசாயிகளுக்கு வழங்குவதற்கு மண் மாதிரி ஆய்வு மேற்கொள்ள 19 மண் ஆய்வுக் கூடங்கள் மற்றும் 16 நடமாடும் மண் ஆய்வுக் கூடங்கள் தமிழ்நாட்டில் இயங்கி வருகின்றன. மண் பரிசோதனை நிலையங்கள் மூலமாக 5.28 இலட்சம் எண்கள் மண் ஆய்வு மேற்கொள்ள நிர்ணயிக்கப்பட்ட இலக்கிற்கு 3.64 இலட்சம் மண் மாதிரிகளும், நடமாடும் மண் பரிசோதனை நிலையங்கள் மூலமாக 2.82 இலட்சம் எண்கள் இலக்கிற்கு 1.71 இலட்சம் மண் மாதிரிகளும் பிப்ரவரி 2005 முடிய ஆய்வு செய்யப்பட்டுள்ளன. மேற்கண்ட மண் பரிசோதனை நிலையங்கள் பிரச்சினைக்குரிய நிலங்களுக்கு உரிய சீராக்க முறைகளையும், கிராம அளவிலான மண்வள அட்டவணைத் தயாரித்தல் மற்றும் பாசன நீரின் தரத்தினைக் கண்டறிதல் போன்றவற்றிற்குப் பரிந்துரைகளையும் வழங்குகிறது. மண், உயிர் உரங்கள் மற்றும் நுண்ணூட்ட மேலாண்மைத் தொழில்நுட்பங்களை விவசாயிகளிடையே, கிராம ஏற்புத் திட்டம், மண் ஆய்வு முகாம்கள் மற்றும் பொருட்காட்சிகள் மூலம் பிரபலப்படுத்துவதில் பிரச்சார

சாதனமாக நடமாடும் மண் ஆய்வு நிலையங்கள் விளங்குகின்றன. மேலும் புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலையில் உள்ள மத்திய தரக் கட்டுப்பாட்டு ஆய்வகம் தலைமை நிலையமாகச் செயல்பட்டு, இவ்வாய்வுக்கூட அலுவலர்களின் தொழில்நுட்பத் திறன் மேம்பாட்டிற்குத் தேவையான பயிற்சியை வழங்குவதுடன் அனைத்து ஆய்வகங்களின் ஆய்வு முடிவுகளின் ஆய்வியல் தன்மையையும் கண்காணிக்கிறது.

## 3.7. பயிர்ப் பாதுகாப்பு

### 3.7.1. பூச்சி கண்காணிப்பு

ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மைத் தொழில்நுட்பங்கள் பரிந்துரைக்கப்பட்டு விவசாயிகளால் பெருமளவில் கடைபிடிக்கப்படுகிறது. ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மையின் வெற்றியானது, வயலில் பூச்சி மற்றும் நோய் நிலைமை மற்றும் நன்மை தரும் பூச்சிகளின் எண்ணிக்கை ஆகியவற்றைத் தொடர்ந்து கண்காணிப்பதைப் பொறுத்தே அமையும். இம்முயற்சியின் அடிப்படையில் ஒவ்வொரு வாரமும் 7356 இடங்களில் பூச்சி/நோய் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு பூச்சி/நோய்த் தாக்குதல் ஏற்படுவதற்கான வாய்ப்புகள்பற்றி, முன்னறிவிப்பு தரப்படுகிறது. இவ்வாறு தொடர்ந்து பூச்சி/நோய்க் கண்காணிக்கப்படுவதால், பத்தாண்டுகளுக்கு முன் அதிகம் சேதம் விளைவித்த நெல் தண்டு துளைப்பான், இலை சுருட்டுப் புழு, புகையான், மணிலா சிகப்பு கம்பளிப் புழு, புரோடீனியா, பருத்தி காய்ப் புழு முதலிய பூச்சிகளின் தாக்குதல் கட்டுப்பாட்டுக்குள் வைக்கப்பட்டுள்ளது.

### 3.7.2. பயிர்ப் பாதுகாப்புத் திட்டம்

2004-2005 ஆம் ஆண்டு 37.5 இலட்சம் எக்டேர் உணவுப் பயிரிலும், 18.2 இலட்சம் எக்டேர் உணவல்லாத பயிரிலும், விதை நேர்த்தியில் 22.0 இலட்சம் எக்டேர் பரப்பிலும் பயிர்ப் பாதுகாப்பு மேற்கொள்ள திட்டமிடப்பட்டு, பிப்ரவரி 2005 முடிய, உணவுப் பயிரில் 31.760 இலட்சம் எக்டேரிலும், உணவல்லாத பயிரில் 15.132 இலட்சம் எக்டேரிலும், விதை நேர்த்தியில் 22.693 இலட்சம் எக்டேரிலும் பயிர்ப் பாதுகாப்புப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டம் 2005-2006 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படும்.



இத்திட்டத்தின்கீழ் தானிய உற்பத்தித் திட்டம், கரும்பு உற்பத்தித் திட்டம், ஒருங்கிணைந்த பருத்தி மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் மக்காச்சோளம் மேம்பாட்டுத் திட்டங்கள் ஆகிய மைய அரசுத் திட்டங்களில் மானிய விலையில் விவசாயிகளுக்கு விநியோகிக்க தேவையான உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள் மற்றும் இயற்கை பூச்சிக்கொல்லி மருந்துகள் கொள்முதல் செய்து விநியோகிக்க அரசு தேவையான நிதியை வழங்கியுள்ளது.

### 3.7.3. ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை

1980 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் உலக உணவு மற்றும் வேளாண்மை நிறுவனத் திட்டத்தின்மூலம் தமிழ்நாட்டில் பூச்சி மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மைத் தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டு, இதற்கு வயல்வெளிப் பள்ளி அணுகுமுறைமூலம் சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. 30 விவசாயிகள் வீதம் பங்கேற்கும் பயிர்ப் பருவம் முழுதும் மேற்கொள்ளப்படும் பயிற்சி மற்றும் செயல் விளக்கங்கள், விவசாயிகளிடையே அதிகப்படியான விழிப்புணர்வினை ஏற்படுத்தியதால் ஏறக்குறைய அனைத்து கிராமங்களிலும் இத்தொழில்நுட்பங்கள் பின்பற்றப்படுகின்றன. பரந்த அளவில் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு தொழில்நுட்பங்கள் கடைபிடிக்கப்படுவதால், பத்தாண்டுகளுக்கு முன் 10,000 மெ. டன் என்ற அளவிற்கு ஆண்டுக்கு உபயோகப்படுத்தப்பட்டு வந்த இரசாயன பூச்சி மருந்து மூலப்பொருள்கள், சுமார் 1,300 மெ. டன் என்ற அளவிற்குக் குறைந்துள்ளன.

2004-2005 ஆம் ஆண்டு மத்திய அரசுத் திட்டங்களின் மூலம் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மைச் செயல்பாட்டில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் பின்வருமாறு:

| வ. எண் | விவரம் | பொருள் இலக்கு | |
|---|---|---|---|
| | | திட்டம் | சாதனை (பிப்ரவரி 2005 வரை) |
| 1 | தானிய உற்பத்தித் திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை செயல்விளக்கம் மற்றும் வயல்வெளிப் பள்ளி (எண்கள்) | 330 | 330 |

| | | | |
|---|---|---|---|
| 2 | பருத்தி சிறு குழு திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை செயல்விளக்கம் மற்றும் வயல்வெளிப் பள்ளிகள் (எண்கள்) | 350 | 340 |
| 3 | ஐசோபாம் திட்டம் - மக்காச்சோள திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை செயல்விளக்கம் மற்றும் வயல்வெளிப் பள்ளிகள் (எண்கள்) | 16 | 16 |
| 4 | ஐசோபாம் திட்டம் - எண்ணெய் வித்துக்கள் திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை செயல்விளக்கம் மற்றும் வயல்வெளிப் பள்ளிகள் (எண்கள்) | 66 | 65 |
| 5 | ஒருங்கிணைந்த ஐசோபாம் திட்டம்- பயறுவகைகள் திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை செயல்விளக்கம் மற்றும் வயல்வெளிப் பள்ளிகள் (எண்கள்) | 25 | 24 |

2005-2006 ஆம் ஆண்டிலும் இந்த ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை அணுகுமுறை தொடர்ந்து செயல்படும்.

### 3.7.4. உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணி உற்பத்தி மையம் மற்றும் மாநில ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை மையம்

ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மைச் செயல்பாட்டின் ஒரு பகுதியாக, வேளாண்மைத் துறையினால் உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு, விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன. தமிழ்நாட்டில் 12 அரசு உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணி உற்பத்தி மையங்களும், 51 ஒட்டுண்ணி உற்பத்தி மையங்களும் உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகளை உற்பத்தி செய்ய இயங்கி வருகின்றன. அதன் விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | காரணி / பயிர் / பூச்சி | மொத்த மையங்கள் | பரப்பு (எக்டேர்) |
|---|---|---|---|
| 1 | டிரைக்கோகிரம்மா சைலோனிஸ் கரும்பு இடைக்கணு புழு | 21 | 10500 |



| | | | |
|---|---|---|---|
| 2 | பெத்திலிட், பிரக்கானிட் மற்றும் ஈலோபிட் (தென்னை கருந்தலைப் புழு) | 21 | 10250 |
| 3 | என்பிவி (பருத்தி காய்ப் புழு) | 3 | 1500 |
| 4 | என்பிவி (மணிலா சிகப்பு கம்பளிப் புழு மற்றும் புரோடீனியா) | 4 | 480 |
| 5 | பச்சை மஸ்கார்டைன் பூஞ்சாணம் (தென்னை காண்டாமிருக வண்டு) | 2 | 10000 |
| 6 | உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள் (பருத்தி, நெல், பயறுவகைகள், மணிலா) | 12 | 60000 |

இத்திட்டம் 2005-2006 ஆம் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 3.7.5. பூச்சிக்கொல்லி மருந்து ஆய்வகங்கள்

ஆண்டிற்கு 13,860 மாதிரிகள் ஆய்வு செய்யும் கொள்திறனுடன் தமிழ்நாட்டில் 9 பூச்சிக்கொல்லி மருந்து ஆய்வகங்கள் இயங்கி வருகின்றன. பூச்சிக்கொல்லி மருந்து சட்ட விதிகளைச் செயல்படுத்துவதற்கு இந்த அறிவிக்கை செய்யப்பட்ட ஆய்வகங்கள் இயங்கி வருகின்றன. 2004-2005 ஆம் ஆண்டு பிப்ரவரி 2005 முடிய 12,721 மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. 2005-2006 ஆம் ஆண்டு 13,860 பூச்சிக்கொல்லி மருந்து மாதிரிகளை ஆய்வு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

## 3.8. பயிர் சார்ந்த மாநிலத் திட்டங்கள்

### 3.8.1. பயறு கிராமத் திட்டம்

உலக அளவில் பயறு சாகுபடி பரப்பில் 33 சதமும் உற்பத்தியில் 22 சதவீதமும் இந்தியாவில் மேற்கொள்ளப்படுவதால், இந்தியா அதிக உற்பத்தியாளராகவும், உபயோகிப்பாளராகவும் திகழ்கிறது. இந்தியாவின் மொத்த பயறுவகை பரப்பில் 3.2 சதவீத பரப்பும், மொத்த உற்பத்தியில் 2.42 சத உற்பத்தியும் தமிழகத்தின் பங்களிப்பாக உள்ளது. பயறுவகைத் தேவைக்கும், உற்பத்திக்கும் பெரிய இடைவெளி உள்ளது. கடந்த 5 ஆண்டுகளாக பயறு வகைகளின் சராசரி உற்பத்தித் திறன் எக்டேருக்கு

சுமார் 400 கிலோ/எக்டேர் என்ற அளவிலேயே உள்ளது. இத்தேக்க நிலைக்கு முக்கிய காரணம் பயறுவகை சாகுபடி செய்யப்படும் 90 சத பரப்பு மானாவாரியாகவும், குறைந்த வளமுள்ள நிலங்களாக இருப்பதே ஆகும். எனவே பயறுவகைப் பயிர்களின் உற்பத்தித் திறனை எக்டேருக்கு 450 கிலோ என்ற அளவிலிருந்து எக்டேருக்கு 750 கிலோ என்ற அளவிற்கு உயர்த்தும் நோக்கத்துடன், பயறு கிராமத் திட்டம் 2003–2004 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் திருவண்ணாமலை, புதுக்கோட்டை, திருச்சி, பொம்பலூர், கரூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், சேலம், நாமக்கல், தர்மபுரி, திண்டுக்கல், தேனி, விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, கடலூர், ஈரோடு, வேலூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய பயறு வகைப் பயிர்கள் அதிகமாகச் சாகுபடியாகும் 20 மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 14 கிராமங்கள் வீதம் 280 கிராமங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு கிராமத்திலும் 100 ஏக்கர் (40 எக்டேர்) வீதம் மொத்தம் 28,000 ஏக்கர் (11,200 எக்டேர்) பரப்பில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இது பெருவிளக்கப் பண்ணையாகச் செயல்பட்டு, அருகில் உள்ள விவசாயிகள் நவீனத் தொழில்நுட்பங்களை அறிந்து கடைபிடிக்க உதவுகிறது. இந்தச் செயல்விளக்க பாத்திகள் அமைக்க, ஒரு கிலோவிற்கு ரூ.15/–க்கு மிகாமல் 50 சத மானியத்தில் விதைகளும் ஒரு ஏக்கருக்கு ரூ.20/–க்கு மிகாமல் 4 கிலோ, டிஏபி உரமும், பயறு உடைக்கும் கருவி ஒன்றுக்கு ரூ.10,000/–க்கு மிகாமலும் மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டம் ரூ.41.20 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படுகிறது.

2004–2005 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் இனவாரியான இலக்கும், பிப்ரவரி, 2005 முடிய உள்ள சாதனையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| வ. எண் | இனம் | அலகு | பொருள் | | நிதி (ரூ. இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|---|
| | | | இலக்கு | சாதனை (பிப்ரவரி 2005 முடிய) | இலக்கு | சாதனை (பிப்ரவரி 2005 முடிய) |
| 1. | பெருவிளக்கப் பண்ணை செயல் விளக்கம் | (எக்.) | 11200 | 8560 | – | – |
| 2. | விதை விநியோகம் | (மெ. டன்) | 224 | 172 | 33.60 | 29.941 |





| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3 | டிஏபி தெளித்தல் | (மெடன்) | 112 | 51.62 | 5.60 | 3.90 |
| 4 | பயறு உடைக்கும் கருவி | எண் | 20 | 10 | 2.00 | 1.00 |
| | மொத்தம் | | | | 41.20 | 34.84 |

## 3.9. தென்னை மேம்பாட்டுத் திட்டம்

தமிழ்நாட்டில் விவசாயிகளுக்குத் தேவையான நெட்டை, நெட்டைXகுட்டை, குட்டைXநெட்டை இரகத் தென்னங்கன்றுகள் 22 அரசு தென்னை நாற்றுப்பண்ணைகள் மற்றும் 2 தாய்மரத் தோட்டங்களிலும் உற்பத்திச் செய்யப்பட்டு வழங்கப்படுகின்றன. நெட்டைக் கன்று ஒன்று ரூ.12/– வீதமும், நெட்டை X குட்டை கன்று ரூ.20/– வீதமும் குட்டை X நெட்டை கன்று ரூ.75/– வீதமும் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

2004–2005 ஆம் ஆண்டு குட்டை X நெட்டை வீரிய ஒட்டு கன்றுகளின் உற்பத்தி, ஒட்டு செய்வதற்கு ஏற்ற போதிய அளவு தாய் மரங்கள் அரசு பண்ணைகளில் இல்லாததால் குறைவாக உள்ளது.

2004–2005 ஆம் ஆண்டு நெற்று கொள்முதல் மற்றும் தென்னங்கன்றுகள் விநியோகத்தில் சாதனை மற்றும் 2005–2006 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட உள்ள திட்ட விவரம் பின்வருமாறு:–

(இலட்சம் எண்கள்)

| வ. எண் | இரகம் | 2004–2005 | | | | 2005–2006 திட்டம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | இலக்கு | | சாதனை (பிப்ரவரி 2005 முடிய) | | | |
| | | நெற்று கொள்முதல் | கன்றுகள் வழங்குதல் | நெற்று கொள்முதல் | கன்றுகள் வழங்குதல் | நெற்று கொள்முதல் | கன்றுகள் வழங்குதல் |
| 1 | நெட்டை | 3.0 | 2.25 | 4.271 | 2.445 | 3.00 | 2.25 |
| 2 | நெட்டை குட்டை | 3.2 | 2.24 | 2.592 | 2.143 | 3.20 | 2.24 |
| 3 | குட்டை நெட்டை | 1.00 | 0.35 | 0.092 | 0.016 | 0.200 | 0.070 |
| 4 | பெண் குழந்தைகளுக்கு இலவசக் கன்றுகள் வழங்குதல் | 5.30 | 4.00 | – | – | 7.80 | 6.00 |

2005–2006 ஆம் ஆண்டு இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 3.10. பருத்தி மேம்பாட்டுத் திட்டம்

1992–1993 ஆம் ஆண்டு 2.67 இலட்சம் எக்டேராக இருந்த பருத்திச் சாகுபடிப் பரப்பு 2003–2004 ஆம் ஆண்டு சுமார் ஒரு இலட்சம் எக்டேராகக் குறைந்துள்ளது. பருவமழை தவறியதாலும், அதனால் விவசாயிகள் இதர அதிக வருவாய் தரக்கூடிய மக்காச்சோளம் போன்ற பயிர்கள் சாகுபடிக்கு மாறியதாலும் பருத்திச் சாகுபடிப் பரப்பு குறைந்துள்ளது. குறைந்த விலையில் அதிக அளவு பருத்தி ஆலைகளுக்குத் தேவைப்படுகிறது. தற்போது அவர்கள் அண்டை மாநிலத்திலிருந்து கொண்டுவர போக்குவரத்திற்கு அதிக செலவு செய்து வருகின்றனர். எனவே, அதிக பரப்பில் பருத்திப் பயிரை சாகுபடி செய்யவும், புதிய தொழில்நுட்பங்களைக் கடைபிடிக்கவும் விவசாயிகள் ஊக்கப்படுத்தப்பட வேண்டும்.

தரமான இடுபொருட்களை வழங்கியும் நிலையான விரிவாக்க முயற்சிகளின் மூலமும் பருத்திச் சாகுபடிப் பரப்பினை அதிகரிக்க அதிக முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. நடப்பு ஆண்டில் நெல் தரிசிலும், இறவையிலும் பருத்தி அதிகளவில் சாகுபடி செய்ய வாய்ப்பு ஏற்பட்டது.

ஜூன்–டிசம்பர் மாதங்களில் மானாவாரி சாகுபடிப் பருவத்தில் மற்றும் குளிர் இறவைப் பருவத்தில் பெய்த மழையால், இறவைப் பருத்திச் சாகுபடி அதிக பரப்பில் மேற்கொள்ள வாய்ப்பை ஏற்படுத்தியது. நெல் தரிசில், பயறுவகைச் சாகுபடிக்கு மாற்றாக அதிக வருவாய் தரவல்லதாகவும், குறைந்த வயதுள்ள பருத்தி இரகங்களைச் சாகுபடி செய்ய விவசாயிகளை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் பருத்தி விவசாயிகளை ஊக்குவிக்க, விளைந்த பருத்தியை ஒப்பந்தப் பண்ணையம்மூலம் வாங்கும்முறை ஊக்குவிக்கப்படுகிறது. இதன் விவரம் தனி அத்தியாயத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில், பருத்திச் சாகுபடிப் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை உயர்த்த கீழ்க்கண்ட உத்திகள் மற்றும் திட்டங்களை வேளாண்மைத் துறை மேற்கொண்டுள்ளது:

- வீரிய ஒட்டு இரகங்கள் சாகுபடி
- ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை செயல்விளக்கம் மற்றும் பண்ணை இயந்திரங்கள் மற்றும் கருவிகள் முன்னோடி நிருபணத்தளை.



- நுண்ணிய நீர்ப்பாசன முறைகள் மூலம் நீர்ப் பயன்பாட்டுத் திறனை அதிகப்படுத்துதல்.
- உற்பத்தித் தொழில்நுட்பங்கள் பற்றி விவசாயிகளுக்குப் பயிற்சி
- தொடர்ந்து பூச்சி மற்றும் நோய்க் கண்காணிப்பு
- ஊடுபயிர் சாகுபடி/கலப்புப் பயிர் சாகுபடி/நெல் தரிசில் பருத்தி போன்றவைகளை பிரபலப்படுத்துதல்
- புகழ்பெற்ற ஆலைகளுடன் இணைந்து விவசாயிகள் ஒப்பந்தப் பண்ணையமுறை
- காப்பீடு பாதுகாப்பு/பயிர்க்கடன்
- விவசாயிகள் சுயஉதவிக் குழுக்களைக் கொண்டு சாகுபடிப் பரப்பினை உயர்த்துதல்.

2005 பிப்ரவரி முடிய இத்திட்டத்தில் அடையப்பெற்ற சாதனை மற்றும் 2005–2006 ஆம் ஆண்டுத் திட்டமும் கீழே தரப்பட்டுள்ளது:

| வ. எண் | விவரம் | 2004–2005 | | 2005–2006 ஆம் ஆண்டு திட்டம் |
|---|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை (பிப்ரவரி 2005 வரை) | |
| 1. | உயர் இரக மற்றும் வீரிய ஒட்டுரக சாகுபடி பரப்பு (இலட்சம் எக்டர்) | 2.50 | 1.630 | 2.50 |
| 2. | பஞ்சு உற்பத்தி (இலட்சம் பொதிகள்) | 5.62 | 2.809 | 5.85 |
| 3. | சான்றுவிதை உற்பத்தி (குவி) | 3670 | 1250 | 3670 |
| 4. | சான்றுவிதை விநியோகம் (குவி) | 3670 | 1370 | 3670 |
| 5. | விதை கொள்முதல்–நிதி (இல. ரூபாய்) | 93.65 | 61.48 | |
| 6. | என்பிவி விநியோகம் (எக்டர்) | 1500 | 1300 | 1500 |
| 7. | என்பிவி விநியோகம் – நிதி (இல. ரூபாய்) | 0.60 | 0.532 | 0.60 |

இத்திட்டம் 2005–2006 ஆம் ஆண்டிலும் செயல்படுத்தப்படும்.

## 3.11. பருத்தியில் பூச்சி கண்காணிப்பிற்கான மாநிலத் திட்டம்

தேர்வு செய்யப்பட்ட பத்து மாவட்டங்களில் பருத்தி பயிரிடும் பகுதிகளில் நிலவும் பூச்சி மற்றும் நோய்களைச் சாரணர் உதவியுடன் கண்காணித்து ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மையினைப் பின்பற்றி பயிர் இழப்பினைக் குறைக்கும் நோக்கத்துடன் இத்திட்டம் செயல்படுகிறது. பூச்சி கண்காணிப்புப் பணியில் வேலையில்லாத கிராம இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்து, அவர்கள் கிராம அளவில் பூச்சி தாக்குதலைக் கண்காணிக்கும் சாரணர்களாகச் செயல்படுத்தப்படுகிறார்கள். ஒரு சாரணர் 100 எக்டேர் பரப்பை கண்காணிக்க மாதம் ஒன்றிற்கு ரூ.500/– உதவித் தொகை வீதம் ஒரு பயிர்ச் சாகுபடி காலத்திற்கு ஒரு சாரணருக்கு மொத்தத்தில் ரூ. 3,000/– வழங்கப்படும். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் 2002-2003 ஆம் ஆண்டில் இத்திட்டம் அறிவிக்கப்பட்டு, 2002–2003 ஆம் ஆண்டு முதல், மாநிலத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2004–2005 ஆம் ஆண்டு இத்திட்டம் 5,000 எக்டேர் பரப்பில் மேற்கொள்ள ரூ.1.50 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | இனம் | இலக்கு | சாதனை (பிப்ரவரி 2005 முடிய) | 2005-2006 ஆம் ஆண்டுத் திட்டம் |
|---|---|---|---|---|
| 1. | பொருள் (எக்டேரில்) | 5000 | 3000 | 5000 |
| 2. | நிதி (ரூ. இலட்சத்தில்) | 1.50 | 0.80 | 1.50 |

## 3.12. பருத்தியில் ஒப்பந்தப்பண்ணைய முறை

இயல்பான ஆண்டுகளில் தமிழகத்தில் 2.00 இலட்சம் எக்டேர் பரப்பளவில் பருத்திச் சாகுபடி செய்யப்பட்டு, 4 முதல் 5 இலட்சம் பொதிகள் உற்பத்தி செய்யப்படும். இந்தியாவில் உள்ள பருத்தி ஆலைகளில் 60 சதவீதத்திற்கு மேல் தமிழ்நாட்டில் உள்ளது. இவ்வாலைகள் ஆண்டுக்கு 50 இலட்சம் பொதிகள் பருத்தியை உபயோகப்படுத்துகின்றன. ஆனால் ஆலைகளின் தேவையில் 10 சதவீதம் மட்டுமே மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது. தேவைக்கும், உற்பத்திக்கும் இடையே உள்ள இந்த பெரிய இடைவெளி காரணமாக, ஆலைகள் இதர மாநிலங்களிலிருந்து தேவையான பருத்தியைப் பெறுகின்றன.



தமிழ்நாட்டில் பருத்தி தேவை அதிகமாக இருப்பதாலும், விற்பனைக்கு உறுதி வழங்கி விவசாயிகளை இணைத்து, விவசாயிகள் மற்றும் தொழில் துறையின் நலன்களைப் பாதுகாக்கவும் ஒப்பந்தப் பண்ணைய சாகுபடி முறையை வேளாண்மைத் துறை மூலம் தமிழக அரசு பிரபலப்படுத்துகிறது.

ஒப்பந்தப்பண்ணைய முறையில், சந்தை ஏற்பாடு, இடுபொருட்கள், தொழில்நுட்ப உதவி, நிதி உதவி, உற்பத்தி மேலாண்மை, காப்பீடு முதலான பல்வகைப்பட்ட உதவிகளை விவசாயி பெற முடியும்.

பொள்ளாச்சியில் உள்ள அப்பாச்சி பருத்தி நிறுவனம் மற்றும் கோயம்புத்தூரில் உள்ள சூப்பர் ஸ்பின்னிங் ஆலை லிமிடெட் போன்ற தனியார் நிறுவனங்களால், ஒப்பந்தப்பண்ணைய முறை உத்திகள் அறிமுகப்படுத்தப்பட்டது. இடுபொருள் விநியோகம், காப்பீடு உதவிகள், பயிர்க்கடன் போன்ற உதவியோடு விளைபொருட்களை வாங்கிக்கொள்ளும் உத்தரவாதத்தினையும் விவசாயிகளுக்கு இத்திட்டத்தின்கீழ் மேற்குறிப்பிட்ட நிறுவனங்கள் வழங்குகின்றன. தமிழக அரசு, அப்பாச்சி பருத்தி நிறுவனத்திற்கு 2002–2003 முதல் மூன்று ஆண்டுகளுக்கு 1 சதவீதம் சந்தை வரியிலிருந்து விலக்கு அளித்து உத்தரவிட்டுள்ளது. சூப்பர் ஸ்பின்னிங் ஆலைக்கும் சந்தை வரிவிலக்கு அளிக்கும் கருத்துருவும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

இதுவரை அடையப்பெற்ற முன்னேற்றம் கீழ்வருமாறு:

**அப்பாச்சி கேர் ஃபௌண்டேஷன், பொள்ளாச்சி**

| ஆண்டு | சாகுபடி பரப்பு (ஏக்கர்) | சாகுபடி செய்யப்பட்ட இரகங்கள் | பயன் பெற்ற விவசாயிகள் எண்கள் | மாவட்டங்கள் |
|---|---|---|---|---|
| 2002–2003 | 916 | பன்னி, ஆர்சிஎச்2, சுப்ரியா | 423 | கோயம்புத்தூர், தேனி, நாமக்கல் |
| 2003–2004 | 710 | பன்னி, சுரபி | 368 | கோயம்புத்தூர், நாமக்கல், இராமநாதபுரம் |
| 2004–2005 | 753 | பன்னி, எஸ்விபிஆர் 3, எம்சியு7, ஸ்பிக் 22, ஆர்சிஎச் 3600. எம்சியூ 7 | 749 | திருவாரூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம் |
| மொத்தம் | 2379 | | 1540 | |

[2005 மார்ச் 31

**சூப்பர் ஸ்பின்னிங் மில்ஸ், கோயம்புத்தூர்**

| ஆண்டு | சாகுபடி பரப்பு (ஏக்கர்) | சாகுபடி செய்யப்பட்ட இரகங்கள் | பயன் பெற்ற விவசாயிகள் | மாவட்டங்கள் |
|---|---|---|---|---|
| 2002-2003 | 1281 | சாரா1, சாரா2, எம்சியு5 | 820 | கோயம்புத்தூர், சேலம் |
| 2003-2004 | 2558 | எம்சியு5, சாரா2, டிசிஎச்பி 213, பன்னி | 1310 | சேலம், கோயம்புத்தூர், வேலூர் |
| 2004-2005 | 2208 | சுரபி, எம்சியு5, எம்சியு7, ஸ்பிக் 22, பன்னி | 566 | நாமக்கல், சேலம், தேனி, மதுரை, திருவாரூர், நாகப்பட்டினம் |
| மொத்தம் | 6047 | | 2696 | |
| கூடுதல் மொத்தம் | 8426 | | 4236 | |

2005–2006 ஆம் ஆண்டுத் திட்டம் பின்வருமாறு:

| ஆலையின் பெயர் | திட்டமிடப்பட்டுள்ள பரப்பு (ஏக்கரில்) |
|---|---|
| அப்பாச்சி பருத்தி நிறுவனம் | 2500 |
| சூப்பர் ஸ்பின்னிங் மில்ஸ் | 20000 |
| ராயல் கிளாசிக் மில்ஸ் | 20000 |

### 3.12.1. முத்தரப்பு ஒப்பந்த பண்ணையம்

2004–2005 ஆம் ஆண்டு, பருத்தியில் ஒப்பந்தப்பண்ணைய முறையினை விரிவுபடுத்த, பருத்தி முன்னேற்றப் பங்கேற்பாளர்கள் கூட்டம் ஒன்றை வேளாண்மைத் துறை, கோயம்புத்தூரில் 20–11–2004 அன்று நடத்தியது. மத்திய அரசு அலுவலர்கள், பருத்தி ஆலை உடைமையாளர்கள், பருத்திச் சாகுபடி விவசாயிகள், அதில் இந்திய பருத்திக்கழகம், நிதி நிறுவனங்கள், காப்பீடு நிறுவனங்கள், சந்தைப் பிரிவைச் சார்ந்தவர்கள், இடுபொருள் விநியோகிப்பாளர்கள்,



2005 மார்ச் 31]

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் மத்திய பருத்தி ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றின் அலுவலர்கள்/பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

மாநிலத்தில் பருத்தி உற்பத்தியினை அதிகரிக்கும் வகையில், ஓர் முத்தரப்பு ஒப்பந்தப்பண்ணைய முறைக்கான மாதிரியை வேளாண்மை ஆணையரகம் உருவாக்கி, அத்திட்டத்தில் பங்கேற்க ஆலைகள், இந்திய பருத்திக் கழகம், நாஃபெட், காப்பீடு முகவர்கள் மற்றும் வங்கி நிறுவனங்கள் ஆகியவற்றை அணுகியது. வேளாண்மை ஆணையரகத்தால் உருவாக்கப்பட்ட இம்மாதிரி திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் வருமாறு:

- தொகுப்பு கிராமங்களில் கவனம் செலுத்துதல்
- விவசாயிகளை இழப்பு அபாயத்திலிருந்து பாதுகாத்தல்
- திறம்பட்ட விலை நிர்ணய அமைப்பு
- இடுபொருட்கள் விநியோகத்துடன் இணைந்த கடன் வசதி
- காப்பீடு பாதுகாப்பு
- ஆலைகளின் தேவைக்கேற்ப தரத்தினை உறுதிசெய்தல்
- வேளாண்மைத் துறையின்மூலம் விரிவாக்க உதவி

இத்திட்டத்தில் வேளாண்மைத் துறை முதன்மை ஒருங்கிணைப்பாளராகவும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு உதவிகளையும் வழங்கும். இந்த ஒப்பந்த முறையில் ஏற்படும் பிரச்சினைகளை மத்திய பருத்தி ஆராய்ச்சி நிலையம் தீர்வு செய்யும்.

இத்திட்டத்தின்கீழ், சேலம், நாமக்கல், திண்டுக்கல் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் 2005 ஆம் ஆண்டு கோடைப் பருவத்தில் 5,000 ஏக்கர் பரப்பில் பருத்திப் பயிரினை ஒப்பந்தப்பண்ணைய முறையில் சாகுபடி செய்யும் திட்டத்திற்கு ராயல் கிளாசிக் மில்ஸ், பழனி சம்மதம் தெரிவித்துள்ளது. அதன் மூலம் 50,000 குவிண்டால் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டு, ஒரு குவிண்டால் ரூ.1,850/– அல்லது நடப்பு சந்தை விலை இதில் எது அதிகமோ அவ்விலைக்கு கொள்முதல் செய்துகொள்ள மேற்படி நிறுவனம் சம்மதித்துள்ளது. அவ்வாறு விளைபொருளை நிறுவனம் கொள்முதல் செய்யத் தவறினால், இந்திய பருத்திக் கழகம் மாற்றுக்கொள்முதல் முகமையாகச் செயல்படும். சேலத்திலுள்ள, ராசி விதைகள் (பிரைவேட்) லிமிடெட் இந்த

ஒப்பந்தப்பண்ணைய முறையின்கீழ் ஆர்சிஎச்2 பிடீ விதைகளை விவசாயிகளுக்கு விநியோகிக்க ஒப்புதல் அளித்துள்ளனர். ராயல் கிளாசிக் மில்ஸ் இதுவரை 1,300 விவசாயிகளைத் தேர்வு செய்து 1,300 விதைப் பொட்டலங்களை விநியோகித்துள்ளனர். மாவட்டங்களில் உள்ள களப்பணியாளர்களுக்குப் பயிற்சி நடந்து வருகிறது. 2005–2006 ஆம் ஆண்டில் 6 மாவட்டங்களில் 20,000 ஏக்கர் பரப்பளவில் திட்டத்தினைச் செயல்படுத்த ராயல் கிளாசிக் மில்ஸ் திட்டமிட்டுள்ளது. சூப்பர் ஸ்பின்னிங் மில்ஸ் நிறுவனம் தற்போது முத்தரப்பு ஒப்பந்தத்தில் இணைந்துகொள்ள முன்வந்துள்ளது. அதன்படி மதுரை, சேலம், ஈரோடு மற்றும் தேனி மாவட்டங்களில் 2005 ஆம் ஆண்டு கோடைப் பருவத்தில் 4,000 ஏக்கர் பரப்பில் திட்டத்தினைச் செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளது. 2005–2006 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் 10 மாவட்டங்களில் 20,000 ஏக்கர் பரப்பளவில் திட்டத்தினைச் செயல்படுத்திட முன்மொழிந்துள்ளது.

நமது மாநிலத்தில் இத்திட்டத்தினை மத்திய அரசு முழு சம்மதத்துடன் ஏற்றுக் கொண்டதோடு அனைத்து மாநிலங்களும் பின்பற்றக் கோரி சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. இந்த ஏற்பாட்டினால் பருத்தி ஆலைகளுக்கு விரும்பிய தரத்துடன் பருத்தி கிடைப்பதுடன் சம்மத ஒப்பந்தம் மாநில விரிவாக்க அமைப்புகளுக்கும் பருத்தியில் ஒப்பந்தப்பண்ணைய முறையினைப் பிரபலப்படுத்த விரும்பும் அமைப்புகளுக்கும் மிக உறுதுணையாக அமையும் என மத்திய அரசு பரிந்துரை செய்துள்ளது.

விவசாயிகளுக்குத் தேவையான பயிற்சியினையும் விரிவாக்க உதவியினையும் வேளாண்மை ஆணையரகம் வழங்கும். விழிப்புணர்வு முகாம்கள் கிராம அளவில் நடத்தப்படும். சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் உள்ள முன்னோடி வங்கிகள் கடன் வசதியினை காப்பீடு பாதுகாப்புடன் இணைத்து வழங்கும்.

### 3.13. மக்காச்சோளம், பயறுவகைகள் மற்றும் எண்ணெய்வித்துப் பயிர்களில் நாஃபெட்மூலம் ஒப்பந்தப் பண்ணைய முறை

டெல்டா மாவட்டங்களில் குறைந்த நீர்த்தேவைப் பயிர்களைச் சாகுபடி செய்வதில் கவனம் செலுத்தும் வகையில் 5–6–2003 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மாற்றுப் பயிர் சாகுபடித் திட்டத்தினை அறிவித்தார்கள். குறைந்த நீர்த்தேவை கொண்ட பயிர்களை அதிக பரப்பில் சாகுபடி செய்ய துறை அனைத்து





முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது. குறைந்த நீர்த்தேவைப் பயிர்களைச் சாகுபடி செய்வதற்கு அதிக விவசாயிகள் முன்வந்தால் மட்டுமே இம்மாற்றுப் பயிர் சாகுபடித் திட்டம் வெற்றிபெற முடியும்.

மக்காச்சோளம், எண்ணெய்வித்துக்கள் மற்றும் பயறுவகைப் பயிர்களில் ஒப்பந்தப்பண்ணைய சாகுபடி முறையினை வேளாண்மை ஆணையரகம் கீழ்க்காணும் நோக்கங்களுடன் அறிமுகப்படுத்தியது:

1. குறைந்த நீர்த்தேவைப் பயிர்களின் சாகுபடிப் பரப்பை அதிகரித்தல்
2. சாகுபடித் திறனை உயர்த்துதல்
3. விவசாயிகளின் வருமானத்தினைப் பெருக்குதல்
4. விற்பனையில் இடைத்தரகர்களின் பங்கினை நீக்குதல்
5. உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை உயர்த்துதல்

இத்திட்டத்தில், நாஃபெட் நிறுவனம், முன்னரே நிர்ணயிக்கப்பட்ட விலை அல்லது நடப்பு சந்தை விலை இதில் எது அதிகமோ அவ்விலைக்கு விளைபொருட்களை வாங்கிக்கொள்ளும். இத்திட்டத்திற்கு விவசாயிகளைத் தேர்வு செய்து, உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தேவையான தொழில்நுட்பங்களை வழங்குவதுடன் தேவையான இடுபொருட்களையும் இயன்ற அளவிற்கு வேளாண்மைத் துறை வழங்கி விவசாயிகளை ஊக்கப்படுத்தும்.

ஒப்பந்தப்பண்ணைய முறைத் திட்டம் கீழ்க்கண்டவாறு செயல்படுத்தப்படவுள்ளது.

(மெடன்னில்)

| பயிர் | மாவட்டம் | கொள்முதல் செய்யப்பட உள்ள அளவு |
|---|---|---|
| மக்காச்சோளம் | தேனி, திண்டுக்கல் | 3000 |
| நிலக்கடலை | கடலூர், வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், சேலம் | 2000 |
| எள் | டெல்டா மாவட்டங்கள் | 500 |
| பயறு வகைகள் | டெல்டா மாவட்டங்கள் – தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் | 5000 |

இத்திட்டம் ஜனவரி 2005 முதல் தொடங்கப்பட்டு ஜூன் 2005 வரை 500 கிராமங்களில் பாசனப் பருவத்தில் செயல்படுத்தப்படும். சுமார் 30,000 விவசாயிகள் இத்திட்டத்தில் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த இலாபகரமான வர்த்தக ஏற்பாடு, அதிக விவசாயிகளைக் கவர்வதுடன், இரண்டு பலன்களான குறைந்த நீர்த்தேவைப் பயிர்கள் சாகுபடிப் பரப்பை அதிகப்படுத்தவும் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கவும் வழிவகுக்கும்.

### 3.14. காட்டாமணக்கு, சர்க்கரைச் சோளம் மற்றும் சர்க்கரைக் கிழங்கு சாகுபடித் திட்டம்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மாற்றுப் பயிர்ச் சாகுபடித் திட்டத்தின் ஒரு பகுதியாக, எத்தனால் மற்றும் தாவர எரிபொருள் உற்பத்திக்காக ஒப்பந்தப்பண்ணைய முறையில் காட்டாமணக்கு, சர்க்கரைச் சோளம் மற்றும் சர்க்கரைக் கிழங்கு போன்ற பயிர்களைச் சாகுபடி செய்யும் மிகப் பெரிய திட்டம் ஒன்றினை அறிவித்துள்ளார்கள். முன்னரே நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு விளைபொருட்களை தொழிற்சாலை நிறுவனதாரர்கள் வாங்கிக்கொள்ளும் ஏற்பாட்டுடன் இத்திட்டம் மேற்கொள்ளப்பட உள்ளது. இப்பயிர்கள் குறைந்த நீரினைக் கொண்டு விவசாயிகளுக்கு அதிக வருவாய் தரக்கூடியதாகும்.

### 3.15. காட்டாமணக்கு சாகுபடி

அரசினால் தேர்வு செய்யப்பட்ட 4 நிறுவனங்களுக்கு காட்டாமணக்கு ஒப்பந்தப்பண்ணைய முறையைச் செயல்படுத்த மாவட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அதன் விவரம் பின் வருமாறு :-

| நிறுவனம் | ஒதுக்கீடு செய்யப்பட்ட மாவட்டம் | செயல்திட்டம் (எக்டர்) | |
|---|---|---|---|
| | | 2004-2005 | 2005-2006 |
| 1. மோகன் பிருவரீஸ் மற்றும் டிஸ்டிலரீஸ் லிமிடெட் | திருவள்ளூர் | 5000 | 80000 |
| 2. சிவா டிஸ்டிலரீஸ் லிமிடெட் | கரூர், திண்டுக்கல், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் | 2100 | 3800 |
| 3. தரணி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட் | விருதுநகர் | நிறுவனத்திடமிருந்து செயல்திட்டம் பெறப்படவில்லை | |
| 4. ரிவர்வே அக்ரோ ப்ராடக்ஸ் பிரைவேட் லிமிடெட் | திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி | | |



பிப்ரவரி, 2005 முடிய மோகன் பிருவரீஸ் மற்றும் டிஸ்டிலரீஸ் லிமிடெட் நிறுவனத்தினால் 5000 எக்டர் இலக்கிற்கு 119 எக்டரிலும் சிவா டிஸ்டிலரீஸ் லிமிடெட் நிறுவனத்தால் 2100 எக்டர் இலக்கிற்கு, 180 எக்டரிலும் காட்டாமணக்கு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தரமான விதைகள் கிடைக்காததால், சாகுபடி விரிவாக்கம் காலதாமதமாகிறது. சட்டீஸ்கர் மற்றும் இராஜஸ்தான் மாநிலங்களிலிருந்து தரமான விதைகளைப் பெறுவதற்கும் தேசிய உடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடன் வசதி பெறவும் நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றன. ஒப்பந்த சாகுபடி மேற்கொள்ள இருதரப்பு மற்றும் முத்தரப்பு உடன்படிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. கொள்முதல் விலை டன் ஒன்றுக்கு ரூ.5000/- என நிறுவனம் தெரிவித்துள்ளது. பிழியும் மற்றும் பதப்படுத்தும் தொழிற்சாலையை அமைக்க மோகன் பிருவரீஸ் லிமிடெட் முன்மொழிந்துள்ளது.

காட்டாமணக்கு மீதான கொள்முதல் வரி ஏதும் இருக்காது என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. காட்டாமணக்கு விதையிலிருந்து எடுக்கப்படும் தாவர எரிபொருள் மீதான விற்பனை வரி 4 சதமாக இருப்பதுடன் சிறப்பு ஊக்கத் தொகை வழங்கப்படுமென தமிழக அரசு 2003 தொழில் கொள்கை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### 3.16. மேம்படுத்தப்பட்ட தரமான நடவுப் பொருள் மற்றும் காட்டாமணக்கு மாதிரி சாகுபடித் திட்டம்

தரமான நடவுப் பொருள் மற்றும் காட்டாமணக்குச் சாகுபடி மாதிரித் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக வேளாண்மைத் துறைக்கு ரூ.75 இலட்சமும் தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமைக்கு ரூ.75 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.150 இலட்சம் நிதியினை தேசிய தாவர எரிபொருள் மேம்பாட்டு வாரியம் ஒப்பளித்துள்ளது. இத்திட்டத்தில், வேளாண்மை மற்றும் தோட்டக் கலைத் துறைகளைச் சார்ந்த அரசுப் பண்ணைகளில் 600 எக்டரில் முன்னோடி காட்டாமணக்குச் சாகுபடிப் பண்ணை இடுபொருட்கள், பண்ணைக் கருவிகள், நடவுப்பொருட்கள், பராமரிப்பு மற்றும் இதர

செலவுக்காக 100 சத உதவியுடன் எக்டர் ஒன்றிற்கு ரூ.25,000/- செலவில் உருவாக்கப்படும்.

தெரிவு செய்யப்பட்ட அரசுப் பண்ணைகளில், நிலச் சீர்திருத்தம் செய்து, 25 ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து சொட்டுநீர்ப் பாசன வசதிகள் செய்தல் ஆகிய பணிகள் தேவையின் அடிப்படையில் வேளாண் பொறியியல் துறை தலைமைப் பொறியாளர் மேற்கொள்வார். ராய்ப்பூர் இந்திரா காந்தி வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலிருந்து ஜெட்ரோபா கர்க்கஸ் இரக விதைகள் 720 கிலோவும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலிருந்து 900 கிலோ விதைகளும் கன்றுகள் உற்பத்தி செய்வதற்காகப் பெறப்பட்டுள்ளன. இது தவிர, அண்ணா பண்ணையில் நடவுப்பணி மேற்கொள்ள 25,000 கன்றுகள் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்திலிருந்து பெறப்பட்டுள்ளன. இத்திட்டம் 25-2-2005 அன்று துவங்கப்பட்டு நடவுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நடவு செய்யப்பட்ட கன்றுகளைப் பராமரிக்க ரூ.15 இலட்சம் பராமரிப்பு மானியமாக வழங்கக் கோரி, 2005-2006 ஆம் ஆண்டு தேசிய தாவர எரிபொருள் மேம்பாட்டு வாரியத்தினை அணுக திட்டமிடப்பட்டுள்ளது. இந்தக் கன்றுகள் நடவு செய்யப்பட்ட பண்ணை மாதிரி செயல்விளக்கமாக அமையும் என்பதோடு இப்பண்ணைகளிலிருந்து உற்பத்தி செய்யப்படும் விதைகள் சாகுபடிப் பரப்பை விரிவுபடுத்த உபயோகப்படுத்தப்படும்.

## 3.17. **சர்க்கரைச் சோள சாகுபடி**

தேர்வு செய்யப்பட்டுள்ள மாவட்டங்களில் மோகன் ப்ருவரீஸ் மற்றும் டிஸ்டிலரீஸ் லிமிடெட், பன்னாரி அம்மன் சுகர்ஸ் லிமிடெட், ஸ்ரீ உறரிசந்தனா எஸ்டேட்ஸ் (பி) லிட்., தரணி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிட்., ஸ்ரீ அம்பிகா சுகர்ஸ் லிமிடெட் ஆகிய நிறுவனங்கள் சர்க்கரைச் சோள சாகுபடிக்கு விவசாயிகளுடன் ஒப்பந்தம் செய்துகொள்ள விருப்பம் தெரிவித்துள்ளன. விவசாயிகள் சர்க்கரைச் சோளம் சாகுபடி செய்து அதன் தட்டைகளைச் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு விற்பனை செய்யும் வகையில், அரசு கீழ்க்கண்ட நிறுவனங்களுக்கு மாவட்டங்களை ஒதுக்கி அனுமதி வழங்கியுள்ளது. இதைத் தவிர, திரு ஆரூரான் சுகர்ஸ் லிமிடெட், அவர்களுடைய திட்டத்தினை வழங்கியுள்ளது.



| வ. எண் | நிறுவனங்களின் பெயர் | அரசால் அனுமதிக்கப்பட்ட மாவட்டங்கள் | நிறுவனங்களால் பணி மேற்கொள்ள திட்டமிடப்பட்ட மாவட்டங்கள் | திருந்திய செயல் திட்டம் (ஏக்கர்) | தேவைப்படும் விதை அளவு (டன்களில்) | பிப்ரவரி 2005 முடிய சாகுபடி மேற்கொள்ளப்பட்ட பரப்பு (ஏக்கர்) |
|---|---|---|---|---|---|---|
| 1. | மோகன் பிருவரீஸ் மற்றும் டிஸ்டிலரீஸ் லிமிடெட் | காஞ்சீபுரம் | காஞ்சீபுரம் | 100 | 0.300 | 7 |
| | | விழுப்புரம் | விழுப்புரம் | 100 | 0.300 | 1 |
| | | – | திருவள்ளூர் | 100 | 0.300 | 45 |
| | | | மொத்தம் | 300 | 0.900 | 53 |
| 2. | தரணி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட் | விருதுநகர் | விருதுநகர் | 100 | 0.300 | 1.5 |
| | | – | திருநெல்வேலி | 800 | 2.400 | 1.0 |
| | | | மொத்தம் | 900 | 2.700 | 2.5 |
| 3. | ஸ்ரீ அம்பிகா சுகர்ஸ் லிமிடெட் | கடலூர் | கடலூர் | 50 | 0.150 | 102.5 |
| | | பெரம்பலூர் | பெரம்பலூர் | 20 | 0.060 | – |
| | | திருவண்ணாமலை | சேலம் | 10 | 0.030 | – |
| | | புதுக்கோட்டை | விழுப்புரம் | 20 | 0.060 | – |
| | | தஞ்சாவூர் | – | – | – | – |
| | | | மொத்தம் | 100 | 0.300 | 102.5 |
| 4. | பன்னாரி அம்மன் சுகர்ஸ் லிமிடெட் | ஈரோடு | ஈரோடு | 75 | 0.225 | 150 |
| | | | மொத்தம் | 75 | 0.225 | 150 |
| 5. | ஸ்ரீ ஹரிசந்தனா எஸ்டேட் (பி) லிமிடெட் | மதுரை தேனி | | 2004-2005 ஆம் ஆண்டு இந்நிறுவனத்திற்குத் திட்டம் இல்லை | | |
| 6. | திரு ஆரூரான் சுகர்ஸ் லிமிடெட் | | பெரம்பலூர் | 30 | 0.090 | 16.65 |
| | | | தஞ்சாவூர் | 25 | 0.075 | – |
| | | | புதுக்கோட்டை | 10 | 0.030 | – |
| | | | திருவாரூர் | 25 | 0.075 | – |
| | | | நாகப்பட்டினம் | 10 | 0.030 | – |
| | | | மொத்தம் | 100 | 0.300 | 16.65 |
| | | | கூடுதல் மொத்தம் | 1475 | 4.425 | 324.65 |

[2005 மார்ச் 31

இத்திட்டத்திற்காக சர்க்கரைச் சோளம் மீதான கொள்முதல் வரி விலக்கும், சர்க்கரைச் சோளத்திலிருந்து தயாரிக்கப்படும் எத்தனால் மீதான விற்பனை வரி 8 சதமாகவும் நிர்ணயித்து அரசு ஆணையிட்டதுடன், தமிழக அரசு 2003 தொழில் கொள்கை அறிக்கையில் சிறப்பு ஊக்கச் சலுகைகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.

6 நிறுவனங்களால் திட்டமிடப்பட்டுள்ள 1,175 ஏக்கர் பரப்பில் இதுவரை 324.65 எக்டர் பரப்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள பரப்பில் மார்ச் 2005 ஆம் மாதத்தில் சாகுபடி மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.18. சர்க்கரைக் கிழங்கு சாகுபடி

மோகன் ப்ருவரீஸ் மற்றும் டிஸ்டிலரீஸ் லிமிடெட், பன்னாரி அம்மன் சுகர்ஸ் லிமிடெட், திரு ஆரூரான் சுகர்ஸ் லிமிடெட், ஸ்ரீ உறரிசந்தனா எஸ்டேட் (பி) லிமிடெட் ஆகிய நிறுவனங்கள், தேர்வு செய்யப்பட்டுள்ள மாவட்டங்களில், சர்க்கரைக் கிழங்கு சாகுபடி செய்து, அதன் கிழங்கைச் சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் சுத்திகரிப்பு நிலையத்திற்கு விற்க விருப்பமுள்ள விவசாயிகளுடன் ஒப்பந்தபண்ணைய முறை மேற்கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளன.

அரசு, இந்நிறுவனங்களுக்குக் கீழ்க்கண்ட மாவட்டங்களில் திட்டத்தை மேற்கொள்ள அனுமதி வழங்கியுள்ளது:

| வ. எண் | நிறுவனங்களின் பெயர் | அரசால் அனுமதிக்கப்பட்ட மாவட்டங்கள் | நிறுவனங்களால் பணி மேற்கொள்ள திட்டமிடப்பட்ட மாவட்டங்கள் | திருந்திய செயல் திட்டம் (ஏக்கர்) | தேவைப்படும் விதை அளவு (டன்களில்) | பிப்ரவரி 2005 முடிய சாகுபடி மேற்கொள்ளப்பட்ட பரப்பு (ஏக்கர்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | மோகன் பிருவரீஸ் மற்றும் டிஸ்டிலரீஸ் லிமிடெட் | விழுப்புரம் | விழுப்புரம் | 50 | 60 | 0 |
| | | | திருவள்ளூர் | 100 | 120 | 10 |
| | | | மொத்தம் | 150 | 180 | 10 |
| 2 | பன்னாரி அம்மன் சுகர்ஸ் லிமிடெட் | ஈரோடு | ஈரோடு | 10 | 12 | 7 |
| | | | மொத்தம் | 10 | 12 | 7 |
| 3 | ஸ்ரீஹறரிச்சந்தனா எஸ்டேட்ஸ் பிரைவேட் லிமிடெட் | மதுரை தேனி | 2004-2005 ஆம் ஆண்டிற்கான திட்டம் நிறுவனத்திடமிருந்து பெறப்படவில்லை | | | |



2005 மார்ச் 31]

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4 | திரு ஆரூரான் சுகர்ஸ் லிமிடெட் | புதுக்கோட்டை தஞ்சாவூர் கடலூர் பெரம்பலூர் சேலம் திருவண்ணா மலை | 2004-2005 ஆம் ஆண்டிற்கான திட்டம் நிறுவனத்திடமிருந்து பெறப்படவில்லை | | | |
| | | | கூடுதல் மொத்தம் | 160 | 192 | 17 |

சர்க்கரைக் கிழங்கு மீதான கொள்முதல் வரி, எத்தனால் மீதான விற்பனை வரி மற்றும் தமிழக அரசு 2003 தொழில் கொள்கை அறிக்கையில் உள்ள சிறப்பு ஊக்கச் சலுகைகள் சர்க்கரைச் சோளத்திற்கும் பொருந்தும்.

சர்க்கரைக் கிழங்கைப் பொறுத்தவரை, சீவும் கருவி, பரப்பும் கருவி முதலிய விலை உயர்ந்த இயந்திரங்கள் தேவைப்படுகின்றன. தற்போது சர்க்கரை ஆலைகளில் இக்கருவிகள் நிறுவப்படவில்லை. மேலும், விதை நிறுவனங்கள் மூலம் அயல்நாடுகளிலிருந்து இறக்குமதி மூலம் விதைகள் பெறப்படவேண்டும். எனவே, 2004-2005 ஆம் ஆண்டு, நிறுவனங்கள் இத்திட்டத்தை ஆய்வு அடிப்படையில் மேற்கொண்டுள்ளன. இத்திட்டம், ஆய்வின் அடிப்படையில் இப்பயிரின் செயல்பாடு மற்றும் தேவையான சீவும் கருவி மற்றும் பரப்பும் கருவிகள் முதலிய உள்கட்டமைப்புகளை சர்க்கரை தொழிற்சாலைகளில் ஏற்படுத்திய பின்னர் அதிகப் பரப்பில் சாகுபடி மேற்கொள்ளப்படும்.

2004-2005 ஆம் ஆண்டு 160 ஏக்கர் பரப்பில் திட்டம் செயல்படுத்த இரு நிறுவனங்கள் முன்வந்துள்ளன. அதில் 17 ஏக்கர் சாதனை அடையப்பெற்றுள்ளது. மீதமுள்ள 143 ஏக்கர் மார்ச் 2005 மாதத்தில் மேற்படி நிறுவனங்களால் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. சர்க்கரைச் சோளம் மற்றும் சர்க்கரைக் கிழங்கு அபிவிருத்தித் திட்டங்கள் 2005-2006 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 3.19. கரும்பு

உலகில் சர்க்கரை உற்பத்தியில், பிரேசிலுக்கு அடுத்தபடியாக இரண்டாவது பெரிய உற்பத்தியாளராக இந்தியா விளங்குகிறது. உலக

சர்க்கரை உற்பத்தியில் ஐந்தில் ஒரு பங்கு இந்தியாவில் உற்பத்தியாகிறது. கடந்த பல வருடங்களாக, கரும்பு உற்பத்தித் திறனில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. தமிழகத்தில் சுமார் 3 இலட்சம் எக்டர் பரப்பில் கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. இது மாநிலத்தின் மொத்த சாகுபடிப் பரப்பில் சுமார் 2 சதவீதம் ஆகும். கரும்பின் ஆண்டு சராசரி உற்பத்தி 320 இலட்சம் மெ.டன் ஆகும். கரும்பு உற்பத்தித் திறன் மாவட்டங்களிடையே ஒரு எக்டருக்கு 92.9 முதல் 124.2 மெ.டன் வரை பெறப்படுகிறது. சராசரி மாநில உற்பத்தித் திறன் ஒரு எக்டருக்கு 107 மெ.டன் என்ற அளவில் உள்ளது. கரும்பு, அதிக நீர் தேவைப்படும் பயிர் என்பதால், சாகுபடிப் பரப்பினை அதிகரிக்கும் வாய்ப்பு மிகக் குறைவாகவே உள்ளதால், மாநிலத்தில் கரும்பு உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை, குறிப்பாக நிலைப்படுத்துவதில் அதிகக் கவனம் செலுத்தப்படுகிறது.

கரும்பு மேம்பாட்டுத் திட்டத்தில் கீழ்க்கண்ட பணிகள், அனைத்து மாவட்டங்களிலும் இராமநாதபுரம், தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக மேற்கொள்ளப்படுகின்றன.

| வ. எண் | இனம் | 2004 2005 | | 2005–2006 ஆம் ஆண்டுத் திட்டம் |
|---|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை (பிப்ரவரி 2005 முடிய) | |
| 1 | ஒட்டுண்ணி விடுதல் (எக்டர்) | 10,500 | 10,250 | 10,500 |
| 2 | நிதி (இலட்சம் ரூபாய்) | 3.75 | 3.430 | 3.75 |

### 3.19.1. 2005–2006 ஆம் ஆண்டிற்கான பொதுத் துறை மற்றும் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் கரும்பு பயிரிடுதல் மற்றும் உற்பத்தித் திறன் (மதிப்பீடு)

கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் 2004–2005 ஆம் ஆண்டில் 50 சதவிகிதப் பயன்பாட்டுத் திறனுடன் 32.80 இலட்சம் டன்கள் கரும்பு அரைவை செய்யப்படும் என்ற நிலையில் 2005–2006 ஆம் ஆண்டிற்கு சுமார் 77,600 எக்டேர் கரும்பு பதிவு செய்து 57.50 இலட்சம் டன்கள் அரைவை செய்யக் கூடும் என உத்தேசிக்கப்பட்டுள்ளது.



### 3.19.2. தமிழ்நாட்டில் அனைத்து சர்க்கரை ஆலைகளின் 2005–2006 ஆம் ஆண்டிற்கான கரும்பு உற்பத்தித் திறன்

சர்க்கரை ஆலைகளின் 2004–2005 ஆம் அரைவைப் பருவம் தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில் 28–2–2005 அன்று வரை 49.90 இலட்சம் டன் கரும்பு அரைவை செய்யப்பட்டுள்ளது. இந்த அரைவைப் பருவத்தின் இறுதியில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சர்க்கரை ஆலைகளால் சுமார் 95.41 இலட்சம் டன் கரும்பு அரைவை செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. கரும்பு சராசரி உற்பத்தித் திறன் ஒரு எக்டருக்கு சுமார் 79 டன்கள் எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும் கரும்பு உற்பத்தித் திறனைப் பெருக்கும் முறைகளைக் கையாண்டு எக்டேருக்கு 100 டன்களாக அதிகப்படுத்த வாய்ப்புள்ளது. மாநிலத்தில் பெறப்படும் சராசரி விளைச்சலைக் காட்டிலும் குறைவாக கரும்பு விளைச்சல் பெறப்படும் ஆலைப் பகுதிகளில் விளைச்சலை அதிகப்படுத்த கரும்பு இனப் பெருக்கு நிலையம், கோவை மற்றும் இதர கரும்பு ஆராய்ச்சி நிலையங்களின் தொழில்நுட்ப உதவியுடன் தயாரிக்கப்பட்ட செயல் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

### 3.19.3. சராசரி சர்க்கரை கட்டுமானத்தை அதிகப்படுத்த செயல் திட்டம்

2004–2005 ஆம் ஆண்டு அரைவைப் பருவத்தில் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் எக்டேருக்கு 69 டன்கள் கரும்பு மகசூல் சராசரி 9.97 சதவீதம் சர்க்கரை கட்டுமானத்துடன் 32.80 இலட்சம் டன்கள் கரும்பு அரைவை செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இது 2005–2006 கரும்பு அரைவைப் பருவத்திற்கு கரும்பு மகசூல் எக்டருக்கு 74 டன்கள் ஆகவும், சராசரி சர்க்கரைக் கட்டுமானம் 10 சதவீதமாகவும் மற்றும் ஆலையின் அரைவையின் 88 சதவீதப் பயன்பாட்டுத் திறனுக்குத் தேவையான 57.50 இலட்சம் டன்கள் கரும்பினைப் பெற செயல் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. மேற்கண்ட இலக்கினை அடைய பண்ணை அளவில் பின்வரும் யுக்திகளைக் கடைபிடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது:

1. கரும்பு உற்பத்தித் திறனை அதிகப்படுத்துதல் மற்றும் அதிக சர்க்கரை சத்துள்ள கரும்பு இரகங்கள் பயிரிடப்படும் பரப்பை அதிகப்படுத்துதல்.
2. விவசாயிகளுக்கு புதிய தொழில்நுட்ப கருத்துகளைக் கரும்பு ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் மூலம் விவசாயிகளுக்கும், களப் பணியாளர்களுக்கும் பயிற்சி அளித்தல்.

3. உரிய காலத்தில் இடுபொருள்கள் அளித்து, காலத்தே உரம் வைக்க அறிவுறுத்தல்.
4. வறட்சியைச் சமாளிக்கும் வழிமுறைகளைப் பயன்படுத்துதல்.
5. சொட்டு நீர்ப்பாசனத்தை மேம்படுத்துதல்.
6. உயிரின உரங்கள் மற்றும் உயிரின பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்துதல்.
7. உயிர் உரம், மண்புழு கழிவு உரம் மற்றும் செறிவூட்டப்பட்ட ஆலைக் கழிவினைப் பயன்படுத்துதல்.
8. புதியதாகத் தாக்கும் பூச்சி மற்றும் நோய்கள் பற்றியும் அதற்காக ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளை விவசாயிகளுக்கும், களப் பணியாளர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தி புதிய நோய்த் தாக்குதலைக் கட்டுப்படுத்துதல் பற்றி தெரிவித்து நடவடிக்கை எடுத்தல்.
9. அதிகமாக புதிய இரகங்கள் இனப் பெருக்கம் செய்தல்.

### 3.19.4. சர்க்கரை கட்டுமானமும் அதிக சர்க்கரைச் சத்துள்ள இரகங்களும்

ஆலைகளின் சராசரி சர்க்கரைக் கட்டுமானத்தை உயர்த்துவதில், அதிக சர்க்கரை சத்துள்ள கரும்பு இரகங்கள் முக்கியப் பங்கு வகித்து ஆலையின் சர்க்கரை உற்பத்திச் செலவினைக் குறைக்கின்றன. 2004–2005 ஆம் அரைவைப் பருவத்தில், கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள், அதிக சர்க்கரை சத்துள்ள கரும்பு இரகங்கள் சுமார் 90 சதவீத அளவிற்கு அரைவை செய்து 9.97 சதவித சர்க்கரைக் கட்டுமானம் பெறப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. 2005–2006 அரைவைப் பருவத்தில் அதிக சர்க்கரைச் சத்துள்ள கரும்பின் அரைவை 90 சதவீதம் அளவிலேயே தொடர்ந்து இருக்கும் நிலையில் சராசரி சர்க்கரைக் கட்டுமானம் 10 சதவீத அளவிற்கு உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. நடப்பு பருவத்தில் அரைவை செய்யப்படவுள்ள 32.80 இலட்சம் டன் கரும்பினை அதிகரித்து அடுத்த அரைவைப் பருவத்தில் 57.50 இலட்சம் டன்கள் அரைவை செய்யப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

### 3.19.5. கரும்பு பயிரிட சொட்டு நீர்ப்பாசனம்

நீர்வளம் தற்போது அரிதாகி விட்டதாலும் வழக்கமான நீர்ப்பாசன முறைகளால் அதிக அளவு தண்ணீர் செலவாவதால், கரும்பு பயிர் சாகுபடிக்கு அதிக வேலையாட்கள் தேவைப்படும் நிலையுள்ளது.



எனவே அரசு தண்ணீரைச் சேமித்து அதிகப் பரப்பளவில் கரும்பு பயிரிடுவதற்கு ஏதுவாக கரும்புக்கு சொட்டு நீர்ப்பாசனம் முறையைப் பின்பற்றவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சொட்டு நீர்ப்பாசன முறையை அமைத்திட கரும்பு மேல்வரி நிதியிலிருந்து விவசாயிகளுக்கு மானியம் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சொட்டு நீர்ப்பாசன முறையை செயல்படுத்திட ரூ.10.00 இலட்சம் நிதியை கரும்பு மேல்வரி நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்ய கரும்பு மேல்வரி பயன்பாட்டுக் குழுவால் சிபாரிசு செய்யப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

### 3.19.6. உயிர் உரங்கள் மற்றும் உயிர்ப் பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்துதல்

அசிடோபாக்டர் மற்றும் பாஸ்போபாக்டீரியம் ஆகிய உயிர் உரங்களை வயல்களில் பயன்படுத்தி முறையே வான் வெளியிலுள்ள நைட்ரஜன் மற்றும் பாஸ்பரஸை மண்ணில் நிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். உயிர் உரங்களைப் பயன்படுத்துவதால் இரசாயன உரங்களின் தேவை குறைந்து அதன்மூலம் உற்பத்திச் செலவு குறைகிறது. போதுமான அளவில் உயிர் உரங்களை வழங்குவதை உறுதி செய்ய கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் உயிர் உர அலகுகள் ஆரம்பிக்கப்படும்.

அனைத்து கூட்டுறவு பொதுத் துறை மற்றும் சர்க்கரை ஆலைகளுக்கும் 'ட்ரைகோகிராமா' மற்றும் 'என்பிவி' போன்ற உயிரினப் பூச்சிக்கொல்லிகள் வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். உயிரினப் பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்துவதால், கரும்பு பயிரிடுவதில் பொருளாதார நிலைத் தன்மையும் சுற்றுச்சூழல் பாதுகாப்பும் ஏற்படும். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலுள்ள உயிரியல் கட்டுப்பாடு ஆராய்ச்சி ஆய்வகத்தை வலுப்படுத்துவதன்மூலம் போதுமான அளவில் உயிரினப் பூச்சிக் கொல்லிகள் வழங்குவது உறுதி செய்யப்படும்.

### 3.19.7. மக்கிய உயிர் உரம்

கூட்டுறவு மற்றும் பொதுத் துறை ஆலைகளில் கிடைக்கும் ஆலைக் கழிவு மண் சுமார் 2 இலட்சம் டன்கள் ஆகும். வடிப்பகங்களில் கிடைக்கும் ஆலைக் கழிவு நீர் (spent wash) மற்றும் சர்க்கரை ஆலைகளிலிருந்து கிடைக்கும் கழிவு மண் (press mud) கொண்டு, மக்கிய உயிர் உரம் தயாரிக்கப்படுகிறது. தற்போது சேலம் மற்றும் அமராவதி ஆகிய இரண்டு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் மட்டுமே உள்ள வடிப்பகங்களில் மொத்தமுள்ள 25,000 டன்கள் ஆலைக் கழிவு மண்,

உயிர் உரமாக மாற்றப்பட்டு (அதாவது 11,000 டன் மக்கிய உயிர் உரம்) விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

### 3.19.8. மண்புழு கழிவு உரம்

வடிப்பகங்கள் இல்லாத மற்ற கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் ஆலைக் கழிவு மண்ணைப் பயன்படுத்தி மண்புழு உரமாக தயாரிக்கப்படுகிறது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆராய்ச்சியில் மண்புழு உரம், கரும்பு மற்றும் மற்ற பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்துவதில் நல்ல விளைவை ஏற்படுத்துவதைக் காட்டியுள்ளது. நிலத்தைப் பதப்படுத்துவதற்கும் நிலத்தின் ஈரத் தன்மையைப் பாதுகாக்கும் திறனை அதிகப்படுத்துவதற்கும் மண்புழு உரம் பயன்படுகிறது. இத்திட்டத்தை திருத்தணி, செய்யாறு மற்றும் செங்கல்ராயன் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் வெற்றிகரமாகக் கையாண்டுள்ளன. நடப்பு ஆண்டில் இத்திட்டத்தைப் பிற ஆலைகள் விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஆலைக்கழிவு மண்ணுடன் உயிர் உரத்தைக் கலந்து ஊட்டமேற்றிய கழிவு மண்ணாக விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது. அனைத்து சர்க்கரை ஆலைகளுக்கும் இத்திட்டத்தை மேற்கொண்டு சத்தூட்டப்பட்ட கழிவு மண்ணை விவசாயிகளுக்கு விநியோகித்து கரும்பின் தரமும் மகசூலும் உயர்த்தப்படவுள்ளன. இதேபோன்று ஆலைக் கழிவு மண்ணுடன் காய்ந்த கரும்புச் சோகைகள் கலக்கப்பட்டு ஆலைகளின் கரும்புப் பண்ணையிலேயே மக்கிய கரும்புச் சோகை உரம் ஏற்படுத்தப்படுகிறது.

### 3.19.9. கரும்பு விலை நிர்ணயம்

மத்திய அரசு அறிவிப்பில் 2004–2005 ஆம் ஆண்டு அரைவைப் பருவத்திற்கு 8.5 சதவீதம் சர்க்கரைக் கட்டுமானம் கொண்ட கரும்பிற்கு டன் ஒன்றுக்கு ரூ.745/– என சட்டபூர்வ குறைந்தபட்ச விலையை நிர்ணயித்துள்ளது. மேலும் ஒவ்வொரு 0.1 சதவீத கூடுதல் கட்டுமானத்திற்கும், டன்னிற்கு ஊக்கத் தொகை ரூ.8.80 எனவும் அறிவித்துள்ளது.

### 3.19.10. கரும்பு மேல்வரி வசூல் மற்றும் கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டம்

மாநில அரசால் செயல்படுத்தப்படும் கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் சம்பந்தப்பட்ட சர்க்கரை ஆலைகளுக்கும் கரும்பு



பயிரிடும் பகுதிகளுக்குமிடையே இணைப்புச் சாலைகள் அமைக்கப்படுகின்றன. இதன்மூலம் கரும்பு போக்குவரத்து எளிதாக இருக்கவும் முறையாக சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பினை ஏற்றிச் செல்லவும் விவசாயிகளுக்கு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளது. தமிழ்நாடு சர்க்கரை ஆலைகள் கட்டுப்பாடு சட்டம் 1949–ன்படி உள்ளூர் பகுதியைத் தவிர வெளியிலிருந்து ஆலைகளுக்கு அரைவைக்காகக் கொண்டு வரப்படும் கரும்பின் மீது கரும்பு மேல்வரியாக டன் ஒன்றுக்கு ரூ.5/– வீதம் வசூலித்து இந்நிதி கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டத்திற்கு பயன்படுத்தப்படுகின்றது.

### 3.19.11. கடந்த நான்காண்டுகளில் கரும்பு மேல்வரி வசூலிக்கப்பட்ட விவரம், சாலை அமைத்தல் மற்றும் பராமரிப்புக்கு மேற்கொண்ட செலவு விவரம் ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

(ரூபாய் இலட்சத்தில்)

| வருடம் | கரும்பு மேல்வரி வசூலித்தது | மொத்தச் செலவினம் |
|---|---|---|
| 2001-2002 | 872.94 | 333.99 |
| 2002-2003 | 613.00 | 704.33 |
| 2003-2004 | 470.70 | 823.00 |
| 2004-2005 (28-2-2005 வரை) | 276.08 | 577.75 |

## 3.20. விரிவாக்கப் பணிகள்

### 3.20.1. வேளாண் துறையின் விரிவாக்க அமைப்பினை நவீனப்படுத்துதல்

தற்போதுள்ள விரிவாக்க அமைப்பு பல அடுக்குகளைக் கொண்ட சிக்கலான அமைப்பாக உள்ளது. விவசாயிகளுக்கு விரைவாக செய்திகளைக் கொண்டு சேர்ப்பதற்காக, கீழ்மட்டத்தில் ஈரடுக்கு விரிவாக்க அமைப்பினை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு வட்டார மற்றும் கிராம அளவில் உட்கட்டமைப்பு வசதிகளை ஒருங்கிணைப்பதால் விரிவாக்க அமைப்பு, விவசாயிகளுடன் நேரடியான தொடர்பினை ஏற்படுத்த இயலும். இதனால் வேளாண் துறையின் மூலம் கிடைக்கும் அனைத்து உதவிகளும் விவசாயிகளைச் சென்றடைய இம்முறை மிகவும் உதவுவதோடு பயிர் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனும் அதிகரிக்கும்.

அறிமுகப்படுத்தப்படவுள்ள இம்முறை அனைத்து வேளாண் சார்ந்த சேவை மற்றும் இதர பிரிவுகளை ஒருங்கிணைத்து ஒரு பல்துறை அணுகுமுறையாக மேற்கொள்ளப்படும்.

### 3.20.2. வேளாண் தகவல் மற்றும் உதவி மையம் உருவாக்குதல்

வட்டத் தலைமையிடம் தவிர, இதர 200 வட்டாரத் தலைமையிடத்தில் கிராம உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கடனுதவியுடன் ரூ.100 கோடி செலவில் 200 வேளாண் தகவல் உதவி மையங்கள் நபார்டு வங்கி ஒப்பளிப்பு வழங்குவதன் அடிப்படையில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இம்மையம் வேளாண்மை, தோட்டக் கலை, கால்நடை பராமரிப்பு மற்றும் மண்வளப் பாதுகாப்புத் துறைகளுக்கான ஆலோசனை அறைகளும், சிறு ஆய்வுக் கூடம், பொருட்காட்சி மையம் மற்றும் இடுபொருள் கிடங்கு ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்கும். ஒருமுக விரிவாக்கச் சேவைகளை வழங்குவதோடு இச்சேவை உபயோகிப்பாளர்களுக்கு நெருக்கமானதாகவும் இடுபொருட்கள் விநியோகத்தில் மேம்பட்டதாகவும் இருப்பது இந்தத் தகவல் மையங்களின் சிறப்புப் பயன்களாகும்.

### 3.20.3. வேளாண் வணிகம் மற்றும் விரிவாக்கத்தில் தமிழக மகளிர்

மூன்று ஆண்டுகளில் 4,000 மகளிர் குழுக்களை வலுப்படுத்தி, விதைப் பண்ணை அமைத்தல், கன்றுகள் உற்பத்தி, பண்ணைக் கருவிகளை வாடகைக்கு வழங்குதல் மற்றும் இதர வேளாண் திட்டங்கள் மற்றும் விரிவாக்கத்தில் இக்குழுக்களை முனைவோராகப் பங்கேற்கச் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.20.4. பயிற்சிக் கொள்கை

உலகமயமாக்குதலின் அடிப்படையில் மாறிவரும் பொருளாதார சூழ்நிலைக்கேற்ப போட்டித் திறனை வளர்க்கும் வகையில் தேவையான இனங்களின்கீழ் பயிற்சி வழங்குவது முக்கியமானதாகிறது. பயிற்சித் தேவையைக் கண்டறிந்து பண்ணைத் தொழில்நுட்பம் சம்பந்தமான பொருட்களின்மீது பயிற்சி பெற்றவர்கள் பலன் பெறும் குறிக்கோளுடன் இப்பயிற்சிகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.20.5. தகவல் மற்றும் தொடர்புத்தொழில்நுட்பம் சார்ந்த வேளாண்மை

இந்தியப் பொருளாதாரத்தில் வேளாண்மைத் துறை அதிக முக்கியத்துவம் வாய்ந்த பிரிவு என்பதால், வேளாண்மைத் திட்டங்கள்,



வேளாண்மை சார்ந்த மக்கள்தொகை, மழை, நில உடைமை, நிலப்பயன்பாடு, பாசனம், பயிர் சாகுபடி முறை, பயிர் உற்பத்தித் தொழில்நுட்பங்கள், உற்பத்தித் திறனின் நிலை, வேளாண் பருவ மண்டலத் திட்டமிடுதல், வேளாண் விளைபொருட்களின் விலைகள், வேளாண் தொழில்களுக்கான கூலிகள், கருவிகள் முதலான பல்வேறு தேவைகளுக்குத் தகவல் மற்றும் தொடர்புத் தொழில்நுட்பம் சார்ந்த வேளாண்மை மேற்கொள்ள வேண்டியுள்ளது. பயிர் உற்பத்தித் தொழில்நுட்பங்கள், பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களின் மூலம் வழங்கப்படும் உதவிகள், இடுபொருட்கள் இருப்பு மற்றும் அவற்றின் விலை விவரம், சந்தை நிலவரம் போன்ற தகவல்களை நிலையான வேளாண் மேம்பாட்டிற்காக, விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய பொறுப்பு வேளாண்மைத் துறைக்கு உள்ளது.

'தமிழ்நாடு வேளாண் வலைத் திட்டத்தின்'கீழ், மாநில மற்றும் மாவட்ட அளவிலான வேளாண் துறை அலுவலகங்களுக்கு நவீன தகவல் மற்றும் தொடர்புத் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தந்து, வேளாண்மை தொடர்பான செய்திகளை விவசாயிகளுக்கு, குறிப்பாக வசதி குறைவான விவசாயிகளுக்கும் வேளாண் அமைப்பில் உள்ள அனைத்து விநியோக தொடர்புடையவர்களுக்கும் தேவையான பரிந்துரை வழங்க வேண்டியுள்ளது. இதன்மூலம், கணிப்பொறிகள் அலுவலக நிர்வாகப் பணிகளுக்கு மட்டுமல்லாது, விவசாயிகளை மையமாகக் கொண்ட தகவல்கள் மற்றும் அதனைப் பெறுவதற்கும் உபயோகப்படுத்தப்படுவதற்கும் உறுதி செய்யப்படும்.

இத்திட்டம் இருபெரும் நிலைகளில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

1. வேளாண்மைத் துறையின் அனைத்து நிலை அலுவலர்கள் மற்றும் இதர பணியாளர்களையும் தகவல் மற்றும் தொடர்புத் தொழில்நுட்பங்களில் தகுதிவாய்ந்தவர்களாக ஆக்குவதற்கு முக்கியத்துவம் தரப்படும்.
2. வேளாண் சமூகம் மற்றும் வேளாண் சார்ந்த பணிகளில் ஈடுபட்டுள்ள இதர நிறுவனங்களுக்கும் வலைதளச் சேவைகளை வழங்க முக்கியத்துவம் தரப்படும்.

முதல் நிலையில், வட்டார அளவு வரை உள்ள அனைத்து அலுவலகங்களுக்கும் தேவையான கணிப்பொறி மற்றும் தொடர்பு

உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி அதன்மூலம் விவரங்களைப் பெற்று, சீரமைத்து, அதனைப் பரிமாற்றம் செய்து தேவையான தகவல்களை மேலும் சரிசெய்யவும், அவற்றை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

எளிதான செயல்பாட்டிற்கும், பராமரிப்புக்கும் அனைத்து செயல்பாடுகளும் வலைதளம் சார்ந்ததாக இருக்கவேண்டும். அலுவலகங்களுக்கிடையே உள்ள தகவல் பரிமாற்ற இணைப்பு மேம்படுத்தப்படவேண்டும். நீண்ட தூர இணைப்புக்குத் திட்டமிடும்போது, தற்போது இயக்கத்தில் உள்ள தமிழ்நாடு மாநில நீண்ட தூர வலையமைவு கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

வேளாண்மை ஆணையரகம், 28 வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகங்கள், 384 வட்டார வேளாண்மை வளர்ச்சி அலுவலகங்கள், 35 மண் பரிசோதனை நிலையங்கள், 9 பூச்சிக்கொல்லி ஆய்வகங்கள், 6 உரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள், 6 உயிர் உர உற்பத்தி மையங்கள், 12 உழவர் பயிற்சி மையங்கள், மாநில வேளாண்மை விரிவாக்க மேலாண்மை நிலையம், 37 அரசு விதைப் பண்ணைகள், 5 மாநில எண்ணெய்வித்துப் பண்ணைகள் மற்றும் ஒரு பயறு விதைப் பண்ணையிலும் கணிப்பொறிகள் வழங்கி தமிழ்நாடு வேளாண்வலை சர்வர் மூலம் இணைக்கப்பட வேண்டும். வேளாண்மையில் இத்தகவல் மற்றும் தொடர்புப் பணிகள் யாவும் நபார்டு வங்கியின் கிராம உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி மூலம் ரூபாய் 19.06 கோடி கடன் ஒப்புதல் பெறுவதன் அடிப்படையில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், 2005–2006 ஆம் ஆண்டு, விவசாயிகளுக்குத் தகவல் மற்றும் தொடர்புத் தொழில்நுட்ப வசதிகளை, 'ராசி' திட்டத்துடன் இணைத்து ஏற்படுத்தித் தர ரூ.5 இலட்சம், பகுதி–2 திட்டத்தின்கீழ் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

### 3.20.6. வலைதளம் மூலமாக துறைக்குத் தேவையான தகவல்களைச் சேகரித்தல்

பயிர் சாகுபடி பரப்பு, திட்டப் பணிகளின் முன்னேற்றம் மற்றும் நிர்வாகம் சம்பந்தமான விவரங்களைத் திறம்பட கண்காணிப்பதை உறுதி செய்ய, வாராந்திர திங்கட்கிழமை தகவல் கண்காணிப்பு அமைப்பு, பணியாளர் தகவல் அமைப்பு மற்றும் கோப்புகள் கண்காணிப்பு அமைப்பு ஆகியன வேளாண்மை ஆணையரகத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இந்த இணைதள அடிப்படையிலான தகவல்



சேகரிப்பு நடவடிக்கைகள் வேளாண் துறையின் செயல்பாடுகளைத் துரிதப்படுத்தவும், எதிர்காலத்தில் திட்டமிடுதலுக்குத் தேவையான புள்ளி விவர வங்கியினை உருவாக்குவதற்கும் உதவிகரமாக இருக்கும்.

### 3.20.7. மாநில வேளாண்மை விரிவாக்க மேலாண்மை நிலையம் (ஸ்டாமின்)

வேளாண்மைத் துறையில் பணியாற்றும் விரிவாக்கப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கவும், நவீன வேளாண்மைத் தொழில்நுட்பங்கள், செயல்முறை பற்றி அலுவலர்களுக்குப் பயிற்றுவிக்கவும், நிர்வாகத்திறனை மேம்படுத்தவும், மாநில வேளாண்மை விரிவாக்க மேலாண்மை நிலையம் (ஸ்டாமின்) குடுமியான்மலையில் இயங்கி வருகிறது. இந்நிறுவனத்தில், அரசு சாரா நிறுவனங்கள், வேளாண் மாணவர்கள், சகோதரத் துறைகளில் பணியாற்றும் அலுவலர்களுக்குச் சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

2004–2005 ஆம் ஆண்டில், நடத்தப்பட்ட பயிற்சி வகுப்பு விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

| வ. எண் | பயிற்சியின் பெயர் | பயிற்சி அளிக்கப்பட்ட அலுவலர்கள் | |
|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை (பிப்ரவரி 2005 முடிய) |
| 1. | அலுவலக நிர்வாகப் பயிற்சி | 200 | 140 |
| 2. | அலுவலக மேலாண்மைப் பயிற்சி | 220 | 160 |
| 3. | கணிப்பொறிப் பயிற்சி | 100 | 80 |
| | **மொத்தம்** | **520** | **380** |

### 3.20.8. உழவர் பயிற்சி நிலையங்கள்

நவீன வேளாண் தொழில்நுட்பங்களில் விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்து அதனை விவசாயிகள் பின்பற்றுவதை உறுதி செய்வதே துறையின் முக்கியப் பொறுப்பாகும். பயிர் சாகுபடிமுறை, சந்தை முன்னுரிமை, வேளாண் விளைபொருட்களின் தேவை, மதிப்புக் கூட்டுதல், மாற்றுப் பயிர் சாகுபடி போன்ற வேளாண்மையில் இலாபம் ஈட்டக்கூடிய இனங்கள் பற்றி தொடர்ந்து மாறிக் கொண்டே இருக்கும் வேளாண்மைச் சூழ்நிலையில் விவசாயிகளுக்குத் தொடர்ந்து பயிற்சி

வழங்கப்படவேண்டும். இதனை நோக்கமாகக் கொண்டு தமிழகத்தில் 12 உழவர் பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. காஞ்சிபுரம், திண்டிவனம், வேலூர் (முதலில் செயல்பட்ட இடம் நவ்லாக்), சேலம், தர்மபுரி, ஈரோடு (முதலில் செயல்பட்ட இடம் பவானி), லால்குடி, குடுமியான்மலை, சாக்கோட்டை, பரமக்குடி, பாளையங்கோட்டை மற்றும் நாகர்கோவில் (முதலில் செயல்பட்ட இடம் திருப்பதிசாரம்) போன்ற இடங்களில் உழவர் பயிற்சி மையங்கள் இயங்குகின்றன.

இவை தவிர, கிராம அளவில் பயிற்சி அளித்தல், பயிற்சி மற்றும் செயல்விளக்கம், செயல்முறை விளக்கம் மற்றும் விவசாயிகள் சுற்றுலா போன்றவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடத்தப்படுகின்றன. உழவர் தினவிழா நடத்தப்பட்டு, அதில் பெருமளவில் விவசாயிகள் கலந்து கொண்டு தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கின்றனர்.

வேளாண் தொழில்நுட்பங்களை உடனுக்குடன் தெரிவிப்பதற்காக வானொலி, செய்தித்தாள்கள் மற்றும் செய்திமடல் வாயிலாக பண்ணைச் செய்திகள் போன்ற விரிவாக்கப் பணிகளும் நடத்தப்படுகின்றன. உழவர் பயிற்சி மையங்களின் இலக்கு மற்றும் சாதனை விவரம் பின்வருமாறு:

| வ. எண் | விவரம் | அலகு | 2004 2005 | | 2005-2006 ஆம் ஆண்டுத் திட்டம் |
|---|---|---|---|---|---|
| | | | இலக்கு | பிப்ரவரி 2005 முடிய சாதனை | |
| 1. | ஆண், பெண் விவசாயிகளுக்கான கிராம அளவிலான பயிற்சி | எண்கள் | 264 | 256 | 264 |
| 2. | உழவர் விவாதக்குழு அமைப்பாளர்களுக்கான கிராம அளவிலான பயிற்சி | எண்கள் | 120 | 117 | 120 |
| 3. | வயல்வெளிச் செயல் விளக்கம் | எண்கள் | * 1320 | 1266 | 1320 |
| 4. | மாதிரிச் செயல் முறை விளக்கம் | எண்கள் | 528 | 510 | 528 |
| 5. | நிதி | இலட்சம் ரூபாய் | 6.57 | 4.995 | 6.57 |



நவீன வேளாண்மைத் தொழில்நுட்பங்கள் பற்றி விவசாயிகளுக்கு அளிக்கப்படும் பயிற்சிகளின் முக்கியத்துவம் கருதி அப்பயிற்சிகளின் பலன்களை அனைத்து மாவட்ட விவசாயிகளும் பெற வாய்ப்பு அளிக்கும் வகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், 11 உழவர் பயிற்சி மையங்களை 2005–2006 ஆம் ஆண்டு துவக்க ஆணையிட்டுள்ளார்கள். இந்த உழவர் பயிற்சி மையங்கள் திருவண்ணாமலை, நாமக்கல், கரூர், பெரம்பலூர், திண்டுக்கல், தேனி, சிவகங்கை, விருதுநகர், தூத்துக்குடி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய 10 மாவட்டங்களில் வேளாண்மைத் துறை கட்டுப்பாட்டிலும், நீலகிரி மாவட்டத்தில் அமைக்கப்பட உள்ள ஒரு உழவர் பயிற்சி மையம் தோட்டக்கலைத் துறை கட்டுப்பாட்டிலும் இயங்கும். இம்மாவட்டங்களில் துறையினால் நடத்தப்படும் உழவர் பயிற்சி மையங்களோ அல்லது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் வேளாண் அறிவியல் மையங்களோ தற்போது இல்லை. 2005–2006 ஆம் ஆண்டில் புதிய 11 உழவர் பயிற்சி மையங்கள், ரூ.100.00 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

### 3.20.9. ஏற்றுமதி வாய்ப்பு வளங்கள் பற்றிய ஆய்வு

உலக வர்த்தக அமைப்புடன் ஏற்பட்ட ஒப்பந்தம் அச்சுறுத்தலையும், அதிக வாய்ப்புக்களையும் உள்ளடக்கியதாக உள்ளது. சந்தை வாய்ப்புக்கேற்ற பயிர் தேர்வு, விளை பொருட்கள் கொள்முதல் மற்றும் விநியோகத்தில் உள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தை இடர்பாடுகள் மற்றும் ஏற்றுமதி வாய்ப்புகள் பற்றிய ஆய்வு மேற்கொள்வதன் மூலம், இதனைச் செயல்படுத்த வழிமுறைகள் மற்றும் செயல்பாட்டு நடைமுறைகள் ஆகியவை பற்றி முடிவுசெய்ய முடியும்.

மத்திய அரசின் வணிகவியல் துறையின்கீழ், 'வணிக அணுகுமுறை வாய்ப்பு மீதான தொடக்க முயற்சித் திட்டத்தில்' தேர்வுசெய்யப்பட்ட விளைபொருட்கள் ஏற்றுமதி செய்யவும் அதற்கான வணிக வாய்ப்புகள் தொடர்பான வழிமுறைகள் பற்றி ஆய்வுசெய்யவும் மாநில அரசுகளுக்கு உதவும் வகையில் ஒரு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்த ஆய்விற்கான செலவில் 50 சத பங்குத்தொகை மத்திய அரசு உதவியாக வழங்குகிறது. 2005–2006 ஆம் ஆண்டு, ரூ.20 இலட்சம் செலவில் சமபங்கு அடிப்படையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்படும். (ரூ.10 இலட்சம் மாநில அரசும், ரூ.10 இலட்சம் மத்திய அரசும் வழங்கும்.)

### 3.20.10. பயிர் விளைச்சல் போட்டி

நவீன வேளாண் தொழில்நுட்பங்களைக் கடைபிடித்து, நெல், நிலக்கடலை, சோளம், கம்பு, பச்சைப் பயறு மற்றும் உளுந்து போன்ற பயிர்களில் உற்பத்தித் திறனை உயர்த்த விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில், மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் பயிர் விளைச்சல் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுத் தொகைகள் வழங்கப்படுகின்றன. வழங்கப்படும் பரிசுத் தொகை விவரம் பின் வருமாறு:—

(ரூபாயில்)

| பயிர்கள் | மாநில அளவு | | மாவட்ட அளவு | |
|---|---|---|---|---|
| | முதலிடம் | இரண்டாம் இடம் | முதலிடம் | இரண்டாம் இடம் |
| நெல் மற்றும் மணிலா | 25000 | 15000 | 8000 | 4000 |
| பிற பயிர்கள் | 8000 | 4000 | 4000 | 2000 |

மாநில அளவிலான போட்டிக்கு நுழைவுக் கட்டணம் நெல் மற்றும் மணிலா பயிர்களுக்கு ரூ.100/–ம், பிற பயிர்களுக்கு ரூ.50/–ம், மாவட்ட அளவிலான போட்டிக்கு நெல் மற்றும் மணிலா பயிர்களுக்கு ரூ.50/–ம், பிற பயிர்களுக்கு ரூ.25/–ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2004–2005 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.15.26 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 2005–2006 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 4. மத்திய அரசு சார்புத் திட்டங்கள்

### 4.1.1. பேரியல் மேலாண்மை செயல்திட்டம்

அக்டோபர் 2000 இல் இந்திய அரசு, பேரியல் மேலாண்மைத் திட்டங்களை அறிமுகப்படுத்தியது. வேளாண்மை மேம்பாட்டினைத் திட்டமிடுவதில் மாநிலங்களுக்கு முன்னுரிமை வழங்குவதிலும், மாநிலத்தின் அடிப்படை செயல்பாட்டிற்கு வழிவகுக்கவும் மேற்கொள்ளப்பட்ட பெரிய நடவடிக்கையே பேரியல் மேலாண்மை திட்டங்கள் ஆகும்.



பேரியல் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் 27 தேர்வு செய்யப்பட்ட மத்திய அரசு சார்புத் திட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு வேளாண்மை, தோட்டக்கலை, நில மேம்பாடு, மண்வளப் பாதுகாப்பு, வேளாண்மை விற்பனை, கூட்டுறவு மற்றும் மாநில நிலப் பயன்பாட்டு வாரியம் போன்ற பணிகளை ஒருங்கிணைத்து செயல்திட்டத்தின்கீழ் பகுதிக்கேற்ற முன்னுரிமை தந்து, திட்டங்களை வகுப்பதற்கு மாநிலங்களுக்கு முழு உரிமை வழங்கப்பட்டது.

இத்திட்டச் செலவினம் மத்திய அரசு மற்றும் மாநில அரசினால் 90:10 என்ற பங்கு விகிதத்தில் ஏற்கப்படுகிறது. 90 சதவிகித மத்திய அரசு பங்கேற்பில், 80 சதம் உதவித் தொகையாகவும், மீதி 20 சதம் கடனாகவும் வழங்கப்படுகிறது.

பேரியல் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட திட்டங்கள் வேளாண்மைத் துறையால் செயல்படுத்தப்படுகின்றன.

### 4.1.2. தானிய மேம்பாட்டுத் திட்டம்

அரிசி உற்பத்தித் திறனை உயர்த்துவதற்காக தானிய மேம்பாட்டுத் திட்டம் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில், உற்பத்தித் திறனை உயர்த்துவதற்குத் தேவைப்படும் முக்கிய இடுபொருட்கள் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

திட்ட இனம்வாரியாக 2004–2005 ஆம் ஆண்டு பிப்ரவரி 2005 வரை செய்த சாதனை விவரம் வருமாறு:—

| வ. எண் | இனம் | அலகு | 2004-2005 | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | பொருள் | | நிதி (ரூ. இலட்சத்தில்) | |
| | | | இலக்கு | பிப்ரவரி 2005 முடிய சாதனை | இலக்கு | பிப்ரவரி 2005 முடிய சாதனை |
| 1 | சான்றிட்ட நெல் விதை வழங்கல் (கிலோவிற்கு ரூ.2/– வீதம்) | மெ. டன் | 3657.8 | 3650 | 73.156 | 72.693 |
| 2 | சான்றிட்ட சிறுதானிய விதை வழங்கல் (கிலோவிற்கு ரூ.2/– வீதம்) | மெ. டன் | 250.45 | 228 | 5.009 | 4.519 |

| வ. எண் | இனம் | அலகு | 2004 2005 | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | பொருள் | | நிதி (ரூ. இலட்சத்தில்) | |
| | | | இலக்கு | பிப்ரவரி 2005 முடிய சாதனை | இலக்கு | பிப்ரவரி 2005 முடிய சாதனை |
| 3 | 0.4 எக்டேர் வீரிய ஒட்டு நெல் செயல் விளக்கம் (ஒரு செயல்விளக்கத்திற்கு ரூ.1,000/ வீதம்) | எண் | 3167 | 3167 | 31.670 | 31.670 |
| 4 | உயிர் உரங்கள் விநியோகம் (எக்டேருக்கு 25 பொட்டலங்கள் 25 விழுக்காடு மானியத்தில்) | எக். | 69507 | 70772 | 20.852 | 20.567 |
| 5 | சிறுதானியங்களுக்கு நுண்ணூட்ட சத்து வழங்கல் (25 விழுக்காடு மானியத்தில்) | எக். | 23892 | 21752 | 5.973 | 6.041 |
| 6 | ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்புச் செயல் விளக்கம் மற்றும் பயிற்சி (ஒன்றுக்கு ரூ.17,000/- வீதம்) | எண் | 330 | 330 | 56.100 | 55.919 |
| 7 | விளம்பரம், கருத்தரங்குகள், மாநில முன்பருவ பணிமனைகள் | | | | 40.000 | 30.985 |
| 8 | நெல் சிறுதானியச் சாகுபடி குறித்த விவசாயிகள் பயிற்சி | எண்ணிக்கை | 500 | 501 | 25.000 | 24.950 |
| 9 | திருந்திய நெல் சாகுபடி திட்டம் பரவலாக்கம் (ஒரு ஏக்கருக்கு ரூ.2,000/ ) (25 விழுக்காடு மானியத்தில் ரூ.500/ ) | ஏக்கர் | 5748 | 5694 | 28.740 | 28.867 |
| 10 | எரிபொருள் மற்றும் சில்லரைச் செலவினம் | | | | 20.000 | 14.385 |
| | மொத்தம் | | | | 306.50 | 290.596 |





2005–2006 ஆம் ஆண்டு மண் சீர்திருத்த இடுபொருள் உபயோகத்தை ஊக்கப்படுத்துதல், பண்ணைக் கருவிகள் மற்றும் இயந்திரங்கள் விநியோகம் மற்றும் அரிசி மற்றும் இதர தானியப் பயிர்களில் அதிகமாக உற்பத்தித் திறனைப் பெறும் கிராமப் பஞ்சாயத்துக்கு பரிசு வழங்குதல் போன்ற புதுச் செயல்பாடுகளுடன் விரிவாக்கப்பட்டு இத்திட்டம் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. உற்பத்தியை உயர்த்துவதற்கு தீவிர சாகுபடியினை மேற்கொள்ள விவசாயிகளுக்கு ஒரு விழிப்புணர்ச்சியினை ஏற்படுத்தி, ஊக்கப்படுத்துவதற்காக பயிர்ப் பருவம் தொடங்கும் முன்பே, கிராம அளவில் முன்பருவ முகாம்கள் நடத்தப்படும்.

### 4.1.3. செயல்திட்டத்தின்கீழ் கரும்பு அபிவிருத்தித் திட்டம்

நிலையான உற்பத்தி மேம்பாட்டிற்கு கரும்பு சார்ந்த சாகுபடித் திட்டத்தினை மத்திய அரசு பேரியல் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் அங்கீகரித்துள்ளது. இராமநாதபுரம், தூத்துக்குடி, நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. நவீன சாகுபடித் தொழில்நுட்பங்கள் பற்றி விவசாயிகளுக்குப் பயிற்சி மற்றும் கரும்பு தண்டுதுளைப்பான் கட்டுப்பாடு ஒட்டுண்ணி விடுதல் போன்றவை இத்திட்டத்தின்மூலம் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டத்தில் சொட்டுநீர்ப் பாசனப் பணிகள் வேளாண்மைப் பொறியியல் துறையால் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் சாதனை விவரம் கீழ் வருமாறு:—

| வ. எண் | இனம் | அலகு | 2004-2005 | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | பொருள் | | நிதி (ரூ. இலட்சத்தில்) | |
| | | | இலக்கு | பிப்ரவரி 2005 முடிய சாதனை | இலக்கு | பிப்ரவரி 2005 முடிய சாதனை |
| 1 | விவசாயிகள் பயிற்சி ஒரு பயிற்சிக்கு ரூ.5000/-வீதம் | மெ. டன் | 100 | 97 | 5.0 | 4.850 |
| 2 | கரும்பு ஒட்டுண்ணி விடுதல் 25 சதவிகித மானியம் - எக்டேருக்கு அதிகபட்சம் ரூ.10/- | எக்டர் | 5000 | 4634 | 0.50 | 0.463 |
| | மொத்தம் | | | | 5.50 | 5.313 |

இத்திட்டம் 2005-2006 ஆம் ஆண்டிலும் தொடரப்படும்.

### 4.1.4. சமச்சீர் மற்றும் ஒருங்கிணைந்த உரப் பயன்பாட்டுத் திட்டம்

இத்திட்டமும் பேரியல் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுகிறது. 2004–2005 ஆம் ஆண்டில் இத்திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் பின்வருமாறு:—

- **தொழில்நுட்ப அலுவலர்களுக்குப் புத்தூட்டப் பயிற்சி அளித்தல்**

  2004–2005 ஆம் ஆண்டு நுண்ணூட்டச் சத்து பரிசோதனை, உயிர் உரங்களில் பயன்பாடு, இயற்கைப் பண்ணையம், களர் உவர் மண் சீர்திருத்தம் மற்றும் அதன் நிர்வாகம் பற்றிய தலைப்புகளில் குடுமியான்மலை மத்திய கட்டுப்பாட்டு ஆய்வகத்தில் பயிற்சி ஒன்றுக்கு 30 அலுவலர்கள் வீதம் 12 பயிற்சிகள் ரூ.1.20 இலட்சம் செலவில், 360 தொழில்நுட்ப அலுவலர்களுக்கு வழங்கப்பட்டது.

- **மண்வள அட்டை விநியோகம்**

  மண்வள அட்டையானது, ஒவ்வொரு பயிருக்கும் இடவேண்டிய உரம் மற்றும் இயற்கை உரப் பரிந்துரைகள், நீர் தரம் பற்றிய பரிந்துரைகள், களர் உவர் மண் பிரச்சினைகள் பற்றிய விவரம் மற்றும் அதற்கான சீர்திருத்த முறைகள் ஆகிய விவரங்களை உள்ளடக்கிய ஓராளவுக்கு நிலையான அறிக்கை ஆகும். 2004–2005 ஆம் ஆண்டு 2.64 இலட்சம் மண் வள அட்டைகள் ரூ.4.50 இலட்சம் செலவில் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

- **இலை வண்ண அட்டை விநியோகம்**

  36,200 இலை வண்ண அட்டைகள், பரிந்துரைகள் அடங்கிய செய்திக் குறிப்புடன் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது. நெல் பயிரின் தழைச் சத்தின் தேவையினை அறிவதற்கு வயலில் உள்ள பயிரின் இலை வண்ணத்துடன் இந்த அட்டை வண்ணத்தை ஒப்பிட்டு அதற்கேற்ப பரிந்துரைக்கப்பட்ட உர அளவினை விவசாயிகள் இட முடியும். பயிரின் உண்மையான தேவையினைக் கணித்து அதற்கேற்ப சரியான அளவு தழைச் சத்தினை அளிக்க இந்த இலை வண்ண அட்டைகள் விவசாயிகளுக்கு உதவுவதோடு, தேவைக்கதிகமாக தழைச் சத்தினை இடுவதைத் தவிர்த்து உற்பத்தியை உயர்த்துவதற்கு உதவாத உரச் செலவினை விவசாயிகள் குறைக்க முடியும்.



- **மண் வரைபடம் அச்சிடுதல்**

  வேளாண் உற்பத்தியைப் பெருக்குவதற்கு, மண் மற்றும் நிலம் சார்ந்த வேளாண் திட்டப் பணி அதிக முக்கியத்துவம் பெற்றுள்ளது. மண் என்பது அடிப்படையில் மீண்டும் புதுப்பிக்க இயலாத இயற்கை வளம். விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி ஆகிய விடுபட்டுப் போன ஐந்து மாவட்டங்களுக்கு ரூ.4.8 இலட்சம் செலவில் 2004–2005 ஆம் ஆண்டில் மண் வரைபடம் அச்சடிக்கப்படும். மண் வரைபடம் நிலவியல், நில மேற்பரப்பு, நிலப்பயன்பாடு, மண் திறன், மண் மற்றும் பயிர் ஏற்புத் திறன், மண் ஆழம், நிறம், சரிவு மற்றும் வடிகால் போன்ற பல தகவல்களை உள்ளடக்கியதாக இருக்கும். இந்த மண் வரைபடம், திட்டப் பணியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், வளர்ச்சி அலுவலர்கள், களப் பணியாளர்கள் மற்றும் விவசாயிகள் ஆகிய அனைவருக்கும் தேவையான வட்டம் மற்றும் மாவட்ட அளவிலான ஒருங்கிணைந்த தகவல்களை வழங்குகிறது.

பிப்ரவரி, 2005 முடிய இத்திட்டத்தில் அடையப்பெற்ற சாதனை விவரம் பின்வருமாறு:—

| வ. எண் | இனம் | அலகு | 2004-2005 | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | பொருள் | | நிதி (ரூ. இலட்சத்தில்) | |
| | | | இலக்கு | பிப்ரவரி 2005 முடிய சாதனை | இலக்கு | பிப்ரவரி 2005 முடிய சாதனை |
| 1 | மண் மற்றும் உர நிர்வாகம் பற்றி தொழில் நுட்ப அலுவலர்களுக்குப் பயிற்சி (ஒரு பயிற்சிக்கு ரூ.10000/–வீதம் 12 பயிற்சிகள்) | எண் | 12 | 9 | 1.200 | 0.900 |
| 2 | மண்வள அட்டைகள் வழங்குதல் | இல. எண் | 1.00 | 2.64 | 4.500 | 3.690 |

| வ. எண் | இனம் | அலகு | 2004 2005 | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | பொருள் | | நிதி (ரூ. இலட்சத்தில்) | |
| | | | இலக்கு | பிப்ரவரி 2005 முடிய சாதனை | இலக்கு | பிப்ரவரி 2005 முடிய சாதனை |
| 3 | விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி ஆகிய 5 மாவட்டங்களுக்கான மண் வரைபடம் அச்சிடுதல் | எண் | 400 | 400 | 4.800 | 3.890 |
| 4 (அ) | நெல் பயிரிடப்படும் 5 மண்டலங்களுக்கு வட்டாரம் ஒன்றிற்கு 100 எண்கள் வீதம் ஒரு இலை வண்ண அட்டை ரூ.30/- வீதம் 362 வட்டாரங்களுக்கும் இலை வண்ண அட்டை வழங்குதல் | எண் | 36200 | 29730 | 10.860 | 10.040 |
| 4 (ஆ) | தொழில்நுட்ப பிரசுரம் அச்சிடுதல் | | | | 1.140 | |
| | | | | | 22.500 | 18.520 |

**4.2. மத்திய மாநில அரசுகளின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்**

**சிறுகுழுமம் II தொழில்நுட்பவியல் குழும தீவிர பருத்தி உற்பத்திப் பெருக்குத் திட்டம்**

தொழில்நுட்பவியல் குழும பருத்தி திட்டம் சிறுகுழுமம்-II 2000 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் தொடங்கப்பட்டு, முக்கிய இடுபொருட்கள், செயல்விளக்கங்கள் மற்றும் ஒருங்கிணைந்த பூச்சிநோய் நிர்வாகப் பயிற்சி மற்றும் திறன்வாய்ந்த பயிர்ப்பாதுகாப்புப் பணிகள் முதலியனவற்றை வழங்குவதன் மூலம் பருத்தி உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்துடன், தமிழ்நாட்டில் சிறுகுழுமம்-II-ன்கீழ் 2000–2001 முதல் செயல்பாட்டில் இருந்து வருகிறது. இத்திட்டச் செலவினம் மத்திய மற்றும் மாநில அரசுகளால் 75:25 விகிதப்படி பங்கேற்கப்பட்டு தமிழ்நாட்டில் நீலகிரி, கன்னியாகுமரி, திருவள்ளூர்



மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2004–2005 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக ரூ.297.50 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டது. மேலும் ரூ.152.55 இலட்சம் இந்திய அரசினால் அங்கீகரிக்கப்பட்டு மொத்தமாக ரூ.450.05 இலட்சம் இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

பிப்ரவரி 2005 முடிய அடையப் பெற்ற சாதனை விவரம் இன வாரியாகக் கீழே தரப்பட்டுள்ளது:—

| வ. எண் | இனம் | அலகு | 2004–2005 | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | பொருள் | | நிதி (ரூ. இலட்சத்தில்) | |
| | | | இலக்கு | பிப்ரவரி 2005 முடிய சாதனை | இலக்கு | பிப்ரவரி 2005 முடிய சாதனை |
| 1. | சான்றிட்ட விதை வழங்கல் ஒரு குவிண்டாலுக்கு ரூ.1000 வீதம் | (குவி) | 600 | 555 | 6.00 | 5.594 |
| 2. | வயல் விளக்கத் திடல்கள் ஒரு எக்டேருக்கு ரூ.2500 வீதம் | (எக்) | 1800 | 1825 | 45.00 | 44.348 |
| 3. | விவசாயிகள் பயிற்சி ஒவ்வொன்றும் ரூ.10,000 வீதம் | (எண்) | 450 | 448 | 45.00 | 44.80 |
| 4. | விரிவாக்கப் பணியாளர்கள் பயிற்சி ஒவ்வொன்றும் ரூ.15,000 வீதம் | (எண்) | 20 | 20 | 3.0 | 3.00 |
| 5. | மாவட்டங்களில் பூச்சி மற்றும் நோய்க் கண் காணிப்பு ஒரு மாவட்டத்திற்கு ரூ.2.5 லட்சம் வீதம் | (எண்) | 1400 | 1400 | 35.00 | 33.575 |
| 6. | ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு நிரூபணம் மற்றும் பயிற்சி ஒரு பயிற்சிக்கு ரூ.17,000 வீதம் | (எண்) | 350 | 340 | 59.50 | 55.915 |

| வ. எண் | இனம் | அலகு | 2004 2005 | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | பொருள் | | நிதி (ரூ. இலட்சத்தில்) | |
| | | | இலக்கு | பிப்ரவரி 2005 முடிய சாதனை | இலக்கு | பிப்ரவரி 2005 முடிய சாதனை |
| 7. | உயிரியல் காரணிகள் வழங்கல் எக்டேருக்கு ரூ.300/- வீதம் | (எக்.) | 6000 | 6483 | 18.00 | 17.212 |
| 8. | இன ஈர்ப்புப் பொறிகள் வழங்குதல் ஒரு எக்டேருக்கு ரூ.500/ வீதம் | எக்டர் | 6000 | 14378 | 30.00 | 28.549 |
| 9. | கைத்தெளிப்பான் வழங்கல் ஒன்றுக்கு ரூ.700/ வீதம் | (எண்) | 1500 | 2013 | 10.50 | 11.37 |
| 10. | விசைத் தெளிப்பான்கள் வழங்கல் ஒவ்வொன்றும் ரூ.1500/ வீதம் | (எண்) | 500 | 509 | 7.50 | 7.409 |
| 11. | தெளிப்பு நீர்ப்பாசனக் கருவிகள் வழங்கல் சிறு மிகச்சிறு ஆதி திராவிடர் பழங்குடி மற்றும் பெண் விவசாயிகளுக்கு 50% அதிகபட்சமாக ரூ.15,000/- மான்யம் பிற விவசாயிகளுக்கு 33% அதிகபட்சமாக ரூ.10,000/ எக்டேருக்கு ரூ.15,000/- மானியம் | எக்டர் | 112 | 70 | 12.5 | 7.14 |
| 12. | சொட்டு நீர்ப்பாசனக் கருவிகள் வழங்கல் சிறு மிகச்சிறு ஆதி திராவிடர் பழங்குடி மற்றும் பெண் விவசாயிகளுக்கு 50% அதிகபட்சமாக ரூ.21,300/- மான்யம் பிற விவசாயிகளுக்கு 35% அதிகபட்சமாக ரூ.14,900/- மான்யம் | (எக்) | 76 | 45 | 12.50 | 7.22 |
| 13. | சில்லரைச் செலவினம் | | | | 13.00 | 10.307 |
| | மொத்தம் | | | | 297.50 | 276.439 |



இத்திட்டம் 2005-2006 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 4.3. எண்ணெய் வித்துக்கள், பயறு வகைகள், எண்ணெய்ப் பனை மற்றும் மக்காச் சோளத்திற்கான ஒருங்கிணைந்த திட்டம் (ஐசோபாம்)

தீவிர மக்காச் சோள அபிவிருத்தித் திட்டம், தேசிய பயறுவகை அபிவிருத்தித் திட்டம், எண்ணெய் வித்து உற்பத்தித் திட்டம், எண்ணெய்ப் பனை அபிவிருத்தித் திட்டங்களை ஒருங்கிணைத்து 2004-2005 ஆம் ஆண்டு முதல் எண்ணெய் வித்துக்கள், பயறு வகைகள், எண்ணெய்ப் பனை மற்றும் மக்காச் சோளத்திற்கான ஒருங்கிணைந்த திட்டத்தினை (ஐசோபாம்) இந்திய அரசு செயல்படுத்தியுள்ளது. இத்திட்டம் மாநிலங்களில் மேற்கண்ட பயிர்களின் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்கு பகுதிக்கேற்ற திட்டங்களைத் திட்டமிட்டுத் தேர்வு செய்ய, அதிக வாய்ப்பை அளிக்கிறது. இத்திட்டத்திற்காகும் செலவு மத்திய மற்றும் மாநில அரசுகளால் 75:25 என்ற விகிதத்தில் பங்கேற்கப்படுகிறது.

#### 4.3.1. ஐசோபாம்- பயறு வகைகளுக்குத் திட்டம்

நவீன தொழில்நுட்பங்களைக் கடைபிடித்து பயறு உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை உயர்த்த விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக பயறு வகைகளுக்கான இத்திட்டம் மாநிலத்தில் நீலகிரி மற்றும் சென்னை நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் தரமான விதை உற்பத்தி, விதை விநியோகம், பெருவிளக்கப் பண்ணை அமைத்தல், ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகச் செயல்விளக்கம், விவசாயிகள் பயிற்சி, பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள், ஜிப்சம் மற்றும் என்பிவி விநியோகித்தல் ஆகியவற்றிற்கு மானியம் வழங்கப்படுகிறது.

2004-2005 ஆம் ஆண்டு இத்திட்டத்தின்கீழ் பிப்ரவரி, 2005 முடிய அடையப் பெற்ற சாதனை விவரம் இனவாரியாகக் கீழே தரப்பட்டுள்ளன:—

[2005 மார்ச் 31

| வ. எண் | இனம் | அலகு | 2004 2005 | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | பொருள் | | நிதி (ரூ. இலட்சத்தில்) | |
| | | | இலக்கு | பிப்ரவரி 2005 முடிய சாதனை | இலக்கு | பிப்ரவரி 2005 முடிய சாதனை |
| 1 | வல்லுநர் விதை கொள்முதல் | குவி. | 100 | 88 | 4.0 | 4.516 |
| 2 | ஆதார விதை உற்பத்தி | குவி. | 1000 | 1080 | 5.0 | 5.057 |
| 3 | விதை கிராமம்/சான்று விதை உற்பத்தி | குவி. | 6000 | 5371 | 30.0 | 25.784 |
| 4 | சான்று விதை விநியோகம் | குவி. | 6000 | 5883 | 48.0 | 41.668 |
| 5 | பெருவிளக்கப் பண்ணை | எக். | 375 | 578 | 7.5 | 7.278 |
| 6 | ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு மேலாண்மை செயல் விளக்கத் திடல் | எண் | 25 | 24 | 5.67 | 5.400 |
| 7 | பயிற்சி | எண் | 30 | 25 | 4.5 | 3.670 |
| 8 | பயிர்ப் பாதுகாப்பு கருவிகள் விநியோகம் | எண் | 500 | 631 | 4.0 | 4.289 |
| 9 | ரைசோபியம் நுண்ணுயிர் விநியோகம் | எக். | 10000 | 16277 | 5.0 | 4.490 |
| 10 | ஜிப்சம் விநியோகம் | எக். | 1266 | 2518 | 6.33 | 5.018 |
| 11 | என்பிவி விநியோகம் | எக். | 932 | 1030 | 2.33 | 2.518 |
| 12 | பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் விநியோகம் | எக். | 400 | 1036 | 2.00 | 1.925 |
| 13 | பணியாளர் ஊதியம் | | | | 9.0 | 6.070 |
| | மொத்தம் | | | | 133.33 | 117.683 |

### 4.3.2. ஐசோபாம்–எண்ணெய் வித்துக்களுக்கான திட்டம்

எண்ணெய் வித்துப் பயிர்களில் உற்பத்தியைப் பெருக்கி எண்ணெய் வித்து உற்பத்தியில் தன்னிறைவை அடையும் நோக்கத்துடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. எண்ணெய் வித்து சாகுபடி செய்யும் விவசாயிகளை நவீன வேளாண் தொழில்நுட்பங்களைப் பின்பற்றுவதற்கு ஊக்கப்படுத்தும் வகையில் இத்திட்டத்தில்



2005 மார்ச் 31]

தேவையான இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக இதர அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2004–2005 ஆம் ஆண்டு இத்திட்டம் ரூ.617.87 இலட்சம் செலவில் செயல்பட்டு வருகிறது. பிப்ரவரி, 2005 முடிய அடையப் பெற்ற சாதனை விபரம் கீழே தரப்பட்டுள்ளது:—

| வ. எண் | இனம் | அலகு | 2004-2005 | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | பொருள் | | நிதி (ரூ. இலட்சத்தில்) | |
| | | | இலக்கு | பிப்ரவரி 2005 முடிய சாதனை | இலக்கு | பிப்ரவரி 2005 முடிய சாதனை |
| 1. | வல்லுநர் விதைகள் வாங்குதல் | குவி. | 900 | 428 | 13.50 | 5.93 |
| 2. | ஆதார விதை உற்பத்தி | குவி. | 5000 | 5175 | 25.00 | 25.53 |
| 3. | சான்று விதை உற்பத்தி/ விதை கிராமம் | குவி. | 25000 | 19378 | 125.00 | 98.09 |
| 4. | சான்று விதை வழங்குதல் | குவி. | 25000 | 21844 | 200.00 | 140.51 |
| 5. | உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் | (ரூபாயில்) | – | – | 15.00 | 0 |
| 6. | பெருவிளக்கப் பண்ணை | (எண்) | 480 | 460 | 15.00 | 14.60 |
| 7. | தெளிப்பு நீர்ப்பாசனக் கருவிகள் விநியோகம் | (எண்) | 60 | 52 | 8.00 | 6.35 |
| 8. | பண்ணைக் கருவிகள் வழங்கல் | (எண்) | 565 | 526 | 5.00 | 0.96 |
| 9. | ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புச் செயல்விளக்கம் | (எக்) | 66 | 65 | 15.00 | 14.34 |
| 10. | ஜிப்சம் விநியோகம் | (எக்) | 10000 | 11951 | 50.00 | 44.08 |
| 11. | பயிர்ப் பாதுகாப்பு கருவிகள் வழங்கல் | (எண்) | 1615 | 1696 | 14.00 | 14.44 |
| 12. | நுண்ணூட்டக்கலவை வழங்கல் | (எக்) | 10000 | 12402 | 20.00 | 17.87 |
| 13. | விவசாயிகள் பயிற்சி | (எண்) | 200 | 185 | 30.00 | 28.57 |
| 14. | ரைசோபியம் நுண்ணுயிர் வழங்கல் | (எக்) | 50000 | 60935 | 25.00 | 24.53 |

[2005 மார்ச் 31

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 15. | சம்பளம் மற்றும் சில்லறை செலவினங்கள் | (ரூபாயில்) | – | – | 56.00 | 49.70 |
| 16. | விளம்பரம் | (ரூபாயில்) | – | – | 1.37 | 1.32 |
| | மொத்தம் | | | | 617.87 | 486.82 |

இத்திட்டம் 2005-2006 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படும்.

### 4.3.3. ஐசோபாம்–எண்ணெய்ப் பனைக்கான திட்டம்

சமையல் எண்ணெய்த் தேவை மற்றும் உற்பத்திக்கு இடையேயான இடைவெளியினைக் குறைக்கும் நோக்கத்துடன், எண்ணெய்ப் பனைச் சாகுபடியில் விவசாயிகளை ஊக்கப்படுத்தி சாகுபடியை விரிவுபடுத்த 2004–2005 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கரூர் மற்றும் பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எண்ணெய்ப் பனை சாகுபடி மேற்கொள்வதற்கு முதல் நான்கு ஆண்டுகளுக்கு எக்டருக்கு மொத்தம் ரூ.23,000/–வீதம் மானியம் வழங்கப்படுகிறது. எண்ணெய் பிழிதல் மற்றும் சுத்திகரிப்புப் பணிகள் எண்ணெய்ப் பனை சட்டத்தின்கீழ் முறைப்படுத்தப்படுகின்றன.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், எண்ணெய்ப் பனை சாகுபடி 9000 எக்டரில் மேற்கொள்ளத் திட்டமிட்டு, 2003–2004 ஆம் ஆண்டு வரை 1664 எக்டர் பரப்பில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த இரு ஆண்டுகளாக நிலவிய வறட்சி மற்றும் எண்ணெய் பிழியும் ஆலை இல்லாததே குறைவான பரப்புக்கு முக்கிய காரணமாகும்.

காவேரி பாமாயில் நிறுவனத்தால் பிழிதல் ஆலை அமைக்கப்பட்டதால் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டது. ஒரு மணிக்கு 2.5 மெ.டன். என்ற அளவிற்குப் பிழிவுத் திறனுடன் பெரம்பலூர் மாவட்டம், அரியலூர் வட்டாரம், வாரணவாசி கிராமத்தில் ஒரு செயல்விளக்க ஆலையினை இந்த நிறுவனம் ரூ.2.40 இலட்சம் இந்திய அரசின் உதவித் தொகையுடன் நிறுவியுள்ளது. செப்டம்பர், 2004 முதல் இந்த ஆலையில் வணிக ரீதியான எண்ணெய் பிழியும் பணி தொடங்கப்பட்டது.

இத்திட்டத்தில் அடையப் பெற்ற சாதனை விவரம் இன வாரியாகக் கீழே தரப்பட்டுள்ளது:—



2005 மார்ச் 31]

| வ. எண் | இனம் | அலகு | 2004 2005 பொருள் இலக்கு | பொருள் பிப்ரவரி 2005 முடிய சாதனை | நிதி (ரூ. இலட்சத்தில்) இலக்கு | நிதி (ரூ. இலட்சத்தில்) பிப்ரவரி 2005 முடிய சாதனை |
|---|---|---|---|---|---|---|
| 1 | முன் திட்ட பணிகள் | (எக்) | | | | |
| அ. | முதல் தவணை | | 1907 | 846.83 | 61.020 | 28.29 |
| ஆ. | இரண்டாம் தவணை | | 1200 | 563 | 51.480 | 23.85 |
| 2 | சாகுபடி பரப்பு விரிவாக்கம் | (எக்) | 1200 | 563 | 84.00 | 39.37 |
| 3 | பயிற்சி | | | | | |
| அ. | விவசாயிகள் பயிற்சி | எண் | 1200 | 750 | 4.80 | 3.600 |
| ஆ. | அலுவலர்களுக்கான புத்தூட்டப் பயிற்சி | எண் | 150 | 150 | 0.800 | 0.800 |
| 4 | விளம்பரம் | | | – | 2.000 | 1.670 |
| 5 | சாகுபடிப் பயிர் பராமரிப்பு மானியம் | (எக்) | | | | |
| அ. | இரண்டாம் ஆண்டு | | 724 | 480 | 17.738 | 11.76 |
| ஆ. | மூன்றாம் ஆண்டு | | 552.64 | 170 | 15.474 | 4.76 |
| இ. | நான்காம் ஆண்டு | | 387.52 | 98 | 12.594 | 3.18 |
| 6 | சொட்டு நீர்ப்பாசனம் | | | | | |
| அ. | ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்/சிறு/ மிகச்சிறு விவசாயிகள் | 10 | 5 | 0.740 | 0.372 | |
| ஆ. | பிற விவசாயிகள் | | 30 | 13 | 1.560 | 0.678 |
| | மொத்தம் | | | | 252.206 | 118.33 |

2005–2006 ஆம் ஆண்டு 2,500 எக்டர் பரப்பில் சாகுபடி மேற்கொள்ளும் வகையில் இத்திட்டம் ஐசோபாம் திட்டத்தின்கீழ் திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர், வேலூர், திருநெல்வேலி, நாகப்பட்டினம், கரூர், பெரம்பலூர், தேனி, தூத்துக்குடி, திருவள்ளூர், கடலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய 13 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும். புதிதாக 7 மாவட்டங்களில் இத்திட்டத்தை

மேற்கொள்ள புதிய நிறுவனதாரர்கள் விருப்பம் தெரிவிக்க அழைக்கப்பட்டு, தேர்வு செய்யப்பட்டு, திட்டம் செயல்படுத்த பகுதிகள் ஒதுக்கப்படும். இத்திட்டத்தில், நீர்மூழ்கிப் பம்புகள், அறுவடைக் கருவிகள் விநியோகம், குலைகள் மற்றும் இலைகளை வெட்டும் இயந்திரம் மற்றும் மாவட்ட/மாநில அளவில் விவசாயிகளுக்குப் பரிசு வழங்குதல் போன்ற புதிய செயல் இனங்கள் சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளது. விரிவாக்கப் பணிகள் ஒருங்கிணைப்புக்காக 29 வட்டங்களில் களப் பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் படிப்படியாக பணியமர்த்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### 4.3.4. ஐசோபாம்–மக்காச் சோளத்திற்கான திட்டம்

தமிழ்நாட்டில் தருமபுரி, கோயம்புத்தூர், திண்டுக்கல், ஈரோடு, பெரம்பலூர், நாமக்கல், விருதுநகர், தேனி, வேலூர், சேலம், மதுரை, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய மக்காச்சோள சாகுபடிக்கு வாய்ப்புள்ள மாவட்டங்களில் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

மாற்றுப் பயிர்த் திட்டத்தில் மக்காச்சோளப் பயிர்ச் சாகுபடி விவசாயிகளிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளதால், இந்தப் பயிர்ச் சாகுபடியில் மேலும் பரப்பினை உயர்த்துவதற்காக சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டச் செலவினை மத்திய மற்றும் மாநில அரசுகள் 75:25 என்ற விகிதப்படி ஏற்கின்றன. விதை சிறுதளை இனத்தில் மட்டும் இந்திய அரசு 100 சத செலவினத்தையும் ஏற்றுக்கொள்கிறது.

பிப்ரவரி, 2005 முடிய இத்திட்டத்தின்கீழ் அடையப் பெற்ற சாதனை விவரம் கீழே தரப்பட்டுள்ளது:—

| வ. எண் | இனம் | அலகு | 2004–2005 | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | பொருள் | | நிதி (ரூ. இலட்சத்தில்) | |
| | | | இலக்கு | பிப்ரவரி 2005 முடிய சாதனை | இலக்கு | பிப்ரவரி 2005 முடிய சாதனை |
| 1 | சான்று விதை உற்பத்தி | குவி. | 320 | 234 | 1.60 | 1.169 |
| 2 | சான்று விதை விநியோகம் | குவி. | 200 | 194 | 1.60 | 1.310 |
| 3 | ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு மேலாண்மை செயல் விளக்கம் | எண் | 16 | 22 | 3.63 | 3.600 |
| 4 | அலுவலர்களுக்கான பயிற்சி | எண் | 4 | 2 | 0.32 | 0.320 |
| 5 | செயல் விளக்கம் | எக்டர் | 275 | 275 | 11.00 | 11.000 |
| 6 | விவசாயிகள் பயிற்சி | எண் | 42 | 39 | 2.10 | 1.923 |
| 7 | பண்ணைக் கருவிகள் விநியோகம் | எண் | 25 | 44 | 0.50 | 0.422 |
| 8 | விதை சிறுதளை விநியோகம் (100 சதவீதம் மத்திய அரசு பங்கு) | எண் | 1667 | 1667 | 1.00 | 1.000 |
| 9 | பயிர் பாதுகாப்புக் கருவிகள் விநியோகம் | எண் | 75 | 86 | 0.60 | 0.597 |
| 10 | நுண்ணுயிர் கலவை விநியோகம் | எக்டர் | 500 | 667 | 1.00 | 1.003 |
| 11 | மின்னணு தொடர்பு மூலம் விளம்பரம் | ரூ. | | | 2.00 | 1.672 |
| | மொத்தம் | | | | 25.21 | 24.016 |



இத்திட்டம் 2005–2006 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 4.4. தென்னை வளர்ச்சி வாரியம் உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

### 4.4.1. பெண் பிள்ளைகளுக்கு இலவசமாக தென்னம்பிள்ளை வழங்கும் திட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உலக தென்னை தினமான 2–9–2004 அன்று 2–9–2004 முதல் 31–3–2005 வரை (இரு நாட்களையும் சேர்த்து) கிராமப்புறங்களில் பிறக்கும் பெண் குழந்தைகளுக்கு இலவசமாக இரண்டு தென்னம்பிள்ளை வழங்கும் திட்டத்தினை அறிவித்துள்ளார்கள். அந்தக் குழந்தை பள்ளிக்குச் செல்லும் வயதை அடையும்போது, தென்னம்பிள்ளைகளும் காய்க்கத் தொடங்கி படிப்பிற்கான செலவினை மேற்கொள்ள நிலையான வருவாயைக் கொடுத்து உதவும். இத்திட்டத்தில், மேற்குறிப்பிட்ட காலத்தில் பிறந்த அனைத்து பெண் குழந்தைகளுக்கும் இலவசமாக இரு தென்னங்கன்றுகள் வீதம் ரூ.75 இலட்சம் செலவில் வழங்கப்படும். இத்திட்டத்திற்கான செலவினம் தென்னை வளர்ச்சி வாரியம் மற்றும் மாநில அரசினால் சமபங்கு விகிதத்தில் மேற்கொள்ளப்படுகிறது. மகளிர் கல்வியை உறுதி செய்ய இத்திட்டம் ஒரு வழிகோலாகவும்,

அவர்களுக்குக் கூடுதல் அங்கீகாரம் வழங்கும் வகையிலும் இத்திட்டம் அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2005–2006 ஆம் ஆண்டும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 4.4.2. தென்னையில் சாகுபடி விரிவாக்கம்

தென்னைச் சாகுபடிப் பரப்பினை உயர்த்தும் நோக்கத்தில் 100 சதவிகித தென்னை வளர்ச்சி வாரிய நிதியுதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. புதிய தோட்டம் அமைப்பதற்கு முதலாண்டு தென்னங்கன்றுகள் விலை, குழி தோண்டுதல், நடுதல் மற்றும் இதர செலவுகளுக்காக எக்டருக்கு ரூ.4,000/–வீதம் மானியம் அளிக்கப்படுகிறது. இரண்டாம் ஆண்டு பராமரிப்புச் செலவுக்காக மேலும் ரூ.4,000/–ஆக மொத்தம் எக்டருக்கு ரூ.8,000/– மானியம் கொச்சியிலுள்ள தென்னை வளர்ச்சி வாரியத்திலிருந்து நேரடி நிதி உதவியாக விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. 2004–2005 ஆம் ஆண்டு 50 எக்டர் சாகுபடி விரிவாக்கத்திற்கும் 38.5 எக்டர் பராமரிப்புக்கும் ஆக மொத்தம் ரூ122.90 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மாநிலத்தில் தனியார் தென்னை நாற்றங்கால்களை ஏற்படுத்துவதை ஊக்குவிப்பதற்காக, தென்னை வளர்ச்சி வாரியம் சிறு நாற்றங்கால்களுக்கு (0.4 எக்டர் அல்லது ஆண்டொன்றுக்கு குறைந்த பட்சம் 25,000 தென்னங்கன்றுகள் வரை உற்பத்தி) ரூ.3 இலட்சம் வீதமும், பெரிய நாற்றங்கால்களுக்கு (4 எக்டர் அல்லது ஆண்டொன்றுக்கு குறைந்தது 50,000 தரமான தென்னங்கன்றுகள் உற்பத்தி) ரூ.6 இலட்சம் வீதமும், நேரடி மானியமாக வழங்குகிறது. இத்திட்டங்கள் தென்னை வளர்ச்சி வாரியத்தால் தேவை அடிப்படையில் 2005–2006 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும்.

### 4.4.3. தென்னை வளர்ப்பில் உற்பத்தி அதிகரிப்பிற்கான ஒருங்கிணைந்த பண்ணைத் திட்டம்

இத்திட்டம், தென்னை உற்பத்தியை அதிகரிக்க தென்னை வளர்ச்சி வாரியத்தின் 100 விழுக்காடு நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், வயதான மற்றும் நோய் தாக்கிய மரங்களை அகற்றுவதற்கு மரம் ஒன்றிற்கு ரூ.250/– மானியம், செயல் விளக்கப் பாத்திகள் அமைப்பதற்கு ஒரு எக்டருக்கு ரூ.17,500/– மற்றும் இயற்கை உரக் குழிகள் அமைத்தல் ஒவ்வொன்றிற்கும் ரூ.20,000/– மானியமாக வழங்கப்படுகிறது.



2004–2005 ஆம் ஆண்டு பிப்ரவரி 2005 வரையிலான இனவாரியான முன்னேற்றம் பின்வருமாறு:—

| வ. எண் | இனம் | அலகு | 2004-2005 | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | பொருள் | | நிதி (ரூ. இலட்சத்தில்) | |
| | | | இலக்கு | பிப்ரவரி 2005 முடிய சாதனை | இலக்கு | பிப்ரவரி 2005 முடிய சாதனை |
| 1 | நோயுற்ற மரங்களின் மேலாண்மை | எண் | 5000 | 4970 | 12.500 | 12.425 |
| 2 | செயல் விளக்கப் பாத்திகள் அமைத்தல் | எக்டர் | 390 | 383 | 68.250 | 67.025 |
| 3 | இயற்கை உரக் குழிகள் | எண் | 30 | 29 | 6.000 | 5.800 |

இத்திட்டம் 2005–2006 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 4.4.4. நவ்லாக் பண்ணையில் நெட்டை x குட்டை தென்னங்கன்றுகள் உற்பத்தி மற்றும் விநியோகம்

வேலூர் மாவட்டத்திலுள்ள நவ்லாக் அரசு தென்னை நாற்றுப் பண்ணையில் இத்திட்டம் தென்னை வளர்ச்சி வாரியம் மற்றும் மாநில அரசினால் 50:50 சத செலவில் செயல்படுத்தப்படுகிறது. 2004–2005 ஆம் ஆண்டு, ஒரு இலட்சம் நெட்டை x குட்டை தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்ய ரூ.24.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பிப்ரவரி 2005 வரை 0.80 இலட்சம் தென்னங்கன்றுகள் ரூ.20.050 இலட்சம் செலவில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

இத்திட்டம் 2005–2006 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 4.4.5. தென்னையில் காண்டாமிருக வண்டு மற்றும் செம்பனை வண்டினைக் கட்டுப்படுத்துதல்

தென்னையைத் தாக்கும் காண்டாமிருக வண்டு மற்றும் செம்பனை வண்டு தாக்குதலைக் கட்டுப்படுத்த இன ஈர்ப்புப் பொறியை தேவைக்கேற்ற முறையில் வழங்க தென்னை வளர்ச்சி வாரியம் ரூ.2.5 இலட்சம் செலவில் ஒரு திட்டத்தை செயல்படுத்தியது. மத்திய மலைப் பயிர்கள் ஆராய்ச்சி நிலையத்திடமிருந்து 4,000 இன ஈர்ப்பு இரசாயனம் (லியூர்கள்) பெறப்பட்டு 4,000 எக்டர் தென்னை பரப்பில்

வேளாண்மைத் துறை மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. 2004–2005 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட ரூ.2.5 இலட்சம் முழுமையாக செலவிடப்பட்டது.

### 4.4.6. தென்னையில் கருந்தலைப் புழுவினைக் கட்டுப்படுத்துதல்

இத்திட்டம் 100 சதவீத தென்னை வளர்ச்சி வாரிய நிதியுதவியுடன் வேளாண்மைத் துறைமூலம் தேவை அடிப்படையின் முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது 2004–2005 ஆம் ஆண்டு மரம் ஒன்றிற்கு ரூ.20/–வீதம், 48,023 மரங்களில் கருந்தலைப் புழுவினைக் கட்டுப்படுத்தும் இத்திட்டத்தை, ஈரோடு மாவட்டத்தில் மேற்கொள்ள, தென்னை வளர்ச்சி வாரியம் ரூ.9.60 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 2005–2006 ஆம் ஆண்டு தேவை அடிப்படையில் தென்னை வளர்ச்சி வாரியத்தின் அனுமதி பெற்று செயல்படுத்தப்படும்.

### 4.4.7. தென்னையில் செம்பான் சிலந்தியைக் கட்டுப்படுத்தும் திட்டம்

நான்கு வருடங்களுக்கும் மேலாக, தென்னை மரங்களில் செம்பான் சிலந்தியின் தாக்குதல் ஏற்பட்டதால், உற்பத்தி இழப்பு மட்டுமின்றி தேங்காயின் தரமும் குறைந்ததால் தென்னை விவசாயிகள் பெரும் இன்னல்களுக்கு உள்ளாக நேரிட்டது. தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் அனைத்து இரகங்களிலும் இந்தக் கொடிய சிலந்தி தாக்கியுள்ளது. இதனைக் கட்டுப்படுத்த தென்னை வளர்ச்சி வாரியம் ரூ.9.50 கோடி ஒப்பளிப்பு வழங்கியது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்' செம்பான் சிலந்தி தாக்குதலைக் கட்டுப்படுத்த மரத்தின் மேல்பகுதியில் ஒரு சதம் அசாடிராக்டின் தெளித்தல் அல்லது வேர் மூலம் செலுத்துதல் போன்ற முறைகளை உருவாக்கியது. அதன்படி மரம் ஒன்றிற்கு ஒரு சதம் அசாடிராக்டின் 10 மி.லி. என்ற அளவிற்கு ரூ.7 செலவில் இலவசமாக அதிகபட்சம் ஒரு விவசாயிக்கு 350 மரங்களுக்கு (2 எக்டர்) வழங்கப்படுகிறது. 2004–2005 ஆம் ஆண்டு 1.41 கோடி தென்னை மரங்களில் செம்பான் சிலந்தியினைக் கட்டுப்படுத்தும் இத்திட்டம் ரூ.9.50 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நவம்பர் 2004 முதல் செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தில் ரூ.9.50 கோடி நிதி முழுமையாகப் பயன்படுத்தப்படும். செம்பான் சிலந்தி தாக்கிய மீதமுள்ள 1.2 கோடி தென்னை மரங்களைப் பாதுகாக்க, 2005–2006 ஆம் ஆண்டு ரூ.8.40 கோடி வழங்க, தென்னை வளர்ச்சி வாரியத்தைக் கோரப்பட்டுள்ளது.



## அத்தியாயம் – 3

## தோட்டக்கலை

### 1. முன்னுரை

தமிழ்நாடு, தோட்டக்கலையில் தேசியப் பரப்பளவில் 5.7 விழுக்காட்டைக் கொண்டு, தேசிய தோட்டக்கலை விளைபொருள் உற்பத்தியில் 7.7 விழுக்காடு பங்களிப்பை அளித்து தோட்டக்கலை வளர்ச்சியில் முன்னிலையில் உள்ள மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. தமிழ்நாடு, பல்வேறு தோட்டக்கலை சார்ந்த விளைபொருட்களான பழங்கள், காய்கறிகள், நறுமண சுவைப் பயிர்கள், மலைப் பயிர்கள், மலர்கள் மற்றும் மூலிகைப் பயிர்களுக்கு ஏற்ற வெவ்வேறு விதமான வேளாண் தட்பவெப்ப நிலைகளைக் கொண்டுள்ளது.

இம்மாநிலத்தில், தோட்டக்கலை வளர்ச்சிக்கு ஏதுவாக, அதிக அளவில், தரிசு நிலங்களும், சரிவரப் பயன்படுத்தப்படாத நிலங்களும் உள்ளன. தமிழ்நாடு 1,000 கி.மீ. அளவிற்கு நெடிய கடற்கரைப் பகுதியைக் கொண்டுள்ளது. முந்திரி, தென்னை மற்றும் வெப்ப மண்டல ஆர்க்கிட்டுகள் (வண்ண மலர்ச் செடி வகைகள்) முதலியவற்றைப் பயிரிடச் சாதகமாக இக்கடலோரப் பகுதி அமைந்துள்ளது. தென் தமிழ்நாடு, மா மற்றும் திராட்சை போன்ற பயிர்களின் இடைப் பருவக் காய்ப்பிற்கான மூல வாய்ப்பு வளத்தைப் பெற்றுள்ளது.

விவசாயிகளிடம், உயர் மதிப்புள்ள தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடி குறித்து அதிக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 8 விழுக்காடு ஆண்டு வளர்ச்சியைத் தோட்டக்கலைத் துறையில் அடைய திட்டமிடப்பட்டுள்ளது. 2004–2005 ஆம் ஆண்டில் தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடி பரப்பு ஏறத்தாழ 8.91 இலட்சம் எக்டேர் என கணக்கிடப்பட்டுள்ளது. 2005–2006 ஆம் ஆண்டில் 9.63 இலட்சம் எக்டேர் பரப்பில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் 2003-2004 ஆம் ஆண்டு பரப்பு, உற்பத்தி மற்றும் விளைச்சல் வீதம் மற்றும் 2004-2005 மற்றும் 2005-2006-ல் எதிர்பார்க்கப்படும் விவரங்கள் பின்வருமாறு:-

பரப்பு : இலட்சம்-எக்டேரில்

உற்பத்தி : இலட்சம் மெட்ரிக் டன்னில்

உற்பத்தித் திறன் : மெட்ரிக் டன்/எக்டேர்

| வ.எண் | பயிர் வகை | 2003 2004 | | | 2004 2005 (தற்காலிகம்) | | | 2005 2006 (மதிப்பிடப்பட்டது) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பரப்பு | உற்பத்தி | உற்பத்தித் திறன் | பரப்பு | உற்பத்தி | உற்பத்தித் திறன் | பரப்பு | உற்பத்தி | உற்பத்தித் திறன் |
| 1 | பழங்கள் | 2.21 | 36.09 | 16.33 | 2.39 | 39.08 | 16.37 | 2.58 | 42.31 | 16.41 |
| 2 | காய்கறிகள் | 1.91 | 46.73 | 24.47 | 2.06 | 50.59 | 24.53 | 2.23 | 54.78 | 24.59 |
| 3 | நறுமண சுவைப் பொருட்கள் | 1.54 | 6.93 | 4.49 | 1.67 | 7.50 | 4.50 | 1.80 | 8.12 | 4.51 |
| 4 | மலைப் பயிர்கள் | 2.34 | 8.02 | 3.43 | 2.53 | 8.68 | 3.44 | 2.73 | 9.40 | 3.44 |
| 5 | மலர்கள் | 0.20 | 1.62 | 7.97 | 0.22 | 1.75 | 7.99 | 0.24 | 1.89 | 8.01 |
| 6 | மூலிகைப் பயிர்கள் | 0.04 | 0.08 | 1.90 | 0.04 | 0.08 | 1.90 | 0.05 | 0.09 | 1.90 |
| | மொத்தம் (அனைத்துப் பயிர்கள்) | 8.24 | 99.47 | 12.06 | 8.91 | 107.68 | 12.09 | 9.63 | 116.59 | 12.12 |

## 2. தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம்

அரசாணை எண் 155, வேளாண்மை (தோக1 (2) துறை, நாள் 28-04-2003-ன்படி, தோட்டக்கலை வளர்ச்சிக்கென தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி இயக்கத்தினை தமிழக அரசு அமைத்துள்ளது. அண்மைக் காலமாக வேளாண்மையில் தோட்டக்கலை ஒரு வளர்ச்சி அங்கமாக உருவாகி வருவதைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசு, தோட்டக்கலைப் பயிர்களான, பழங்கள், காய்கறிகள், மலர்கள் ஆகியவற்றின் உற்பத்திக்கும், இவற்றிலிருந்து மதிப்பூட்டப்பட்ட



பொருட்களின் உற்பத்திக்கும், இவற்றைச் சிறந்த முறையில் விற்பனை செய்வதற்கும் முக்கியத்துவம் கொடுக்கின்ற வகையில் "தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி இயக்கத்தை" அறிவித்துள்ளது. தோட்டக் கலை வளர்ச்சிக்கென தனி இயக்கம் ஒன்றை 2003 ஆம் ஆண்டில் ஏற்படுத்தி, இந்தியாவிலேயே தோட்டக்கலை வளர்ச்சிக்காக தனி இயக்கம் அமைத்த முதல் மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது. தமிழ்நாட்டில் தோட்டக்கலைப் பொருட்களின் தற்சமய உற்பத்தி 99.47 இலட்சம் மெ.டன். 2011-2012 ஆம் ஆண்டில் 187.80 இலட்சம் மெ.டன்னாக இரட்டிப்பாக்க இலக்கிடப்பட்டுள்ளது.

### இயக்கத்தின் குறிக்கோள்கள்

1. சமச்சீர் ஊட்ட வள மேலாண்மை மூலமாக உற்பத்தியைப் பெருக்குதல்.
2. தரமான நடவுச் செடிகளின் உற்பத்தியை ஒழுங்குபடுத்தவும், அவை வழங்கப்படுவதைச் சீராக்கவும் உரிய வழி முறைகளை உருவாக்குதல் மற்றும் தேவையின் அடிப்படையிலான ஆராய்ச்சிப் பணிகளுக்கு முக்கியத்துவம் அளித்தல்.
3. அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை முக்கியமாக பாதுகாப்பு மற்றும் விற்பனைக்குத் தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்.
4. நவீன தொழில்நுட்ப முறைகளை முனைப்புடன் கையாள விவசாயச் சங்கங்களை ஊக்குவித்தல்.

தோட்டக்கலை வளர்ச்சி இயக்கத்தின் பணிகளைக் கண்காணித்து அவற்றை மேம்படுத்தத் தேவையான ஆலோசனைகளை வழங்குவதற்காக மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ் ஒரு ஆளுகைக் குழு (Governing Body) அமைக்கப்பட்டுள்ளது. தலைமைச் செயலர் அவர்கள் இக்குழுவின் துணைத் தலைவராக உள்ளார். மேலும் பல்வேறு துறைகளைச் சார்ந்த அரசுச் செயலாளர்கள், பல்வேறு துறைகளைச் சார்ந்த மூத்த அலுவலர்கள், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத் துணை வேந்தர், தேசிய தோட்டக்கலை வாரியம் (National Horticulture Board), வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி வளர்ச்சிக் குழுமம் (APEDA), முதலிய அமைப்புகளின் பிரதிநிதிகள் இக்குழுவில் உறுப்பினர்களாக உள்ளனர்.

## 2.1. மா வளர்ச்சி இயக்கம்

மா வளர்ச்சி இயக்கத்தின்கீழ் மா சாகுபடியில் புதிய தொழில்நுட்பங்களை விவசாயிகள் அறிந்து கொள்ளும்வண்ணம், செயல் விளக்கத் திடல்கள் விவசாயிகளின் நிலங்களில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கென ரூ.22.55 இலட்சம் செலவிடப்படும். தேசிய தோட்டக்கலை வாரியம் இத்திட்டத்திற்கான ரூ.10.00 இலட்சத்தில் ஒப்புதல் வழங்கி, ரூ.5.00 இலட்சம் நிதி விடுவிப்பும் செய்துள்ளது. அரசாணை பெறப்பட்டதும், தேர்ந்தெடுக்கப்பட்ட மா சாகுபடி செய்யும் மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## 2.2. முந்திரி வளர்ச்சி இயக்கம்

முந்திரி வளர்ச்சி இயக்கத்தின்கீழ் முந்திரி உயர் விளைச்சல் இரகங்களையும் உயர் தொழில்நுட்பங்களையும் பயன்படுத்தி, முந்திரி உற்பத்தித் திறனை அதிகரிக்க செயல் விளக்கத் திடல்கள் விவசாயிகளின் நிலங்களில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான ரூ.23.00 இலட்சம் செலவிடப்படும். தேசிய தோட்டக்கலை வாரியம் இத்திட்டத்திற்காக ரூ.10 இலட்சம் ஒப்புதல் வழங்கி, ரூ.5.00 இலட்சம் நிதி உதவியும் செய்துள்ளது. அரசாணை பெறப்பட்டதும் தேர்ந்தெடுக்கப்பட்ட முந்திரி சாகுபடி செய்யும் மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## 3. தோட்டக்கலை பயிற்சி மையம்

தற்பொழுது இயங்கிவரும் குடுமியான்மலை மற்றும் மாதவரம் தோட்டக்கலை பயிற்சி மையங்களைத் தவிர, அரசாணை எண் 526, வேளாண்மை (தோ.க. 1) துறை, நாள் 08–12–2004–ன்படி, கிருஷ்ணகிரி மாவட்டம் தளியில் ஒரு புதிய தோட்டக்கலைப் பயிற்சி நிலையத்தை ரூ.10.16 இலட்சம் செலவில் அமைக்க அரசு ஆணை வெளியிட்டுள்ளது. தொடக்கத்தில் தோட்டக்கலைப் பயிற்சியை விவசாயிகளுக்கும், படித்த இளைஞர்களுக்கும், அருகிலுள்ள மாவட்டங்களைச் சார்ந்தோரும் பயன்பெறும் வகையில் பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 3.1 விவசாயிகளுக்குப் பயிற்சி

நவீன தோட்டக்கலை தொழில்நுட்பங்களை தோட்டக்கலை விவசாயிகள் தெரிந்துகொள்ளும் வகையில் விவசாயிகளை



மாநிலங்களுக்கு உள்ளேயும், வெளியேயும் பயிற்சிப் பயணமாக அழைத்துச் செல்லப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதன்படி நடப்பு 2004–2005 ஆம் ஆண்டில் சுமார் 10,000 தோட்டக் கலை விவசாயிகள் உள்மாநிலத்திலுள்ள பல்வேறு ஆராய்ச்சி நிலையங்களுக்கும் கர்நாடகா, மகாராஷ்டிரா, உத்திரப்பிரதேசம் ஆகிய வெளிமாநிலங்களுக்கும் அழைத்துச் செல்லப்பட்டு உயர் தொழில்நுட்ப தோட்டக்கலை பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டது. இதுமட்டுமல்லாமல், மாவட்ட கருத்தரங்குகள், கண்காட்சிகள் மூலமாகவும் விவசாயிகளுக்கு மலர்கள், மருத்துவப் பயிர்கள் சாகுபடி, காய்கறிப் பயிர்கள் உயர் தொழில்நுட்ப சாகுபடி ஆகியவை பற்றி விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டன. மேலும் தோட்டக்கலைப் பயிர் சாகுபடி பற்றி விளக்கக் குறிப்பேடுகள் மூலமாகவும், தொழில்நுட்ப பரவலாக்கம் விவசாயிகளிடையே ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

## 4. மாநில அரசுத் திட்டங்கள்

2004–2005 ஆம் ஆண்டில் பின்வரும் மாநில அரசின் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன:

### 4.1 ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம்

அரசாணை எண் 180, வேளாண்மை (தோ.க. 2) துறை, நாள் 28–5–2004–ல் ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம் ரூ.766.26 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்த அரசு ஆணை வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் நடவுச் செடிகள், வீரிய இரக/உயர் விளைச்சல் காய்கறி விதைகள் 50 சதம் மானிய விலையில் அனைத்து மாவட்ட தோட்டக்கலை விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

### 4.2 ஒருங்கிணைந்த பழங்குடியினர் வளர்ச்சித் திட்டம்

அரசாணை எண் 189, வேளாண்மை (தோ.க. 2) துறை, நாள் 28-7-2004-ல் ஒருங்கிணைந்த பழங்குடியினர் வளர்ச்சித் திட்டம் ரூ.39.325 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்த அரசு ஆணை வழங்கியது. இத்திட்டத்தின்கீழ் சேலம், நாமக்கல், தருமபுரி, திருவண்ணாமலை, வேலூர், திருச்சி மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வசிக்கும் பழங்குடி விவசாயிகளுக்குத் தோட்டக்கலை இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்படுகிறது. தோட்டக்கலைப் பயிற்சி மற்றும் பயிற்சிப் பயணம் பழங்குடி விவசாயிகளுக்கு அளிக்கப்படுகிறது.

### 4.3 மேற்குத் தொடர்ச்சி மலை வளர்ச்சித் திட்டம்

அரசாணை எண் 52, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (டிசி 1) துறை, நாள் 22-7-2004-ல் மேற்குத் தொடர்ச்சி மலை வளர்ச்சித் திட்டம் ரூ.135.48 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்த அரசு ஆணை வழங்கியது. இத்திட்டத்தின்கீழ் தேனி, மதுரை, திண்டுக்கல், விருதுநகர், கோயம்புத்தூர், ஈரோடு, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் உள்ள தோட்டக்கலை விவசாயிகளுக்கு 25 சதம் மானிய விலையில் தரமான தோட்டக்கலை இடுபொருட்கள் வழங்கப்படுகிறது.

### 4.4 மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

அரசாணை எண் 60, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (டிசி 1 மற்றும் 2) துறை, நாள் 5-8-2004-ல் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் ரூ.315.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்த அரசு ஆணை வழங்கியது. இத்திட்டத்தில் நீலகிரி மாவட்டத்தில் உள்ள சிறு, மிகச் சிறு ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு 25 சதம் மானிய விலையில் தரமான தோட்டக்கலை இடுபொருட்கள் வழங்கப்படுகிறது.

மேற்படி திட்டங்கள் 2005-2006 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டங்களில் கீழ்வரும் இனங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்:

- ஊட்டச் சத்து மேலாண்மை, நீர் மேலாண்மை, ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை ஆகிய உயர் தொழில்நுட்பங்களைக் கடைப்பிடித்து உயர் விளைச்சல் வீரிய இரகப் பயிர்களைச் சாகுபடி செய்தல்.
- பகுதிக்கேற்ற தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடியை ஊக்குவித்தல்.
- பழ வகைகளில் மா, நெல்லி, கொய்யா, சப்போட்டா ஆகிய பயிர்களுக்கும் நறுமணப் பயிரில் வெனிலா பயிருக்கும் முக்கியத்துவம் வழங்குதல், அதிக மகசூல் அளிக்கக்கூடியதும் ஏற்றுமதிக்கு உகந்ததுமான பயிர் இரகங்களுக்கு முன்னுரிமை வழங்குதல்.
- காய்கறிகளில், விவசாயிகளுக்கு அதிக இலாபம் தரக்கூடிய உயர் விளைச்சல்/வீரிய இரகக் காய்கறி வகைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்தல்.



- ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தில், ஒவ்வொரு பயனாளிக்கும் 50% மானியத்தில், பழச் செடிகளுக்காக அதிகபட்சம் 1 எக்டேருக்கும், காய்கறி மற்றும் மலர் இனங்களில் 0.50 எக்டேர் பரப்பிற்கும் மானியம் வழங்குதல்.
- தமிழ்நாட்டில் பழங்குடி மக்கள் அதிகம் வாழும் பகுதிகளான சேர்வராயன் மலைப்பகுதி, அருநூத்துமலை, பச்சைமலை, கொல்லிமலை, சித்தேரி மலை, ஜவ்வாது மலை, கல்ராயன் மலை ஆகிய பகுதிகளில் கிடைக்கும் நீர் வளத்தைப் பயன்படுத்தி தனிப் பழத் தோட்டங்களை அமைக்கப் பழங்குடி விவசாயிகளை ஊக்குவித்தல்.
- பழங்குடி மக்களின் பொருளாதார நிலையைக் கருத்தில் கொண்டு, ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 75 விழுக்காடு மானியத்தில் அவர்களுக்குத் தோட்டக்கலை நடவுச் செடிகள் வழங்குதல்.
- மேற்குத் தொடர்ச்சி மலை வளர்ச்சித் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றில் நீர்வடி பகுதி அணுகுமுறைகளைக் கையாண்டு செயல்படுத்துதல்.
- மண் அரிப்பினைத் தடுக்கவும், சுற்றுச் சூழலைப் பாதுகாக்கவும் நிலத்திற்கேற்ற பயிர் வகைகளைத் தெரிவு செய்து சாகுபடி செய்தல்.
- மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின்கீழ் 25 முதல் 50 விழுக்காடு மானியத்தில், தோட்டக்கலை நடவுப் பொருட்கள் வழங்குதல்.
- துறையின், 55 அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் (இணைப்பு - 1) உயர் இரகமரபு வழி ஒட்டுச் செடிகளை உற்பத்தி செய்து பல்வேறு திட்டங்கள்மூலம் விவசாயிகளுக்கு வழங்குதல்.
- நவீன தொழில்நுட்பங்களை அறிந்துகொள்ளும் வகையில் தோட்டக்கலைத் துறை விரிவாக்க அலுவலர்களுக்கு குடுமியான்மலையில் (புதுக்கோட்டை மாவட்டம்) மத்திய தோட்டக்கலைப் பயிற்சி மையத்தில் பயிற்சி அளித்தல்.

- மாதவரம் (சென்னை) தோட்டக்கலைப் பயிற்சி மையத்தில் ஒவ்வொரு ஆண்டும் 40 புதிய மாணவர்களுக்கு இரண்டாண்டு பட்டயப் படிப்பில் பயிற்சி அளித்தல்.

## 4.5. நீலகிரி மாவட்டத்தில் மாற்றுப் பயிர் திட்டம்

தேயிலை விவசாயிகளின் பிரச்சனையைத் தீர்க்கும் வகையில் நீலகிரி மாவட்டத்தில் மாற்றுப் பயிர் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. பல அடுக்குப் பயிர்ச் சாகுபடி (Multi-tier Cropping) முறையின்மூலம், சில்வர் ஓக் (Silver Oak), மிளகு, ஏலம், கமலா ஆரஞ்சு (Mandarin Orange) ஆகிய பயிர்களைத் தேயிலையுடன் பயிரிட விவசாயிகள் ஊக்குவிக்கப்படுகின்றனர். நீலகிரி மாவட்டத்தில் நிலவும், வேளாண் தட்ப வெப்ப நிலையைக் கருத்தில் கொண்டு, புதிய வகைப் பயிர்களான 'மெக்கடமியா' மற்றும் 'பீக்கன்கொட்டை' ஆகிய பயிர்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. சோதனை அடிப்படையில், இப்பயிர்களை நஞ்சநாடு மற்றும் 'கோல்கிரைன்' அரசு தோட்டக் கலைப் பண்ணைகளில் வளர்க்க முடிவு செய்யப்பட்டுள்ளது. பின்னர் நீலகிரி மாவட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட பகுதிகளில் விவசாயிகள் நிலங்களில் அறிமுகப்படுத்தப்படும். நீலகிரி மாவட்டத்தில் மாற்றுப் பயிர் சாகுபடியை மேம்படுத்த அரசு ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் அரசாணை எண். 244, வேளாண்மை (தோ.க .2) துறை, நாள் 17-06-2004-ன்படி அரசு ஆணை வழங்கியது. இத்திட்டம் 2005-06 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 4.6. தமிழ்நாடு துல்லிய பண்ணையியல் திட்டம் (Tamilnadu Precision Farming Project)

அரசாணை நிலை எண் 24, வேளாண்மை (தோ.க. 1) துறை, நாள் 23-01-2004-ன்படி, தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் ரூ.720.60 இலட்சம் செலவில் மூன்று ஆண்டுகளில் தொழில்நுட்ப முறைகளின்படி, தோட்டக் கலைப் பயிர்களுக்கான துல்லிய பண்ணையம் அமைத்து செயல்படுத்த ஆணை வெளியிடப்பட்டது. கடந்த நிதிநிலை கூட்டத் தொடரில் அறிவித்தபடி நவீன தொழில்நுட்பங்களைக் கையாண்டு 400 எக்டேர்களில் பாசன நீரைச் சிக்கனப்படுத்தி உற்பத்தியைப் பெருக்கும்வகையில் தருமபுரி மற்றும் புதிதாக அமைக்கப்பட்ட கிருஷ்ணகிரி மாவட்டங்களில் "தமிழ்நாடு துல்லிய பண்ணையியல் திட்டம்" என்ற சிறப்புத் திட்டத்தினைச் செயல்படுத்த தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.



இத்திட்டமானது மூன்றாண்டுகளில் ரூ.720.60 இலட்சத்தில் செயல்படுத்தப்படும்.

தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடியில் சொட்டு நீர்ப் பாசனம், தெளிப்பு நீர்ப் பாசனம், நீர்வழி உரமிடுதல் முதலிய உயர் தொழில்நுட்ப முறைகளைக் கையாண்டு அதன்மூலம் தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனைப் பெருக்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்மூலம் மூன்று ஆண்டுகளில் 1000 ஏக்கர் விவசாயிகளின் நிலங்களில் உயர் தொழில்நுட்ப முறைகளின்படி மரவள்ளி, சீமை வெள்ளரி, வீரிய இரகத் தக்காளி, மிளகாய், கேப்சிகம், பாப்ரிக்கா, வெள்ளை வெங்காயம், வெண்டை, முட்டைகோஸ், காலிபிளவர், பேபி கார்ன் முதலிய தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்யப்படும்.

முதலாமாண்டு 100 எக்டேர் பரப்பிலும், இரண்டாமாண்டு 200 எக்டேர் பரப்பிலும், மூன்றாமாண்டு 100 எக்டேர் பரப்பிலும் முறையே ரூ208.59 இலட்சம், ரூ316.16 இலட்சம், மற்றும் ரூ.195.85 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மூலம் செயல் திட்ட அடிப்படையில் (Turn Key Project) செயல்படுத்தப்படும். இத்திட்டத்தைச் செம்மையாகச் செயல்படுத்த தோட்டக்கலைத் துறை, வேளாண் துறை, வேளாண் பொறியியல் துறை, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை, மாவட்ட நிர்வாகம் ஆகியவை ஒருங்கிணைந்து செயல்படும்.

இத்திட்டம்மூலம், முதலாண்டு தேர்ந்தெடுக்கப்படும் விவசாயிகளுக்கு முதல் பருவ சாகுபடி செய்ய ஆகும் செலவுக்கு முழு மானியம் வழங்கப்படும். இரண்டாமாண்டு தேர்ந்தெடுக்கப்படும் விவசாயிகளிடம் பயிரிடப்படும் செலவில் 10 விழுக்காடும், மூன்றாமாண்டு தேர்ந்தெடுக்கப்படும் விவசாயிகளிடம் பயிரிடப்படும் செலவில் 20 விழுக்காடும் வசூலிக்கப்படும்.

இத்திட்டம் 2005-2006 ஆம் ஆண்டில் தேனி, வேலூர், கடலூர், ஈரோடு, திருநெல்வேலி மற்றும் தஞ்சாவூர் ஆகிய ஆறு மாவட்டங்களில் ரூ.10.00 கோடி நிதி ஆதாரத்துடன் செயல்படுத்தப்பட உள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் 100 எக்டேர் பரப்பளவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

5. **மைய மற்றும் மாநில அரசுகளிடையே பகிர்வு பெறும் திட்டங்கள்**

பின்வரும் மைய மற்றும் மாநில அரசுகளிடையே பகிர்வு (மைய அரசு 90 விழுக்காடு - மாநில அரசு 10 விழுக்காடு என்ற விகிதத்தில்) பெறும் திட்டங்கள் 2004-2005 ஆம் ஆண்டில் அரசாணை எண் 201, வேளாண்மை (பட்ஜெட் மற்றும் திட்டம்) துறை, நாள் 11-06-2004-ன்படி அரசால் ஒப்பளிக்கப்பட்டது:

1. ஒருங்கிணைந்த முந்திரி வளர்ச்சித் திட்டம்
2. ஒருங்கிணைந்த பழப் பயிர் வளர்ச்சித் திட்டம்
3. ஒருங்கிணைந்த நறுமண சுவைப் பயிர் வளர்ச்சித் திட்டம்
4. ஒருங்கிணைந்த காய்கறி வளர்ச்சித் திட்டம்
5. ஒருங்கிணைந்த மூலிகை மற்றும் வாசனைப் பயிர் வளர்ச்சித் திட்டம்
6. ஒருங்கிணைந்த கோக்கோ வளர்ச்சித் திட்டம்
7. வணிக மலர் வளர்ச்சித் திட்டம்
8. காளான் வளர்ச்சித் திட்டம்
9. தோட்டக்கலை விரிவாக்கத்தில் குழைமப் பொருட்கள் உபயோகம்.
10. தோட்டக்கலை வளர்ச்சியில் புதுமைத் திட்டங்கள்

மேற்படி அனைத்துத் திட்டங்களும் 2005-2006 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து அதிக ஒதுக்கீட்டுடன் செயல்படுத்தப்படும். இத்திட்டங்களின் முக்கியக் கூறுகள் பின்வருமாறு:

1. உயர் இரக விளைச்சல் தரக்கூடிய பழப் பயிர்களான மா, கொய்யா, சப்போட்டா, எலுமிச்சை, பலா, நெல்லி ஆகிய பயிர்களின் பரப்பளவை அதிகரிக்க கவனம் செலுத்துதல்.
2. விவசாயிகள் பங்கேற்கும் செயல் விளக்கப் பாத்தி மற்றும் பயிற்சி மூலமாக தொழில்நுட்ப பரவலாக்கம் செய்தல்.
3. தரமான உயர் இரக/வீரியமிக்க அதிக மகசூல் தரும் செடிகள் மற்றும் காய்கறி விதைகள் விவசாயிகளுக்குக் கிடைத்திட வழிவகை செய்தல்.



4. தரமான விதைகள் மற்றும் நடவுச் செடிகள் விநியோகம் செய்தல்மூலமாக வாசனைப் பயிர்களின் பரப்பளவை அதிகரிக்க கவனம் செலுத்துதல்.
5. பாரம்பரிய மலர் வகைகளான ரோஜா, மல்லிகை, சம்பங்கி, சாமந்தி, கனகாம்பரம் ஆகிய பயிர்களின் பரப்பினை அதிகரிக்க முயற்சி மேற்கொள்ளுதல்.
6. ஏற்றுமதிக்கு உகந்த கொய் மலர்களான ரோஜா, கார்னேஷன், செர்பரா, கிளாடியோலஸ், ஆந்தூரியம், லில்லி போன்றவைகளின் பரப்பு விரிவாக்கம் செய்தல்.
7. விவசாயிகளின் நிலங்களில் செயல் விளக்கங்கள் மற்றும் இதர வளர்ச்சித் திட்டங்கள் மூலமாக மலர்களின் தரத்தை மேம்படுத்தவும், உற்பத்தியை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுத்தல்.
8. தோட்டப் பயிரான முந்திரி பயிரில் மேம்படுத்தப்பட்ட இரகங்களான வி.ஆர்.ஐ.2, வி.ஆர்.ஐ.3 ஆகிய இரகங்களை பயிர் செய்து பரப்பு விரிவாக்கம் செய்ய கவனம் செலுத்துதல்.
9. தென்னந்தோப்புகளில் ஊடுபயிராக கோக்கோ சாகுபடி செய்வதை ஊக்கப்படுத்துதல்.
10. சொட்டு நீர்ப் பாசன மற்றும் நீர்வழி உரமிடுதலுடன்கூடிய அடர் பயிர் செயல் விளக்கத் திடல்களை மாநில தோட்டக் கலைப் பண்ணைகளில் அமைத்து இத்தகைய தொழில்நுட்பங்களை மேம்படுத்துதல்.
11. ஏற்றுமதிக்கு வாய்ப்புள்ள மருத்துவ மற்றும் வாசனைப் பயிர்களின் பரப்பு விரிவாக்கத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.
12. குழைமப் பயன்பாடு தொழில்நுட்பங்களான, நிழல்வகைக் கூடாரங்கள், பசுமைக் குடில்கள், சொட்டுநீர்ப் பாசனம், தெளிப்புநீர்ப் பாசனம் ஆகியவற்றை மேம்படுத்துதல்.
13. அறிவியல் ரீதியாக காளான் உற்பத்தியில் பண்ணை மகளிர்/சுய உதவிக் குழுவினருக்குத் தொழில்நுட்பப் பயிற்சி அளித்தல்.

## தோட்டக்கலை அபிவிருத்தியில் புதுமைத் திட்டங்கள்

### அ. மாதிரி தோட்டக்கலை கிராமம் உருவாக்குதல்

**கொள்கை**

1. நவீனத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதன்மூலம் அடையும் மேம்பாட்டினை விவசாயிகளுக்கு உணர்த்துதல்.
2. தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரித்தல்.
3. கிராம மக்களிடையே நவீன தொழில்நுட்பங்களை கையாண்டு பயிர் சாகுபடி செய்யும் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

**உத்திகள்**

1. உயர்தர வீரிய இரகங்கள் பயிரிடுதல்
2. அடர் பயிர் சாகுபடி செய்தல்
3. நுண்ணீர் பாசனம் மூலம் பாசன மேம்பாடு முறைகளை கடைபிடித்தல்
4. ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு மற்றும் உரம் நிர்வாகம் ஆகிய தொழில்நுட்பங்களைச் செயல்படுத்துதல்
5. பயிர் வளர்ச்சி ஊக்கிகளைப் பயன்படுத்துதல்
6. அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை சாகுபடி முறைகள் பயன்படுத்துதல்

தற்போது விவசாயிகளுக்குச் சரியான விழிப்புணர்வு இல்லாமையால் வீரிய இரக விதைகள் பயன்படுத்துதல், அடர்பயிர் சாகுபடி, நுண்ணீர் பாசனம் போன்ற நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தாமல் உள்ளனர். எனவே, விவசாயிகளுக்குத் தோட்டக்கலையில் இத்தகைய நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதால் கிடைக்கும் கூடுதல் மகசூல் பற்றி கற்பிக்கும் முகமாக தோட்டக்கலை கிராமங்களை உருவாக்கி இதனால் தோட்டக்கலை பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்தல்.

இத்திட்டத்தின்மூலம் பயிருக்குத் தேவையான இடுபொருட்கள் மற்றும் நுண்ணீர் பாசன வசதிகள் அளிக்கப்படும். மேலும், விவசாயிகளுக்கு அவ்வப்போது எழக்கூடிய தொழில்நுட்ப



பிரச்சினைகளைத் தீர்க்கவும், தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கவும் ஓர் தொழில்நுட்ப ஆலோசகர் நியமிக்கப்படுகிறார். ஒவ்வொரு மாதிரி கிராமத்திற்கும் ரூ.1 இலட்சம் செலவிடப்படுகிறது.

மாதிரி கிராமங்களில் மா, சப்போட்டா, நெல்லி மற்றும் திசு வாழை போன்ற பழப் பயிர்களும், வெண்டை, கத்தரி, வெங்காயம் போன்ற காய்கறிப் பயிர்களும், கனகாம்பரம், சாமந்தி, சம்பங்கி போன்ற மலர்ப் பயிர்களும் பயிரிடப்படும்.

### ஆ) விரிவாக்கப் பணியாளர்களுக்குத் தோட்டக்கலைத் துறையில் உயர் தொழில்நுட்பப் பயிற்சி அளித்தல்

நவீன தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்குத் தெளிவாக்குதல் விரிவாக்கப் பணியாளர்களின் பணியாக உள்ளது. ஆகவே, அத்தகைய விரிவாக்கப் பணியாளர்கள் நவீன தொழில்நுட்பங்களை அறிந்துகொள்ளும் வகையில் இம்மாநிலத்திலும், தோட்டக்கலை வளர்ச்சியில் முன்னணி மாநிலங்களாகத் திகழும் ஆந்திரப் பிரதேசம், மகாராஷ்டிரா, கர்நாடகம், கேரளா போன்ற வெளி மாநிலங்களில் உள்ள பயிற்சி மையங்களிலும் 100 அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

### இ) நாற்றங்கால் கிராமங்கள்

இம்மாநிலத்தில் நாற்றங்கால் பண்ணைகளை உருவாக்குவது/ மேம்படுத்துவது ஆகியவை உறுதி செய்யப்படும். தரமான நடவுச் செடிகள் பற்றாக்குறையே தற்போதைய தோட்டக்கலை வளர்ச்சியின் முக்கிய இடர்ப்பாடாக உள்ளது. எனவே, நாற்றங்கால் கிராமங்களின் முக்கிய குறிக்கோளே தரமான மரபுவழி மாறாத நடவுச் செடிகளை விவசாயிகளுக்கு அளிப்பதாகும். இதன்பொருட்டு, தரமான விதைகள் மற்றும் நடவுச் செடிகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோகிக்கும் நோக்குடன் நாற்றங்கால் கிராமங்கள் ஒரு கிராமத்திற்கு முதலாம் ஆண்டு ரூ.2.50 இலட்சமும் இரண்டாம் ஆண்டு முதற்கட்ட பராமரிப்பிற்காக ரூ.0.50 இலட்சமும் நிதியுதவி வழங்கப்படும். நாற்றங்கால் கிராமங்களுக்கு அனைத்து நவீன உள்கட்டமைப்பு வசதிகளான பசுமைக் குடில்கள் அமைத்தல், நிழல்வகைக் கூடாரங்கள் அமைத்தல், சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர் பாசன வசதிகள் வழங்கப்பட உள்ளன.

[2005 மார்ச் 31

**ஈ) சொட்டுநீர் மற்றும் நீர் வழி உரமிடுதல் பாசன வசதியுடன் நெருக்கி நடவு செயல் விளக்கம் அமைத்தல்**

சொட்டுநீர் மற்றும் நீர் வழி உரமிடுதல் பாசன வசதிகளுடன் கூடிய நெருக்கி நடவுத் திட்டத்தின்மூலமாக தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதை செயல் விளக்கமாகக் காட்டுவதே இதன் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்திற்காக விவசாயிகளுக்குத் தேவைப்படும் நடவுச் செடிகளை வழங்குவதற்கான உதவிகளையும், நீர் ஆதாரங்களையும் மேம்படுத்தவும் ஒரு எக்டருக்கு ரூ.1.00 இலட்சம் நிதி உதவி வழங்கப்படும்.

**உ) தோட்டக்கலைப் பயிற்சி மையங்களை உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல்**

தோட்டக்கலைத் துறையின்கீழ் செயல்பட்டுவரும் மாதவரம் தோட்டக்கலைப் பயிற்சி மையம் மற்றும் குடுமியான்மலை தோட்டக் கலை பயிற்சி மையங்களை மேம்படுத்திடவும், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டில் செயல்பட்டுவரும் பெரியகுளம் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் மேம்பாட்டிற்கும் தலா ரூ. 5 இலட்சம் வீதம் ஒவ்வொரு மையத்திற்கும் நிதி உதவியாக வழங்கப்படுகிறது.

**ஊ) கல்வி நிறுவனங்களில் மாதிரி தோட்டக்கலைத் தோட்டம் அமைத்தல்**

தோட்டக்கலை பற்றிய விழிப்புணர்வை மாணவர்களிடையே ஏற்படுத்துவதே இதன் உயரிய நோக்கமாகும். இதற்கான முழு உதவித் தொகையாக ரூ.5,000/-க்கு மிகாமல் கல்வி நிறுவனங்களில் மாதிரி தோட்டக்கலைத் தோட்டங்கள் அமைக்கப்படுகிறது.

**எ) தகவல் தொழில்நுட்பம்மூலம் விரிவாக்கப் பணிகள்**

விரிவாக்கப் பணியில் புதுமையான தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்குப் பரப்புவது மிக முக்கியமானதாகும். இதன் பொருட்டே செயல்விளக்கப் பாத்திகள் அமைத்தல் மற்றும் பயிற்சிகளை வழங்குவதுடன், தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடி முறைகளை கையேடுகளாக அச்சிட்டு விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. மேலும், கருத்தரங்கு மற்றும் விழிப்புணர்வு முகாம்களும் அவ்வப்போது நடத்தப்படுகின்றன.



2005 மார்ச் 31]

**6. பகுதி-2 திட்டங்கள்**

2004-2005 ஆம் ஆண்டில் பகுதி-2 திட்டத்தின்கீழ், 28 அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் நீர்ப்பாசன வசதிகளை மேம்படுத்துவதற்காக அரசாணை எண் 398, வேளாண்மை (தோ.க. 1), நாள் 06-08-2004-ன்படி ரூ.120.00 இலட்சங்கள் ஒப்பளிக்கப்பட்டு வேளாண்மைப் பொறியியல் துறை மற்றும் பொதுப் பணித் துறை மூலமாக திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 31-03-2005-க்குள் இத்திட்டங்கள் முடிக்கப்படும்.

**6.1. தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை (Tamilnadu Horticulture Development Agency)**

தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை என்ற தனி அமைப்பு அரசாணை எண் 250, வேளாண்மை (தோ.க.1) துறை, நாள் 18-06-2004-ன்படி பகுதி-2 திட்டத்தின்கீழ் 2004-2005 ஆம் ஆண்டிற்கு ரூ.20.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் பின்வரும் குறிக்கோள்களுடன் ஏற்படுத்தப்பட உள்ளது:

(1) உயர் தொழில்நுட்பத் தோட்டக்கலை மற்றும் துல்லிய பண்ணை நடவடிக்கைகளை மேம்படுத்துதல்.

(2) தோட்டக்கலை வளர்ச்சிக்காகப் பொது மற்றும் தனியார் கூட்டுமுறைப் பங்களிப்பினை ஊக்குவித்தல்.

(3) தோட்டக்கலை நவீன தொழில்நுட்பங்களை விவசாயிகள் மற்றும் விரிவாக்கப் பணியாளர்கள் அறியச் செய்தல்.

(4) அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் மூலம் தாய்வழி நடவுச் செடிகளின் உற்பத்தி மற்றும் விநியோகத்தினைச் சீராக்குதல்.

(5) தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம் மற்றும் தேசிய தோட்டக் கலை இயக்கத்தின் கீழான திட்டங்கள் உட்பட பல்வேறு தோட்டக்கலை வளர்ச்சித் திட்டங்களை உரிய முகமைகளிடமிருந்து நிதி உதவி பெற்றுச் செயல்படுத்துதல்.

இம்முகமை, தோட்டக்கலை வளர்ச்சியின் பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதற்கு ஓர் சிறப்பு செயல் ஊர்தியாகத் திகழும்.

## 6.2. பகுதி–2 திட்டங்கள் (2005–2006)

பகுதி–2 திட்டத்தின்கீழ் 2005–2006 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன:

1. பவர் டில்லருடன்கூடிய உபகரணங்கள் மற்றும் பல்நோக்கு டேங்கர் போன்ற பண்ணைக் கருவிகளை ரூ.50.00 இலட்சம் செலவில் 25 அரசு தோட்டக் கலைப் பண்ணைகளுக்கு வாங்குதல்.

2. இயற்கை முறையில் விற்பனை இணையத்துடன் காய்கறி உற்பத்தி திட்டத்தினை ரூ.10.00 இலட்சம் செலவில் மேற்கொள்ளுதல்.

## 7. ஜெட்ரோபா

நோவாட் (NOVOD – National Oil Seeds and Vegetable Oil Development Board) (தேசிய எண்ணெய் வித்து மற்றும் தாவர எண்ணெய் வளர்ச்சி வாரியம்) நிதி உதவியுடன் 2004–2005 ஆம் ஆண்டு கீழ்க்கண்ட 11 அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் 200 எக்டேர் பரப்பளவில் ஜெட்ரோபா பயிர் செய்திட திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான நிதி ஆதாரம் ரூ.75.00 இலட்சம் மேற்கூறிய வாரியத்திலிருந்து, மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நீர்வடி மேம்பாட்டு முகமை, சென்னை–32 அவர்களால் பெறப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | மாபெரும் பழப் பண்ணை, வல்லத்திராக்கோட்டை, புதுக்கோட்டை மாவட்டம் | 45 எக்டேர் |
| 2. | மாபெரும் பழப் பண்ணை, கருமந்துறை, சேலம் மாவட்டம் | 50 எக்டேர் |
| 3. | அரசு தோட்டக்கலைப் பண்ணை, ஜீனூர், கிருஷ்ணகிரி மாவட்டம் | 20 எக்டேர் |
| 4. | அரசு தோட்டக்கலைப் பண்ணை, குடுமியான்மலை, புதுக்கோட்டை மாவட்டம் | 10 எக்டேர் |
| 5. | அரசு தோட்டக்கலைப் பண்ணை, நவ்லாக், வேலூர் மாவட்டம் | 20 எக்டேர் |
| 6. | அரசு தோட்டக்கலைப் பண்ணை, முள்ளுவாடி, சேலம் மாவட்டம் | 10 எக்டேர் |
| 7. | மாபெரும் பழப் பண்ணை, திருவில்லிபுத்தூர், விருதுநகர் மாவட்டம் | 12 எக்டேர் |
| 8. | அரசு தோட்டக்கலைப் பண்ணை, மேல்கதிர்பூர், காஞ்சிபுரம் மாவட்டம் | 10 எக்டேர் |
| 9. | அரசு தோட்டக்கலைப் பண்ணை, விச்சங்தாங்கல், காஞ்சிபுரம் மாவட்டம் | 10 எக்டேர் |
| 10. | அரசு தோட்டக்கலைப் பண்ணை, தகரகுப்பம், வேலூர் மாவட்டம் | 10 எக்டேர் |
| 11. | அரசு தோட்டக்கலைப் பண்ணை, கண்ணம்பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம் | 5 எக்டேர் |
| | மொத்தம் | 200 எக்டேர் |



## 8. 2004–2005–ல் நிதி ஒதுக்கீடு–இலக்கு அடைந்த சாதனை மற்றும் 2005–2006–க்கு நிதி ஒதுக்கீடு

மாநில அரசுத் திட்டங்கள், மாநில–மைய அரசுப் பகிர்வு முறைத் திட்டங்கள் ஆகியவற்றிற்கான 2004–2005 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு மற்றும் மேற்கொள்ளப்பட்ட செலவினம் மற்றும் 2005–2006 ஆம் ஆண்டில் மேற்கொள்ளவிருக்கும் நிதி ஒதுக்கீடு ஆகியவற்றின் விவரங்கள் பின்வருமாறு:

### 2004–2005 ஆம் ஆண்டிற்கான ஒப்பளிக்கப்பட்ட தொகை மற்றும் சாதனை, 2005–2006 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கிடு

அலகு – ரூபாய் இலட்சங்களில்

அ. மாநிலத் திட்டங்கள்

| வ. எண் | திட்டம் | 2004–2005 | | 2005–2006 |
|---|---|---|---|---|
| | | ஒப்பளிக்கப் பட்ட தொகை | பிப்ரவரி 2005 வரையான சாதனை | நிதி ஒதுக்கீடு |
| 1 | ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம் | 766.260 | 615.080 | 769.400 |
| 2 | ஒருங்கிணைந்த பழங்குடியினர் வளர்ச்சித் திட்டம் | 39.330 | 35.135 | 41.790 |
| 3 | மேற்குத் தொடர்ச்சி மலை வளர்ச்சித் திட்டம் | 135.480 | 105.158 | 132.080 |
| 4 | மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் | 315.000 | 267.750 | 314.940 |
| 5 | தமிழ்நாடு துல்லிய பண்ணையியல் திட்டம் | 232.950 | 203.000 | 1120.850 |
| 6 | நீலகிரி மாவட்டத்தில் மாற்றுப் பயிர்த் திட்டம் | 50.000 | 48.090 | 50.000 |
| 7 | பகுதி–2 திட்டங்கள் | 120.000 | 105.000 | 60.010 |
| 8 | தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை | 20.000 | – | 20.000 |
| | மொத்தம் | 1679.020 | 1379.213 | 2509.070 |

[2005 மார்ச் 31

**ஆ. மைய மற்றும் மாநில அரசுகளிடையே பகிர்வு பெறும் திட்டங்கள்**

| வ. எண் | திட்டம் | 2004–2005 | | 2005–2006 |
|---|---|---|---|---|
| | | ஒப்பளிக்கப் பட்ட தொகை | பிப்ரவரி 2005 வரையான சாதனை | நிதி ஒதுக்கீடு |
| 1 | ஒருங்கிணைந்த முந்திரி வளர்ச்சித் திட்டம் | 155.200 | 141.847 | 273.320 |
| 2 | ஒருங்கிணைந்த பழப் பயிர்கள் வளர்ச்சித் திட்டம் | 218.000 | 186.389 | 318.350 |
| 3 | ஒருங்கிணைந்த நறுமண சுவைப் பயிர் வளர்ச்சித் திட்டம் | 60.000 | 47.946 | 180.130 |
| 4 | ஒருங்கிணைந்த காய்கறிப் பயிர்கள் வளர்ச்சித் திட்டம் | 219.000 | 191.644 | 310.000 |
| 5 | ஒருங்கிணைந்த மூலிகை மற்றும் வாசனைப் பயிர்கள் வளர்ச்சித் திட்டம் | 52.500 | 48.350 | 52.700 |
| 6 | ஒருங்கிணைந்த கோக்கோ வளர்ச்சித் திட்டம் | 12.000 | 11.190 | 12.000 |
| 7 | வணிக மலரியல் வளர்ச்சித் திட்டம் | 145.820 | 111.200 | 165.000 |
| 8 | காளான் வளர்ச்சித் திட்டம் | 10.000 | 9.500 | 10.000 |
| 9 | தோட்டக்கலை விரிவாக்கத்தில் பிளாஸ்டிக்கின் உபயோகம் | 14.500 | 13.030 | 14.500 |
| 10 | தோட்டக்கலை வளர்ச்சியில் புதுமைத் திட்டங்கள் | 113.900 | 43.455 | 90.000 |
| | மொத்தம் | 1000.920 | 804.471 | 1426.000 |
| | பெரு மொத்தம் (அ+ஆ) | 2679.940 | 2183.684 | 3935.070 |

**9. தோட்டக்கலைத் துறையின் திட்ட செயல்பாடுகள் (2005–2006)**

- உயர் தொழில்நுட்பத் தோட்டக்கலை மற்றும் துல்லிய பண்ணைப் பணிகளுக்கு முக்கியத்துவமளித்தல்.
- நுண்ணீர்ப் பாசனம் மற்றும் நீர்வழி உரமிடுதல்மூலம் பயிர்ப் பரப்பு விரிவாக்கம்.



2005 மார்ச் 31]

- நீர் ஆதாரம் அதிகம் தேவைப்படும் பயிர்களின் பரப்பை நிலைப்படுத்தி வறட்சியைத் தாங்கும் தோட்டக்கலைப் பயிர் சாகுபடிப் பரப்பை அதிகப்படுத்துதல் மற்றும் திறமையான நீர் மேலாண்மைமீது கவனம் செலுத்துதல்.
- தரிசு நில மேம்பாட்டுத் திட்டங்கள்மூலம் தோட்டக்கலைப் பயிர்ப் பரப்பு விரிவாக்கத் திட்டங்கள்.
- அரசு மற்றும் தனியார் அமைப்புகளில் தரமான விதைகள்/ஒட்டு வீரிய நடவுச் செடிகள் உற்பத்தி முறையை வலிமைப்படுத்தல்.
- ஏற்றுமதிக் கண்ணோட்டத்துடன் இயற்கை பண்ணையத்தினை மேம்படுத்துதல்.
- குறிப்பிட்ட பயிர்களுக்கான வேளாண் ஏற்றுமதி மண்டலங்களை அமைத்தல்.
- தனியார் மற்றும் அரசு கூட்டுமுறைப் பங்களிப்பை ஊக்குவித்தல்.
- ஒப்பந்த மற்றும் கூட்டாண்மைப் பண்ணையத்தை மேம்படுத்துதல்.
- விவசாயிகளுக்கு, குறிப்பாகப் பெண் விவசாயிகளுக்கு அதிகாரமளிப்பதை ஊக்குவித்தல்.
- சுற்றுலாவுடன் கூடிய பயிற்சியின்மூலம் தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு அளித்தல்.
- மின் ஆளுமை (e-governance) மற்றும் மனிதவள மேம்பாடு மூலம் விரிவாக்க அலுவலர்களுக்கு அதிக திறன் கொண்ட பயிற்சி அளித்தல்.
- புதிய அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்மூலம் வேளாண் சார்ந்த தொழில்களை மேம்படுத்துதல்.
- அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை மற்றும் அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்பைக் குறைத்தல்.

[2005 மார்ச் 31

## இணைப்பு–1

### அரசு தோட்டக்கலைப் பண்ணைகளின் விவரம்



2005 மார்ச் 31]

| வ. எண் | மாவட்டம் | பெயர் | இருப்பிடம் | பரப்பு (எக்டேர்) |
|---|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | அ.தோ.ப. | ஆனைக்கட்டி | 12.00 |
| 2 | கோயம்புத்தூர் | அ.தோ.ப. | கல்லார் | 8.72 |
| 3 | கோயம்புத்தூர் | அ.தோ.ப. | கண்ணம்பாளையம் | 27.66 |
| 4 | கடலூர் | அ.தோ.ப. | நெய்வேலி | 40.48 |
| 5 | கடலூர் | அ.தோ.ப. | விருத்தாச்சலம் | 10.53 |
| 6 | தருமபுரி | அ.தோ.ப. | திம்மாபுரம் | 9.89 |
| 7 | தருமபுரி | அ.தோ.ப. | ஜீனூர் | 122.38 |
| 8 | திண்டுக்கல் | அ.தோ.ப. | கொடைக்கானல் | 5.16 |
| 9 | திண்டுக்கல் | பிரையண்ட் பூங்கா | கொடைக்கானல் | 8.30 |
| 10 | திண்டுக்கல் | அ.தோ.ப. | தாண்டிக்குடி | 5.45 |
| 11 | திண்டுக்கல் | அ.தோ.ப. | ரெட்டியார்சத்திரம் | 5.33 |
| 12 | திண்டுக்கல் | அ.தோ.ப. | சிறுமலை | 202.47 |
| 13 | காஞ்சிபுரம் | அ.தோ.ப. | ஆத்தூர் | 12.24 |
| 14 | காஞ்சிபுரம் | அ.தோ.ப. | விச்சந்தாங்கல் | 22.96 |
| 15 | காஞ்சிபுரம் | அ.தோ.ப. | மேல்கதிர்பூர் | 42.12 |
| 16 | காஞ்சிபுரம் | அ.தோ.ப. | மேலொட்டிவாக்கம் | 20.36 |
| 17 | கன்னியாகுமரி | அ.தோ.ப. | கன்னியாகுமரி | 12.80 |
| 18 | கன்னியாகுமரி | அ.தோ.ப. | பேச்சிப்பாறை | 6.07 |
| 19 | நாமக்கல் | அ.தோ.ப. | செம்மேடு | 11.62 |
| 20 | நாமக்கல் | அ.தோ.ப. | படசோலை | 28.14 |
| 21 | புதுக்கோட்டை | அ.தோ.ப. | குடுமியான்மலை | 118.68 |
| 22 | புதுக்கோட்டை | மாபெரும் பழப் பண்ணை | வல்லத்திராக் கோட்டை | 521.20 |
| 23 | புதுக்கோட்டை | அ.தோ.ப. | நாட்டுமங்கலம் | 53.02 |
| 24 | சேலம் | அ.தோ.ப. | ஏற்காடு | 10.12 |
| 25 | சேலம் | மாபெரும் பழப் பண்ணை | கருமந்துறை | 419.77 |
| 26 | சேலம் | அ.தோ.ப. | மணியார்குண்டம் | 100.00 |
| 27 | சேலம் | கா.வி.உ.மை. | கருமந்துறை | 5.49 |
| 28 | சேலம் | அ.தோ.ப. | கருமந்துறை | 39.35 |
| 29 | சேலம் | அ.தோ.ப. | முள்ளுவாடி | 48.20 |
| 30 | சேலம் | அ.தோ.ப. | சிறுமலை (அறுநூத்துமலை) | 8.10 |
| 31 | சிவகங்கை | அ.தோ.ப. | தேவக்கோட்டை | 81.20 |
| 32 | சிவகங்கை | அ.தோ.ப. | நேமம் | 38.77 |
| 33 | தஞ்சாவூர் | அ.தோ.ப. | ஆடுதுறை | 8.80 |
| 34 | தஞ்சாவூர் | அ.தோ.ப. | மருங்குளம் | 10.58 |
| 35 | நீலகிரி | அ.தோ.ப. | பர்லியார் | 6.25 |
| 36 | நீலகிரி | அ.தோ.ப. | காட்டேரி | 18.96 |
| 37 | நீலகிரி | அ.தோ.ப. | குன்னூர் | 4.05 |
| 38 | நீலகிரி | பழவியல் நிலையம் | குன்னூர் | 6.52 |
| 39 | நீலகிரி | சிம்ஸ் பூங்கா | குன்னூர் | 12.14 |
| 40 | நீலகிரி | அ.தோ.ப. | தொட்டபெட்டா | 4.00 |
| 41 | நீலகிரி | அ.தோ.ப. | தும்மனட்டி | 9.80 |
| 42 | நீலகிரி | அ.தோ.ப. | விஜயநகரம் | 14.40 |
| 43 | நீலகிரி | அரசு தாவரவியல் பூங்கா | உதகை | 22.00 |
| 44 | நீலகிரி | அ.தோ.ப. | நஞ்சநாடு | 85.18 |
| 45 | நீலகிரி | அ.தோ.ப. | தேவாலா | 80.00 |
| 46 | தேனி | அ.தோ.ப. | பெரியகுளம் | 9.31 |
| 47 | திருவள்ளூர் | அ.தோ.ப. | மாதவரம் | 5.76 |
| 48 | திருவள்ளூர் | அ.தோ.ப. | பிச்சிவாக்கம் | 40.43 |
| 49 | திருநெல்வேலி | அ.தோ.ப. | குற்றாலம் | 14.89 |

| வ. எண் | மாவட்டம் | பெயர் | இருப்பிடம் | பரப்பு (எக்டேர்) |
|---|---|---|---|---|
| 50 | கரூர் | அ.தோ.ப. | முதலைப்பட்டி | 23.96 |
| 51 | வேலூர் | அ.தோ.ப. | தகாக்குப்பம் | 34.40 |
| 52 | வேலூர் | அ.தோ.ப. | கூடப்பட்டு | 10.40 |
| 53 | வேலூர் | அ.தோ.ப. | நவ்லாக் | 84.45 |
| 54 | விருதுநகர் | அ.தோ.ப. | பூவாணி | 9.57 |
| 55 | விருதுநகர் | மாபெரும் பழப் பண்ணை | ஸ்ரீவில்லிப்புத்தூர் | 46.27 |
| | | | மொத்தம் | 2620.70 |

அ.தோ.ப. : அரசு தோட்டக்கலைப் பண்ணை

கா.வி.உ.மை. : காய்கறி விதை உற்பத்தி மையம்



## அத்தியாயம் – 4

## வேளாண்மைப் பொறியியல்

### 1. முன்னுரை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தை இந்திய நாட்டிலேயே அனைத்துத் துறைகளிலும் முதன்மையான மாநிலமாக மாற்ற உறுதி பூண்டு உள்ளார்கள். இதனைக் கருத்தில்கொண்டு, தமிழக அரசு நிலம் மற்றும் நீர் நிர்வாகத்தினை மேம்படுத்த பல்வேறு சிறப்பான தொழில்நுட்பம் வாய்ந்த திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டின் நிலம் மற்றும் நீர்வளங்களைப் பாதுகாத்தல், மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல் எனும் பணிகளில் வேளாண்மைப் பொறியியல் துறை ஈடுபட்டுள்ளது. வேளாண் உற்பத்தியைத் தளராமல் தொடர்ந்து அதிகரிப்பதற்கான பங்களிப்பில் "நீர்வடிப்பகுதி மேலாண்மை'' மற்றும் "பாசனநீர் மேலாண்மை" ஆகியன இத்துறையின் இரு முக்கியக் குறிக்கோள்கள் ஆகும். மழைநீர் சேகரிப்பு, துல்லிய மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பங்களின் அடிப்படையில் பயிர் வளர்ப்பு, புவியியல் தகவல் தொழில்நுட்பங்கள் மூலம் கண்காணித்தல் போன்ற பல்வேறு தொழில்நுட்பங்களை ஒருங்கிணைத்து, ஒவ்வொரு மழைத் துளியையும் சேமித்தல், குறைந்த நீரில் கூடுதல் சாகுபடி, வேளாண்மைக்குத் தேவையான பாசன நீரை உறுதி செய்தல் என்ற இலக்குகளை நெருங்கிட வேளாண்மைப் பொறியியல் துறை செயல்படுகிறது.

வேளாண்மைப் பொறியியல் துறை பல்வேறு மத்திய, மாநில மற்றும் வெளிநாட்டு உதவியுடன் இயங்கும் திட்டங்களைப் பின்வரும் குறிக்கோளுடன் செயல்படுத்தி வருகிறது:

- நீர் வடிப்பகுதிகளில், முக்கியமாக மானாவாரி நிலங்கள் அதிகமாக உள்ள பகுதிகளில், மண் அரிப்பைத் தடுத்தல், மண்ணில் ஈரப்பதத்தைக் காத்தல் மற்றும் மழை நீர் சேகரிப்புக் கட்டமைப்புகளை உருவாக்குதல்.
- நதிப் பள்ளத்தாக்குகளின் நீர்ப்பிடிப்புப் பகுதி, மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகள் மற்றும் மலைப் பகுதிகள்/ பழங்குடியினர் வாழும் பகுதிகளில் முறையான நில உபயோக முறைகளை ஊக்குவித்தும் மண் அரிப்பைத் தடுத்தும் மண்ணின் வளத்தை மேம்படுத்துதல்.

- பயன்பாட்டில் இல்லாத மற்றும் தரம் குன்றிய நிலங்களை நிலவியல் தகவல் முறை போன்ற உயர்ந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி முறையான நிலப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல்.
- பாசனப் பகுதிகளில் நீர் உபயோகத்தினை மேம்படுத்தியும், சமநீர்ப்பங்கீட்டினை உறுதி செய்தும் நீடித்த நிலையான நீர் நிர்வாகத்திற்கு விவசாய அமைப்புகளை உருவாக்குதல்.
- நிலத்தடி நீர்வளம் தொடர்ந்து நிலையாக உள்ள இடங்களில் நிலத்தடி நீரை வெளிக்கொண்டு வந்து புதிய பாசன வசதி உருவாக்கி நீர்ப்பாசனத்தை நிலைப்படுத்துதல்.
- நீர் உபயோகத்திறனை மேம்படுத்திடும் வகையில், சொட்டு மற்றும் தெளிப்பு நீர்ப்பாசனம் அமைத்தும் ஒருங்கிணைந்த பண்ணையம் முறையில் துல்லிய உயர் தொழில்நுட்ப பண்ணைய தொழில்நுட்பத்தைப் பரவச் செய்தல்.
- நிலம் சமன்படுத்துதல், நிலம் சீரமைத்தல், உழவுப் பணிகள், நிலம் பண்படுத்துதல், சேற்றுழவு, கதிர் அறுவடை போன்ற பல்வேறு வேளாண்மைச் சாகுபடிப் பணிகளை குறித்த காலத்தில் மேற்கொள்ள ஏதுவாக வேளாண்மையை இயந்திரமயமாக்கல்.
- தற்பொழுது செயல்பட்டுவரும் மின் இறவைகளின் மின் திறனை அதிகப்படுத்தி, சாகுபடிச் செலவினத்தைக் குறைத்தல் மற்றும் மின்சக்தி வீணாவதைத் தடுத்தல்.
- மழைநீர் சேகரிப்பை ஊக்குவித்து நிலத்தடி நீர்வளம் பெருகிட உதவுதல்.

## 2. மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு

### 2.1. நதிப் பள்ளத்தாக்குத் திட்டங்களின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு

நீர்த்தேக்கங்களில் வண்டல் படிவதால் அவற்றின் கொள்ளளவு குறைந்து பாசனப் பரப்பு, மின் உற்பத்தி போன்றவை பாதிக்கப்பட்டு, நீர்த்தேக்கங்களின் ஆயுட்காலம் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மண் அரிமானம் மற்றும் முறையற்ற



நிலப் பயன்பாடு ஆகியவற்றால் நீர்த்தேக்கங்களில் வண்டல் சேர்கிறது. நீர்த் தேக்கங்களில் வண்டல் சேர்வதைக் குறைத்திட, தமிழகத்திலுள்ள நதிப் பள்ளத்தாக்கு நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் செயலாக்கப்பட்டு வருகின்றன. அகில இந்திய மண் மற்றும் நிலப் பயன்பாட்டு அளவை நிறுவனம் கண்டறிந்து முன்னுரிமைப்படுத்திய மற்றும் மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ள நீர்வடிப் பகுதிகளில், பணிகள் ஒவ்வொரு நீர்வடிப் பகுதிவாரியாக மேற்கொள்ளப்படுகின்றன. மழை அளவு, மண்ணரிப்பு நிலை, மண்ணின் உட்கூறு, சரிவு, இட அமைப்பு போன்றவற்றின் அடிப்படையில் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. 2004–2005 ஆம் ஆண்டில் ரூ. 734.41 இலட்சம் செலவில் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களிலுள்ள தென்பெண்ணை மற்றும் மேட்டூர் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் 5,965 எக்டேர் பரப்பில் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 2005–2006 ஆம் ஆண்டில் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள தென்பெண்ணை மற்றும் மேட்டூர் ஆற்று நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் 6,200 எக்டேர் பரப்பில் ரூ.1,000.00 இலட்சம் செலவில் பணிகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.2. பழங்குடியினர் வாழும் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு

பழங்குடி இனத்தைச் சேர்ந்த விவசாயிகளின் பொருளாதார நிலையை வறுமைக் கோட்டிற்கு மேல் கொண்டு வருவதே இத்திட்டத்தின் முக்கியக் குறிக்கோளாகும். மண்வளப் பாதுகாப்பு மூலம் மண்ணின் ஈரத்தன்மையைப் பெருக்கி, நிலப் பயன்பாட்டைச் சீரமைத்து நில உற்பத்தித் திறனைப் பெருக்க திட்டமிடப்பட்டுள்ளது. பல துறைகளை இணைத்து பழங்குடியின மக்கள் வாழும் பகுதிகளை ஒருங்கிணைத்து முன்னேற்றம் காண வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் உள்ள ஜவ்வாது மலைப் பகுதிகளிலும், சேலம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள கல்ராயன் மலைப் பகுதிகளிலும், சேலம் மாவட்டத்திலுள்ள சேர்வராயன் மலைப் பகுதிகளிலும் தருமபுரி மாவட்டத்தில் உள்ள சித்தேரி மலைப் பகுதிகளிலும், நாமக்கல் மாவட்டத்தில் உள்ள கொல்லி மலைப் பகுதிகளிலும், திருச்சி மாவட்டம் பச்சைமலைப் பகுதிகளிலும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. அரசின் செலவில் இப்பழங்குடியின மக்கள் பகுதிகளில் நிலச் சமன்பாடு, சம உயர கல் வரப்புகள், தாவர வேலிகள் மற்றும் தடுப்பு அணைகள் அமைக்கப்படுகின்றன. இத்திட்டம், அப்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவும், சீரமைத்த நிலங்களில் விவசாயம்

செய்யவும் வழி வகுக்கிறது. 2004–2005 ஆம் ஆண்டில் 699 எக்டேர் நிலப்பரப்பில் ரூபாய் 92.90 இலட்சம் செலவில் இத்திட்டத்தின்கீழ் பணிகளைச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. 2005–2006 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் பழங்குடியினர் நிலங்களில் 600 எக்டேர் பரப்பில் ரூபாய் 92.90 இலட்சம் செலவில் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

**2.3. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு**

நீலகிரி மாவட்டத்தில், இத்திட்டம் எல்லாவிதப் பயிர்களையும் பயிரிடும் விவசாயிகளுக்குப் பயன்தரும் வகையில் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி முன்னேற்ற திட்டமாக செயல்படுத்தப்படுகிறது. நீலகிரி மாவட்டம் 75 நீர்வடிப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த நீர்வடிப் பகுதிகளில், மிகவும் பாதிக்கப்பட்ட முன்னுரிமை உள்ள நீர்வடிப் பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மண்வளப் பாதுகாப்புப் பணிகளுடன் நிலச் சரிவு தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மண்வளப் பாதுகாப்புப் பணிகள் இன்று 100% மானியத்தில் செயல்படுத்தப்படுகின்றன. தனியார் நிலங்களில் செய்யப்படும் பணிகளுக்குப் பயனாளிகளின் பங்காக 10% பெறப்படுகிறது. சமுதாயப் பணிகளுக்கும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இன உழவர்களின் பட்டா நிலங்களில் செயல்படுத்தப்படும் பணிகளுக்கும் 5% பயனாளிகளின் பங்காகப் பெறப்படுகிறது. நிலச்சரிவு தடுப்புப் பணிகளுக்கு 100% மானியம் வழங்கப்படுகிறது. 2004–2005 ஆம் ஆண்டில் ரூ.358.01 இலட்சம் செலவில், 649 எக்டேர் பரப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2005–2006 ஆம் ஆண்டில் ரூ. 560.31 இலட்சம் செலவில் 520.50 எக்டேர் பரப்பில் இப்பணிகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

**2.4. மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு**

மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தில், மண்வளப் பாதுகாப்பு ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது. கோயம்புத்தூர், ஈரோடு, திண்டுக்கல், தேனி, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் இத்திட்டத்தின்கீழ் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் செயலாக்கப்படுகின்றன. 2004–2005 ஆம் ஆண்டில் ரூ.327.36 இலட்சம் செலவில் 645 எக்டேர் நிலப்பரப்பில் எட்டு மாவட்டங்களில்



இத்திட்டத்தின்கீழ் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 2005–2006 ஆம் ஆண்டில் எட்டு மாவட்டங்களில் 741 எக்டேர் பரப்பில் ரூ.347.75 இலட்சம் செலவில் பணிகளைச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**2.5. பண்ணைக் குட்டைகள் அமைத்தல் மற்றும் வறண்ட கிணறுகளைச் சீரமைத்து புத்துயிர் ஊட்டுதல் போன்ற மழைநீர் சேகரிப்புத் திட்டங்கள் மூலம் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு**

அண்மைக்காலமாக, கிணற்றுப் பாசனம்மூலம் பயன்பெறும் பரப்பு அதிகமாகி வருகிறது. மாநிலத்தில் பல பகுதிகளில் நிலத்தடி நீரை மிக அதிகமாகப் பயன்படுத்துவதால், நிலத்தடி நீர் மட்டம் இறவை இயந்திரங்களின் இழுவைச் சக்திக்கும் மிகவும் கீழே குறைந்து கொண்டே வருகிறது. சில பகுதிகளில் 1,000 அடிக்கும் கீழே குழாய்க் கிணறு அமைப்பதால், நிலத்தடி நீர் எடுப்பது சுரங்கம் அமைப்பது போல் உள்ளது. கிணற்றுப் பாசனப் பகுதிகளில் நிலத்தடி நீர் சுரண்டப்படுவதால், சிறப்பான மழைநீர் சேகரிப்பதற்கும் மற்றும் நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்துவதற்கும் நுட்பங்கள் தேவைப்படுகின்றன. மழை நீர் சேகரிப்புப் பணிகளை ஊக்குவிப்பதன் மூலம் அரசு வறட்சிக்கு இலக்காகும் வேளாண்மையைக் காப்பாற்றி வருகிறது. பண்ணைக்குட்டைகள் அமைத்தல், பொய்த்துப்போன, வறண்ட, பாழடைந்த கிணறுகளைச் சீரமைத்தல் ஆகிய பணிகளை அரசு மேற்கொண்டு வருகிறது. 2003–2004 ஆம் ஆண்டில் 8,833 பண்ணைக் குட்டைகள் ரூ.2,,564.29 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டன. மேலும் 2,093 வறண்ட கிணறுகளை ரூ. 264.37 இலட்சம் செலவில் புதுப்பித்து மழைநீர் சேகரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 2005–2006 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ள ரூ.10.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் நீர்வடிப் பகுதி அடிப்படையில் மழைநீர் சேகரிப்புப் பணிகள் மற்றும் வடிகால் மேலாண்மைப் பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலம் திட்டப் பகுதிகளில் பல்வேறு மேம்பாட்டுப் பணிகளையும் தனிநபர் பயன்பெறும் வகையிலான பணிகளையும் ஒருங்கிணைத்து நீர்வடிப் பகுதிகள் பயன்பெறும் வகையில் திட்டம் வடிவமைக்கப்படவுள்ளது. திறம்பட்ட கண்காணிப்பு மற்றும் மதிப்பாய்வுப் பணிகளை மேற்கொள்ளவும் இத்திட்டத்தில் வழிவகை செய்யப்படவுள்ளது. 2005–2006 ஆம் ஆண்டில் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள், நபார்டு வங்கியின்

ஊரக கட்டமைப்பு மேம்பாட்டு நிதியுதவியுடன் செயல்படுத்தப்படவுள்ள மழைநீர் சேகரிப்பு திட்டங்களின்கீழ் மேற்கொள்ள தொடர்ந்து முக்கியத்துவம் வழங்கப்படும். பண்ணைக்குட்டைகள், தடுப்பணைகள் மற்றும் வறண்ட கிணறுகளைச் சீரமைத்துப் புதுப்பித்தல் போன்ற மழைநீர் சேகரிப்பு கட்டுமானப் பணிகளை சுமார் 10,000 விவசாயிகள் பயன்பெறும் வகையில் நபார்டு வங்கியின் ஊரக கட்டமைப்பு மேம்பாட்டு நிதியுதவியுடன் 2005–2006 ஆம் ஆண்டில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**2.6. நாகப்பட்டினம், வேதாரண்யம் பகுதிகளில் கடலோர மணல் மேடிட்ட நிலங்கள் மற்றும் உவர் நில சீரமைப்புக்கான முன்னோடித் திட்டம்**

நாகை மாவட்டம் மணல் மேடிட்ட கடலோரப் பகுதிகளில் நிலத்தடியில் உவர் நீருக்கு மேலே நல்ல நீர் உள்ளது. வேதாரண்யம் கால்வாய்ப் பகுதிகளில் கடல்நீர் புகுந்துள்ளது. நாகை மற்றும் வேதாரண்யம் கடலோரப் பகுதிகள் நல்ல இயற்கை வளம் கொண்டுள்ளது. இப்பகுதிகள், கடல் நீர் நிலத்தடி நீரில் புகுவதாலும், தட்ப வெட்ப நிலையாலும் பாதிக்கப்பட்டுள்ளது. அறிவியல் முறைப்படி, மணல் மேடிட்ட நிலங்களையும் கடலோர சமவெளிப் பகுதிகளையும் உவர் நிலம் மற்றும் சதுப்பு நிலங்களையும் மேம்படுத்துவதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். விளைச்சலைப் பெருக்குவதற்காக மத்திய அரசு மற்றும் விவசாயிகளின் பங்கேற்புடன் வேளாண்மைப் பொறியியல் துறைமூலம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஆலோசனையுடன் மூன்று வருட முன்னோடித் திட்டமாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் மூன்று ஆண்டுகளில் சுமார் 2,000 எக்டேர் பரப்பில் பணிகள் மேற்கொள்ள மத்திய அரசு, அரசின் பங்களிப்பாக ரூ.89.92 இலட்சம் மற்றும் பயனாளிகளின் பங்காக ரூ.30.08 இலட்சம் ஆக மொத்தம் ரூ.1.20 கோடிக்கு ஒப்புதல் அளித்துள்ளது. 2003–2004 ஆம் ஆண்டில் முன்னோடித் திட்டமாக 792 எக்டேர் பரப்பில் ரூ.31.18 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. 2004–2005 ஆம் ஆண்டில் ரூ.34.217 இலட்சம் செலவில் 810 எக்டேர் பரப்பில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 2005–2006 ஆம் ஆண்டில் சுமார் 398 எக்டேர் பரப்பில் ரூ.24.73 இலட்சம் செலவில் பணிகள் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.



**2.7. மத்திய அரசு உதவியுடன் செயல்படுத்தப்படும் களர் நிலச் சீராக்கத் திட்டம்**

தமிழ்நாட்டிலுள்ள களர் நிலங்களின் உற்பத்தித் திறனைப் பெருக்க, மத்திய அரசின் நிதி உதவியுடன் களர் நிலச் சீராக்கத் திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. மத்திய அரசு, 2003–2004 மற்றும் 2004–2005 ஆம் ஆண்டுகளில் 5,000 எக்டேர் நிலப்பரப்பில் ரூ.690 இலட்சத்திற்கு மிகாமல் இத்திட்டத்தினை செயலாக்க அனுமதி வழங்கியுள்ளது. 2003–2004 ஆம் ஆண்டில் 929.24 எக்டேர் களர் நிலங்கள் ரூ.19.26 இலட்சம் செலவில் சீரமைக்கப்பட்டுள்ளது. 2004–2005 ஆம் ஆண்டில் 1,527 எக்டேர் பரப்பில் களர் நிலங்களை ரூ.50 இலட்சம் செலவில் இத்திட்டத்தின்கீழ் சீரமைக்க பணிகள் நடைபெற்று வருகின்றன. 2005–2006 ஆம் ஆண்டில் 3,054 எக்டேர் பரப்பில் ரூபாய் 100 இலட்சம் செலவில் இத்திட்டத்தின்கீழ் பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

**3. தொலை உணர்வு**

**3.1. தலைமைப் பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை, சென்னை அலுவலகத்தில் தொலை உணர்வு மற்றும் நிலவியல் தகவல் ஆராய்ச்சி மையம்**

நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் தரிசு நில மேம்பாட்டுத் திட்டங்களுக்குத் தேவையான அனைத்துத் தகவல்களையும் வேளாண் பொறியியல் துறையின் தொலை உணர்வு மையம் வழங்கி வருகிறது. நீர்வடிப் பகுதியிலுள்ள புவியியல், உள்கட்டமைப்பு, நீர்வடிப் பகுதிக் குறியீடுகள், மண் அரிமானம், நிலப் பயன்பாடு போன்ற தகவல்களின் அடிப்படையில், மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தில் தகுதி நிலை அறிக்கைகள் ஒவ்வொரு ஆண்டும் தயாரிக்கப்பட்டு வருகின்றன. தகுதி நிலை அறிக்கைகள் வழங்கும் முன்னுரிமை அடிப்படையில் மண்வளப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ள நீர்வடிப் பகுதிகள் தேர்வு செய்யப்படுகின்றன. அண்ணா பல்கலைக்கழகத்தினால் இம்மையம் ஆராய்ச்சி மையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. முனைவர் பட்டம் மற்றும் முதறிவியல் பட்டப் படிப்பினை துறைப் பணியாளர்கள் புறப்பதிவு அடிப்படையில் இம்மையத்தின் மூலமாக மேற்கொள்ளலாம். அண்ணா பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சிப் பணிகளையும் இம்மையம் வழிகாட்டிடலாம். மாநில நிலப் பயன்பாட்டுக் குழுமம் எல்லா மாவட்டங்களின் நீர்வடிப் பகுதிகளின் வரைபடத் தொகுப்பு மற்றும்

மண்ணின் வரைபடத் தொகுப்பு தயாரிக்கும் பணியை வேளாண்மைப் பொறியியல் துறைக்கு வழங்கியுள்ளது. இவ் வரைபடங்கள் மானாவாரி நிலங்களுக்கான தேசிய நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் தரிசு நில மேம்பாட்டுத் திட்டங்களுக்கும் பயன்படுத்தப்படுகின்றன.

### 3.2. மாவட்ட நிலவியல் தகவல் மையம்

தேனி மற்றும் சேலத்தில் நிலவியல் தகவல் மையம் உருவாக்கப்பட்டுள்ளது. நீர்வடிப் பகுதியிலுள்ள அனைத்து நில வளங்களைப் பற்றிய விவரங்களைத் தயாரிக்கவும் நுண் நீர்வடிப் பகுதிகளில் செய்யப்பட்ட மேம்பாட்டுப் பணிகள் பற்றிய விவரங்களைச் சேர்க்கவும் நிலவியல் தகவலமைப்பு மென்பொருள் பயன்படுகிறது. நதிப் பள்ளத்தாக்குத் திட்டம் ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம், வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம், மானாவாரிப் பகுதிக்கான தேசிய நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகிய நீர்வடிப் பகுதி திட்டங்கள் தமிழ்நாடு முழுவதும் இத்துறையில் செயல்படுத்தப்படுகின்றன. நீர்வடிப் பகுதிகளைப் பற்றிய பல்வேறு தகவல்களை 1:10,000 அளவில், நிலவியல் தகவல் அமைப்பு ரீதியாக உருவாக்கிட திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு நுண் நீர்வடிப் பகுதிக்கும் அடிப்படை அளவிலான நில வரம்புகள், புல எண், நில உபயோகம், மண் வகை, பயிர் வகை விவரங்கள் வரைபடங்களாகத் தொகுக்கப்பட உள்ளன. நுண் நீர்வடிப் பகுதி அளவில் மண் அரிப்பு மற்றும் மழைநீர் வெளியேற்றம் தொகுக்கப்பட்டு மண்வளப் பாதுகாப்பு பணிகள் வடிவமைக்கப்படும். இதுபோன்ற புவியியல் தகவல் மையம் திருச்சியில் 2005–2006 ஆம் ஆண்டில் ஏற்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

### 4. நுண்ணிய நீர்ப்பாசனம்

தமிழ்நாட்டில், சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் தெளிப்பு நீர்ப்பாசனம் ஆகிய நீர்ப்பாசன முறைகள் வேளாண்மைப் பொறியியல் துறையினால் 1985–1986 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழ்நாட்டில் 51.70 விழுக்காட்டுப் பாசன நிலங்கள் ஆற்றுப் பாசனம், ஏரிப் பாசனம் மற்றும் கிணற்றுப் பாசனம் மூலம் பயன்பெறுகின்றன. கிணற்றுப் பாசனத்தின் நெருக்கடியைக் குறைக்கவும், பாசன நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தவும் நுண்ணிய நீர்ப்பாசன முறைகளான சொட்டு மற்றும் தெளிப்பு நீர்ப்பாசனங்களுக்கு 2004–2005 ஆம் ஆண்டில் ரூ.51.22 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் அனைத்து விவசாயிகளுக்கும் அனைத்துப் பயிர்களுக்கும் தொடர்ந்து





செயல்படுத்தப்படும். 2005–2006 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை
ரூ.17 கோடி மதிப்பீட்டில் தொடர்ந்து செயல்படுத்திட
திட்டமிடப்பட்டுள்ளது. அரசு விதைப் பண்ணையில் சொட்டுநீர் மற்றும்
தெளிப்புநீர் பாசனத்தை 300 எக்டேர் பரப்பளவில் ஜெட்ரோபா, ஸ்வீட்
சொர்க்கம் மற்றும் சுகர்பீட் பயிரிட திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

### 5. சிறுபாசனம்

### 5.1. குழாய்க் கிணறுத் திட்டம்

நீர்ப்பாசன வசதிகளை உருவாக்குதல், தற்போதுள்ள பாசனப்
பரப்பை நிலைப்படுத்துதல் மற்றும் நிலத்தடி நீரை வெளிக்கொணர்ந்து
நிலப்பரப்பு நீரையும் இணைத்து பாசனத்திற்கு உபயோகிக்க தூண்டுதல்
போன்றவை சிறுபாசனத் திட்டத்தின் நோக்கமாகும். தமிழ்நாட்டின்
பாசன நீர் ஆதாரங்கள் முழுவதும் பயன்படுத்தப்பட்ட நிலையில்
பாசனத்திற்கு நிலத்தடி நீரையே சார்ந்திருக்க வேண்டிய நிலை
ஏற்பட்டுள்ளது. புதிய குழாய்க் கிணறுகள் அமைத்தல், வறண்டு
போன கிணறுகளைப் புனரமைத்தல் போன்ற பணிகள்
இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ்
நில நீர் ஆய்வுக் கருவி மற்றும் மின்னியல் ஆய்வுக் கருவி ஆகியன
உழவர்களுக்கு, நீர் ஊற்று இருக்குமிடம், கிணறு அமைக்கும் இடம்
முதலியன கண்டறிய வழங்கப்படுகின்றன. விசைத்துளைக் கருவி,
சிறுவிசைத்துளைக் கருவி, கைத்துளைக் கருவி, பாறை வெடிக் கருவி,
நீள்துளைக் கருவி மற்றும் காற்றழுத்தக் கருவி போன்ற இயந்திரங்கள்,
விவசாயிகளுக்கு வாடகைக்கு அளிக்கப்படுகின்றன. இப்பணிகளுக்காக
இத்துறையிடம் பல்வகையான சிறுபாசன இயந்திரங்கள் உள்ளன.
2004–2005 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 4,000 குழாய்க் கிணறுகள்
அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2005–2006 ஆம்
ஆண்டில் நிலத்தடி நீர்வளம் உள்ள இடங்களில் இத்திட்டம்
தொடரப்பட்டு 3,500 குழாய்க் கிணறுகள் அமைக்கப்படும்.

### 5.2. வேளாண்மைக்குப் பயன்படும் விசை இறைப்பான்களின் திறனை மேம்படுத்தும் திட்டம்

வேளாண்மைக்குப் பயன்படுத்தப்படும் விசை இறைப்பான்கள் பழமையானவையாக இருப்பதாலும், தேவைக்கு அதிகமான சக்திவாய்ந்த பம்புகள் பயன்படுத்தப்படுவதாலும், மின் சக்திப் பயன்பாட்டுத் திறன் மிகக் குறைவாக உள்ளது. இதனால் இவ்விசை

இறைப்பான்கள் குதிரை சக்திக்குக் குறைவான தண்ணீரையே வெளிக் கொண்டு வருகின்றன. இதைத்தவிர, மின்சாரத் தொடர்புகள், சுவிட்சுகள், இதர சாதனங்கள் முறைப்படி அமைக்கப்படாததாலும் மின்சாரம் அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது.

மின்சாரப் பயன்பாட்டுத் திறனை உயர்த்திடும் வகையில்

அ. பழைய விசை இறைப்பான்கள் செட்டுகளுக்குப் பதிலாக இந்தியத் தரக்கட்டுப்பாட்டு நிறுவனத்தால் தரம் உறுதியிடப்பட்ட புதிய தொழில் நுட்பமுள்ள விசை இறைப்பான்களை அமைத்தல்.

ஆ. உரிய மின்சாரத் தொடர்புகள், சாதனங்கள், நில மின் கம்பி அமைத்தல்

இ. கிணற்றைச் சுற்றி நீர் சேகரிப்பு மேற்கொண்டு நிலத்தடி நீர் வளத்தை அதிகரித்தல்

ஈ. சொட்டு நீர்ப்பாசனம் அமைத்து, நீர்த் தேவையைக் குறைத்து, மின்சாரப் பயன்பாட்டைக் குறைத்திடுதல்.

உ. நிலத்தடி நீர்ப் பயன்பாட்டை 30 விழுக்காடு குறைத்திடுதல்

ஊ. உர நிர்வாகம் மற்றும் களைக் கொல்லி நிர்வாகத்தைச் சொட்டு நீர்ப்பாசனத்துடன் இணைத்து விவசாயிகள் கூடுதல் வருவாயை எட்டச் செய்தல்.

எ. ஒருங்கிணைந்த பண்ணையம் மூலம், திருத்திய பயிர் சாகுபடி முறைகளைக் கையாண்டு மின்சாரச் செலவு, நீர்ப் பயன்பாடு, உரம் மற்றும் களைக்கொல்லி பயன்பாட்டைக் குறைத்து இலாபத்தை அதிகரித்தல்.

மேற்கண்ட வகையில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில், நிலத்தடி நீர்வளம் குன்றிய கருப்பு மற்றும் சாம்பல் வட்டாரங்களில் விசை இறைப்பான்களின் திறனை மேம்படுத்தும் இத்திட்டத்தை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டது. இப்பணிகளின் முன்னோடித் திட்டமாக 2003–2004 ஆம் ஆண்டில் தேனி, கோயம்புத்தூர், விழுப்புரம் மாவட்டங்களில் மூன்று மின்பிரிவுகள் பகுதிகளில் இத்திட்டம் தொடங்கப்பட்டு, இதுவரை 34 விசை இறைப்பான்களின் உபயோகிக்கும் திறன் ரூ.11.12 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளது. நடப்பாண்டில், 20,000 விசை



இறைப்பான்களின் திறனை ரூ.10.50 கோடி செலவில் மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. 2005–2006 ஆம் ஆண்டிலும் இத்திட்டத்தினைத் தொடர்ந்து செயல்படுத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 6. பாசன நீர் மேலாண்மை – பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (மைய மாநில அரசு பகிர்ந்து செயல்படுத்தும் திட்டம்)

### 6.1. பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

மத்திய அரசின் நிதியுதவியுடன் பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், மத்திய மற்றும் மாநில அரசுகளின் சமப் பங்கீடு அடிப்படையில் (50:50) வேளாண்மைப் பொறியியல் துறைமூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்சமயம் காவிரிப் பாசனப் பகுதி, பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம், தாமிரபரணி நீர்த்தேக்கத் திட்டம், பாலாறு – பொரந்தலாறு திட்டம், கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திட்டம், கடானா, ராமாநதி நீர்ப் பாசனத் திட்டம், நம்பியாறு ஆற்றுப்படுகைத் திட்டம், பச்சையாறு ஆற்றுப்படுகைத் திட்டம், மணிமுத்தாறு நீர்ப் பாசனத் திட்டம், ஆனைமடுவு திட்டம், சின்னாறு நீர்த்தேக்கத் திட்டம் மற்றும் மருதாநதி திட்டம் முதலிய திட்டங்கள் செயலாக்கப்படுகின்றன. கீழ்பவானி திட்டம், கம்பம் பள்ளத்தாக்குத் திட்டம், பெரியாறு வைகை திட்டம், சாத்தனூர் நீர்த்தேக்கத் திட்டம் அமராவதி நீர்த்தேக்கத் திட்டம், கோதையாறு சித்தாறு பட்டிணங்கால் திட்டம் மற்றும் தொப்பையாறு திட்டம் முதலியன முடிவடைந்துள்ளன. மீதமுள்ள திட்டங்கள், மத்திய அரசு ஒப்பளித்துள்ள கால அளவிற்குள் முடிவடையும்.

பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் கீழ்க்காணும் ஆறு உட்கூறுகள் (Components) உள்ளன.

அ. புல வாய்க்கால்கள் அமைத்தல்

ஆ. சுழற்சி முறை நீர்ப் பாசனம்

இ. புல வடிகால்கள் அமைத்தல்

ஈ. நீர்த் தேங்கும் பகுதி, களர் மற்றும் உவர் நிலப்பகுதிகளை மேம்படுத்துதல்

உ. விவசாயிகள் பங்கேற்புடன் பாசன மேலாண்மை

ஊ. மேலாண்மை மானியம்

மதகு (Sluice)-க்குக்கீழ் பாசனம் பெறும் நிலங்களுக்குப் பாசன நீர் மேலாண்மைக் கொள்கையை வேளாண்மைப் பொறியியல் துறை வகுத்துள்ளது. வேளாண் உற்பத்தியில் மதகுக்குக்கீழ் பாசனம் பெறும் விவசாயிகளின் பட்டா நிலங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. எனவே, பயிர் உற்பத்தித் திறனை அதிகரிக்க, உகந்த நீர் அளவைப் பயன்படுத்தும் நீர் மேலாண்மையைச் செயல்படுத்துவது அவசியமாகிறது.

### அ. புல வாய்க்கால்கள் அமைத்தல்

தலை மடை விவசாயிகளின் தேவைகளை நிறைவு செய்வதோடு அவர்களின் குறுக்கீடு இல்லாமல் கடைமடை விவசாயிகளுக்குப் பாசன நீர் வழங்கவும் பண்ணை மேம்பாட்டுப் பணிகள் செயலாக்கப்படுகின்றன. ஒவ்வொரு மதகின் மூலம் பாசனம் பெறும் அனைத்து விவசாயிகளுக்கும் இதன்மூலம் பாசன நீர் சமமாகப் பங்கிட்டு அளிக்கப்படுகிறது. உகந்த நீர் வழங்கும் கோட்பாட்டின் மூலம் நீர் பங்கீடு செயலாக்கப்படுகிறது. காவிரிப் பாசனப் பகுதி உள்ளிட்ட அனைத்துப் பாசனப் பகுதிகளிலும் ஒரு எக்டேருக்கு ரூ.10,000/- வீதம் பண்ணை மேம்பாட்டுப் பணிகள் செயலாக்கப்படுகின்றன. காவிரிப் பாசனப் பகுதியின் பழைய அணைக்கட்டுப் பகுதியில் எக்டேருக்கு ரூ.4,400/- வீதம் புல வாய்க்கால் அமைத்தல் பணிகள் செயலாக்கப்படுகின்றன. 10.97 இலட்சம் எக்டேர் பரப்பில் உள்ள பாசனப் பகுதிகளில், 31-03-2004 வரை, 12 பாசனப் பகுதித் திட்டங்களில் ஏறத்தாழ 9.87 இலட்சம் எக்டேர் நிலப்பரப்பில் புல வாய்க்கால் அமைத்தல் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 2004-2005 ஆம் ஆண்டில் 25,695 எக்டேர் பரப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2005-2006 ஆம் ஆண்டிலும் இப்பணிகள் தொடர்ந்து செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

### ஆ. புல வடிகால்கள் அமைத்தல்

பாசனப் பகுதியில் அதிகமாக தேங்கும் பாசன நீரை வெளியேற்றுவதற்காக வயல்களிலிருந்து பொது வடிகால்கள் வரை புல வடிகால்கள் அமைக்கப்படுகின்றன. இந்த இனத்தின்கீழ் மண் வேலை, சாலை குறுக்குப் பாலங்கள் அமைத்தல் மற்றும் மண் அரிப்பைத் தடுக்க நீர்வீழ் அமைப்புகள் உருவாக்குதல் போன்ற அமைப்புகளுக்கென அலகுத் தொகையாக எக்டேருக்கு ரூ.4,000/- என்ற அளவில் தொகை செலவிடப்படுகிறது.



### இ. நீர்தேங்கும் பகுதிகள், களர் மற்றும் உவர் நிலப்பகுதிகளைச் சீர்படுத்துதல்

பாசனப் பரப்பில் உள்ள நீர்தேங்குதல், களர் மற்றும் உவர் நிலப் பகுதிகளைக் கண்டறிந்து அவற்றைச் சீர்படுத்தும் பணிகள் இந்த இனத்தின்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. தற்சமயம் இப்பணிகள் தாமிரபரணி ஆற்றுப் படுகைத் திட்டம் மற்றும் கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திட்டம் ஆகியவற்றில் அலகுத் தொகையாக எக்டேருக்கு ரூ.15,000/- என்ற அளவில் செலவு மேற்கொண்டு செயலாக்கப்படுகிறது.

### ஈ. சுழற்சி முறை நீர்ப்பாசனம்

சுழற்சி முறை நீர்ப்பாசனம் அல்லது வாரபந்தி என்பது, குறிப்பிட்ட தேதியில், குறிப்பிட்ட நேரத்தில், விவசாயிகளின் நிலப்பரப்பிற்கு ஏற்ப நீரைப் பகிர்ந்து பாசனம் செய்வது ஆகும். இந்தச் சுழற்சி முறைப் பாசனத்திற்கான கால அட்டவணை, வேளாண் பொறியியல் துறை மூலம் பண்ணை மேம்பாட்டுப் பணிகள் முடிவுற்று, விவசாயிகளிடம் ஒப்படைப்பு செய்தபின் தயாரித்து அளிக்கப்படுகிறது. 1984-85 ஆம் ஆண்டில், கீழ்பவானித் திட்டம், காவிரிப் பாசனப் பகுதித் திட்டம் மற்றும் பெரியாறு வைகை பாசனத் திட்டம் ஆகிய பகுதிகளில் முதன்முதலாக நீர் சுழற்சி முறைப் பாசனம் அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழகத்தில் 31-3-2004 வரை 12 பாசனப் பகுதி திட்டங்களின் மூலம் 8.92 இலட்சம் எக்டேர் நிலப்பரப்பில், சுழற்சி முறை நீர்ப்பாசனம் நிறைவேற்றப்பட்டுள்ளது. 2004-2005 ஆம் ஆண்டில் 52,750 எக்டேர் பரப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2005-2006 ஆம் ஆண்டிலும் இப்பணிகள் தொடர்ந்து செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

### உ. விவசாயிகள் பங்கேற்புடன் பாசன மேலாண்மை

பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்களைச் செயலாக்குவதற்கு விவசாயிகளின் பங்கேற்பு முக்கியமானது. பயிர்களின் தேவைக்கேற்ப, சரியான அளவு நீர் பகிர்ந்தளிக்கப்பட, விவசாயிகள் பங்கேற்பு அவசியம். இப்பணியில் கடந்த 20 ஆண்டுகளாக வேளாண் பொறியியல் துறை மிகவும் தீவிரமாக இயங்கி வருகிறது. இதன் மூலம் துறையிடமிருந்து விவசாயச் சங்கங்களிடம் பொறுப்புகளை ஒப்படைக்கும் பணி தற்பொழுது செயலாக்கப்படுகிறது. விவசாயிகளின் ஒருமித்த செயல்பாட்டினை நெறிப்படுத்த மூன்று அடுக்கு சங்கம் அமைக்கும் முறை நடைமுறையில் உள்ளது.

- விவசாயிகள் சங்கம் – மதகு அளவில்
- விவசாயிகள் குழு (Council) – பிரிவுக் கால்வாய் அளவில்
- விவசாயிகள் பேரவை (Federation) – திட்ட அளவில்

**ஊ. மேலாண்மை மானியம்**

அமைக்கப்பட்ட விவசாயச் சங்கங்கள்/குழுக்கள் நீண்ட காலம் நிலைபெற்றிருப்பதற்காகவும், சமமான நீர்ப்பங்கீட்டிற்கான சுழற்சி முறைப் பாசனத் திட்டத்தைத் தொடர்வதற்காகவும் பதிவு செய்யப்பட்ட விவசாயக் குழுக்களுக்கு ஒரு எக்டேருக்கு ரூ.540/– என்ற அளவில் நிதி உதவி அளிக்கப்பட்டு வருகிறது. இச்செலவினம் மத்திய மற்றும் மாநில அரசால் சமமாக ஏற்கின்றன. விவசாயிகளும் எக்டேருக்கு ரூ.60/– வீதம் தங்கள் பங்காகக் கொடுக்க வேண்டும். இதுவரை பதிவு செய்யப்பட்ட 632 விவசாயிகள் குழுக்களில் (Farmers' Councils) 597 விவசாயிகள் குழுக்களுக்கு மார்ச் 2004 வரை மேலாண்மை மானியமாக ரூ.1,478.95 இலட்சம், உருவாக்கப்பட்ட கட்டுமானப் பணிகள் பராமரிப்புக்காக வழங்கப்பட்டுள்ளது.

**6.2. ஹனுமன் நதி உப வடிநிலப்பகுதியில் உலக வங்கி நிதியுதவியுடன் மாதிரி புனரமைப்புத் திட்டம்**

ஹனுமன் நதி உப வடிநிலப்பகுதியில் உள்ள அடவிநயினார் கோவில் நீர்த்தேக்கத் திட்டப் பகுதியில் உலக வங்கி நிதியுதவியுடன் ஒருங்கிணைந்த வேளாண்மை செறிவூட்டத் திட்டம் 13.5 எக்டேர் பரப்பில் ரூ.81.00 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் ஹனுமன் நதி மாதிரி புனரமைப்புத் திட்டத்திற்கு முன்னோடித் திட்டமாக விளங்கியது. உலக வங்கி உதவியுடன் ஹனுமன் நதி உபவடி நிலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மாதிரி புனரமைப்புத் திட்டம் 30–09–2004 அன்று வெற்றிகரமாக நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் பொதுப் பணித் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, தோட்டக்கலைத் துறை, மீன்வளத் துறை, வேளாண்மை விற்பனைத் துறை மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் போன்ற பல துறைகளின் ஒருங்கிணைப்போடு செயல்படுத்தப்பட்டது. அரசாணை எண் 33, PW (WRI) துறை, நாள் 30–01–2004–ன்படி இத்திட்டத்திற்கு வழங்கப்பட்ட ரூபாய் 62.50 கோடியில், வேளாண்மைப் பொறியியல் துறைக்கு ரூ.22.55 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டம்



திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள செங்கோட்டை, தென்காசி மற்றும் வீரகேரளம்புதூர் தாலுகாக்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது. 50 ஊரிகள் மற்றும் 14 அணைக்கட்டுகள் மூலம் சுமார் 3,000 எக்டேர் நிலம் பாசன வசதி பெறுகிறது. இத்திட்டத்தின்மூலம் ஆயக்குடி, இலத்தூர், இலன்காடு, கொடிக்குறிச்சி, குழயனேரி, குத்துக்கல்வலசை, நயினாரகரம், நெடுவயல், பண்பொழில், ராஜகோபாலபேரி, சாம்பவர், வடகரை, சுரண்டை, சுந்தரபாண்டியபுரம், வீரகேரளம்புதூர் மற்றும் வடகரைகீழ்பிடகை என்ற 15 கிராமங்களில் உள்ள 2,194 எக்டேர் பரப்பில் ரூ.16.35 கோடி செலவில் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

**6.2.1. திட்டத்தின் முக்கிய நோக்கங்கள்:**

- பாசன நீரின் உற்பத்தித் திறனையும், பயிர் உற்பத்தியையும், நீர் பகிர்தல் மற்றும் பண்ணை இயந்திரமாக்கல் மூலம் அதிகரித்தல்.
- உயர் தொழில்நுட்ப சொட்டு மற்றும் தெளிப்பு நீர்ப்பாசன அமைப்புக்களை அமைத்து, சீரான மற்றும் போதுமான நீர் விநியோகம் செய்து நீரையும், மின்னாற்றலையும் சேமித்தல், மழைநீர் சேகரித்து நிலத்தடி நீராதாரங்களை வளப்படுத்துதல்.
- விவசாயிகளை நவீன வேளாண்மைக்குத் தயார்படுத்திட பயிற்சிகளும், செயல்முறைக் கல்வியும் வழங்குதல் மற்றும் அவர்களின் சமூகப் பொருளாதாரத்தை மேம்படுத்திட உபரி வருமானத்திற்கு வழிசெய்ய பண்ணைக் குட்டை, மீன்வளர்ப்பு போன்ற வாய்ப்புக்களை ஏற்படுத்துதல்.

**6.2.2. உயர் தொழில்நுட்ப நுண் நீர்ப்பாசனம்**

இத்திட்டம் செயல்படுவதற்கு முன்புவரை ஆண்டுக்கு இரு பருவங்களில் மட்டுமே பயிர் சாகுபடி செய்யப்பட்டது. மூன்றாம் பருவத்தில் பெரும்பான்மையான நிலப்பரப்பு தரிசாக விடப்பட்டிருந்தது. இத்திட்டத்தின்கீழ் சொட்டுநீர் மற்றும் தெளிப்பு நீர் அமைப்புகள் உருவாக்கப்பட்டதன் மூலம் 30–40% வரை நீர் சேமிக்கப்பட்டு மூன்றாவது விவசாயம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

முதல் பயிர் : 28 ஏக்கர் – இன்ச் நீர் தேவைப்படும் பயிர்கள்–நிலக்கடலை, காய்கறிகள்

இரண்டாவது பயிர் : நெல்

மூன்றாவது பயிர் : 18 ஏக்கர் இஞ்ச் நீர் தேவைப்படும் தானியம், பயறு வகைகள், தீவனப் பயிர்கள்.

மொத்தப் பரப்பும் 10 எக்டேர் அளவிலான சிறு தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு தொகுதிக்கும் நீர்ப்பயனீட்டாளர் குழுமங்கள் அமைக்கப்பட்டுள்ளது. அத்தகைய குழுமங்களின் ஆலோசனையின்படி 2,194 எக்டேர் பரப்பில் ரூ.10.667 கோடிக்கு நுண்நீர்பாசன அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பி.வி.சி குழாய்கள் மூலம் வயல்களுக்கு நீர் எடுத்துச் செல்லும் கட்டமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளது. கிணறு வைத்துள்ள விவசாயிகளுக்கு சொட்டு நீர்ப்பாசனம், கிணறு இல்லாத விவசாயிகளுக்கு புதுக் கிணறும், தெளிப்பு நீர்ப்பாசன வசதியும் வழங்கப்பட்டுள்ளது.

### 6.2..3. புவியியல் தகவல் அமைப்பு

புவியியல் தகவல் அமைப்பின்மூலம் நில உரிமை, நீர்வளம், பயிர் வளம் குறித்த தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. செயற்கைக்கோள் (ஐ-ஆர்.எஸ் 1:10000) வரைபடங்கள், விமானங்களின் மூலம் பெறப்படும் முப்பரிமாண புகைப்படங்கள் முதலிய உயர்தொழில்நுட்ப முறைகள் மூலம் திட்ட வரைபடங்கள் 1:10000 விகித அளவில் திட்ட வரைபடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அதிவேக இன்டெர்னெட் மூலம் நீர்ப்பயனீட்டாளர் குழுக்கள், தென்காசி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலகங்கள், வேளாண்மை விற்பனைத் துறை, தலைமைச் செயலகம் போன்றவை இணைக்கப்பட்டுள்ளன. துரித தகவல் பரிமாற்றத்திற்காக இவ்வசதிகள் ரூபாய் 2.00 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### 6.2.4. நீர் சேகரிப்புக் கட்டுமானங்கள் அமைத்தல்

மழைநீரைச் சேகரித்துப் பயன்படுத்த ஏதுவாக 52 பண்ணைக் குட்டைகள் கட்டப்பட்டுள்ளன. மேலும் மிகக் குறைந்த அளவே ஊற்றுள்ள கிணறுகள் துளையிடுதல்மூலம் புனரமைக்கப்பட்டுள்ளன. கிணறுகள் அரிதாக உள்ள பகுதிகளில் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. சுமார் ரூ.2.84 கோடிக்கு இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



### 6.2.5. பண்ணை இயந்திரமயமாக்குதல்

சுமார் ரூ.0.53 கோடி செலவில் நவீன விவசாயக் கருவிகளும், பவர் டில்லர், சிறு டிராக்டர், நெல் அறுவடை இயந்திரம், நெல் நாற்று நடும் இயந்திரம் போன்றவை வாங்கப்பட்டு, விவசாயிகளுக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளன. பண்ணை இயந்திரமயமாக்கல் கால விரயத்தைத் தடுப்பதுடன், கிராமப்புறங்களில் போதிய வேலைவாய்ப்புக்களையும் உருவாக்கியுள்ளது.

### 6.2.6. பயிற்சி

முன்னோடி விவசாயிகள், இளைஞர்கள், மகளிர் ஆகியோர்க்கு நுண்நீர்ப்பாசனம், பண்ணை இயந்திரமயமாக்கல், நீர் சேமிப்பு போன்ற பல துறைகளில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தென்காசி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் பயிற்சி நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ரூ.0.34 கோடி செலவில் நீர் பயனீட்டாளர்களுக்கும். அரசு அதிகாரிகளுக்கும் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

### 6.2.7. விவசாயிகளின் ஈடுபாடு

திட்டமிடுதல் முதல் செயலாக்கம் வரை அனைத்து நிலைகளிலும் விவசாயிகளின் பங்கேற்பு வலியுறுத்தப்பட்டது. அவர்கள் பணம், பொருள், ஆலோசனை, உழைப்பு எனப் பல வழிகளில் தங்கள் பங்கேற்பைத் தந்துள்ளனர். மேலும் திட்டச் செலவில் ஒரு பகுதியையும் அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

### 6.2.8. திட்டத் தொடர்ச்சி

உலக வங்கி நிதியுதவி முடிந்துவிட்ட நிலையில், எஞ்சியுள்ள, விடுபட்ட பரப்புகளில் துறையின் ஏனைய திட்டங்கள் அரசு மற்றும் நபார்டு ஆகியவற்றில் இருந்து பெறப்படும் நிதியினைக் கொண்டு மேற்கண்ட புனரமைப்பு பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 7. வேளாண்மையை இயந்திரமயமாக்குதல்

### 7.1. வேளாண் இயந்திரங்களை பிரபலப்படுத்தும் திட்டம்

பயிரிடப்படாத நிலங்களைச் சீரமைத்து உழவு செய்தல், பண்படுத்துதல், கோடை உழவு மற்றும் கதிர் அறுவடை செய்தல்

போன்ற இயந்திர சாகுபடிப் பணிகளை மேற்கொள்வதில் வேளாண்மைப் பொறியியல் துறை விவசாயிகளுக்கு உதவி வருகிறது. வேளாண்மை இயந்திரங்கள் பிரபலப்படுத்தும் திட்டத்தின்கீழ், வேளாண்மையில் இயந்திரங்களைப் புகுத்துவதன்மூலம், கூடுதலாக பண்ணை சக்தியை வழங்கிடவும், வேளாண் பணியாளர்களின் வேலைப் பளுவைக் குறைத்திடவும், வேளாண் பணிகளை உரிய காலத்தில் முடித்திடவும், வேளாண் உற்பத்தியைப் பெருக்கிடவும் ஏதுவாக வேளாண் இயந்திரங்களை வாங்க விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. 2004–2005 ஆம் ஆண்டில் 390 விசை உழுவைகள், 70 உழுவைகள், 5 தானியங்கி நாற்று நடும் கருவிகள், 5 தானியங்கிக் கதிரறுப்பான் மற்றும் உளிக்கலப்பை, உழவு இல்லா விதைக் கருவி, ரோட்டவேட்டர், தானியங்கி அறுவடைக் கருவி, தானியங்கி நெல் நாற்று நடும் கருவி, மணிலா அறுவடை இயந்திரம் போன்ற 42 பண்ணை நூதனக் கருவிகள் வாங்கிட விவசாயிகளுக்கு மானியத் தொகையாக ரூ.150/– இலட்சம் வழங்கப்பட உள்ளது. 2005–2006 ஆம் ஆண்டிலும் இத்திட்டத்தினைத் தொடர திட்டமிடப்பட்டுள்ளது.

## 7.2. ஆழ் உழவு மற்றும் மண் அகழ்தல் கருவிகள்

வேளாண்மைப் பொறியியல் துறையில் 100 புல்டோசர்கள் மற்றும் 125 டிராக்டர்கள், குறைந்த வாடகைக் கட்டணத்தில் விவசாய பணிகளுக்குப் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் இயங்கி வருகின்றன. வேளாண்மைப் பொறியியல் துறையில் நில மேம்பாட்டுத் திட்டங்களுடன் பல்வேறு நீர்ப்பிடிப்பு மேம்பாட்டுத் திட்டங்கள், தரிசுநில மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் வறட்சி நிவாரணத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. துறையில் உள்ள வேளாண் கருவிகளைப் பயன்படுத்துவதன்மூலம், மண்ணின் மேற்பரப்பில் உள்ள கடின பாறைப் பகுதி அப்புறப்படுத்தப்பட்டு மண்ணின் நீர் உறிஞ்சும் திறன் அதிகப்படுத்தப்படுகிறது. மேலும், மண்ணில் காற்றோட்டம் செம்மைப்படுத்தப்பட்டு பயிர் வளர்ச்சி ஊக்குவிக்கப்படுகிறது. ஆழ்உழவு கருவிகள் மற்றும் பேக்ஹோ போன்ற மண் அகழ்தல் கருவிகளுக்கு விவசாயிகளிடையே நல்ல வரவேற்பு உள்ளது. மேலும், இக்கருவிகளை உபயோகித்து, தரிசு நிலங்கள் மற்றும் மண் அரிப்பால் பாதிக்கப்பட்ட நிலங்களைச் சீர் செய்யலாம். இக்கருவிகளை வாங்க அரசினால் ரூ.44.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதன்மூலம் துறையில் உள்ள இயந்திரங்கள் எண்ணிக்கை மற்றும் செயல்திறன்



அதிகரிக்கப்படும். தமிழ்நாட்டில் தரிசு நில மேம்பாட்டுப் பணிகளுக்கும், சுனாமி பேரழிவு அலைகளால் பாதிக்கப்பட்ட நாகப்பட்டினம் மாவட்ட கடலோரப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் நிவாரணப் பணிகளில் தற்போது ஈடுபடுத்தப்படுகின்ற கொமாட்சு இரக அகழ்தல் இயந்திரங்களுடன் இக்கருவிகளையும் பயன்படுத்தலாம்.

## 7.3. வேளாண்மைப் பொறியியல் துறையின் எட்டு பணிமனை வளாகங்களில் பரிசோதனை, பயிற்சி மற்றும் செயல்விளக்க மையங்கள்

விவசாயிகள் மத்தியில் வேளாண் இயந்திரங்களைப் பிரபலப்படுத்துவதிலும், சொட்டு மற்றும் தெளிப்பு நீர்ப்பாசன முறைகளிலும் மத்திய அரசு தனிக் கவனம் செலுத்தி வருவதால், இத்துறையின் எட்டு பணிமனை வளாகங்களிலும், வேளாண் கருவிகள் மற்றும் உபகரணங்களின் பரிசோதனை, பயிற்சி மற்றும் செயல்விளக்கம் மேற்கொள்ளும் வகையில் உரிய வசதிகளை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. விவசாயிகளின் நன்மையைக் கருதி, தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, சேலம், திருவாரூர், வேலூர், கோயம்புத்தூர், திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய எட்டு மையங்களில் இத்திட்டத்தினை 2004–2005-ல் ரூ.41.00 இலட்சம் செலவில் செயல்படுத்த அரசினால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தின்கீழ், 2005–2006 ஆம் ஆண்டில், கணினிகள், பரிசோதனைக் கருவிகள், செயல்விளக்க உபகரணங்கள் போன்ற அடிப்படை வசதிகள் ரூ.20.00 இலட்சம் செலவில் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 7.4. வேளாண்மை இயந்திரங்களைக் கையாளுவதில் விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கும் மத்திய அரசின் திட்டம்

விவசாயப் பயிர்களின் உற்பத்தித் திறன் மற்றும் விவசாயிகளின் ஆண்டு வருமானத்தை அதிகரிக்கும் நோக்கத்துடனும், பயிர் உற்பத்திக்கான இடுபொருட்களைப் பாதுகாத்து சேமிக்கும்பொருட்டும், வேளாண்மை இயந்திரமயமாக்குதலில் ஈடுபட்டுள்ள பல்வேறு தரப்பினருக்கும் புதிய தொழில்நுட்பங்களின் மீதான புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்பட வேண்டியது மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. அரசு, இதனைக் கருத்தில்கொண்டு, விவசாயிகளுக்கு அவர்கள் வசிக்கும் இடத்திற்கு அருகிலேயே பயிற்சி அளிக்கும்பொருட்டு ஒரு புதிய பயிற்சித் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. 2004–2005 ஆம்

[2005 மார்ச் 31

ஆண்டில் இப்பயிற்சித் திட்டத்தினை மேற்கொள்ள அரசு ரூ.3.50
இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது. 2004-2005 ஆம் ஆண்டில்,
கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, திருநெல்வேலி, வேலூர், திருவாரூர்
மற்றும் சென்னை ஆகிய இடங்களில் உள்ள வேளாண்மைப்
பொறியியல் துறையின் பணிமனை வளாகங்களிலும் மற்றும்
திருச்சியில் இயங்கி வரும் வேளாண்மைப் பொறியியல் பயிற்சி
மையத்திலும் விவசாயிகளுக்கான பயிற்சித் திட்டத்தை மேற்கொள்ள
திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 2004-2005 ஆம்
ஆண்டில் 200 விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்க நடவடிக்கை
மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2005-2006 ஆம் ஆண்டில்,
இப்பயிற்சித் திட்டத்தினை விரிவுப்படுத்தி மேலும் பல இடங்களில்
மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. நமது மாநிலத்தில் பண்ணை
இயந்திரமயமாக்குதலின் வேகத்தை முடுக்கிவிடும் வகையில்
இப்பயிற்சித் திட்டங்கள் யாவும் ஆந்திர மாநிலம் அனந்தப்பூர்
மாவட்டத்தில் கர்லடின்னில் இயங்கி வரும் பண்ணை இயந்திரங்கள்
பயிற்சி மற்றும் பரிசோதனை நிலையத்தின் ஒத்துழைப்புடன்
நிறைவேற்றப்படும்.



2005 மார்ச் 31]

## அத்தியாயம் - 5

## தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை

### விரிவான தரிசு நிலத் திட்டம்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 2001-2002 ஆம் ஆண்டிற்கான
வரவு-செலவுத் திட்ட கூட்டத் தொடரில் 20 இலட்சம் எக்டேர் தரிசு
நிலங்களை 5 ஆண்டு காலத்தில் உபயோகத்தின்கீழ்க் கொண்டு
வருவதற்காகத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் என்ற ஒரு மிகப் பெரிய
திட்டத்தை அறிவித்தார்கள். இத்திட்டம் இரண்டு அங்கங்களைக்
கொண்டது.

1. மக்கள் பங்கேற்புடன் நீர்வடிப் பகுதியை (பட்டா நிலங்களில்) மேம்படுத்துதல் மற்றும்
2. கூட்டாண்மை நிறுவனங்கள், சிறு நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சுயஉதவிக் குழுக்களின் இணையங்கள் போன்றவற்றின்மூலம் அரசின் தரிசு நிலங்களை மேம்படுத்துதல்.

### 1. மக்கள் பங்கேற்புடன்கூடிய நீர்வடிப் பகுதி மேம்பாடு

இத்திட்டம் 2002-2003 ஆம் ஆண்டு முதல் விவசாயிகளின் பட்டா
நிலங்களில் நுண் நீர்வடிப் பகுதி மேம்பாட்டு நோக்கத்தை
அடிப்படையாகக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கான
அரசு மானிய ஒதுக்கீடு ஒரு எக்டேருக்கு ரூ.8,500/- ஆகும்.
2002-2003 ஆம் ஆண்டில் இத்திட்டம் தமிழகத்தின் 10 மாவட்டங்களில்
ஒரு முன்னோடித் திட்டமாக 55,000 எக்டேர் இலக்குடன் ரூ.30 கோடி
நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது. அந்த நிதியாண்டில் 21,771
எக்டேர் நிலப்பரப்பில் 23,66,074 கன்றுகள் நடப்பட்டன. அதில் 15,39,267
வேளாண் காடுகள் தொடர்பான கன்றுகளும், 8,26,807 பழக் கன்றுகளும்
அடக்கம்.

இந்த 10 முன்னோடி மாவட்டங்களுடன் மேலும் 13 மாவட்டங்களுக்கு
(தூத்துக்குடி, விருதுநகர், சிவகங்கை, மதுரை, கோவை, ஈரோடு, கரூர்,
பெரம்பலூர், விழுப்புரம், கடலூர், திருவள்ளூர், தருமபுரி, காஞ்சிபுரம்)
இத்திட்டம் 2003-2004 ஆம் ஆண்டில் 50,000 எக்டேர் நிலப்பரப்பில்
தொடர்ந்து விரிவாக்கப்பட்டது. இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ.25
கோடியாகும்.

2003–2004 ஆம் ஆண்டில் 31–3–2004 முடிய 23,600 எக்டேர் நிலப்பரப்பில் 10 முன்னோடி மாவட்டங்களில் 25,00,067 மரக்கன்றுகள் நடப்பட்டன. (6,87,013 வேளாண் காடுகள் தொடர்பான கன்றுகள்; 18,13,054 பழக் கன்றுகள்)

புதிய 13 மாவட்டங்களில் தொடக்கப் பணிகளாக மாவட்ட நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமைகள் அமைக்கப்பட்டு, பதிவு செய்யப்பட்டுள்ளன. தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டு, கிராம அளவில் கிராம முன்னேற்றச் சங்கங்கள் அமைக்கும் பணிகள் முடிவுபெற்றுள்ளன. தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில் மக்கள் பங்கேற்புடன் கிராமத்தின் வளங்கள் மற்றும் தரிசு நிலங்கள் கண்டறியும் பணி முடிக்கப்பட்டு, நுழைவுப் பணிகள், விவசாயிகளுக்கான பயிற்சி மற்றும் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கான இடங்களைத் தெரிவு செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

2004–2005 ஆம் ஆண்டில் இத்திட்டமானது ரூ.50/– கோடி செலவில் 23 மாவட்டங்களிலும் 54,000 எக்டேரில் பழ/மரக் கன்றுகளும், 6,000 எக்டேரில் தீவனப் பயிர்களும் ஆகமொத்தம் 60,000 எக்டேர் பரப்பில் நடவு செய்யப்பட்டு வருகின்றன. மாவட்டவாரியாக 2004–2005 ஆம் ஆண்டுக்கான திட்ட இலக்கு கீழ்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது:

**2004–2005 ஆண்டிற்கு மாவட்டவாரியான இலக்கு (எக்டேர்)**

| வ. எண் | மாவட்டம் | மரக் கன்றுகள் பரப்பு | தீவனப் பயிர்கள் பரப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி | 2,100 | 400 | 2,500 |
| 2 | புதுக்கோட்டை | 2,400 | 300 | 2,700 |
| 3 | திண்டுக்கல் | 2,100 | 300 | 2,400 |
| 4 | வேலூர் | 2,400 | 200 | 2,600 |
| 5 | திருவண்ணாமலை | 2,100 | 200 | 2,300 |
| 6 | சேலம் | 2,400 | 400 | 2,800 |
| 7 | திருச்சிராப்பள்ளி | 3,000 | 200 | 3,200 |
| 8 | தேனி | 2,400 | 20 | 2,420 |



| வ. எண் | மாவட்டம் | மரக் கன்றுகள் பரப்பு | தீவனப் பயிர்கள் பரப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|
| 9 | இராமநாதபுரம் | 2,400 | 10 | 2,410 |
| 10 | நாமக்கல் | 1,800 | 400 | 2,200 |
| 11 | தூத்துக்குடி | 2,100 | 200 | 2,300 |
| 12 | விருதுநகர் | 3,000 | 50 | 3,050 |
| 13 | சிவகங்கை | 2,100 | 100 | 2,200 |
| 14 | மதுரை | 2,400 | 20 | 2,420 |
| 15 | கோயம்புத்தூர் | 2,100 | 50 | 2,150 |
| 16 | ஈரோடு | 3,000 | 210 | 3,210 |
| 17 | கரூர் | 3,000 | 500 | 3,500 |
| 18 | பெரம்பலூர் | 2,100 | 600 | 2,700 |
| 19 | விழுப்புரம் | 2,400 | 200 | 2,600 |
| 20 | கடலூர் | 2,400 | 50 | 2,450 |
| 21 | திருவள்ளூர் | 2,100 | 350 | 2,450 |
| 22 | தருமபுரி | 2,100 | 620 | 2,720 |
| 23 | காஞ்சிபுரம் | 2,100 | 620 | 2,720 |
| | மொத்தம் | 54,000 | 6,000 | 60,000 |

2004–2005 ஆம் ஆண்டிற்குத் தேவையான பழ/மரக் கன்றுகளில் 25% அந்தந்த மாவட்ட நீர்வழிப் பகுதியின் திட்ட அலுவலர்கள் மற்றும் வேளாண் இணை இயக்குநர், வேளாண் துறை அவர்களே அந்த மாவட்டத்திலுள்ள சுயஉதவிக் குழுக்கள் மற்றும் சுயஉதவிக் குழுக்கள் இணையங்கள், வேளாண்மை துறையின்மூலம் நடத்தப்படும் அரசு விதைப் பண்ணை, தென்னை நாற்றங்கால் பண்ணை மற்றும் பயறு விதைப் பண்ணைகள் ஆகியவற்றின் மூலம் மேற்படி பழ/மரக் கன்றுகளை உற்பத்தி செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி, பழ/மரக் கன்றுகள் விலைப் பட்டியல் ஆணையர், தோட்டக்கலைத் துறை மற்றும் முதன்மை வனப் பாதுகாவலர், அவர்கள் நிர்ணயித்த

விலைப்பட்டியலுக்கு மிகாமல் இருக்க வேண்டும். இதன்மூலம் இத்திட்டம் கீழ்கண்ட வகையில் சிறப்புடன் செயல்பட முடியும்.

1. உரிய காலத்தில் விவசாயிகளுக்கு நடவு செய்வதற்கு பழ/மரக் கன்றுகள் கிடைக்கும்.
2. போக்குவரத்து செலவு குறையும்.
3. விவசாயிகளுக்கு எந்த வகையான பழ/மரக் கன்றுகள் தேவை என்பதை அறிந்து அதனை உற்பத்தி செய்து அவர்களுக்கு அளிக்க முடியும்.
4. பட்டுப்போன செடிகளுக்குப் பதிலாக புதிய செடிகளை உடனடியாக வழங்க முடியும்.
5. பருவ மழை பெய்யாத காரணத்தால் நடப்படாமல் விடப்பட்ட பழ/மரக்கன்றுகளை உள்ளூரிலேயே பாதுகாத்து அடுத்த ஆண்டு நடவுக்குப் பயன்படுத்தலாம்.
6. விவசாயிகள் விரும்பியவண்ணம் உரிய காலத்தில் பழ/மரக் கன்றுகளை வழங்க முடியும்.
7. முன்னேற்பாடாக பழ/மரக் கன்றுகளை உற்பத்தி செய்வதால் பருவமழை ஆரம்பிக்கும் காலத்தில் பழ/மரக் கன்றுகள் நடவு செய்ய தயாராக இருக்கும்.

மீதமுள்ள 75% பழ/மரக் கன்றுகளை திட்ட அலுவலர்களே நேரடியாக இயக்குநர், தோட்டக்கலைத் துறை மற்றும் முதன்மை வனப் பாதுகாவலர், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், 'டாப்கார்ன்' மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சித் துறை பண்ணைகளிலிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்துகொள்ளலாம்.

நடப்பு ஆண்டில் இத்திட்டத்திற்கு 23 மாவட்டத்திற்குத் தேவையான பழ/மரக் கன்றுகளின் எண்ணிக்கை சுமார் 43.16 இலட்சம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. மேற்படி தேவை எண்ணிக்கை, கடந்த ஆண்டு நடவு செய்யாமல் விடப்பட்ட மீதமுள்ள பழ/மரக் கன்றுகளின் எண்ணிக்கையையும் அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்கள் இந்த ஆண்டு உற்பத்தி செய்யும் எண்ணிக்கையையும் மற்றும் 25% பழ/மரக் கன்றுகள் அந்தந்த மாவட்டத்திலேயே உற்பத்தி செய்யும் எண்ணிக்கையையும் கணக்கிட்டு முடிவு செய்யப்பட்டுள்ளது.



தீவனப் பயிர் மற்றும் உயிரி எரிபொருள் தாவரமான காட்டாமணக்கு இந்த ஆண்டு திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

நடப்பு 2004–2005 ஆம் ஆண்டில் 60,000 எக்டேர் குறியீட்டிற்கு பிப்ரவரி 2005 முடிய மொத்தம் 38,769 எக்டேர் பரப்பில் நடவு செய்யப்பட்டுள்ளது. இதில், 36,884 எக்டேர் பரப்பில் பழ/மரக் கன்றுகளும், 1,985 எக்டேர் பரப்பில் தீவனப் பயிர்களும் நடவு செய்யப்பட்டுள்ளன. பழ/மரக் கன்றுகளுக்கான மானியம் ஒரு எக்டேருக்கு ரூ.8,500/– வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

ஆண்டு தீவனப் பயிருக்கான அரசு மானியம் ஒரு எக்டேருக்கு ரூ.8,400/– எனவும் பல்லாண்டு தீவனப் பயிருக்கான மானியம் ஒரு எக்டேருக்கு ரூ.7,500/– எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

காட்டாமணக்குப் பயிருக்கான மானியம் குறித்த கருத்துரு அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்திற்காக அரசு இதுவரை ரூ. 72.49 கோடி அளித்துள்ளது. மேற்படி தொகையில் இதுவரை ரூ.49.24 கோடி 23 மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மாவட்ட நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை தலைவர் மற்றும் சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களுக்கு மேற்படி திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக அனுப்பப்பட்டுவிட்டது.

2005–2006 ஆம் ஆண்டில் இத்திட்டம் 23 மாவட்டங்களில் 60,000 எக்டேரில் செயல்படுத்தப்பட உள்ளது.

## 2. அரசு தரிசு நிலங்களைக் கூட்டாண்மை நிறுவனங்களுக்குக் குத்தகைக்கு விடும் திட்டம்

இந்தத் திட்டம் (சென்னை, கன்னியாகுமரி மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக) அனைத்து மாவட்டங்களிலும் சென்ற 2002–2003 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் கூட்டாண்மை நிறுவனங்கள், சிறு நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள், சுயஉதவிக் குழுக்கள், மற்றும் சுயஉதவிக் குழுக்களின் இணையங்கள் ஆகியவற்றிற்கு அரசு தரிசு நிலங்கள் 30 ஆண்டு கால குத்தகைக்கு விடப்படுகின்றன. அரசின் தரிசு நிலங்கள் குத்தகைக்கு விடுவதற்காக 8 எக்டேருக்கும் குறைவான பரப்பு

மற்றும் 8 எக்டேர் அதற்கும் மிகையான பரப்பு என்று வகைப் படுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையிலான மாவட்ட நிலைக் குழு, குத்தகை கோரும் இந்நிறுவனங்களின் விண்ணப்பங்களைப் பரிசீலித்து 8 எக்டேர் நிலப்பரப்புக்குட்பட்ட நிலங்களைத் தகுதியான நிறுவனங்களுக்கு குத்தகைக்கு விடுகின்றது. எட்டு எக்டேர் மற்றும் எட்டு எக்டேருக்கு மிகையான நிலப்பரப்பைக் கோரும் விண்ணப்பங்கள் மேற்படி மாவட்டக் குழுவால் பரிசீலிக்கப்பட்டு தகுதியான விண்ணப்பங்கள் மட்டும் அரசின் தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் செயல்படும் மாநில அளவிலான உயர்மட்டக் குழுவிற்குப் பரிந்துரைக்கும். இந்த உயர்மட்டக் குழு காலமுறையாகக் கூடி, இந்த விண்ணப்பங்களை மேலும் பரிசீலனை செய்து இறுதி முடிவு எடுக்கும்.

உயர்மட்டக் குழு இதுவரை 8 எக்டேர் மற்றும் அதற்கு மிகையான பிரிவில் 1,054.05.5 எக்டேர் அரசு தரிசு நிலங்களைக் குத்தகைக்கு விட அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது. அதில் 624.77.5 எக்டேருக்கு அரசு ஆணை வழங்கப்பட்டுள்ளது. 8 எக்டேருக்குக் குறைவான நிலங்களில் இதுவரை 291 எக்டேர் நிலப் பரப்பினை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தகுதியான நிறுவனங்களுக்கு இறுதி செய்துள்ளனர். விதிக்குறிப்பு உடன்பாடு அதாவது மாதிரி குத்தகை ஆவண நகல்கள் அனைத்து மாவட்ட ஆட்சியாளர்களுக்கும் அனுப்பப்பட்டு நிறுவனங்களுடன் குத்தகை ஒப்பந்தம் செய்யும் பணி தற்போது முன்னேற்றத்தில் உள்ளது.

## 3. வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம்

கடுமையான வறட்சியால் தொடர்ந்து பாதிக்கப்படும் பகுதிகளில் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண 1972–73 ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டுவரும் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டமானது, பகுதி மேம்பாட்டு திட்டங்களில் ஒன்றாகும். இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் நீர்வடிப் பகுதிகளிலுள்ள பயிர் உற்பத்தி, கால்நடை வளர்ப்பு, நில, நீர் மற்றும் மனித வளம் ஆகியவற்றின் உற்பத்தி திறன் போன்றவற்றிற்கு வறட்சியினால் ஏற்படக்கூடிய மோசமான விளைவுகளைக் குறைப்பதாகும். இதன் மூலம் வறட்சியால் ஏற்படும் கடும் விளைவுகளிலிருந்து பாதிக்கப்பட்ட



பகுதிகள் பாதுகாக்கப்படுகின்றன. இத்திட்டம் நீர்வடிப் பகுதி அணுகுமுறையில் மக்களின் பங்கேற்போடு மத்திய அரசின் வழிகாட்டியின்படி 1995—96 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு நீர்வடிப் பகுதியும் தோராயமாக 500 எக்டேர் நிலப்பரப்பைக் கொண்டது.

தற்பொழுது இத்திட்டம் தமிழ்நாட்டில் 17 மாவட்டங்களில் 80 ஒன்றியங்களில் செயல்படுத்தப்படுகிறது. 31–3–1999 வரை ஒப்பளிக்கப்பட்ட திட்டங்களைச் செயல்படுத்த ஏற்படும் செலவை மைய அரசும், மாநில அரசும் 50:50 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொண்டன. 1–4–1999 முதல் ஒப்பளிக்கப்படும் திட்டங்களைச் செயல்படுத்த ஏற்படும் செலவை மைய அரசும், மாநில அரசும் 75:25 என்ற விகிதத்தில் பகிர்ந்துகொள்ள மாற்றியமைக்கப்பட்டுள்ளது. 1–4–2000 முதல், ஒரு எக்டேருக்கான நீர்வடிப் பகுதி மேம்பாட்டுச் செலவு ரூ.6,000/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டச் செயலாக்கக் காலம் 5 ஆண்டுகள் ஆகும்.

இத்திட்டத்தின்கீழ் நீர்வடிப் பகுதிகள் மத்திய அரசால் அணி வாரியாக ஒப்பளிப்புச் செய்யப்படுகின்றன. முதல் அணியில் 297 நீர்வடிப் பகுதிகள் ஒப்பளிப்புச் செய்யப்பட்டு 1995 முதல் 2000 வரை ரூ.5,920.25 இலட்சம் செலவில் 1,48,911 எக்டேர் நிலப்பரப்பு மேம்படுத்தப்பட்டுள்ளது. (இரண்டு, மூன்று மற்றும் ஆறாவது அணிகளில் தமிழகத்திற்கென நீர்வடிப் பகுதிகள் திட்டம் எதுவும் ஒப்பளிப்புச் செய்யப்படவில்லை). தற்போது நான்காம், ஐந்தாம், ஏழாம், எட்டாம் மற்றும் ஒன்பதாம் அணிகள் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2004–2005 ஆம் ஆண்டில் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டத்தின்கீழ் ரூ.4,800 இலட்சம் மதிப்பீட்டில் 17 மாவட்டங்களில் 160 நீர்வடிப் பகுதிகள் மேம்பாட்டிற்காக பத்தாம் அணி 2004–2005 முதல் 2008–2009 வரை செயல்படுத்த மைய அரசால் ஒப்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு அணியிலும், ஒப்பளிப்புச் செய்யப்பட்ட நீர்வடிப் பகுதிகள், மொத்த நிதி ஒதுக்கீடு, மத்திய மற்றும் மாநில அரசுகளால் வழங்கப்பட்ட நிதி மற்றும் செலவின தகவல்கள் கீழே அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன:—

[2005 மார்ச் 31

## வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம்

(ரூபாய் இலட்சத்தில்)

| அணி மற்றும் திட்ட காலம் | நீர்வடிப் பகுதிகளின் எண்ணிக்கை | மொத்த நிதி ஒதுக்கீடு | | | நிதி வழங்கியது (பிப்ரவரி 2005 வரை) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | மைய அரசு | மாநில அரசு | மொத்தம் | மைய அரசு | மாநில அரசு | மொத்தம் | மைய அரசு |
| 4 ஆம் அணி (1998-99 முதல் 2002-03 வரை) * | 103 | 1030.00 | 1030.00 | 2060.00 | 936.58 | 891.13 | 1827.71 | 1760.12 (96%) |
| 5 ஆம் அணி (1999-2000 முதல் 2003-04 வரை) * | 299 | 4485.00 | 1495.00 | 5980.00 | 3799.68 | 1201.27 | 5000.95 | 4592.99 (92%) |
| 7 ஆம் அணி (2001-02 முதல் 2005-06 வரை) | 61 | 1372.50 | 457.50 | 1830.00 | 589.43 | 189.67 | 779.10 | 856.95 (84%) |
| 8 ஆம் அணி (2002-03 முதல் 2006-07 வரை) | 144 | 3240.00 | 1080.00 | 4320.00 | 1388.46 | 382.75 | 1771.21 | 1341.85 (76%) |
| 9 ஆம் அணி (2003-04 முதல் 2007-08 வரை) | 160 | 3600.00 | 1200.00 | 4800.00 | 1346.43 | 189.00 | 1535.43 | 737.39 (48%) |
| 10 ஆம் அணி (2004-05 முதல் 2008-09 வரை) | 160 | 3600.00 | 1200.00 | 4800.00 | 540.00 | 180.00 | 720.00 | ## |
| மொத்தம் | 927 | 17327.50 | 6462.50 | 23790.00 | 8600.58 | 3033.82 | 11634.40 | 9068.[illegible] (78%) |

*குறிப்பு - திட்ட செயலாக்க காலம் 31-3-2005 வரை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

## நவம்பர் 2004-ல் புதிதாக ஒப்பளிப்பு செய்யப்பட்டது. ஆரம்பகட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன. எனவே, செலவினம் ஏதும் இல்லை.



2005 மார்ச் 31]

வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளின் திட்டச் செயலாக்கத்திற்காக 2004–05 ஆம் ஆண்டில் பிப்ரவரி 2005 ஆம் மாதம் வரை மைய அரசு ரூ.2,816.94 இலட்சங்களும், மாநில அரசு தன் பங்காக ரூ.599.79 இலட்சங்களும் விடுவித்துள்ளன.

### 4. ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்

ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் தமிழகத்தில் 1993–94 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. நீர்வடிப் பகுதி அணுகுமுறையில் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் செயல்படுத்தப்படாத வட்டாரங்களில் வனம் அல்லாத தரிசு நிலங்களை மேம்படுத்த இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தரிசு நில மேம்பாட்டுத் திட்டங்களில் மக்களின் பங்கேற்பினை ஊக்குப்படுத்துவதுடன் கிராமப் பகுதிகளில் வேலைவாய்ப்பினை பெருக்குவதற்கு உதவியாக இருக்கிறது. 1–4–2000 முதல் ஒரு எக்டேருக்கான மேம்பாட்டிற்கான செலவினம் ரூ.4,000/–லிருந்து ரூ.6000/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 31–3–2000 வரை ஒப்பளிப்புச் செய்யப்பட்ட திட்டங்கள் மத்திய அரசின் 100 சதவீத மானியத்தில் செயல்படுத்தப்பட்டு வந்தது. 1–4–2000 முதல் ஒப்பளிப்புச் செய்யப்படும் திட்டங்களுக்கான செலவினத்தை மத்திய மற்றும் மாநில அரசுகள் 11:1 (ஒரு எக்டேருக்கான செலவினத்தில் மத்திய அரசின் பங்கு ரூ.5,500/– மற்றும் மாநில அரசின் பங்கு ரூ.500/–) என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றன.

மைய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம், 2004–2005 ஆம் ஆண்டில் பின்வரும் 10 மாவட்டங்களை முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்து ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டங்கள் ரூ.3,061.51 இலட்சம் (மைய அரசு ரூ.2,806.38 இலட்சம், மாநில அரசு ரூ.255.13 இலட்சம்) ஒதுக்கீட்டில் 51,025 எக்டேர் பரப்பளவு 101 நீர்வடிப் பகுதிகள் பயன்பெறும் வகையில் 2004–05 முதல் 2008–09 வரை செயலாக்கத்திற்கு ஒப்பளிப்பு அளித்துள்ளது:

(1) கடலூர்
(2) கிருஷ்ணகிரி
(3) புதுக்கோட்டை
(4) பெரம்பலூர்
(5) சிவகங்கை
(6) திருச்சிராப்பள்ளி
(7) திருநெல்வேலி
(8) தூத்துக்குடி
(9) விருதுநகர்
(10) திருவள்ளூர்

தற்சமயம் ஒருங்கிணைந்த தரிசுநில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 43 திட்டங்கள் 24 மாவட்டங்களில் 65 ஒன்றியங்களில் 539 நீர்வடிப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களின் விவரங்கள் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டச் செயலாக்கத்திற்காக 2004—2005 ஆம் ஆண்டில் பிப்ரவரி 2005 ஆம் மாதம் வரை மைய அரசு ரூ.2,440.52 இலட்சங்களும் மாநில அரசு தன் பங்காக ரூ.184.27 இலட்சங்களும் விடுவித்துள்ளன.

இந்திய அரசமைப்புச் சட்டம் 73—வது திருத்தத்திற்கிணங்க, மத்திய அரசு இத்திட்டங்களின் செயல்பாட்டினை பஞ்சாயத்து ராஜ் கட்டமைப்பின்மூலம் கடந்த 2003—2004 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தி வருகிறது. ஹரியாலி வழிகாட்டியின்படி 2003—2004 ஆம் ஆண்டு முதல் புதிதாக ஒப்பளிப்புச் செய்யப்படும் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் நிதி, கிராம ஊராட்சிகள்மூலம் செயலாக்கத்திற்காக வழங்கப்படும். இதுகாறும் திட்டங்களின் செயல்பாட்டினை மேற்கொண்டு வந்த கிராம நீர்வடி சங்கங்களுக்குப் பதிலாக கிராம ஊராட்சிகள் இத்திட்டங்களைச் செயல்படுத்தும் பொறுப்பினை ஏற்கும்.



## அட்டவணை

### ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்

(ரூபாய் இலட்சத்தில்)

| வ.எண் | மாவட்டம் மற்றும் திட்ட காலம் | திட்டப்பரப்பு | நிதி ஒதுக்கீடு | | | விடுவிக்கப்பட்ட நிதி (பிப்ரவரி 2005 வரை) | | | செலவு 28-02-2005 வரை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | மைய அரசு | மாநில அரசு | மொத்தம் | மைய அரசு | மாநில அரசு | மொத்தம் | |
| 1 | கோயம்புத்தூர்-2 1998-99 to 2002-2003 • | 9389 | 362.32 | — | 362.32 | 358.18 | — | 358.18 | 310.5 |
| 2 | சேலம்-1 1999-2000 to 2002-2003 • | 5000 | 200.00 | — | 200.00 | 180.00 | — | 180.00 | 168.03 |
| 3 | நாமக்கல்-1 1999-2000 to 2002-2003 • | 5105 | 204.20 | — | 204.20 | 202.19 | — | 202.19 | 194.72 |
| 4 | தேனி-1 1999-2000 to 2002-2003 • | 5156 | 206.24 | — | 206.24 | 163.92 | — | 163.92 | 162.98 |
| 5 | கரூர்-1 1999-2000 to 2003-2004 • | 11606 | 464.24 | — | 464.24 | 462.71 | — | 462.71 | 452.67 |
| 6 | கடலூர்-2 1999-2000 to 2003-2004 • | 5580 | 223.20 | — | 223.20 | 221.47 | — | 221.47 | 214.80 |
| 7 | விருதுநகர்-1 1999-2000 to 2003-2004 • | 5300 | 212.00 | — | 212.00 | 210.64 | — | 210.64 | 163.81 |
| 8 | இராமநாதபுரம் 1999-2000 to 2003-2004 • | 5000 | 200.00 | — | 200.00 | 131.44 | — | 131.44 | 128.27 |

[2005 மார்ச் 31

(ரூபாய் இலட்சத்தில்)

| வ.எண் | மாவட்டம் மற்றும் திட்ட காலம் | திட்டப் பரப்பு | நிதி ஒதுக்கீடு | | | விடுவிக்கப்பட்ட நிதி (பிப்ரவரி 2005 வரை) | | | செலவு 28-02-2005 வரை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | மைய அரசு | மாநில அரசு | மொத்தம் | மைய அரசு | மாநில அரசு | மொத்தம் | |
| 9 | திருநெல்வேலி-1 1999-2000 to 2003-2004 • | 10000 | 400.00 | — | 400.00 | 359.26 | — | 359.26 | 289.24 |
| 10 | மதுரை-1 2000-2001 to 2004-2005 | 5100 | 280.50 | 25.50 | 306.00 | 126.22 | 11.48 | 137.70 | 134.58 |
| 11 | பெரம்பலூர்-1 2000-2001 to 2004-2005 | 10000 | 550.00 | 50.00 | 600.00 | 165.00 | 14.59 | 179.59 | 144.00 |
| 12 | தர்மபுரி-1 2000-2001 to 2004-2005 | 9500 | 522.50 | 47.50 | 570.00 | 470.28 | 35.42 | 505.70 | 400.14 |
| 13 | புதுக் கோட்டை-2 2000-2001 to 2004-2005 | 11685 | 642.67 | 58.43 | 701.10 | 385.01 | 35.02 | 420.03 | 323.97 |
| 14 | திருச்சி-1 2000-2001 to 2004-2005 | 12100 | 665.50 | 60.50 | 726.00 | 391.01 | 35.87 | 426.88 | 401.67 |
| 15 | ஈரோடு-2 2000-2001 to 2004-2005 | 5529 | 304.10 | 27.65 | 331.75 | 225.05 | 16.33 | 241.38 | 175.93 |
| 16 | திண்டுக்கல்-2 2000-2001 to 2004-2005 | 10045 | 552.48 | 50.22 | 602.70 | 549.92 | 45.04 | 594.96 | 535.78 |
| 17 | சிவகங்கை-2 2000-2001 to 2004-2005 | 10078 | 550.00 | 50.00 | 600.00 | 247.50 | 22.50 | 270.00 | 229.92 |
| 18 | தூத்துக்குடி-1 2000-2001 to 2004-2005 | 7500 | 412.50 | 37.50 | 450.00 | 185.64 | 16.82 | 202.46 | 178.94 |



2005 மார்ச் 31]

(ரூபாய் இலட்சத்தில்)

| வ.எண் | மாவட்டம் மற்றும் திட்ட காலம் | திட்டப் பரப்பு | நிதி ஒதுக்கீடு | | | விடுவிக்கப்பட்ட நிதி (பிப்ரவரி 2005 வரை) | | | செலவு 28-02-2005 வரை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | மைய அரசு | மாநில அரசு | மொத்தம் | மைய அரசு | மாநில அரசு | மொத்தம் | |
| 19 | கரூர்-2 2001-2002 to 2005-2006 | 6016 | 330.89 | 30.07 | 360.96 | 148.89 | 13.46 | 162.35 | 149.67 |
| 20 | விழுப்புரம்-1 2001-2002 to 2005-2006 | 4668 | 257.00 | 23.00 | 280.00 | 114.50 | 10.41 | 124.91 | 118.45 |
| 21 | வேலூர்-2 2001-2002 to 2005-2006 | 6500 | 357.50 | 32.50 | 390.00 | 213.07 | 19.36 | 232.43 | 131.84 |
| 22 | நாமக்கல்-2 2001-2002 to 2005-2006 | 6159 | 338.74 | 30.80 | 369.54 | 151.43 | 13.77 | 165.20 | 150.42 |
| 23 | கோயம்புத்தூர்-3 2003-2004 to 2007-2008 | 5000 | 275.00 | 25.00 | 300.00 | 123.75 | 3.75 | 127.50 | 41.27 |
| 24 | தர்மபுரி-2 2003-2004 to 2007-2008 | 5000 | 275.00 | 25.00 | 300.00 | 123.75 | 11.25 | 135.00 | 118.30 |
| 25 | திண்டுக்கல்-3 2003-2004 to 2007-2008 | 5000 | 275.00 | 25.00 | 300.00 | 123.75 | 11.25 | 135.00 | 133.19 |
| 26 | காஞ்சிபுரம்-1 2003-2004 to 2007-2008 | 5000 | 275.00 | 25.00 | 300.00 | 41.25 | 3.75 | 45.00 | 18.64 |
| 27 | மதுரை-2 2003-2004 to 2007-2008 | 5000 | 275.00 | 25.00 | 300.00 | 41.25 | 3.75 | 45.00 | 41.00 |
| 28 | இராமநாதபுரம்-2 2003-2004 to 2007-2008 | 5000 | 275.00 | 25.00 | 300.00 | 123.75 | 11.25 | 135.00 | 32.06 |

(ரூபாய் இலட்சத்தில்)

| வ.எண் | மாவட்டம் மற்றும் திட்ட காலம் | திட்டப் பரப்பு | நிதி ஒதுக்கீடு | | | விடுவிக்கப்பட்ட நிதி (பிப்ரவரி 2005 வரை) | | | செலவு 28-02-2005 வரை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | மைய அரசு | மாநில அரசு | மொத்தம் | மைய அரசு | மாநில அரசு | மொத்தம் | |
| 29 | சேலம்-2 2003-2004 to 2007-2008 | 5000 | 275.00 | 25.00 | 300.00 | 123.75 | 11.25 | 135.00 | 122.02 |
| 30 | தேனி-2 2003-2004 to 2007-2008 | 5000 | 275.00 | 25.00 | 300.00 | 41.25 | 3.75 | 45.00 | 38.71 |
| 31 | திருவண்ணாமலை 2003-2004 to 2007-2008 | 5000 | 275.00 | 25.00 | 300.00 | 123.75 | 11.25 | 135.00 | 117.26 |
| 32 | திருவள்ளூர்-1 2003-2004 to 2007-2008 | 5000 | 275.00 | 25.00 | 300.00 | 41.25 | 3.75 | 45.00 | 28.34 |
| 33 | விழுப்புரம்-2 2003-2004 to 2007-2008 | 5000 | 275.00 | 25.00 | 300.00 | 41.25 | 3.75 | 45.00 | 33.16 |
| 34 | கடலூர்-3 2004-2005 to 2008-2009 | 4857 | 267.14 | 24.29 | 291.43 | 40.07 | 3.64 | 43.71 | # |
| 35 | கிருஷ்ணகிரி 2004-2005 to 2008-2009 | 5000 | 275.00 | 25.00 | 300.00 | 41.25 | 3.75 | 45.00 | # |
| 36 | புதுக்கோட்டை-3 2004-2005 to 2008-2009 | 6080 | 334.40 | 30.40 | 364.80 | 50.16 | 4.56 | 54.72 | # |
| 37 | பெரம்பலூர்-2 2004-05 to 2008-2009 | 5000 | 275.00 | 25.00 | 300.00 | 41.25 | 3.75 | 45.00 | # |
| 38 | சிவகங்கை-3 2004-2005 to 2008-2009 | 5000 | 275.00 | 25.00 | 300.00 | 41.25 | 3.75 | 45.00 | 0.25 |



(ரூபாய் இலட்சத்தில்)

| வ.எண் | மாவட்டம் மற்றும் திட்ட காலம் | திட்டப் பரப்பு | நிதி ஒதுக்கீடு | | | விடுவிக்கப்பட்ட நிதி (பிப்ரவரி 2005 வரை) | | | செலவு 28-02-2005 வரை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | மைய அரசு | மாநில அரசு | மொத்தம் | மைய அரசு | மாநில அரசு | மொத்தம் | |
| 39 | திருச்சி-2 2004-2005 to 2008-2009 | 5650 | 310.75 | 28.25 | 339.00 | 46.61 | 4.24 | 50.85 | 0.28 |
| 40 | திருநெல்வேலி-2 2004-2005 to 2008-2009 | 4500 | 247.50 | 22.50 | 270.00 | 37.13 | 3.38 | 40.51 | # |
| 41 | தூத்துக்குடி-2 2004-2005 to 2008-2009 | 5000 | 275.00 | 25.00 | 300.00 | 41.25 | 3.75 | 45.00 | # |
| 42 | விருதுநகர்-2 2004-2005 to 2008-2009 | 5000 | 275.00 | 25.00 | 300.00 | 41.25 | 3.75 | 45.00 | # |
| 43 | திருவள்ளூர்-2 2004-2005 to 2008-2009 | 4938 | 271.59 | 24.69 | 296.28 | 40.74 | 3.70 | 44.44 | 1.10 |
| | மொத்தம் | 273041 | 14067.98 | 1053.80 | 15121.78 | 7033.04 | 407.09 | 7440.13 | 5883.91 |

* 31-3-2005 வரை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

# 20 அக்டோபர் 2004-ல் புதிதாக ஒப்பளிப்புச் செய்யப்பட்டது ஆரம்பக் கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. எனவே, செலவினம் இல்லை.

## 5. திருத்தியமைக்கப்பட்ட தேசிய மானாவாரி நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (நுவப்ரா)

பத்தாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் *2002–2003* முதல் *2006–2007* முடிய திருத்தியமைக்கப்பட்ட தேசிய மானாவாரி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் மத்திய அரசின் பேரியல் மேலாண்மை திட்டத்தின் ஒரு அங்கமாகும். இத்திட்டம் நீர்ப்பாசன வசதி *30* சதவீதத்திற்கும் குறைவாகவும் மற்றும் *8* சதவீத நிலச் சரிவிற்குக் குறைவாக உள்ள வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டு

வருகிறது. இத்திட்டச் செலவினத்தை மைய அரசு மற்றும் மாநில அரசுகள் முறையே 90 சதவீதம் மற்றும் 10 சதவீதம் என்ற அளவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**குறிக்கோள்:**

- இயற்கை வளங்களைப் பேணி, பாதுகாத்து, பெருக்கி திறம்பட பயன்படுத்துதல்
- வேளாண்மை உற்பத்தியை நீடித்து பெருக்குதல்
- பசுமை தரும் மரங்கள், தாவரங்களை வளர்த்து நலிவடைந்துள்ள இயற்கைச் சூழலை மேம்படுத்துதல்
- மானாவாரி மற்றும் இறவை நிலங்களுக்கிடையே உள்ள மகசூல் வேறுபாட்டினைக் களைதல்
- கிராமப்புற வேலைவாய்ப்பைப் பெருக்குதல்

தேசிய மானாவாரி நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டமானது தமிழ்நாட்டில் தஞ்சை, நாகை, திருவாரூர், சென்னை, நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களைத் தவிர, இதர 23 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒரு எக்டேருக்கு ரூ.4,500/– வீதம் நீர்வடிப் பகுதி வளர்ச்சிக்காக செலவிட வழிவகை உள்ளது. மத்திய அரசின் வழிமுறைகளுக்கு ஏற்ப மாவட்ட ஆட்சியரை தலைவராகக் கொண்டு மாவட்ட நீர்வடிமுகடுக் குழுவும், மாவட்ட வேளாண்மை இணை இயக்குநரை தலைவராகக் கொண்டு மாவட்ட நீர்வடி மேம்பாட்டு முகமையும் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

திட்டச் செயலாக்க முகமை, நீர்வடி மேம்பாட்டுக் குழு உறுப்பினர்கள் அனைவரும் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டனர். தமிழ்நாட்டில் 763 நுண் நீர்வடிப் பகுதியில் இத்திட்டத்தைச் செயலாக்க 102 திட்டச் செயலாக்க முகமைகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. மேற்படி திட்டச்செயலாக்க முகமை அரசுத் துறைகளான வேளாண்மை, வேளாண்மை பொறியியல், வனம் மற்றும் அரசு சாரா நிறுவனங்களைச் சார்ந்தவர்கள் 23 மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். நுண் நீர்வடிப்பகுதி வரைபடம் அமைக்கும் பணி வேளாண் பொறியியல் துறையினால் மேற்கொள்ளப்பட்டது.

பத்தாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் முதல் ஆண்டான 2002–2003–ல் 763 நுண் நீர்வடிப் பகுதிகளுக்காக (ஒரு அலகு–500 எக்டேர்) சாதனை அடையப்பட்டுள்ளது. அரசு இத்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்த



தொகை முழுவதும் செலவிடப்பட்டது. 2003–2004 ஆம் ஆண்டில் தொகை செலவிடப்பட்டு சாதனை முழுவதும் அடையப்பட்டுள்ளது. ரூ.1,525.00 இலட்சம் 33,888 எக்டேர் பரப்பளவில் சாதனை அடைய

அரசு ஆணை எண் 230, வேளாண்மை (த.நி.மே) துறை, நாள் 14–7–2003–ன்படி நவப்ரா திட்டமானது தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை செயல்பாட்டின்கீழ் 30–9–2004-லிருந்து கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு (2004–2005) அரசு ஆணை எண் 201, வேளாண்மை (வசெமதி) துறை, நாள் 11–6–2004–ன்படி 44,444 எக்டேர் பரப்பளவில் சாதனை எய்த ரூ.2,000.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சாதனை விவரம்**

செயல் அலகு எக்டேரில்

| வ. எண் | செயல் படுத்தப்படும் பரப்பு | 2003-2004 | | 2004-2005 | | 2005-2006 எதிர் பார்க்கும் இலக்கு |
|---|---|---|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை 28–2–2005 | |
| 1 | அடையப்பட்ட பரப்பு | 33888 | 33888 | 44444 | 8598 எக்டேர் | 66666 |

**நிதி**

அலகு ரூபாய் இலட்சத்தில்

| வ. எண் | நிதி ஒதுக்கீடு | 2003-2004 | | 2004-2005 | | 2005-2006 எதிர் பார்க்கும் இலக்கு |
|---|---|---|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை 28–2–2005 | |
| 1 | நிதி செலவினம் | 1525.00 | 1525.00 | 2000.00 | 418.747 | 3000.00 |

## 6. நீர் வடிப்பகுதி மேம்பாட்டு நிதி

நீர்வடிப் பகுதி மேம்பாட்டு நிதி, நபார்டு வங்கிமூலம் தோற்றுவிக்கப்பட்டது. நீர்வடிப் பகுதியில் பங்கேற்பு தொடர்பான செய்திகளைப் பரப்புவது இதன் முக்கிய நோக்கமாகும். இந்த நிதியானது

[2005 மார்ச் 31

அடிப்படை மற்றும் அத்தியாவசிய கட்டமைப்புக்கான வெற்றிகரமான காரணிகளை அரசு, பகுதி அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படும். நீர்வடிப் பகுதி மேம்பாட்டு நிதியானது மத்திய, மாநில அரசுகளைச் சார்ந்து செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் இரண்டு இனங்கள் உள்ளன. 1. நிதி இனம் (1/3), 2. கடன் இனம் (2/3). இத்திட்டம் கடன் பெற்ற மூன்று ஆண்டுகள் கழித்து 9 ஆண்டுகள் காலத்திட்டத்தில் திருப்பிச் செலுத்த வேண்டும். வட்டி விகிதமானது 4.5% ஆகும். ஒரு எக்டேருக்கு ரூ. 6,000/– நிதி செலவழிக்கலாம். தற்சமயம், நீர்வடிப் பகுதி மேம்பாட்டு நிதியானது 7 மாவட்டங்களில் முறையே, புதுக்கோட்டை (5), வேலூர் (2), இராமநாதபுரம் (3), சிவகங்கை (3), தூத்துக்குடி (4), திண்டுக்கல் (7) மற்றும் திருநெல்வேலி (3), நபார்டு வங்கியின் ஒத்துழைப்புடன் செயல்படுத்தப்படுகிறது. இந்த நிதியானது வேளாண்மை உற்பத்தி ஆணையர் தலைமையில் செயல்படுத்தப்பட்டுவரும் மாநில அளவில் இயங்கும் குழுமூலம் வழிநடத்தப்பட்டு, கண்காணிக்கப்படுகிறது.

நீர்வடிப் பகுதி மேம்பாட்டு நிதி (ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | நிதி ஒதுக்கீடு | 2003-2004 | | 2004-2005 | | 2005-2006 எதிர்பார்க்கும் இலக்கு |
|---|---|---|---|---|---|---|
| 1 | நிதி ஒதுக்கீடு | – | – | 168.750 | – | 393.750 |



2005 மார்ச் 31]

## அத்தியாயம் – 6

## வேளாண் கல்வி மற்றும் ஆராய்ச்சி

### 1. முன்னுரை

தமிழகம் உணவு உற்பத்தியில் அடைந்துள்ள தன்னிறைவைப் பேணுதலுக்கும் ஏற்றுமதிக்கு ஏற்றபடி வேளாண் விளைபொருட்களை உற்பத்தி செய்யவும் தேவையான தமிழகத்திலுள்ள வேளாண்மை அடிப்படை ஆதார வளங்களைக் கண்டறிந்து கிராமப்புற பொருளாதாரம் மேம்பாடு அடையும் நோக்கில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தனது வேளாண்மைக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகளில், தீவிர முனைப்பைக்காட்டி வருகின்றது. தமிழகத்தில் வேளாண்மை நாளுக்கு நாள் ஏற்படும் புதிய பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளதால் அதற்கேற்றவாறு வேளாண்மைத் தொழில்நுட்பங்களில் மாறுதல்களை ஏற்படுத்த வேண்டிய நிலையில் உள்ளது. முக்கியமாக, பயிர்வகைகளில் உற்பத்தித் திறன் தொடர்ந்து அதிகரிக்காமல் கடந்த சில ஆண்டுகளாக ஒரே அளவில் நிலைத்துள்ளது. நீர்வளம் குறைந்து வருகின்றது. பயிரிடப்படும் நில அளவும் குறைந்து வருகின்றது. மொத்தப் பயிர்ச் சாகுபடி பரப்பளவு மற்றும் பாசனப் பரப்பளவில் சிறிதளவு குறைவும் ஏற்பட்டுள்ளது. மேலும் உணவு தட்டுப்பாடு என்ற நிலை மாறி சந்தை உபரி உற்பத்தி நிலை ஏற்பட்டு, இதனை உள்நாடு மற்றும் வெளி நாடுகளில் வெற்றிகரமாக விற்பனை செய்ய வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது. இவ்வாறான சூழ்நிலைகளைச் சமாளிக்கும் பொருட்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தனது வினை – முறைத் திறன்களை மாற்றியமைத்துக் கொண்டு வருகிறது.

### 2. கல்வி

உலகமயமாக்குதலால் இந்திய வேளாண்மையில் புதிய வாய்ப்புகளும் பிரச்சினைகளும் தோன்றியுள்ளன. தாராளமயமாக்குதலால் தோன்றும் அறைகூவல்களை எதிர்கொள்ள இந்திய வேளாண்மையில் தகுதிவாய்ந்த தொழில்நுட்ப மனித வளம் தேவைப்படுகிறது. பொதுவாக, வேளாண்மைக் கல்வி மற்றும் அதன் முதுநிலைக் கல்வி அளிப்பதால், மாறுபடும் தேவையை எதிர்கொள்ளத்தக்க மனிதவளம் வேளாண்மையினால் பயன்பெறுவோர்க்கு கிடைக்கும் என நம்பலாம். எனவே, தொடர்ந்து பாடத் திட்டங்களை மேம்படுத்தியும், தேவைக்கேற்ப பாடங்களை அறிமுகப்படுத்தியும், தனியார் மற்றும் பொது

நிறுவனங்களுடன் கூட்டு சேர்ந்து ஆராய்ச்சி போன்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பல்கலைக்கழகத்தின் ஆக்கக் கூறுகளாக ஏழு வளாகங்களில் அமைந்துள்ள பத்து கல்லூரிகளில் வேளாண்மை, தோட்டக் கலை, வனவியல் மற்றும் மனையியல் ஆகியவற்றில் இளம் அறிவியல் மற்றும் வேளாண் பொறியியல் பட்டப் படிப்பினையும் அளித்து வருகின்றது (இணைப்பு 1). இது தவிர உணவுப்பொருள் பதனம் செய் பொறியியல், வேளாண் உயிரியல் தொழில்நுட்பம், தோட்டக்கலை ஆகிய மூன்று தன்னாதரவு இளம் தொழில்நுட்பவியல் பாடங்களையும் 2001 முதல் அறிமுகப்படுத்தியுள்ளது. மேலும் 2004 ஆம் ஆண்டில் தன்னாதரவு பிரிவில் இளந்தொழில் நுட்பவியல் (சக்தி மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல்) என்ற பட்டப்படிப்பும், உயிரியல் தகவல் நுட்பவியல், உயிர் வேதியல் தொழில்நுட்பவியல் மற்றும் வேளாண்மை வானிலைவியல் என்று மூன்று மூதறிவியல் பட்டப் படிப்புகளும் தொடங்கப்பட்டுள்ளன.

தமிழக வேளாண்மையை நவீனப்படுத்த வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த துறைகளில் நவீன தொழில்நுட்ப திறமை கொண்ட மனித வளம் மிகவும் அவசியம். இத்தேவையை நிறைவு செய்வதற்காக இப்பல்கலைக்கழகம் பட்டப்படிப்பு பிரிவுகளில் பாடத் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு கீழ்க்காணும் பயிற்சிகளை அளித்து வருகின்றது:

1. இளநிலை மாணவர்களுக்குக் கற்பிக்கப்படும் ஒவ்வொரு பாடத் திட்டத்திலும் மாறுதல் செய்யப்பட்டு அவற்றில் செய்முறை திறனுடைய பகுதி சேர்க்கப்பட்டு மாணவர்களின் அறிவை களப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

2. காளான் வளர்ப்பு, நாற்று தயாரித்தல், கோழிப் பண்ணை, உயிரியல் உரங்கள் தயாரித்தல், உயிரியல் பூச்சிக்கொல்லிகள் தயாரிப்பு, தேனீ வளர்ப்பு போன்ற வணிக முறையிலான வேளாண்மைப் பாடங்கள் மாணவர்கள் முழுமையாக உற்பத்தியில் ஈடுபடவும், அவர்களிடையே தன்னம்பிக்கை ஏற்படுத்தி தொழில்முனைவோர்களாக மாற வேண்டும் என்ற தூண்டுதலையும் ஏற்படுத்துகின்றது.

3. முன்னேற்றமடைந்துள்ள உழவர்கள், அரசு வளர்ச்சித் துறைகளிலுள்ள அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு கருத்துப் பரிமாற்றம் செய்ய வாய்ப்புகள் ஏற்படுத்துவதால் மாணவர்கள், வேளாண்மையில் பங்குபெறும் பயனீட்டாளர் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளை அறிந்துகொள்ள வாய்ப்பு அளிக்கின்றது.



4. ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின்கீழ் மாணவர்கள் 10.5 நாட்கள் உழவர்களுடன் தங்கி நடைமுறை உழவுத் தொழிலினை அறிந்துகொள்ள வாய்ப்பு அளிக்கப்படுகின்றது.

5. மாணவர்கள் பல்வேறு போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறும் வண்ணம் அவர்களுக்கு சிறப்புப் பாடங்கள், பொது அறிவு மற்றும் ஆங்கில மொழி அறிவிலும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

இப்பல்கலைக்கழகத்தில் மூதறிவியல் பட்டப்படிப்பில் 22 பாடப் பிரிவுகளிலும், முனைவர் பட்டப் படிப்பில் 20 பாடப் பிரிவுகளிலும் (வேளாண்மை மற்றும் சார்ந்தவை) கல்வி வழங்கப்படுகின்றது. மூதறிவியல் பாடத் திட்டத்தில் மாணவர்கள் ஆராய்ச்சிப் பிரச்சினைகள் தேர்ந்தெடுக்கும்போது உழவர்கள் எதிர்கொள்ளும் களப் பிரச்சினைகளையே கருத்தில் கொள்ளப்படுகின்றன. இவ்வாராய்ச்சி முடிவுகள் உழவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் நோக்குடன் செய்யப்படுகிறது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 2004–2005 ஆம் ஆண்டில் 293 மாணவர்களும் (51%), 277 மாணவிகளும் (49%) இளநிலை பட்டப்படிப்புகளில் சேர்க்கப்பட்டனர். இது தவிர. முதுநிலைப் பட்டப்படிப்பில் 114 மாணவர்கள் (46%) மற்றும் 132 மாணவியரும் (54%), முனைவர் பட்டப் படிப்பில் 36 மாணவர்களும் (49%), 38 மாணவியரும் (51%) சேர்க்கப்பட்டனர். மொத்தத்தில் சேர்க்கப்பட்ட 890 மாணவ/ மாணவியரில், 443 மாணவரும் (50%) 447 மாணவியரும் (50%) ஆவர்.

திண்டிவனம் எண்ணெய் வித்து ஆராய்ச்சி நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள முனைவர் சி.சுப்பிரமணியம் வேளாண்மை நிலையத்தில் 2004 ஆம் ஆண்டு தன்னாதரவு பாடத் திட்டமாக 50 மாணவர் சேர்க்கையுடன் வேளாண்மை பட்டயப் படிப்பு துவங்கப்பட்டுள்ளது.

## 3. ஆராய்ச்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக அறிவியலாளர்கள் 507 ஆராய்ச்சித் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாராய்ச்சிகளுக்கான நிதியுதவியினை மாநில மற்றும் நடுவண் அரசுகள், அரசின் பிற நிறுவனங்கள், தனியார் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் அளித்து வருகின்றன.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தன் கீழுள்ள ஏழு கல்லூரிகள், 32 ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் 13 வேளாண் அறிவியல் நிலையங்கள், 5 பயிர் மருத்துவ மையங்கள் மூலமாக தமிழகத்தின் ஏழு வேளாண் வானிலை மண்டலங்களின் பகுதி சார்ந்த பிரச்சினைகளைத் தீர்க்கும்வண்ணம் ஆராய்ச்சிகள் மேற்கொண்டு வருகின்றது. (இணைப்பு II)

### 3.1 எதிர்காலத் திட்டங்கள்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் கீழ்க்கண்ட நோக்கங்களுடன் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன:

- உயிர் எரிசக்தி கொண்ட பயிர்களான சர்க்கரைக் கிழங்கு, சர்க்கரைச் சோளம் மற்றும் காட்டாமணக்கு பயிர்களை அறிமுகப்படுத்துதல், காட்டாமணக்கு பயிரின் வேளாண் தொழில்நுட்பங்களை நிலைப்படுத்துதல் மற்றும் இதுபோன்ற பயிர்களில் இருந்து தரமான முறையில் எண்ணெய் பிரித்தெடுக்கும் வழிகளைக் கண்டறிதல், சர்க்கரைக் கிழங்கிலிருந்து சர்க்கரையைப் பிரித்தெடுக்கும் முறை மற்றும் சர்க்கரைச் சோளத்திலிருந்து எரிசாராயத்தை வடிகட்டும் முறைகள் ஆகியவற்றின் மீதான ஆராய்ச்சியை முனைபபாக செயல்படுத்தி, இத்தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்குப் பரப்புதல். உயிர் எரிபொருள் பிரித்தெடுக்கும் முன்வடிவ ஆலை ஒன்று செயல் விளக்கத்திற்காக நிறுவப்பட்டுள்ளது.
- நிலையான அங்கக பண்ணைய முறைகள் மற்றும் துல்லிய பண்ணைய முறைகளை விரிவுபடுத்துதல்.
- விவசாயிகளின் பங்கேற்பு ஆராய்ச்சியின் மூலமாக நீடித்து நிலைத்த வேளாண்மைக்காக தகுந்த ஒருங்கிணைந்த பண்ணைய முறைகளை உருவாக்குதல்.



- தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவகால மழையளவினை உத்தேசமாக முன் அறிவித்தல் மற்றும் மத்திய கால வானிலை முன்னறிவிப்பு மூலமாக பண்ணை ஆலோசனைகள் கூறுதல்.
- உயிரற்ற காரணிகளால் (வெப்பம், உப்பு மற்றும் வறட்சி) ஏற்படும் பயிர் இன்னல்களை எதிர்கொண்டு அதிக மகசூல் தரும் திறன்கொண்ட பயிர் இரகங்களைத் தேர்ந்தெடுத்தல்.
- ஆலை மற்றும் நகர்ப் பகுதி கழிவுப் பொருட்களினால் பயிர் செய்வதில் ஏற்படும் தாக்கத்தினைக் கண்டறிந்து அதற்கேற்ப பாதிக்கப்பட்ட மண் வளத்தைப் பேண தகுந்த பயிர் சுழற்சி முறைகளைக் கண்டறிதல்.
- குறிப்பிட்ட மகசூலை அடையும் பொருட்டு மண் ஆராய்ச்சி மூலமாக தகுந்த உர அளவினைப் பரிந்துரைத்தல்.
- தமிழ்நாட்டில் பண்ணை திட்டமிடலுக்காக, புவி வரைபட தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொலையுணர்வு முறைகளில் கிடைக்கும் விவரங்களைப் பயன்படுத்துதல்.
- உயிர் தொழில்நுட்ப முறைகள் மூலமாக உயர் விளைச்சல் இரகங்களை உருவாக்குதல்.
- உயிர் தொழில்நுட்ப வாயிலாக சன்ன இரக அரிசி கொண்ட உயிர் தொழில்நுட்ப வாயிலாக சன்ன இரகங்களை உருவாக்குதல், உயிர் வீரிய ஒட்டு மற்றும் நெல் இரகங்களை உருவாக்குதல். உயிர் தொழில்நுட்பம் மூலமாக வறட்சி தாங்கக்கூடிய நெல் இரகங்களை உருவாக்குதல்.
- குருத்துப்பூச்சி/இலை மடிக்கும் புழு ஆகியவற்றிற்கு எதிர்ப்புத் தன்மை கொண்ட மரபணு மாற்ற நெல் இரகங்களை உருவாக்குதல்.
- குறைந்த வயதும் நல்ல தரமும் கொண்ட குறுகிய கால நெல் இரகங்களை மேம்படுத்துதல். அதிக விளைச்சலும் மிகச்சிறந்த தன்மையும் கொண்ட நடுத்தர வயதுடைய நெல் இரகங்களை மேம்படுத்துதல் மற்றும் சைட்டோபிளாஸ்மிக் ஆண் மலட்டுத் தன்மை தொழில்நுட்பம் மூலமாக வாசனையற்ற நல்ல தரமான அரிசி கொண்ட, அதிக எதிர்ப்பு சக்தி கொண்ட வீரிய நெல் இரகங்களை உருவாக்குதல்.
- சைட்டோபிளாஸ்மிக் ஆண் மலட்டுத் தன்மை தொழில்நுட்பம் மூலம் கம்பு வீரிய ஒட்டு இரகங்களை உருவாக்குதல், ஒரு வழி வீரிய மக்காச் சோள இரகங்களை உருவாக்குதல் மற்றும்

வறட்சிப் பகுதிகளுக்கேற்ற கேழ்வரகு மற்றும் சிறுதானியங்களை உருவாக்குதல்.

- மரபு ஆண்மலட்டுத் தன்மை தொழில்நுட்பம்மூலம் வீரிய இரகங்களை உருவாக்குதல், காய்த்துளைப்பான் எதிர்ப்புத் தன்மையுடன் குறுகியகால துவரை இரகங்களை உருவாக்குதல், மஞ்சள் தேமல் நோய் நச்சுயிரிக்கு எதிர்ப்புத் தன்மை கொண்ட உளுந்து மற்றும் பாசிப்பயறு இரகங்களை உருவாக்குதல், ஊடு பயிர் செய்வதற்கேற்ற குறுகியகால சோயா மொச்சை இரகங்களைக் கண்டறிதல், சமையலுக்கேற்ற காய்களைக் கொண்ட மொச்சை மற்றும் தட்டைப்பயறு இரகங்களைக் கண்டறிதல்.
- அதிக மகசூலும் மற்றும் அதிக எண்ணெய்ச்சத்தும் கொண்ட மானாவாரி/ இறவை வேர்க்கடலை இரகங்களை உருவாக்குதல், அதிக எண்ணெய்ச்சத்தும் வறட்சி தாங்கும் தன்மையும் கொண்ட எள் மற்றும் சூரியகாந்தி வீரிய ஒட்டு இரகங்களை உருவாக்குதல், தனிப் பயிராகவும் ஊடு பயிராகவும் பயிரிடவல்ல ஆமணக்கு இரகங்கள்/ஒட்டு இரகங்களை உருவாக்குதல்.
- பருத்தியில் மானாவாரி/இறவை மேட்டுப் பகுதியில் நெல்தாளடியில் பயிரிடவல்ல இரகங்களை/வீரிய ஒட்டு இரகங்களை உருவாக்குதல், நீளமான இழைகள் கொண்ட அதிக இழைத்திறன் கொண்ட நாட்டுப் பருத்தி இரகங்கள் மற்றும் காய்ப்புழு எதிர்ப்புத் தன்மை கொண்ட வீரிய ஒட்டு பருத்தி இரகங்களை உருவாக்குதல்.
- அதிக மகசூலும் சத்துத் தன்மையும் கொண்ட கூலப் பயிர்/ வேர்முடிச்சு கொண்ட தீவனப் பயிர்களை உருவாக்குதல்.
- வேளாண்மை மற்றும் தோட்டப் பயிர்களில் (காய்கறி பயிர் உட்பட) பூச்சி, பூஞ்சாண நோய் எதிர்ப்புத் தன்மை கொண்ட இரகங்கள் மற்றும் வீரிய ஒட்டு இரகங்களை உருவாக்குவதே முக்கிய நோக்கமாகும். முக்கியமான நோய்களுக்கு எதிர்ப்புத் தன்மை கொண்ட. பூச்சி மருந்துகள் தெளிக்காமல் பயிரிடக்கூடிய வீரிய ஒட்டு இரகங்கள் தக்காளியில் உருவாக்கப்பட்டுள்ளன. இவை 2006 ஆம் ஆண்டில் பயிர்செய்யும் பொருட்டு வெளியிடப்படவுள்ளன. இவை பூச்சி மருந்துகள் தெளிக்கப்படாத நிலையில் எக்டேருக்கு 90–100 டன் விளைச்சல் தரவல்லவையாகும்.



- சாதாரண முறையிலான ஒட்டுச் சேர்க்கையின் மூலமாக குருத்துப்புழு மற்றும் காய்ப்புழு எதிர்ப்புத் தன்மை கொண்ட வீரிய ஒட்டு கத்தரி இரகங்களையும், மக்கள் மிகவும் விரும்பக்கூடிய நிறம் மற்றும் சுவை கொண்ட காய்களைத் தரவல்ல குருத்துப்புழு மற்றும் காய்ப்புழு எதிர்ப்புத்திறனுடைய பி.டி. மரபணு கொண்ட கத்தரி இரகங்களைக் கண்டறிதல்.
- நூற்புழு எதிர்ப்பு மற்றும் நோய் எதிர்ப்புத் தன்மையும் வாய்ந்த வாழை இரகங்களை உருவாக்குதல்.
- வாழையில் ஏற்படும் மண்மூலம் பரவும் ஒட்டுண்ணிகளைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த மேலாண்மை முறைகளை உருவாக்குதல்.
- புதிய உயிர்க் கொல்லிகளை அறிந்து மேம்படுத்துதல்.
- பி.டி. பருத்தி இரகங்களுக்கு பூச்சி மேலாண்மை உத்திகளை உருவாக்குதல்.
- சாகுபடி பரப்பில் அதிக அளவு தரிசு நிலங்கள் காணப்படுவதால் இந்நிலங்களில் பயிரிடத்தக்க பழமரங்கள் மற்றும் தச்சுக்குப் பயன்படும் மற்றும் தச்சுக்குப் பயன்படாத மர இரகங்களை அடையாளங்கண்டு அவற்றை உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுத்தல்.
- மூலிகைப் பயிர்கட்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். முக்கியமான மூலிகைப் பயிர்களான மருந்துக் கூர்க்கன்கிழங்கு, அமுக்கரான்கிழங்கு, கீழாநெல்லி, கண் வலிக்கிழங்கு மற்றும் நில வேம்பு ஆகியவற்றை சாகுபடி செய்ய ஏற்ற தரமிகுந்த தொழில் நுட்பங்களைக் கண்டறிவதுடன் அவற்றினின்று மருந்தாகப் பயன்படும் உயிர் வேதியியல் பொருட்கள் மற்றும் பிறவகை உயிர்வேதிப் பொருட்களை வடித்தெடுக்கும் வழிமுறைகளைக் கண்டறிதல்.
- தமிழ்நாட்டிலுள்ள ஏழு வேளாண் வானிலை மண்டலங்களிலுள்ள அதிக வறட்சி, மிதமான வறட்சி மற்றும் இயல்பான பருவநிலை சூழல்கட்கு ஏற்ற மாற்றுப் பயிர் உத்திகள் உருவாக்கப்பட்டுள்ளன.
- வேளாண் தொழில் முனைவோரின் தேவையைக் கருத்தில் கொண்டு அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப மையம் அமைக்கப்பட்டுள்ளது. முன்னேற்றமடைந்த விவசாயிகள்

அவர்களின் விளைபொருட்களை விற்பனையில் தேக்கமடைந்த நிலையில் நுகர்வோர் பொருளாக மாற்றத் தேவையான உற்பத்தி முறைகளுக்கான கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

- பயிர் உற்பத்தித் திறனை அதிகரிக்கவல்ல நுண்ணுயிர் கூட்டங்களைக் கண்டறிதல்.
- மதிப்பூட்டப்பட்ட வேளாண் பொருட்களின் உற்பத்திக்கான நுண்ணுயிர் தொழில்நுட்பங்களைக் கண்டறிதல்.
- பொருட்கள் கெடாமல் இருக்கும் தன்மையுடைய புதிய உட்செலுத்திகளைக் கண்டறிதல்.
- நெற்பயிருக்கு தழைச் சத்தை நிலைப்படுத்தவல்ல அமிலத் தன்மை தாங்கவல்ல சைனோ பாக்டீரியா வளர்ப்புகளைப் பிரித்தறிதல்.
- 2004–2005 ஆம் ஆண்டில் பகுதி II திட்டத்தின்கீழ் 11 புதிய ஆராய்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் மானாவாரிப் பகுதியில் நெல் உற்பத்தி அளவினை அதிகமாக்குதல், குடிலுக்கு வெளியே காளான் தயாரிக்கும் முறைகளை ஏற்படுத்துதல், உயிரியல் எரிபொருளுக்கு மூலப்பொருளான காட்டாமணக்கு பயிருக்கு ஏற்ற சாகுபடித் தொழில்நுட்பங்கள் உருவாக்குதல், வேதி மூலப்பொருட்கள் இல்லாத பூச்சிக் கட்டுப்பாட்டு முறைகளைக் கண்டறிதல், சுற்றுச்சூழல் பாதிக்காத கழிவு நீர் நிர்வாகம், மானாவாரி நிலங்களுக்கேற்ற செலவில்லா அல்லது குறைந்த செலவு கொண்ட தொழில் நுட்பங்கள் பற்றிய தகவல் பதிவு செய்தல், ஏற்றுமதித் தேவைக்கு ஏற்ற பயிர் உற்பத்தியினைப் பெருக்கும் பொருட்டு பயிர்த் திட்டங்களை மாற்றியமைத்தல் ஆகியன வலியுறுத்தப்பட்டுள்ளன.
- 2005–2006 ஆம் ஆண்டில் செயல்படுத்தும் பொருட்டு பகுதி II திட்டத்தில் கீழ்க்கண்ட 16 ஆராய்ச்சித் திட்டங்களின் கருத்துருக்கள் மாநில திட்டக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளன:
  1. சுத்திகரிக்கப்பட்ட வடிப்பாலை கழிவு நீர் மறுசுழற்சி மூலம் காட்டாமணக்கு செடி வளர்த்து தரிசு நிலங்களைப் பசுமை ஆக்குதல்.
  2. கரும்பைத் தாக்கும் கம்பளி அசுவிணியைக் கட்டுப்படுத்தும் மேலாண்மை முறைகள்.



3. வெப்ப மண்டல சர்க்கரைக் கிழங்கு சாகுபடியை தமிழகத்தில் அறிமுகப்படுத்துதல்.
4. தமிழ்நாட்டில் சர்க்கரைச் சோளம் சாகுபடியை உழவர்களின் ஒத்துழைப்பு மற்றும் விளக்கத்திடல் மூலம் அதிகப்படுத்துவதற்கானத் திட்டம்.
5. தமிழ்நாட்டில் மக்காச் சோள பயிர் விளைச்சலை உழவர்களின் ஒத்துழைப்பு மற்றும் விளக்கத்திடல் மூலம் அதிகப்படுத்துவதற்கானத் திட்டம்.
6. விவசாயிகளின் பங்கேற்புத் திட்டத்தின்கீழ் இராமநாதபுரம் மாவட்ட கடலோர பகுதிகளின் குறைந்த ஆழமுள்ள நீர் ஊற்றைப் பயன்படுத்தி மானாவாரி நிலக்கடலை சாகுபடியில் நடமாடும் சிறிய தெளிப்பு நீர்ப் பாசன முறை அறிமுகம்.
7. கோலியஸ் (மருந்துக் கூர்க்கன்) பயிரில் வேர் அழுகல் நோயைக் கட்டுப்படுத்த சுற்றுச்சூழல் சார்ந்த புதிய எதிர் உயிர்க்கொல்லிக் கலவை உற்பத்தி செய்தலும் மற்றும் அதன் செயல்பாட்டுத் திறனை ஆய்வு செய்தலும்.
8. நெல் இரகங்களில் கரு விதைகளை மேம்படுத்துதல்.
9. மண்புழு உர உற்பத்தித் தொழில்நுட்பம்மூலம் ஒருங்கிணைந்த மண் சத்து நிர்வாகம்.
10. வேளாண் மற்றும் தோட்டப் பயிர்களுக்கு ஏற்ற வேர்பூசண உயிர் உரங்கள் மற்றும் அவற்றின் தரக் கட்டுபாடு பற்றிய ஆராய்ச்சி.
11. வரையறுக்கப்பட்ட அங்கக முறையில் மஞ்சள் சாகுபடி.
12. வினையியல் செயல்பாட்டினை மேம்படுத்துவதன்மூலம் பயறு வகை பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்துவதற்கான ஆய்வு.
13. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நெல் தவிர இதர பயிர்களில் தரமான விதை உற்பத்தியை மேம்படுத்துதல்.
14. தமிழகத்தின் பல்வேறு வேளாண் தட்பவெப்ப மண்டலங்களுக்கு ஏற்ற தீவனப் பயிர்களை அறிமுகப்படுத்தி அவற்றை விவசாயிகளிடையே பரப்புதல்.

15. இரசாயன உபயோகமின்றி மஞ்சள் பதப்படுத்தும் முறையைக் கண்டறிதல்.

16. சமீபத்தில் 'சுனாமி' என்னும் ஆழிப்பேரலையால் கடலோர விளைநிலங்களில் உப்பு படிந்து மண்வளத்திற்கு பாதிப்பு ஏற்பட்டது. இதைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தினால் உருவாக்கப்பட்டுள்ள உப்புத் தன்மையைத் தாங்கி வளரக்கூடிய நெல் இரகங்களின் விதைகளை திருச்சி மற்றும் ஆடுதுறையில் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வேளாண்மைத் துறை மூலமாக வழங்குவதற்கான திட்டம் ஒன்று தயார் செய்யப்பட்டு அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## 4. வேளாண் கொள்கைப் பரிந்துரை

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வேளாண்மைப் பயிர்ச்சூழல், மழை அளவு, மாநிலத்தில் வேளாண்மையில் ஏற்பட்டு வரும் வளர்ச்சி வேகம் ஆகியவற்றை அவ்வப்பொழுது அளவிட்டு வருகின்றது. இதன் அடிப்படையில் வெவ்வேறு வேளாண் வளர்ச்சித் திட்டங்களை உருவாக்கி வேளாண் துறைக்கு அளித்து அவை வேளாண் துறை விரிவாக்கப் பணியாளர்களுடன் விவாதிக்கப்பட்டு பின் அரசின் கொள்கை முடிவுகளில் சேர்க்கப்படுகின்றது.

## 5. விரிவாக்கம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலுள்ள வேளாண்மை விரிவாக்கக் கல்வி மையம் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சிகளின்மூலம் வெளிப்படும் புதிய தொழில்நுட்பங்களை வேளாண் பெருமக்களுக்கும், தமிழக வேளாண் துறை விரிவாக்கப் பணியாளர்கட்கும் தனது கட்டுப்பாட்டின்கீழ் ஏற்கெனவே இயங்கிவரும் ஆறு வேளாண் அறிவியல் நிலையங்கள், ஐந்து பயிர் மருத்துவ மையங்கள், தகவல் தொடர்பு மையம் மற்றும் பயிற்சிப் பிரிவு மூலமாக உடனடியாகச் சென்றடையும் பொறுப்பினைச் சிறப்புடன் ஆற்றிவருகின்றது. இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தினரின் நிதியுதவியுடன் ஏழு வேளாண் அறிவியல் நிலையங்கள் (7 மாவட்டங்களில்) 2004 ஆம் ஆண்டில் துவங்கப்பட்டுள்ளன. இவற்றையும் சேர்த்து மொத்தம் 13 வேளாண் அறிவியல் நிலையங்கள் இயங்கி வருகின்றன. (இணைப்பு III) கோயம்புத்தூரில் அமைந்துள்ள தகவல் தொடர்பு மையம் புதிய கண்டுபிடிப்புகளை உழவர்கட்குச் சென்றடைய வானொலி, நாளிதழ்கள்,



வேளாண் பத்திரிகைகள், பிரசுரங்கள், ஒளி நாடா நிகழ்ச்சிகள் மற்றும் தொலைக்காட்சி போன்ற தகவல் தொடர்பு சாதனங்கள்மூலம் பரப்பி வருகின்றது. மேலும் வானொலி வேளாண்மைப் பள்ளி மற்றும் அஞ்சல் வழிக்கல்வி மூலமாகவும் உழவர்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றது. குறிப்பிட்ட நிலப்பரப்பில் அதிக அளவு வருமானம் பெரும் உத்தியை முழு வடிவமாக செயல்வடிவில் எடுத்துரைக்கும் பொருட்டு தருமபுரி மற்றும் கிருட்டிணகிரி மாவட்டங்களில் துல்லிய பண்ணைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்மூலம் விவசாயிகள் புதியதாக செயல்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களை நேரில் கண்டு அதன் விளைவுகளைத் தெரிந்துகொள்வதால் துல்லிய பண்ணைமுறைமீது அவர்களுக்கு நம்பிக்கை பிறந்துள்ளது.

வேளாண்மை விரிவாக்கக் கல்வி மையத்தின் செயல்பாடுகளின் முக்கிய குறிக்கோள்களாவன:

- உயர் தொழில்நுட்பப் பயிற்சிகளை அரசின் விரிவாக்க அலுவலர்கட்கும், அரசு சார்புள்ள நிறுவனங்களைச் சேர்ந்தோருக்கும், அரசு சாரா நிறுவனங்கட்கும் மற்றும் வங்கி அலுவலர்கட்கும் அளித்தல்.
- பயிர்தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகள், பண்ணை மகளிர், கிராமப்புற இளைஞர்கள் மற்றும் உழவர் விவாதக் குழுக்களின் ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோருக்குப் பயிற்சியளித்தல்.
- வேளாண்மை மற்றும் தோட்டக் கலைத் துறையினர் நடத்தும் மாதாந்திர தொழில்நுட்பக் கூட்டம் மற்றும் முன் தொழில்நுட்பக் கூட்டங்களை நடத்துதல்.
- தமிழக விவசாயிகள் மற்றும் பிற மாநில விவசாயிகளின் சுற்றுலாக்களுக்கு ஏற்பாடு செய்தல். மாநில அளவிலான உழவர் தினவிழா மற்றும் விவசாயிகள்—அறிவியலார்களின் கலந்துரையாடல்களுக்கு ஏற்பாடு செய்தல்.
- பயிர் மருத்துவ மையங்கள் மற்றும் வேளாண் அறிவியல் நிலையங்களின் செயல்பாடுகளைக் கண்காணித்தல் மற்றும் மேம்படுத்துதல்.
- 'வளரும் வேளாண்மை' மற்றும் 'வேளாண் செய்திக் குறிப்புகள்' வெளியிடுதல்.
- தேவைக்கேற்ற பிற விரிவாக்க செயல்பாடுகள்.

[2005 மார்ச் 31

### 5.1 தொலைதூரக் கல்வி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமானது முறை சார்ந்த கல்வியைக் கொடுக்க நிறுவப்பட்டதெனினும், புதிய தொழில் நுட்பங்களை விவசாயிகளிடையே வேகமாகப் பரப்புவதற்கு முறையான கல்வி மட்டுமே பயன்தராது எனக் கருதப்படுகிறது. எனவே இப்பல்கலைக்கழகம் முறைசாரா மற்றும் முறைசார்ந்த கல்வித் திட்டங்களைச் செயல்படுத்தும் பொருட்டு தேவையான கொள்கை மாற்றங்களுடன், தொலைதூரக் கல்வி மற்றும் தொடர்பு தொழில்நுட்பங்களைக் கடைப்பிடிக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. இதற்காக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் "காமன்வெல்த் ஆப் லேர்னிங்" (Commonwealth of Learning) என்ற நிறுவனத்திடமிருந்து மென்பொருள் உதவி, கல்விச் சாதனங்கள் மற்றும் கீழ்க்கண்ட புதிய தொழில்நுட்பங்களில் பயிற்சி வாயிலாகவும் உதவி கோரி வருகிறது:

- ஒருங்கிணைந்த பண்ணைத் திட்டம்
- மழைநீர்ச் சேகரிப்பும் தரிசு நில மேம்பாடும்
- கிராம அளவில் வேளாண் விளைபொருட்களின் மதிப்பினை உயர்த்துதல்
- அறுவடைக்குப் பிந்திய செய்நேர்த்தி மற்றும் சேமிப்பு முறைகள்
- வேளாண் மகளிரிடையே தலைமையேற்று வழிநடத்தும் பண்புகளை உருவாக்குதல் மற்றும் கிராமப்புற கழிவு நீர்ப் பண்ணைகள்.

## இணைப்பு I

### தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகக் கல்லூரிகள்

| வ. எண் | கல்லூரி | முகவரி |
|---|---|---|
| 1. | வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் | கோயம்புத்தூர் - 641 003 |
| 2. | தோட்டக் கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் | கோயம்புத்தூர் - 641 003 |
| 3. | வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் | கோயம்புத்தூர் - 641 003 |
| 4. | வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் | மதுரை - 625 104 |



2005 மார்ச் 31]

| வ. எண் | கல்லூரி | முகவரி |
|---|---|---|
| 5. | வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் | கிள்ளிகுளம்–628 252 தூத்துக்குடி மாவட்டம் |
| 6. | தோட்டக் கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் | பெரியகுளம்–625 604 தேனி மாவட்டம் |
| 7. | அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் | நாவலூர் குட்டப்பட்டு திருச்சி–620 009 |
| 8. | வனஇயல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் | மேட்டுப்பாளையம்– 641 301 கோயம்புத்தூர் மாவட்டம் |
| 9. | மனையியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் | மதுரை– 625 104 |
| 10. | வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் | குமுளூர்–621 712 திருச்சி மாவட்டம் |
| | **அங்கீகரிக்கப்பட்ட கல்லூரிகள்** | |
| 11. | பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் | காரைக்கால் - 609 603 பாண்டிச்சேரி பகுதி |
| 12. | ஆதிபராசக்தி வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் | கலவை, வேலூர்–632 506 வேலூர் மாவட்டம் |

## இணைப்பு II

### ஆராய்ச்சி நிலையங்கள்

1. தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை – 612 101, தஞ்சாவூர் மாவட்டம்.
2. நெல் ஆராய்ச்சி நிலையம், அம்பாசமுத்திரம் – 627 401, திருநெல்வேலி மாவட்டம்.
3. நெல் ஆராய்ச்சி நிலையம், திரூர்குப்பம் – 602 025, திருவள்ளூர் மாவட்டம்.
4. வீரிய ஒட்டு நெல் ஆய்வு மையம், கூடலூர் – 634 212, நீலகிரி மாவட்டம்.
5. வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், திருப்பதிசாரம் – 629 901, கன்னியாகுமரி மாவட்டம்.

[2005 மார்ச் 31

6. வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், வைகை அணை–625 512, தேனி மாவட்டம்.
7. வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், பவானிசாகர்–628 501, ஈரோடு மாவட்டம்.
8. வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், பரமக்குடி–623 707, இராமநாதபுரம் மாவட்டம்.
9. வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், பட்டுக்கோட்டை–614 602, தஞ்சாவூர் மாவட்டம்.
10. வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், விரிஞ்சிபுரம்–632 104, வேலூர் மாவட்டம்.
11. வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், கோவில்பட்டி–627 701, தூத்துக்குடி மாவட்டம்.
12. மண்டல ஆராய்ச்சி நிலையம், கோவிலாங்குளம், அருப்புக்கோட்டை–626 107, விருதுநகர் மாவட்டம்.
13. மண்டல ஆராய்ச்சி நிலையம், பையூர்–635 512, கிருட்டிணகிரி மாவட்டம்.
14. மண்டல ஆராய்ச்சி நிலையம், விருத்தாசலம்–606 001, கடலூர் மாவட்டம்.
15. கரும்பு ஆராய்ச்சி நிலையம், கடலூர்–607 001.
16. கரும்பு ஆராய்ச்சி நிலையம், மேலாலத்தூர்–635 806, வேலூர் மாவட்டம்.
17. கரும்பு ஆராய்ச்சி நிலையம், சிறுகமணி–639 115, திருச்சி மாவட்டம்.
18. தென்னை ஆராய்ச்சி நிலையம், வேப்பங்குளம்–614 906, தஞ்சாவூர் மாவட்டம்.
19. தென்னை ஆராய்ச்சி நிலையம், ஆழியார்நகர்–642 101, கோவை மாவட்டம்.
20. பருத்தி ஆராய்ச்சி நிலையம், திருவில்லிபுத்தூர்–626 125, விருதுநகர் மாவட்டம்.
21. தேசிய பயறு வகை ஆராய்ச்சி நிலையம், வம்பன்–622 303, புதுக்கோட்டை மாவட்டம்.



2005 மார்ச் 31]

22. எண்ணெய்வித்து ஆராய்ச்சி நிலையம், திண்டிவனம்–602 002, விழுப்புரம் மாவட்டம்.
23. மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலையம், ஏத்தாப்பூர்–636 117, சேலம் மாவட்டம்.
24. மண் மற்றும் நீர் மேலாண்மை ஆராய்ச்சி நிலையம், காட்டுத்தோட்டம், தஞ்சாவூர்–613 501.
25. கடலோர உவர் ஆராய்ச்சி மையம், இராமநாதபுரம்–623 501.
26. தோட்டக் கலை ஆராய்ச்சி நிலையம், பேச்சிப்பாறை–629 101, கன்னியாகுமரி மாவட்டம்.
27. தோட்டக் கலை ஆராய்ச்சி நிலையம், தடியன்குடிசை–624 602, திண்டுக்கல் மாவட்டம்.
28. தோட்டக் கலை ஆராய்ச்சி நிலையம், விஜயநகரம்–643 001, நீலகிரி மாவட்டம்.
29. தோட்டக் கலை ஆராய்ச்சி நிலையம், ஏற்காடு–636 602, சேலம் மாவட்டம்.
30. தோட்டக் கலை ஆராய்ச்சி நிலையம், கொடைக்கானல்–624 103.
31. காய்கறிகள் ஆராய்ச்சி நிலையம், பாலூர் – 607 113, கடலூர் மாவட்டம்.
32. நகர தோட்டக் கலை வளர்ச்சி மையம், சென்னை–600 010.

## இணைப்பு III

## பயிர் மருத்துவ மையங்கள்

1. வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கிள்ளிகுளம்–628 252.
2. பருத்தி ஆராய்ச்சி நிலையம், திருவில்லிபுத்தூர்–626 125.
3. நெல் ஆராய்ச்சி நிலையம், திரூர்–602 025.
4. வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், விரிஞ்சிபுரம்–632 104.
5. வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், பவானிசாகர்–

சென்னை-600 008
நூலகம்

[2005 மார்ச் 31

**வேளாண்மை அறிவியல் நிலையங்கள் (கிரிஷி விக்யான் கேந்திரா)**

1. வேளாண்மை அறிவியல் நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்–641 003.
2. வேளாண்மை அறிவியல் நிலையம், வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை–625 104.
3. வேளாண்மை அறிவியல் நிலையம், மண்டல ஆராய்ச்சி நிலையம், விருத்தாசலம்–606 001.
4. வேளாண்மை அறிவியல் நிலையம், கரும்பு ஆராய்ச்சி நிலையம், சிறுகமணி–639 115, திருச்சி மாவட்டம்.
5. வேளாண்மை அறிவியல் நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக ஆராய்ச்சி நிலையம், சந்தியூர்–636 203, சேலம் மாவட்டம்.
6. வேளாண்மை அறிவியல் நிலையம், எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலையம், திண்டிவனம்–604 001, விழுப்புரம் மாவட்டம்.
7. வேளாண்மை அறிவியல் நிலையம், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், விரிஞ்சிபுரம்–632 104, வேலூர் மாவட்டம்.
8. வேளாண்மை அறிவியல் நிலையம், நெல் ஆராய்ச்சி நிலையம், திரூர்குப்பம்–602 025, திருவள்ளூர் மாவட்டம்.
9. வேளாண்மை அறிவியல் நிலையம், தேசிய பயறுவகை ஆராய்ச்சி நிலையம், வம்பன்–622 303, புதுக்கோட்டை மாவட்டம்.
10. வேளாண்மை அறிவியல் நிலையம், தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், பேச்சிப்பாறை–629 161, கன்னியாகுமரி மாவட்டம்.
11. வேளாண்மை அறிவியல் நிலையம், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், சிக்கல்–611 008, நாகப்பட்டினம் மாவட்டம்.
12. வேளாண்மை அறிவியல் நிலையம், நீடாமங்கலம்–614 407, திருவாரூர் மாவட்டம்.
13. வேளாண்மை அறிவியல் நிலையம், கடலோர உவர் ஆராய்ச்சி மையம், இராமநாதபுரம்–623 501.



2005 மார்ச் 31]

## அத்தியாயம் - 7

## விதைச் சான்றளிப்பு

### 1. முன்னுரை

தரமான வித்தே தரமான விளைச்சலுக்கு அடிப்படையாகும். வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்க விதை, அடிப்படையான மற்றும் மிக முக்கிய இடுபொருளாகும். தரமான விதை உற்பத்திக்கு அரசால் அளிக்கப்படும் கூடுதல் முக்கியத்துவம் காரணமாக ஆண்டுதோறும் மாநிலத்தில் விதைத் தொழில் வேகமாக வளர்ந்து தரமான விதைகளின் உற்பத்தி பெருகுகிறது. உழவர்களின் நலன் காக்க ஓர் வலுவான விதை உற்பத்தி மற்றும் விதைத் தரக் கட்டுப்பாட்டுத் திட்டம் மிகவும் அவசியமானது. வேளாண்மை உற்பத்தியைக் கணிசமாக அதிகரிக்கப் போதிய அளவு தரமான விதைகளை உரிய காலத்தில் விவசாயிகளுக்கு எளிதில் கிடைக்கச் செய்வது அவசியம். இதனை அடைய இத்துறை விதைச் சான்றளிப்பு, விதைத் தரக் கட்டுப்பாடு, விதைப் பரிசோதனை மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்கள், உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்களுக்கான பயிற்சி முதலிய திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

### 2. விதைச் சான்றளிப்பு

தரமான மற்றும் இனத்தூய்மை கொண்ட விதை உற்பத்தியைத் தேவையான அளவில் குறிப்பாக உயர் விளைச்சல் இரகங்கள் மற்றும் வீரிய ஒட்டுக்களில் மேற்கொள்ள ஊக்குவிக்கவே விதைச் சான்றளிப்பு மேற்கொள்ளப்படுகிறது. இக்குறிக்கோளை அடைய விதைச் சான்றளிப்புத் துறை இந்திய விதைகள் சட்டம் 1966-ன்கீழ் அறிவிக்கை செய்யப்பட்ட இரக விதைகளில் சான்றளிப்புப் பணிகளை விதை விதிகள் 1968-ன் அடிப்படையில் மேற்கொண்டு மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் சான்று விதைகளின் தரத்தை உறுதி செய்கிறது.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பதுகளின் முற்பகுதியில் 18,000 மெட்ரிக் டன் சான்றளிக்கப்பட்ட விதைகள் உற்பத்தி செய்யப்பட்டன. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் சான்றளிக்கப்பட்ட விதை உற்பத்தி 24,452 மெட்ரிக் டன்களாக அதிகரித்தது. பின்னர் 2003-04 ஆம் ஆண்டில் 41,331 மெட்ரிக் டன் சான்றளிக்கப்பட்ட விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டது. மொத்த விதைத் தேவையில் சுமார் பதினைந்து

விழுக்காடு சான்றளிக்கப்பட்ட விதைகள் மூலம் நிறைவு செய்யப்படுகிறது. பயிர் வாரியான சான்றளிக்கப்பட்ட விதை உற்பத்தியைக் காணின், நெற்பயிரில் 37 விழுக்காடும், சிறு தானியங்களில் 7 விழுக்காடும், பருத்தியில் 48 விழுக்காடும், பயறு வகைகளில் 12 விழுக்காடும், காய்கறிகளில் 7 விழுக்காடும் சான்றளிக்கப்பட்ட விதைகள் மூலம் நிறைவு செய்யப்படுகிறது. இது தவிர, சுமார் பத்து விழுக்காடு விதைத் தேவை உண்மை நிலை விதைகள் மூலம் நிறைவு செய்யப்படுகிறது.

கடந்த கால அனுபவங்களின்படி, தனியார் மூலம் சான்றளிக்கப்பட்ட விதை உற்பத்தியை ஊக்குவிப்பதனால், மொத்த சான்றளிக்கப்பட்ட விதை உற்பத்தியைக் கணிசமாக அதிகரிக்க இயலும் என அறியப்படுகிறது. எனவே, சான்றளிக்கப்பட்ட விதை உற்பத்திக்கும் தேவைக்கும் உள்ள இடைவெளியை நிறைவு செய்ய தனியார் விதை உற்பத்தியாளர்களை ஊக்குவிக்க வேண்டும். 2004–05 ஆம் ஆண்டு இலக்கான 46,500 மெட்ரிக் டன்களுக்கு பிப்ரவரி 2005 முடிய 37,898 மெட்ரிக் டன் விதைகள் சான்றளிக்கப்பட்டுள்ளன. 2005–06 ஆம் ஆண்டில் 48,500 மெட்ரிக் டன் விதைகளுக்குச் சான்றளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 3. விதைத் தரக் கட்டுப்பாடு

வேளாண்மையின் அடிப்படை இடுபொருளான விதைத் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் விதை விற்பனை நிலையங்களைக் குறிப்பிட்ட கால இடைவெளியில் ஆய்வு செய்து, வழங்குவதற்காக வைக்கப்பட்டிருக்கும் விதைகளில் மாதிரிகள் எடுத்து விதைப் பரிசோதனை செய்து உழவர்களுக்கு வழங்கப்படும் விதைகளின் தரத்தை உறுதி செய்ய வேண்டியது முக்கியமானதாகும். தனியார் விதை உற்பத்தி அதிகரித்து வரும் இந்நிலையில் இப்பணி மிக முக்கியமானதாகும். விதை மாதிரிகள் எடுத்து அறிவிக்கப்பட்ட விதைப் பரிசோதனை நிலையங்களுக்கு அனுப்பப்படுகின்றன. விதைப் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் தரக்குறைவான விதை வழங்கப்படும் நிகழ்வுகள் கண்டறியப்பட்டு உரியவர்கள்மீது துறை மற்றும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. விதைகள் சட்டம் 1966, விதை விதிகள் 1968 மற்றும் விதை (கட்டுப்பாடு) ஆணை 1983 ஆகியவற்றின் அடிப்படையில் இத்துறையின் விதை ஆய்வுப் பிரிவு விதைத் தரக் கட்டுப்பாட்டுப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. மேலும் விதை (கட்டுப்பாடு) ஆணை 1983–ன்படி விதை விற்பனையாளர்களுக்கு விதை விற்பனை உரிமங்களும் வழங்கப்படுகின்றன.



விதை ஆய்வுத் திட்டத்தின்கீழ் 1990–91 வரையிலான காலக்கட்டத்தில் சுமார் 10,000 விதை விற்பனை நிலைய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இது தொண்ணூறுகளின் முற்பகுதியில் அதிகரித்து எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் இறுதியில் விற்பனை நிலைய ஆய்வுகள் 26,322 ஆக அதிகரித்துள்ளன. ஒன்பதாவது திட்ட ஆண்டுகளில் இதே நிலை தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. விற்பனை நிலையங்கள் அதிகரித்தபோதிலும் சராசரியாக ஆண்டு ஒன்றுக்கு ஒவ்வொரு விதை விற்பனை நிலையங்களும் இரண்டு முறை மட்டுமே ஆய்விடப்பட்டு வந்த நிலையிலிருந்து தற்சமயம் ஆண்டு ஒன்றுக்கு ஐந்து முறை ஆய்வு செய்யப்படுகிறது. 2003–04 ஆம் ஆண்டில் விதை விற்பனை நிலையங்களில் 29,382 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 21,685 விதை மாதிரிகள் எடுக்கப்பட்டுள்ளன. 2004–05 ஆம் ஆண்டு இலக்கான 28,800 விதை விற்பனை நிலைய ஆய்வுக்கு பிப்ரவரி 2005 முடிய 28,639 ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன. தரக் கட்டுப்பாட்டுப் பரிசோதனைக்கான விதை மாதிரிகள் எடுக்கும் இனத்தில் ஆண்டு இலக்கான 21,500 விதை மாதிரிகளுக்கு பிப்ரவரி 2005 முடிய 21,536 விதை மாதிரிகள் எடுக்கப்பட்டுள்ளன. 2005–06 ஆம் ஆண்டில் 30,000 விதை விற்பனை நிலைய ஆய்வுகள் செய்து 22,000 விதை மாதிரிகள் எடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 4. விதைப் பரிசோதனை

நவீன வேளாண்மையில் விதைப் பரிசோதனைத் திட்டம் முக்கியப் பங்கு வகிக்கின்றது. இத்திட்டத்தில் விதைகளின் தரத்தை அறிய முளைப்புத்திறன், புறச்சுத்தம், ஈரப்பதம், விதை நலம் மற்றும் பிற இரக கலவன்கள் கண்டறியப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படுகின்றன. அறிவிக்கப்பட்ட விதைப் பரிசோதனை நிலையங்களில் விதைப் பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. விதைச் சான்றளிப்பு மற்றும் விதைத் தரக் கட்டுப்பாட்டுப் பணிகளை உரிய முறையில் செயல்படுத்த விதைப் பரிசோதனைத் திட்டம் அவசியமானது. விதைப் பரிசோதனை நிலையங்களில் சான்று விதை மற்றும் தரக் கட்டுப்பாட்டு ஆய்வு விதை மாதிரிகள் மட்டுமன்றி உழவர்களிடமிருந்தும், விற்பனையாளர்களிடமிருந்தும், விதை உற்பத்தியாளர்களிடமிருந்தும் பெறப்படும் பணி விதை மாதிரிகளும் ஆய்வு செய்யப்படுகின்றன. 2003–04 ஆம் ஆண்டில் 47,991 விதை மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன. 2004–05 ஆம் ஆண்டு இலக்கான 60,000 விதை மாதிரிகளுக்கு பிப்ரவரி 2005 முடிய 43,669 விதை மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன. 2005–06 ஆம் ஆண்டில் 65,000 விதை மாதிரிகள் பரிசோதனை செய்யத்

திட்டமிடப்பட்டுள்ளது. விதைகளின் இனத்தூய்மையை அறிய விதைச் சான்று இயக்ககத்திலுள்ள கண்ணாடி ஆய்வகத்திலும், கண்ணம்பாளையம் (கோயம்புத்தூர்) பண்ணையிலும் பயிர் வளர்ப்புப் பரிசோதனை செய்யப்படுகிறது. இப்பரிசோதனையானது தாயாதி மற்றும் வீரிய பருத்தி, ஆதாரநிலை பருத்தி, வீரிய ஆமணக்கு ஆகிய பயிர் விதைகளின் சான்றளிப்புக்கு முன்னதாகச் செய்யப்படுகிறது. விதை ஆய்வுப் பிரிவிலிருந்து பெறப்படும் விதை மாதிரிகளும் இனத்தூய்மைப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகிறது.

### 5. பயிற்சி

தரமான விதை உற்பத்தியையும் வழங்குதலையும் ஊக்குவிக்க இத்துறையின் பயிற்சிப் பிரிவின்மூலமாகக் கீழ்க்குறிப்பிட்ட பயிற்சிகள் நடத்தப்படுகின்றன.

### 5.1 புத்தறிவுப் பயிற்சி

இத்துறையில் புதிதாகப் பணியேற்கும் தொழில்நுட்ப அலுவலர்களுக்கு விதைச் சான்றளிப்பு, விதைப் பரிசோதனை மற்றும் விதைத் தரக் கட்டுப்பாடு குறித்த நடைமுறைகளில் பயிற்சியளிக்கப்படுகிறது.

### 5.2 புத்தாக்கப் பயிற்சி

இத்துறையில் ஏற்கெனவே பணியாற்றும் அலுவலர்களுக்குப் புதிய விதை உற்பத்தித் தொழில்நுட்பங்கள் மற்றும் புதிதாக வெளியிடப்பட்ட இரகங்களின் புறத்தோற்ற குணாதிசயங்கள் கண்டறிதல் குறித்த பயிற்சியளிக்கப்படுகிறது.

### 5.3 விதை உற்பத்தியாளர் பயிற்சி

விதை உற்பத்தியாளர்களுக்கு விதை உற்பத்தி குறித்த தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி பெரும்பாலும் விதை உற்பத்தி செய்யும் சிறு மற்றும் குறு விவசாயிகளை உள்ளடக்கியதாகும்.

### 5.4 விதை விற்பனையாளர்களுக்குத் தரக் கட்டுப்பாட்டுப் பயிற்சி

விதை விற்பனையில் விதைத் தரம் பேணிக் காத்தல் தொடர்பாகவும், விதை இருப்பு வைப்பதிலும் விற்பனை செய்வதிலும் கையாள வேண்டிய நெறிமுறைகள் குறித்தும், விதைப் பிரிவை ஒழுங்குபடுத்துதல் தொடர்பான சட்டங்கள் குறித்தும் பயிற்சி அளிக்கப்படுகிறது.



பல்வேறு பயிற்சிகளின்கீழ் பயனடைவோர் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. 2003–04 ஆம் ஆண்டில் 28,680 பேருக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. 2004–05 ஆம் ஆண்டு இலக்கான 27,000–க்கு பிப்ரவரி 2005 முடிய 30,308 பேருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 2005–06 ஆம் ஆண்டில் 28,000 பேருக்குப் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 2004-2005 ஆம் வருட சாதனைகள்

விவசாயிகளின் நலன் காக்க 2004–2005 ஆம் ஆண்டில் மரபணு மாற்றுப் பயிர்கள் பரிசோதனை செய்ய ரூ.6.78 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. விதைச் சான்றுத் துறையில் பயிற்சிப் பிரிவின் மூலம் விவசாயிகள், விதைப் பயிர் சாகுபடியாளர்கள், விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள் மற்றும் இத்துறையில் பணிபுரியும் அனைத்து அலுவலர்களின் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்துவதற்கு ரூ.2.25 இலட்சத்தில் எல்.சி.டி. கருவி மற்றும் டிஜிட்டல் கேமரா வாங்கப்பட்டுள்ளது. விதைச் சான்று இயக்ககத்தில் உள்ள பயிற்சி விடுதியில் தங்கும் அலுவலர்களின் வசதிக்காக ரூ.0.07 இலட்சத்தில் தொலைபேசி இணைப்பு வசதி செய்யப்பட்டுள்ளது. விதைச் சான்று இயக்ககத்தில் உள்ள விதைப் பரிசோதனை நிலையத்தில் ரூ.1.60 இலட்சத்தில் ஜெனரேட்டர் வசதி செய்யப்பட்டுள்ளது. விதைச் சான்று இயக்ககத்தில் ரூ.0.60 இலட்சத்தில் மின்சார வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

### 2005-06 ஆம் ஆண்டிற்கான திட்டம்

இனத்தூய்மைப் பரிசோதனை வருடம் முழுவதும் மேற்கொண்டு விதைகளின் தரம் அறிவதற்கு ஏதுவாக நீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு இனத்தூய்மை பரிசோதனை மேற்கொள்ளப்படும் கண்ணம்பாளையம் பண்ணையில் ரூ.5.75 இலட்சத்தில் நில நீர்த் தொட்டியும் (ரூ.4.00 இலட்சம்) ஆழ்குழாய்க் கிணறு (ரூ.1.75 இலட்சம்) போன்ற வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன. விதைச் சான்றுப் பணிகளைத் துரிதப்படுத்தவும், மேன்மைப்படுத்தவும் விதைப் பரிசோதனை முடிவுகள் இணையதளம்மூலம் அறிவிக்கப்பட்டு வருகின்றன. இப்பணிகளை மேம்படுத்த ரூ.4.45 இலட்சம் செலவில் கோவை, தருமபுரி, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி மற்றும் காஞ்சிபுரம் ஆகிய விதைப் பரிசோதனை நிலையங்களிலும் விதைச் சான்று துணை இயக்குநர் கோவை மற்றும் மதுரை அலுவலகங்களிலும் உள்ள கணினிகள் மேம்படுத்தப்படவும், விதைச் சான்று துணை இயக்குநர்,

[2005 மார்ச் 31

கோவை அலுவலகத்திற்கு மின்னணு வசதி செய்யப்படவும் உள்ளது. விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும் விதைகளின் தரங்களை உறுதிப்படுத்தவும் போலி விதைகள் மற்றும் தரமற்ற விதைகளின் நடமாட்டத்தைத் தடுக்கவும் உரிய வசதிகள் ஏற்படுத்துவது அவசியமென்பதால் ரூ.3.50 இலட்சம் மதிப்பில் கோவை, சேலம், மதுரை, திருநெல்வேலி மற்றும் திருச்சியில் உள்ள விதை ஆய்வு உதவி இயக்குநர் அலுவலகங்களில் கணினி வசதிகள் ஏற்படுத்தப்பட உள்ளன. விதைச் சான்று இயக்ககத்தில் ரூ.5.34 இலட்சத்தில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் ஏற்கெனவே உள்ள அணுகுசாலையைச் சரி செய்தல் (ரூ.2.00 இலட்சம்), இரண்டு இரு சக்கர வாகனக் கொட்டகை கட்டுதல் (ரூ.2.85 இலட்சம்), விதைச் சான்று இயக்ககப் பயிற்சி விடுதியில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல் (ரூ.0.49 இலட்சம்) ஆகியவை அடங்கும். விதைச் சான்றுத் துறையின் இணையதளத்தைப் பராமரிக்க வசதியாக ரூ.0.49 இலட்சம் செலவில் தனி குத்தகை தொலைபேசி வசதி ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

### அட்டவணை 1

### சான்று செய்த விதை அளவு மெ. டன்.

| வ. எண் | பயிர் | 2003-04 | | 2004-05 | | 2005-06 |
|---|---|---|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை பிப்ரவரி 2005 முடிய | திட்டம் |
| 1 | நெல் | 36750 | 35014 | 38000 | 33384 | 39500 |
| 2 | இரக சிறு தானியம் | 450 | 495 | 600 | 332 | 600 |
| 3 | வீரிய சிறு தானியம் | 50 | 4 | 50 | 1 | 50 |
| 4 | இரக பருத்தி | 2000 | 1111 | 2000 | 892 | 2200 |
| 5 | வீரிய பருத்தி | 150 | 14 | 250 | 18 | 200 |
| 6 | பயறு வகை | 1800 | 1515 | 1800 | 773 | 2000 |
| 7 | எண்ணெய் வித்து | 3700 | 3102 | 3700 | 2439 | 3850 |
| 8 | காய்கறிகள் | 100 | 76 | 100 | 59 | 100 |
| | மொத்தம் | 45000 | 41331 | 46500 | 37898 | 48500 |



2005 மார்ச் 31]

### அட்டவணை 2

### விதை ஆய்வு

| வ. எண் | விவரம் | 2003-04 | | 2004-05 | | 2005-06 |
|---|---|---|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை பிப்ரவரி 2005 முடிய | திட்டம் |
| 1 | விற்பனை நிலைய ஆய்வுகள் | 27600 | 29382 | 28800 | 28639 | 30000 |
| 2 | விதை மாதிரிகள் எடுத்தது | 21000 | 21685 | 21500 | 21536 | 22000 |

### அட்டவணை 3

### விதைப் பரிசோதனை

| வ. எண் | விவரம் | 2003-04 | | 2004-05 | | 2005-06 |
|---|---|---|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை பிப்ரவரி 2005 முடிய | திட்டம் |
| 1 | விதைப் பகுப்பாய்வு பரிசோதனை செய்தது | 56000 | 47991 | 60000 | 43669 | 65000 |

### அட்டவணை 4

### விதைச் சான்றுப் பயிற்சி

| வ. எண் | விவரம் | 2003-04 | | 2004-05 | | 2005-06 |
|---|---|---|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை பிப்ரவரி 2005 முடிய | திட்டம் |
| 1 | பயனாளிகள் | 26000 | 28680 | 27000 | 30308 | 28000 |

## இணைப்பு

### விதைச் சான்றளிப்புப் பகுதிகள்

| தொடர் எண் | அமைவிடம் | ஆட்சி எல்லை (மாவட்டங்கள்) |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி |
| 2 | ஈரோடு | ஈரோடு |
| 3 | சேலம் | சேலம், தருமபுரி மற்றும் நாமக்கல் |
| 4 | திருச்சி | திருச்சி, புதுக்கோட்டை, கரூர் மற்றும் பெரம்பலூர் |
| 5 | தஞ்சாவூர் | தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் |
| 6 | மதுரை | மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் |
| 7 | விருதுநகர் | விருதுநகர், இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை |
| 8 | திருநெல்வேலி | திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி |
| 9 | விழுப்புரம் | கடலூர் மற்றும் விழுப்புரம் |
| 10 | திருவண்ணாமலை | வேலூர் மற்றும் திருவண்ணாமலை |
| 11 | சென்னை | காஞ்சிபுரம், சென்னை மற்றும் திருவள்ளூர் |

### விதை ஆய்வுப் பகுதிகள்

| தொடர் எண் | அமைவிடம் | ஆட்சி எல்லை (மாவட்டங்கள்) |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி |
| 2 | ஈரோடு | ஈரோடு, நாமக்கல் |
| 3 | சேலம் | சேலம், மற்றும் தருமபுரி |
| 4 | திருச்சி | திருச்சி, புதுக்கோட்டை, கரூர் மற்றும் பெரம்பலூர் |







| தொடர் எண் | அமைவிடம் | ஆட்சி எல்லை (மாவட்டங்கள்) |
|---|---|---|
| 5 | தஞ்சாவூர் | தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் |
| 6 | மதுரை | மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் |
| 7 | விருதுநகர் | விருதுநகர், இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை |
| 8 | திருநெல்வேலி | திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி |
| 9 | கடலூர் | கடலூர் மற்றும் விழுப்புரம் |
| 10 | வேலூர் | வேலூர் மற்றும் திருவண்ணாமலை |
| 11 | சென்னை | காஞ்சிபுரம், சென்னை மற்றும் திருவள்ளூர் |

### விதைப் பரிசோதனை நிலையங்கள்


| தொடர் எண் | அமைவிடம் | ஆட்சி எல்லை (மாவட்டங்கள்) |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் நீலகிரி |
| 2 | மதுரை | மதுரை, தேனி, திண்டுக்கல், விருதுநகர், இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை |
| 3 | திருச்சி | திருச்சி, புதுக்கோட்டை, கரூர், பெரம்பலூர், கடலூர் மற்றும் விழுப்புரம் |
| 4 | தருமபுரி | தருமபுரி, சேலம் மற்றும் நாமக்கல் |
| 5 | தஞ்சாவூர் | தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் |
| 6 | திருநெல்வேலி | திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி |
| 7 | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, சென்னை மற்றும் திருவள்ளூர் |


## விதைச் சான்றளிப்புத் துறை — திட்டங்கள் செயலாக்கம்





[2005 மார்ச் 31

## அத்தியாயம் - 8

# வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம்

### 1. முன்னுரை

கிராமங்களின் நிலையான பொருளாதார முன்னேற்றத்தைத் துரிதப்படுத்துவதில், வேளாண் விளைபொருள் அங்காடிகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. விவசாயத்தின் சாகுபடி செயல் திறன் மேம்படுவதற்கு அங்காடி விற்பனைக்கான அடிப்படை வசதிகள் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இதனைக் கருத்தில் கொண்டு விற்பனைக்கான அடிப்படை வசதிகளை உருவாக்கும்பொருட்டும், தேவையான அமைப்புகள் மற்றும் வேளாண் விளைபொருள் வியாபாரத்தை ஒழுங்குபடுத்தும்பொருட்டும், தமிழ்நாடு அரசு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (ஒழுங்குபடுத்துதல்) சட்டம் 1987 மற்றும் விதிகள் 1991, 1959 ஆம் ஆண்டில் அமலாக்கப்பட்ட சட்டத்திற்கு மாறுதலாகக் கொண்டு வரப்பட்டது.

வேளாண்மை விற்பனையை ஒழுங்குபடுத்தும் நோக்குடன், தமிழ்நாட்டில் வேளாண்மை விற்பனைத் துறை 1977 முதல் தனித் துறையாகச் செயல்பட்டு வருகின்றது. வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்வதோடு மட்டுமன்றி, உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண் பொருட்களின் ஏற்றுமதி ஆகிய பொறுப்புகள் கூடுதலாக வழங்கப்பட்டு இத்துறையின் பெயர் 2001 முதல் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையென மாற்றம் செய்யப்பட்டுச் செயல்பட்டு வருகின்றது.

வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் முக்கியச் செயல்பாடுகள்:

1. விவசாயிகள் நலன் கருதி, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை நிறுவி வேளாண் விளைபொருள் விற்பது மற்றும் வாங்குவது போன்ற செயல்களை ஒழுங்குபடுத்துதல்.
2. விவசாயிகள் தங்களது விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தின் மூலமாக விற்பனை செய்வதனால் அடையும் பயன்களைப் பற்றி விளம்பரம் மற்றும் பிரச்சாரப் பணி மூலம் அவர்களுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துதல்.



2005 மார்ச் 31]

3. ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குக் கொண்டு வரப்படும் விளைபொருட்கள் மற்றும் பண்ணை அளவிலான விளைபொருட்களைத் தரம் பிரித்து, ஆதாயமான விலை கிடைத்திட உதவுதல்.
4. வேளாண் பொருட்கள், கால்நடைகள் மூலம் கிடைக்கும் பொருட்கள் மற்றும் வனப் பொருட்கள் ஆகியவற்றிற்கு நுகர்வோர் பயன்பெறும் வகையில் அக்மார்க் தர முத்திரை வழங்கும் திட்டத்தினை அமலாக்குதல்.
5. வேளாண் ஏற்றுமதி மண்டலங்களை அமைப்பதன் மூலம் ஏற்றுமதி செய்யும் வேளாண் விளைபொருட்களின் பரப்பினை அதிகரித்தல், அறுவடைக்குப்பின் மேற்கொள்ள வேண்டிய மேலாண்மை குறித்த விவரங்களை அளித்தல், தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் சர்வதேசச் சந்தையில் நிலவும் விலை விவரத்தை ஒருங்கிணைத்து அளித்தல்.
6. விவசாயிகள் தங்கள் விளைபொருட்களுக்குச் சரியான விலை கிடைக்க உறுதி செய்திட, நவீன தொழில்நுட்ப வசதிகளுடன்கூடிய குளிர் பதனக் கிட்டங்கிகளை அமைத்தல் (பண்ணையிலிருந்து சந்தை வரை குளிர்படுத்தும் தொடர் அமைத்தல்).
7. உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் நிறுவப்பட முயற்சிகள் மேற்கொள்ளுதல்.

### 1.1 விற்பனைக் குழுக்கள்

தமிழ்நாட்டில் தற்போது 20 விற்பனைக் குழுக்கள் சென்னை மற்றும் நீலகிரி நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்பட்டு வருகின்றன. இந்த விற்பனைக் குழுக்கள் சனவரி 2003 முதல் நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்களுடனும் மற்றும் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரைக் கொண்டும் செயல்பட்டு வருகின்றன.

### 1.2 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்

தமிழ்நாட்டிலுள்ள 20 விற்பனைக் குழுக்களின் கட்டுப்பாட்டில் 273 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், 15 துணை விற்பனைக் கூடங்கள், 17 சோதனைச் சாவடிகள், 108 ஊரகக் கிட்டங்கிகள், 108 தரம் பிரிப்பு நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

விவசாயிகள் மற்றும் வியாபாரிகளை ஒரு சேர விற்பனைக்கூட வளாகத்தில் கூட்டி விளைபொருள் விற்கும் செயல்களை முறைப்படுத்தி, மறைமுக ஏலமுறையில் போட்டி விற்பனையை ஏற்படுத்தி அதிகபட்ச விலை பெற்றுத் தருவது, இலவசமாக விளைபொருளின் தரத்தினை விவசாயிகள் அறிந்துகொண்டு தரத்திற்கேற்ற விலை கிடைப்பதை அவர்களுக்கு உறுதி செய்வது போன்ற பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.

விளைபொருள் மதிப்பில் 1 விழுக்காட்டளவு விற்பனைக் கட்டணமாக வணிகர்களிடம் வசூலிக்கப்படுகிறது. வணிகர்கள் மற்றும் எடையாளர்களிடமிருந்தும் உரிமக் கட்டணமும் வசூலிக்கப்படுகிறது. ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ஆற்றப்படும் பணிகளுக்காக உற்பத்தியாளர்/விற்பனை செய்வோரிடம் எவ்விதக் கட்டணமும் வசூலிக்கப்படுவதில்லை. விற்பனைக் குழு வாரியான ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மற்றும் தரம் பிரிப்பு மையங்கள் விவரம் அட்டவணை 1-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

### 1.2.1 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் வழங்கப்படும் சேவைகள்

சரியான எடை, கிட்டங்கி வசதி, வங்கி வசதி, உடனடியாகப் பணம் வழங்கல், அங்காடி விலை விவர நிலவரம் அறிய வாய்ப்பு, விவசாயிகளுக்கு ஓய்வறை வசதி, குடிநீர் வசதி, வண்டி மாடுகள் நிறுத்துவதற்கு இட வசதி, இலவச மருத்துவ வசதி, இடுபொருள் மையம், எளிதில் பணம் வழங்கும் வசதி, தொலைபேசி மற்றும் நிகரி வசதி போன்ற பல வசதிகள் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விற்பனைக் குழு வாரியான உட்கட்டமைப்பு வசதிகளின் விவரங்கள் அட்டவணை 2-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

### 1.2.1.1 விளைபொருட்கள் அறிவிக்கை செய்தல்

இதுவரை நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், பருத்தி, மஞ்சள் போன்ற 40 வேளாண் விளைபொருட்கள் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன.

### 1.2.1.2 வணிகமுறைத் தரம் பிரித்தல்

உற்பத்தியாளர்களின் பொருட்களுக்குத் தரத்திற்கேற்ற சரியான விலை கிடைக்க உதவும் நோக்கத்துடன் ஒழுங்குமுறை விற்பனைக்



கூடங்களில் 96 வணிகமுறை தரம் பிரிப்பு மையங்கள், 11 பருத்தித் தரம் பிரிப்பு மையங்கள், 1 புகையிலைத் தரம் பிரிப்பு மையம் ஆகியவை செயல்பட்டு வருகின்றன. மேலும் இராமங்களில் விவசாயிகளின் பொருட்களும் வணிகமுறையாகத் தரம் பிரிக்கப்படுகின்றன. இம்மையங்கள் தற்போது 'அறுவடைக்குப் பின்னான தொழில்நுட்பத் தகவல் மையம்' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. இம்மையங்களில் பணிபுரியும் தொழில்நுட்பப் பணியாளர்கள் அறுவடைக்குப்பின் மேற்கொள்ள வேண்டிய தொழில்நுட்பப் பணி பற்றி விவசாயிகளுக்குப் பயிற்றுவிக்கிறார்கள்.

### 1.2.1.3 விவசாயிகளுக்குப் பொருளீட்டுக் கடன்

சிறு/மிகச் சிறு விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை அறுவடைக் காலங்களில் பாதிப்பு ஏற்படுத்தும் விலையில் விற்பதைத் தவிர்க்கும் பொருட்டு, ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் பொருளீட்டுக் கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்மூலம் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களைக் கிட்டங்கிகளில் 6 மாதம் வரை இருப்பு வைத்து, விளைபொருளின் மொத்த மதிப்பில் 75 விழுக்காடு வரை பொருளீட்டுக் கடனாக, அதிகபட்சமாக ரூ. 50,000/– வரை பெறலாம்.

### 1.2.1.4 வியாபாரிகளுக்குப் பொருளீட்டுக் கடன்

விவசாயிகளிடமிருந்து பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்ட பின்னர் அவர்களுக்கு உடனடியாகப் பணம் வழங்குவதை ஊக்குவிக்கும் வகையில் உரிமம் பெற்ற வணிகர்களுக்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பொருளீட்டுக் கடன் வசதி செய்து தரப்படுகின்றது. கொள்முதல் செய்யப்படும் விளைபொருட்களின் மதிப்பில் 50 விழுக்காடு அல்லது ரூபாய் ஒரு இலட்சம் இதில் எது குறைவோ அத்தொகை பொருளீட்டுக் கடனாக வழங்கப்படுகின்றது. வணிகர்கள் அதிகபட்சமாக 3 மாத காலத்திற்குப் பொருட்களை இருப்பில் வைத்திடலாம்.

### 1.3 தமிழ்நாடு உழவர் நல நிதித் திட்டம்

இத்திட்டத்தின்படி, ஒரு வருடத்திற்கு 1 மெட்ரிக் டன் அல்லது அதற்குமேல் விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விற்பனை செய்யும் விவசாயிகள்/குத்தகைதாரர்கள், விபத்தின் காரணமாக உயிர் இழக்க நேரிட்டாலோ அல்லது நிரந்தர ஊனமுற்றாலோ ரூ.75,000/– வரை உதவி வழங்கப்படும்.

[2005 மார்ச் 31

இத்திட்டத்தின்படி, உயிர் இழக்க நேரிட்டாலோ அல்லது ஊனமுற்றாலோ, விவசாயியால் நியமிக்கப்பட்ட நபர்/ குத்தகைதாரர் மானியத் தொகையினைப் பெறுவதற்குத் தகுதியுடையவராகிறார். அவ்வாறு யாரேனும் நியமனம் செய்யப்படாத நிலையில் குடும்பத்தில் உள்ள சட்டபூர்வமான வாரிசுதாரருக்கு ஒட்டுமொத்த மானியத் தொகை வழங்கப்படும். இத்திட்டத்தில் விவசாயிகள் பயன்பெறத் தவணைக் கட்டணம் ஏதும் செலுத்தத் தேவையில்லை. இத்திட்டத்தில், ஒருவருக்கு வருடத்திற்குத் தவணைக் கட்டணமாக ரூ.10/–ஐ உரிய விற்பனைக் குழுவும், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியமும் சமபங்காகச் செலுத்துகின்றன.

### 1.4 அக்மார்க் தரம் பிரித்தல்

"அக்மார்க்" என்பது உணவுப் பண்டங்களின் தரத்திற்கு அளிக்கப்படும் முத்திரையாகும். இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் நுகர்வோருக்குத் தரமான கலப்படமற்ற உணவுப் பொருட்கள் கிடைக்கச் செய்வதேயாகும். தமிழ்நாட்டில் 30 மாநில அக்மார்க் ஆய்வகங்களும் மற்றும் 1 முதன்மை ஆய்வகமும், 15 வேளாண்மை அலுவலர் (விற்பனை) மையங்களும் செயல்பட்டு வருகின்றன. 'அக்மார்க்' தரம் பிரிப்பின்கீழ், மையத் தொகுப்பிற்கு உட்பட்ட உணவுப் பண்டங்களுக்கும், மையத் தொகுப்பிற்கு உட்படாதப் உணவு பண்டங்களுக்கும், தரம் பிரிக்கும் பணியானது பயிற்சி பெற்ற தொழில்நுட்ப அலுவலர்களால் மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் சான்றிதழ் பெற்ற சிப்பம் கட்டுவோருக்கு உணவுப் பண்டங்கள் தரம் மற்றும் தன்மை அடிப்படையிலான 'அக்மார்க்' முத்திரைச் சீட்டுகள் ஆய்வகத்தில் பணிபுரியும் பணியாளர்களின் மேற்பார்வையில் வழங்கப்படுகின்றன.

### 1.5 கிராமங்களில் உலர் களங்கள் அமைத்தல்

அறுவடைக்குப் பின் ஏற்படும் தானிய இழப்பினைக் குறைக்கும் வகையில் இத்துறையின் மூலமாகக் கிராமங்களில் உலர் களங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்படுகின்றது. இத்திட்டம் விவசாயிகளுக்கு மிகவும் பயனளிக்கும் திட்டமாகும். இதுவரை ரூ.13.24 கோடி செலவில் 730 உலர் களங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக, 2004–05 ஆம் நிதியாண்டில் ரூ.4.00 கோடி செலவில் 200 உலர் களங்கள் அமைக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.



2005 மார்ச் 31]

## 2. வணிக வளாகம் அமைத்தல்

### 2.1 நெல் வணிக வளாகம்

ரூ.12.60 கோடி செலவில் மதுரையில் நெல் பயிருக்கென விவசாயிகள் மற்றும் வணிகர்கள் பயன்பெறும் வகையில் நெல் வணிக வளாகம் கட்டுமானப் பணி நடைபெற்று முடிவுறும் தறுவாயில் உள்ளது.

### 2.2 மஞ்சள் வணிக வளாகம்

ஈரோடு அருகில் நசியனூர் மற்றும் வில்லரசம்பட்டி ஆகிய கிராமங்களில் அமைந்துள்ள இடத்தில் ரூ.36.32 கோடி மொத்த செலவில் ஒரு புதிய மஞ்சள் வணிக வளாகம் அமைக்கப்படவுள்ளது. இவ்வளாகத்தில் நவீன உள் கட்டமைப்பு வசதிகளான தகவல் தொடர்பு மையம், பரிவர்த்தனைக்கூடங்கள், வங்கி, அக்மார்க் தரக் கட்டுப்பாடு ஆய்வகம், விவசாயிகள் ஓய்வு எடுக்க வசதி போன்றவை இடம் பெறும். இவ்வணிக வளாகம் கட்ட ஏதுவாக நசியனூர் மற்றும் வில்லரசம்பட்டி ஆகிய கிராமங்களில் இதுவரை 49 ஏக்கர் நிலம் மஞ்சள் வணிகர்களால் வாங்கப்பட்டுள்ளது.

## 3. வேளாண் உற்பத்தி மற்றும் விற்பனைத் தகவல் மையம்

வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்வதில் சந்தையறிவுத் திறம் முக்கியப் பங்கினை வகிக்கின்றது. விவசாயிகள் பல்வேறு சந்தைகளில் வேளாண் விளைபொருட்களுக்கு நிலவும் விலை விவரத்தினை அறிவதன்மூலம் அவர்களின் விளைபொருட்களுக்குக் கூடுதல் விலை பெற ஏதுவாகின்றது. இதனைக் கருத்தில் கொண்டு, அனைத்து வசதிகளுடன்கூடிய வேளாண் உற்பத்தி மற்றும் விற்பனைத் தகவல் மையங்களை ரூ.45.00 இலட்சம் செலவில் 14 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் வெற்றி மற்றும் பயன் அடிப்படையில் இத்திட்டமானது விரிவுபடுத்தப்படும்.

## 4. வேளாண் ஏற்றுமதி மண்டலம்

### 4.1 வேளாண் ஏற்றுமதி மண்டலம் அமைக்கப்பட்டது

தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் குறிப்பிட்ட வேளாண் விளைபொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு ஏதுவாக கீழ்க்காணும் மூன்று இடங்களில் வேளாண் ஏற்றுமதி மண்டலங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### 4.1.1 தருமபுரி மாவட்டத்தில் கொய் மலர் ஏற்றுமதி மண்டலம்

கொய் மலருக்கெனத் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களை உள்ளடக்கி ஓசூரில் ரூ.24.85 கோடி மதிப்பீட்டில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் மூலமாக வேளாண் ஏற்றுமதி மண்டலம் அமைக்கப்பட்டுள்ளது. டிட்கோ நிறுவனமும் தனியார் நிறுவனமும் இணைந்து எற்படுத்தியுள்ள "டான்ஃப்ளோரா" என்ற கூட்டு நிறுவனம் பதப்படுத்தும் தொழிலகம், பொது விற்பனை வசதி ஆகிய உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருதல், மலர் மையங்களுக்கான நிலத்தினைக் குத்தகைக்கு அளித்தல் போன்ற வசதிகளை அளிக்கும். இம்மலர் ஏற்றுமதி மண்டலத்திலிருந்து 2003-04 ஆம் நிதியாண்டில் ரூ10.80 கோடி மதிப்பில் 400 மெட்ரிக் டன் கொய் மலர்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

### 4.1.2 நீலகிரி மாவட்டத்தில் மலர்களுக்கான ஏற்றுமதி மண்டலம்

தனியார் பங்கேற்பில் நீலகிரி மாவட்டத்தில் மலர்களுக்கென ரூ.15.89 கோடி மதிப்பீட்டில் வேளாண் ஏற்றுமதி மண்டலம் அமைக்கப்பட்டு வருகிறது. இதற்கான உடன்பாட்டுக் குறிப்பில் அபிடா நிறுவனமும் தமிழ்நாடு அரசு வேளாண் துறையும் 6-2-2003-இல் கையெழுத்திட்டன. இந்த ஏற்றுமதி மண்டலத்தில் குளிர் பதனக் கிட்டங்கிகள், குளிரூட்டப்பட்ட ஊர்தி, பொதுவான அங்காடி வசதிகள் போன்ற உள்கட்டமைப்பு வசதிகள் விரைவில் ஏற்படுத்தப்படும். தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறையின் மூலமாக விவசாயிகளுக்கு நவீன மலர் சாகுபடிக்கான தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதுடன், சாகுபடிக்குத் தேவையான மலர்க் குச்சிகள் மானிய விலையில் வழங்கப்படுகிறது. இதுதவிர, பசுமைக்குடில் (Improved Poly Green House) மற்றும் நிழல் வலைகள் (Shade Nets) அமைத்திட விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது.

### 4.1.3 தேனி மாவட்டத்தில் மாம்பழத்திற்கான ஏற்றுமதி மண்டலம்

மாம்பழத்திற்கெனத் தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களை உள்ளடக்கி ரூ.24.60 கோடி மதிப்பீட்டில் தனியார் பங்கேற்பில் வேளாண் ஏற்றுமதி மண்டலம் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான உடன்பாட்டுக் குறிப்பில் அபிடா நிறுவனமும் தமிழ்நாடு அரசு வேளாண் துறையும் 6-2-2003-ல் கையெழுத்திட்டன. இந்த வேளாண் ஏற்றுமதி மண்டலத்தில்



மெஸர்ஸ் மாகிரிட்டா ( M/S. Maagrita Export Limited ) என்ற தனியார் நிறுவனத்தால் சேகரிப்பு மையங்கள், பதப்படுத்தும் நிலையங்கள். குளிர்பதனக் கிட்டங்கி அமைத்தல் போன்ற வசதிகள் விரைவில் ஏற்படுத்தப்படும்.

### 4.1.4 கடலூர் மாவட்டத்தில் முந்திரிக்கான ஏற்றுமதி மண்டலம்

முந்திரிக்கெனக் கடலூர் மாவட்டத்தில் ரூ.10.36 கோடி மதிப்பீட்டில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் மூலமாகத் தனியார் துறை பங்கேற்பில் வேளாண் ஏற்றுமதி மண்டலம் அமைக்கப்பட உள்ளது. இதற்கான கருத்துருவுக்கு 24-09-2004 அன்று மைய அரசு ஒப்புதல் வழங்கி உள்ளது.

## 4.2 வேளாண் ஏற்றுமதி மண்டலங்கள்

### 4.2.1 திருச்சி மாவட்டத்தில் வாழைக்கான ஏற்றுமதி மண்டலம்

வாழைக்கெனத் திருச்சி மாவட்டத்தில் ரூ.10.00 கோடி திட்டச் செலவில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் மூலமாகத் தனியார் துறை பங்கேற்பில் வேளாண் ஏற்றுமதி மண்டலம் அமைக்கப்பட உள்ளது. இதற்கான கருத்துரு அரசு மூலமாக மைய அரசின் அபிடா நிறுவனத்தின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## 5. குளிர்பதன வைப்பு அலகு அமைத்தல்

வேளாண் விளை பொருட்களில், குறிப்பாகப் பழங்கள் மற்றும் காய்கறிகளில் அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்பினைக் குறைத்திடும் நோக்கில் 15 இடங்களில் கிராமிய உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (RIDF) மூலமாக குளிர்பதன வைப்பு அலகுகள் தனியார் துறை மூலமாக அமைத்திடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## 6. உணவு பதப்படுத்தும் தொழிலகங்கள்

விவசாயிகளுக்கு நிலையான நியாய விலையை உணவு பதப்படுத்தும் தொழிலகங்கள் உறுதியளித்ததைத் தொடர்ந்து உணவு பதப்படுத்தும் தொழில் தற்போது வளர்ச்சி பெற்று வருவதுடன் பதப்படுத்தப்பட்ட வகையில் நுகர்வோருக்கு ஆண்டு முழுவதும் உணவுப் பண்டங்கள் கிடைப்பதற்கும் வழிவகை செய்யப்படுகிறது. இதன்மூலம் பெருமளவில்

உணவுப்பொருள் இழப்பும் தவிர்க்கப்படுகிறது. விவசாயிகள் தரமான பதப்படுத்துதலுக்கேற்ப விளைபொருட்களை உற்பத்தி செய்வதன்மூலம் அவர்களுக்குக் கூடுதல் வருவாய் ஈட்ட வாய்ப்பு கிடைக்கின்றது. நிலக்கோட்டைத் தொழிற்பேட்டையில் (திண்டுக்கல் மாவட்டம்) அரசு நிலையாணை எண். 23, வேளாண்மை (வே.வி.3) துறை, நாள்: 23-01-2004-ன்படி ரூ.13.00 கோடி செலவில் உணவுப் பூங்கா அமைக்கப்பட்டு வருகிறது. தற்சமயம் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை, மத்திய அரசின் உணவு பதப்படுத்தும் தொழில்கள் அமைச்சகத்தின் மாநில முகமை நிறுவனமாகச் செயல்பட்டு வருகிறது. 2004-05 ஆம் நிதியாண்டில், தமிழ்நாட்டிலிருந்து மொத்தம் ரூ. 102.77 கோடி முதலீட்டுத் தொகையில் 66 உணவு பதப்படுத்தும் தொழிலகங்களுக்கு ரூ.14.95 கோடி முதலீட்டு மானியத் தொகை பெற மைய அரசின் உணவு பதப்படுத்தும் அமைச்சகத்திற்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

## 7. தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம்

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் முக்கியப் பணிகள் வருமாறு:

### 7.1 விளம்பரம் மற்றும் பிரச்சாரம்

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் தனது கட்டுப்பாட்டிலுள்ள சென்னை, மதுரை, கோவை மற்றும் திருச்சிராப்பள்ளியிலுள்ள மையங்கள் மூலமாக வேளாண் விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் விற்பனை செய்வதால் கிடைக்கும் ஆதாயங்கள் குறித்த விளம்பரம் மற்றும் பிரச்சாரப் பணிகளைச் செய்துவருகிறது.

### 7.2 பணியாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் பயிற்சி அளித்தல்

சேலத்தை மையமாகக் கொண்டு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் பயிற்சி மையம் செயல்பட்டு வருகிறது. விற்பனைத் துறைப் பணியாளர்கள் மற்றும் விவசாயிகள் தேவைகளை நிறைவு செய்திடும் வகையில் பயிற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பயிற்சி மையத்தின் மூலம் தரம் பிரிப்பாளர் பயிற்சி, விற்பனைக் குழு பணியாளர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி மற்றும் விவசாயிகள் நேரடித் தொடர்புத் திட்டம் என மூன்று வகையான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.



### 7.3 தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் விற்பனை அறக்கட்டளை இருக்கை அமைத்தல்

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலுள்ள வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக் கல்வி மையத்திற்கு ரூ.50.00 இலட்சம் வைப்பு நிதியாக அளித்து ஒரு அறக்கட்டளை இருக்கையை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிதியிலிருந்து பெறப்படும் வட்டியின்மூலம் பல ஆராய்ச்சிகளும், பயிற்சிகளும் நடத்தப்படுகின்றன.

### 7.4 கட்டுமானப் பணிகள்

வாரியத்தின் பொறியியல் பிரிவு, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் அடிப்படை வசதிகளான அலுவலகக் கட்டடங்கள், ஊரகக் கிட்டங்கிகள், ஏலக் கொட்டகைகள், வணிக வளாகங்கள், இடுபொருள் கடைகள், பணம் வழங்கல் அறைகள், ஓய்வறைகள், குடிநீர் வசதிகள், கழிப்பறை வசதிகள், உட்புறச் சாலை வசதிகள், அலுவலகத்துடன் இணைந்த கிட்டங்கிகள், சுற்றுச்சுவர் கட்டுதல் போன்ற கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

### 7.5 விற்பனை மேம்பாட்டு நிதி

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் தமக்குத் தேவையான நிதியை விற்பனைக் குழுக்களிடமிருந்து பெற்றுக்கொள்கிறது. விற்பனைக் குழுக்கள் தங்களது மொத்த வருவாயில் 15 விழுக்காடு தொகையை வாரியத்திற்குப் பங்குத் தொகையாக அளிக்கின்றன. இவ்வாறாகப் பெறப்படும் மொத்தத் தொகையில் 50 விழுக்காடு, சந்தை மேம்பாட்டு நிதிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதிலிருந்து விற்பனை மேம்பாடுகளுக்கான விளம்பரம் மற்றும் பிரச்சாரம், பயிற்சி போன்றவை மேற்கொள்ளப்படுகின்றன.

### 7.6 தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தையறிவுத்திறம் தகவல் சேகரிப்பு மற்றும் வழிகாட்டுதல் பிரிவு ஏற்படுத்துதல்

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரிய நிதியுதவியுடன், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தையறிவுத்திறம், தகவல் சேகரிப்பு மற்றும் வழிகாட்டுதல் பிரிவு ரூ.20.00 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்பிரிவால் உள்நாடு மற்றும் வெளிநாடு சந்தைகளில் விளைபொருட்களுக்கு எதிர்வரும்

மாதங்களில் நிலவக்கூடிய விலை விவரங்களைக் கண்டறிந்து அவ்விவரங்கள் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் வாயிலாக விவசாயிகளுக்கு முன்னறிவிப்பு செய்யும். மேலும், விவசாயிகள் அவர்களுடைய விளைப் பொருள்களுக்கு நல்ல விலை பெறவும், பருவத்திற்கேற்ற பயிர்களைத் தேர்வு செய்யவும், அவர்களுடைய விளைபொருட்களைக் குறித்த நேரத்தில் விற்பனை செய்யவும் ஆலோசனைகளை வழங்கும். தற்சமயம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் செயல்பட்டுவரும் வேளாண் உற்பத்தி மற்றும் விற்பனைத் தகவல் மையங்கள் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தையறிவுத்திறம் தகவல் சேகரிப்பு மற்றும் வழிகாட்டுதல் பிரிவுடன் இணைக்கப்படவுள்ளது.

## அட்டவணை- 1

**மாநிலத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள், சோதனைச் சாவடிகள், ஊரகக் கிட்டங்கிகள், வணிகமுறைத் தரம்பிரிப்பு மையங்கள், பருத்தித் தரம்பிரிப்பு மையங்கள் மற்றும் புகையிலைத் தரம்பிரிப்பு மையம் விவரங்கள்**

(எண்களில்)





| தொ. எண் | விற்பனைக் குழுக்கள் | ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் | துணை விற்பனைக் கூடங்கள் | சோதனைச் சாவடிகள் | ஊரகக் கிட்டங்கிகள் | வணிக முறைத் தரம் பிரிப்பு மையங்கள் | பருத்தி தரம் பிரிப்பு மையங்கள் | புகையிலை தரம் பிரிப்பு மையம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 14 | 1 | 2 | 5 | 7 | -- | -- |
| 2 | வேலூர் | 12 | -- | -- | 4 | 5 | -- | -- |
| 3 | திருவண்ணாமலை | 16 | -- | -- | 7 | 10 | -- | -- |
| 4 | கடலூர் | 10 | 1 | -- | 3 | 6 | -- | -- |
| 5 | விழுப்புரம் | 18 | -- | -- | 9 | 13 | 1 | -- |
| 6 | சேலம் | 19 | -- | -- | 2 | 6 | -- | -- |
| 7 | தருமபுரி | 16 | -- | 2 | 4 | 5 | -- | -- |
| 8 | கோயம்புத்தூர் | 18 | 5 | -- | 11 | 2 | 3 | -- |
| 9 | ஈரோடு | 25 | 6 | 1 | 9 | 10 | 2 | 1 |
| 10 | திருச்சிராப்பள்ளி | 19 | 2 | 4 | 10 | 4 | -- | -- |
| 11 | தஞ்சாவூர் | 13 | -- | 2 | 4 | 3 | -- | -- |
| 12 | புதுக்கோட்டை | 10 | -- | 1 | 2 | 2 | -- | -- |
| 13 | மதுரை | 6 | -- | -- | 2 | 2 | -- | -- |
| 14 | இராமநாதபுரம் | 20 | -- | 1 | 10 | 6 | 1 | -- |
| 15 | திருநெல்வேலி | 20 | -- | -- | 12 | 6 | 3 | -- |
| 16 | கன்னியாகுமரி | 6 | -- | 2 | 5 | 2 | -- | -- |
| 17 | தேனி | 7 | -- | -- | 2 | 1 | 1 | -- |
| 18 | திண்டுக்கல் | 8 | -- | -- | 4 | 4 | -- | -- |
| 19 | நாகப்பட்டினம் | 8 | -- | -- | 1 | 1 | -- | -- |
| 20 | திருவாரூர் | 8 | -- | -- | 2 | 1 | -- | -- |
| | மொத்தம் | 273 | 15 | 15 | 108 | 96 | 11 | 1 |

[2005 மார்ச் 31

## அட்டவணை-2

### ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் அமைந்துள்ள உள்கட்டமைப்பு வசதிகள்

(எண்களில்)

| தொ. எண் | விற்பனைக் குழுக்கள் | சொந்த நிலம் | கிட்டங்கி | ஊரகக் கிட்டங்கி | பரிவர்த்தனைக் கூடம் | உலர்களம் | விவசாயிகள் ஓய்வறை | சுகாதார வசதி | குடிநீர் வசதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 7 | -- | 5 | 4 | 7 | 2 | 6 | 5 |
| 2 | வேலூர் | 9 | 6 | 4 | 6 | 4 | 2 | 7 | 7 |
| 3 | திருவண்ணாமலை | 13 | 5 | 7 | 14 | 11 | 6 | 10 | 9 |
| 4 | கடலூர் | 5 | 2 | 3 | 11 | 5 | 3 | 9 | 5 |
| 5 | விழுப்புரம் | 12 | 4 | 9 | 26 | 13 | 10 | 22 | 12 |
| 6 | சேலம் | 5 | 1 | 2 | 4 | 4 | -- | 4 | 3 |
| 7 | தருமபுரி | 9 | 1 | 4 | 7 | 7 | 3 | 11 | 7 |
| 8 | கோயம்புத்தூர் | 18 | 58 | 11 | 19 | 21 | 6 | 14 | 12 |
| 9 | ஈரோடு | 14 | 12 | 9 | 19 | 16 | 3 | 14 | 14 |
| 10 | திருச்சிராப்பள்ளி | 12 | 13 | 10 | 24 | 13 | 3 | 19 | 11 |
| 11 | தஞ்சாவூர் | 10 | 11 | 4 | 17 | 7 | 6 | 9 | 9 |
| 12 | புதுக்கோட்டை | 3 | 1 | 2 | 3 | 2 | 1 | 3 | 2 |
| 13 | மதுரை | 4 | -- | 2 | 1 | 3 | 3 | 2 | 3 |
| 14 | இராமநாதபுரம் | 14 | 8 | 10 | 12 | 10 | 2 | 12 | 13 |
| 15 | திருநெல்வேலி | 15 | 3 | 12 | 9 | 13 | 10 | 14 | 15 |
| 16 | கன்னியாகுமரி | 5 | 2 | 5 | 6 | 7 | 5 | 5 | 5 |
| 17 | தேனி | 4 | -- | 2 | 3 | 6 | 1 | 3 | 4 |
| 18 | திண்டுக்கல் | 6 | 1 | 4 | 6 | 7 | -- | 5 | 5 |
| 19 | நாகப்பட்டினம் | 1 | 1 | 1 | 2 | 1 | -- | 1 | 1 |
| 20 | திருவாரூர் | 1 | -- | 2 | 1 | 1 | 2 | 1 | 1 |
| | மொத்தம் | 167 | 129 | 108 | 194 | 158 | 68 | 171 | 143 |



2005 மார்ச் 31]

## அட்டவணை-3

### விற்பனைக் குழு வாரியாக ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள்

| 1. காஞ்சிபுரம் | 2. வேலூர் | 3. திருவண்ணாமலை |
|---|---|---|
| 1. காஞ்சிபுரம் | 1. வேலூர் | 1. திருவண்ணாமலை |
| 2. திருத்தணி | 2. திருப்பத்தூர் | 2. ஆரணி |
| 3. திருவள்ளூர் | 3. ஆற்காடு | 3. வந்தவாசி |
| 4. செங்குன்றம் | 4. அரக்கோணம் | 4. சேத்துப்பட்டு |
| 5. மதுராந்தகம் | 5. வாணியம்பாடி | 5. செய்யார் |
| 6. உத்திரமேரூர் | 6. காவேரிப்பாக்கம் | 6. போளூர் |
| 7. பொன்னேரி | 7. குடியாத்தம் | 7. செங்கம் |
| 8. திருக்கழுக்குன்றம் | 8. கலவை | 8. புதுப்பாளையம் |
| 9. சுங்குவார்சத்திரம் | 9. அம்மூர் | 9. வானாபுரம் |
| 10. பள்ளிப்பட்டு | 10. காட்பாடி | 10. வேட்டவலம் |
| 11. ஊத்துக்கோட்டை | 11. ஆம்பூர் | 11. தெள்ளார் |
| 12. அச்சிறுப்பாக்கம் | 12. திமிரி | 12. மங்கல மாமண்டூர் |
| 13. கும்மிடிப்பூண்டி | | 13. தேசூர் |
| 14. நசரத்பேட்டை | | 14. பெரணமல்லூர் |
| | | 15. தூசி |
| | | 16. கீழ்பென்னாத்தூர். |

| 4. கடலூர் | 5. விழுப்புரம் | |
|---|---|---|
| 1. விருத்தாசலம் | 1. திண்டிவனம் | 11. மணலூர்ப்பேட்டை |
| 2. கடலூர் | 2. திருக்கோவிலூர் | 12. அவலூர்ப்பேட்டை |
| 3. பண்ருட்டி | 3.உளுந்தூர்ப்பேட்டை | 13. மரக்காணம் |
| 4. திட்டக்குடி | 4. விழுப்புரம் | 14. விக்கிரவாண்டி |
| 5. காட்டுமன்னார் கோவில் | 5. சின்னசேலம் | 15. அனந்தபுரம் |
| 6. சிதம்பரம் | 6. கள்ளக்குறிச்சி | 16. வளத்தி |
| 7. குறிஞ்சிப்பாடி | 7. செஞ்சி | 17. மூங்கில்துறைப்பட்டு |
| 8. சேத்தியாதோப்பு | 8. தியாகதுர்கம் | 18. கிளியனூர் |
| 9. ஸ்ரீமுஷ்ணம் | 9. சங்கராபுரம் | |
| 10.புவனகிரி | 10. திருவெண்ணெய் நல்லூர் | |

| 6. சேலம் | 7. தருமபுரி | 8. கோயம்புத்தூர் |
|---|---|---|
| 1. சேலம் | 1. தருமபுரி | 1. திருப்பூர் |
| 2. ஆத்தூர் | 2. கிருஷ்ணகிரி | 2. அவிநாசி |
| 3. நாமக்கல் | 3. ஓசூர் | 3. சேவூர் |
| 4. இராசிபுரம் | 4. கெலமங்கலம் | 4. அன்னூர் |
| 5. திருச்செங்கோடு | 5. பாலக்கோடு | 5. காரமடை |
| 6. சங்ககிரி | 6. பென்னாகரம் | 6. கோயம்புத்தூர் |
| 7. கொங்கணாபுரம் | 7. போச்சம்பள்ளி | 7. சூலூர் |
| 8. கொளத்தூர் | 8. காவேரிப்பட்டினம் | 8. பல்லடம் |
| 9. வேலூர் | 9. ஊத்தங்கரை | 9. உடுமலைப்பேட்டை |
| 10. மேச்சேரி | 10. அரூர் | 10. ஆனைமலை |
| 11. வாழப்பாடி | 11. பாப்பிரெட்டிப் பட்டி | 11. பொள்ளாச்சி |
| 12. தம்மம்பட்டி | 12. கொளத்தூர் | 12. மலையடிப் பாளையம் |
| 13. நாமகிரிப்பேட்டை | 13. பர்கூர் | 13. நெகமம் |
| 14. தலைவாசல் | 14. இராயக்கோட்டை | 14. கிணத்துக்கடவு |
| 15. ஓமலூர் | 15. தென்கனிக்கோட்டை | 15. தொண்டாமுத்தூர் |
| 16. காடையம்பட்டி | 16. பாப்பாரப்பட்டி | 16. மடத்துக்குளம் |
| 17. கெங்கவல்லி | | 17. பெதப்பம்பட்டி |
| 18. கருமந்துறை | | 18. பொங்கலூர் |
| 19. சோளக்காடு | | |





| 9. ஈரோடு | 10. திருச்சிராப்பள்ளி | 11. தஞ்சாவூர் |
|---|---|---|
| 1. ஈரோடு | 1. ஜெயங்கொண்டம் | 1. அதிராம்பட்டினம் |
| 2. அவல்பூந்துறை | 2. கரூர் | 2. அம்மாப்பேட்டை |
| 3. கொடுமுடி | 3. அரியலூர் | 3. பூதலூர் |
| 4. சிவகிரி | 4. மணப்பாறை | 4. கும்பகோணம் |
| 5. சித்தோடு | 5. ஆண்டிமடம் | 5. மதுக்கூர் |
| 6. பவானி | 6. துறையூர் | 6. ஒரத்தநாடு |
| 7. பூதப்பாடி | 7. பெரம்பலூர் | 7. பட்டுக்கோட்டை |
| 8. அந்தியூர் | 8. லால்குடி | 8. பாபநாசம் |
| 9. மயிலம்பாடி | 9. திருச்சிராப்பள்ளி | 9. பேராவூரணி |
| 10. கவுந்தம்பாடி | 10. தொட்டியம் | 10. தஞ்சாவூர் |
| 11. கோபி | 11. மண்ணச்சநல்லூர் | 11. வல்லம் |
| 12. நம்பியூர் | 12. குளித்தலை | 12. திருப்பனந்தாள் |
| 13. வெள்ளக்கோவில் | 13. துவரங்குறிச்சி | 13. பாப்பாநாடு |
| 14. சத்தியமங்கலம் | 14. இரும்பூதிப்பட்டி | |
| 15. புஞ்சை புளியம்பட்டி | 15. சின்னதாராபுரம் | |
| 16. தாளவாடி | 16. புள்ளம்பாடி | |
| 17. பெருந்துறை | 17. தாத்தையங்கார் பேட்டை | |
| 18. குன்னத்தூர் | 18. மேலணைக்குழி | |
| 19. காங்கேயம் | 19. அரும்பாவூர் | |
| 20. வெள்ளாங்கோவில் | | |
| 21. தாராபுரம் | | |
| 22. மூலனூர் | | |
| 23. அலங்கியம் | | |
| 24. முத்தூர் | | |
| 25. எழுமாத்தூர் | | |

[2005 மார்ச் 31

| 12. புதுக்கோட்டை | 13. மதுரை | 14. இராமநாதபுரம் |
|---|---|---|
| 1. ஆலங்குடி | 1. திருமங்கலம் | 1. விருதுநகர் |
| 2. அறந்தாங்கி | 2. உசிலம்பட்டி | 2. இராஜபாளையம் |
| 3. புதுக்கோட்டை | 3. மேலூர் | 3. சாத்தூர் |
| 4. கந்தர்வக்கோட்டை | 4. மதுரை | 4. அருப்புக்கோட்டை |
| 5. ஆவுடையார்கோவில் | 5. டி.கல்லுப்பட்டி | 5. ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 6. கீரனூர் | 6. வாடிப்பட்டி | 6. வத்திராயிருப்பு |
| 7. கீரமங்கலம் | | 7. வெம்பக்கோட்டை |
| 8. பொன்னமராவதி | | 8. சிவகங்கை |
| 9. இலுப்பூர் | | 9. திருபுவனம் |
| 10. கரம்பக்குடி | | 10. மானாமதுரை |
| | | 11. சிங்கம்புணரி |
| | | 12. காரைக்குடி |
| | | 13. இளையான்குடி |
| | | 14. தேவக்கோட்டை |
| | | 15. இராமநாதபுரம் |
| | | 16. பரமக்குடி |
| | | 17. கமுதி |
| | | 18. திருவாடானை |
| | | 19. இராசசிங்கமங்கலம் |
| | | 20. முதுகுளத்தூர் |



2005 மார்ச் 31]

| 15. திருநெல்வேலி | 16. கன்னியாகுமரி | 17. தேனி |
|---|---|---|
| 1. கோவில்பட்டி | 1. ஈத்தாமொழி | 1. தேனி |
| 2. சங்கரன்கோவில் | 2. வடசேரி | 2. கம்பம் |
| 3. தூத்துக்குடி | 3. களியக்காவிளை | 3. போடிநாயக்கனூர் |
| 4. புதூர் | 4. திங்கள்சந்தை | 4. சின்னமனூர் |
| 5. கடம்பூர் | 5. குலசேகரம் | 5. ஆண்டிப்பட்டி |
| 6. கழுகுமலை | 6. தொடுவட்டி | 6. உத்தமபாளையம் |
| 7. தென்காசி | | 7. பெரியகுளம் |
| 8. அம்பாசமுத்திரம் | | |
| 9. வள்ளியூர் | | |
| 10. ஸ்ரீவைகுண்டம் | | |
| 11. திருநெல்வேலி | | |
| 12. விளாத்திக்குளம் | | |
| 13. கடையநல்லூர் | | |
| 14. திசையன்விளை | | |
| 15. பாவூர்சத்திரம் | | |
| 16. திருவேங்கடம் | | |
| 17. எட்டையபுரம் | | |
| 18. சிவகிரி | | |
| 19. ஆலங்குளம் | | |
| 20. சாத்தான்குளம் | | |

| 18. திண்டுக்கல் | 19. நாகப்பட்டினம் | 20. திருவாரூர் |
|---|---|---|
| 1. திண்டுக்கல் | 1. கீவளூர் | 1. வலங்கைமான் |
| 2. ஒட்டன்சத்திரம் | 2. குத்தாலம் | 2. கொரடாச்சேரி |
| 3. பழனி | 3. மயிலாடுதுறை | 3. மன்னார்குடி |
| 4. நத்தம் | 4. நாகப்பட்டினம் | 4. பூந்தோட்டம் |
| 5. வத்தலகுண்டு | 5. செம்பனார்கோவில் | 5. வடுவூர் |
| 6. கோபால்பட்டி | 6. சீர்காழி | 6. குடவாசல் |
| 7. வடமதுரை | 7. வேதாரண்யம் | 7. திருவாரூர் |
| 8. வேடசந்தூர் | 8. திருப்பூண்டி | 8. திருத்துறைப்பூண்டி |

## அட்டவணை-4

### தமிழ்நாட்டில் மாவட்டங்கள் வாரியாக அக்மார்க் ஆய்வகங்களின் விவரம்

| வ. எண். | மாவட்டத்தின் பெயர் | அக்மார்க் ஆய்வகங்கள் இருப்பிடம் |
|---|---|---|
| 1 | சென்னை | சென்னை (வடக்கு), சென்னை (தெற்கு) வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை ஆணையரகத்தில் அமைந்துள்ள முதன்மை ஆய்வகம் |
| 2 | வேலூர் | வேலூர் |
| 3 | கடலூர் | கடலூர் |
| 4 | தஞ்சாவூர் | தஞ்சாவூர் |
| 5 | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி-1, திருச்சிராப்பள்ளி-2 |
| 6 | கரூர் | கரூர் |
| 7 | மதுரை | மதுரை-1, மதுரை-2 |
| 8 | தேனி | தேனி |
| 9 | திண்டுக்கல் | திண்டுக்கல் |
| 10 | விருதுநகர் | விருதுநகர் |
| 11 | திருநெல்வேலி | திருநெல்வேலி, தென்காசி |
| 12 | தூத்துக்குடி | தூத்துக்குடி |
| 13 | கன்னியாகுமரி | நாகர்கோவில், மார்த்தாண்டம் |
| 14 | சேலம் | சேலம் |
| 15 | தருமபுரி | தருமபுரி |
| 16 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர், திருப்பூர், பல்லடம் |
| 17 | ஈரோடு | பெருந்துறை, ஈரோடு-1, ஈரோடு-2 காங்கேயம்-1, காங்கேயம்-2 வெள்ளக்கோவில், சித்தோடு |



## அத்தியாயம் - 9

# மாநில நிதி உதவியுடன் செயல்படும் வேளாண் அமைப்பு

## தமிழ்நாடு தோட்டக்கலைப் பொருட்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு நிறுவனம் வரையறுக்கப்பட்டது (TANHOPE)

தமிழ்நாடு தோட்டக்கலைப் பொருட்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு நிறுவனம் - வரையறுக்கப்பட்டது (டேன்ஹோப்) 1995ஆம் ஆண்டு துவக்கப்பட்ட ஒரு தொடக்க கூட்டுறவு சங்கமாகும். இச்சங்கம், தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 1983-ன்கீழ் பதிவு செய்யப்பட்டு 18-1-1995 முதல் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் தோட்டக்கலைப் பணிகளை ஊக்குவித்து நல்ல வணிகத் தொடர்பினை ஏற்படுத்தி மேம்பாடடையச் செய்து உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோர் பயனடையச் செய்வதுதான் இந்நிறுவனத்தின் தலையாய நோக்கமாகும். தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் இயக்குநர் இந்நிறுவனத்தின் தனி அலுவலர் ஆவார்; தோட்டக்கலை இணை இயக்குநர் இதன் மேலாண்மை இயக்குநர் ஆவார்.

இதுகாறும் 3,888 தோட்டக்கலை விவசாயிகள் இச்சங்கத்தில் உறுப்பினர்களாக இணைந்துள்ளனர். அவர்களால் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.3.88 இலட்சம். இச்சங்கம், 2001-2002 முதல் 2004-2005 வரையிலான நான்காண்டு காலத்தில் பின்வருமாறு வணிக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

| | |
|---|---|
| 2001-02 | ரூ.38.97 இலட்சம் |
| 2002-03 | ரூ.79.48 இலட்சம் (தோட்டக்கலைத் துறைக்கு ரூ.50.28 இலட்சம் மதிப்புள்ள முந்திரிக் கன்றுகளை வழங்கியதையும் உள்ளடக்கியது) |
| 2003-04 | ரூ.31.06 இலட்சம் |
| 2004-05 | ரூ.22.78 இலட்சம் (பிப்ரவரி 2005 முடிய) |

தற்பொழுது சுய உதவிக் குழுக்கள் ஒன்று சேர்ந்து தோட்டக்கலைப் பயிர்களை சாகுபடி செய்வதை கருத்திற்கொண்டு அவர்களது உற்பத்தியினை விற்பனை செய்வதற்கு உதவிடும் வகையிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

குழு அடிப்படையிலான தோட்டக்கலை மேம்பாட்டுப் பணிகளை வலுப்படுத்த டேன்ஹோாப் முக்கியத்துவம் அளிக்கும்.

2005-06 ஆம் ஆண்டில் மதிப்புக் கூடுதல் பொருட்கள் தயாரித்தல், அறுவடைக்குப்பின் மேலாண்மை மற்றும் விளை பொருட்களின் விற்பனையை ஊக்குவித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.



## கோரிக்கை எண் 5

## வேளாண்மைத் துறை

### 2005-2006-ல் செலவிற்கு வேண்டியுள்ள தொகை பற்றி மதிப்பீடு

### 2005-2006 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு

(ரூபாய் ஆயிரத்தில்)

| | வருவாய் | மூலதனம் | கூடுதல் |
|---|---|---|---|
| மானியக் கோரிக்கை-அனுமதித்தது | 806,10,42 | 48,30,45 | 854,40,87 |
| மொத்த தொகை – சாட்டியது | 2 | | 2 |

| | கணக்குத் தலைப்பு | 2003-04 கணக்குகள் | 2004-05 வரவு செலவு திட்ட மதிப்பீடு | 2004-05 திருத்த மதிப்பீடு | 2005-06 வரவு செலவு திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| 2059 | பொதுப்பணிகள் | 87,04 | 1,15,00 | 1,15,00 | 1,20,72 |
| 2401 | பயிர் வளர்ப்பு | 393,38,87 | 589,27,04 | 546,79,97 | 547,47,48 |
| 2402 | மண்வள, நீர்வளப் பாதுகாப்பு வரி இயக்ககம் | 67,04,71 | 90,26,63 | 89,74,35 | 91,67,22 |
| 2415 | வேளாண்மை ஆராய்ச்சியும், கல்வியும். | 76,47,54 | 73,52,89 | 73,49,79 | 75,38,62 |
| 2435 | ஏனைய வேளாண்மைத் திட்டங்கள் | 31,24,02 | 36,83,31 | 33,21,14 | 36,67,89 |
| 2501 | ஊரக வளர்ச்சி சிறப்புத் திட்டங்கள் | 8,80,07 | 7,00,00 | 3,25,00 | 3,25,00 |
| 2551 | மலைப் பகுதிகள் | 11,11,71 | 13,42,09 | 11,35,14 | 4,89,07 |
| 2702 | சிறுபாசனம் | 7,03,95 | 8,19,71 | 7,22,10 | 7,79,41 |
| 2705 | பாசனப்பகுதி மேம்பாடு | 47,09,51 | 50,88,52 | 41,59,85 | 33,60,80 |

[2005 மார்ச் 31

| | கணக்குத் தலைப்பு | 2003-04 கணக்குகள் | 2004-05 வரவு செலவு திட்ட மதிப்பீடு | 2004-05 திருத்த மதிப்பீடு | 2005-06 வரவு செலவு திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| 3451 | தலைமைச் செயலகம் - பொருளாதாரப் பணிகள் | 2,81,02 | 3,87,13 | 3,85,60 | 4,14,23 |
| 4401 | பயிர்வளர்ப்பு குறித்த மூலதனச் செலவு | 5,90,90 | 6,65,77 | 13,73,99 | 7 |
| 4402 | மண்வள நீர்வளப் பாதுகாப்பு குறித்த மூலதனச் செலவு | -- | -- | -- | 16,92,91 |
| 4415 | வேளாண்மை ஆராய்ச்சி, கல்வி குறித்த மூலதனச் செலவு | 30,37 | 1 | 1 | 1 |
| 4435 | ஏனைய வேளாண்மைத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு | -- | 7,00 | 7,00 | 1 |
| 4551 | மலைப் பகுதிகள் குறித்த மூலதனச் செலவு | -- | -- | -- | 6,40,51 |
| 4705 | பாசனப்பகுதி மேம்பாடு குறித்த மூலதனச் செலவு | -- | -- | -- | 24,96,94 |
| 6401 | பயிர் வளர்ப்புக்கான கடன்கள் | 55 | -- | -- | -- |



2005 மார்ச் 31]

**கோரிக்கை எண் 5**

**வேளாண்மைத் துறை**

**2005-06 வரவு-செலவு திட்ட மதிப்பீடு**

**ரூபாய் ஆயிரத்தில் (தொகு மொத்தம்)**

(ரூபாய் ஆயிரத்தில்)

| | துறைத்தலைவர் | | வருவாய் | மூலதனம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 05 01 | தலைமைச் செயலகம் | அனுமதித்தது | 7,39,23 | -- | 7,39,23 |
| 05 02 | வேளாண்மை இயக்ககம் | அனுமதித்தது | 510,11,07 | 7 | 510,11,14 |
| 05 03 | வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்ககம் | அனுமதித்தது | 23,06,79 | 1 | 23,06,80 |
| 05 04 | விதைச்சான்று இயக்ககம் | சாட்டியது | 1 | -- | 1 |
| | | அனுமதித்தது | 9,54,68 | -- | 9,54,68 |
| 05 05 | தோட்டக்கலை, மலைத் தோட்டப் பயிர்கள் இயக்ககம் | சாட்டியது | 1 | -- | 1 |
| | | அனுமதித்தது | 62,81,66 | 14,99 | 62,96,65 |
| 05 06 | வேளாண்மைப் பொறியியல் | அனுமதித்தது | 120,91,78 | 48,15,38 | 169,07,16 |
| 05 07 | வேளாண் பொறியியல் மற்றும் பணிகள் கூட்டுறவு இணைப்பகம் | அனுமதித்தது | 12,21 | -- | 12,21 |
| 05 08 | வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர் | அனுமதித்தது | 72,13,00 | -- | 72,13,00 |
| | **மொத்தம்** | சாட்டியது | 2 | -- | 2 |
| | | அனுமதித்தது | 8061042 | 483045 | 8544087 |

[2005 மார்ச் 31

## 2005-2006 ஆம் ஆண்டிற்கான பகுதி 2 திட்டங்கள்

ரூபாய் இலட்சத்தில்

| வ. எண். | திட்டப்பணிகளின் விபரம் | மொத்தம் |
|---|---|---|
| | **பத்தாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்** | |
| | **வேளாண்மை** | |
| 1 | தகவல்-தொழில்நுட்ப வலைதள வாயில் ஒன்றினை ராசி திட்டத்துடன் இணைந்து ஒருங்கிணைத்து உருவாக்குதல். | 5.00 |
| 2 | தலைமையிட, மாவட்ட அலுவலகங்களுக்கு ஜெராக்ஸ் இயந்திரங்கள் வாங்குதல். | 7.00 |
| 3 | அறைகலன்களை பழுதுபார்த்தல் | 2.00 |
| 4 | வேளாண்மை ஏற்றுமதி வாய்ப்பு பற்றிய ஆய்வு | 10.00 |
| 5 | எஞ்சிய மாவட்டங்களில் உழவர் பயிற்சி மையங்களை ஏற்படுத்துதல் | 100.00 |
| | **மொத்தம்** | **124.00** |
| | **விதைச் சான்றளிப்பு** | |
| 6 | கே.பாளையத்தில் தரைமட்ட அளவில் நீர்த்தொட்டி கட்டுதல் | 4.00 |
| 7 | கே.பாளையத்தில் மின்னிணைப்புடன் மேலும் ஒரு துளைக் கிணறு அமைத்தல் | 1.75 |
| 8 | துறையில் ஏற்கெனவே நிர்மாணிக்கப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்பத்தை மேம்படுத்த விதைப் பரிசோதனை நிலையங்களிலுள்ள கணினிகளை மேம்படுத்துதல். | 3.00 |
| 9 | கோயம்புத்தூர், மதுரையிலுள்ள விதை சான்றளிப்பு துணை இயக்குநர் அலுவலகத்திலுள்ள கணினி வசதியை மேம்படுத்துதல். | 1.00 |
| 10 | இயக்ககத்தில் உள்ள பயிற்சி இல்லத்திற்கு அடிப்படை வசதிகள் | 0.49 |
| 11 | கோயம்புத்தூர், விதை சான்றளிப்பு துணை இயக்குநர் அலவலகத்திற்கு மூன்று வகை வசதிகளைக் கொண்ட நிகரி இயந்திரம் வாங்குதல். | 0.45 |
| 12 | 'எம்எல்எல்என்' டேட்டா சர்க்யூட்டின்கீழ் தொலைபேசி இணைப்பு வழங்குதல். | 0.19 |
| 13 | இயக்ககத்தில் இரு சக்கர வாகனங்களை நிறுத்துவதற்கான கொட்டகை அமைத்தல் | 2.85 |
| 14 | இயக்ககத்தில் உள்ள அணுகுசாலையை சீரமைத்தல் | 2.00 |
| 15 | ஆறு உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கு (விதைச் சான்றிதழ்) துணை பாகங்களுடன் கூடிய கணினிகளை வாங்குதல். | 3.50 |
| | **மொத்தம்** | **19.23** |
| | **தோட்டக்கலை (ம) மலைத் தோட்டப் பயிர்கள்** | |
| 16 | தோட்டக்கலை பண்ணைகளுக்கு துணை பாகங்களுடன் கூடிய விசை கலப்பைகள் வாங்குதல். | 50.00 |
| 17 | உயிரினக் கழிவு பயன்படுத்தும் பண்ணைத் தொழிலை மேம்படுத்துவதற்கான திட்டங்கள். | 10.00 |
| | **மொத்தம்** | **60.00** |
| | **வேளாண்மை பொறியியல்** | |
| 18 | திருச்சி மாவட்டத்தில் புவியியல் தகவல் மையம் அமைத்தல் | 15.00 |
| 19 | விவசாயிகளின் பயனுக்காக வேளாண்மை பொறிகள் மற்றும் நுண்பாசன ஏற்பாடு குறித்து செய்முறை விளக்கம் அளித்து ஆய்வு செய்ய ஏற்பளிக்கப்பட்ட எட்டு மையங்களுக்கு அடிப்படை வசதிகள் | 20.00 |
| 20 | மாவட்ட அளவிலான 10 வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலகங்களில் கணினி வழி செயல்படும் மின் ஆளுகை வசதி செய்து கொடுத்தல். | 5.00 |
| 21 | ஆயக்கட்டு பகுதிகளில் விரைந்தியங்கும் லீனியர் டவர் தெளிப்பு நீர்ப் பாசன ஏற்பாடுகளை மதிப்பிடுவதற்கான முன்னோடித் திட்டம் | 0.01 |
| 22 | சென்னை தலைமைப் பொறியாளர் (வே.பொ) அலுவலக பயனுக்காக ஓசையற்ற ஜெனரேட்டர் ஒன்றை வாங்குதல். | 10.00 |
| | **மொத்தம்** | **50.01** |



2005 மார்ச் 31]

| வ. எண். | திட்டப்பணிகளின் விபரம் | மொத்தம் |
|---|---|---|
| | **வேளாண் பல்கலைக்கழகம்** | |
| 23 | கோயம்புத்தூர் சுற்றுச்சூழல் அறிவியல் துறையில் தரிசு நிலத்தை பசுமையான நிலமாக்குவதற்கு காட்டாமணக்கு பயிரிடுவதில் சுத்திகரிக்கப்பட்ட வடிசாலை கழிவு நீரை உயிரின வாழ்க்கைச் சூழலுக்கு உகந்த வகையில் மறு சுழற்சி முறையில் பயன்படுத்துதல். | 2.00 |
| 24 | கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலுள்ள வேளாண்மை பூச்சியியல் துறை மூலம் தமிழ்நாட்டில் உள்ள கருப்பஞ்சாற்றை உறிஞ்சும் கம்பளி பூச்சியை கட்டுப்படுத்துதல். | 4.00 |
| 25 | கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலுள்ள விவசாயவியல் துறை மூலம் தமிழ்நாட்டில் வெப்ப மண்டல சக்கரை வள்ளிக்கிழங்கு பயிரிடுவதை அறிமுகப்படுத்தி பிரபலப்படுத்துதல். | 4.00 |
| 26 | கோயம்புத்தூர் விவசாயவியல் துறையில் விவசாயிகளை பங்கு பெறச்செய்து, ஆராய்ச்சி செய்முறை விளக்கமளிப்பதன் மூலம் வெவ்வேறு வேளாண்மை பருவநிலை மண்டலங்களில் சோளம் பயிரிடுவதை பிரபலப்படுத்துதல். | 4.00 |
| 27 | கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழக விவசாயவியல் துறையின் ஆராய்ச்சி மற்றும் செய்முறை விளக்கமளிப்பதில் விவசாயிகளை பங்குபெறச் செய்து, தமிழ்நாட்டில் மக்காச்சோள உற்பத்தியையும், உற்பத்தி திறனையும் அதிகரிப்பதற்கான திறம்பட்ட திட்டங்களும் திட்டப் பணிகளும். | 4.00 |
| 28 | இராமநாதபுரம், கடற்கரையோர உவர்நீர் ஆராய்ச்சி மையத்தின் மானாவாரிப் பயிரிடப்படும் மாவட்டங்களில் சிறு அளவிலான தெளிப்பு நீர் சாதனத்தை அறிமுகப்படுத்தல். | 5.00 |
| 29 | பவானிசாகர் வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் வேர் அழுகுதல் நோயை குடும்ப உயிரின வாழ்க்கைச் சூழலுக்கு உகந்த தாவரத்தை அடிப்படையாகக் கொண்ட மருந்து தயாரிப்பு செயல் திறன் மதிப்பீடு. | 3.00 |
| 30 | ஆடுதுறை தமிழ்நாடு அதிக சாகுபடி தரும் நெல் ஆராய்ச்சி நிலையத்தில் பல்வேறு உயர் இரக விதை நெற்களை உருவாக்குதல். | 5.00 |
| 31 | கோயம்புத்தூர் சுற்றுச்சூழல் அறிவியல் துறையில் மண்புழு கலப்புரத்தைக் கொண்ட ஒருங்கிணைந்த மண்வள நிருவாகம். | 5.00 |
| 32 | கோயம்புத்தூர், வேளாண்மை நுண் தாவர இயல் துறையிலுள்ள வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கு காளான் வகை தாவர உரம் மற்றும் தரக்கட்டுப்பாட்டுப் பிரிவை மேம்படுத்தல். | 2.00 |
| 33 | கோயம்புத்தூர் தோட்டக் கலைக் கல்லூரி-ஆராய்ச்சி நிறுவனத்தின் நறுமணப் பொருட்கள் ஆய்வுத் துறையில் மக்களுக்கான இயற்கை உர உற்பத்தியை தரப்படுத்துதல். | 2.00 |
| 34 | மதுரை மனையியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் மனிதவள மேம்பாட்டுத் துறை மூலம் மதுரை மாவட்டத்தில் உணவு பதப்படுத்துவதன் வாயிலாக வருவாய் ஈட்டும் நடவடிக்கைகளில் சுய உதவிக் குழுக்களுக்குப் பயிற்சி. | 4.00 |
| 35 | தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் அரிசி அல்லாத ஏனைய தரமான விதை உற்பத்தியை வலுப்படுத்துதல். | 6.00 |
| 36 | தமிழ்நாட்டைச் சேர்ந்த வெவ்வேறு வேளாண் தட்பவெப்ப மண்டலங்களுக்கு பொருத்தமான கால்நடை தீவனப் பயிர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்திகளை அறிமுகப்படுத்துதலும் அவற்றை பிரபலமாக்குதலும். | 5.00 |
| 37 | மஞ்சள் பதப்படுத்தலில் ஆபத்து விளைவிக்கும் இரசாயன பொருள் பயன்பாட்டை தவிர்ப்பதற்கான ஆராய்ச்சி. | 3.00 |
| 38 | சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதியில் பயிரிடுவதற்கான நெல் இரகம் குறித்த ஆராய்ச்சி. | 10.00 |
| | | **68.00** |
| | **மொத்தம்** | **321.24** |
| | **பெரு மொத்தம்** | |



தமிழ்நாடு ... வனக் காப்பக
186258
... 600 008
... லகம்
D
V21,31 P05
P05.78.1

அரசு மைய அச்சகம், சென்னை—600 079.